# எழுநா

இதழ் 40



நவம்பர்
2025

### இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
ஆளுகை

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

### வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிறேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

**மதுராங்கி குணசீதன்**
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு / ஆய்வு ஒருங்கிணைப்பு

**பியூலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

### தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

### வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு

**தங்கராஜா பிரபாகரன்**
மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

### ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

### கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

### கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
ஐக்கிய இராச்சியம்

**கணேசானந்தன் சசீவன்**
ஐக்கிய இராச்சியம்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**சதீசன் தனபாலசுந்தரம்**
ஐக்கிய இராச்சியம்

**மாதவி சிவலீலன்**
ஐக்கிய இராச்சியம்

**சிவகுமார் பாலசுப்ரமணியம்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**இளங்கோ**
கனடா

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**
கனடா

**சிவராஜா ரூபன்**
கனடா

**தமிழ்நதி**
நோர்வே

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**
நோர்வே

**தில்லைநாதன் கோபிநாத்**
அவுஸ்திரேலியா

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**கந்தையா ரமணிதரன்**
ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ராஜ்குமார் ரஜீவ்காந்த்**
கொழும்பு

### நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**'கா' கலை இலக்கிய வட்டம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்பு வட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**முத்தமிழ்ச்சங்கம்**
**திருகோணமலை**

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

### விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**குயின்சி புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**வெண்பா புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

ISSN 3093-5210

# எழுநா

**அட்டைப்படம் :**

**இதழ் 40**

கருநிலம்
(மன்னாரில் நடைபெறும் கனிம வள அகழ்வு மற்றும் பிற சூழலியல் பிரச்சினைகள் பற்றிய ஓவியம்)
ஓவியம் : சௌம்யா மனோகர் (சிறகுகள் அமையம்)

**எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்

**பாத்திமா புத்தக நிலையம்** – மட்டக்களப்பு

**மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை

### அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு** – கனடா

### கலை பண்பாட்டு நடுவம் துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

### கொற்றம் ஆய்வு துறைசார் மதியுரைஞர் குழு

**ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

### வழிப்படுத்தும் குழு

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

# உள்ளே...


1. மன்னார் தீவில் கனிம மணல் அகழ்வு: சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள் – பகுதி 1, 2
**வை. ஜெயமுருகன்** **03**

2. இலங்கையின் அரசியல் யாப்புகள்: ஒரு நூற்றாண்டு வளர்ச்சியும் வரலாறும் – 1833 முதல் 1931 வரை – பகுதி 1, 2
**ஆங்கில மூலம்: லக்ஸ்மன் மாறசிங்க**
**தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்** **24**

3. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் முன்னோடிகள்
**ஆங்கில மூலம்: சூரியா விக்ரமசிங்க**
**தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்** **39**

4. அரசியல் தேசியவாதத்துக்கு அடித்தளம் அமைத்த பண்பாட்டு மலர்ச்சி
**கார்த்திகேசு இந்திரபாலா** **46**

5. யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்குச் சமீபத்திலுள்ள ஆதிக்குடியேற்றங்கள்
**சிவ தியாகராஜா** **51**

6. மாலதி எழுதிய ‘எனது தேசத்தில் கடந்துபோன ஒரு தருணம்’ – தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் அரசின் இறுதி ஆண்டுகள் – பகுதி 2
**சிவராஜா ரூபன்** **63**

7. ஆன்மிகமும் குணப்படுத்தலும்: இயலாமையின் இருப்பியல் பகுதி – 1,2
**மீநிலங்கோ தெய்வேந்திரன்** **74**

8. ஈழத்துத் தமிழ்க் கூத்துகளின் வடிவங்களும் அவற்றின் உருவாக்கங்களும்
**சின்னையா மௌனகுரு** **99**

9. ஈழத்துத் தமிழ்க் கூத்துகளின் பிரதேசத் தன்மை: ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்
**சின்னையா மௌனகுரு** **109**

10. மலையகத்தின் போராட்ட எழுச்சியும் தியாகிகளின் வரலாற்று எழுதுகையும்: மாத்தளை ரோகிணியின் உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள் நூலை முன்வைத்து
**எம். எம். ஜெயசீலன்** **117**

11. லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வடமராட்சி – பருத்தித்துறை
**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்** **126**

12. 1968 – 1983: ஆயுதப் போராட்டத்தை நோக்கி – பகுதி 1
**சி. அ. யோதிலிங்கம்** **131**

13. இலங்கை மக்களின் வாழ்வில், தீவின் புவியியல், அரசியல், புவிசார் – அரசியல், புவிசார் – வரலாற்றுக் கட்டமைப்புகளின் பங்கு
**மு. திருநாவுக்கரசு** **140**

14. நாவலப்பிட்டி மண்ணில் உருவான ஆளுமை: எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை
**அருணாசலம் லெட்சுமணன்** **145**

15. மலையகத் தமிழர் சமூக உருவாக்கத்தில் அரங்கின் பாத்திரம்
**பொன் பிரபாகரன்** **153**

16. நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் மேம்பாடும் முகாமைத்துவமும்: யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிராந்தியம் – பகுதி 1
**சுப்ரமணியம் சிவகுமார்** **167**



வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

போருக்கு முன்பும் போரின்போதும் நிகழ்ந்த மக்கள் போராட்டங்களிலிருந்து மாறுபடும் வகையில், இக்காலத்தில் மக்கள் இயக்கம் புதிய வடிவம் எடுக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் கோடுகளைத் தாண்டி, அடிப்படை வாழ்வாதாரமான மண்ணின் மீதும் அதன் வளத்தின் மீதுமான பற்றையும் திடமான பிடிப்பையும் இந்த நிலையின் தோற்றத்திற்கான காரணியாகக் காணலாம். இந்தப் போராட்டங்கள் வாழ்வாதாரங்களைத் தக்கவைக்க உருவாகியுள்ளன. அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள, மன்னார் தீவில் நடைபெறும் கனிம மணல் அகழ்வுக்கெதிரான தொடர்ச்சியான மக்கள் போராட்டம் ஆழமான, அறிவியல் தளத்தில் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக மாறியுள்ளது. 'மன்னார் தீவில் கனிம மணல் அகழ்வு: சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்' எனும் இக் குறுந்தொடர், மன்னார் மாவட்டத்தின், குறிப்பாக மன்னார் தீவின் சூழலியல் வளங்கள் மற்றும் அதன் மீது உலகளாவிய அதீத இலாப நோக்கிலான கார்ப்பிரேட் நிறுவனங்களின் கனிம வளத்திரட்சியைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளால் நிகழவிருக்கும் ஆபத்துகள் பற்றி ஆக்கபூர்வமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலானது. இது, மன்னார் தீவின் கனிம மணல் அகழ்வின் உள் மற்றும் வெளி நிலைகொள் கண்ணோட்டங்களைத் தருவதோடு, திரண்ட சிந்தனைக்கு ஊக்கமளிக்கும் வகையில், ஒரு வீட்டின் சாளரங்களில் ஒன்றைத் திறந்து பார்ப்பதுபோல், பரந்து விரியும் சிந்தனையை முன்வைக்கிறது.

பகுதி I

# மன்னார் தீவில் கனிம மணல் அகழ்வு: சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்

## முன்னாராய்வு

இலங்கையில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கைப் பூர்வீக வாழ்விடமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களது இயக்கங்களில் கொழுந்துவிடும் எரிநிலையினை, போருக்குப் பிந்தைய காலத்தின் ஒரு புத்தெழுச்சி நிலையெனலாம். இதனைப் போராட்டக் களத்தின் நிலைமாறு காலமாகவும் வரையறுக்கலாம். போருக்கு முன்பும் போரின்போதும் நிகழ்ந்த மக்கள் போராட்டங்களிலிருந்து மாறுபடும் வகையில், இக்காலத்தில் மக்கள் இயக்கம் புதிய வடிவம் எடுக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் கோடுகளைத் தாண்டி, அடிப்படை வாழ்வாதாரமான மண்ணின் மீதும் அதன் வளத்தின் மீதுமான பற்றையும் திடமான பிடிப்பையும் இந்த நிலையின் தோற்றத்துக்கான காரணியாகக் காணலாம். தமிழ் மக்களின் போராட்டம் தற்போது ஒரு புதிய தத்தமக்கேயுரிய தனித்துவ உள்ளடக்க வடிவமும் சிறப்பும் பெற்றுள்ளது. அந்தப் போராட்டங்கள் வாழ்வாதாரங்களைத் தக்கவைக்க உருவாகியுள்ளன. அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் தீவில் நடைபெறும் கனிம மணல் அகழ்வுக்கெதிரான தொடர்ச்சியான மக்கள் போராட்டம் ஆழமான, அறிவியல் தளத்தில் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக மாறியுள்ளது. இந்தக் குறுந்தொடர், அந்தத் தேவைப்பாட்டின் முன்னோடியான ஓர் ஆய்வுத்தள வாசலாக வாசகர்களின் முன் வருகின்றது.

அரசின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் மன்னார் தீவின் கனிம மணல் அகழ்வு, தீவின் இருத்தலியல் இயற்கைச் சூழல் மீதும் மக்களின் வாழ்வின் மீதும் பல தீமைகளை ஏற்படுத்தக்கூடியது. தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்தபோது, இத்திட்டம் மன்னார் மாவட்டத்தின் பல்லுயிர்ச் செறிவு, நிலத்தடி நீர், கடற் சூழல் ஆகியவற்றிற்குப் பெரும் ஆபத்தாக இருப்பது தெளிவாகிறது. வட மாகாணத்தின் பொருளாதார வலயத்தையே பாதிக்கக்கூடிய இந்த முயற்சி, 'வளர்ச்சி' என்ற பெயரில், சமூக - சூழலியல் நாசத்தை வரவழைக்கக்கூடியதாகும்.

சமூக, சூழலியல் பாதிப்பின் விளைவுகளை உணர்ந்து, கனிம மணல் அகழ்வுக்கெதிராக மன்னார் மக்களிடையே தன்னெழுச்சியாக உருவான வலுவான எதிர்ப்புடன் தொடரும் களப்போராட்டங்கள், அரசின் அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் இத்திட்டம் சமூக நோக்கமற்றதாக இருப்பதை வெளிப்படுத்துகின்றன. அரசு அபிவிருத்தி முயற்சியாகக் கருதி கனிம மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிலையில், அதற்கு எதிராக மக்களிடையே உருவாகும் போராட்டத்தின் பின்னணியை ஆழமாக ஆய்வு செய்வது அவசியமாகிறது. மக்களின் தார்மீக அடிப்படையிலான அணுகுமுறைதான் எந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உயிர் ஊட்டும் வலிமையாக அமையக்கூடியது. இதையே இந்தக் குறுநூல் தன் தளமாக எடுத்துக்கொள்கிறது. இந்த நோக்கில், மன்னார் கனிம மணல் அகழ்வைச் சூழ்ந்துள்ள சமூக, சூழலியல் பரிமாணங்களை முழுமையான பார்வையில் விளக்க முயல்கிறது.

இலங்கையின் வட மாகாணத்தில் மன்னார் சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகளில் முக்கிய இடம் வகிக்கிறது. முன்னைய வரலாற்றுக் காலத்தில் இந்தியப் பெருநிலப்பரப்புடன் இணைந்த இலங்கைக்கு மன்னார் ஒரு தொடு நிலையாக அமைகிறது.

மன்னார் தீவின்மேல் நடக்கும் இந்தச் செயற்பாடும், அதன் வளங்கள் மீதான தாக்கமும், தமிழர் தாயகப் புவிசார் நலன்களை நேரடியாகப் பாதிக்கிறது. ஆனால் இதில் இராணுவ அணுகுமுறையினைப் போல் அவசரத் தாக்கங்கள் மட்டுமின்றி, நீடித்து நிலைக்கும் தீங்கு உள்ளது. அபத்தம் மிகுந்த, சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் கொண்ட ஒரு பொருளாதார முதலீட்டை முன்னிலைப்படுத்தும் இம்முயற்சியின் பின்னணி, 'இன ஒதுக்கீடு' போன்ற அமைப்புச் சிந்தனையால் நிர்ணயிக்கப்படுகிறதா எனச் சந்தேகம்கொள்ள வைக்கிறது.

மக்களின் நலன்களைப் பொருளாதார மற்றும் தார்மீகப் பார்வையில் கவனிக்காத தன்மை, கனிம மணல் திட்டத்தின் உள்ளடக்கத்தில் பிரதானமாகக் காட்சி தருகிறது. உள்ளூர் மக்கள் பங்கேற்க உரிமை இல்லாத நிலையில், இத்திட்டம் ஓர் இன மக்களின் நிலத்திற்கான அடையாளத்தை அழிக்கும் செயல் என்பது தெளிவாகிறது. மன்னார் கனிம மணல் அகழ்வின் பின்னணியில் உள்ள பொருளாதார - அரசியல் இணைப்பை ஆராயும் போது, பல அடையாளமற்ற கொள்கைகள் மற்றும் தெளிவின்மைகள் வெளிப்படுகின்றன.

டைட்டானியம் சாண்ட்ஸ், ஆஸ்திரேலிய கனிம மணல் நிறுவனம், மன்னார் தீவில் விரிவான லிமோனைட் மணல் அகழ்வை சட்ட ரீதியாக ஆரம்பிப்பதற்கு முன்னதாக, 4,000க்கும் மேற்பட்ட ஆய்வு ஆழ்துளைக் கிணறுகளை உள்ளடக்கிய ஒரு விரிவான ஸ்கோப்பிங் ஆய்வை மேற்கொண்டுள்ளது. சில இடங்களில், தனியார் நில உரிமையாளர்களிடமிருந்து அனுமதி பெறாமல் 12 மீட்டர் ஆழத்தில் துளைகள் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திட்டத்தின் முதல் கட்டத்தின் நிகர மதிப்பு $545 மில்லியன் என்றும், இது முழுமையாகச் செயற்படுத்தப்பட்டால்

1,200 வரை வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் சர்வதேச விளம்பரங்களில் நிறுவனம் வலியுறுத்துகிறது. ஆனால், இது உள்ளூர் மக்களின் கருத்துகளைப் புறக்கணிக்கின்றது. இதை போருக்கு முந்தைய காலப் புறக்கணிப்பின் தொடர்ச்சியாகக் கருதலாம்; மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து அதிகார மையங்கள் அலட்சியத்துடன் நடந்துகொள்ளும் நிலையில் இது பேரினவாத மேலாதிக்கத்தின் வெளிப்பாடாகவே அமைகின்றது.

இலங்கையின் இனத்துவ முரண்பாடுகள் மற்றும் நீடித்த இன மோதல்களுக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக பூர்வீக மக்களின் பொருளாதார வாழ்வாதாரத்தின் அடித்தள ஆதாரமான நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பும், தொடர்ச்சியான வளச் சுரண்டலும் அமைந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பிறகான 'அபிவிருத்தி' முயற்சிகள், வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வாழ்நிலங்களை இலக்காகக் கொண்டு, அரசின் பக்கபலத்தை உள்வாங்கிய திட்டங்களாக நடைபெற்றது என்பதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

இனத்துவச் சமநிலைக்கு எதிரான வளங்களின் மீதான ஆதிக்க மனோநிலை, இவ்வாறான திட்டங்களின் ஆரம்ப நிலையாகும். நிலங்களின் இழப்பு மற்றும் வளங்களின் சுரண்டல், இனத்துவ மோதல்களின் தீவிரப்படுத்தலுக்கு வழிவகுத்தது. ஓர் இனத்துவச் சமநிலையில் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் போது, மோதல்கள் போர்களாக வளர்கின்றன. ஆயுத முரண்களால் பெரிய போர்கள் ஏற்பட்டாலும், அரசின் ஆயுத பலத்தால் அவை தணிக்கப்பட்டாலும், இனத்துவ அடிப்படைகள் மீண்டும் மீண்டும் தொடரும் நிலையை உருவாக்குகின்றன. இது மீண்டும் பதட்ட உணர்வுகளை உண்டாக்கி, இன முரணை வழிநடத்துகின்றது.

மக்கள் தங்கள் நிலம், இருப்பு மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க எப்போதும் உறுதியுடன் செயற்படுகின்றனர். ஆனால் அவர்களது குரல்கள் புறக்கணிக்கப்படும் போது, ஜனநாயக முறைகள் தீர்வுகளை வழங்க இயலாத நிலையில் இருக்கும் போது, போராட்டம் அவர்களுக்கு அவசியமான வழியாக மாறுகிறது. போராட்டங்கள் தொடர்ந்து ஓர் எரிபற்று நிலையை உருவாக்கி, சமூகத்தில் பதட்டத்தை ஏற்படுத்துகின்றன. இவை கட்சி ஆதரவையோ, அரசியல் நிலைமையையோ பொருட்படுத்துவதில்லை. இதுதான் இன்றைய போரின் பின்னரான காலத்தின் செல்நெறி. இந்நிலையில் மன்னார் தீவு மற்றும் அதன் இணைப்பிரதேசங்கள், கனிம மணல் அகழ்வின் தாக்கங்கள் மற்றும் அதற்கான போராட்டங்கள் பற்றிய பரபரப்பான சமூக உணர்வையும் அதற்கான வரலாற்றுப் பின்னணியையும் புரிந்துகொள்வது அவசியமாகிறது.

2009க்கு பின்னரான காலம் ஒரு தொடரும் காலத்துயர் காலமாகும். போர்க்கால அழிவுகளும், போரின் பின்னர் தொடரும் அரச முன்னெடுப்புகளும் சமூகத்தில் பலவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. 'காடுகளைக் காப்போம்' என்ற பெயர்களில், காடுகளை வளர்த்தவர்களை உள்ளூரில் 'அகதிகளாக' மாற்றிய நிகழ்வுகள் இதன் முக்கியமான எடுத்துக்காட்டுகள். பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில், இடம்பெயர்ந்த மக்களின் வாழ்விடங்கள் கைப்பற்றப்பட்டமை, யுத்தகால இராணுவ இருப்புகள் தொடர்ந்தும் பராமரிக்கப்படுகின்றமை ஆகியவை, போரின் பின்னரான பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன. இதில் மிக முக்கியமானது, பல் தேசிய நிறுவனங்களின் நிதியால் முன்னெடுக்கப்படும் வளச் சுரண்டல் மையமுடைய பொருளாதாரத் திட்டங்கள் ஆகும். உள்ளூர் மக்களின் எதிர்ப்பையும், உள்ளூர் நிறுவனங்களின் அறிவையும் புறக்கணித்து இரகசியமாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டங்களின் பின்னணியிலேயே மன்னார் தீவின் கனிம மணல் அகழ்வும் அதன் பின்னணி நகர்வுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மௌனிக்கப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டங்கள் மற்றும் போரின் பின்னணியில் அமைந்த செல்நெறிகளை ஆய்வு செய்யும் போது ஒரு தெளிவான படிமம் வெளிப்படுகிறது. தேசிய போராட்டக் களங்களில் இராணுவ பலம் மூலம் மக்களைச் சிதைத்து, வேருடன் பிடுங்கிய அரச சக்தி, கைப்பற்றிய நிலங்களின் வளங்களை படிப்படியாகப் பிரித்து தங்கள் சொத்தாக மாற்றியது தெளிவாகக் காணப்படுகிறது. இலங்கையின் போருக்கு முந்தைய வரலாற்றுப் பின்னணியில், நிலங்களின் வளங்கள் தான் முன்னேற்றத்தின் முக்கிய அம்சமாக அமைந்தன. மகாவலித் திட்டம் இலங்கையின் காடுகள் பெருமளவில் அழிந்ததற்குக் காரணமான ஒரு நிகழ்வு. அதன் மூலம் மரங்களை விற்று பெருமளவு செல்வம் சம்பாதித்த ஓர் அரசுசார் பொருளாதாரக் குழுமம் உருவானது. இக்குழுமத்திற்கு தேசிய உணர்வும் இல்லை, சமூகப் பொறுப்பும் இல்லை; ஒரே நோக்கம், வளங்களைச் சுரண்டி தங்கள் நலன்களை உயர்த்துவது. இதை ஒத்ததாகவே, மன்னார் தீவு தொடர்பான கவனம் முழுவதும் கனிய மணல் அகழ்வில் மையம் கொண்டுள்ளது. இந்தத் திட்டம், பிரதேசத்தின் பௌதிகச் சூழ்நிலைகளையும், உள்ளூர் மக்களின் வாழ்வாதார மையங்களையும் கவனிக்காமல், மக்களின் நலன்களைப் புறக்கணிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது.

இக் குறுந்தொடர், மன்னார் மாவட்டத்தின், குறிப்பாக மன்னார் தீவின் சூழலியல் வளங்கள் மற்றும் அதன் மீது உலகளாவிய அதீத இலாபநோக்கிலான கார்ப்பிரேட் நிறுவனங்களின் கனிம வளத்திரட்சியைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளால் நிகழவிருக்கும் ஆபத்துகள் பற்றி ஆக்கபூர்வமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலானது. இது, மன்னார் தீவின் கனிம மணல் அகழ்வின் உள் மற்றும் வெளி நிலைகொள் கண்ணோட்டங்களைத் தருவதோடு, திரண்ட சிந்தனைக்கு ஊக்கமளிக்கும் வகையில், ஒரு வீட்டின் சாளரங்களில் ஒன்றைத் திறந்து பார்ப்பதுபோல், பரந்து விரியும் சிந்தனையை முன்வைக்கிறது.

## இலங்கையின் கனிமவளத் துறை

பல மில்லியன் ஆண்டுகால புவியின் பரிணாம வளர்ச்சியில், இலங்கையின் கடலோரச் சமவெளிகள் மற்றும் கரையோரங்கள் அரிப்பு, செறிவு மற்றும் மறுசீரமைப்புச் செயல்களுக்கு உட்பட்டுள்ளன. இத்தகைய விரிவான மறுசீரமைப்பின் காரணமாக, எளிய மணல் கூறுகள் அகற்றப்பட்டு, கடற்கரையில் காணப்படுகிற (8,000 ஆண்டுகள் பழமையானது முதல் தற்போதுவரை) ஒருங்கிணைக்கப்படாத நவீன மணல்களில் உயர்தர கனமான கனிம மணல் படிவுகள் திரட்சியடைந்தன.

இந்து சமுத்திரத்தின் முத்தாக அமைந்த இலங்கைத் தீவின் மேற்பகுதியில் மணல் நிறைந்த கடற்கரைகள், குறிப்பாக வடகிழக்கு மற்றும் வடமேற்கு பகுதிக் கடற்கரைகள், கனமான கனிம மணல்களின் செறிவுக்குப் பிரசித்தமானவை. தீவின் மலைப்பாங்கான உட்புறத்தில் உள்ள பண்டைய உருமாற்றப் பாறைகளிலிருந்து தோன்றிய நதி அமைப்புகள், இந்தக் கனிம மணல்களை கடற்கரையில் சேர்த்துள்ளன. நதிகள், காற்றுச் செயற்பாடுகள் மற்றும் கடலோர இயக்கம் போன்ற இயற்கைச் செயல்முறைகள், கனிம மணல்களின் செறிவை மேலும் வலுப்படுத்துகின்றன.

இலங்கையில், சுரங்கத் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் LKR 48,840 மில்லியனாகக் குறைந்துள்ளது. இது முதல் காலாண்டில் LKR 52,955 மில்லியனாக இருந்தது. 2010 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், சுரங்கத் துறையிலிருந்து கிடைத்த சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி தோராயமாக LKR 58,040.63 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 2017 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் LKR 87,620.00 மில்லியனாக உச்சத்தை எட்டியது. அதேசமயம், 2010 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் LKR 29,585.00 மில்லியனாகக் குறைந்திருந்தது (ஆதாரம்: இலங்கை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் துறை, 2025 அறிக்கை).

இலங்கையின் முக்கிய கனிமங்களில் இரத்தினக் கற்கள், கிராஃபைட் மற்றும் கனிம மணல் ஆகியவை அடங்கும். அரசுக்குச் சொந்தமான லங்கா சாண்ட்ஸ் லிமிடெட், கனரகக் கனிம மணல் உற்பத்தியில் ஒரு முக்கிய நிறுவனமாகும். இதன் கொள்ளளவு 100,000 டன்கள் ஆகும். ஆனால் அதில் பாதியளவு மட்டுமே செயற்படுகின்றது. சர்வதேச சுரங்க நிறுவனமான இலுகா லிமிடெட் (International Miner Iluka Ltd) இலங்கையின் மேற்குக் கடற்கரையில் குறிப்பிடத்தக்க வளங்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் மொத்தக் கனரகக் கனிமத் தொகுப்பில் 67% ஆதிக்கம் செலுத்தும் கனரகக் கனிமம் இல்மனைட் ஆகும். இலுகா, 2015 இல் ஒரு நோக்கு ஆய்வை முடித்தது. 2016 இல் ஒரு முன்நிபந்தனை ஆய்வைத் (Pre Feasibility Study) தொடங்கவிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கனிம வளங்களின் நிலையான முகாமைத்துவத்தை மையமாகக் கொண்ட ஒரு தேசிய கனிமக் கொள்கையை இலங்கை கொண்டுள்ளது. இந்தக் கொள்கை கனிம வள வரைபடமாக்குதல், பொறுப்பான சுரங்கத்தை அகழ்வை ஊக்குவித்தல், கனிம வளத்திலிருந்து அதிக நன்மைகளைப் பெறுதல் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. கனிம வள முகாமைத்துவம் மூலம் மதிப்புக் கூட்டலை ஊக்குவித்து, இலங்கை அதன் பொருளாதாரத்தை மேம்படுத்தி நிலையான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என நம்பப்படுகின்றது.

இலங்கை வெப்பமண்டலக் காலநிலை, வளமான மண், பல்லுயிர் மற்றும் குறிப்பிடத்தக்க கனிம வைப்பு உள்ளிட்ட இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது. இருப்பினும், அதன் கனிம வளம் பெரும்பாலும் கல்வி வட்டங்களுக்கு வெளியே கவனிக்கப்படுவதில்லை. இலங்கை முதன்மையாகக் கனிமங்களைப் பொருட்களாக ஏற்றுமதி செய்யும் அதேவேளையில், குறிப்பிடத்தக்க தொழில்துறை கனிமங்களில் இல்மனைட், ரூட்டைல், சிர்கான், கிராஃபைட் மற்றும் வெயின் குவார்ட்ஸ் ஆகியவையும் அடங்குகின்றன. இலங்கை குறிப்பிடத்தக்க கனிம வளங்களைக் கொண்டுள்ள போதும், இந்த வளங்களுக்கு மதிப்புச் சேர்க்கும் தொழில்களை உருவாக்க அது கடந்த காலங்களில் முனையவில்லை எனலாம். பெரும்பாலும் மூல வடிவத்தையே ஏற்றுமதி செய்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் இலங்கையின் ஆராய்ச்சி மதிப்புக் கூட்டலுக்கான (Research Value Addition) திறன்

குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெறவில்லை என்றே கூறலாம். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் குறைந்த முதலீடு தான் இதற்குக் காரணமாக உள்ளது.

இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2019 ஆம் ஆண்டில் 0.2% என்ற சிறிய வளர்ச்சியைப் பதிவுசெய்த பிறகு, 2020 ஆம் ஆண்டில் 3.5% குறைந்துள்ளது. இருப்பினும், இதன் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி $85.4 பில்லியனாக (இலங்கை ரூபாயில் LKR 15.8 டிரில்லியன்) இருந்தது. சுரங்கத் துறையைப் பொறுத்தவரை, அதன் மதிப்புக் கூட்டல் 10.9% குறைந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.0% பங்களித்தது. இத்துறையில் 56,000 தொழிலாளர்கள் (மொத்தப் பணியாளர்களில் 0.7%) பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதிகள் $10 பில்லியனை எட்டின. இதில், பெட்ரோலியம் $371 மில்லியன், இரத்தினக் கற்கள் $181 மில்லியன் மற்றும் கனிமங்கள் $25.1 மில்லியன் (இதில் கிராஃபைட் 14% ஆகும்) ஆகியவை அடங்கும். மேலும், கிராஃபைட் மற்றும் ரத்தினக் கற்களின் ஏற்றுமதிகள் முறையே 26% மற்றும் 68% குறைந்துள்ளன (ஆதாரம்: கெய்டா எஃப். டெகார்லோ மற்றும் ஜி வோன் மூன் எழுதிய 'இலங்கையின் கனிமத் தொழில்', 2021).

இலங்கையில் கனிம மதிப்புக் கூட்டல் குறைவாக உள்ளமை, அந்நியச் செலாவணி வருவாயைப் பாதிக்கிறது. பல தடைகள் இம்முன்னேற்றத்தைத் தடுக்கின்றன:

- மூலதனம் இல்லாமை.
- ஆராய்ச்சியாளர்களிடையே திறன் பற்றாக்குறை.
- ஆராய்ச்சிக்கும் தொழில்துறைக்கும் இடையிலான மோசமான தொடர்பு.
- புதிய தொழில்களுக்கான ஒழுங்குமுறைத் தடைகள்.
- நிதி மற்றும் தொழிற்துறைகளில் ஊக்கம் இன்மை.
- உற்பத்திச் செயல்முறைகளுக்கான முக்கிய இரசாயனங்கள் இல்லாமை.

கனிமத் துறைகளை வெற்றிகரமாக வளர்த்தெடுத்த நாடுகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்கள் இணைந்து செயற்படும் ஓர் இணைந்த அமைப்பை நிறுவியுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, இலங்கை இன்னும் இதை அடையவில்லை.

இலங்கையிலிருந்து கனிமங்களை ஏற்றுமதி செய்வதற்கு முன் 'மதிப்புக் கூட்டல்' என்ற கருத்தைச் சுற்றி ஒழுங்குமுறை அதிகாரிகள், கல்வியாளர்கள் மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் இடையே தொடர்ந்து விவாதம் நிலவுகிறது. 'மதிப்பு கூட்டல்' அல்லது 'நன்மை பயக்கும் செயல்முறை' எனப்படும் இது, கனிம வளங்களின் பொருளாதார மதிப்பை உயர்த்தும் தொழில்நுட்ப மற்றும் தொழில்துறைச் செயல்முறைகளைக் குறிக்கிறது. தற்போது இலங்கையில் கனரகக் கனிம மணலின் மதிப்பு கூட்டல் ஆரம்ப நிலையிலேயே உள்ளது; ஏற்றுமதி அளவுகளும் வருமானங்களும் இன்னும் நிலையான வடிவம் பெறவில்லை. வள அடிப்படையிலான தொழில்கள் குறைந்த அளவில் மட்டுமே வளர்ந்துள்ளதால், இலங்கை இன்றும் சீனா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக் கனிமங்களை முதன்மையாக ஏற்றுமதி செய்கிறது. கனிமங்கள் மதிப்புமிக்க மற்றும் புதுப்பிக்க முடியாத வளங்கள்; அவை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படக்கூடியவையாக இருப்பதால், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தீர்மானகரமான பங்கு வகிக்கின்றன. எனவே, இந்த வளங்களைப் பயன்படுத்தும் போது அனைவருக்கும் சமமான நன்மைகள் கிடைக்கச் செய்வது அவசியமாகிறது. கனிம வளங்களின் திறனை அங்கீகரிப்பதே பயனுள்ள மற்றும் பொறுப்பான கனிம வள மேம்பாட்டின் ஆரம்பமாகும். கனிம வைப்புகளை முழுமையாக வரைபடமாக்குவதன் மூலம், நிலையான பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தக்க உத்திகளை வகுக்க முடியும். அதற்கு, இலங்கையின் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகளை முன்னிறுத்திய, சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைக்கும் வகையிலான கடுமையான விதிமுறைகளும் தெளிவான வழிகாட்டுதல்களும் அவசியம்.

1999 இல் உருவாக்கப்பட்ட தற்போதைய தேசிய கனிமக் கொள்கை, துறையின் நன்மைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நவீன நோக்கங்களையும் வழிமுறைகளையும் கொண்டதல்ல. தற்போதைய உலகளாவிய போக்குகளுடன் இணைந்தும், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) உடன் ஒத்துப்போகும் விதத்திலும், காலநிலை மாற்றத்தைக் குறைக்கும், தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் புதிய கொள்கைக் கட்டமைப்பு உருவாக்கப்படுவது அவசியமாகியுள்ளது.

புதிய கொள்கை உருவாக்கம், உள்ளூர்க் கனிமங்களின் தரத்தை மேம்படுத்துதல், கடல் வளங்களுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகளை முன்னெடுத்தல், கனிம ஏற்றுமதியை அதிகரித்தல் மற்றும் உள்ளூர் பதப்படுத்தும் தொழில்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் மையப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை, கனிம அகழ்வால் உருவாகும் நில

உரிமைப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், கொள்கையின் செயல்திறனை உறுதி செய்யவும், பல்வேறு பங்குதாரர்களின் கருத்து, பங்களிப்பை ஒருங்கிணைக்கும் முழுமையான கொள்கை வடிவமைப்புத் தேவையாகிறது.

இலங்கையின் கனிமத்துறை வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், வெளிநாட்டு வருவாயை ஈட்டுவதிலும் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது. நாட்டின் கனிம வளங்களைச் சிறப்பாக நிர்வகிக்க பயனுள்ள மற்றும் தெளிவான கொள்கைகள் அவசியம். ஏனெனில் அவை பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன்களை ஒருங்கிணைத்துப் பாதுகாக்கும் வழிமுறைகளை உருவாக்குகின்றன. பல முக்கிய கொள்கைகளில், குறிப்பாக 2, 4 மற்றும் 7 ஆம் கொள்கைகள் இங்கு விவாதிக்கப் பொருத்தமானவையாகும்.

கொள்கை 2: கனிம வளங்களைச் சுரங்கப்படுத்தும் முடிவுகள், சமூக - பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை சமநிலையாகக் கருத்தில் கொண்டு, மக்களின் ஒட்டுமொத்த நன்மையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட வேண்டும்.

கொள்கை 4: கனிம வள மேம்பாட்டின் அனைத்து நிலையங்களிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும், நிலையான வளர்ச்சியும் உறுதி செய்யப்பட வேண்டும்.

கொள்கை 7: நில உரிமைகள் மற்றும் கனிம உரிமைகள் கவனமாகவும் நியாயமான முறையிலும் கையாளப்பட வேண்டும்; இதன் மூலம் சமூக நீதியும் பொருளாதாரச் சமநிலையும் பேணப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்கவும், கனிம வளங்களைச் சீர்மையான முறையில் பயன்படுத்தவும் இலங்கை தற்போது கவனம் செலுத்தி வருகிறது. முதலீட்டு ஊக்குவிப்பு வாரியம் மற்றும் நிலம் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சகம் போன்ற நிறுவனங்களுடன் நெருக்கமாக இணைந்து, கடற்கரைப் பகுதிகளில் கனிமப் பொருளாதார முன்னெடுப்புக்கான முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

அதேநேரத்தில், கனிமத்துறையை வலுப்படுத்துவதற்காக உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சிக்குப் பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறப்பு வங்கியை நிறுவுவது குறித்தும், துறைக்கு உகந்த புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் புதிய சுற்றுச்சூழல் மற்றும் கடல் பாதுகாப்புச் சட்டங்கள் உருவாக்கப்படுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், கனிம வளங்களின் ஆய்வு மற்றும் பயன்பாட்டுக்கான துறைசார் நடவடிக்கைகளில் கடலோரப் பாதுகாப்புத்துறை தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. நாட்டின் பொருளாதார மீட்சிக்காக புதுமையான மற்றும் நிலையான திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல பல துறைசார் ஒத்துழைப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன.

இலங்கை ஆசியாவில் மூலோபாய ரீதியாக முக்கிய இடத்தில் அமைந்துள்ளது. கனிமவளம் மிக்க திருகோணமலை மாவட்டம், குறிப்பாக இந்தியாவின் நீண்டகால ஆர்வத்திற்குரிய பகுதியாகும். இந்த மாவட்டத்தின் வடக்குப் பகுதிகளில் உள்ள கனிம மணல் படிவங்களில் இல்மனைட், ரூட்டைல், சிர்கான், மோனாசைட், கார்னெட், சில்லிமனைட் மற்றும் பிற கனரகக் கனிமங்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் அரசுக்குச் சொந்தமான லங்கா மினரல் சாண்ட்ஸ் லிமிடெட், சீனாவுக்கு 60,000 மெட்ரிக் டன் இல்மனைட்டை ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது. மேலும் 30,000 டன் சிர்கான் கனிம மணல் ஏற்கனவே திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. கனிம அடிப்படையிலான தொழிற்துறையை வளர்ப்பது இலங்கையின் முக்கிய நோக்கமாக இருந்தபடியால், சர்வதேச சந்தையில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான சாத்தியமான துறையாக, மதிப்புக்கூட்டப்பட்ட கனிமப் பொருட்கள் துறையை அரசு முக்கியமாக அடையாளம் கண்டுள்ளது.

இலங்கையின் கனிம வளத்துறை மீதான ஆய்வுகளின் முழுமையான முடிவுகள் பொதுவெளியில் வெளிவருவதில் நீடித்த தடையும் பலமுனைக் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. கனிம வள அகழ்வு என்பது ஒரு மூடுண்ட, பல கட்டுப்பாடுகள் மிக்க செயற்பாடாகும். மேலும், சில பகுதிகளில் தனியார் கம்பெனிகளின் ஆயுதம் தாங்கிய நிலையிலான அகழ்வுகள் நடத்தப்படுவதால், கனிமவளத்துறை அகழ்வு மையங்கள் திறந்த சிறைச்சாலைகளைப் போன்றே அமைந்துள்ளன.

கனிம வள அகழ்வுக்குப் பின்னரான சுற்றுச்சூழல் பாதிப்புகள், அவற்றின் காரணமாக வரும் சுகாதாரப் பாதிப்புகள் (உதாரணமாக, மலேரியா), காடழிப்பு (வன விலங்குகள் அழிவு மற்றும் வாழ்வாதாரத் தளங்களின் சீரழிவு) போன்றவை அதிக பொருளாதாரப் பாதிப்புகளைத் தரக்கூடியனவாகும். மேலும், அங்கு

உடல் உழைப்பைச் செலுத்தும் தொழிலாளர்களின் சமூக - பொருளாதார நிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். இந்தப் பிரச்சினைகளிலிருந்து வெளிப்படும் உண்மை என்னவென்றால், கனிம வளத்துறை அகழ்வு மையங்களின் நோக்கம் என்பது, அங்குள்ள வளங்களைச் சுரண்டுவது என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

## ஈழத்தமிழர் பூர்வீக நிலங்களில் கனிம மணல் அகழ்வு முன்னெடுப்புகள்

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், இலங்கையின் கனரகக் கனிமங்களின் பொருளாதாரப் பெறுமதி அறியப்படத் தொடங்கியதும், அது அதிகாரபூர்வமாக அங்கீகாரம் பெற்றது. திருகோணமலையிலிருந்து சுமார் 34 கி.மீ தொலைவில் உள்ள வடகிழக்குக் கடற்கரையிலுள்ள புல்மோடையில் மிக முக்கியமான இல்மனைட் படிவு அமைந்துள்ளதாக 1967 ஆம் ஆண்டு வெளிவந்த கூரே எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டார். கூரே, கனமழைக் காலத்தில் கொக்கிளாய் நீரேரியிலிருந்து கனரகக் கனிமங்கள் கடலுக்கு அடித்துச் செல்லப்படுவதால், அலை நடவடிக்கையின் விளைவாக அவை கடற்கரையில் குவிகின்றன என்று விரிவாக விவரித்துள்ளார்.

சமீபகால மதிப்பீடுகளின் படி, புல்மோடையில் உள்ள கருப்பு மணலில் சுமார் நான்கு மில்லியன் டன் இல்மனைட் இருப்பதாகக் கணிக்கப்பட்டது. இருப்பினும், மொத்த இருப்பு இதைப்போல் மிக அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. இலங்கை அரசாங்கம் அந்த இடத்தில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தப் படிவத்தில் காணப்படும் இல்மனைட் உயர்தரமானது என்று கூரே வலியுறுத்தியுள்ளார். 'USGS' எனும் அமெரிக்கப் புவியியல் ஆய்வு நிறுவனம் ஒன்றின் கருத்தின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சகத்தின் 2007 ஆம் ஆண்டு நிலவரத்தின் அடிப்படையில், வருடாந்திரம் 18,000 மெட்ரிக் டன் கனிமப் பிரித்தெடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில், அம்பாறை மாவட்டத்துக்குள் அமைந்துள்ள திருக்கோவில் கடற்கரையிலும் கனிம மணல் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

லங்கா மினரல் சாண்ட்ஸ் கார்ப்பரேஷனின் தொழிற்சாலை 1972 முதல் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோடை கிராமத்தில் இயங்கி வருகிறது. விரைவில், தொழிற்சாலைக்கு தேவையான மணல் பற்றாக்குறை உருவாகக்கூடும் என்பதால், 18 வருடமாக மாற்றுச் சுரங்க இடங்களைத் தேடிய பிறகு, 2004 முதல், முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு, முகத்துவாரம் மற்றும் செம்மலை ஆகிய கடற்கரைகளில் கனிம வளங்களின் ஆற்றலை நிறுவனம் கண்டறிந்தது. டி.டபிள்யூ. ஹேரத் 1980 இல் எழுதிய தனது புத்தகத்தில் இலங்கையில் 12 இடங்களில் இல்மனைட் இருப்பதாகக் குறிப்பிட்டார். இதில் மூன்று மட்டுமே வடக்கு - கிழக்கில் உள்ளன, மீதமுள்ள ஒன்பது இடங்கள் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளன.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியாக, அரசாங்கத்திற்குச் சொந்தமான இலங்கை மினரல் சாண்ட்ஸ் லிமிடெட், முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளிலிருந்து, குறிப்பாக கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு, முகத்துவாரம் மற்றும் செம்மலை ஆகிய இடங்களில் இல்மனைட்டை விரைவாகப் பிரித்தெடுக்கத் தொடங்கியுள்ளது. இலங்கைக்குள் உள்ள தொழிற்சாலைகளில் பதப்படுத்தப்படாத இந்த வளம் ஆஸ்திரேலியா மற்றும் சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், சுற்றுச்சூழல் மீது குறிப்பிடத்தக்க பாதிப்புகள் ஏற்படுகின்றன.

கனிம மணல் கூட்டுத்தாபனம் 2006 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் சுரங்க நடவடிக்கைகளைத் தொடங்கியது. இதில் கொக்கிளாய் முதல் கொக்குத்தொடுவாய் வரை ஆறு கிலோமீட்டர் நீளமும், கருநாட்டுக்கேணி முதல் நாயாறு வரை நான்கு கிலோமீட்டர் நீளமும் அடங்குகிறது. 25 மீட்டர் அகலமுள்ள கடற்கரைப் பகுதியை வெட்டுவதே முதன்மை இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலங்கையின் 12 சாத்தியமான சுரங்க மண்டலங்களில், வடக்கு - கிழக்குத் தமிழ்ப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால் உள்ளூர்வாசிகள் அதிக வருத்தம் அடைந்தனர். இது கடுமையான சுற்றுச்சூழல் சேதம் ஏற்படலாம் என்ற கவலையை எழுப்பியது. ஆரம்பத்தில், மாவட்ட நிர்வாகம் மணல் எடுப்பைக் கட்டுப்படுத்தியது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் உள்ளூர் மீனவர்கள் மற்றும் நில உரிமையாளர்களின் எதிர்ப்புகளினால், மணல் அகற்றுதல் மெதுவாக நடந்தது. கடற்கரை அரசுக்குச் சொந்தமானது என்பதால், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ஒரு சாத்தியக்கூறு அறிக்கையை முன்வைத்தார்; அதில் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடாது என்பது முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் 2017 ஆம் ஆண்டு முன்மொழிவு,

இயற்கை வளங்களையும் சுற்றியுள்ள சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் ஏழு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டது. அதில், ஆயிரக்கணக்கான டன் மணலை எடுக்கும்போது, புதியவை உருவாகுவதற்கு முன்பு பெரிய துளைகளை நிரப்ப வேண்டும் என்பது முக்கிய அம்சமாக வலியுறுத்தப்பட்டது. மேலும், உள்ளூர் மீனவர்கள் மீன்பிடிக்காக கடற்கரையை நம்புவதைக் கருத்தில் கொண்டு, மணல் அகற்றுதல் அவர்களின் வாழ்வாதாரத்தை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடும் என்பதும் முக்கியமாக எடுத்துக்காட்டப்பட்டது. இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதற்குப் பிறகு, மீன்பிடி காலத்தில் மணல் அகற்றுவதை ஆறு அல்லது ஏழு மாதங்களுக்கு நிறுத்துவதாக நிறுவனம் அறிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் கோரிக்கைகள் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை என்றே கூறலாம். குறிப்பாக, மாவட்டச் செயலாளரின் முக்கியக் கோரிக்கையான, அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களை மீண்டும் மண் கொண்டு மூடி, அப்பகுதிகளைப் பயிர்செய் நிலங்களாக மாற்றுவது, நிதி நெருக்கடி காரணமாகச் சாத்தியப்படவில்லை. பாரிய அகழ்வுப் பகுதிகளை மூடுவதற்கு ஆகும் அதிகச் செலவு ஒரு பெரிய தடையாக உள்ளது. இதனால், மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சில பகுதிகள் மூடப்பட்டாலும், பல பகுதிகள் இன்னும் மூடப்படாமல், குழிகள் கொண்ட நிலப்பரப்பாகவே காட்சியளிக்கின்றன. மேலும், கடற்கரையோர மண் அகழ்வு மீனவர்களின் வாழ்வாதாரத்தை நாளுக்கு நாள் நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது. இயற்கை வளங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் ஒரு முறையான செயற்திட்டத்தை இன்னும் கொண்டுவர முடியாத நிலையில் தான் மாவட்டச் செயலகமும் அதிகாரிகளும் இருக்கின்றார்கள்.

### டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் நிறுவனமும் கனிம வள மதிப்பீட்டு ஆய்வுகளும்

இலங்கையின் மன்னார் தீவில் டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், உள்ளூர் பங்காளர்களான ஓரியன் மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சனூர் மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் கில்சித் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து, ஓர் உயர்தர, மதிப்புமிக்க மற்றும் எளிதில் பிரித்தெடுக்கக்கூடிய கனரகக் கனிம மணல் (Heavy Mineral Sands) திட்டத்தை உருவாக்கி வருகிறது. இந்தத் திட்டத்தின் சமீபத்திய நோக்க ஆய்வு (Scoping Study) அறிக்கையானது, இது ஒரு குறிப்பிடத்தக்க கனிம மணல் சொத்து என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன், இதன் மொத்த இருப்பை 5.02% தரத்தில் (Grade) 345 மில்லியன் டன்கள் என மதிப்பிட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டத்தின் தற்போதைய மொத்த நிகர மதிப்பு (Net Present Value - NPV) $545 மில்லியன் டொலர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (TSL) தற்போது சுற்றுச்சூழல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்தத் திட்டம் ஆரம்பத்தில் இலங்கையில் 300 வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திறன் கொண்டது எனவும், முழுமையாகச் செயற்படத் தொடங்கியதும் இது 1,200 வேலை வாய்ப்புகளாக விரிவடையும் எனவும் தெரிவித்துள்ளது. மேலும், இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கனிமம் பிரித்தெடுக்கப்பட்ட நிலத்தை மீண்டும் விவசாய உற்பத்தி நிலமாக மாற்றுவதற்கான ஒரு திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் நில உரிமையாளர்களுக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் பல வழிகளில் பயனளிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (TSL) நிறுவனம், இலங்கையில் தனது உள்ளூர் கூட்டாளர்களான ஓரியன் மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சனூர் மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் கில்சித் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆகியோருடன் இணைந்து, ஜேம்ஸ் குளோபல் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தைக் கையகப்படுத்துவதற்கான பிணைப்புக் கால அட்டவணையில் (Binding Term Sheet) கையெழுத்திட்டுள்ளது. ஜேம்ஸ் குளோபல் நிறுவனம் இலங்கையின் வடக்கு - கிழக்கு கடற்கரையின் கனரகக் கனிம மணல்களுக்கான ஆய்வு உரிமைகளை வைத்திருக்கிறது. மேலும், இது கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள JAT ஹோல்டிங்ஸ் PLC இன் இணை நிறுவனம் ஆகும். JAT ஹோல்டிங்ஸ் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு பூச்சு, அலங்கார உற்பத்திப் பொருட்கள் மற்றும் வண்ணப்பூச்சுகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, JAT அதன் பூச்சுகள் உற்பத்திக்குத் தேவையான TiO2 அடிப்படையிலான நிறமிகளை (Titanium Dioxide based pigments) குறிப்பிடத்தக்க அளவில் இறக்குமதி செய்து வருவதால், இந்தக் கையகப்படுத்தல் மற்றும் கூட்டு இணைவு TSL இன் வர்த்தக மூலோபாய இலக்குகளுடன் மிகச் சிறப்பாகப் பொருந்தக்கூடியது.

நோக்க ஆய்வுத் திட்டம் (Scope Study) பொதுவாக ஒரு திட்டத்தின் எல்லைகளை வரையறுக்கிறது. அதே சமயம் ஒரு சாத்தியக்கூறு ஆய்வு (Feasibility Study) அதன்

சந்தை, தொழில்நுட்ப, நிதி மற்றும் சட்டரீதியான நம்பகத்தன்மையை முழுமையாக மதிப்பிடுகிறது. நோக்க ஆய்வு (Scoping Study) என்பது JORC குறியீடு (2012) பிரிவு 38இன் கீழ், முதலீட்டிற்குத் தேவையான ஓர் ஆரம்ப தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மதிப்பாய்வாகச் செயற்படுகின்றது. குறிப்பாக, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் உள்ள அகழ்வு நிறுவனங்களிடமிருந்து இத்தகைய நோக்க ஆய்வு அறிக்கைகள் கட்டாயமான முன்நிபந்தனைகளாகக் கோரப்படுகின்றன. இதனுடன், கனிம ஆய்வு, வளங்கள் மற்றும் இருப்புகள் பற்றிய பொது அறிக்கையிடலுக்கான சட்டரீதியான தரநிலைகளை JORC குறியீடு வலியுறுத்துகிறது. மேலும், சாத்தியக்கூறு ஆய்வில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடும் (EIA) அடங்கும். இது சாத்தியமான சுற்றுச்சூழல் விளைவுகளை மதிப்பிட்டு, சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையை (EIS) உருவாக்குகிறது. இந்த EIA ஆனது Screening, Scoping, பொது ஆலோசனை மற்றும் மதிப்பீடு ஆகிய நான்கு நிலைகளைக் கொண்டுள்ளதுடன், இது திட்ட முடிவெடுப்பவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்க வேண்டிய மிக முக்கியமான பகுதியாகவும் கருதப்படுகிறது.

ஒரு நோக்க ஆய்வு, பொதுவாக ±35% துல்லியத்துடன் ஓர் ஆரம்ப மதிப்பீட்டை வழங்குகிறது, இது தாது இருப்புகளை மதிப்பிடுவதற்குப் போதுமானதாக இருக்காது. இந்த நோக்க ஆய்வில், உற்பத்தி இலக்குகள் சுட்டிக்காட்டப்பட்ட வளங்கள் 74% மற்றும் ஊகிக்கப்பட்ட வளங்கள் 26% எனப் பிரிக்கப்பட்ட வளங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மன்னார் கனிம அகழ்வுத் திட்டத்தில், சுமார் 10 கி.மீ. முதல் 1.5 கி.மீ. வரையிலான பகுதியில் அகழ்வுப்பணி நடைபெறும். இந்தத் திட்டத்திற்குத் தோராயமாக A$122 மில்லியன் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு தேவைப்படுகிறது. இதில், முன்உற்பத்தி செலவுகளுக்கு A$66.54 மில்லியன், செயல்பாட்டு மூலதனம் மற்றும் நிதியுதவிக்கு A$55.46 மில்லியன் தேவைப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கனிம வளங்கள் மற்றும் தாது இருப்புகளை அறிக்கையிடுவதற்கான ஆஸ்திரேலிய குறியீடு (JORC குறியீடு) ஆஸ்திரேலிய நாட்டுப் பதிவு கொண்ட சுரங்கத்துறை நிறுவனங்களிடமிருந்து பொது அறிக்கையிடலுக்கான குறைந்தபட்ச தரநிலைகளை வரையறுத்துள்ளது. அகழ்வுக்கு முன்பாக திட்டத்தின் கனிமப் புவியியல் அறிவு, பொருளாதார நிலை மற்றும் சமூக, சுற்று சூழல் பற்றிய விடயங்களில் பொது அறிக்கைகளை வழங்க வேண்டும். நம்பிக்கை நிலைகளின் அடிப்படையில் அறிக்கைகள் வெளிவர வேண்டும். JORC குறியீட்டுடன் இணைக்கப்பட்ட அறிக்கைகளில் முதலீட்டாளர்களுக்குத் தேவையான திட்டத் தகவல்கள் கிடைக்கும். அறிக்கைகள், செய்தி வெளியீடுகள் - ஆய்வு முடிவுகள் - வள மதிப்பீட்டு அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

JORC குறியீடு முதன்முதலில் 1989 இல் வெளியிடப்பட்டு 2012 இல் திருத்தப்பட்டது. ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துப் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்ட பொது நிறுவனங்கள் இந்தக் குறியீட்டின் விதிகளைப் பின்பற்றுவது கட்டாயமாகும். குறிப்பாக, 2012 ஆம் ஆண்டின் திருத்தத்தின் கீழ் (பிரிவு 38), ஒரு திட்டத்தை முதலீடு செய்வதற்கு முன், நோக்க ஆய்வு (Scoping Study) அறிக்கையைச் சமர்ப்பிப்பது ஒரு முன்நிபந்தனையாகும்.

மன்னார் கனரகக் கனிமத் திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான விதிமுறைகளை (Terms of Reference - ToR) இலங்கையின் மத்திய சுற்றாடல் அதிகாரசபை (Central Environmental Authority - CEA) வெளியிட்டுள்ளது. இந்த முடிவு, அதிகார சபையின் கள தரிசனத்திற்குப் பிறகு எடுக்கப்பட்டுள்ளது. இந்த ToR ஆனது, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான (Environmental Impact Assessment - EIA) தேவைகளை விரிவாக விவரிக்கிறது.

இந்த EIA இல் சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள் உட்பட, சுரங்க உரிமத்திற்குத் தேவையான அனைத்து அம்சங்களும் அடங்கும். இந்த EIA வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டால், அதைத் தொடர்ந்து, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் (Geological Survey and Mines Bureau - GSMB) திட்டத்திற்கான தொழில்துறை சுரங்க உரிமத்தை (Industrial Mining Licence - IML) வழங்க முடியும். டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (TSL), இலங்கையின் மன்னார் கனரகக் கனிமத் திட்டத்திற்கான நோக்கு ஆய்வு (Scoping Study) செயல்முறையின் முன்னேற்றம் குறித்து பொதுமக்களுக்குத் தொடர்ந்து தகவல்களை அளித்து வருகிறது. வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் நீண்டகால செல்வத்தை உருவாக்குவதன் மூலம் மன்னார் மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதார நன்மைகளை வலியுறுத்துவதுடன், கலாசார பாரம்பரியம் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான தனது அர்ப்பணிப்பையும் TSL உறுதிப்படுத்தியுள்ளது. பல மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை (CEA) கூட்டங்கள், ஆகஸ்ட் 22, 2024 இல் நடைபெற்ற நோக்க ஆய்வுக் கலந்துரையாடல்,

மற்றும் பிப்ரவரி 19, 2025 இல் பங்குதாரர்களின் கள வருகை உள்ளிட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்து, மார்ச் 20, 2025 அன்று CEA மன்னார் தீவின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான (EIA) விதிமுறைகளை (ToR) வெளியிட்டது. இந்தக் கூட்டங்களின் போது பெறப்பட்ட பங்குதாரர்களின் கருத்துகள் ToR இல் இணைக்கப்பட்டுள்ளன. TSL இன் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜேம்ஸ் சியர்ல், "ToR வெளியீடு இந்தத் திட்டத்திற்கான ஒழுங்குமுறை ஒப்புதலைப் பெறுவதில் ஒரு குறிப்பிடத்தக்க படி" எனக் கூறியதுடன், இது "உயர்தர கனிம மணல் அகழ்வை செயல்படுத்தவும், கணிசமான வேலைவாய்ப்பை வழங்கவும், உள்ளூர்ச் சமூகங்களுக்கு செல்வத்தை உருவாக்கவும், அரசாங்க வருவாயை கணிசமாக அதிகரிக்கவும் உதவும்" என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (TSL) நிறுவனத்தின் வலைத்தளத்தின்படி, TSL சமூக விழிப்புணர்வு மற்றும் உள்ளடக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கும், குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும், சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டத்தை செயல்படுத்த உறுதிபூண்டுள்ளது. இலங்கை பல தசாப்தங்களாக கனரகக் கனிம அகழ்வு வரலாற்றைக் கொண்டிருந்தாலும், TSL ஆனது நாட்டின் கனிமத் தொழில்துறையின் அளவையும் தரத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கணிசமாகப் பங்களிக்க முடியும் என்றும் அது கூறுகிறது.

TSL இற்கு வழங்கப்பட்டுள்ள விதிமுறைகள் (Terms of Reference - ToR) ஆனது, இலங்கை அரசாங்கத்திற்குள் உள்ள 35 துறைகள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளின் உள்ளீடுகளுடன் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கை உருவாக்கப்பட வேண்டும் என்று கோருகிறது. TSL நிறுவனத்தின் EIA ஆலோசகர்கள், இந்த ToR இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அனைத்து முக்கியப் புள்ளிகளையும் நிவர்த்தி செய்யும் பணியை தற்போது மேற்கொண்டுள்ளனர். முன்மொழியப்பட்ட திட்டத்தின் பிரதான உள்ளடக்கம் மற்றும் அதன் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுவழிகள்.

1. தற்போதுள்ள சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுப்புறங்கள் பற்றிய அறிக்கை.
2. எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் தாக்கங்களின் மதிப்பீடு.
3. சுற்றுச்சூழல் முகாமைத்துவத் திட்டத்தைத் (EMP) தயாரித்தல் மற்றும் கண்காணிப்புத் திட்டம்.
4. இயற்கை மற்றும் வனவிலங்கு மீதான தாக்க மதிப்பீடு.
5. சமூக ஆலோசனை, ஈடுபாடு மற்றும் பங்களிப்பு.

இந்த விதிமுறைகள் (ToR) ஆனவை, திட்டத் தளத்திற்கு அப்பால் அதன் சுற்றுச்சூழல் பாதிப்புகளால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் குறித்த அறிக்கையையும் கோருகிறது. இதன் மூலம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுச் (EIA) செயல்முறை தற்போது அதிகாரபூர்வமாகத் தொடங்கிவிட்டது எனலாம். TSL இன் ஆலோசகர்கள், இந்த EIA இல், அடிப்படை மற்றும் தாக்க மதிப்பீடுகள், தணிப்பு நடவடிக்கைகள், முன்மொழியப்பட்ட உத்திகள் மற்றும் முகாமைத்துவ திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வரைவை வடிவமைத்து, ToR இன் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் (GSMB) மதிப்பாய்வு மற்றும் ஒப்புதலுக்கான இறுதி EIA சமர்ப்பிப்பு 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நடக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (TSL) நிறுவனம், கனிம வள மதிப்பீடு மற்றும் ஆரம்பகட்ட முன்னெடுப்புகளைத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் — அதாவது, மதிப்பீட்டு ஆய்வுகள், பொது மக்களுக்கு அறிவித்தல் மற்றும் மணல் அகழ்ந்த நிலங்களைப் பயிர்செய் நிலங்களாக மாற்றுதல் போன்ற உறுதிகளுடன் — முன்னெடுப்பதாகக் கூறுகிறது. மேலும், வேலைவாய்ப்பு உட்படப் பொருளாதார நலனை வழங்கும் திட்டங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கின்றது. ஆனால் அவற்றின் அமுலாக்கம் குறித்துச் சந்தேகமே நிலவுகிறது. உண்மையில், ஒரு முறையான சமூக மற்றும் சுற்றுச்சூழல் கள ஆய்வு செய்யப்பட்டால் மாத்திரமே, 'மணல் அகழ்ந்த நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல்' என்ற வாக்குறுதியின் உண்மைத்தன்மை வெளிக்கொணரப்படும். அரசுசார் திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளால் தயாரிக்கப்படும் சமூக, சுற்றுச்சூழல் கள ஆய்வு அறிக்கைகள் நம்பகத்தன்மை குறைந்தவையாகவே கருதப்படுகின்றன.

மகாவலித் திட்டத்தின் போதும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் கிடைக்கவிருக்கும் நன்மைகள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை ஊட்டப்பட்டது. குறிப்பாக, இத்திட்டத்திற்கு உலக வங்கியிடம் நிதி பெறும் வகையிலேயே அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மையமே வடக்கு மாகாணத்திற்கு மகாவலி நீரைக் கொண்டுவருவதுதான் என்றாலும்கூட, நடைமுறையில் வடக்கு நோக்கி ஒரு சொட்டு நீர் கூட வந்து சேரவில்லை. மாறாக, இத்திட்டத்தின் விளைவாக நிலங்கள் துண்டாடப்பட்டு, அங்கிருந்த தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர் என்பது வரலாறாகியுள்ளது.

மன்னார் தீவு கனிம மணல் அகழ்வுத் திட்டமானது, அதிக இலாபம் ஈட்டக்கூடியதும், முதலீட்டாளர்களுக்கு அதிக இலாபப் பகிர்வு

தரக்கூடியதுமான ஒரு திட்டமாகும். இதற்குக் காரணம், மன்னார் தீவில் அமைந்துள்ள இலகுவான போக்குவரத்து வசதிகளே. இங்குள்ள துறைமுகம் மற்றும் புகையிரத வசதி காரணமாக, கனிமங்களை கொழும்புக்கோ அல்லது மன்னாரிலிருந்து பிற இடங்களுக்கோ இலகுவாக அனுப்ப முடியும். இதன் விளைவாக, TSL (டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட்) நிறுவனம் அதிக மூலதனத்தை முதலீடு செய்ய வேண்டியதில்லை. குறைந்த மூலதன முன்னெடுப்புடன் அதிக இலாபம் ஈட்ட முடியும் என்பதால், முதலீட்டாளர்களை எளிதில் கவரக்கூடிய திட்டமாகவும் இது உள்ளது. இலாபம் மட்டுமே TSL நிறுவனம் தரும் முக்கியச் செய்தியாக உள்ளது.

ஒரு பன்னாட்டு நிறுவனம், முறையான சுற்றுச்சூழல் நடைமுறைகளைப் பின்பற்றக் கூடியதா எனும் கேள்வி இங்கே எழுகிறது. ஏனெனில், கனிம மணல் அகழ்வு என்பது எப்போதுமே சுற்றுச்சூழல் அழிவுக்கே வித்திடும் என்பதுதான் தெளிவாகும் ஒரே விடயம். அவ்வாறு முறையாகப் பின்பற்றுவதாக இருந்தாலும், ஒரு நிறுவனத்தால் எவ்வாறு அதிக இலாபம் ஈட்ட முடியும்? இத்திட்டம் மூலம் கிடைக்கும் அரச வருமானம், வேலை வாய்ப்புகள் ஆகியவை அனைத்தும், இந்த அகழ்வுத் திட்டம் கொண்டுவரும் சீரழிவின் அளவோடு ஒப்பிடுகையில் ஒரு தூசியைப் போலானதாகும்.

## இலங்கை அரசின் கனிம வள அகழ்வு தொடர்பான கொள்கைகள்

மண், மணல், களிமண் மற்றும் சரளை போன்ற கனிமங்களுக்கான அரசு அனுமதியை வழங்குவது என்பது, அனைவரும் அறிந்தபடி, ஓர் அரசியல் அழிவுச் சுழற்சியில் பெரும்பாலும் சிக்கிக் கொள்கிறது. இலங்கையில் கனிம வளங்கள், 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் எண், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் (திருத்தப்பட்டபடி) கீழ் நிர்வகிக்கப்படுகின்றன என்றாலும், நடைமுறையில், இறுதி முடிவுகளையும் விளைவுகளையும் பாதிக்கும் அரசியல் சூழலே தொடர்ந்தும் மேலோங்கி நிற்கின்றது.

டிசம்பர் 4, 2019 அன்று இலங்கை அமைச்சரவை மற்றும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் (GSMB) எடுத்த முடிவுகள், சுரங்கம் மற்றும் கனிமப் பிரித்தெடுப்புக்கான உரிமங்கள் மற்றும் அனுமதிகள் தொடர்பான தற்போதைய சட்டங்களை முற்றிலுமாகப் புறக்கணிக்கும் நிலையை ஏற்படுத்தின. குறிப்பாக, மணல், மண் மற்றும் களிமண்ணைக் கொண்டு செல்வதற்கான அனுமதிக்கான தேவையை அமைச்சரவை நீக்கியதுடன், சுரங்க உரிமங்களைப் பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்க திருத்தங்களையும் முன்மொழிந்தது. மேலும், GSMB அனுமதிகளை வழங்கும்போது மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் (CEA) சுற்றுச்சூழல் பரிந்துரைகளின் தேவையையும் நீக்கியது. இருப்பினும், ஜூலை 17 அன்று, அனுமதிகள் இல்லாமல் கனிமப் பொருட்களைக் கொண்டு செல்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் அமைச்சரவை ஒருதலைப்பட்சமாக சட்டங்களை மாற்ற முடியாது என்பதை உறுதியாக வலியுறுத்தியது. இந்தத் தீர்ப்பு இருந்தபோதிலும், ஜனவரி 1, 2020 முதல் அமைச்சரவையின் நடவடிக்கைகள் சுரங்கம் மற்றும் கனிமங்கள் சட்டத்திற்கு முரணானவையாகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பைத் தொடர்ந்து குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையிலும் அமைந்து வருகின்றன.

கனிம மற்றும் சுரங்க முன்னெடுப்புகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உரிமங்கள் தேவை என்று சட்டத்தின் பிரிவு 28 கூறுகிறது. மேலும் இது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் எண் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி சுற்றுச்சூழல் தரநிலைகளுக்கு இணங்குவதற்கு இடையேயான தொடர்பைக் கட்டாயமாக்குகிறது. அமைச்சரவையின் முடிவுகள், அரசியலமைப்பில் (பிரிவு 27) கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரச அதிகார மட்டத்தின் கடமையை முற்றிலுமாகப் புறக்கணிக்கும் நிலையில், நாட்டின் நிர்வாக முறைமை ஒரு மாறுபட்ட நிலையை அடைவதை இது காட்டுகிறது. ‘வாட்டே கெடெரா விஜேபண்டா எதிர் வனப் பாதுகாவலர் ஜெனரல்’ வழக்கில், எதிர்கால சந்ததியினருக்காக சுற்றுச்சூழல் வளங்களைப் பாதுகாப்பதற்கு ‘பொது அறங்காவலர்களாக’ (Public Trustees) அரச அதிகாரமட்டமே பொறுப்பு வகிக்கிறது என்பது சட்டரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 31, 2019 அன்று, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் (GSMB) இயக்குநர் ஜெனரல், அனுமதி செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக 173/12/2019 என்ற சுற்றறிக்கையை வெளியிட்டார். இந்தச் சுற்றறிக்கை, சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் உரிமங்களை வழங்க அனுமதித்தது. இது வளப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்கும் சுற்றுச்சூழல் சேதத்தைத் தடுப்பதற்குமான முறையான சுற்றுச்சூழல் அனுமதிகளின் நோக்கத்தை முற்றிலும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. சுரங்க உரிமங்களை வழங்குவதற்கான சுற்றுச்சூழல் தரநிலைகள் ஒரு தடையாகக் கருதப்படும்போது, சுற்றுச்சூழல் அனுமதி ஏன் அவசியம் என வலியுறுத்தப்படுகிறது என்பதற்கான காரணங்களை பகுத்தறிவு அடிப்படையில் அறிந்துகொள்வது இன்றியமையாதது.

**பகுதி 2**

## மன்னாரில் கனிம வளச் சுரண்டலும் உள்ளூர் மக்களின் எதிர்ப்பும்

'டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட்' நிறுவனம் மன்னார் தீவு மற்றும் வடமேற்கு இலங்கையின் அருகிலுள்ள முக்கிய நிலப்பகுதிகளில் உள்ள கனிம மணல்களுக்கான ஐந்து ஆய்வு உரிமங்களைப் பெற்றுள்ளது. இப்போது மன்னார் தீவின் கனிம அகழ்வில் கவனம் செலுத்தி, ஆய்வுப் பணியை மேற்கொள்ளுகின்றது. இக்கனிம அகழ்வின் பரப்பளவு சுமார் 140 சதுர கிலோமீட்டராகும். மன்னார் தீவு, சாலை மற்றும் இரயில் பாதை வழியாக பிரதான நிலப்பகுதிக்கு தரைப்பாலத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியான மணல் திட்டுகளான தீவுகளில் மிகப்பெரியதாகும். இது தென்னிந்தியாவை நோக்கி மேற்கில் 100 கிலோமீட்டர் தொலைவில் விரிவடைந்துள்ளது; பண்டைய புராணக் கதைகளில் இடம்பெற்றிருந்த பாத்திரப் பெயர்களிலான ஆதாமின் பாலம் அல்லது இராமரின் பாலம் என அழைக்கப்படும் பரந்த வளைவை உருவாக்கியுள்ளது.

புவியியல் ரீதியில், மன்னார் தீவு கனிம மணல் அகழ்வு மேற்கொள்ளப்படாத நிலமாகும். உலகக் கடல் மட்டங்கள் சுமார் 6,000 - 8,000 ஆண்டுகளுக்கு முன்பு நிலைபெறத் தொடங்கியதிலிருந்து, மணல் குவிப்பின் மூலம் இந்நிலம் உருவாகியுள்ளது. பாக்கு நீரிணை சந்தியில் நிலவும் கடற்கரை நீரோட்டங்களும் பொதுவான சுழற்சிகளும் இலங்கையின் வடமேற்கு கடற்கரையில் பெருமளவு மணலைச் சேர்த்துள்ளது. ஒதுக்கப்பட்ட மணல் வண்டல்கள் வடக்கை நோக்கிப் பரந்து விரிந்துள்ளன. மன்னார் தீவின் வளர்ந்து வரும் மணல் தீவுகளில் இந்த வண்டல் நிலங்கள் பரவியுள்ளன. இதனால் தீவின் கடற்கரைகள் மற்றும் கடலோரக் குன்றுகளில் கனமான கனிம மணல் குவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், இலகுவான கார்பனேட் மற்றும் சிலிக்கா மணல்கள் அரிக்கப்பட்டு, பாக்கு நீரிணை சந்தியின் குறுக்கே உள்ள மணல் திட்டுகளின் சங்கிலிகள் மற்றும் அதன் கரைகளை நோக்கி மேற்குத் திசையில் தள்ளப்படுவதாகவும் அறியப்படுகிறது.




டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (TSL) நிறுவனம் கனிம மணல் அகழ்வு செய்ய உத்தேசித்துள்ள பகுதி (மன்னார் தீவு).
மூலம்: www.titaniumsands.com.au

டைட்டானியம் சாண்ட்ஸ் ஆய்வில் ஈடுபடுவதற்கு முன்பு, 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட துளையிடுதல்கள் மூலம் மன்னார் கடற்கரையின் வடக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் உயர்தர கனரகக் கனிமங்களின் குறிப்பிடத்தக்க செறிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது. இந்தக் காலகட்டத்தில், கடற்கரையிலிருந்து உள்நாட்டிற்குள் சுமார் 150 மீட்டர் தூரத்திற்கு மட்டுப்படுத்தி துளையிடுதல் நடத்தப்பட்டது. டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (முன்பு விண்டிமுர்ரா வெனடியம் லிமிடெட்) திட்டத்தைப் பெற்ற பிறகு, ஆரம்ப JORC தரநிலை வளத்தை அறிவிப்பதில் இந்த முடிவுகள் போதுமான ஆதாரமாக இருந்தன.

ஏப்ரல் 22, 2015 அன்று, மொத்த கனரக கனிமத் துளை (Total Heavy Mineral, THM) 11.7% உள்ளடக்கத்துடன் 10.3 மில்லியன் டன் (Mt) கனிம வளம் இருப்பதாக ஆஸ்திரேலிய வர்த்தகப் பரிவர்த்தனைக்கு (Australian Securities Exchange) ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த வள மதிப்பீடு 785 துளையிட்ட துளைகள் மற்றும் 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட 115 கூடுதல் துளைகள் ஆகியவற்றின் விரிவான தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. துளையிடுதல் மற்றும் வரையறுக்கப்பட்ட வள எல்லைகள் பெரும்பாலும் மன்னார் தீவுக் கடற்கரையிலிருந்து 150 மீட்டர் தூரத்திற்குள் மட்டுமே இருந்தன.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட துளையிடுதல்களில், மன்னார் தீவின் உள்நிலப்பகுதிகளில் கனரகக் கனிமங்களின் குறிப்பிடத்தக்க செறிவுகள் இருப்பது கண்டறியப்பட்டது. இந்தத் துளையிடுதலின் போது சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தென்னாபிரிக்காவில் உள்ள ஒரு சிறப்புக் கனிம மணல் ஆய்வகத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. துளையிடுதலின் முடிவுகள் 2018 ஜனவரி 30 அன்று ASX (Australian Securities Exchange) இற்கு அறிவிக்கப்பட்டன. தற்போது, மன்னார் தீவில் காணப்படும் கனரகக் கனிம இனங்களுக்கான கனிமவியல் பகுப்பாய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுப்பாய்வுகளின் அடிப்படையில்,

முழுமையான தரவுத்தளம் ஒன்று உருவாக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

2024 மே மாதம் 19 ஆம் திகதியளவில், ஒரு தனியார் நிறுவனம் கனிம நிறுவனத்துடன் இணைந்த குழுவுடன் நில அளவீடு செய்ய எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மன்னாருக்கு வந்தது. அவர்கள் ட்ரோன்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொண்டு வந்திருந்த போதிலும், தேவையான சட்ட அனுமதிகள் அவர்களிடம் இருக்கவில்லை. கடலோரப் பாதுகாப்புத் துறை அல்லது மீன்வளம் மற்றும் நீர்வாழ் வளத்துறையால் எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை, அத்துடன் மன்னார் நில அளவீட்டுத் துறையிடமும் கலந்தாலோசிக்கப்படவில்லை. இத்தகைய, உள்ளூர்க் குரல்களையும் சட்ட நடைமுறைகளையும் புறக்கணித்த நடைமுறைகள் சீற்றத்தைத் தூண்டியது. சிவில் சமூகக் குழுக்கள், சமூக அமைப்புகள் மற்றும் குடியிருப்பாளர்கள் நேரடியாகத் தலையிட்டு, அக்குழுவை எதிர்கொண்டு உடனடியாக அந்த நடவடிக்கைகளை நிறுத்தக் கோரினர். இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்ட போதிலும், பிரச்சினையின் அளவு குறையவில்லை; மாறாக, தற்போதைய அரசின் மீதான நம்பிக்கைகள் தான் படிப்படியாக உடைக்கப்பட்டு வருகின்றன.

ஜூன் 11, 2025 அன்று, மன்னார் தீவில் 2,000க்கும் மேற்பட்ட மக்கள் அமைதியான ஆனால் உறுதியான போராட்டத்தில் திரண்டனர். சமூக அமைப்புகளின் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் குழுக்களால் ஆதரிக்கப்பட்ட இந்தப் பேரணி, கனிம மணல் அகழ்வுத் திட்டத்திற்கான மக்களின் ஒன்றுபட்ட நிராகரிப்பைக் குறிக்கிறது. மீனவர்கள், விவசாயிகள் முதல் இளைஞர் குழுக்கள், பெண்கள் அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வரை அனைவரும், தீவின் எதிர்காலமே ஆபத்தில் உள்ளது என்ற தெளிவான குரலை எழுப்பினர். இந்தக் கனிம மணல் அகழ்வு நெருக்கடி, மன்னார் தீவின் சூழலியல், கலாசாரம் மற்றும் மக்களின் இருப்பிற்கு ஒரு பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது.

மன்னாரில் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய அவசரத் தேவை இன்று எழுந்துள்ளது. ஏனெனில், கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு, உள்ளூர் வாழ்வாதாரங்களையும் தீவின் இயற்கை வளங்களின் பாதுகாப்பையும் அச்சுறுத்தி, மன்னார்ப் பகுதியை மூழ்கடிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. உள்ளூர் மக்களின் பலத்த எதிர்ப்பை எதிர்கொண்டுள்ள இந்தச் செயல்பாடு, மன்னார் தீவை 'பகலில் திருடுவது' போல் இருப்பதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த அகழ்வு நிறுத்தப்படாவிட்டால், நன்னீர் வளங்கள் மாசுபடக்கூடும், இது மீளமுடியாத சுற்றுச்சூழல் சேதத்திற்கு வழிவகுக்கும் என்ற கடுமையான கவலைகள் எழுந்துள்ளன. மன்னார் தீவின் நிலப்பரப்பில் குறைந்தது 63% கடல் மட்டத்திற்குக் கீழே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மெல்லிய மண்ணைத் தோண்டுவது தீவை முழுமையாக நீரில் மூழ்கடிக்கும் அபாயத்தை அதிகரிப்பதுடன், இயற்கைக் குடிநீரின் உப்புத்தன்மையை அதிகரிக்கவும் கூடும்.




மன்னாரில் கனிம மணல் அகழ்வுக்கெதிராக நடைபெற்ற மக்கள் போராட்டம்.

மூலம்: tamilguardian

மன்னார் தீவின் அமைதியான சூழல் தற்போது மேலும் அதிகரித்த அமைதியின்மையின் விளிம்புக்குச் செல்கிறது. அதன் அமைதியான கடற்கரைகள் இன்று தன் இருப்பின்மையை உணரத் தலைப்பட்டுள்ளன. இந்தத் தீவு, மன்னார் சமூகத்திற்கும் கொழும்பைத் தளமாகக் கொண்ட கனிம வளங்களைப் பிரித்தெடுக்கும் ஆர்வலர்களுக்கும் இடையே அதிகரித்து வரும் பதட்டங்களின் மையமாக மாறியுள்ளது. ஒட்டுமொத்தத் தீவின் கவனமும் அதன் கனிம வளம் நிறைந்த மணலைச் சுரண்டுவதைத் தடுப்பதை நோக்கியே உள்ளது. இது ஒரு சாதாரணப் போராட்டம் மட்டுமல்ல, நீதி, கண்ணியம் மற்றும் தங்கள் நிலத்துடன் இணக்கமாக வாழும் உரிமைக்கான ஒரு கூட்டு முயற்சி ஆகும்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIA) நடத்தப்பட்டாலும், அவை பெரும்பாலும் மக்களின் பார்வைக்கு முழுமையாக அணுக முடியாதவையாகவே உள்ளன. அவை ஒருபோதும் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதில்லை அல்லது பகிரப்படுவதில்லை. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முடிவெடுக்கும் செயல்முறையிலிருந்து முறையாக விலக்கப்படுகிறார்கள். இப்பகுதியில் முன்மொழியப்படும் காற்றாலைத் திட்டங்கள் போன்ற 'பசுமை வளர்ச்சி' முயற்சிகள் கூட மக்களின் நம்பிக்கையைப் பெறவில்லை. இவை உண்மையில் நிலைத்தன்மைக்கு உதவாமல், வெறும் 'பசுமைச் சலவையாக' (Greenwashing) இருக்கக்கூடும் என்ற சந்தேகம் மன்னார் மக்களிடையே தற்போது எழுந்துள்ளது.

கனிம மணல் மதிப்பீடு என்பது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட செயல் அல்ல; மாறாக, இது வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குள் ஊடுருவிச் செல்லும் ஒரு பெரிய வளச் சுரண்டல் முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்த முயற்சிகள், போர், இடப்பெயர்ச்சி மற்றும் நீண்டகாலப் பொருளாதாரப் புறக்கணிப்பிலிருந்து இன்னும் மீண்டுவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளின் வளங்களைக் குறிவைக்கின்றன. இத்தகைய தொடர்ச்சியான பிரித்தெடுக்கும் முன்னெடுப்புகள், அப்பகுதி மக்களின் வாழ்வாதார அடித்தளங்களைத் தகர்க்கும் ஒரு செயலாகவே பார்க்கப்படுகிறது.

மன்னாரின் காற்று வீசும் மணல் மேடுகள், சதுப்பு நிலங்கள், கடல் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் ஈரநிலங்கள் என்பன வெறும் நிலப்பரப்புகள் மட்டுமல்ல; அவை அழிந்து வரும் உயிரினங்களை ஆதரிக்கும், கடலோர அரிப்பிலிருந்து பாதுகாக்கும், மற்றும் மீன்பிடித்தல், உப்பு விவசாயம், சிறிய அளவிலான விவசாயம் போன்ற பாரம்பரிய வாழ்வாதாரங்களை நிலைநிறுத்தும் உயிர்நாடிகள் ஆகும். ஆனால், இந்த நிலங்களுக்கு அடியில் டைட்டானியம், மட்பாண்டங்களில் பயன்படுத்தப்படும் இல்மனைட், ரூட்டைல் மற்றும் சிர்கான் போன்ற உலகளவில் தேவைப்படும் மதிப்புமிக்க கனிமப் படிவுகள் உள்ளன. இதன் விளைவாக, பன்னாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் மன்னாரின் கடற்கரையைப் பாதுகாக்கப்பட வேண்டிய நிலப்பரப்பாக அல்லாமல், கனிமங்கள் பிரித்தெடுக்கப்பட வேண்டிய ஒரு வளமாகவே பார்க்கின்றன. தற்போதைய சுரண்டல் நடவடிக்கைகள் இலங்கையின் சுரங்கப் பணியகத்தின் (Geological Survey and Mines Bureau) இரகசிய அனுசரணையுடனும், மன்னாரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் பக்கபலத்துடனும் தொடர்வதாகவும் மக்கள் நம்புகின்றனர். மேலும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு எந்தச் சட்ட அனுமதியும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. வெளிநாட்டில் செயற்படும் டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் (Titanium Sands Limited) நிறுவனம், பல ஆண்டுகளாக இரகசியமாக மணல் அகழ்வுத் தொழிலில் ஈடுபட்டு வருகிறது என்றும், ஏமாற்றும் முறைகளைப் பயன்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்குப் பணம் கொடுத்து தங்கள் நோக்கங்களை அடைவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல தனிநபர்கள், இந்த நிறுவனங்கள் அளித்த பொய்யான வாக்குறுதிகளுக்குப் பலியாகி, தங்கள் நிலங்களை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராக இருந்ததாக கள நிலைகள் கூறுகின்றன. இதற்கு, அதிகரித்த வேலையின்மை, அதிகரிக்கும் வறுமை மற்றும் நுண்கடன்களின் சிக்கிய வாழ்வு நிலை காரணங்களாக இருக்கலாம்.

கனிம மணல் அகழ்வு நிறுவனங்கள், தனியார் நிலங்களை இலக்காகக் கொண்டு, பனை மரங்களை அகற்றி, அகழ்வுக்கான சாதனங்களைப் பயன்படுத்தும் நோக்குடன் நிலங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த மன்னார் நிலப்பரப்பு, ஆஸ்திரேலியா, சீனா, தென்னாப்பிரிக்கா மற்றும் இந்தியா உள்ளிட்ட பல வெளிநாடுகளின் ஆர்வத்தை ஈர்த்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இந்த கனிம மணல் அகழ்வு சார்ந்த ஆர்வமானது, உள்ளூர்ச் சமூகங்களை இடம்பெயர்த்து, அவர்களின் எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்தி, சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சேதப்படுத்தி, இறுதியில் தீவின் முழுமையான இயற்கைப் பாதுகாப்புகளை 'அபிவிருத்தி' என்னும் பெயரில் சீர்குலைக்கிறது. இந்த முன்னெடுப்புகளை முற்றாகத் தடுக்க வேண்டியது இன்றைய காலக் கடமையாகும்.

### மன்னாரில் நாம் இழப்பவை யாது? அதன் அபாயம் என்ன?

வடமேற்கு இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்டம் ஓர் உணர்திறன் மிக்க சூழலுக்குப் பெயர் பெற்றது. ஆதாம் பாலம் தேசிய பூங்கா, வங்காலை சரணாலயம், மற்றும் விடத்தல்தீவு இயற்கை காப்பகம் உள்ளிட்ட இப்பகுதி, பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு இன்றியமையாதது. இது பல்வேறு வகையான தாவரங்கள், புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களை ஆதரிக்கும் ஓர் உயிர்ப்புள்ள சுற்றுச்சூழல் அமைவிடமாக உள்ளது. எனினும், கடலோர அரிப்பு

மற்றும் காலநிலை மாற்றம் போன்ற அச்சுறுத்தல்களைத் தாண்டி, இந்த உணர்திறன் மிக்க பகுதி தற்போது ஒரு பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், அபிவிருத்தி என்ற பெயரில் அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்படவுள்ள கடலோர கனிம மணல் அகழ்வு மற்றும் டைட்டானியம் பிரித்தெடுத்தல் போன்ற மனிதச் செயற்பாடுகளால், மன்னார் மாவட்டமும் அதனுடன் இணைந்த வன்னி நிலப்பரப்பும் கடல் வளமும் ஒரு பாரிய சூழலியல் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.




பாக்கு நீரிணை (Palk Strait) வழியாக இலங்கைக்கும் (மன்னார் தீவு) இந்தியாவுக்கும் (தமிழ்நாடு) இடையே நீண்டு செல்லும் மணல் திட்டுகள், குன்றுகள் மற்றும் தீவுகள்.

*மூலம்: www.titaniumsands.com.au*

மன்னார் பிராந்தியத்தின் கடலோரப் பகுதிகள் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைப் புரிந்துகொள்வதற்கும், தொடர்ச்சியான சமநிலையையும் பாதுகாப்பையும் பேணுவதற்கும் இன்றியமையாதவை என்பதால், அங்கு சமரசமில்லா சுற்றுச்சூழல் பாதுகாப்பு அத்தியாவசியத் தேவையாக உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இலங்கை தற்போது ஒரு 'வளச் சாபத்தில்' சிக்கியுள்ளது. நாட்டின் கனிம மணல் அகழ்வு மற்றும் அதனுடன் இணைந்த சுரங்கத்துறை ஆகியவை இன்று சுற்றுச்சூழல் அரசியல் களத்தின் மையப்புள்ளியில் முழுமையாகச் சிக்கியுள்ளன. இலங்கையில் நிலையான வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் இடையிலான சமநிலை பெரும்பாலும் இல்லாமல் உள்ளது. குறுகிய பார்வை கொண்ட, சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் அரசியல் தலைமையால், பொருளாதார வளர்ச்சி என்னும் பெயரில் சுற்றுச்சூழல் மீதான வளச் சுரண்டல் முன்னுரிமை பெற்று வருகின்றது என்பது அவதானிக்கத்தக்கது.

மன்னார் நிலப்பரப்பு, குறிப்பாக மன்னார் தீவு, மத்திய ஆசிய பறக்கும் பாதை வழியாகப் புலம்பெயரும் பறவைகளுக்கு ஓர் அத்தியாவசிய வாழ்விடமாக உள்ளது. அத்துடன், ஆவிலியா (கடல் பசு) மற்றும் கடல் ஆமைகள் உட்படப் பல்வேறு வகையான அரிய கடல்வாழ் உயிரினங்களின் தாயகமாகவும் இது விளங்குகிறது. மாவட்டத்தின் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளில் தடாகங்கள், சதுப்புநிலங்கள் மற்றும் பவளப்பாறைகள் உள்ளன. இவை அனைத்தும் அதன் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்திற்குப் பங்களிக்கின்றன. இருப்பினும், இந்தக் கடலோரப் பகுதிகள் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. கடலோர அரிப்பு ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. கடல் மட்டங்கள் உயர்ந்து வருவதாலும், மனிதச் செயற்பாடுகளாலும், குறிப்பாக வங்காலை போன்ற அதிக ஆபத்துள்ள பகுதிகள் தினமும் பாதிப்படைகின்றன. இந்தக் கவலைகளில் மிக முக்கியமானது, கடல் நீர் ஊடுருவல் காரணமாக மாவட்டத்தின் நிலத்தடி நீரின் தரம் குறைந்து வருவது ஆகும்.

2020 ஆம் ஆண்டு முதல், பேசாலை, எருக்கலம்பிட்டி, தோட்டவெளி, தலைமன்னார் மற்றும் சவுத்பார் உள்ளிட்ட மன்னார் முழுவதிலும் உள்ள சமூகங்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. இதில், சரியான வடிகால் அமைப்புகள் இல்லாததால் மாதக்கணக்கில் நீடிக்கும் வெள்ளம், வீடுகள், சாலைகள் மற்றும் வயல்களைச் சேதப்படுத்துவது முதன்மையானது. மேலும், ஆண்டுதோறும் மீன்பிடிப்புக் குறைந்து வருவது மற்றொரு தீவிரமான பிரச்சினையாகும். பல மீனவர்கள் தங்கள் வருமானத்தில் 40%க்கும் அதிகமான இழப்பைப் பதிவு செய்துள்ளனர். இந்தச் சவால்கள் மணல் அகழ்வு தொடங்குவதற்கு முன்பே எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மணல் அகழ்வு நிறுவனம் இது 'வெறும் மணல்' என்று கூறினாலும், அங்குள்ள வாழ்க்கைக்கு அது இன்றியமையாதது என்பதே உண்மை. ஏனெனில், மணல் தான் மன்னாரைப் பாதுகாக்கிறது, தண்ணீரை வடிகட்டுகிறது, மேலும் விவசாயம் மற்றும் மீன்பிடித்தலை நிலைநிறுத்துகிறது. எனவே, மணலை அகற்றுவது இந்தச் சமநிலையைச் சீர்குலைத்து,

மன்னார் சமூகத்திற்குப் பேரழிவை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

பல்லுயிர்ப் பெருக்கத்தின் மீதான தாக்கங்கள்: வாழ்விட அழிவு என்பது மணல் பிரித்தெடுப்பின் நேரடி விளைவாகும். இந்தச் செயல்பாடு ஆறுகள், கடலோரப் பகுதிகள், ஆற்றங்கரைகள், கடற்கரைகள் மற்றும் மணல் குன்றுகள் போன்ற ஈரநிலங்களில் உள்ள வாழ்விடங்களை நேரடியாக நீக்குகிறது அல்லது தொந்தரவு செய்கிறது. இந்த அகற்றுதல் செயல்முறை ஒட்டுமொத்தச் சுற்றுச்சூழல் அமைப்புகளையும் சீர்குலைப்பதுடன், பல உயிரினங்களுக்கும் அவசியமான வாழ்விடங்களை இல்லாமலாக்குகிறது.

சீர்குலைந்த சுற்றுச்சூழல் செயல்முறைகள்: மணல் பிரித்தெடுக்கும் செயல்பாடு, 'மேக்ரோஇன்வெர்ட்பிரேட்' சறுக்கல் (Macroinvertebrate Drift), மீன் இடப்பெயர்வு மற்றும் விதை பரவல் உள்ளிட்ட பல அத்தியாவசிய சுற்றுச்சூழல் செயல்முறைகளை நேரடியாகக் குறுக்கிடலாம். இந்த இடையூறுகள், உணவு வலை இயக்கவியலை (Food Web Dynamics) வெகுவாகப் பாதிப்பதுடன், ஒட்டுமொத்தச் சுற்றுச்சூழல் அமைப்பின் ஆரோக்கியத்தையும் மற்றும் அதன் நிலைத்தன்மையையும் பலவீனப்படுத்தும்.

நீரின் தரச் சிக்கல்கள்: மணல் அகழ்வுச் செயல்முறையானது நீர்நிலைகளில் கொந்தளிப்பு (Cloudiness) மற்றும் வண்டல் படிவுகளை (Sedimentation) அதிகரிக்கிறது. இதன் காரணமாக, நீரில் ஒளி ஊடுருவல் மற்றும் ஆக்ஸிஜன் அளவுகள் குறைகின்றன. இந்தச் சுற்றுச்சூழல் சீரழிவு, மீன், மட்டி மற்றும் தாவரங்கள் உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிப்பதுடன், மனித நுகர்வு மற்றும் விவசாயத்திற்கான நீரின் தரத்தையும் எதிர்மறையாகப் பாதிக்கும்.

உயிரினங்களின் இழப்பு: வாழ்விடங்களை அழிப்பதும் மற்றும் சுற்றுச்சூழல் செயல்முறைகளைச் சீர்குலைப்பதும் பூர்விக உயிரினங்களின் எண்ணிக்கையிலும், குறிப்பாக அரிய அல்லது அழிந்து வரும் உயிரினங்களின் எண்ணிக்கையிலும் சரிவுக்கு வழிவகுக்கும். கூடுதலாக, இந்தச் சுற்றுச்சூழல் சீர்குலைவு, வெளியிலிருந்து வரும் ஆக்கிரமிப்பு உயிரினங்களின் (Invasive Species) பெருக்கத்தை எளிதாக்கி, மேலும் ஒரு சூழலியல் அச்சுறுத்தலை உருவாக்கும்.

சுற்றுச்சூழல் அமைப்பின் மீள்தன்மை குறைப்பு: வாழ்விடங்களை மாற்றுவதன் மூலமும் சுற்றுச்சூழல் செயல்முறைகளைச் சீர்குலைப்பதன் மூலமும், வணிக ரீதியான மணல் அகழ்வு ஆனது, சுற்றுச்சூழல் அமைப்புகளின் சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கான எதிர்ப்புத் திறனைக் (Ecological Resistance) குறைக்கிறது. இதன் விளைவாக, அந்தச் சுற்றுச்சூழல் அமைப்புகள் வெள்ளம், வறட்சி மற்றும் காலநிலை மாற்றம் போன்ற வெளிப்புறத் தொந்தரவுகளுக்கு அதிக வாய்ப்புள்ளவையாகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவையாகவும் மாறுகின்றன.

ஆற்று சுற்றுச்சூழல் அமைப்புகளில் மணல் அகழ்வானது ஆற்றுப் படுகைகளைக் குறைக்கலாம், ஆறுகளை விரிவுபடுத்தலாம் மற்றும் ஆற்றங்கரைகளைச் சீர்குலைக்கலாம். இதன் விளைவாக, அரிப்பு (Erosion), வாழ்விட இழப்பு மற்றும் நீர் ஓட்டத்தில் மாற்றங்கள் ஏற்படும். இந்த மாற்றங்கள், இறுதியில் மீன் தொகை, 'மேக்ரோஇன்வெர்ட்பிரேட்' சமூகங்கள் மற்றும் கரையோரத் தாவரங்களைப் பாதிக்கின்றன.

கடலோரச் சுற்றுச்சூழல் அமைப்புகள் மீதான பாதிப்பு: கடற்கரைகள் மற்றும் மணல்மேடுகளில் (Dunes) நடைபெறும் மணல் அகழ்வு நடவடிக்கையானது, கடலோர அரிப்பு (Coastal Erosion), தாவர இழப்பு மற்றும் புயல்களுக்கு அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலைமைகளுக்கு வழிவகுக்கும். இது கடற்புறாக்கள் (Terns) மற்றும் ஆமைகள் முட்டையிட வரும் இடங்களையும் நேரடியாகச் சீர்குலைக்கும்.

கடற் சுற்றுச்சூழல் அமைப்புகள் மீதான பாதிப்பு: கடல் நீரில் மணலைத் தோண்டுவது என்பது, பெந்திக் வாழ்விடங்களைத் (Benthic Habitats) தொந்தரவு செய்யலாம், இது பல்லுயிர்ப் பெருக்கத்தைக் குறைக்கலாம்; மீன்களின் எண்ணிக்கையைப் பாதிக்கலாம். கூடுதலாக, இந்தச் செயல்பாடு ஒலி மாசுபாட்டை உருவாக்கலாம். இந்த இரைச்சல் மாசுபாடு, போர்போயிஸ் (Porpoises) போன்ற செவித்திறனை நம்பியிருக்கும் கடல் பாலூட்டிகளைப் பெரிதும் பாதிக்கிறது.

### மன்னார் முதல் யாழ்ப்பாணம் வரையிலான கடற்கரை நிலப்பரப்பு மீதான அச்சுறுத்தல்கள்

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான கடற்கரைப் பகுதி வட மாகாணத்தின் ஒரு பலம் மிக்க பொருளாதார வலயமாகும். அத்துடன் இன்றுவரை போதிய கவனம் கொள்ளப்படாத பல்வேறு கரையோர வாழ்விடங்களின் ஆதாரமாகவும் திகழ்கிறது. இவை பாதுகாக்கப்பட வேண்டிய வாழ்விடங்களாகும். இப்பகுதியில் கழிமுகங்கள், தடாகங்கள், கடற்கரைகள், பாறைகள் நிறைந்த

கரையோரங்கள், மணல் திட்டுகள், உப்புச் சதுப்பு நிலங்கள் மற்றும் சதுப்புநிலங்கள் எனப் பல வகைப்பட்ட அமைப்புகள் உள்ளன. இவை சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார ரீதியான அத்தியாவசிய நன்மைகளைக் கொண்டுள்ளன. இருப்பினும், இந்தக் குறிப்பிட்ட வெப்பமண்டலப் பகுதிகள், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் தீவிர அழுத்தத்தில் உள்ளன. இதன் விளைவாக, இந்தக் கடலோரச் சுற்றுச்சூழல் வாழ்விடங்கள் அமைதியான முறையில் அழிந்து வருகின்றன.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றங்கள் அழிவுகளை உண்டாக்கினாலும், அழிவில் அதிகம் பங்களிப்பது தற்போதைய அரசின் மோசமான பொருளாதாரக் கொள்கைகளே ஆகும். இந்தக் கொள்கைகள் நீண்டகாலத்தில் இந்த வாழ்விடங்களை நீர்த்துப்போகச் செய்யக்கூடியன. இதனால் மிகவும் பாதிக்கப்படப் போவது எமது நெய்தல் நிலத்தின் வாழ்வாதாரங்கள், வளமான எமது கடல்சார் வனங்கள் மற்றும் கடல் பண்ணைகளே (Sea Farms) ஆகும். மொத்தத்தில், தற்போதைய இந்தச் செயல்நெறி, மனிதர்களைக் காவுகொள்ளும் ஒரு மோசமான திசையை நோக்கிச் செல்கிறது.

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான வடமேற்குக் கரையோர நிலப்பரப்பு ஒரு தனித்துவமான சுற்றுச்சூழல் கட்டமைப்பை உள்ளடக்கியது. மாந்தை மேற்கு, மடு, நானாட்டான், மன்னார் (மன்னார் மாவட்டம்) மற்றும் பூநகரி (கிளிநொச்சி மாவட்டம்) ஆகிய மிக முக்கிய மையங்களை இது கொண்டுள்ளது. மன்னார் தீவு, ஆடம்ஸ் பாலம் மற்றும் மணல் தீவுகள், பிரதான மன்னார் தீவின் மணல் குன்றுகள் மற்றும் சதுப்பு நிலப்பரப்புகள் ஆகியவை இப்பகுதியின் உயிர்ப்பான பகுதிகளாகும். இருப்பினும், காடழிப்பு, முறையற்ற மக்கள்தொகை குடியிருப்பு, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அறிவின்மை போன்ற கடுமையான இயற்கை மற்றும் மனிதத் (மனிதனால் உருவாக்கப்பட்ட) தலையீடுகள் இப்பகுதிகளைத் துவம்சம் செய்கின்றன. எடுத்துக்காட்டாக, நூற்றுக்கணக்கான பறவை முட்டைகள் சிதைக்கப்படும் நடவடிக்கைகள் ஒருபுறம் தொடர, புள்ளிமான்கள், காட்டுப்பன்றிகள் மற்றும் கழுதைகள் உள்ளிட்ட பாலூட்டிகளின் இருப்புக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மேலும், வறட்சி, தீவிர வானிலை நிகழ்வுகள், கடல் ஊடுருவல் மற்றும் குடிநீரில் உப்புத்தன்மை அதிகரிப்பு ஆகியவை சமூகத்தின் ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் அடிப்படை வாழ்வாதார வாய்ப்புகளை அச்சுறுத்துகின்றன. எனவே, முன்னுரிமை அடிப்படையில் பல்லுயிரியலைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் சேவைகளை மேம்படுத்துதல், கார்பன் சுரப்பு (Carbon Sequestration) மற்றும் நிலச் சீரழிவைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் திட்டமிட்ட அடிப்படையில் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும். இதற்குப் பங்கேற்பு அணுகுமுறை மற்றும் பல பங்குதாரர்களின் இணைவு மிக அவசியம். இயற்கை முகாமைத்துவ முறை மூலம் கடலோரச் சுற்றுச்சூழல் கட்டமைப்புகளுக்கு மேலும் இடையூறு ஏற்படுவதைக் குறைக்க நாம் வேகமாகச் செயல்பட வேண்டியுள்ளது. அத்துடன், காலநிலை மாற்றத்தைத் தணிக்கவும், மாற்றியமைக்கவும் உதவும் வகையில், பங்கேற்புடனான சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரத் தலையீடுகளைச் செயல்படுத்துவதன் மூலம் இந்தத் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும்.

அப்பகுதிச் சமூகங்களுக்கு அதிகாரமளிப்பதற்கான செயற்பாடுகள் கட்டாயமானவை. சிவில் சமூக அமைப்புகளை மேம்படுத்துவதற்கும், இந்த உயிர்ப்பான நிலப்பரப்பில் உள்ளூர் மக்களின் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கும் நீண்டகாலச் செயற்பாடுகள் அவசியம். பறவைகள் சரணாலயங்களில் மீன்பிடிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, அங்கிருக்கும் புலம்பெயர்ந்த மற்றும் பூர்வீகப் பறவைகளைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில், கடற்கரை மற்றும் கடல்சார் பாதுகாப்புத் திட்டங்களை வடிவமைப்பதற்கான சூழலியல் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும் நிலப்பரப்பின் திறன், மீள்தன்மை மற்றும் அதன் எதிர்கால வாழ்வாதாரத்தை அதிகரிப்பது போன்ற செயற்பாடுகள் ஒரு தனித்துவமான சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பை உருவாக்க உதவும்.

மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான கரையோரப் பகுதி பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. இவற்றில் கரையோரச் சுற்றுச்சூழல் மற்றும் தடாகங்களின் அழிவு, சனத்தொகைப் பெருக்கம், மண் அரிப்பு, வறட்சி, மாசுபாடு காரணமாக மண் மற்றும் நீரின் தரச் சீர்குலைவு, சட்டவிரோதமாக திடக்கழிவுகளை அகற்றுதல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் அதிகரிப்பு ஆகியவை அடங்கும். மேலும், நில அபகரிப்புடன் கூடிய சட்டவிரோத ஆக்கிரமிப்பு மற்றும் காடுகளை அகற்றுதல் போன்றன தண்டனையின்றி மேற்கொள்ளப்படுகின்றன. சதுப்பு நிலத்தின் வடகிழக்கு எல்லையில் குப்பைகளும் கழிவுகளும் கொட்டப்பட்டு வருகின்றன. பலத்த காற்றுடன் இவை சதுப்பு நிலத்தை மோசமாக்குகின்றன. தவறான

நகரமயமாக்கல், கழிவுகளை அகற்றுதல் மற்றும் வணிகப் பயன்பாட்டிற்காக ஈரநிலங்களை நிரப்புதல் உள்ளிட்ட தீங்கு விளைவிக்கும் மனித நடைமுறைகள், இந்தப் பகுதியின் ஈரநிலச் சுற்றுச்சூழல் அமைப்பை ஆபத்தில் ஆழ்த்துவதற்கு வழிவகுத்துள்ளன.

சட்டவிரோதமான முறையில் நீர்ப்பறவைகளைப் பிடிப்பதும் சுட்டுக்கொல்லுவதும் குறைவில்லாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இங்கு, பின்டைல் வாத்துகள் மற்றும் கார்கனி வாத்துகள் போன்ற புலம்பெயர்ந்த இனங்களும், சைபீரியக் கொக்குகள் (Heuglin's Gulls), கிரே பார்ட்ரிட்ஜ் (Grey Partridge) போன்ற பெரிய பறவைகளும், அத்துடன் அழிந்துவரும் புள்ளிபில்டு வாத்துகள் (Spotbilled Ducks) போன்ற இனங்களும் தொடர்ந்து வேட்டையாடப்படுகின்றன.

உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாடு உள்ளிட்ட திட்டமிடப்படாத செயற்பாடுகளால் சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களும் பாதிப்புகளும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக காடழிப்பு மற்றும் மணல் அகழ்வு போன்ற நடவடிக்கைகள், மன்னார் தீவில் உள்ள தனித்துவமான மற்றும் செழுமையான பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளின் நீண்டகால நிலைத்தன்மைக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் பின்விளைவுகளைப் பற்றி அறியாமல் மேற்கொள்ளப்படுகின்றன.

### பின் - போர்க்காலப் பின்னணியில் பல்தேசிய முதலாளித்துவ முதலீட்டுத் திட்டங்கள்

2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் முடிவானது, இலங்கையின் வடமேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் உள்ள சமூகங்களுக்குப் புதிய சவால்களை அறிமுகப்படுத்தியது. உள்ளக முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துதல், பிரதேசங்களைத் தனிமைப்படுத்தல் மற்றும் பாகுபாடுகளைக் கூர்மைப்படுத்துதல் போன்ற அணுகுமுறைகள், குடியிருப்பாளர்களிடையே, குறிப்பாக மன்னார் மக்களிடையே, ஆழமான அவநம்பிக்கையை வளர்த்த கடந்தகால அனுபவங்களாகும். தொடர்ச்சியான அநீதிகளின் அனுபவங்கள் மற்றும் இனச்சார்பு குறித்த அச்சம் காரணமாக, பல சமூக உறுப்பினர்கள் சமூகப் பொருளாதார முன்னெடுப்புகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக, உள்ளக மற்றும் வெளியக இடப்பெயர்வுகளில் ஈடுபட முயலுவதற்கு இதுவே வழிவகுத்துள்ளது எனலாம்.

போருக்குப் பிந்தைய வாழ்வைக் கட்டியெழுப்பும் முன்னெடுப்புகளைத் தடுக்கும் வகையில், மன்னாரில் கடற்படை அல்லது இராணுவத்தால் தனியார் நிலங்களைக் கட்டாயமாக கையகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த நிலங்கள் பின்னர் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அல்லது பெரிய மற்றும் நடுத்தர அளவிலான மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் தேசிய நன்மைகளாக வடிவமைக்கப்பட்டாலும், அவை உள்ளூர்ச் சமூகங்கள், வனவிலங்குகள் மற்றும் அவை நம்பியிருக்கும் நுட்பமான சுற்றுச்சூழல் அமைப்புகள் மீது ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் மீது அதிகம் கவனம் கொள்ளவில்லை.

பல ஆண்டுகளாக, உள்ளூர்ச் சமூகங்களும் ஆதரவு அமைப்புகளும் போராட்டங்கள், கதைவடைப்புகள் மற்றும் ஊர்வலங்கள் மூலம் இந்த நடவடிக்கைகளுக்குத் தங்கள் அமைதியான எதிர்ப்பைக் காட்டி வந்துள்ளன. இருப்பினும், இந்த மக்களின் உணர்வுகளும் கோரிக்கைகளும் இன்றுவரை புறக்கணிக்கப்பட்டவையாகவே உள்ளன. மேலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், இந்த எதிர்ப்புகளை அரசின் அபிவிருத்திக்கு எதிரானவை என்று சித்திரிக்கும் தவறான கதைகளும் தவறான தகவல்களின் பெருக்கமும் தொடர்ந்து வளர்ந்து வருவதுதான்.

மன்னார், அதன் உயிர்ப்பான மணற் குன்றுகள், வளமான நிலப்பரப்பு, கடல், பறவை மற்றும் விலங்கினங்களின் பன்முகத்தன்மையைக் கொண்டிருப்பதால், சுமார் 123,674 (2024) மக்களின் வாழ்வாதாரங்களைத் தாங்கும் ஒரு துடிப்பான சுற்றுச்சூழல் அமைப்பாக உள்ளது. இருப்பினும், இன்று இந்தப் பிராந்தியம், பல்தேசிய முதலாளித்துவ முதலீட்டு மையங்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதால், சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பல்லுயிர் வளங்களையும் மீறி இலாபத்திற்காகத் தியாகம் செய்ய வேண்டுமா? என்ற முக்கிய வினாவை எதிர்கொள்கிறது.

நாம் காலநிலை நெருக்கடிக்கு அவசரமாகத் தீர்வுகளைத் தேடும் இந்தக் காலகட்டத்திலும், போரால் பாதிப்படைந்த மன்னார், நிலையான அபிவிருத்தித் திட்டங்களுக்கான (Sustainable Develop ment Projects) அவசரத் தேவைகளைக் கொண்டிருக்கிறது. ஆனால், தற்போதைய போக்கு, மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களை அழித்து பேரழிவு விளைவுகளைத் தரும் வகையில், அரச

ஆதரவு கொண்ட பல்தேசியத் திட்டங்கள் எதிர்கால விளைவுகளைப் புறக்கணிக்கிறது. எனவே, இந்தப் பிராந்தியத்தின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கும் வகையில், பாதிப்பு குறைவான வளர்ச்சித் திட்டங்களை (LowImpact Development) கொண்டுவருவதே இன்றைய அத்தியாவசியத் தேவையாக உள்ளது.

நீடித்த போர், கோவிட் - 19 தொற்றுநோய் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஆகியவை பொருளாதார ரீதியில் மேலும் அதிகப்படியான சுமைகளைச் சேர்த்து, இந்த பிரச்சினைகளைச் சிக்கலாக்கின. காலநிலை மாற்றத்தின் அச்சுறுத்தல் மற்றும் மனிதச் செயற்பாட்டால் ஏற்படும் காலநிலை மாற்றம் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், மக்களின் எதிர்ப்பின் பின்னாலுள்ள காரணங்களையும் உள்நோக்கிப் பார்ப்பது மிக அவசியம். மக்களின் பங்களிப்பு என்பது அபிவிருத்தியின் மையமாகும். எனவே, மக்களின் பயங்களைப் போக்கி, நம்பிக்கையை வளர்க்க வேண்டும். அபிவிருத்தி என்பது மக்களின் வாழ்வாதார நம்பிக்கையிலிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டும். எனினும், அரசின் முடிவெடுக்கும் நடைமுறைகள், தற்போதுள்ள ஆக்கபூர்வமான முயற்சிகளின் போக்கு மற்றும் அவற்றின் நீண்டகாலத் தாக்கங்கள் குறித்துப் போதிய கவனம் செலுத்தவில்லை என்ற அச்சத்தை உருவாக்குகின்றன.

மன்னாரின் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகளையும் அதன் மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் சுரண்டல் நடைமுறைகள், உள்ளூர்ப் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் மற்றும் பொருளாதார பன்முக வாய்ப்புகள் என்ற போர்வையில் வெளிவந்தாலும், இறுதியில் அவை அச்சுறுத்தல் நிறைந்த சமூகப் பொருளாதார நிலையையே எதிர்கொள்ள நேரிடும். ஏனெனில், மன்னார் தீவின் ஈரநிலங்கள் பல்லுயிர்ப் பன்முகத்தன்மை கொண்டவை; ஆற்றல் நிறைந்தவை. சுற்றியுள்ள சுற்றுச்சூழல் வளங்கள், வனவிலங்குகளுடன் அதன் மக்கள் கொண்டிருக்கும் உறவு பிரிக்க முடியாதது. எனவே, உண்மையான உள்ளூர்ப் பொருளாதார வாய்ப்புக்குரிய திட்டங்களை, முக்கியமாக இந்த ஈரநிலங்களின் பல்லுயிர்ப் பன்முகத்தன்மை கொண்ட வளங்களின் மீதுதான் வடிவமைக்க வேண்டியுள்ளது. இதுவே அம்மக்களின் நியாயமான எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

## முடிவு

இலங்கையின் தனியார் துறையும் அதன் சர்வதேசக் கூட்டாளர்களும் இணைந்து, பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை (Diversity, Equity and Inclusion) ஊக்குவிப்பதில் முன்னணி வகிப்பதை இலக்காகக் கொள்ள வேண்டும். தேசிய ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற்கும், அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும், நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் இந்த அணுகுமுறை மிக அவசியம். குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும், இலங்கையில் தற்போது நடந்து கொண்டிருக்கும் நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கும் இந்த உள்ளடக்கிய பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

சமூகப் பொருளாதார மட்டத்தில் ஒதுக்கப்பட்ட சமூகங்களின் பங்களிப்புகளை ஊக்குவிப்பதற்கு, கட்டமைக்கப்பட்ட சமூகத் தடைகளைக் குறைப்பதற்கு நிறுவனங்கள் தங்களை ஒப்புக்கொள்வது அவசியம். தனியார் துறையால் மேற்கொள்ளப்படும் மிகச்சிறிய முயற்சிகள் கூட இலங்கையில் மட்டுமல்லாமல், உலகளவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த முயற்சிகளில் கல்வி, வேலைவாய்ப்பு, போக்குவரத்து, பொதுச் சேவைகளுக்கான அணுகல் போன்றவற்றை மேம்படுத்துவதுடன், உள்ளடக்கிய நிர்வாக வழிமுறைகளையும் உருவாக்கும். மேலும், உள்ளூர் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை நம்பியிருக்கும் உள்ளூர்ப் பொருளாதாரத்தின் உயிர்ச்சக்தியை உறுதி செய்வதும் மிக முக்கியமானது. இவை உள்ளூர் வாழ்வாதாரங்கள் செழிக்கத் தேவையான நிபந்தனைகளாகும். அமைதி, உள்ளடக்கம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு ஆகியவை நிலையான சந்தைகளை உருவாக்க உதவும். மாறாக, இத்தகைய உள்ளடக்கம் இல்லையெனில் மோதல்கள் உருவாகி, பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கு வழிவகுக்கும்.

பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் (Diversity, Equity, and Inclusion - DEI) ஆகியவை வெறும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகைத் (ESG) தரநிலைகளுக்கான இணக்கத் தேவைகள் அல்ல. மாறாக, இவை தனியார் துறை, அதன் நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் நீண்டகால நலன்களுக்குச் சேவை செய்கின்றன. இலங்கையில்

தனியார் துறையின் பங்கு மிக முக்கியமானது; ஏனெனில் அரசாங்கங்களால் மட்டுமே 'DEI' இலக்குகளை அடைய முடியாது. தனியார் துறையின் முன்னெடுப்புகள் சமூக ஒற்றுமை மற்றும் பொருளாதார வலுவூட்டலை வளர்ப்பதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருப்பது அவசியம். ஓர் உண்மையான பொருளாதார மீட்சி என்பது நாட்டின் பல இன மற்றும் பன்முகத்தன்மை கொண்ட சமூக அமைப்பை உள்ளடக்கியதாகவும் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும். எனவே, சமூக ஒற்றுமை என்பது ஓர் இரண்டாம் நிலைப் பிரச்சினை அல்ல; அது மீள்தன்மை (Resilience), நெருக்கடியைத் தாங்கும் தேசிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய தூணாகும்.

மன்னார் தீவு மறுக்க முடியாத சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இது ராம்சர் மாநாடு போன்ற சர்வதேச மாநாடுகளால் பாதுகாக்கப்பட்ட ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் வழித்தடமான மத்திய ஆசிய பறக்கும் பாதையில் பயணிக்கும் மில்லியன் கணக்கான புலம்பெயர்ந்த பறவைகளின் தாயக, தரிப்பிடமாகும். கூடுதலாக மன்னார், நாட்டின் மூன்றாவது பெரிய பாதுகாக்கப்பட்ட பகுதியைக் கொண்டுள்ளது. இது 'ப்ளூ கார்பன்' என வகைப்படுத்தப்பட்ட பல்வேறு கடல் சுற்றுச்சூழல் தொகுதிகளைக் கொண்டிருக்கிறது. இருப்பினும், இந்தத் தனித்துவமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் தற்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. பல்வேறு சர்வதேச மாநாடுகளில் கையொப்பமிட்ட நாடாக, இந்தச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு இலங்கைக்கு உள்ளது.

மன்னாரின் எதிர்காலம் ஒரு முக்கிய மாற்றத்தைச் சார்ந்துள்ளது. நாம் பசுமைச் சலவைக்கு (Greenwashing) அப்பால் நகர்ந்து உண்மையான நிலைத்தன்மையைத் தழுவ வேண்டும். இந்த நிலைமை சுற்றுச்சூழல் ஒருமைப்பாட்டை மதித்து, தீவின் மக்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் மாற வேண்டும். கடந்தகால நடவடிக்கைகள் சிறந்த முடிவுகளைப் பிரதிபலிக்காமல் போனாலும், வளங்கள், தகவல் மற்றும் ஆதரவை அணுகுவதில் உள்ளூர் சமூகங்கள் எதிர்கொள்ளும் வரம்புகளை அங்கீகரித்து, மக்களின் பங்களிப்பை இணைக்கக்கூடிய சமமான வாய்ப்புகளை நாம் உருவாக்க வேண்டும். மன்னாரின் சவால்கள் குறித்த விவாதங்களில் நாம் ஈடுபடும்போது, இந்தப் பிரச்சினைகளின் சிக்கல்கள் வெளிப்படுகின்றன. இவை துயரகரமான, சர்ச்சைக்குரிய மற்றும் மாறுபட்ட கதைகளை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், இந்தப் பன்முகப் பிரச்சினைகளின் சிக்கலை நாம் ஒருபோதும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது என்பதை அங்கீகரிப்பது அவசியம். முடிவுகளை முன்மொழிவதை விட, நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் ஓரங்கட்டப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களை அணுகி ஆதரிப்பதும், அனைத்து உயிரினங்களின் உரிமைகளையும் நிலைநிறுத்துவதும் முதன்மையானது. இதுவே எதிர்காலச் சந்ததியினரின் உயிர்வாழ்வையும் சமநிலையையும் உறுதி செய்வதற்கான வழியாகும்.

## உசாத்துணை மூலங்கள்


1. *ABC News. (2020, December 23). Mannar Island is a bird paradise that survived Sri Lanka's civil war. Now an Australian mining company wants its sand. Retrieved from https://www.abc.net.au/news/science/20201223/miningmannarislandtitaniumsandsbirdsanctuary/12914650*

2. *Bisht, A., & MartinezAlier, J. (2023). Coastal sand mining of heavy mineral sands: Contestations, resistance, and ecological distribution conflicts at HMS extraction frontiers across the world. Journal of Industrial Ecology, 27(1), 238253. https://doi.org/10.1111/jiec.13358*

3. *Daily Mirror. (2019, March 23). Pulmoddai mineral sand deposits will not be transferred: Rishad. Retrieved from https://www.dailymirror.lk/print/businessnews/PulmoddaimineralsanddepositswillnotbetransferredRishad/273164361*

4. *Daily Mirror. (2025, October 13). FR petition filed against the heavy mineral sand mining project in Mannar. Retrieved from https://www.dailymirror.lk/breakingnews/FRpetitionfiledagainstheavymineralsandminingprojectinMannar/108322139*

5. *DeCarlo, K. F., & Moon, J. W. (2023). The Mineral Industry of Sri Lanka (2020-2021 Minerals Yearbook). U.S. Geological Survey (USGS). Retrieved from https://pubs.usgs.gov/myb/vol3/202021/myb3202021srilanka.pdf*

6. Groundviews. (2025, August 7). The Battle for Mannar's Ecological and Social Future. Retrieved from https://groundviews.org/2025/08/07/thebattleformannarsecologicalandsocialfuture/

7. Groundviews. (2025, August 19). The Sand Mining Crisis in Mannar: A Battle for Survival, Ecology and Justice. Retrieved from https://groundviews.org/2025/08/19/thesandminingcrisisinmannarabattleforsurvivalecologyandjustice/

8. ICSF. (n.d.). Sri Lanka: "Halt and suspend disastrous projects!": A plea from people of Mannar. Retrieved from https://icsf.net/newss/srilankahaltandsuspenddisastrousprojectsapleafrompeopleofmannar/

9. Investing News. (n.d.). Terms of Reference for Environmental Study Provided for Mannar Heavy Mineral Project. Retrieved from https://investingnews.com/termsofreferenceforenviromentalstudyprovidedformannarheavymineralproject/

10. Lanka Business Report. (2009, November 5). Sri Lanka Could Expand Mineral Sand Mining. Sangam.org. Retrieved from https://sangam.org/2009/11/Mineral_Sand_Mining.php?uid=3739

11. Lanka Mineral Sand Ltd. (2020). Annual Report. Parliament of Sri Lanka. Retrieved from https://www.parliament.lk/uploads/documents/paperspresented/1709727844029708.pdf

12. Lohathayalan, N. (n.d.). Ilmenite Mining in Sri Lanka - Destructive of the Environment? Lanka News Web. Retrieved from https://lankanewsweb.net/archives/2085/ilmeniteminginsrilankadestructiveoftheenvironment/

13. MiningTechnology. (n.d.). Moma Titanium Minerals Mine, Mozambique. Retrieved from https://www.miningtechnology.com/projects/momatitaniummineralsminemozambique/

14. MorinKa, S., GonzálezÁlvarez, I., Duuring, P., & Gonzalez, C. M. (2025). Understanding rare earth elements in heavy mineral sand systems. Journal of Geochemical Exploration, 274, 107705. https://doi.org/10.1016/j.gexplo.2025.107705

15. Subasinghe, S. H. C., Ratnayake, A. S., & Sameera, K. A. G. (2021). Stateoftheart and perspectives in the heavy mineral industry of Sri Lanka. Mineral Economics, 34(3), 427. https://doi.org/10.1007/s13563021002743

16. Tamil Guardian. (2025, February 12). Former Sri Lankan soldiers hired by international corporations for land grabs in the NorthEast. Retrieved from https://www.tamilguardian.com/content/formersrilankansoldiershiredinternationalcorporationslandgrabsnortheast

17. The Morning. (2025, October 1). Against windpower plant, mineral sand mining: Mannar denizens claim hartal a success. Retrieved from https://www.themorning.lk/articles/Q9BOux4JWPgrCL0eOJWa

18. Thuppahi's Blog. (2020, June 29). Danger for Mannar: Anxiety Aroused by Australian SandMining Project. Retrieved from https://thuppahis.com/2020/06/29/dangerformannaranxietyarousedbyaustraliansandminingproject/

19. Titanium Sands Ltd. (2023, May). Scoping Study Mannar Heavy Mineral Project. Retrieved from https://wcsecure.weblink.com.au/pdf/TSL/02665385.pdf

20. Titanium Sands Ltd. (2023, March 15). Updated Resource Estimate - Mannar Heavy Mineral Project. Retrieved from https://www.listcorp.com/asx/tsl/titaniumsandslimited/news/updatedresourceestimatemannarheavymineralproject2849314.html

21. Titanium Sands Ltd. (n.d.). Sri Lanka Project. Retrieved from https://www.titaniumsands.com.au/companyprojects/

22. Titanium Sands Ltd. (n.d.). Titanium Sands: Unlocking Sri Lanka's heavy mineral sands potential [Video]. YouTube. Retrieved from https://www.youtube.com/watch?v=mfcG1t4EbN8

23. Urban Development Authority (UDA). (2030). Mannar Development Plan, 2030 (Volumes I & II). Government of Sri Lanka. Retrieved from https://www.uda.gov.lk/attachments/devplan_detailed/for_public_comments/FINAL_MANNAR_%20Volume%20I%20&%20II.pdf

24. UNDP. (2023, May). Updated Landscape Strategy for Building Social, Economic, and Ecological Resilience in Mannar Coastal Landscape. Retrieved from https://www.undp.org/sites/g/files/zskgke326/files/202305/Mannar%20Landscape%20Strategy%2005052023.pdf

25. UNDP. (n.d.). Conservation and Sustainable Use of the Gulf of Mannar Biosphere Reserve's Coastal Biodiversity. Retrieved from https://erc.undp.org/evaluation/evaluations/detail/1954

26. UNESCO. (n.d.). The Gulf of Mannar Biosphere Reserve. Retrieved from https://en.unesco.org/silkroad/silkroadthemes/biosphereserve/gulfmannar

இலங்கையின் அரசியல் 1900 – 1981: பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

*ஆங்கில மூலம்: லக்ஸ்மன் மாறசிங்க*




**கந்தையா சண்முகலிங்கம்**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


# இலங்கையின் அரசியல் யாப்புகள்: ஒரு நூற்றாண்டு வளர்ச்சியும் வரலாறும் 1833 முதல் 1931 வரை

பகுதி 1

‘**T**he Evolution of Constitutional Government in Sri Lanka’ என்னும் நூல் இலங்கையில் அரசியல் யாப்பு ஆளுகையின் (Constitutional Governance) தோற்றமும் அதன் படிப்படியான வளர்ச்சியும் பற்றி வரலாற்று நோக்கில் ஆராயும் நூலாகும். இந்நூலை சட்ட அறிஞரும், பேராசிரியருமான காலம் சென்ற லக்ஸ்மன் மாறசிங்க அவர்கள் எழுதி வெளியிட்டார். இந்த நூலின் முதலாவது அத்தியாயமான முன்னுரையில் அவர் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் 1950களின் முற்பகுதியில் படித்த காலத்தில் தமக்கு ‘ஒப்பீட்டு அரசியல் சட்டமும் அரசியல் யாப்புச் சட்டவியலும் (Comparative Constitutional Law and Constitutional Jurisprudence) என்னும் விடயப் பொருளின் மீது ஆர்வம் எழுந்ததாகவும்’, அந்த ஆர்வம் தமக்கு உளத்தூண்டலை வழங்கியதன் பெறுபேறாக, இலங்கையின் எட்டு அரசியல் யாப்புகள் பற்றிய ஒப்பீட்டுச் சட்ட ஆய்வினைப் பற்றிய மேற்படி நூலை எழுதி 2007 ஆம் ஆண்டு வெளியிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இச்சட்டத்தை துறை அறிஞரின் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆராய்ச்சி, கற்பித்தல் அனுபவங்களையும், நுண்ணிய ஆய்வு நோக்கையும் வெளிப்படுத்துவதாக அமையும் இந்நூலின் இரண்டாவது அத்தியாயம், டொனமூர் அரசியல் யாப்புக்கு முற்பட்டவையான பின்வரும் நான்கு அரசியல் யாப்புகளைப் பற்றிய பகுப்பாய்வாக அமைந்துள்ளது.

1. கோல்புறுக் அரசியல் யாப்பு - 1833 - 1912
2. குறூ - மக்கலம் அரசியல் யாப்பு - 1912 - 1921
3. மனிங் அரசியல் யாப்பு - 1921 - 1924
4. மனிங் - டிவன்சயர் அரசியல் யாப்பு - 1924 - 1931

இந்த அத்தியாயத்திற்கு ‘Constitutionalism (2) The Period of Restrictive Franchise’ என லக்ஸ்மன் மாறசிங்க தலைப்பிட்டுள்ளார். நவீன லிபரல் ஜனநாயக அரசியல் யாப்புகளின் அடிப்படையாக அமைவது வயது வந்த ‘அனைவருக்குமான வாக்குரிமை’ (Universal Franchise) என்பதாகும். மேற்படி நான்கு அரசியல் யாப்புகளும், ஜனநாயக ஆளுகையின் (Democratic Governance) அடிப்படைக்கூறான சர்வசன வாக்குரிமை இல்லாத காலத்து அரசியல் யாப்புகள் என்பதை, அவ்வத்தியாயத் தலைப்பின் ‘மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமைக் காலம்’ (The Period of Restrictive Franchise) என்ற தொடர் உணர்த்தி நிற்கின்றது. 1833, 1912, 1921, 1924 ஆகிய ஆண்டுகளில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த நான்கு அரசியல் யாப்புகளின் வளர்ச்சியின் பின்னணியில் அமைந்த அரசியல் - சமூக மாற்றங்களை (Socio - Political Changes) லக்ஸ்மன் மாறசிங்க அவர்கள் பகுப்பாய்வு முறையில் விளக்கிக் கூறியுள்ளார். நூலாசிரியரின் கருத்துகளைச் சுருக்கியும் தொகுத்தும் கூறுவதாக இத்தமிழ்க் கட்டுரை அமைந்துள்ளது.

## பன்முக நோக்கு

இலங்கையின் அரசியல் யாப்புச் சட்ட வரலாறு பற்றிய கற்கை அரசியல் விஞ்ஞானம் என்னும் கல்வித்துறை சார்ந்த விடயமாகும். அரசியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானங்கள் (Social Sciences) என்னும் விரிந்த கல்வித்துறையின் ஒரு கிளைப் பிரிவாகும். ஆகையால் இலங்கையின் அரசியல் யாப்புச் சட்ட வரலாற்றைப் பற்றிய கல்வி சமூக விஞ்ஞானங்கள் என்னும் விரிந்த நோக்கில் பார்க்கப்பட வேண்டிய விடயமாக அமைகிறது. ‘இலங்கையின் அரசியல் யாப்புகள்’ என்னும் நூலின் ஆசிரியர் சி.அ. யோதிலிங்கம், அந்நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

“சமூக விஞ்ஞானத் துறைகள் எவையும் தனித்துச் செயற்படக் கூடியவை அல்ல. அவை ஒன்றோடொன்று ஊடாட்டம் கொண்டு, ஒன்றன் மீது ஒன்று தாக்கம் புரிந்து செயற்படுபவை. அரசறிவியலும் இதற்கு விதிவிலக்கல்ல. அதுவும் வரலாறு, பொருளியல், சமூகவியல், சட்டம் போன்றவற்றுடன் ஊடாட்டம் கொண்டே செயற்படுகிறது.” (நூலின் திருத்திய நான்காம் பதிப்பின் முன்னுரை - 2025).

லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் நூல் மேற்குறித்தவாறான பன்முக நோக்கிலான ஆய்வாகும். குறிப்பாக சட்டம், இலங்கையின் அரசியல் - சமூக வரலாறு என்னும் இரு விடயங்களிற்கு அழுத்தம் கொடுக்கும் முறையில் மாறசிங்க அவர்கள் மேற்குறித்த நான்கு அரசியல் யாப்புகளையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறார். மேற்குறித்த நான்கு அரசியல் யாப்புகள் பற்றியும் மாறசிங்க அவர்கள் கூறியிருக்கும் கருத்துகளை இலகுபடுத்திய தமிழில் அடுத்துக் கூறுவோம்.

## கோல்புறுக் அரசியல் யாப்பு

கோல்புறுக் அரசியல் யாப்பினைப் பற்றிய இந்த ஆய்வில் இரண்டு விடயங்கள் விளக்கிக் கூறப்படும்.

1. கோல்புறுக் அரசியல் யாப்பு மாதிரியின் அடிப்படைக் கூறுகள். நூலின் 6 பக்கங்களில் (பக். 21 - 27) கூறப்பட்டுள்ள கருத்துகள் மிகச் சுருக்கமாக எடுத்துரைக்கப்படும்.
2. கோல்புறுக் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் சமூக - அரசியல் தாக்கங்கள் (The Socio - Political Implications of the Colebrooke Reforms). நூலின் 9

பக்கங்களில் (பக். 28 - 37) கூறப்பட்டுள்ள இந்த விடயம் விளக்கிக் கூறப்படும்.

### கோல்புறூக் அரசியல் யாப்பு மாதிரி

1833 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறூக் அரசியல் யாப்பு மாதிரியின் (Constitutional Model) நான்கு தூண்களாகப் பின்வரும் நிறுவனங்கள் அமைந்தன.

1. நிர்வாக சபை (Executive Council)
2. சட்டசபை (The Legislative Council)
3. காலனிய இலங்கையின் ஆளுநர் (The Colonial Governor)
4. காலனிகளுக்குப் பொறுப்பான பிரித்தானியாவின் அமைச்சர் (The Secretary of State for Colonies)

மேற்குறித்த நான்கு தூண்களின் மீது அமைந்த கோல்புறூக் அரசுக் கட்டமைப்பின் பிரதான கூறுகளை லக்ஸ்மன் மாறசிங்க அவர்கள் விவரித்துக் கூறியுள்ளார்.

1796 முதல் 1833 வரை ஆளுநர் சட்ட ஆக்கம், நிர்வாகம் என்னும் இரண்டு விடயங்களிலும் முழுமையான அதிகாரம் உடையவராக இருந்த நிலை, 1833 கோல்புறூக் அரசியல் யாப்பினால் மாற்றப்பட்டது. 1833 இன் பின்னர் ஆளுநர் நிர்வாகசபை (Executive Council), சட்டசபை (The Legislative Council) என்னும் இரு சபைகளின் அனுசரணையுடன் ஆட்சி செய்யும் ஒருவராக மாற்றப்பட்டார். நிர்வாக விடயங்களில் நிர்வாக சபையும், சட்டங்களை ஆக்கும் விடயங்களில் சட்டசபையும் அவருக்கு ஆலோசனை வழங்கும் சபைகளாக விளங்கின.

### நிர்வாக சபை

நிர்வாக சபை 6 உறுப்பினர்களைக் கொண்ட சபையாக விளங்கியது. இவ்வுறுப்பினர்கள் அனைவரும் உயர்மட்ட அதிகாரிகளாவர் (ஆளுநர், வேறு ஐவர்). இச்சபையில் ஆளுநருக்கு அனுசரணையாகப் பணியாற்றியவர்கள் பின்வருவோராவர்.

1. ஆயுதப்படைகளின் கொமாண்டர்
2. காலனிய செயலாளர் (Colonial Secretary)
3. பிரதம நீதியரசர் (Chief Justice)

1840 இன் பின்னர் பிரதம நீதியரசருக்குப் பதில் 'இராணியின் சட்டவாளர்' (Queen's Advocate) நிர்வாகச் சபையின் உறுப்பினராகப் பணியாற்றினார். இன்று சட்ட அதிபதி நாயகம் (Attorney General) எனக் குறிப்பிடப்படும் பதவி நிலையினரே 'இராணியின் சட்டவாளர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

4. காலனிய நிதிப் பொறுப்பாளர் (Colonial Treasurer)
5. மத்திய மாகாணத்தின் அரசாங்க அதிபர்

1840 இன் பின்னர் மத்திய மாகாணத்தின் அரசாங்க அதிபருக்குப் பதிலாக, மேற்கு மாகாணத்தின் அரசாங்க அதிபர் நிருவாகச் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

மேற்குறித்த ஐவரும் ஆளுநரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாக விளங்கினர். அவர்கள் உயர் அதிகாரிகளாக இருந்த போதும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆளுநரை மீறித் தம் அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவர்களாக இருக்கவில்லை. ஆளுநரின் அதிகாரத்திற்குச் சவாலாக அமையக்கூடியதாக கோல்புறூக் நிர்வாகச் சபை செயற்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

### சட்டசபை

சட்டசபை 15 உறுப்பினர்களைக் கொண்ட சபையாக இருந்தது. ஆளுநரும், மேலே குறிப்பிடப்பட்ட 5 உயர் அதிகாரிகளும், சட்ட சபையிலும் உறுப்பினர்களாயினர். இந்த 6 பேரை விட ஆளுநர் 4 உத்தியோகத்தர்களை சட்டசபையின் உறுப்பினர்களாக நியமனம் செய்தார். அவ்வுத்தியோகத்தர்கள் தமது பதவிநிலை காரணமாக சட்டசபையின் உறுப்பினர்களாக (Exofficio) நியமனம் பெற்றோர் ஆவர். அவர்களின் பதவிப்பெயர்கள் வருமாறு.

1. மேற்கு மாகாணத்தின் அரசாங்க அதிபர்
2. நில அளவையாளர் நாயகம்
3. சுங்கத் திணைக்களத்தின் பிரதம அதிகாரி (Principal Collector of Customs)
4. கணக்காளர் அதிபதி நாயகம் (Auditor General)

1890 ஆம் ஆண்டில் கணக்காளர் அதிபதி நாயகம் நிர்வாக சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இக்காரணத்தால் அவ்வாண்டு முதல் மத்திய மாகாணத்தின் அரசாங்க அதிபர் சட்டசபையின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

ஆளுநர் உட்பட 6 நிருவாக சபை உறுப்பினர்கள் + பிற உத்தியோகத்தர்கள் 4 பேர் எனப் 10 பேர் சட்டசபையில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இவர்கள்

உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்கள் (Official Members) எனக் குறிப்பிடப்பட்டனர். இவர்களோடு சேர்த்து 5 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் (Unofficial Members) சட்டசபைக்கு நியமனம் பெற்றனர்.

- சிங்களவர் - 01
- தமிழர் - 01
- பறங்கியர் - 01
- ஐரோப்பியர் - 01
- வர்த்தகர்கள், தோட்ட முதலாளிகள் சமூகத்தின் பிரதிநிதி - 01

மேற்குறித்த 5 உறுப்பினர்களில் சிங்களவர், தமிழர், பறங்கியர் ஆகியோர் 'சுதேசிகளை' (Natives) பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவும், மற்ற இருவரும் ஐரோப்பியர் சமூகத்தினைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவும் இருந்தனர். 1889 இல் சட்டசபையின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர் எண்ணிக்கை 8 ஆக உயர்த்தப்பட்டது. விவரம் வருமாறு:

- கரைநாட்டுச் சிங்களவர் - 01
- கண்டிச் சிங்களவர் - 01
- தமிழர் - 01
- பறங்கியர் - 01
- முஸ்லிம் - 01
- ஐரோப்பியர் - 03

சட்டசபையின் உறுப்பினர் எண்ணிக்கையில் 1889 இல் ஏற்பட்ட மாற்றத்தைத் தவிர்த்து 1910 வரை சட்டசபையின் அமைப்பு எவ்வித மாற்றமும் இல்லாமல் எட்டுத் தசாப்த காலம் தொடர்ந்தது.

## ஆளுநர்

சட்டங்களை வரைதல், அவற்றைச் சட்டமாக இயற்றுதல், இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகிய சட்டவாக்கச் செயல்முறைகளின் அனைத்து விடயங்களிலும் ஆளுநருக்கு முழுமையான அதிகாரங்கள் இருந்தன. சட்டசபையின் ஆலோசனையையும் சம்மதத்தையும் ஆளுநர் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. சட்டசபைக்கு ஆளுநரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருக்கவில்லை. (The governor was authorised 'to make, enact ordain and establish laws' with the 'advice and consent of the legislative council').

ஆளுநர் ஒரு சர்வாதிகாரி போன்றே செயற்பட்டார்.

## காலனிகளுக்குப் பொறுப்பான அமைச்சர்

பிரித்தானியாவின் அமைச்சரவையில் காலனிகளுக்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சர் (The Secretary of State for Colonies) பிரித்தானிய மகாராணியின் சார்பில் உயர் அதிகாரமிக்கவராகச் செயற்பட்டார். இலங்கையின் ஆளுநர் இந்த அமைச்சருக்குப் பொறுப்புக்கூற வேண்டியவராக இருந்தார்.

## கோல்புறூக் சீர்திருத்தங்களின் சமூக - அரசியல் தாக்கங்கள்

கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் பயனாக சட்டசபை (Legislative Council) என்ற அமைப்பு அறிமுகமானது. இவ்வாறு அறிமுகமான சட்டசபை என்ற நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியுற்று, சனப்பிரதிநிதிகள் சபை, செனற் என்ற இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றமாக உருவாகியது. இலங்கை, பாராளுமன்ற முறை ஜனநாயக நாடாக வளர்ச்சி பெறுவதற்கான மூலவித்து 1833 இல் இடப்பட்டது. ஆயினும் இந்த வளர்ச்சி ஏற்பட ஏறக்குறைய 120 ஆண்டுகள் கடந்து போயின. 1833 இன் கோல்புறூக் சீர்திருத்தங்கள் பல குறைபாடுகளைக் கொண்டிருந்தன.

முதலாவது குறைபாடு இலங்கையின் மக்கள் சமூகங்களின் பங்கேற்புக்கான (Popular Participation) ஒரு நிறுவனமாக சட்டசபை வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை.

அச்சபை ஆளுநரின் முழுமையான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக இருந்தது. அது காலனி நாடான இலங்கையின் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களைக் கொண்ட சபையாக இருக்கவில்லை. அச்சபையில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்களை முன்மொழியும் அல்லது தெரிவு செய்யும் அதிகாரம் அதன் உறுப்பினர்களுக்கு இருக்கவில்லை. இவ்வாறு செயல்வலு அற்ற ஒரு சபையை கோல்புறூக் அரசியல் யாப்பு உருவாக்கியதற்குப் பின்னால் இருந்த காலனிய கொள்கைத் திட்டத்தின் அனுமானங்கள் பின்வருவன.

1. இலங்கையின் சுதேசிகள் படிப்பறிவற்றவர்கள், பிற்போக்கானவர்கள். அவர்களிடையே சிந்தனை ஆற்றல் உள்ளவர்கள் என எவரும் இப்போது இல்லை.
2. இக்காரணத்தால் சட்டசபைக்கு நேரடிப் பிரதிநிதித்துவ முறையில் (Direct Representation) ஆட்களைத் தெரிவு செய்தல் பொருத்தமுடையதன்று. தெரிவு செய்யப்படுதலுக்கு மாற்றாக 'நியமித்தல்' (Appointment) முறையே ஏற்றது. அதாவது

தெரிவுமுறை அல்லாத பிரதிநிதித்துவமே (Non - elected Representation) ஏற்றது.

மேற்படி அனுமானங்களின் அடிப்படையில் அமைந்த பிரித்தானியாவின் கொள்கை தெட்டத் தெளிவானது. லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் கூற்றொன்று வருமாறு.

*“The British government planned to create a small English-speak ing elite emulating the ideals, manners, and ways of life of the European community who may at some distant point in time be elected to represent the masses in the legislative council until that stage of Ceylonese social development is reached, the principle of ‘Appointment’ or ‘Non-elected representation’ appears have been the chosen method for membership in the legislative council* (பக். 2829)”

“ஐரோப்பியர் சமூகத்தின் இலட்சியங்கள், பழக்கங்கள், வாழ்க்கைமுறை என்பவற்றை உள்ளீர்த்துக் கொண்டவர்களான ‘சிறிய ஆங்கிலம் பேசும் உயர்குழு’ (A Small Englishspeaking Elite), மிகத் தொலைவில் உள்ள எதிர்காலத்தில் உருவாகும் இலங்கை என்ற காலனியை அது முன்னோக்கி எடுத்துச் செல்லும் என்பதே பிரித்தானியாவின் கொள்கையாகும்.”

பிரித்தானியாவின் கொள்கையின் இரண்டாவது குறைபாடு முற்கூறிய முதலாவது குறைபாடுடன் நேரடித் தொடர்புடையது. சட்டசபைக்கு சிங்களவர், தமிழர் ஆகிய சமூகத்தவர்களையும் பிற சமூகத்தவர்களையும் ‘நியமித்தல்’ (Appointment) முறையை தேர்வு செய்த காலனிய ஆட்சியாளர்கள், இலங்கையில் சில குடும்பங்களையும் (Families), குடும்பக் குழுமங்களையும் (Clans) ஆளும் உயர்குழுக்கள் (Ruling Oligarchy) என்ற நிலைக்கு உயர்த்தும் செயல் முறையைத் தொடக்கி வைத்தனர். ‘கோல்புறுக் காலம்’ (Colebrooke Period) என்பதன் தனித்துவமான அடையாளம் என ஒன்றைக் குறிப்பிட முடியுமென்றால் அது ‘பண்டாரநாயக்க - ஒபயசேகர குடும்பம்’ என்ற ஒரு குடும்பத்தை ஆளும் உயர்குழு என்ற நிலைக்கு உயர்த்தியது தான் என்று கூறலாம். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 1835 இல் தொடங்கி 60 ஆண்டு காலத்திற்குள் சட்டசபையின் ஏகப்பிரதிநிதித்துவம் தமக்கே உரியதென்பதை நிலை நாட்டினர்.

கீழே தரப்பட்டுள்ள ‘சட்டசபையில் சிங்களவர் பிரதிநிதித்துவம்’ என்னும் அட்டவணையில் உள்ள விவரங்கள் ஒரு குடும்பக் குழுமம் ஆளும் உயர்குழுவாக உருவாக்கம் பெற்றதை எடுத்துக்காட்டுகிறது.

**அட்டவணை 1** **சட்டசபையில் சிங்களவர் பிரதிநிதித்துவம் - கோல்புறாக் அரசியல் யாப்புக் காலம்: 1833 - 1911**

| நியமன உறுப்பினர் பெயர் | முந்திய நியமன உறுப்பினரோடு உள்ள உறவு | குடும்பத்தின்/ குழுமத்தின் பெயர் | சாதி | பதவிக் காலம் |
|---|---|---|---|---|
| கௌரவ.J.G. பிலிப்பஸ் பண்டிதரத்தின | முதலாவது நியமன உறுப்பினர் | பண்டாரநாயக்க – ஒபயசேகர | கொவிகம | 15.12.1835 – 16.10.1841 |
| கௌரவ.J.G. டயஸ் | முந்திய உறுப்பினரின் (பிலிப்பஸ் பண்டிதரத்தினவின்) மருமகன் | பண்டாரநாயக்க – ஒபயசேகர | கொவிகம | 10.08.1843 – 19.12.1859 |
| கௌரவ.E.J. தெகிகம | பண்டாரநாயக்க ஒபயசேகர குடும்பத்தை சாராத அந்நியர் | அந்நியர் | கொவிகம | 27.09.1865 – 01.07.1875 |
| கௌரவ. ஜேம்ஸ் டி அல்விஸ் | சேர். ஹரி டயஸ் அவர்களின் இரத்த உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 17.08.1864– 21.10.1877 |
| கௌரவ.சேர்.J.P. ஒபயசேகர | சேர். ஜேம்ஸ் டி அல்விஸ் அவர்களின் இரத்த உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 11.09.1878– 15.12.1880 |
| கௌரவ. அல்பெர்ட் லூயிஸ் டி அல்விஸ் | சேர். ஜேம்ஸ் டி அல்விஸ் அவர்களின் இரத்த உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 20.09.1882– 18.01.1888 |
| கௌரவ.A.de.A. செனவிரத்தின | அந்நியர் | அந்நியர் | கொவிகம | 31.10.1888– 10.01.1900 |

| | | | | |
|---|---|---|---|---|
| கௌரவ. பானபொக்கே டிக்கிரி பண்டா | சேர்.J.P. ஒபயசேகரவின் இரத்த உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 29.10.1889 – 07.11.1894 |
| கௌரவ.S.C. ஒபயசேகர | அல்பேர்ட் டி அல்விஸ் அவர்களின் உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 11.06.1897 – 15.11.1911 |
| கௌரவ. வில்லியம் எல்லாவல எக்கநாயக்க ராஜபக்ச பசநாயக்க முதியான்சே | சேர்.J.P. ஒபயசேகரவின் இரத்த உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 09.04.1895 – 21.02.1900 |
| கௌரவ.S.N. வன்னி நாயக்க | ஒபயசேகர குடும்பத்து உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 21.03.1900 – 25.07.1905 |
| கௌரவ.J.B.L. மூனமலே | சேர்.J.P. ஒபயசேகரவின் இரத்த உறவினர் | பண்டாரநாயக்க ஒபயசேகர | கொவிகம | 18.07.1906 – 15.11.1911 |

- *இந்த அட்டவணை லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் நூலின் 9 பக்க (29-30) அட்டவணையைத் தழுவியது.*
- *இந்த அட்டவணை பல ஆவணங்கள், நூல்களில் உள்ள தகவல்களைத் திரட்டித் தொகுத்து எழுதியது என நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.*

மேற்தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்படும் கௌரவ. ஜேம்ஸ் தெகிகம (Hon. James Dehigama) 1865 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சட்டசபைக்கு நியமிக்கப்பட்டார். கண்டியைச் சேர்ந்த சிங்களவரான தெதிகம பண்டாரநாயக்க - ஒபயசேகர குடும்பத்தைச் சேராத அந்நியராவர். இவரது நியமனம் ஆச்சரியத்தைத் தருவது. இதற்கான காரணத்தை லக்ஸ்மன் மாறசிங்க அவர்கள் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறார்.

1864 ஆம் ஆண்டு அரசாங்கம் இராணுவச் செலவை 100,000 பவுன்ஸ்சில் இருந்து 135,000 பவுன்சாக உயர்த்தும் வரவு செலவுத் திட்டத்தை சட்டசபையில் முன்வைத்தது. சட்டசபையின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களான (Unofficial Members) 6 பேரும் கூட்டாகச் சேர்ந்து இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். அப்போது சபையின் உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்கள் (Official Members) 10 பேரும் ஒன்றாக இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றினர். இதனால், சிங்கள சமூகத்தின் பிரதிநிதியான சேர். ஹரி டயஸ் (Sir. Harry Dias) உட்பட நியமன உறுப்பினர் அனைவரும் பதவி விலகினர். சேர். ஹரி டயஸ் பதவி விலகிய போது ஏற்பட்ட வெற்றிடத்திற்கு தெகிகம நியமிக்கப்பட்டார். அதாவது ஆளுநருக்குப் பணிந்து போவதையே தம் மரபாகக் கொண்டிருந்த பண்டாரநாயக்க - ஒபயசேகர குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், திடீரென ஆளுநருக்கு எதிர்ப்பான முறையில் நடந்து கொண்டதை ஆளுநரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சேர். ஹரி டயஸ் செயலுக்குப் பதிலடியாகவே கௌரவ தெகிகம அவர்களின் நியமனம் இடம்பெற்றது. இதன் பின்னர் 1888 இலும் பண்டாரநாயக்க - ஒபயசேகர குடும்பத்தைச் சேராத ஒருவரான கௌரவ. A.de.A. செனவிரத்தின என்பவர் நியமனம் செய்யப்பட்டார். சேர். ஆர்தர் கோர்டன் (Sir. Arthur Gordon) என்ற ஆளுநர் காலத்தில் இந்நியமனம் இடம்பெற்றது.



Image Source - www.abebooks.com

சிங்களவர்களின் பிரதிநிதிகளாக ஒரு குடும்பக் குழுமம் தனியுரிமை கொண்டாடியது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் இதனை ஒத்த தமிழ்க் குடும்பம் ஒன்றையும் உருவாக்கினர். கீழே தரப்பட்டுள்ள அட்டவணை தமிழர் பிரதிநிதிகளின் நியமனங்கள் பற்றிய விவரத்தைத் தருவதாக உள்ளது.

அட்டவணை 2

**சட்டசபையில் தமிழர் பிரதிநிதித்துவம்: 1833 - 1911**

| நியமன உறுப்பினர் பெயர் | முன்னைய உறுப்பினருக்கு எவ்வழி உறவினர் | குடும்பப் பெயர் | சாதி | பதவிக்காலம் |
|---|---|---|---|---|
| கௌரவ.அ. குமாரசுவாமிப் பிள்ளை | முதலாவது நியமனம் | குமாரசுவாமி குடும்பம் | வேளாளர் குடும்பம் | 14.12.1835– 21.12.1835 |
| கௌரவ. சைமன் காசிச் செட்டி | குமாரசுவாமி குடும்பத்தைச் சேராத அந்நியர் | அந்நியர் | வேளாளர் அல்லாதவர் | 14.08.1843– 18.12.1844 |
| கௌரவ.எஸ். எதிர்மனசிங்கம் | அ. குமாரசுவாமிப் பிள்ளையின் மருமகன், மகளின் கணவர். | குமாரசுவாமி குடும்பம் | வேளாளர் | 07.08.1845–19.06.1860 |
| சேர். முத்துக்குமார சுவாமி | அ. குமாரசுவாமிப் பிள்ளையின் மருமகன் (சகோதரியின் மகன்) | குமாரசுவாமி குடும்பம் | வேளாளர் | 17.07.1861– 19.12.1878 |
| கௌரவ. பிலிப் டி மெலோ ஓந்தாச்சி | குமாரசுவாமி குடும்பத்தைச் சேராத அந்நியர் | அந்நியர் | வேளாளர் | 02.06.1873– 09.04.1875 |
| சேர். பொன்னம்பலம் இராமநாதன் | அ. குமாரசுவாமிப் பிள்ளையின் பேரன் | குமாரசுவாமி குடும்பம் | வேளாளர் | 27.08.18790– 9.04.1895 |
| சேர். பொன்னம்பலம் குமாரசுவாமி | அ. குமாரசுவாமிப் பிள்ளையின் பேரன் | குமாரசுவாமி குடும்பம் | வேளாளர் | 13.09.1893– 22.12.1897 |
| வைத்திய கலாநிதி W.G. றொக்வூட் | குமாரசுவாமி குடும்பத்தைச் சாராதவர் | அந்நியர் | வேளாளர் | 16.03.1989– 25.07.1905 |
| சேர். கனகசபை | குமாரசுவாமி குடும்பத்தைச் சாராதவர் | அந்நியர் | வேளாளர் | 01.02.1906– 15.11.1911 |

மேற்படி அட்டவணை லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் நூலின் பக்கம் 31 இல் தரப்பட்ட அட்டவணையின் தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டது.

- சைமன் காசிச்செட்டி கொழும்பு செட்டி சமூகத்தைச் சேர்ந்தவர். நியாயதுரந்தரர், கல்வியாளர், கொழும்புச் செட்டிகள் உயர் சமூக மதிப்பை உடையவர்கள்.
- வைத்தியக் கலாநிதி W.G. றொக்வூட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேளாளர் குடும்பத்தவர். உயர்பதவி வகித்தவர். அவர் 1989 இல் நியமிக்கப்பட்ட போது அவருக்கும் குமாரசுவாமி குடும்பத்திற்கும் உறவுத் தொடர்பு இருக்கவில்லை. பிற்காலத்தில் இவரது குடும்பம் திருமண உறவால் குமாரசுவாமி குடும்பத்தோடு உறவு கொண்டது எனக் கூறப்படுகின்றது.
- சேர். அ. கனகசபை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேளாளர் குடும்பத்தவர். நியாயதுரந்தரராகவும். வர்த்தகராகவும் உயர்நிலையில் இருந்தவர். சேர் பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார்.
- ‘அந்நியர்’ என்ற சொல் ‘Stranger’ என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பு.

சிங்களவர், தமிழர் இனங்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு ‘ஆங்கிலம் கற்ற உயர்குழுக்களை’ நியமன முறை மூலம் உருவாக்கும் செயல்முறைக்குப் பயன்பட்டது என்பதை மேலே தரப்பட்ட அட்டவணைகள் வெளிப்படுத்துவனவாய் உள்ளன. சிங்கள இனத்தின் பிரதிநிதியாக முதலில் நியமிக்கப்பட்டவர் பிலிப்பஸ் பண்டிதரத்தின ஆவார். திருமண உறவுகளால் பிணைப்புற்ற இரு

குடும்பங்களின் குழுமமாக வளர்ச்சியுற்ற இக்குடும்பம் ‘பண்டாரநாயக்க - ஒபயசேகர குடும்பம்’ எனப் பெயர் பெற்றது. தமிழர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அ. குமாரசுவாமிப் பிள்ளையின் குடும்பம் பொன்னம்பலம் என்னும் பெயருடைய இன்னொரு குடும்பத்துடன் திருமண உறவுகளால் பிணைப்புற்றது. இதனால் இக்குடும்பம் ‘பொன்னம்பலம் - குமாரசுவாமி குடும்பம்’ எனப் பெயர் பெற்றது.

லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் மேற்படி அட்டவணைகள் பற்றித் தமிழ் வாசகர்கள் மனதில் எழக்கூடிய ஐயங்களை நீக்குவதற்காக மேலே சில குறிப்புகளைத் தந்தோம். அடுத்து லக்ஸ்மன் மாறசிங்க அவர்கள் குமாரசுவாமி குடும்பத்தைச் சேராதவர்களின் நியமனம் குறித்துத் தரும் தகவல்களைக் கூறுவோம்.

“கௌரவ அ. குமாரசுவாமி சட்டசபை உறுப்பினராக நியமனம் பெற்று மூன்று மாத காலம் கழிவதற்குள் காலமானார். அவரின் இடத்திற்கு சேர். முத்துக்குமாரசுவாமியை நியமித்திருக்க வேண்டும். ஆனால், சேர். முத்துக்குமாரசுவாமி அப்போது சிறுவனாக இருந்தார். இதனால் குமாரசுவாமியின் மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சைமன் காசிச் செட்டி தெரிவு செய்யப்பட்டார். அவர் கொழும்பு நகரில் ஒரு பத்திரிகையாசிரியராக அப்போது செயற்பட்டார். காசிச் செட்டியின் நியமனத்தை அடுத்து தொடர்ச்சியாக நான்கு பேரின் நியமனங்கள் குமாரசுவாமிப் பிள்ளையின் வம்சாவழியினருக்கு வழங்கப்பட்டன. கோல்புறூக் அரசியல் யாப்புக் காலத்தின் தமிழர் பிரதிநிதிகள் நியமனத்தில் குமாரசுவாமி குடும்பத்தின் ஆதிக்கம் இருந்து வந்தது. கௌரவ சைமன் காசிச்செட்டி தவிர்ந்த பிற நியமன உறுப்பினர்கள் வேளாளர் சாதியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்” (பக். 32).

டாக்டர். றொக்வூட் அவர்களின் நியமனம் குறித்து லக்ஸ்மன் மாறசிங்க அடிக்குறிப்பாகச் சில தகவல்களைத் தந்துள்ளார். அவரது நூலின் 31 ஆம் பக்கத்தில் காணப்படும் அடிக்குறிப்பு வருமாறு.

“பொன்னம்பலம் குமாரசுவாமியை சட்டசபை உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்பதை ஆதரித்து அக்கருத்தை முன்மொழிந்தவர் டாக்டர். றொக்வூட் அவர்களேயாவார். அவர் நியமிக்கப்படுவதை ஆதரித்துப் பல பொதுக் கூட்டங்களில் றொக்வூட் உரையாற்றினார். அக்காலத்தின் காலனிகளுக்குப் பொறுப்பான அமைச்சராகிய (Secretary of State for Colonies) சேர். வெஸ்ட் றிட்ஜ்வே அவர்கள் அதிரடியான ஆச்சரியம் தரும் முடிவை எடுத்தார். அவர் சட்டசபை நியமனத்தில் குமாரசுவாமி குடும்பத்தின் தொடர்ச்சியை அறுப்பது போல் அமைந்த நியமனம் ஒன்றைச் செய்வதற்கு முடிவு செய்தார். டாக்டர். றொக்வூட் அவர்களுக்கே அந்நியமனத்தை வழங்கினார். இது றொக்வூட் அவர்களுக்குத் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியது. மிகுந்த மனச்சங்கடத்துடன் டாக்டர். றொக்வூட் அந்த நியமனத்தை ஏற்றுக்கொண்டார். அரசாங்கம் அடுத்தடுத்து இருதடவைகள் குமாரசுவாமிப் பிள்ளை குடும்பத்தைச் சாராத நபர்களை நியமனம் செய்தது. இந்த நிகழ்வுகள் பற்றிய ஆதாரம் Weiman (JIR) என்பவரின் நூலில் உள்ளது. 1918 டிசம்பர் ‘ஹன்சார்ட்’ அறிக்கையிலும் குறிப்புகள் உள்ளன.”

## பறங்கியர் சமூகப் பிரதிநிதிகளின் சட்டசபை நியமனங்கள்

பறங்கியர் சமூகத்தின் சட்டசபைப் பிரதிநிதித்துவம் சிங்களவர், தமிழர் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தில் இருந்து வேறுபட்ட சமூகப்பின்னணியை உடையதாக இருந்தது. பறங்கியர் சமூகத்தில் சட்டவாளர்களாக (Lawyers) விளங்கிய சமூகப் பிரிவினரில் இருந்து சட்டசபைக்குப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். 19 ஆம் நூற்றாண்டிலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ‘Hulftsdorp’ (புதுக்கடை) நீதிமன்றத்தில் பறங்கியர் சட்டவாளர்களின் ஆதிக்கம் நிலவியது. பறங்கிய இனத்துச் சட்டவாளர்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். அவர்கள் சுதந்திர மனப்பான்மையுடையவர்களாயும், அரசியலில் முற்போக்கான கருத்துகளை உடையவர்களாகவும் விளங்கினர். அரசாங்கத்தின் சட்டவாக்க நடவடிக்கைகளைப் பறங்கியச் சட்டவாளர்கள் விமர்சனம் செய்து வந்தனர். இதனால், பறங்கிய இனத்துச் சட்டசபைப் பிரதிநிதிகள் மீது அரசாங்கம் வெறுப்பைக் கொண்டிருந்தது. ஜேம்ஸ் வான் லங்கன்பேர்க் (James Van Langenberg) என்ற பிரபலமான பறங்கியர் இனத்துச் சட்டவாளரின் பதவிக்காலம் முடிவுற்றபோது, ஆளுநர் அவ்வெற்றிடத்திற்கு வைத்தியக் கலாநிதி அந்தோனிஸ் (Dr. Anthonisz) அவர்களை நியமித்தார். சட்டவாளர்களை அப்பதவிக்கு நியமிக்காது அவர்கள் மீது பழிதீர்த்துக் கொண்டதாக இச்செய்கை அமைந்தது. அந்தோனிஸ் அவர்களின் பதவிக்காலம் முடிவுற்றபின் மீண்டும் சட்டவாளர் ஒருவருக்கே நியமனம் வழங்கப்பட்டது. H.L. வென்ட் (H.L. Wendt) என்பவர் அந்தோனியஸ் அவர்களுக்கு அடுத்து நியமனம் செய்யப்பட்டார். வென்ட் பின்னர் நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்ற போது அவரின் சட்டசபைப் பிரதிநிதித்துவம் முடிவுற்றது. இதனால், அவரின் இடத்திற்கு F.C. லூஸ் (F.C. Loos) என்ற புறொக்டர் (Proctor) நியமிக்கப்பட்டார். ஆர்தர் கோர்டன (Arthur Gordon) என்ற ஆளுநரே இவ்வாறு பறங்கியச் சட்டவாளர்களின் மீது பழிதீர்த்துக் கொண்டவர். அவருக்கு அடுத்து பதவிக்கு வந்த ஆளுநர் மீண்டும் பறங்கியச் சட்டவாளர்களை நியமித்தார்.

**அட்டவணை 3**

**சட்டசபையில் பறங்கியர் பிரதிநிதித்துவம்: 1833 - 1911**

| சட்டசபை உறுப்பினரின் பெயர் | தொழில் | பதவிக்காலம் |
|---|---|---|
| கௌரவ.R.F. மோர்கன் | சட்டவாளர் | 02.10.1851 – 24.09.1856 |
| கௌரவ.C.A. லோறன்ஸ் | சட்டவாளர் | 16.10.1856 – 30.12.1863 |
| கௌரவ.J.A. மார்ட்டினஸ் | சட்டவாளர் | 27.09.1865 – 16.10.1872 |
| கௌரவ.C.A. பேர்டினாண்ட்ஸ் (Hon.C.A. Ferdinands) | சட்டவாளர் | 02.06.1873– 29.11.1875 |
| கௌரவ.J. வான் லங்கன் பேர்க் | சட்டவாளர் | 13.09.1876 – 13.01.1886 |
| கௌரவ.P.D. அந்தோனிஸ் | வைத்தியர் | 05.10.1886 – 12.12.1894 |
| கௌரவ.H.L. வென்ட் | சட்டவாளர் | 09.04.1895 – 31.10.1900 |
| கௌரவ.F.C. லூஸ் | சட்டவாளர் | 13.06.1900 – 07.06.1911 |
| கௌரவ.J. வான் லங்கன் பேர்க் | சட்டவாளர் | 30.08.1911– 15.11.1911 |

## கோல்புறூக் அரசியல் யாப்பின் குறைகளும் நன்மைகளும்

*லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் நூலில் இருந்து பெறப்பட்ட தகவல்களை அட்டவணை 1, 2, 3 என்பனவற்றில் மேலே தொகுத்துத் தந்துள்ளோம். இந்த அட்டவணைகள் அவரது நூலில் பக்கம் 29, 30, 31, 32, 33 ஆகியவற்றில் தரப்பட்டுள்ள மூன்று அட்டவணைகளைத் தழுவித் தயாரிக்கப்பட்டன. இம்மூன்று அட்டவணைகளும் கோல்புறூக் கால அரசியலின் போக்குகளை விமர்சன நோக்கில் பரிசீலனை செய்வதற்கு வேண்டிய அடிப்படைத் தகவல்களைத் தருவனவாக உள்ளன. குறிப்பாக கோல்புறூக் அரசியல் யாப்பின் தாக்கத்தால் உருவான உயர்குழு உருவாக்கத்தின் (Elite Formation) இயல்புகளை விளக்கவும் புரிந்துகொள்ளவும் இந்த அட்டவணைகள் உதவுகின்றன.*

1. *இக்காலத்தில் சிங்களவரிடையே ஒரு குடும்பக் குழுமமும், தமிழரிடையே ஒரு குடும்பக் குழுமமும் உருவாக்கம் பெற்றன. பறங்கியச் சட்டவாளர்கள் என்ற இன்னொரு சமூகக் குழுமமும் உருவாக்கம் பெற்றது.*
2. *கண்டிச் சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய இரு சமூகங்களிற்கும் 1899 இன் பின்னரே சட்டசபைப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இந்நியமனங்கள் இச்சமூகங்களிடையே குறுகிய கால எல்லையில் (1889 - 1911) குறிப்பிட்ட வகைக் குடும்பக் குழுமங்களை உருவாக்கவில்லை.*
3. *'நியமனம்' (Appointment) என்னும் 'இனவாரிப் பிரதிநிதித்துவமுறை' கோல்புறூக் காலத்தில் 'உயர்குழாம் உருவாக்கத்திற்கான (Elite Formation)' கருவியாகச் செயற்பட்டது.*
4. *இவ்வாறு உருவாக்கம் பெற்ற உயர்குழாம் கொழும்பை மையமாகக் கொண்டிருந்தது. இலங்கையில் இக்காலத்தில் மையம் - பிராந்தியம் என்ற பிளவும் முரண்பாடும் (Centre Periphery Schism) உருவானது. விஸ்தீரணத்திலும், சனத்தொகையிலும் விசாலமான பிராந்தியம் காலப்போக்கில் அரசியலில் முக்கியம் பெற முடியும் என்ற நிதர்சன உண்மை இக்காலத்தின் அரசியல் நகர்வுகளில் வெளிப்பட்டது. டொனமூர் யாப்புக் காலத்தில் சர்வசன வாக்குரிமை, பிரதேசவாரி பிரதிநிதித்துவம் (Territorial Representation) என்பன அரசியலில் பிராந்தியங்களின் செல்வாக்கை அதிகரித்தன.*
5. *கோல்புறூக் அரசியல் யாப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட போது, இலங்கை அரசியல் முறைமையில் ஆளுநர் என்ற பதவி சர்வாதிகாரம் கொண்டதாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. ஆளுநர்களிற்குப் பணிந்து சேவை செய்யும் அமைப்புகளாக நிருவாக சபையும் (Executive Council), சட்டசபையும் (Legislative Council) விளங்கின.*
6. *சட்டசபை நியமனங்களை ஆளுநர்கள் தனிநபர்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்கான*



**பொன்னம்பலம் இராமநாதன்**

ஒரு கருவியாக உபயோகித்தனர். தமது நடவடிக்கைகளை விமர்சித்தவர்களையும், சுயாதீனமாகச் செயற்பட முனைந்தவர்களையும் தண்டிப்பதற்கான ஒரு கருவியாகவும் சட்டசபை நியமனங்களை ஆளுநர்கள் உபயோகித்தனர்.

கோல்புறூக் அரசியல் யாப்பு பல குறைப்பாடுகளைக் கொண்டிருந்தது. ஆயினும் பிரதிநிதித்துவ அரசாங்கம் (Representative Government) என்னும் ஜனநாயக முறை இலங்கையில் வளர்ச்சி பெறுவதற்கான அடித்தளத்தை அது இட்டது. அரசியல் யாப்புத் தொடர்பான இரண்டாவது சீர்திருத்தமான குறூ - மக்கலம் சீர்திருத்தம் (1912 - 1920), 1921 இன் தற்காலிக அரசியல் யாப்பு, அதனையடுத்து வந்த மனிங் சீர்திருத்தம் (1924–1931) என்பன கோல்புறூக் அரசியல் யாப்பு மாதிரியில் திருத்தங்களை மேற்கொண்டு அதன் குறைகளை நிவர்த்தி செய்ய முற்பட்டன. மேற்படி மூன்று அரசியல் யாப்புகளைப் பற்றியும் ஆராய்வதற்கு முன்னர் கோல்புறூக் மாதிரியின் நன்மையான கூறு பற்றி லக்ஸ்மன் மாறசிங்க குறிப்பிட்டிருப்பதை நோக்குவோம். 1833 இற்கு முற்பட்ட காலத்தில் ஆளுநர் சட்டங்களை இயற்றும்போது அவற்றை இரகசியமான முறையில் மேற்கொண்டார். அவரும் அவரது ஆலோசகர்களான சிலரும் மட்டும் கூடி இரகசியமான முறையில் ஆலோசனைகளை நடத்திய பின் சட்டங்களை ஆளுநர் பிரகடனப்படுத்துவார். 1833 இன் சீர்திருத்தம் இந்த இரகசிய சட்டவாக்க முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

நிருவாகசபை (Executive Council), சட்டசபை (Legislative Council) என்னும் இரு சபைகள் அமைக்கப்பட்டன. ஆளுநர் இந்த இரு சபைகளுடைய கூட்டங்களை நடாத்தி அக்கூட்டங்களில் இயற்றப்படவுள்ள சட்டங்களை விவாதித்தல் வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

1833 இற்குப் பின்னர் சட்டங்களை இயற்றுதல் என்னும் செயல்முறை பொது வெளியில் பகிரங்கமாக நடைபெற வேண்டிய விடயம் ஆக்கப்பட்டது. சட்டங்களைப் பொது வெளியின் வெளிச்சத்தில் (Blaze of Publicity) பகிரங்கமாக விவாதிக்கும் கடப்பாடு ஆளுநர் மீது திணிக்கப்பட்டது.

இந்த விவாதத்தின் ஊடாக சட்டங்களை விமர்சன நோக்கில் பார்க்கும் தேவை உருவானது. மேலே குறிப்பிட்டது போன்று பறங்கியச் சட்டவாளர்கள் (Burger Lawyers) போன்ற படித்த இலங்கையர் குழுவினர்கள் இயற்றப்படும் சட்டங்களைப் பற்றிய விமர்சனங்களை வெளியிட்டனர். 1833 - 1911 காலப்பகுதியில் வளர்ச்சியுற்ற பொதுசன ஊடகமான பத்திரிகைகள் சட்டவாக்கச் செயற்பாட்டை விமர்சனக் கண்கொண்டு நோக்கின. இதனால் பொதுசன அபிப்பிராயம் (Public Opinion) உருவாக்கப்பட்டது. சுருங்கக்கூறின் கோல்புறூக் அரசியல் யாப்பின் நன்மையான இந்தப் பக்கம் அடுத்த கட்டத்தை நோக்கிய முன்னேற்றத்திற்கு வழிசமைத்தது எனலாம்.

## குறா - மக்கலம் சீர்த்திருத்தம்

பகுதி 2

*1911 ஆம் ஆண்டு குறா - மக்கலம் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இந்த அரசியல் யாப்பு கோல்புறூக் அரசியல் யாப்பின் பிரதான குறைகள் சிலவற்றைத் திருத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வரையப்பட்ட யாப்பாகும். பிரித்தானிய அரசாங்கம் கோல்புறூக் யாப்பில் அடையாளம் கண்ட குறைகளின் அடிப்படையில் செய்யப்பட்ட திருத்தங்களை நான்காக வகுத்துக் கூறலாம்.*

1. *சட்டசபையில் உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினர்கள் (Official Members) எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் (Unofficial Members) எண்ணிக்கையை அதிகரித்து சமநிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது முதலாவது நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு அமைய சட்டசபையின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கப்பட்டது. அதாவது கோல்புறூக் சட்டசபையில் 8 ஆக இருந்த எண்ணிக்கை 2 ஆல் உயர்த்தப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இந்த மாற்றத்தை விளக்குவதாக உள்ளது.*

| சமூகம் | பிரதிநிதிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | கோல்புறூக் | குறா - மக்கலம் |
| ஐரோப்பியர் | 03 | 02 |
| பறங்கியர் | 01 | 01 |
| தமிழர் | 01 | 02 |
| சிங்களவர் | 01 | 02 |
| கண்டிச் சிங்களவர் | 01 | 01 |
| முஸ்லிம்கள் | 01 | 01 |
| படித்த இலங்கையர் | 00 | 01 |
| மொத்தம் | 08 | 10 |

*மேற்படி அட்டவணையின்படி, ஐரோப்பியப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 3 இல் இருந்து இரண்டாகக் குறைக்கப்பட்டது. பறங்கியர், கண்டிச் சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று சமூகங்களினதும் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை. புதிதாக 'படித்த இலங்கையர்' (Educated Ceylonese) என ஒரு சமூகத்தை அடையாளப்படுத்தி அச்சமூகத்திற்கு ஓர் ஆசனம் சட்டசபையில் ஒதுக்கப்பட்டது. சட்டசபை 21 பேர் கொண்ட சபையாக இருந்தது. சட்டசபையின் தலைவரான ஆளுநரும் இவர்களுள் ஒருவராவார். திருத்தி அமைக்கப்பட்ட சட்டசபையில் கோட்பாட்டு அளவில் சமநிலை காணப்பட்டது. அதாவது உத்தியோகப்பற்றுள்ளவர்கள் 10 பேர், உத்தியோகப்பற்றற்றவர்கள் 10 பேர் என்ற வகையில் சமநிலை காணப்பட்டது.*

2. *உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களில் குறிப்பிட்ட இரு சாதிகளதும், குடும்பங்களதும் ஆதிக்கம் இருந்து வந்தது. இதனை மாற்றவும், உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாக சிங்கள கராவ சாதிப் பிரதிநிதி ஒருவரையும், தமிழ்க் கிறிஸ்தவர் ஒருவரையும் சேர்த்துக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. சிங்களவர்களின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட இருவரில் ஒருவர் கராவ சாதியைப் பிரதிநிதித்துவம் செய்பவராக இருந்தார். தமிழர்களின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட இருவரில் ஒருவர் தமிழ்க் கிறிஸ்தவரைப் பிரதிநிதித்துவம் செய்பவராக இருந்தார். இவ்விதமாக சட்டசபையின் கலவையில் (Composition) மாற்றம் ஏற்பட்டது.*

3. *'படித்த இலங்கையர்' (Educated Ceylonese) என்னும் சமூகக் குழுவை காலனிய ஆட்சியாளர்கள் அடையாளம் கண்டதும், அச்சமூகத்திற்குச் சட்டசபையில் ஓர் ஆசனத்தை ஒதுக்கியதும் குறா - மக்கலம் யாப்புச் சீர்திருத்தத்தின் முக்கியமான மாற்றமாகும். இச்சமூகக் குழுவைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலம் கற்றவர்களாயும், மேற்கத்தைய நாகரிகத்தையும் பழக்கவழக்கங்களையும் தழுவிக்கொண்டவர்களாயும் இருந்தனர். இவ்வகுப்பினருக்கும் இலங்கையின் சாதாரண சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களுக்கும் இடையே பெரிய இடைவெளி உருவாகியிருந்தது. ஆயினும் எதிர்கால இலங்கையின் ஆட்சி அதிகாரப் பொறுப்பை ஏற்கும் தகுதியுடைய வகுப்பு இதுவென காலனிய ஆட்சியாளர்கள் கருதினர். குறா - மக்கலம் அரசியல் யாப்பினால் 'படித்த இலங்கையர்' (Educated Ceylonese) என அடையாளம் காணப்பட்ட இச்சமூகப் பிரிவினருக்குச் சட்டசபையில் ஓர் ஆசனம் ஒதுக்கப்பட்டது.*

4. *தெரிவு செய்தல் என்னும் தத்துவம் (Elective Principle) குறா - மக்கலம் யாப்பில் புகுத்தப்பட்ட நான்காவது மாற்றமாகும்.*

### படித்த இலங்கையரைத் தெரிவு செய்வதற்கான வாக்காளர்கள்

குறா - மக்கலம் சீர்திருத்தம் இலங்கையர் அனைவருக்கும் வாக்குரிமையை வழங்கவில்லை. படித்த இலங்கையரைத் தேர்வு செய்வதற்கான வாக்காளர்களாக மொத்தச் சனத்தொகையில் 1.1% மக்களே இருந்தனர்

என்பதும் குறிப்பிடத்தக்கது. மட்டுப்படுத்தப்பட்ட இந்த வாக்குரிமை முறையின் முக்கிய அம்சங்கள் பின்வருவன.

1. கரைநாட்டுச் சிங்களவர், கண்டியச் சிங்களவர், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய நான்கு இனத்தவர்களில் இருந்து வாக்களிக்கும் தகுதியுடையவர்கள் அடையாளம் காணப்பட்டு வாக்காளர் அட்டவணையில் பதிவு செய்யப்பட்டனர்.

2. 25 வயதுக்கு மேற்பட்டவர்களான ஆண்கள், ஏனைய தகுதிகளும் இருந்தால் வாக்களார் அட்டவணையில் சேர்க்கப்பட்டனர்.

3. மேற்படி விதி பெண்கள் அனைவரையும் விலக்குவதாக அமைந்தது.

4. இலங்கையில் பிறந்தவராக இருக்க வேண்டும். 25 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும் என்ற இரு விதிகளும் இந்தியத் தமிழர், இந்திய மூர்கள் (Indian Moors), இலங்கையில் குடியேறியிருந்த மலேயர்கள் ஆகிய இனக்குழுமங்களை விலக்குவதாக அமைந்தது.

5. இறுதியாக தொழில், வருமானம், சொத்து, ஆங்கிலக்கல்வி ஆகிய தகுதிகளின் அடிப்படையில் வாக்காளர் அட்டவணையில் சேர்க்கப்பட்டோர் மேலே குறிப்பிட்டது போல் மக்கள் தொகையின் 1.1% ஆக இருந்தனர் என்பது ஆச்சரியத்திற்குரியதன்று.

1911 ஆம் ஆண்டில் 'படித்த இலங்கையர்' ஆசனத்திற்கான தேர்தல், சிங்கள - தமிழ் உயர்குழாம்களிடையே தேசியவாத உணர்வை வளர்த்தது. மிதவாதிகளான சிங்கள, தமிழ்த் தலைவர்கள் 1917 ஆம் ஆண்டில் 'இலங்கைச் சீர்திருத்தக் கழகம்' (Ceylon Reform League) என்ற அமைப்பை உருவாக்கினர். அதே ஆண்டில் 'இலங்கை தேசிய அமைப்பு' (Ceylon National Association) என்னும் அமைப்பும் உருவாக்கப்பட்டது. பின்னர் இரு ஆண்டுகள் கடந்த பின் 1919 ஆம் ஆண்டில் இவ்விரு அமைப்புகளும் ஒன்றிணைக்கப்பட்டு 'இலங்கை தேசிய காங்கிரஸ்' (Ceylon National Congress) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வாறு ஒன்றிணைந்த சிங்கள, தமிழ் தலைவர்களிடையே பின்னர் கருத்து வேறுபாடுகள் முற்றின. 1921 இல் இலங்கை தேசிய காங்கிரஸ் உடைவுற்றது.

### குறூ - மக்கலம் அரசியல் யாப்பின் எதிர்மறை விளைவுகள்

படித்த இலங்கையருக்கு ஓர் ஆசனத்தைச் சட்டசபையில் ஒதுக்கியமை, அந்த ஆசனத்திற்கு தெரிவு முறையில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தமை என்பன சிங்கள - தமிழ் உயர் குழுக்களிடையே தேசியவாத உணர்வுகளைத் தூண்டி வளர்த்தன என்பதை மேலே குறிப்பிட்டோம். ஆயினும், குறூ - மக்கலம் அரசியல் யாப்பின் முற்போக்கான இந்த நடவடிக்கைகள் எதிர்பாராத எதிர்மறை விளைவுகளை உருவாக்கின. அரசியல் யாப்பைச் செயற்படுத்திய போது அரசாங்கம் பின்வரும் விடயங்களில் தவறுகளை இழைத்தது.

1911 இன் சனத்தொகை மதிப்புப் புள்ளிவிவரங்கள் வெளியான போது சுதேசிகளில் பெரும்பான்மையினரான சிங்கள இனத்திற்கு, அவை அதிருப்தி அளிப்பனவாக இருந்தன. சிங்கள மக்கள் ஏறக்குறைய சனத்தொகையின் 61 வீதத்தினராகவும், தமிழர்கள் 12.8 வீதத்தினராகவும் இருப்பதை புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டின. கோல்புறூக் அரசியல் யாப்புக் காலம் முழுமையிலும் சிங்களப் பெரும்பான்மையினம் ஏமாற்றப்பட்டது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. 61 வீத மக்களிற்கு சட்டசபையில் 03 ஆசனங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்த வேளையில், வெறும் 12.8 வீத சனத்தொகையைக் கொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு 02 ஆசனங்கள் வழங்கப்பட்டிருந்தமையை அநீதியானது எனச் சிங்களத் தலைமை உணர்ந்தது. கோல்புறூக் திட்டத்தையே குறூ - மக்கலம் அரசியல் யாப்பும் பின்பற்றுவதாகவும், சிங்களப் பெரும்பான்மை இனத்திற்கு எதிரான பாரபட்சம் தொடருவதாகவும் விமர்சனம் எழுந்தது. சனத்தொகைப் புள்ளிவிவரங்கள் பற்றிய இரு அட்டவணைகள் கீழே தரப்பட்டுள்ளன. அப்புள்ளிவிவரங்களின் துணையுடன் மேற்படி விமர்சனத்தைப் பரிசீலித்தல் பயனுடையது.

**அட்டவணை 4**

**1911 ஆம் ஆண்டின் சனத்தொகை: சிங்களவர் (கரைநாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர்), இலங்கைத்தமிழர், இலங்கையின் மூர்கள்**

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| கரைநாட்டுச் சிங்களவர் | 1,716,859 | 894,078 | 822,781 |
| கண்டியச் சிங்களவர் | 998,561 | 525,483 | 473,078 |
| இலங்கைத் தமிழர்கள் | 528,024 | 268,649 | 259,375 |
| இலங்கை மூர்கள் (முஸ்லிம்கள்) | 233,901 | 122,114 | 111,787 |
| மொத்தம் | 2.477.305 | 1.810,324 | 1,667,021 |

குறிப்பு: மேற்படி அட்டவணை இலங்கையின் நான்கு சமூகப்பிரிவினர்களின் சனத்தொகையை மட்டும் உள்ளடக்கியுள்ளது. இந்தியத் தமிழர், இந்திய முஸ்லிம்கள், பறங்கியர், மலே இனத்தவர், ஐரோப்பியர் ஆகிய பிற இனக்குழுக்களின் புள்ளிவிவரம் உள்ளடக்கப்படவில்லை.

**அட்டவணை 5**

**சனத்தொகைப் புள்ளிவிவரம் - 1911 - 1921 ஆண்டுகள்**

| | 1911 | 1921 |
|---|---|---|
| மொத்தச் சனத்தொகை | 4,107,350 | 4,498,605 |
| சிங்களவர் (கரை நாட்டவர் + கண்டியர்) | 2,715,420 | 3,016,154 |
| இலங்கைத் தமிழர் | 528,024 | 517,324 |
| மொத்தச் சனத்தொகையின் வீதாசாரமாக சிங்களவர் | 66.1% | 67.02% |
| மொத்தச் சனத்தொகையின் வீதாசாரமாக இலங்கைத் தமிழர் | 12.8% | 11.5% |

*12.8* வீதமான இலங்கைத் தமிழர்கள் தமது விகிதாசாரத்திற்கு மிகுதியான அளவில் அரசியல் பலம் மிக்கவர்களாக உள்ளனர்; பொருளாதார பலமும் அவர்களிடம் உள்ளது; இந்தப் போக்கை அனுமதித்தால் இலங்கையின் சிறும்பான்மைக் குழுவான தமிழர்கள், பெரும்பான்மையினரான சிங்களவர்களை ஆள்பவர்களாக மாறிவிடுவர் என்ற அச்சம் சிங்களத் தலைவர்கள் மனதில் எழுந்தது. சிங்கள அமுக்கக் குழுக்கள் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ற பிரதிநிதித்துவம் (*Proportional Representation*) அமைய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தன.

படித்த இலங்கையர் என்ற சமூகக் குழுவை குறூ - மக்கலம் அரசியல் யாப்பு அடையாளப்படுத்தி, அச்சமூகக் குழுவிற்கு தனிச்சலுகையொன்றை வழங்கியது. சட்ட சபையில் ஓர் ஆசனம் என்பதே இச்சலுகையாகும். *1911* ஆம் ஆண்டுக் காலத்தில் 'படித்தவர்' என்பது 'ஆங்கிலம் கற்றவர்' என்ற பொருளைப் பெற்றது. இதனால் ஆங்கிலம் கற்றவரே வாக்களிக்கும் தகுதி உடையவரென்று அறிவிக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி சமூகத்தின் உயர்குழு ஒன்றிற்கு மட்டுமே கிடைக்கக்கூடிய பண்டமாக இருந்த காலத்தில், அக்கல்வியைப் பெறமுடியாத மக்கள் அனைவரையும் குறூ - மக்கலம் சீர்திருத்தம் வாக்களிக்கத் தகுதியற்றவர் எனப் பிரகடனம் செய்ததெனலாம். 'படித்த இலங்கையர்' என்ற சமூகக் குழுவை அடையாளப்படுத்தியதன் மூலம் சிங்களம், தமிழ் என்னும் இரு மொழிகளினதும் தரம் தாழ்த்தப்பட்டது. அம்மொழிகளில் கல்வி கற்றவர்கள் வாக்கைப் புத்திசாலித்தனமாகவும், சரியாகவும் பிரயோகிக்கும் தகுதியற்றவர்கள் என இழிவுபடுத்தப்பட்டனர். மேலும், ஆங்கிலக்கல்வி இலங்கையின் தேசிய இனங்களிடையே பரவியிருந்த முறையில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. கரைநாட்டுச் சிங்களவர், இலங்கைத் தமிழர் ஆகிய இரு இனக்குழுக்களும் ஒப்பீட்டளவில் ஆங்கிலக்கல்வியில் முன்னிலையில் இருந்தன. சட்டவாளர்கள், மருத்துவர்கள் போன்ற உயர்தொழில்களில் இலங்கைத் தமிழர்கள் சனத்தொகை விகிதாசாரத்திலும் கூடிய அளவு இடங்களைப் பிடித்திருந்தனர். கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 6 இல் தரப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் இந்த ஏற்றத்தாழ்வுகளை ஒப்பீட்டு முறையில் விளக்குவதற்கு உதவக்கூடியன.

**அட்டவணை 6**

**தொழில்கள் சிலவற்றின் இனவாரியான சனத்தொகை - 1911**

| | | | | வீதாசாரம் | |
|---|---|---|---|---|---|
| பதவிநிலை | எல்லா இனங்களும் மொத்தம் | கரைநாட்டுச் சிங்களவரும் கண்டிச் சிங்களவரும் | இலங்கைத் தமிழர் | தமிழர் | சிங்களவர் |
| பொது நிர்வாகத்துறை (Publicadministaration) | 5375 | 2862 | 960 | 17.8 | 53.2 |
| சட்டவாளர்கள்(Law year) | 854 | 481 | 205 | 24 | 56.3 |
| மருத்துவர்கள் | 1370 | 348 | 625 | 45.6 | 25.4 |
| ஆசிரியர்கள் | 6959 | 3932 | 1868 | 26.8 | 56.5 |

மேற்குறித்தவை போன்ற புள்ளிவிவரங்கள் இனவாத அடிப்படையிலான சர்ச்சைகளினைத் தோற்றுவித்தன.

### 1921 அரசியல் யாப்பு மாற்றங்களின் வரலாற்றுப் பின்புலம்

1919 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பு இலங்கையின் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய அனைத்துச் சமூகப் பிரிவினரையும் உள்ளடக்கிய புதிய உயர் குழுவாக (A New Elite Group) விளங்கியது. பொன்னம்பலம் அருணாசலம் இக்குழுவின் தலைமைப் பதவியை ஏற்றிருந்தார். பிரித்தானியாவின் காலனிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் மில்னர் பிரபுவிற்கு (Lord Milner) அனுப்பி வைத்த மனுவொன்றில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தது.

1. 50 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபை அமைக்கப்பட வேண்டும்.
2. இந்த உறுப்பினர்களில் 4/5 பங்கினர் பிரதேசவாரியாக (Territorially) தெரிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. ஆண்களுக்கு மட்டுப்பாடுகள் இல்லாது வாக்குரிமையை வழங்க வேண்டும். பெண்களுக்கும் சில மட்டுப்பாடுகளுடன் வாக்குரிமையை விரிவாக்கம் செய்தல் வேண்டும்.
4. சட்டசபையின் 1/5 பங்கு உறுப்பினர்கள் இலங்கையின் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுதல் வேண்டும். இந்நியமன உறுப்பினர்கள் உத்தியோகப்பற்றற்றவர்களாக (Unofficial Members) இருத்தல் வேண்டும்.
5. சட்டசபையின் சபாநாயகர் தெரிவு செய்யப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.
6. வரவு செலவுத் திட்டத்தின் மீது சட்டசபை முழுமையான கட்டுப்பாட்டை உடையதாக இருத்தல் வேண்டும்.
7. நிருவாக சபையின் (Executive Council) உறுப்பினர்களில் அரைப்பங்கினர் இலங்கையர்களாக இருத்தல் வேண்டும்.
8. பிரித்தானியப் பாராளுமன்ற நடைமுறைகளில் அனுபவம் உள்ள ஒருவரை இலங்கையின் ஆளுநராக நியமிக்க வேண்டும். இலங்கையின் மக்களின் கட்டுப்பாட்டில் உள்ள சுய ஆட்சியை இலங்கைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தேசிய காங்கிரசின் மேற்படி கோரிக்கைகளில் இனவாரிப் பிரதிநிதித்துவம் (Communal Representation) பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பது அவதானிக்கத்தக்கது. 1911 இன் பின்னர் உள்ள காலத்தின் இனவாதச் சர்ச்சைகளில் இருந்து தம்மைத் தூர விலக்கிக்கொண்ட 'படித்த இலங்கையர்களின்' சிறு உயர்குழுவினர் இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைமையை ஏற்று அதனை வழிநடத்திச் சென்றனர். அவர்களின் கோரிக்கைகள் லிபரல் ஜனநாயக விழுமியங்களில் காங்கிரஸ் தலைவர்களுக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியது. மில்னர் பிரபுவுக்கு இக்கடிதம் 1918 இல் அனுப்பப்பட்ட சமயத்தில் மனிங் இலங்கையின் ஆளுநராக இருந்தார். ஆளுநர் மனிங், இலங்கை தேசிய காங்கிரஸ் ஆகிய இரு தரப்பினரிடையிலும் இடம்பெற்ற பேரம்பேசுதலின் விளைவாக '1920 இன் தற்காலிக அரசியல் யாப்பு' (Temporary Constitution of 1920) உருவாக்கம் பெற்றது. இத்தற்காலிக அரசியல் யாப்பு 1921 இல் நடைமுறைக்கு வந்தது. இத்தற்காலிக அரசியல் யாப்பிற்கு எதிர்ப்புகள் கிளம்பின. இதன் விளைவாக 1924 மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் (1924 - 1931) நடைமுறைக்கு வந்தன.

1921 அரசியல் யாப்பு, 1924 அரசியல் யாப்பு என்னும் இரு யாப்புகளும் கோல்புறுக் மாதிரியில் அமைந்தன. 1921 யாப்பில் சட்டசபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 37 ஆகவும், 1924 இல் அதன் எண்ணிக்கை 49 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. இவ்விரு யாப்புகளின் சட்டசபைகளின் கட்டமைப்பை விளக்கும் படவிளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 1921 - சட்டசபை



## 1924 - சட்டசபை




## பிரதேசவாரி

*மேல் மாகாணம் - 5*
*வட மாகாணம் - 5*
*தென் மாகாணம் - 3*
*மத்திய மாகாணம் - 2*
*கிழக்கு மாகாணம் - 2*
*வடமேல் மாகாணம் - 2*
*வடமத்திய மாகாணம் - 1*
*ஊவா மாகாணம் - 1*
*சப்பிரகமுவ மாகாணம் - 2*

*குறிப்பு: சி.அ. யோதிலிங்கம் அவர்களின் 'இலங்கையின் அரசியல் யாப்புகள் - 2025' நூலில் முறையே பக்கம் 43, 48 ஆகியனவற்றில் தரப்பட்டுள்ள விளக்கப் படங்களைத் தழுவித் தயாரிக்கப்பட்டுள்ள இப்படங்கள் 1921, 1924 ஆகிய இரு அரசியல் யாப்புகளினதும் முக்கிய கூறுகளை விளக்குவதற்கு உதவுவனவாக உள்ளன.*

*1. இவ்விரு யாப்புகளும் கோல்புறூக் மாதிரியில் (Cole brook Model) அமைந்திருந்தன. நிர்வாக சபை, சட்டசபை ஆகியவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன.*

*2. கோல்புறூக் சட்டசபையில் 15 உறுப்பினர்கள் இருந்தனர். அந்த எண்ணிக்கை 1911 சட்டசபையில் 21 ஆக அதிகரித்தது.*

*1921 சட்டசபை - 37*

*1924 சட்டசபை - 48*

*என 13 ஆண்டுகால இடைவெளியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.*

*3. பிரதேசவாரி பிரதிநிதித்துவம் (Territorial Representation) என்னும் முறையினைப் புகுத்துவதன் மூலம் சட்டசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 1921 சட்ட சபைக்கு பிரதேசவாரியாக 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதையும், 1924 சட்டசபைக்கு 23 உறுப்பினர்கள் பிரதேசவாரியாக தெரிவு செய்யப்பட்டதையும் அவதானிக்க முடிகிறது.*

*4. பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையுடன், இனவாரியான நியமனங்களையும் செய்வதன் மூலம் சட்டசபை ஆசனங்கள் நிரப்பப்பட்டன. ஆளுநர் மனிங் இவ்விரு முறைகளையும் கையாண்டு இனங்களின் கலவையுடன் சட்டசபைகளை உருவாக்கினார்.*

*5. சட்டசபைகளின் இனங்களின் கலவை (Communal Composition) 1921 இல் பின்வருமாறு இருந்தது:*

*இந்தியர் - 1*
*முஸ்லிம்கள் - 1*
*பறங்கியர் - 2*
*கண்டியர் - 2*
*இலங்கைத் தமிழர் - 3*
*ஐரோப்பியர் - 3*
*சிங்களவர் - 11*
*மொத்தம் - 23*

*1924 இல் இனங்களின் கலவை பின்வருமாறு அமைந்தது:*

*சிங்களவர் - 16*
*தமிழர் - 8*
*இந்தியர் - 2*
*முஸ்லிம்கள் - 3*
*ஐரோப்பியர் - 3*
*பறங்கியர் - 1*
*மொத்தம் - 33*

*6. இனங்களின் கலவை, சட்டசபையில் சமநிலைப் பிரதிநிதித்துவம் (Balanced Representation) பேணப்படுவதற்கு உதவியது எனக் கூறப்படுகின்றது. இனங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்த்து, அவற்றைப் பிளவுபடுத்துவதன் மூலம் தமது ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு ஆளுநர் மனிங் கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சித் (Divide and Rule) தந்திரம் எனவும் இது விமர்சிக்கப்பட்டது.*

## முடிவுரை

*கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் முதல் 1931 வரை நடைமுறையில் இருந்த நான்கு அரசியல் யாப்புகள் பற்றிய சமூக - சட்ட (Socio - Legal) அம்சங்களை லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் நூலில் தரப்பட்ட தகவல்களின் படியும், அவரது பகுப்பாய்வு நோக்கின் படியும் இக்கட்டுரையில் விளக்கிக் கூறினோம். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகால நீண்ட இந்த வரலாற்றில் 1911 தொடக்கம் 1931 வரையான 20 ஆண்டுக்காலத்தில் 3 அரசியல் யாப்புகள் நடைமுறைக்கு வந்தன. இந்த அரசியல் யாப்பு மாற்றங்களின் சமூக - அரசியல் பின்னணி பற்றிய மீளாய்வு தமிழ் மக்களின் இன்றைய அரசியல் தேவைகளை வரலாற்று நோக்கில் புரிந்துகொள்வதற்கு உதவுவதாக அமையும்.*

*இக்கட்டுரை லக்ஸ்மன் மாறசிங்க அவர்களின் 'The Evolution of Constitutional Governance in Sri Lanka' என்ற நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் (பக்கம் 19 - 70) கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டுள்ளது.*

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது.

அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்ற நூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

*ஆங்கில மூலம்: சூரியா விக்ரமசிங்க*

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் முன்னோடிகள்



**எஸ்.கே. விக்னேஸ்வரன்**

எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

இந்தக் கட்டுரை, ஏற்கனவே உள்ள சட்டங்களில் காணப்படும் விதிகளைப் போலவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலும் (PTA)[1] உள்ளடக்கப்பட்டுள்ள, சில ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டதாக அமைகிறது. பலரும் நினைப்பது போல, இந்த ஒற்றுமைகள், வெறுமனே அவசரகாலச் சட்டங்கள் சம்பந்தப்பட்டவை மட்டுமல்ல, சில சந்தர்ப்பங்களில் அவை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களிலும் கூடக் காணக்கூடியதாக இருக்கின்றன.

இந்தக் கட்டுரையின் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும் சட்டவிதிகள், (அவ்வப்போது கொண்டுவரப்பட்ட) அவசரகாலச் சட்டங்கள், 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டம்', 1972 ஆம் ஆண்டின் 'பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம்', 1978 ஆம் ஆண்டின் 'தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதையொத்த பிற அமைப்புகளையும் தடை செய்யும் சட்டம்' ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்களைப் பற்றி முதலில் ஒரு சில வார்த்தை சொல்லவேண்டும்:

அவசரகாலச் சட்டங்கள் 1947[2] ஆம் ஆண்டின் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்படுகின்றன. அவை, கோட்பாட்டளவில் 'தற்காலிகமானவை' என்ற அடிப்படையில் சாதாரண சட்டமன்ற நடைமுறைகளைத் தவிர்த்து, அரச தலைவரால்[3] நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களாகச் சொல்லப்பட்டாலும் நடைமுறையில், அவை பல ஆண்டுகளாக அமுலில் இருந்துவருகின்றன. இந்த அவசரகாலச் சட்ட நடைமுறை, பொதுவாக கைது செய்தல், தடுப்புக்காவலில் வைத்தல், விசாரணை நடைமுறைகள், அத்தியாவசியச் சேவைகள் போன்றவற்றோடு சம்பந்தப்பட்டவை. பிற விடயங்களைக் கையாள்வதற்கான ஒரு தொகுதி மேலதிக விதிமுறைகள், அவ்வப்போது அத்தகைய தேவைகள் உணரப்படும்போது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதை நாம் எழுதிக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், அவசரகால விதிமுறைகள் பற்றி எம்மிடமிருக்கும் விவரங்களை ஒவ்வொரு மாதமும் புதிது புதிதாக இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது; ஏற்கனவே உள்ள விதிமுறைகளில் நடந்திருக்கும் மாற்றங்கள் எப்போது நிகழ்ந்தன என்பதைக் கண்டறிவதும் ஒருபோதும் இலகுவானதல்ல. இந்த அறிக்கையில், 'அவசரகாலச்சட்ட (பல்வகை ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) விதிமுறைகள்', என்ற தலைப்பில் மார்ச் 1971[4] இல் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ், ஜூலை 1975[5] இல் கொண்டுவரப்பட்ட சட்டமே எழுமாற்றான (Random) ஓர் உதாரணமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு நடந்த ஜேவிபி கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களைக் கையாள்வதற்காக 1972 இல் 'குற்றவியல் நீதி ஆணையங்கள் சட்டம்' என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் விதிகள் பணப்பரிமாற்றக் கட்டுப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களோடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இதனால் உருவாக்கப்பட்ட ஆணையங்கள் ஆயுள் தண்டனை உட்பட்ட, சிறைத் தண்டனைகளை விதிக்கும் அதிகாரங்களைக் கொண்டிருந்தன. இந்தச் சட்டம் எட்டு ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என்பதும், நாடாளுமன்றத்தினால் கொண்டுவரப்படும் ஒரு தீர்மானத்தின் அடிப்படையில், எளிய பெரும்பான்மையுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் வகையில் அதை நீடிக்க முடியும் என்பதும் அதில் உள்ளடங்கியிருந்தது. ஆயினும் இது 1977 இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின் இல்லாமலாக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுத் (திருத்தச்) சட்டம் குற்றவாளிகள் தொடர்பான கடுமையான விதிகளையும் கொண்டிருந்தது; ஆயினும், அரசாங்கம் மாறிய பிறகு, 1977 ஆம் ஆண்டு அதுவும் இரத்துச் செய்யப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் 1970 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறிமாவோ ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் போது இயற்றப்பட்டவை. அடுத்ததாக நடந்தவைகள் ஜூலை 1977 பொதுத் தேர்தலின் விளைவாக பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கத்தின் கைவேலைகள். இது 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், அதையொத்த பிற அமைப்புகளையும் தடை செய்யும் சட்டம்'. இது பொதுமக்களின் விவாதத்துக்கோ தீர்ப்பிற்கோ வாய்ப்பளிக்கப்படாத ஓர் 'அவசர' மசோதாவாக சட்டமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றப்பட்டது. ஆரம்பத்தில் அதன் செல்லுபடியாகும் தன்மை ஒரு வருடத்திற்கு மட்டுமாகவே இருந்தது. ஆனால் பின்னர் ஒரு திருத்தம் மூலம் அது மற்றொரு வருடத்திற்கு நீட்டிக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) பிரிவு 30 இல், "தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் சட்டம் [6] இதன் மூலம் இரத்துச் செய்யப்படுகிறது" என்று குறிப்பிட்டிருந்தாலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை செயற்பாட்டுக்குக் கொண்டுவரும் வர்த்தமானி அறிவிப்பு, பிரிவு 30க்கு

ஒரு குறிப்பிட்ட விதிவிலக்கை அளித்தது. எனவே விடுதலைப் புலிகள் தொடர்பான சட்டம் அதன் முழுப் போக்கையும் 1980 மே 23 வரை செயற்படுத்தியது, பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் ஒன்றுடன் ஒன்று இணைந்தது. சட்டமன்றச் சட்டங்களின் 1980 (அதிகாரப்பூர்வமற்றது) இன் திருத்தப்பட்ட பதிப்பு, ஒரு நட்சத்திரக் குறியால் குறிக்கப்பட்ட பிரிவு 30 இன் குறிப்பில், அது, "மே 23, 1980 அன்று காலாவதியானது" என்று குறிக்கிறது. ஆனால் இது எப்படி நடந்தது என்பதை இன்றைய ஆராய்ச்சியாளர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. இதைப் புரிந்துகொள்ள, 1979 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்டத்தின் வரிகளைக் கவனமாகப் பார்க்க வேண்டும். அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 1 இன் முழு வடிவம் பின்வருமாறு உள்ளது:



சிறிமாவோ பண்டாரநாயக்க
Image Source - island.lk



ஜே.ஆர். ஜெயவர்த்தன
Image Source - historica.fandom.com

"இந்தச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என்று குறிப்பிடப்படலாம். இது, அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் உத்தரவின் மூலம் அறிவிக்கப்படக்கூடிய தேதி, அல்லது தேதிகளில் அதன் அனைத்துமோ, அல்லது அவற்றில் ஏதேனும் விதிகளைக் கொண்டதாகவோ நடைமுறைக்கு வரும்."

சட்டமன்றச் சட்டங்கள் (திருத்தப்பட்ட) பதிப்பின், 1980 இல் வெளியிடப்பட்ட பதிப்பில் சாய்வு எழுத்துகளில் ('அதிகாரபூர்வமற்றது' என்று) உள்ள சொற்கள் விடுபட்டுள்ளன. இது, பாராளுமன்ற உறுதிப்படுத்தலுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட செயன்முறையை இன்னும் பூரணப்படுத்தாத காரணத்தால் 'அதிகாரபூர்வமற்றது' என்றாலும் கூட, அரசாங்கத்தால் வெளியிடப்பட்டதென்ற வகையில், இப்போதும் பரவலாகப் பயன்பாட்டில் இருந்து வருகின்ற ஓர் உறுப்புரையாகும்.

### நிறைவேற்று அதிகாரத்தின் தற்றுணிவின் அடிப்படையில் தடுப்புக்காவல் வழங்கப்படல்

இதன்படி, எவராவது ஒரு நபர் ஏதாவதொரு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்று சந்தேகிப்பதற்கான ஏதாவது ஒரு காரணம் கிடைக்கும் போது, (பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட) அமைச்சர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) 9 ஆவது பிரிவின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், அந்தச் சந்தேகநபரை ஒரு தடவையில் மூன்று மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிடுவதற்கான அதிகாரம் கொண்டவராக இருப்பதுடன், இந்தத் தடுப்புக்காவல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாகப் புதுப்பிக்கப்பட்டுப் 18 மாதங்கள் வரை நீடிக்கப்படலாம்.

அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்களும்) சட்டப்பிரிவுகளின் 18 ஆவது பிரிவானது, அவசரகாலச் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கான விதிமுறைகளின்படி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு, ஒரு நபரைக் கைது செய்து காலவரையின்றி, அதாவது அவசரகாலச்சட்டம் அமுலில் இருக்கும் வரை, தடுப்புக் காவலில் வைத்திருக்க உத்தரவிடுவதற்கான அதிகாரத்தை வழங்குகின்றது. இதன் பொருள், அவசரகால நிலை பல ஆண்டுகளாக அமுலில் இருந்தால், அது நடைமுறையில் அக்காலம் வரைக்குமான தடுப்புக்காவலாக அமையும் என்பதுதான். ஒரு நபர் பொதுப் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பராமரித்தல் அல்லது அத்தியாவசியச் சேவைகளைப் பராமரித்தல் ஆகியவற்றிற்கு எந்தவிதத்திலாவது பாதகமான செயலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கோ அல்லது சில குறிப்பிட்ட அவசரகால விதிமுறைகளை மீறுவதைத் தடுப்பதற்கோ, அவ்வாறு செய்வது அவசியம் என்று கருதும் இடத்தில் செயலாளர் தனக்குள்ள இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

அவசரகால விதிமுறைகளின் வெவ்வேறு விதிகளின் கீழ், அதாவது விதிமுறைகள் 19, 20 என்பவற்றின் அடிப்படையில், காவல்துறையினருக்கு ஒருவரைக் கைது செய்து பதினைந்து நாட்கள் தடுப்பில் வைத்திருக்க முடியும்; இந்தக் காலகட்டத்தின் முடிவில்

அவர் ஒன்றில் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், நீதிமன்றத்திற்கு அவரை விடுவிக்கும் அதிகாரம் இல்லை - அது அவரை விளக்க மறியலில் வைத்திருக்க மட்டுமே முடியும். “நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளரால் பிறப்பிக்கப்பட்டும் உத்தரவின் பேரில் அவர் விடுவிக்கப்படும் வரை” (பிரிவு 20 A) அவர் தொடர்ந்து தடுப்புக்காவற் சிறையிலேயே இருப்பார்.

அவசரகால விதிமுறைகள், அவற்றின் பல்வேறு விதிகளின் மூலம் அப்போதைய நிர்வாகத்தின் விருப்பப்படி, ஒன்றில் பாதுகாப்பு வெளியுறவு அமைச்சின் செயலாளரது விருப்பப்படியோ அல்லது காவல்துறை, நீதித்துறை சார்ந்த அமைச்சின் செயலாளரது விருப்பப்படியோ காலவரையற்ற தடுப்புக்காவலுக்கு வழிவகுத்தது.

குற்றவியல் நீதி ஆணையச் சட்டமானது, குற்றம் சாட்டப்பட்ட நபர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவென ஓர் ஆணையத்தைக் கொண்டிருப்பதை அனுமதித்தது. ஆயினும் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமே, ஏற்கனவே தடுப்புக் காவலில் உள்ள நபர்களை ஆட்சித் தலைமை விரும்பும் வரை அங்கேயே வைத்திருந்து கையாள்வதாகத்தான் இருந்தது. எந்தவொரு நீதிமன்ற உத்தரவு மூலமோ, அல்லது ஆணையத்தின் விசாரணைக்குப் பின்பாகவோ கைதிகள் விடுவிக்கப்படுவது என்ற விடுதலையின் சட்டபூர்வ நடைமுறையைக் கொண்டிருக்கவில்லை, இது நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் தற்றுணிவான விருப்பத்தைப் பொறுத்ததாகவே இருந்தது. சட்டத்தின் பிரிவு 14 (2a) பின்வருமாறு அமைந்திருந்தது:

“ஓர் ஆணைக்குழு நிறுவப்பட்டிருக்கும் காலத்தில், ஒரு நீதிபதியின் உத்தரவின் பேரில் எந்தவொரு சிறையிலும் காவலில் வைக்கப்பட்டு, இந்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் முன் எந்தவொரு விசாரணைக்கும் உட்பட்டதாக இருக்கும் எந்தவொரு குற்றத்திற்கும் சந்தேகிக்கப்படுகின்ற அல்லது குற்றம் சாட்டப்பட்டுள்ள எந்தவொரு நபரும், நீதி அமைச்சகத்தின் நிரந்தரச் செயலாளரின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்படும் வரை, அத்தகைய காவலில் தொடர்ந்து இருப்பார்.”

1972 ஆம் ஆண்டு, பரிவர்த்தனை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 30B (1), ஒரு பிரதி பொலிஸ்மா அதிபரின் (ASP) வேண்டுகோளின் பேரில், நீதிபதியால் ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்படுவதற்கு சட்டரீதியாக வழிவகுத்தது. நடைமுறையில், அத்தகைய கோரிக்கைகள் வேறு வழியின்றி வழங்கப்பட்டு வந்தன. அதில் இருந்த முக்கியத்துவம் என்னவென்றால், தடுப்புக் காவலுக்கான உத்தரவு ஒரு முழு மாதத்திற்குரியதாக (ஆனால் இது “ஒரு மாதத்திற்கு மிகாமல்” என்ற அர்த்தத்தில் அல்ல) இருக்க வேண்டும், அதன் பிறகு மற்றொரு மாதத்திற்குப் புதுப்பிக்கப்படலாம். நடைமுறையில் இது காவல்துறைக்கு இரண்டு மாதங்களுக்குக் காவலில் வைக்க அதிகாரம் அளித்தது, மேலும் மிகவும் விரும்பத்தகாத சூழ்நிலைகளில் (இதை இச்சட்டத்தின் கீழே உள்ள பிரிவு 30B (5) இல் பார்க்கலாம்) மேலும் மூன்று மாதக் காவலை சட்டமா அதிபரின் வேண்டுகோளின் பேரில் உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்க முடியும்.

விடுதலைப் புலிகள், மற்றும் இது போன்ற பிற அமைப்புகளைத் தடை செய்தலுக்கான சட்டம் பிரிவு 11 இன் கீழ், அமைச்சரின் உத்தரவின் பேரில் கைதிகளை மூன்று மாத காலத்திற்குத் தடுப்புக் காவலில் வைக்க அனுமதிக்கப்படுகிறது. இந்தத் தடுப்புக்காலம் ஒரு வருடம் வரை புதுப்பிக்கப்பட்டு நீடிக்கப்படலாம். நிர்வாகத்தால் தீர்மானிக்கப்படும் தடுப்புக்காவலுக்கான இடங்களும் நிபந்தனைகளும்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் அமைச்சரின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள், “அமைச்சரால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு இடத்திலும், அவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளின் அடிப்படையிலும்” தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) விதிமுறைகளின் 18 ஆவது பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் இவ்வாறுதான் தடுத்து வைக்கப்பட்டனர். அதாவது:

“பொலிஸ் மா அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில், அவரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப (பதிவு 18 (3)).”

அவசரகால விதிமுறைகளின் கீழ், காவல்துறையினரே கைதிகளைத் தடுத்து வைப்பதற்கான இடம், நிபந்தனைகள் இரண்டையும் தீர்மானித்தனர். தடுப்புக்காவல் கைதி ஒரு சிறையில் அடைக்கப்பட்டிருந்தால், அவருக்கு பகுதி IX (இது ‘சிறைச்சாலை பார்வையாளர்கள் சபை’ சம்பந்தப்பட்டது) தவிர்ந்த, சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் விதிகள், பார்வையாளர் வருகைகள், கடிதப் போக்குவரத்துக்கான விதிகள், சிறைவிதிகள் அனைத்தும் கூட அவரைக் கட்டுப்படுத்துபவையாக அமையும். ஆயினும் பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர்,

கைதி தொடர்பாக, எந்த விதிகளையும் மாற்றவும், அவருக்கான பார்வையாளர் வருகைகள், கடிதப் போக்குவரத்துத் தொடர்பான தனது சொந்த விதிகளை உருவாக்கவும் முடியும்.

அவசரகால விதிமுறைகளின் மற்றொரு பிரிவின் கீழ், அதாவது சரத்து 19 இன் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களைப் பொறுத்தவரை, அவர்கள் "கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து இலங்கையில் அமைந்துள்ள எந்த இடத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்படலாம்" (பதிவு 19 (8) (a)) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அத்தகைய எந்தவொரு நபரும் "காவல்துறைத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில், அவர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி தடுத்து வைக்கப்பட வேண்டும்" (பதிவு 19 (8) (c)). இந்த நிலை பதினைந்து நாட்கள் நீடிக்கும். அதன் முடிவில், விடுவிக்கப்படாவிட்டால், அந்த நபரை ஒரு மாஜிஸ்திரேட் முன், முன்நிலைப்படுத்த வேண்டும். அவர் அவரை ஒரு சிறையில் அடைப்பார்.

இந்தப் பகுதியில் உள்ள பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு (திருத்த) சட்டவிதிகள் விசித்திரமாக இருந்தன. நாம் ஏற்கனவே பார்த்தது போல, நடைமுறையில் காவல்துறை ஒரு நபரை இரண்டு மாதங்களுக்கு (உச்ச நீதிமன்றத்தால் மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்க முடியும்) காவலில் வைத்திருக்க முடியும். இந்தக் காவல் நீதித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதாவது, இது பொதுவாக சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்படுவதைக் குறிக்கும். இந்தச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவை முழுமையாக மேற்கோள் காட்டுவது சிறப்பாக இருக்கும்:

5. இந்தப் பிரிவின் கீழ் சந்தேகிக்கப்படும் நபர், நீதித்துறையின் சட்டபூர்வ காவலில் இருக்கும் காலகட்டத்தில், அத்தகைய நபர் நீதி அமைச்சகத்தின் செயலாளரால் எழுத்துபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் தடுத்து வைக்கப்படுவார். அத்தகைய இடம் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சிறைச்சாலையாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, அத்தகைய நபரைப் பெற்று அவரைக் காவலில் வைத்திருப்பது என்பது, அந்த இடத்திற்குப் பொறுப்பான நபர் அல்லது அதிகாரியின் கடமையாகும். தவிரவும், சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் விதிகளும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட பிற விதிகளும் அத்தகைய நபருக்குப் பொருந்தும்:

நீதி அமைச்சின் செயலாளர், அவ்வப்போது, அத்தகைய இடத்திற்குப் பொறுப்பான நபர் அல்லது அதிகாரிக்குப் பிறப்பிக்கும் உத்தரவின் மூலம், சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் எந்தவொரு பிரிவையும், உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அல்லது மாற்றங்களுக்கு உட்பட்டு, அத்தகைய நபருக்கு அவை பொருந்தாது என்று உத்தரவிடலாம்.

6. துணைப்பிரிவு (5) இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் வர்த்தமானியில் வெளியிட வேண்டிய அவசியமில்லை; அத்தகைய உத்தரவு நீதி அமைச்சகத்தின் செயலாளரால் கையொப்பமிடப்பட்டவுடன் நடைமுறைக்கு வரும்.

இவ்வாறு தடுப்புக்காவலின் இடம் மற்றும் நிபந்தனைகள் நீதி அமைச்சகத்தின் செயலாளரால் தீர்மானிக்கப்பட்டன (இது, பின்னர் பாதுகாப்பு வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளராலாக மாற்றப்பட்டது). இந்த விதியின் கீழ் தான் பணப் பரிமாற்றக் கட்டுப்பாட்டுச் சந்தேக நபர்கள் பஜெற் வீதியில் (Paget Road) உள்ள ஒரு பங்களாவில் தடுத்து வைக்கப்பட்டு, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டனர்; அவர்களுக்கு வாசிப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டன; அவர்களது ஜன்னல்கள் வெளியே தெரியாதபடி காகிதத்தால் மூடப்பட்டன; அவர்களது குற்றச் செயல்கள் அந்தக் காலங்களில் 'விசாரணை செய்யப்பட்டு' அவர்களின் 'ஒப்புதல் வாக்குமூலங்கள்' பெறப்பட்டன.

இந்த 'விடுதலைப் புலிகளையும் அதுபோன்ற அமைப்புகளையும் தடைசெய்வதற்கான சட்டம்' கூட, பயங்கரவாதத் தடைச் சட்டத்திலுள்ள விதிமுறையான "அமைச்சரது தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும் எந்தவொரு இடத்திலும், எந்தவொரு நிலைமையிலும் ஒரு சந்தேக நபரைத் தடுப்புக்காவலில் வைக்கமுடியும்" என்ற பிரிவை (பிரிவு 11), அப்படியே பின்தொடர்வதாகத் தான் அமைகிறது.

### ஒப்புதல் வாக்குமூலத்தை நிர்வகித்தல்

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நம்மத்தியில் இருந்துவந்த 'சாட்சியக் கட்டளைச் சட்டம்' (Evidence Ordinance), காவல்துறை அதிகாரிகளிடம் அளிக்கப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலங்களுக்கும், காவலில் இருந்தபோது அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களுக்கும் விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தது. குறிப்பாக, ஒரு நீதிபதி முன்னிலையில் வாக்குமூலங்கள் எடுக்கப்பட்டாலன்றி, அத்தகைய வாக்குமூலங்கள் சாட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதிலிருந்து நீக்கப்பட்டன. ஆயினும், பயங்கரவாதத் தடைச்சட்டம், அதற்குப் பதிலாக "ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட வேண்டுமானால், அது ஓர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்குக் குறையாத ஒரு பதவியிலுள்ள

அதிகாரியின் முன் வாக்குமூலம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்' என்ற நிபந்தனையைக் கொண்டுவந்ததன் மூலம், இந்தப் பாதுகாப்பை நீக்கியது.

அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) விதிமுறைகளின், 60 ஆவது பிரிவிலும் இதே போன்ற ஒரு விதி காணப்படுகிறது.

குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் சட்டமோ, இன்னும் ஒரு படி மேலே சென்றது: அது, சாட்சியக் கட்டளைச் சட்டத்தின் விதிகள் இருந்தபோதிலும், சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில், ஏற்றுக்கொள்ள முடியாத எந்தவொரு ஆதாரத்தையும் ஒப்புக்கொள்வதற்கான வாய்ப்பை, பிரிவு 6 (i) (d), பிரிவு 11 என்பவற்றின் மூலமாக வழங்கியது. இதன் பின்வந்த பிரிவோ, குறிப்பாக ஒரு சந்தேக நபரால் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தையும் அல்லது குற்றச்சாட்டு அறிக்கையையும் ஒப்புக்கொள்வதற்கு வழங்கியது. "எவரொருவரோ, எந்தவொரு சூழ்நிலையிலோ வழங்கிய" சாட்சியம்: பிரிவு 11 (2) (b).

அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம், தடுப்புக்காவலில் வழங்கிய அல்லது ASP பதவிக்குக் குறையாத ஒரு போலீஸ் அதிகாரியிடம் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை என்று குறிப்பிட்டது: பிரிவு 30 G (1).

### நீதித்துறையின் காவலில் இருந்து ஒருவரை வெளியே வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவரை அணுகுவதற்குக் காவல்துறைக்கு உரிமை உண்டு. அத்துடன், விசாரணை நோக்கத்திற்காக அந்த நபரை நியாயமான காலத்துக்கு எந்த இடத்திற்கும் அழைத்துச் செல்லவும், அதற்காக அவரை வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் காவல்துறைக்கு உரிமை உண்டு. இதன் பொருள், ஒரு நபர் ஒப்பீட்டளவில் நீதித்துறையின் காவலிலுள்ள ஒப்பீட்டளவிலான பாதுகாப்பிலிருந்து, மீண்டும் காவல்துறையின் கட்டுப்பாட்டிலும், அவர்களின் தயவிலும் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதே. இந்த உரிமை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7 (3) (a) மூலமாகக் காவல்துறைக்கு வழங்கப்படுகிறது.

1970களில் இருந்ததைப் போலவே, அவசரகால (இதர ஏற்பாடுகளும் மற்றும் அதிகாரங்களும்) விதிமுறைகளிலும் இதே போன்ற ஒரு விதி காணப்பட்டது. எந்தவொரு அவசரகால ஒழுங்குமுறையின் கீழும், கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு நபர், காவல்துறை அல்லது ஆயுதப்படைகளின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த ஓர் அதிகாரியாலும் விசாரிக்கப்பட முடியும். தவிரவும், அவர் தனது தடுப்புக்காவலில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு, ஏழு நாட்கள் வரை அந்த அதிகாரியின் தற்காலிகக் காவலிலும் வைக்கப்படலாம். இதனால் இங்கும் கூட, ஒரு நபர் நீதித்துறையின் காவலில் இருந்து நீக்கப்பட்டு, பாதுகாப்புப் படைகளின் காவலிலும், அவர்களின் தயவிலும் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

உண்மையில் ஏழு நாள் வரம்பு என்பது எத்தகைய முக்கியத்துவமுமற்றது. ஏனென்றால் நடைமுறையில், இது ஒவ்வொரு ஏழு நாட்களுக்கொருமுறை சிறைவாசலால் 'உள்ளே' போய் திரும்பவும் 'வெளியே' வருவதாகவே இருக்கிறது. இதனால் ஒரு கைதி வாரக்கணக்கில் இந்தச் சூழ்நிலையில் வைக்கப்படுவார். 1972 ஆம் ஆண்டின் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் இதேபோன்ற ஒரு விதியைக் கொண்டிருந்தது. சட்டத்தின் கீழ் ஒரு நபர் நீதித்துறையின் காவலில் இருக்கும் காலகட்டத்தில், குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தை விசாரிக்கும் எந்தவொரு காவல்துறை அதிகாரிக்கும், நியாயமான நேரங்களில் அவரை அணுகவும், விசாரணையின் நோக்கங்களுக்காக, அவரை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குக் கொண்டு சென்று விசாரிக்கவும் முடியுமான வகையில் பிரிவு 30B (4) இருந்தது.

### அமைப்புகளைத் தடை செய்தல்

அமைப்புகளைத் தடை செய்வதற்கான எந்த ஏற்பாடுகளையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் நோக்கத்துக்காகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டதிற்கு இருக்கும் சட்டங்களுக்கான சரத்துகளை உருவாக்கும் அதிகாரம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 2001 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பாராளுமன்ற ஒப்புதலைப் பெற, அரசாங்கத்திற்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தபோது, அவசரகால நிலை காலாவதியாகுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதன் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு இருந்த, சட்ட விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரத்தின் கீழ், அவசரகாலச் சட்டம் நிலவிய காலத்தில் இருந்த பல சட்ட விதிமுறைகள் மீளவும் உருவாக்கப்பட்டன. விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைமுறையில் இருந்துவந்து பின் காலாவதியான தடை, 1998 ஆம் ஆண்டு தலதாமாளிகைக் குண்டுவெடிப்புக்குப் பிறகு

அவசரகாலச் சட்டத்தின் மூலம் மீளக் கொண்டுவரப்பட்டதும் இவற்றில் ஒன்றுதான். இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பின்னர் செப்டம்பர் 2002 இல் இரத்துச் செய்யப்பட்டது.

உண்மையில் இந்த விதிமுறை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் எல்லைகளை மீறிய ஒன்றாகவும், எத்தகைய சட்டரீதியான விளைவுகளையும் தரமுடியாத ஒன்றாகவும் இருக்கக்கூடும். உண்மையைச் சொல்வதானால், அந்த விடயம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருந்தபோதும், அவசரகாலச் சட்டத்தின் 68 ஆவது பிரிவும் அதன் உபபிரிவு 2 ஆன, 'தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதையொத்த பிற அமைப்புகளையும் தடைசெய்தல்' ஆகிய இண்டின் மூலமாகவும், அமைப்புகளைத் தடை செய்வதற்கு சட்டத்தில் வழிவகுக்கப்பட்டிருந்தன என்பதைக் காணமுடியும்.

## மரணதண்டனை விலக்கு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள கவனத்துக்குரிய ஒரு நல்ல அம்சம், அதன் கீழ் தண்டனை பெற்ற நபர்கள் மரண தண்டனைக்கு உள்ளாக மாட்டார்கள் என்பது. இச்சட்டத்தின் கீழ், தண்டனைச் சட்டத்தின் (Penal Code) அடிப்படையில் மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்திற்காக ஒருவருக்கு, ஆயுள் தண்டனை வழங்கப்படும். இதே குற்றத்துக்காக, குற்றவியல் நீதி ஆணையச் (Criminal Justice Commision) சட்டத்தின் அடிப்படையில், ஒருவருக்கு "உச்ச நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றம் அல்லது நீதவான் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அவருக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடிய மரண தண்டனையைத் தவிர்ந்த, வேறு எந்த ஒரு தண்டனையையும்" விதிப்பதற்குரிய அதிகாரம் பிரிவு 15 (b) மூலம், ஆணையத்திற்கு அளிக்கப்பட்டிருந்தது. அரசியல் எதிரிகளைத் தியாகிகளாக மாற்றக்கூடாது என்ற விருப்பத்தால் இது தூண்டப்பட்டிருக்கலாம். நீதியின் சாதாரண தரநிலைகளை மிகவும் நீர்த்துப்போகச் செய்தபின் நடாத்தப்பட்ட விசாரணைகளுக்குப் பிறகு, மக்களைத் தூக்கு மேடைக்கு அனுப்புவது நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கொடூரமானது என்பது உணரப்பட்டது.

★இக்கட்டுரையை எழுதிய சூரியா விக்கிரமசிங்க, பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், London school of Economics and Political Science கல்லூரியிலும் பட்டம்பெற்ற ஒரு சட்டத்தரணியாவார். சர்வதேச மனித உரிமை அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக இருந்த இவர், சிவில் உரிமைக்கான இயக்கத்தின் ஸ்தாபகரும் (1971), தற்போதைய, நடேசன் சட்டபூர்வ மனித உரிமைகளுக்கான மையத்தின் செயலாளரும் ஆவார்.

## அடிக்குறிப்புகள்

1. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் எண். 1979.

2. சுதந்திரத்திற்கு முன்பு இயற்றப்பட்டிருந்த சட்டங்கள், கட்டளைகள் என்று அழைக்கப்பட்டன. சுதந்திர அரசியலமைப்பின் கீழ் அவை விதிகள் என்று அழைக்கப்பட்டன. 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு அவற்றைச் சட்டங்கள் என்று பெயரிட்டது, தற்போதைய (1978) அரசியலமைப்பு அவற்றைச் சட்டங்கள் என்று அழைப்பதற்குத் திரும்பியது. மாறிவரும் சொற்களஞ்சியம் அவை எந்த அரசியலமைப்பின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதைப் பிரதிபலிக்கிறது, ஆனால் வேறு எந்த முக்கியத்துவமும் இல்லை.

3. முன்னர் கவர்னர் ஜெனரலாக (பிரதமரின் ஆலோசனையின் பேரில்), பின்னர் ஜனாதிபதியாக (பிரதமரின் ஆலோசனையின் பேரில்), அக்டோபர் 1977 இல் நிர்வாக ஜனாதிபதி பதவி உருவாக்கப்படும் வரை (1972 அரசியலமைப்பின் 2 ஆவது திருத்தத்தின் மூலம்), ஜனாதிபதி அவற்றை முழுமையாக தனது விருப்பப்படி உருவாக்கியதிலிருந்து.

4. அவசரகாலச் சட்ட அறிவிப்பு என்பது பொதுவான பயன்பாட்டில் உள்ள சொற்பதமாகும். தொழில்நுட்ப ரீதியாக இதன் பொருள் என்னவென்றால், ஜனாதிபதி பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியை, செயற்பாட்டுக்குக் கொண்டுவரும் ஒரு பிரகடனத்தை வெளியிடுகிறார் என்பதாகும். இது அவருக்கு சாதாரண சட்டமன்ற நடைமுறைகளைத் தவிர்த்து சட்ட வலிமையைக் கொண்ட அவசரகாலச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை வழங்குகின்றது.

5. அவசரகாலச் சட்டத்தின் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்) ஒழுங்கு முறைகள் இலக்கம் 7, 1975 ஜூலை, 172/13 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

6. வர்த்தமானி எண். 46/7/ஜூலை 24, 1979.




**கார்த்திகேசு இந்திரபாலா**

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.


'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

# அரசியல் தேசியவாதத்துக்கு அடித்தளம் அமைத்த பண்பாட்டு மலர்ச்சி

## விடுதலை இலக்கு இல்லாத தேசியவாதம்

பொன்னம்பலம் அருணாசலம் தொடக்கியது அரசியல் தேசியவாதத்தில் (*Political Nationalism*) அடங்கும். அவர் 1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸை அமைத்து, அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது, அவர் வைத்த இலக்கு அல்லது குறிக்கோள் ஒரு முழுமையான அரசியல் தேசியவாதப் பண்பை வெளிப்படுத்தவில்லை எனலாம்.

அந்நியர் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு நாட்டில் எழும் அரசியல் தேசிய இயக்கம் அந்த நாட்டவரின் விடுதலையை இலக்காக வைப்பது அவசியமாகும். அருணாசலம் கொண்டிருந்த இலக்கு அதுவரை செல்லவில்லை. “பொறுப்புள்ள ஆட்சியைப் பெற்று, இலங்கையைப் பிரித்தானியப் பேரரசின் ஒருங்கிணைந்த பாகமாக” (“*Realization of responsible government in Ceylon as an integral part of the British empire*”) வைத்திருப்பதையே அவர் நோக்கமாகத் தெரிவித்தார். பேரரசில் இருந்து விலகுவது அவர் மனதில் இருக்கவில்லை.

அரசியல் தேசியவாதத்துக்கு மிகவும் முக்கியமான இன்னொரு இலக்கு நாட்டின் பல்வகைப்பட்ட மக்கள் குழுக்களின் தேசிய அடையாளம் மற்றும் ஒற்றுமை ஆகியவை தொடர்பான ஓர் உணர்வை வளர்த்தல் (*Sense of National Identity and Unity*) ஆகும். இதனையும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் செய்யத் தவறியது.

## மொழிசார் மறுமலர்ச்சி

இதே வேளையில் சிங்கள மக்கள் மத்தியில் அநகாரிக தர்மபால தொடக்கிய சமயம்சார் தேசியவாதம் (*Religious Nationalism*) தடையின்றிப் பரவலாக வளர்ந்து கொண்டிருந்தது. பௌத்த மக்களுடைய கடந்தகாலச் சிறப்பை மீட்சி செய்ய (*To Reclaim the Past*) அநகாரிக செயற்பட்டுக் கொண்டிருந்தார். இவருடைய இயக்கத்தின் நோக்கம் பௌத்தம் முன்பு அனுபவித்த மேலாதிக்கத்தை மீண்டும் நிலைப்படுத்துவதுடன், அது இழந்த சமயத் தலங்களை மீண்டும் பௌத்தர் கைக்குக் கொண்டுவந்து சீர்படுத்துவதாகும்.

இவரைப் போன்று இன்னொருவர் 1920களில் இன்னொரு துறையில் கடந்தகாலச் சிறப்பினை மீட்சி செய்யும் நோக்குடன் தீவிரமாகச் செயலாற்றத் தொடங்கினார். இவர் மொழிசார் இயக்கம் ஒன்றைத் தொடக்கிய முனிதாஸ குமாரத்துங்க என்பவராவார். பழைய சிங்களமாகிய ஹெள மொழியை மீண்டும் வழங்கச் செய்து, பிறமொழிப் பாதிப்பால் (அவர் கணிப்பில்) மாசு படிந்து காணப்பட்ட சிங்கள மொழியை மாசுநீக்கி மீளமைப்பது (*Restore the Lost Hela Language*) இவர் குறிக்கோளாகும்.

இதற்கு முன்னர் பாளி மற்றும் சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகள் சார்ந்த மறுமலர்ச்சி தொடங்கிவிட்டது. அத்துடன் பழைய சிங்கள இலக்கிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் செயலும் நடைபெற்றது. இவை எல்லாம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இடம்பெற்ற பௌத்த மறுமலர்ச்சியுடன் தொடர்புடையவையாகப் பௌத்த கல்வி நிறுவனங்களில் (பிரிவெனக்களில்), சிறப்பாகப் புதிதாக நிறுவப்பட்ட வித்தியோதய மற்றும் வித்தியாலங்கார பிரிவெனக் கல்லூரிகளில், ஆர்வமுடன் நிகழ்ந்தன.

இவற்றைவிட, முக்கியமாகக் கவனிக்கத்தக்க வகையில் நுண்கலைத் துறையில் புதிய மலர்ச்சி காணப்பட்டது. மொழி, இலக்கியம், சமயம் ஆகியவை தொடர்பாக இடம்பெற்ற செயற்பாடுகளை மறுமலர்ச்சிக்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் எனலாம். ஏனெனில் இத்துறைகள் முன் பெற்றிருந்த நிலையை இழந்திருந்தபடியால் அந்த நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், பழைய சிங்களப் பண்பாட்டில் இசை, நடனம், நாடகம் ஆகியவை உயர் சமூகத்தின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. சைவ, வைஷ்ணவ மதங்களைப் பொறுத்தமட்டில், இக்கலைகள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றுக் கோயில்களில் வளர்க்கப்பட்டன. பௌத்த வழிபாட்டில் இவை அத்தகைய இடத்தைப் பெறவில்லை.

தேசிய உணர்வு 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து மெதுவாக எழத் தொடங்கியபோது நுண்கலைத் துறையிலும் ஒரு தனித்துவ அடையாளம் சிங்கள மக்களுக்குத் தேவை என்று, அதனை உருவாக்க (*Quest for a New Identity*) சிலர் ஆர்வம் கொண்டனர். அவர்களுள் முதலிடம் பெறுபவர் ஜோன் த சில்வா என்பவர். இவர் 1903 இல் ஸிங்ஹள ஆர்ய ஸுபோத நாட்ய ஸபா என்ற பெயரில் ஒரு நாடக சபையை நிறுவி சிங்கள நாடகங்கள் மூலம் பண்பாட்டை வளர்க்கும் செயற்பாடுகளைத் தொடங்கினார்.

பாரம்பரிய சிங்கள இசை வட இந்திய இசை மரபில் இருந்து பெறப்பட்டது என்ற (தவறான) கோட்பாட்டை ஜோன் த சில்வா முன்வைத்து, ஹிந்துஸ்தானி இராகங்களுக்கு அமைய, சிங்களப் பாடல்களை இயற்றி அரங்கேற்றினார். இவ்வாறாகச் சிங்கள இசைக்கு ஒரு புதிய அடையாளத்தை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இப்படியாக 20 ஆம் நூற்றாண்டின் முதல் காலில் சிங்கள சமூகத்தில் எழுச்சிபெற்ற சமயம், மொழி, பண்பாடு சார்ந்த இயக்கங்கள் பின்னர் எழும் அரசியல் தேசியவாதத்துக்கு அடித்தளம் அமைத்தன.

## சிங்கள இயக்கங்களும் யாழ்ப்பாணமும்

இந்த வரலாற்றுப் போக்கினை மேலும் விரித்துக் கூறுமுன், இதனை ஏன் யாழ்ப்பாணத்தைப் பற்றிய இத் தொடர் கட்டுரைகளில் கூறவேண்டி உள்ளது என்பதைச் சிறிது விளக்கவேண்டும்.

இலங்கையின் தென்பாகத்தில் 20 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் நடைபெற்ற மிக முக்கியமான நிகழ்வு என்னவெனில் நாட்டின் நவீன வரலாற்றின் போக்கினை நிர்ணயிக்கும் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் எழுச்சி ஆகும். இதே நூற்றாண்டின் பிற்பாதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது தெற்கில் தோன்றிய இத்தேசியவாதம் கொடுத்த சவாலுக்கு (Challenge) யாழ்ப்பாணத்து அரசிய தலைவர்கள் தெரிவித்த சவால் ஏற்பு (Response) ஆகும். இக்காரணத்துக்காக, இச்சவால் எவ்வாறு சிறுபான்மைத் தலைவர்கள் அறிந்துகொள்ளாத வகையில் சத்தமின்றி வலுப்பெற்று, 1950களில் வெடித்து வெளிப்பட்டது என்பதை அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

## பண்பாட்டு மலர்ச்சி

இந்திய அறிஞர் பேராசிரியர் பார்தா சட்டர்ஜி (Prof. Partha Chatterjee) தெரிவித்த ஒரு கருத்தை இங்கு கூறுவது பொருத்தமாகும். காலனியாட்சி நடைபெற்ற நாடுகளில் அரசியல் தேசியவாதம் தோன்றுமுன் முன்னோட்ட நிகழ்வாக (Antecedent) பண்பாட்டுச் சீர்திருத்தம் நடைபெறுகிறது. காலனித்துவத்தால் மாசுபடாத ஒரு தூய பண்பாடு முன்னர் தங்களுக்கு இருந்ததாகச் சுதேச அறிவுத்திறனாளர் கற்பனை செய்து, அதனை மீண்டும் மலரச் செய்வதற்கு முயல்கிறார்கள். இது சட்டர்ஜி முன்வைக்கும் கருத்து. அரசியலிலும் பொருளியலிலும் தங்கள் நாட்டில் அந்நியர் ஆதிக்கம் பெற்றிருந்தபோதிலும், பண்பாட்டுப் புலத்தில் தங்கள் ஆதிக்கத்தை இழக்காதவராய், அந்நியர் தாக்கத்தைத் தடுத்துப் பழைய பண்பாட்டை மீண்டும் மலரச் செய்ய முயல்வதற்கு, சுதந்திரமாக இவர்கள் அந்நியர் ஆதிக்கம் இன்றிச் செயல்படுகிறார்கள்.

பேராசிரியர் சட்டர்ஜி தனக்கு நன்கு அறியக்கூடியதாய் இருந்த வங்காளப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை வைத்துத் தன் கருத்தை முன்வைத்தார். இலங்கையில் 20 ஆம் நூற்றாண்டின் முதல் காலில் நடந்தவற்றை நோக்கினால் அவை சட்டர்ஜியின் கருத்துக்குப் பொருத்தமானவையாக அமைவதைக் காணலாம். அரசியல் தேசியவாதம் எழுமுன், சமயம் மற்றும் பண்பாட்டுப் புலங்களில் இலங்கையர் அந்நியருக்குக் கீழ்ப்படியாது தங்கள் ஆதிக்கத்தை மீளப்பெற்றனர் எனலாம்.

## சமயப் புலம்

கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு 19 ஆம் நூற்றாண்டின் பெரும்பாகத்தில் மேலோங்கி வளர, பௌத்தமும் சைவமும் வலு இழந்த நிலையில் காணப்பட்டன. மிஷனரிமாருடைய செயற்பாடுகள் இரண்டு மதங்களுக்கும் கடும் சவாலாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட நிலைமை பிற இடங்களில் இருந்ததை விடப் பெரிதும் வேறுபட்டு இருந்தது. இங்கு அமெரிக்க மிஷனரிமார் ஊர்ப்புறங்களில் பாடசாலைகளை அமைத்துக் கல்வி மூலம் கிறிஸ்தவப் பிரசாரத்தை நடத்தினர். தமிழைக் கற்று, ஊரூராகச் சென்று சைவ வழிபாட்டுமுறைகளை விமர்சித்தனர். ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்குச் சிறப்புப் பாடசாலைகளை நிறுவினர். ஆங்கிலக் கல்வி அரச நிர்வாகத்தில் தொழில் பெற்று சமூகத்தில் மேல் எழ வாய்ப்புக் கொடுப்பதைக் கண்டதும் யாழ்ப்பாணத்தவர் மிஷனரிமாருடைய பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பினர்.

மிஷனரிமாருடைய செல்வாக்கு வளரத் தொடங்க சைவப் பிரமுகர்கள் அதனைத் தணிப்பதற்கு முயற்சி எடுத்தனர். இவர்களுள் முன்னிலையில் காணப்பட்டவர் ஆறுமுக நாவலர். நாவலர் சைவ சமயத்தை வளர்க்க, மிஷனரிமார் வெற்றிகரமாகப் பயன்படுத்திய செயல்முறைகளைக் கையாண்டு தன் சமயச் செயற்பாடுகளை நவீனமயப்படுத்தினார் (Modern ization).

சைவப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. நாவலர் 1848 இல் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் திறந்துவைத்தார். அதைத் தொடர்ந்து, அச்சு இயந்திரம் ஒன்றை வாங்கி, சைவ நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு, கிறிஸ்தவப் பிரசாரத்தை எதிர்க்கும் இயக்கத்தை நடத்தினார். ஆங்கிலக் கல்வியையும் புவியியல் போன்ற நவீன பாடங்களையும் நாவலர் வற்புறுத்தி, ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையையும் நிறுவினார்.

நாவலருக்குப் பின்பும் சைவப் பிரமுகர்கள் கல்வித் துறையில் தொடர்ந்து வளர்ச்சிக்காகப் பல முயற்சிகளை எடுத்தனர். யாழ்ப்பாணக் கல்லூரி போன்ற கிறிஸ்தவக் கல்லூரிகள் உயர்கல்விக்கான வசதிகளைக் கொடுத்ததுபோல், சைவ இளைஞர்களுக்கு ஆங்கில மேற்படிப்புக்கு வழிவகுக்க 1890 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நிறுவினர். அங்கு

கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் இளமாணிப் பட்டப் பரீட்சைகளுக்கு மாணவர் தயாராக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து நகருக்கு வெளியே சைவ மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற நடுநிலைப் பாடசாலைகளை அமைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவற்றின் விளைவாகக் கொக்குவில், சாவகச்சேரி ஆகிய ஊர்களில் சைவப் பாடசாலைகள் தொடக்கப்பட்டு, அவை பின்னர் அவ்விடங்களின் இந்துக் கல்லூரிகளாக உயர்வு பெற்றன.

கல்வித் துறையில் இந்த முயற்சிகளை மேற்கொள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கம் (Hindu Board of Educa tion) என்ற ஒரு சபை உருவாக்கப்பட்டது. சைவ பரிபாலன சபை என்ற இன்னொரு கழகம் சைவத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கும் சைவப் பாடசாலைகளை நிறுவுவதற்கும் 1888 இல் அமைக்கப்பட்டது. இச்சபை 1889 இல் இருந்து இந்து சாதனம் என்ற செய்தித்தாளையும் வெளியிடத் தொடங்கியது.

சைவப் பாடசாலைகள் ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கின. பெண் பிள்ளைகளுக்கு ஒரு தனியான பாடசாலையை நிறுவுவதற்குப் பொன்னம்பலம் இராமநாதன் முன்வந்து 1913 இல் சைவப் பெண்களுக்கான முதலாவது பாடசாலையை, இராமநாதன் கல்லூரியை, நிறுவினார். இந்த நிறுவனத்தின் முதலாவது அதிபராக இங்கிலாந்தில் இருந்து புளோரென்ஸ் பார் (Florence Farr) என்ற பெண்மணி வருவிக்கப்பட்டார்.

இராமநாதன் சில ஆண்டுகளின் பின்னர், 1917 இல், சைவ ஆண் பிள்ளைகளுக்கும் ஒரு கல்லூரியைத் திருநெல்வேலியில் (பரமேஸ்வராக் கல்லூரி) அமைத்தார். சைவப் பிள்ளைகளுக்கான கல்வி வசதிகள் மேலும் வளர, 1928 இல் ஒரு தனியான சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் அமைக்கப்பட்டது.

## பௌத்தர் கல்வி

இலங்கையின் தென்பாகத்தில் கல்வித்துறையில் தொடக்கத்தில் வேறான சூழ்நிலை காணப்பட்டது. கொழும்பிலோ வெளி இடங்களிலோ பாடசாலைகளை அமைப்பதில் மிஷனரிமார் அக்கறை காட்டவில்லை. கண்டி அரசைக் கைப்பற்றியபோது பிரித்தானிய காலனித்துவ அரசு கண்டியர் தலைவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு உறுதி அளித்திருந்தது. இதனால் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு மிஷனரிமாருக்கு அரசு ஊக்கம் கொடுக்கவில்லை. மறு பக்கத்தில், பௌத்தர்களும் தங்கள் மதத்துக்கு மிஷனரிமார் சேதம் விளைவிப்பதாகக் கருதவில்லை.

இந்த நிலை 1850 இன் பின் மாறுவதைக் காணலாம். கண்டி உடன்படிக்கையில் கொடுத்த வாக்குறுதியை 1840களில் காலனித்துவ அரசு கைவிடத் தொடங்கியது. இதற்கு, மிஷனரிமாருடைய அழுத்தத்துடன் வேறு காரணங்களும் இருந்திருக்கலாம். பௌத்தர்களும் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தை எதிர்க்கத் தொடங்கினர்.

மிஷனரிமார் பிரதான நகர்களாகிய கொழும்பு, காலி, கண்டி ஆகிய இடங்களில் கல்வி நிறுவனங்களை அமைக்கத் தொடங்கினர். பின்னர் பிரபல கிறிஸ்தவக் கல்லூரிகளாக விளங்கும் நிறுவனங்கள் 1850க்குப் பின்னரே கட்டப்பட்டன: கொழும்பில் St. Thomas College (கல்கிசையில் 1851), Methodist College (1866), Wesley College (1874), St. Joseph's College (1896), காலியில் Richmond College (1876), St. Aloysius College (1895), கண்டியில் Trinity College (1872).

கிறிஸ்தவர்களுடைய செயற்பாடுகள் வலுப்பெற, பௌத்தர்களும் மிஷனரிமாருடைய தாக்குதல்களை எதிர்த்து எழத் தொடங்கினர். இவர்களுடைய எதிர்ப்பியக்கத்தை முன்னின்று நடத்திச் செல்ல வந்தவர்கள் பௌத்த பிக்குகள். பாரம்பரியமாக ஊர் ஆச்சிரமத்தில் (பன்ஸல) இருந்துகொண்டே பக்தியுடைய ஊர் மக்களுக்கு உபதேசம் செய்து வந்த பௌத்த துறவிகள் வெளியே வந்து தம் மதத்தைக் காக்க மிஷனரிமாருடன் வாதில் ஈடுபடத் தொடங்கினர். இந்த நிலையில் இருந்து பின்னர் அநகாரிக தர்மபாலவின் முயற்சிகளால் இலங்கையில் பௌத்த பிக்கு ஓர் அரசியல் பிக்குவாக மாறுவதைக் காணலாம்.

இப்படி எழுந்த பிக்குத் தலைவர்களுள் முக்கியமானவர்கள் மிகெற்றுவத்தே குணானந்த தேரர் ( ), ஹிக்கடுவே ஸுமங்கல தேரர் ( ) ஆகியோராவர். சிறப்பாக, குணானந்த தேரர், ஆறுமுக நாவலரைப் போன்று, அச்சியந்திரம் ஒன்றை அமைத்துக் கிறிஸ்தவர்களுடைய கண்டனங்களை மறுக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு, மிஷனரிமாருடைய செயல்முறைகளைப் பௌத்த இயக்கத்தில் பயன்படுத்தினார். அவருக்கு மிகவும் புகழைக் கொடுத்தது அவர் கிறிஸ்தவர்களுடன் நடத்திய பகிரங்க வாதுக்கள் ஆகும். இவற்றுள் மிகவும் பிரசித்திபெற்றது பாணந்துறையில் 1873 இல் நடைபெற்ற நிகழ்ச்சி ஆகும்.

இந்த நிகழ்வுகளுக்குப் பின் பௌத்தர்களுடைய கல்விப்புலத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நவீன பௌத்தத்தின் எழுச்சியில் ஒரு முக்கியமான திருப்பம் 1880 இல் ஏற்பட்டது. அந்த ஆண்டில் அமெரிக்காவில் இருந்து இரு பிரமுகர்கள் இலங்கைக்கு வந்தனர். ஒருவர் அமெரிக்கரான ஹென்றி ஒல்கொட்

(Henry Steel Olcott, 1832-1907); மற்றவர் ருஷ்யரான ஹெலெனா பிளவற்ஸ்கி அம்மையார் (Madame Helena Blavatsky, 1831-1891).

இருவரும் தாமதம் இன்றிப் பௌத்தத்தை ஏற்றனர். பௌத்தர்களுடைய மிஷனரி எதிர்ப்பியக்கம் வாதுக்களுடனும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதுடனும் நின்றுவிடுவதை ஒல்கொட் கண்டார். இயக்கத்தை முன் நோக்கி வழிநடத்திச் செல்லத் திறமையுடைய தலைவர் (Leader) இருக்கவில்லை. வெற்றிடத்தை ஒல்கொட் நிரப்பிக்கொண்டார். இயக்கம் வெற்றிபெற வேண்டுமாயின், மிஷனரிமாருடைய செயல்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் நம்பினார். "எங்கள் வலுவை எப்படி ஒழுங்கமைத்து நாம் செயல்பட வேண்டும் என்று நீங்கள் என்னைக் கேட்பீர்களாயின், உங்கள் பெரும் எதிரியாகிய கிறிஸ்தவத்தைச் சுட்டிக் காட்டுவேன்" என்று பௌத்தர்களை விளித்துக்கூறி, கிறிஸ்தவர்களைப் போன்று ஞாயிற்றுப் பள்ளிகள் (Sunday Schools), கழகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றை அமைப்பதற்கு ஒல்கொட் பௌத்தர்களுக்கு உதவினார்.



மிகெற்றுவத்தே குணானந்த தேரர்
Image Source - en.wikipedia.org

கல்விப்புலத்தில் கிறிஸ்தவர்கள் அனுபவித்த ஆதிக்கத்தை முறியடிப்பது அவசியம் என்பதை உணர்ந்து, ஒல்கொட் பௌத்த இறையியல் சபையை (Buddhist Theosophical Society - BTS) முதலில் (1880 இல்) அமைத்து, அதன்மூலம் பௌத்தப் பாடசாலைகள் பரவலாகத் திறக்கப்படுவதற்கு வழிவகுத்தார். பௌத்தர்களின் பிரதம கல்லூரியாகிய ஆனந்தக் கல்லூரி (Ananda College) கொழும்பில் 1886 இல் நிறுவப்பட்டது. அதன் முதல் அதிபராக ஓர் ஆங்கிலேயர் (C.W. Leadbeater) நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, கண்டியில் தர்மராஜக் கல்லூரி (1887), காலியில் மஹிந்தக் கல்லூரி (1892) ஆகியவை திறக்கப்பட்டன. பெருநகர்களுக்கு வெளியேயும் பல பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இதன் விளைவாக, 1900 வரை BTS நிறுவனத்தால் 142 பாடசாலைகள் திறக்கப்பட்டிருந்தன. துரிதமாக இடம்பெற்ற பிற நிகழ்வுகளுள் குறிப்பிடத்தக்கவை: 1) இளைஞர்களை ஒன்றுகூட்டிப் பௌத்தச் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதற்கு பௌத்த இளைஞர் கழகம் (Young Men's Buddhist Association - YMBA) என்ற சபையை (கிறிஸ்தவர்களுடைய Young Men's Christian Association - YMCA போன்று) நிறுவியமை; 2) புத்தர் பிறந்த வைசாகப் பெருநாளை (வெஸக்) அரசாங்கம் விடுமுறை நாளாக்க வேண்டும் என 1880 இல் அழுத்த இயக்கம் ஒன்றைத் தொடங்கி, 1885 இல் விடுமுறை வழங்க வழிவகுத்தமை; 3) பௌத்தர்களுடைய செய்தித்தாளாக ஸரஸவி ஸந்தரஸ ( ) தொடக்கப்பட்டமை; 4) பௌத்த மதக் கொடி (Buddhist Flag) ஒன்றை 1885 இல் உருவாக்கியமை.

பௌத்தர்களுடைய செயற்பாடுகள் ஒரு தேசிய இயக்கத்தின் பண்புகளைப் பெறத் தொடங்கின எனலாம். பௌத்த சமயக் கொடி ஒரு தேசியவாதச் சின்னம் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு வெற்றிகரமாக வளரத் தொடங்கிய பௌத்த எழுச்சி இயக்கம் வெகு விரைவில் அநகாரிக தர்மபால கொடுத்த வழிநடத்திச் செல்லும் தலைமைத்துவத்தைப் பெற்றது. இவர் இந்த இயக்கத்தை ஓர் அனைத்துலக எழுச்சியாக மாற்றுவதற்குப் பெரிதும் உழைத்தார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், தர்மபால சமயத்தையும் இனத்தையும் இணைத்து ஒரு நவீன கருத்தியலை உருவாக்கினார். ஒல்கொட் வழிநடத்திச் சென்ற தலைமைத்துவத்தில் வெறும் பௌத்த எழுச்சியாக முன் நோக்கிச் சென்ற இயக்கம், தர்மபால வழிநடத்தலில் சிங்கள - பௌத்த இயக்கமாக மாறியது.

இதேவேளையில், மொழியும் கலையும் இணைந்த பண்பாட்டுப் புலத்தில் அந்நியர் ஆதிக்கத்தின் தலையீடு இன்றி, சுதந்திரமாக ஆரவாரம் இல்லாது மலர்ச்சி ஒன்று நடைபெற்றது. இதன் விளைவாக, தர்மபால விட்ட இடத்தில் இருந்து இலங்கையின் பௌத்த இயக்கமானது மொழியையும் இணைத்து, சமயம் - இனம் - மொழி சார்ந்த இயக்கமாக உருவெடுத்தது. இலங்கையர் பெயரில் காலம் தாமதித்து எழுந்த அரசியல் தேசியவாதம் (Ceylonese Nationalism) எதிர்நோக்க வேண்டி இருந்தது இதுதான். இதனை அடுத்துப் பார்க்கலாம்.

# யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்குச் சமீபத்திலுள்ள ஆதிக்குடியேற்றங்கள்




சிவ தியாகராஜா

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE 800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.


யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் 'பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்' என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.

இந்தத் தொடரில் ஆய்வு செய்யப்படும் யாழ்ப்பாணப் பகுதி தொல்லியல் மையங்கள்:

1. கந்தரோடை 2. ஆனைக்கோட்டை 3. யாழ்ப்பாணம் கோட்டை 4. வல்லிபுரம் 5. பூநகரி 6. காரைநகர் 7. வேலணை: அல்லைப்பிட்டி - சாட்டி 9. புங்குடுதீவு 10. நயினாதீவு 11. நெடுந்தீவு

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்குச் சமீபத்திலுள்ள ஆதிகாலக் குடியிருப்புகள் அமைந்த நிலங்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

I. யாழ்ப்பாணத்திற்கு மேற்கே பாக்கு நீரிணையிலுள்ள சிறிய தீவுகள்.

II. யாழ்ப்பாணக் கடலேரிக்குத் தெற்கே இலங்கையின் பெருநிலத்திலுள்ள பூநகரி.

I

## சிறிய தீவுகளில் ஆதிக்குடியேற்றங்கள்

### காரைநகர்

யாழ்ப்பாணத் தீபகத்திற்கு மேற்கே பாக்கு நீரிணையில் உள்ள தீவுகளில் மிகவும் வடக்கு நோக்கி அமைந்திருப்பது காரைநகர். முற்காலத்தில் இது காரைதீவு என அழைக்கப்பட்டது. இத்தீவின் கிழக்கு, தெற்குக் கரைகள் யாழ்ப்பாணக் கடல்நீரேரியின் நுழைவாயிலைக் கட்டுப்படுத்தியும், மேற்குக் கரையோரம் பாக்கு நீரிணையை நோக்கியும் காணப்படுகின்றன. கிறிஸ்தாப்த காலத்திற்குரிய ஜாதகக் கதைகள் இத்தீவை காரதீப எனவும், இத்தீவிற்கும் காவிரிப்பட்டினத்திற்கும், வங்காளத்திலிருந்த தாம்ரலிப்திக்கும் இடையே இருந்த கடல் தொடர்புகளைப் பற்றியும் பேசுகின்றன. காரைநகரின் களபூமிப் பகுதியில் அமைந்த சந்திராந்தை, பெருங்கற் பண்பாட்டுப் புதையல்களைக் கொண்ட ஒரு தொல்லியல் மையமாகும்.

### சந்திராந்தை பெருங்கற் பண்பாட்டு மையம்

### தொல்லியல் அகழ்வாய்வுகள் - 1981

சந்திராந்தை பெருங்கற் பண்பாட்டு மையம் காரைநகர் தீவில் களபூமி என்னும் பகுதியில் உள்ளது. சந்திராந்தையில் இன்றைய சுந்தரமூர்த்தி வித்தியாலயம் எனப்படும் சிறுவர் பாடசாலைக்குச் சமீபமாக பெருங்கற்காலப் புதையல்களைக் கொண்ட மையம் 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. நெல் வயல்களை அடுத்து மேடாக உள்ள இந்நிலம் முன்னர் அமெரிக்க மிஷனரிமார்களின் சொத்தாக இருந்து, பின்னர் ஐந்து பங்காகப் பிரிக்கப்பட்டு தனியார் நில உடைமையாளர்களுக்கு விற்கப்பட்டது. இவர்கள் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக அத்திவாரம் தோண்டிய பொழுதில் அவ்விடத்தில் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் வெளிவந்ததாக ஊர்ப் பேச்சுகள் வெளிவந்திருந்தன.

1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், கலாநிதி இரகுபதியினதும் அவரது சகாக்களினதும் தலைமையில் இவ்விடத்தில் மேலாய்வுகளை மேற்கொண்ட பொழுதில் திரு. கந்தசாமி என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் டிராக்டர் மண்ணை அகழ்ந்த குழிகளில் பலதரப்பட்ட ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள் காணப்பட்டன. இவ்விடத்திலுள்ள தொல்பொருள் சான்றுகள் முற்றாக அழிக்கப்படும் முன்னர் இங்கே ஒரு தொல்லியல் மீட்பாய்வு (Rescue Operation) மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது (Ragupathy, P. 1987: 43– 44, 128).

இது விரைவாகச் செய்து முடிக்க வேண்டிய ஒரு செயற்பாடாக இருந்தமையால் குழிகள் அவசரமாகத் தோண்டப்பட்டன. பேராசிரியர் இந்திரபாலாவின் வழிநடத்தலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறைக் குழுவினர் ஜனவரி 1981 இல் முதலாவது (A) குழியையும், ஒக்ரோபர் 1981 இல் இரண்டாவது (B) குழியையும் அகழ்ந்தார்கள்.

### முதலாவது குழி

இங்கே அகழ்வாய்வு செய்யப்பட்ட முதலாவது குழி (Trench A) 10 x 10 அடி சதுரத்தில் திரு. கந்தசாமியின் காணியின் வடமேற்கு மூலையிலிருந்த உயர்ந்த மேட்டில் அகழப்பெற்றது. மேட்டின் உச்சிப் பகுதியிலிருந்து 5 அடிக்கும் கீழே, அருகிலிருந்த நெல் வயல்களுக்கு 3 அடிக்கு மேலே அகழ்வுக்குழி ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே இவ்விடத்தில் மண் அகழப்பெற்ற ஒரு மீட்பாய்வு அகழ்வாக இது இருந்தமையால் இதில் காணும் மண் மட்டங்களை சரியான அடுக்கமைவுப் படுகை எனக் கூற இயலாது.

மேலிருந்து கீழாக மூன்று நில அடுக்குகள் இனம் காணப்பட்டன. மேலிருந்த முதலாவது அடுக்கில் மண் ஐதாகவும், மென்மையான மண்ணிறத்திலும் இருந்தது. இந்த அடுக்கில் ஒரு தனியான மண்டை ஓடு, மற்றைய தொடர் எலும்புகள் சிலவற்றோடு கண்டெடுக்கப்பட்டது. இரண்டாவது அடுக்கு இரண்டடி ஆழம்வரை சென்றது. இந்த அடுக்கில் எலும்புப் பகுதிகளும், ஈமப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. அடுத்து வந்த மூன்றாவது அடுக்கு அடியிலிருந்த சுண்ணாம்புக்கல் மட்டம் வரை சென்றது.

**ஈமப் புதையல்**

முதலாவது குழியில் இரண்டு மண் அடுக்குகளில் இரு எலும்புப் பகுதிகள் காணப்பட்டன. இரண்டாவது அடுக்கில் காணப்பட்ட எலும்புகள் முற்றாக அழுகிய நிலையில் இருந்தமையால் அவற்றின் மிகுதிப் பகுதிகள் (Residues) மட்டுமே காணப்பட்டன. இவற்றோடு மட்பாண்டங்களும், ஈமப் படையற் பொருட்களும் காணப்பட்டன. ஈம வழிபாட்டு படையற் பொருட்கள் ஆனைக்கோட்டை அகழ்வுகளில் கண்டது போல மீன் எலும்புகள், நண்டு ஓடுகள், சிப்பிகள், பலவகை மிருக எலும்புகள், கால்நடைகளின் பற்கள் என்பனவாகும். இவை மட்பாண்டங்களினுள்ளே வைத்துப் புதைக்கப்பட்டிருந்தன. இந்த மட்பாண்டங்கள் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் ஆகியனவாகும். இவற்றோடு ஒரு நுண்கற் சீவலும் காணப்பட்டது (Ragupathy, P. 1987: 128– 132).

**இரண்டாவது குழி**

1981 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அகழப்பெற்ற இரண்டாவது ஆய்வுக் குழி திரு. கந்தசாமியின் காணியில் தென் பக்கத்தில் அங்கிருந்த வீட்டிற்கும் எல்லை வேலிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்தது. இங்கிருந்த நிலம் கடைசித் தொற்றுநோய் பரவற்கால புதையற்களால் போலும் கிளறப்பட்டிருந்தது. இவ்விடத்தில் 10 x 10 அடிச் சதுரக் குழி தோண்டப்பட்டது. இக்குழியில் எட்டு முழுமையான எலும்புக்கூடுகளும், ஏனைய எலும்புகளின் பகுதிகளும் ஓர் ஒழுங்கில்லாமல் தாறுமாறாகப் புதைக்கப்பட்டிருந்தன. இதில் கலைக்கப்பட்ட மண் அடுக்குகளில் ஆரம்பகால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், மற்றும் ஆரம்பகால மட்கலன்கள், கல்மணிகள் என்பன காணப்பட்டன (Ragupathy, 1987: 128– 132).

**கண்டுபிடிப்புகள்**

இரண்டாவது குழியில் கண்டெடுக்கப்பட்ட ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆறு ஆதிகால மையங்களில் கண்டெடுத்த மட்பாண்டங்கள் போன்றவையாகும். ஆனாலும் இந்த மட்பாண்டங்கள்கள் கந்தரோடை, ஆனைக்கோட்டை மட்கலன்களைப் போல மிருதுவாக, வழவழப்பாக இல்லை; சற்றுக் கரடுமுரடாகவே உள்ளன.

முதலாவது குழியிற் கண்ட மட்பாண்ட ஓடுகளில் மூன்றில் எழுத்து வடிவங்கள் காணப்பட்டன. ஒன்றில் 'ம' எனும் பிராமி எழுத்து வடிவமும் மற்றதில் இரட்டைச் சூல வடிவமும், மூன்றாவதில் அடைப்புக் குறிக்குள் கோட்டு வடிவமான மீன் சின்னமும் காணப்படுகின்றன.

இத்தொல்லியலகத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் மிகச் சரியான காலத்தை நவீன கதிரியக்கச் சாதனங்களின் துணையின்றிக் கண்டுபிடிப்பது கடினமான காரியம். ஆனாலும் இதில் கண்டெடுக்கப்பட்ட கரடுமுரடான ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகளும், ஈமப் படையலாக வைக்கப்பட்டிருந்த நுண்கற் சீவலும் இவற்றின் காலத்தை கி.மு. முதலாம் நூற்றாண்டிற்கு எடுத்துச் செல்கின்றன. இவ்விடத்திலுள்ள மண்மேட்டில் மேற்கொள்ளப்படும் முறையான தொல்லியல் அகழ்வாய்வும், அறிவியல் ரீதியிலான கதிரியக்கத் தேதிக் கணிப்புகளுமே இம்மையத்தில் ஆதிக்குடியேற்றங்கள் பற்றிய சரியான தகவல்களைத் தரும் (Ragupathy, P. 1987: 130).

**ஊர்காவற்துறை - வேலணை**

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கே, காரைநகருக்குத் தெற்கே அமைந்தீருக்கும் தீவு ஊர்காவற்துறை (Kayts). இத்தீவு வேலணைத்தீவு எனவும் அழைக்கப்படுகிறது. இத்தீவில் வேலணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, புளியங்கூடல், சுருவில், நாரந்தனை, கரம்பொன் ஆகிய கிராமங்கள் உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அருகாமையில் அமைந்த தீவகங்களில் ஆரம்பகால மக்கள் குடியேற்றங்கள் ஏற்பட்ட இடங்களில் இது முக்கியமானதொன்றாகும். இது மிகப் பரந்த விவசாய நிலங்களையும், புல் நிறைந்த மேய்ச்சல் நிலங்களையும், ஆண்டு தோறும் எல்லாப் பருவங்களிலும் கிடைக்கும் நன்னீர் வளங்களையும், கடல்நீரேரியில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளும் வாய்ப்பு வளங்களையும், கடல்வழி வர்த்தகத்தைக் கொண்டு நடத்தும் ஆற்றலையும் கொண்டிருக்கிறது.

இந்தத் தீவின் வடமுனையிலிருந்த ஊர்காவற்துறைத் துறைமுகம் யாழ்ப்பாணக் கடலேரிக்கும் மற்றைய தீவுகளுக்கும் செல்லும் கடல்வழிப் பாதையைக் கட்டுப்படுத்துவதாகவும், போர்த்திற நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய கேந்திர மையத்தில் அமைந்திருப்பதாகவும் மத்திய காலப் பதிவேடுகளும், கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன (Ragupathy, P. 1987: 26; Indrapala, K. 1969; Pieris, P.E. 1920).

ஊர்காவற்துறைக்கு வடக்கே ஊர்காவற்துறைக்கும் காரைநகருக்கும் இடையே அமைந்த சிறிய தீவில் 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக்

குடாவின் கடல்வழி நுழைவாயிலைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு கோட்டையை அமைத்து அங்கே தங்கள் போர் வீரர்களைத் தங்க வைத்தார்கள். அதற்கு ‘அரச கோட்டை’ (Fort Royal) எனப் பெயரிட்டார்கள். 1658 இல் இக்கோட்டையை போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய டச்சுக்காரர், இதைத் திருத்தியமைத்து, கோட்டை வாசல்வரை செல்லக்கூடிய கடல்வழியையும் அமைத்து, அதற்கு ‘அம்மன்னீஸ் கோட்டை’ (Fort Hammenhiel) எனப் பெயரிட்டார்கள். அங்கே ஓர் இராணுவப் பிரிவையும் நிறுத்தியிருந்தார்கள். இக்கோட்டையை டச்சுக்காரரரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர்கள் இதை முதலில் ஓர் உச்சவரம்புப் பாதுகாப்புச் சிறைச்சாலையாகவும், பின்னர் ஒரு தொற்றுநோய் மருத்துவ நிலையமாகவும் உபயோகித்தார்கள். இக்கோட்டை டச்சுக்காரர் கொடுத்த பெயரினாலேயே இன்றுவரை அழைக்கப்பட்டு வருகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முதலில் ஒரு சிறைச்சாலையாக உபயோகப்படுத்தப்பட்ட இக்கோட்டை சமீபகாலங்களில் இலங்கை கடற்படையினரால் ஒரு சுற்றுலாப் பயணிகளின் விடுதிமனையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

வேலணைச் சந்திக்கு வடகிழக்கே பரந்திருக்கும் வயல்களுக்கிடையே காணப்படும் கும்புருப்பிட்டி, சோழவத்தை, நித்தில், ஆவராந்துலா என்பன தொல்லியல் மையங்களாகும். இவற்றுள் கும்புருப்பிட்டி 10 - 15 ஏக்கரில் பரந்திருக்கும் மேட்டு நிலம். இங்குள்ள ஒரு மேட்டில் காணப்படும் வெட்டப்பட்ட சுண்ணாம்புக்கல் தகடுகளும், பவளப்பாறைக் கற்களும் (Coral Stones) இவ்விடத்தில் ஒரு தாதுகோபம் இருந்திருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்விடத்தில் காணப்படும் பல வகையான மட்பாண்டங்களும் மற்றும் தொல்பொருட்களும் இந்த மையத்தின் முக்கியத்தைக் காட்டி நிற்கின்றன (Ragupathy, P. 1987: 25).

## சாட்டி

வேலணைக் கடற்கரையில் அல்லைப்பிட்டியிலிருந்து மண்கும்பான்வரை நீண்டு கிடக்கும் மணல் பரப்பு 6 கி.மீ. தூரத்திற்கு நீண்டு செல்கிறது. அல்லைப்பிட்டியிலுள்ள சாட்டி முற்காலத்தில் ஒரு துறைமுகமாக இருந்ததை அங்கே கண்டெடுத்த ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள், ஆரம்பகால சிவப்பு மட்கல ஓடுகள், உரோம ரௌலெற்றெட் மட்கல ஓடுகள் என்பன காட்டி நிற்கின்றன. இவற்றைத் தவிர இரும்புத் தண்டுகள், இரும்புக் கசடுகள், கருங்கல் தேய்கற்கள், பள்ளமிட்ட ஓடுகள் என்பன கண்டெடுக்கப்பட்டன (Ragupathy, P. 1987: 25).

## அல்லைப்பிட்டி அகழ்வுகள் - 1977

1977 ஆம் ஆண்டில் வீடு கட்டும் ஒப்பந்தக்காரர்கள் அல்லைப்பிட்டி கடற்கரையில் மணலை அகழ்ந்தெடுத்த சமயம் பலவகையான சீனப் பீங்கான்களை வெளிக்கொணர்ந்தார்கள். இதைத் தொடர்ந்து அச்சமயம் இலங்கை வந்திருந்த சிக்காகோ பல்கலைக்கழகப் பேராசிரியரும், இலண்டன் (SOAS) பல்கலைக்கழக இணைப் பேராசிரியருமான ஜோன் காஸ்வெல் தலைமையில், இலங்கைத் தொல்லியல் துறையினரின் அனுமதியுடன் அவ்விடத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பேராசிரியர் காஸ்வெல் தனது அகழ்வாய்வை இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்:

“அவ்விடத்தில் பெருந்தொகையான சீன சிங் - பாய் வட்டில்களும், மற்றைய வகைப் பீங்கான்களும் வெளிக்கொணரப்பட்டன. இக்கண்டுபிடிப்பு ஊரில் விரைவாகப் பரவியதனால் மக்கள் அவ்விடத்தில் கூட ஆரம்பித்தார்கள்.

நாங்கள் அதிகாலையில் அங்கே சென்றபோது மணல் அகழ்ந்தெடுக்க வந்தவர்கள் ஏற்கனவே மணற்கும்பிகளுக்கூடாக மேலோட்டமாக ஒரு நீண்ட குழியை வெட்டியிருந்தார்கள். அங்கே கண்டெடுத்த பீங்கான் துண்டுகளை அவர்கள் வெளியே போட்டிருந்தார்கள். இவ்விடத்தில் மீதமிருந்த மட்பாண்டங்களை பாதுகாத்து வெளிக்கொணர ஒரு மீட்பகழ்வாய்வு (Rescue Dig) செய்ய வேண்டியிருந்தது.” (Carswell, J. 1978: 37).

“முதலில் வெட்டப்பட்டிருந்த குழியில் நேர் செங்கோடாகச் சுத்தப்படுத்தி, அங்கே காணப்பட்ட கலத்துண்டுகளைச் சேகரித்தோம். அந்த அடுக்கு எவ்வாறு அங்கே கலன்கள் பரவியிருந்தது என்பதைக் காட்டியது. சமீபத்தில் பெய்த மழையினால் பல பீங்கான் துண்டுகள் குழியின் அடியில் சேர்ந்திருந்தன. சுத்தப்படுத்தப்பட்ட குழியின் பக்கச் சுவரிலிருந்து அந்த கலன்கள் சுத்தமான மணலில் கைவிடப்பட்டிருப்பதையும், அதற்கு மேலாக ஓர் அடுக்கு சுத்தமான மணல் இருப்பதையும், மேலே கருமை பிடித்த மணலில் மேலே வளர்ந்திருந்த செடிகளின் வேர்களையும் காண முடிந்தது.”

“இந்த மணல் படுகை அடுக்கமைவை உறுதிப்படுத்திய பின்னர் மணல் மேல் மட்டத்திலிருந்து இரண்டு மீட்டர் ஆழத்தில் கலன்களின் அடுக்குத்தளம் வரை சுத்தப்படுத்தினோம். பீங்கான் கலன்கள் 5 மீட்டர் விட்டம் கொண்ட, சுமாராக வட்ட வடிவில் புதைந்திருந்தன. இந்தப் புதையலில் அரைவாசிக்கு மேல் மணல் அகழ்வோரால் குழப்பப்பட்டிருந்தது”

"மீதமிருந்த கலத்துண்டுகள் இது கைவிடப்பட்ட ஒரு கலக்குவியல் அல்ல என்பதைக் காட்டின. ஒரு பீங்கான் கலனின் உடைந்த துண்டுகள் நீண்ட தூரத்திற்குப் பரவிக் கிடப்பது இத்துண்டுகள் புதைக்கப்பட முன்னர் குழப்பியிருப்பதைக் காட்டியது. இதை விட்டுச் சென்றவர்கள் இவற்றை முதலில் துருவித் தேடிய பின்னர் புதைத்திருப்பதாகப் பட்டது. எனது எண்ணத்தில் உதித்த சம்பவம் இது: ஒரு சீன மட்பாண்டக் கப்பல், சரக்குப் பெட்டியை கரைக்குக் கொண்டு வந்தவர்கள், அவற்றில் பல பழுதடைந்திருப்பதைக் கண்டு அவற்றை அலசி அவற்றில் முழுமையானவற்றை எடுத்துக்கொண்டு மிகுதித் துண்டுகளை இங்கே சுத்தமான மணலில் புதைத்திருக்கிறார்கள்." (Carswell, J. 1978: 39).

இப்பீங்கான் துண்டுகள் அனைத்தும் யாழ்ப்பாணம் கோட்டைக்கு எடுத்துக்கொண்டு போய் சுத்திகரிக்கப்பட்டு, அடுத்த இரு வாரங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கட்டடக்கலை மாணவர்கள் நால்வரின் உதவியோடு, அதிக பிரயாசையின் பேரில் ஒன்றுசேர்க்கப்பட்டு, வச்சிரப்பசை கொண்டு ஒட்டப்பெற்றன. மொத்தத்தில் 443 பீங்கான் கலன்கள் இனம் காணப்பட்டன. இவற்றுள் பலவகையான உருவ அமைப்புகள் கொண்ட கிண்ணங்கள், கோப்பைகள், குடங்கள், சாடிகள் என்பன காணப்பட்டன. இவற்றுள் இள மஞ்சள்நிற பளிங்கியற்பொருள் பூசப்பட்ட வெண்கலன்கள், வெண்ணிற சிங் - பாய் சீனப் பீங்கான்கள், மஞ்சள் நிறக் கெண்டிகள், பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கிண்ணங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இப்பாண்டங்கள் அனைத்தும் கி.பி. 1100 ஆம் ஆண்டிற்குரிய சீனாவின் வடக்கு - சுங் காலத்தவையாகும் (Northern Sung Period) (Carswell, J. 1978:39– 41).

அடுத்து வரும் பக்கங்களில் அல்லைப்பிட்டியில் கண்டெடுத்த பீங்கான்களின் படங்களைக் காணலாம்.

**அல்லைப்பிட்டிப் பீங்கான்கள்**



(a). ஒரு கிண்ணத்தின் அடித்தட்டு. மெல்லிய மஞ்சள் நிறப் பளிங்கு மெருகு (Glaze). உள்ளே பூக்களின் கோட்டு வரைவுகள்.

(b) சரிவான பக்கங்களைக் கொண்ட கிண்ணம். வட்டவடிவான அடிக்கால். பக்கங்கள் உள்வளைந்த கோடுகளையும், உள்ளே பூக்களின் உருவரையும் கொண்டவை.

(c). சரிவான பக்கங்களைக் கொண்ட கிண்ணம். தடித்த மேல் விளிம்பைக் கொண்டது. உள்ளே சுற்றிவர இலைகளைக் கொண்ட பதிக்கப்பட்ட வார்ப்பு. வெளிப்பக்கம் செங்கோட்டில் பதிக்கப்பட்ட நீள்சதுரக் கூறுகள்.

*Image Source: John Carswell.*



(a). வெளிப்புறம் வளைந்த விளிம்பைக் கொண்ட பாலேட்டு நிற (Cream Coloured) பீங்கான் கிண்ணம். அடிப்பகுதி உயர்ந்த கால்களைக் கொண்டது.

(b). வெளிப்புறம் வளைந்த விளிம்பு கொண்ட பீங்கான் கிண்ணம். மெல்லிய பச்சைநிற பளிங்கு மெருகு (Glaze). உள்ளே இரு பொது மையம் கொண்ட வளையங்கள் (Concentric Rings) காணப்பட்டன. வெளிப்பக்கம் வாழை இலை போன்ற பதிவுகள்.

(c). வெளிப்புறம் வளைந்த விளிம்பு கொண்ட பீங்கான் கிண்ணம். உள்பக்கம் மெல்லிய இலைகளின் பதிப்பு. நடுவில் ஒரு பூ.

*Image Source: John Carswell.*



(a). வளைந்து வளைந்து செல்லும் அணிவகையுள்ள விளிம்பைக் கொண்ட கிண்ணம். கடினமான மென் - மண்ணிறப் பளிங்கு மெருகு கொண்ட கிண்ணம். அடியில் காலுள்ளது.

(b). வளைந்து வளைந்து செல்லும் விளிம்பு கொண்ட குவளை. சாம்பல் நிறப் பளிங்கு மெருகிட்ட வெண்ணிறப் பாண்டம். அடியில் உயர்ந்த கால் கொண்டது.

(c). பலவகைப் பாண்டங்களின் பகுதிகள்.

1. பெரிய சாம்பல் நிறச் சாடியின் கழுத்துப் பகுதி.
2. சாம்பல் நிறச் சாடியின் கழுத்துப் பகுதி.
3. சாம்பல் நிறச்சாடியின் கைப்பிடி கொண்ட தோள் பகுதி காணப்படுகிறது.
4. சாம்பல் நிறச் சாடியின் கழுத்துப் பகுதி. இரு கைப்பிடிகள் கொண்டது.
5. சாம்பல் நிறமான கடினமான சாடியின் கழுத்துப்பகுதி.
6. உருண்ட விளிம்பு கொண்ட கடினமான சாம்பல் நிறச் சாடியின் கழுத்துப் பகுதி.
7. உருண்ட விளிம்பு கொண்ட சாம்பல் நிறமான, மஞ்சள் பளிங்கு மெருகிட்ட சாடியின் கழுத்துத் துண்டு.

*Image Source: John Carswell.*



**பூக்கள், இலைகள் மற்றும் பதரப்பட்ட உருவரைப் படங்களைக் (designs) கொண்ட பல வகையான கிண்ணங்களின் வரை படங்கள்.**
Image Source - John Carswell

## புங்குடுதீவு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப் பக்கத்தில் வேலணைக்குச் சற்று அப்பால், பல கிராமங்களைக் கொண்டது புங்குடுதீவு. யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இத்தீவு கடலினூடாகச் செல்லும் வீதியினால் இணைக்கப்பட்டிருக்கிறது. மகாவம்சத்தில் இது புவங்குதீப என்றும், 12 ஆம் நூற்றாண்டின் சிங்கள மன்னன் நிசங்கமல்லனின் இராமேஸ்வரம் கல்வெட்டில் புவங்குதிவெய்ன எனவும் கூறப்பட்டிருக்கிறது.

புங்குடுதீவின் கிழக்குக் கரையிலுள்ள திகழி என்ற பகுதி இத்தீவின் ஆரம்பகால மனிதக் குடியேற்றங்கள் இடம்பெற்ற பகுதியாகும். இதைக் கவனிக்குமிடத்து இக்குடியேற்றங்கள் கந்தரோடையை மையமாகக் கொண்ட யாழ்ப்பாணக் குடாவிலிருந்து இடம்பெயர்ந்ததாகக் கருத இடமிருக்கிறது. திகழியில் காணப்படும் ஆரம்பகாலக் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் 5 - 10 ஏக்கர் அளவிற்குப் பரந்திருப்பது இங்கே கணிசமான அளவு மக்கள் குடியேற்றம் இடம்பெற்றிருப்பதைக் காட்டி நிற்கிறது. இத்தீவிலுள்ள பெரியகுளம், மற்றும் திகழிக்குளம் என்பன இங்கே பெரிய அளவில் நெற்பயிர் செய்வதற்கு ஏதுவாக இருந்திருக்கின்றன (Ragupathy, P. 1987: 23– 24; Thiagarajah, S. 2016: 134).

பாளி நூலான மகாவம்சம் இப் பியங்குதீபம் புத்த பிக்குகளைக் கொண்டிருந்த ஒரு பிரசித்திபெற்ற

பௌத்த மையம் எனப் பதிவு செய்திருக்கிறது. இங்குள்ள ஒரு மக்கள் மரபுக் கோயிலின் (*Folk Temple*) முன்பக்கத்தில், சடங்கு முறையாகத் தேங்காய் உடைக்கும் கல்லாக புத்தரின் உருவக்கற்சிலையின் மேலுடற்பகுதி உபயோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது (*Ragupathy, P. 1987: 23– 24*).

## நயினாதீவு

நயினாதீவு என்னும் இத்தீவின் பெயர் முற்காலத்தில் இத்தீவில் வாழ்ந்த நயினார் அல்லது நாக இன மக்களைக் குறிப்பிடுவதாகும். முதலாம் நூற்றாண்டின் கிரேக்க நிலப்படதாரியான குளோடியஸ் தொலமி தனது வரைபடத்தில் தப்ரொபான தீவின் வடபகுதியை நாகதீப எனவும், அப்பெரிய தீவின் சமீபத்தில் உள்ள சிறிய தீவை நாகதீப (*Nagadiba*) என்ற பெயராலும் குறிப்பிடுகிறார். இச்சிறிய தீவு நயினாதீவைக் குறிப்பதாகக் கருத இடமிருக்கிறது. இத்தீவானது புராதன தாய்த் தெய்வமான நாகபூசணி அம்மன் கோயிலையும், பௌத்த ஆலயமான நாக விகாரையையும் கொண்டிருக்கிறது.

சில நூல்களும், சில எழுத்தாளர்களும், வலைத்தளக் கட்டுரைகளும் குறிப்பிடுவது போல நயினாதீவு மணிமேகலை குறிப்பிடும் மணிபல்லவமோ அல்லது மகாவம்சம் குறிப்பிடும் நாகதீபமோ அல்ல. மணிமேகலைக் காப்பியம் பண்டைய யாழ்ப்பாண அரசை நாகநாடு எனக் குறிப்பிடுகிறது. மணிபல்லவம் என்ற தீவின் பெயர் நயினாதீவைக் குறிப்பிடுவதாக இருந்தால், நாகநாடு மணிபல்லவத்தின் கிழக்கே கடலுக்கு அப்பாலுள்ள நாகநாடு என இக்காப்பியம் குறிப்பிட்டிருக்கும். ஆனால் மணிமேகலையோ நாகநாடு மணிபல்லவத் தீவின் ஒரு நிலப்பகுதி என்றே கூறுகிறது. மணிமேகலையில் வரும் “மணிபல்லவத்தின் கீழ்நில மருங்கின் நாகநாடாளும்” (மணிமேகலை, *viii: 54*) என்ற அடிகள் கவனிக்கப்பட வேண்டியவை. ‘மணிபல்லவம்’ என்பது இங்கே யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் குறிப்பிடுகிறது. மணிபல்லவத்திற்கும் நாகநாட்டிற்குமிடையே உள்ள தொடர்பு மணிமேகலையில் இந்த ஓர் இடத்தில் மட்டுந்தான் கூறப்படுகிறது. இதை ஆராய்ந்த வரலாற்றாசிரியரான சுவாமி ஞானப்பிரகாசர் மணிபல்லவம், நாகநாடு இரண்டும் நாகதீபம் எனப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டையே குறித்தன எனப் பதிவு செய்திருக்கிறார் (ஞானப்பிரகாசர், *1928: 23– 36*).

மகாவம்சம் ‘நாகதீப’ என்ற பெயரால் இலங்கையின் வடபகுதி முழுவதையும் குறிப்பிடுகிறது. மேலும், வல்லிபுரப் பொற்சாசனமும் ‘நகதிவ’ என யாழ்ப்பாணத் தீபகற்பத்தைக் குறிப்பிடுகிறது. ‘யம்புகோளப் பட்டின’ இங்கிருந்த முக்கியமான பெரிய வர்த்தகக் கப்பல் துறை என்பதையும், வல்லிபுரத்தில் ‘பல்லவத்துறை’ என்ற பெயரில் ஒரு துறைமுகம் இருந்ததையும் மகாவம்சம் குறிப்பிடுகிறது (*Mahavamsa, XIX: 23, 69: XXVI: 42– 44*). இப்படியான பெரிய வர்த்தகக் கப்பல் துறை ஏதும் நயினாதீவில் கிடையாது.

(இவ்விவரங்கள் ஏற்கனவே ‘வரலாறு மற்றும் இலக்கியப் பதிவுகளில் நாகநாடும் நாகர்களும்’ என்ற பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது).

## நெடுந்தீவு

யாழ்பாணக் குடாநாட்டின் மேற்குத் தொலைக்கோடியில் உள்ள தீவான நெடுந்தீவு (*Delft*) தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் யாழ்ப்பாணத் தீவகற்பத்திற்கும் நடுவே அமைந்திருக்கும் தீவு. தமிழ்நாட்டிலிருந்து வடஇலங்கை நோக்கி வரும் கப்பல்கள் ஊர்காவற்துறையை அடையும் முன்னர் நெடுந்தீவைக் கடந்து வரவேண்டும். இதை மனதில் கொண்டு டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) நெடுந்தீவில் ஒரு பெரிய கடற்கோட்டையை அமைத்திருந்தர்கள். அவர்களின் ஆட்சிக்காலத்தின் பின்னர் கவனிப்பாரற்ற நிலையில் அது அழிவடைந்துவிட்டது. இத்தீவின் மேற்குக் கரையோரமாகக் காணப்படும் கட்டட இடிபாடுகள் கொண்ட தொல்லியல் மையம் வெடியரசன் கோட்டை என அழைக்கப்படுகிறது. யாழ்ப்பாணக் கிராமிய வரலாற்றுக் கதைகளில் வெடியரசன் வியப்பார்வமளிக்கிற ஒரு கதாநாயகன் ஆவார்.

இன்றைக்கு வெடியரசன் கோட்டை எனக் கூறப்படும் திடல் பவளப்பாறைக் கற்களால் (கோறல் கற்கள்) வட்டவடிவில் அமைக்கப்பட்ட பௌத்த ஸ்தூபத்தின் அடித்தளமாகும். அதன் மேல் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினர் மூன்று சிறிய ஸ்தூபங்களை அமைத்துள்ளனர். இத்திடல் அமைந்திருக்கும் கடற்கரை இன்றைக்கும் ‘பெரியதுறை’ என அழைக்கப்படுவதனால், முற்காலத்தில் இது முக்கியமான ஒரு வர்த்தகத் துறையாக இருந்திருக்க வேண்டும். பண்டைய வர்த்தகர்கள் ஆதரவளித்த ஒரு பௌத்த வழிபாட்டுத் தலமாக இவ்விடம் விளங்கியிருக்கலாம்.

இவ்விடத்தில் கண்டெடுத்த மட்பாண்டங்களை ஆய்வு செய்ததில் அவற்றினிடையே ஆரம்பகால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், உரோம ரௌலெற்றெட் மட்பாண்டங்கள், பிற்காலத்தைய பள்ள விளிம்பு கொண்ட கலன்கள் என்பன காணப்பட்டன.

இவற்றிலிருந்து கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலங்களிலிருந்து இவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் குடியேற்றங்கள், பிற்கால யாழ்ப்பாண இராச்சிய காலங்கள் வரை நீடித்ததை அறிய முடிகிறது. இவற்றோடு பலவகையான செப்புத் துண்டுகள், இரும்பு ஆணிகள், இரும்புக் கசடுகள், கற்குழவிகள், வரிப்பள்ளமிட்ட ஓடுகள், 20 மாலை மணிகள், சூதுபவள (கார்னிலியன்) உருண்மணிகள், தேய்வடைந்த செப்பு நாணயங்கள், ஸ்ரீமத் சாகஸமல்ல என்னும் பெயர் பொறித்த ஒரு செப்பு நாணயம் ஆகியன கண்டெடுக்கப்பட்டன (Ragupathy, P. 1987: 17- 21).

## II

## பூநகரித் தொல்லியலாய்வு

இலங்கையின் பெருநிலப்பரப்பின் வடபகுதியில் யாழ்ப்பாணக் கடலேரிக்கருகில் அமைந்த புராதன நகரம் பூநகரி. பூநகர் என்ற ஆதிப்பெயரே காலப்போக்கில் பூநகரி என மருவியுள்ளது. வரன்முறையான மரபில் ஆதியிலிருந்தே பூநகரி யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. பெருநிலப்பரப்பின் வடமுனையில் உள்ள ஒரு நில நீட்சியின் கடற்கரையில், போர்த்திற நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய ஒரு மையத்திலிருந்த இப்பட்டினத்துறை யாழ்ப்பாணத்தின் பண்டைய முக்கியமான துறைமுக நகரங்களில் ஒன்று.

தொல்லியல் ரீதியாக பூநகரி வட இலங்கையின் இரணைமடு தேரிமணற் தொடர் வலயத்தில் அமைந்திருக்கும் ஒரு நிலமாகும். இந்தச் செம்மணல் வலயம் இலங்கையின் வடகிழக்கே கடற்கரைக்குச் சமீபமாக முல்லைத்தீவில் ஆரம்பித்து இரணைமடு, பூநகரி உள்ளிட்ட வடபகுதி வழியாகச் சென்று, வடமேற்குக் கரைவழியாகத் தொடர்ந்து குதிரைமலை வரை செல்கிறது.

இந்தத் தேரிமணற் தொடர் வலயத்தில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் ஆதிகால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்த வலயத்தில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட இலங்கையின் தலையாய தொல்லியலாளர் அமரர் சிரான் தெரணியகல இந்த வலயத்திற்கு இரணைமடு தேரிமணற் தொடர் வலயம் எனப் பெயர் சூட்டியிருக்கிறார் (Deraniyagala, S.U. 1992). இது பற்றி பின்னர் ஓர் இயலில் விரிவாகப் பேசப்படும்.

1982 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், இலங்கைத் தொல்பொருள் துறையும் இணைந்து மேற்கொண்ட மேலாய்வில் பூநகரியின் வடக்கு முனைவரை நுண்கல் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. பூநகரியின் மேற்கிலுள்ள மணற்திட்டியான மண்ணித்தலையில் கலாநிதி இரகுபதியும் அவரது சகாக்களும் பல நுண்கல் ஆயுதங்களைக் கண்டெடுத்திருக்கிறார்கள். பெரும்பாலும் குவாட்ஸ் கற்களினாலும், சில சேட் கற்களினாலுமான இக்கல்லாயுதங்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்டன (Ragupathy, P. 1987: 179). இலங்கையில் நுண்கற் கருவிகளின் ஆரம்பகாலம் கி.மு. 33,000 ஆண்டாகக் கணிக்கப் பெற்றிருக்கிறது (Deraniyagala, S.U. 1992: 695-70). இக்காலத்தையக் கற்கருவிகளை உபயோகித்த மக்கள் பூநகரியில் கல்முனை, வெட்டுக்காடு, மண்ணித்தலை ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள்.

### பெருங்கற் பண்பாட்டுத் தொல்பொருட் சான்றுகள்

இரும்புக் காலத்தைய பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் 1989 - 90 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளராக இருந்த (பிந்நாள் பேராசிரியர்) கலாநிதி பரமு புஷ்பரட்ணம் அவர்கள் பூநகரிப் பகுதியில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் பெறப்பட்ட தொல்பொருட்கள் காட்டிய சான்றுகளாகும். இவை 1993 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ‘பூநகரி - தொல்பொருளாய்வு’ என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது. இக்கட்டுரையில் இனிக் கூறப்படும் தகவல்கள் பரமு புஷ்பரட்ணத்தின் இந்த ஆய்வின் பெறுபேறுகளாகும்.

பூநகரிப் பிராந்தியத்தில் மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் மேற்கொண்ட மேலாய்வுகளில் ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டப் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. இவ்வகையான மட்பாண்டங்கள் கி.மு. 1500 ஆண்டிற்கும் - கி.மு. 300 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டவை ஆகும். இதிலிருந்து கி.மு. ஆயிரத்தாண்டு காலத்திலேயே இப்பெருங்கற் பண்பாட்டுப் பாத்திரங்களை உபயோகித்த மக்கள் இப்பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என அறிய முடிகிறது. இந்தக் கண்டுபிடிப்பு ஏற்கனவே இப்பகுதியில் வாழ்ந்த நுண்கற்கால மக்களின் வம்சாவழியினரே பிற்காலத்தில் பெருங்கற் பண்பாட்டு அம்சங்களை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறியத்தருகிறது (புஷ்பரட்ணம் 1993: 16).

வெட்டுக்காடு, மண்ணித்தலை ஆகிய இடங்களில் கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள் நிலத்தின் மேல் மட்டங்களிலேயே பெருவாரியாகக் காணப்பட்டன.

மண்ணித்தலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் குழுவினர் பல வகையான கறுப்பு மட்பாண்டங்கள், சிவப்புநிற மற்றும் சாம்பல்நிற மட்பாண்ட ஓடுகளைக் கண்டெடுத்தார்கள். இவற்றில் முக்கியமான அம்சம் அந்த ஓடுகளில் காணப்பட்ட கீறல் எழுத்துகளும், தமிழ்ப்பிராமி எழுத்துகளுமாகும்.

மற்றைய தொல்பொருட்களில் சுடுமண் பொம்மைகளில் கண்ட தாய்த் தெய்வ உருவங்கள், சூளையிற் சுடப்பட்ட களிமண் விளக்குகள், இரும்பு ஆணிகள், இரும்பினால் செய்யப்பட்ட தூண்டில் முட்கள், பலதரப்பட்ட உருண்மணிகள், உருண்மணிக் கழுத்து மாலைகள், கை வளையல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் மண்ணித்தலையிலும், வெட்டுக்காட்டிலும் கண்டெடுக்கப்பட்ட இலை வடிவான இரும்பு வேல்கள் முக்கியமானதொரு கண்டுபிடிப்பு. இம்மாதிரியான வேல் வடிவங்கள் புராதன ‘பெருங்கற் பண்பாட்டு மதச் சின்னங்கள்’ (Symbols of a Megalithic Religion) என வரலாற்றாசிரியர் நீலகண்ட சாஸ்திரி கூறியதும் இங்கே குறிப்பிடத்தக்கது (Nilakanta Sastri, K.A. 1958: 55).

பூநகரிப் பகுதியில் மண்ணித்தலை, வெட்டுக்காடு, பல்லவராயன் ஆகிய இடங்களில் களி மண்ணினால் செய்யப்பட்டு சூளையிற் சுடப்பட்ட லிங்க உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த உருவங்கள் அநுராதபுரம், பொம்பரிப்பு, இரணைமடு, மாமடுவ, சிகிரியா, அம்பாறை ஆகிய இடங்களில் கண்ட சூளையிற் சுட்ட உருவங்களுடன் (Deraniyagala, P.E.P. 1953: 133– 138) ஒப்பிடத்தக்கவை.

## ஈமப் புதையல்கள்

இவ்விடங்களிலுள்ள நிலம் பெரும்பாலும் மணல் வகையானபடியினால், இறந்தோரை தாழிகளில் வைத்தே அடக்கம் செய்தார்கள். இவ்வகையான அடக்கங்கள் குன்றுகளில் அல்லது சிறிய ஏரிகளுக்கு அருகாமையில் தியாகம், குதிரைகட்டின தீவு, பல்லவராயன் ஆகிய இடங்களில் காணப்பட்டன. குழப்பப்பட்ட சில புதைகுழிகளில் பெரிய தாழிகளும், அவற்றிற்கு அருகில் சிறிய குடங்களில் உருண்மணிகளும், சுடுமண் உருவங்களும், வளையல்களும் ஈமப் படையற் பொருட்களாகக் காணப்பட்டன.
நாட்டின் பௌதிகச் சூழலுக்கு ஏற்ப தாழிகளோடு குழிப் புதையல்களும் காணப்பட்டன. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களில் வதிவிடம், இடுகாடு, குளம், வயற்பரப்பு ஆகிய நான்கும் முக்கிய அம்சங்களாக விளங்கியது போன்றே பூநகரிப் பகுதிகளிலும் இப்பண்பாட்டு அம்சங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

ஈழவூரில் ஒரு கிணறு தோண்டிய சமயம் நீளக் கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட ஓர் எலும்புக்கூடு கிடைக்கப்பெற்றது. அதனோடு, கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், கை வளையல்கள், உருண்மணிகள், இரும்பு ஆணிகள் என்பனவும் காணப்பட்டன. இது ஓர் ஈமப்புதையல் மையமாக இருந்தமையால் கிணறு தோண்டுவது அத்துடன் நிறுத்தப்பட்டது (புஷ்பரட்ணம், ப. 1993: 20– 35).

## தமிழ்ப் பிராமி எழுத்து வடிவங்கள்

ஒரு காலத்தில் இந்தியாவிலுள்ள பிராமி எழுத்து வடிவங்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோக மன்னன் ஆட்சியின் பின்னரே பரவலாக உபயோகப்படுத்தப்பட்டன என்ற கருத்து நிலவி வந்தது. பிராகிருத மொழியில் பதிவு செய்யப்பட்ட அசோக மன்னனின் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளே இந்தியாவின் மிகப் பழமையான எழுத்துப் பதிவுகள் எனவும் கருதப்பட்டது. இதன் காரணமாக இவ்வெழுத்துகள் ‘அசோகப்பிராமி’ என அழைக்கப்பட்டன.

இவற்றையொத்த எழுத்து வடிவங்கள் பண்டைய தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், இவற்றிலுள்ள ‘இ’, ‘ம’, ‘ற’, ‘ன’, ‘ள’, ‘ழ’ ஆகிய தமிழ்ப் பிராமி எழுத்துகள் அசோகப்பிராமியில் கிடையாது. அப்படியிருந்தும் ஐராவதம் மகாதேவன் போன்ற கல்வெட்டியலாளர்கள் தமிழ்ப்பிராமி எழுத்துகள் அசோகப்பிராமியிலிருந்தே தோற்றம் பெற்றதாகக் கூறினார்கள் (Mahadevan, I. 2003: 173).

சமீபகாலங்களில் தமிழகத்தில் கீழடி, ஆதிச்சநல்லூர் ஆகிய தொல்லியல் மையங்களில் கண்ட தமிழ்ப் பிராமி எழுத்துகளின் காலத்தை கதிரியக்கக் கரிம ஆய்வுகள் கி.மு. 600 ஆம் ஆண்டிற்கு எடுத்துச் செல்கின்றன. அவ்வாறே அழகன்குளம், கொடுமணல், பொருந்தல் ஆகிய மையங்களில் கண்ட தமிழ் எழுத்துகள் கி.மு. 500 ஆம் ஆண்டிற்கு உரியவையாகக் காணப்படுகிறது (இரா. சிவானந்தம் 2019: 08). இலங்கையில் அநுராதபுரத்தில் தொல்லியலாளர் தெரணியகல கண்டெடுத்த ‘தயா குடெ’ என்னும் தமிழ்ப் பிராமி எழுத்துகள் கொண்ட மட்பாண்ட ஓடு கி.மு. 700 - 500 ஆண்டுகாலத்தைக் காட்டியிருக்கிறது (Deraniyagala, S.U. 1992).

இத்தகைய பின்னணியிற்தான் பூநகரிப் பிராந்தியத்தின் மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய் ஆகிய இடங்களில் பேராசிரியர் புஷ்பரட்ணம் கண்டெடுத்த மட்பாண்டப் பிராமி வடிவங்களை ஆராயவேண்டியுள்ளது. இந்த இயலில் பிராமித் தமிழ் எழுத்துகளைக் கொண்ட மூன்று பூநகரி மட்பாண்ட

ஓடுகள் மட்டுமே இங்கே எடுத்துரைக்கப்படுகின்றன.

பரமன்கிராயில் கண்டெடுக்கப்பட்ட ஒரு மட்பாண்ட ஓட்டில் தமிழ்ப் பிராமி எழுத்தில் 'லோமா' என்ற எழுத்துப் பதிப்பு காணப்பட்டது. இது அதிலிருந்த வாசகத்தின் ஒரு பகுதியேயாகும். அதன் இரு பக்கங்களிலுமிருந்த உடைந்த பகுதிகளில் இந்த வாசகம் தொடர்ந்திருக்கும். அப்பகுதிகள் கிடைக்கவில்லை.

மண்ணித்தலையில் கிடைத்த ஒரு மட்பாண்ட ஓட்டில் 'ஈழ' என எழுத்துப் பதிக்கப்பட்ட தமிழ்ப் பிராமி வரி காணப்பட்டது. இக்கலவோடுகள் இவ்விடத்தில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை உறுதி செய்யும் ஆதாரங்களாகும். அக்காலத்தில் இலங்கையில் தயாரிக்கப்படும் பொருட்களை பெரிய தாழிகளில் அடக்கியே கப்பல்களில் எற்றுமதி செய்வார்கள். இப்படியான தாழிகள் (குடங்கள்) களி மண்ணில் வனையும் போதே தயாராகும். ஈழநாட்டின் பழைய பெயரான 'ஈழம்' அத்தாழிகளில் எழுதப்பட்டு சூளையில் சுடப்படும். இந்த மட்பாண்டத் துண்டில் காணப்படும் எழுத்து அவ்வாறாகப் பதிவு செய்யப்பட்ட எழுத்தாக இருக்கலாம்.

இங்கே கூறப்படும் மூன்றாவது மட்பாண்ட ஓடு ஒரு முக்கியமான ஓடாகும். பரமன்கிராயில் கிடைத்த இந்தச் சாசனம் பூநகரிப் பிராந்திய வரலாற்றாய்வில் முக்கியமானதொரு சான்றாதாரமாகக் கொள்ளத்தக்கது. இதன் முதல் இரு எழுத்துகளையும் தெளிவாக 'வேளா' என வாசிக்க முடிகிறது. இதன் சாசனப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வாசித்த ஐராவதம் மகாதேவன் மூன்றாவது எழுத்தான தமிழுக்குரிய 'ன' எழுத்து தலைகீழாகப் பதியப்பட்டிருப்பதாகக் கூறி, இச்சாசனத்தை 'வேளான்' என வாசித்திருக்கிறார் (மகாதேவன், ஐ. 1990).

இச்சாசனத்தில் இடம்பெறும் வேளான் என்ற பதம் வேள், வேளிர் எனப்படும் குறுநில மன்னர்களைக் குறிப்பிடும் பதமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டுப் பிராமிச் சாசனங்களில் வேள் என வரும் பெயர்களை வாசித்த அறிஞர் பலரும் அப்பெயர்கள் சங்க காலத்திலே சிறப்புற்றிருந்த வேள், வேளிர் எனப்பட்ட குறுநில மன்னர்களையே குறிப்பனவென்பர். இலங்கையிலும் வேள் அல்லது வேளிர் என்ற பெயர் கொண்ட பிராமிச் சாசனங்களை, சங்ககாலத்தைப் போல இலங்கையிலும் வேளிர் என்ற சிற்றரசர்கள் இருந்திருப்பதற்கான ஆதாரங்களாகக் கொள்ள முடியும். (Sitrampalam, S.K. 1980: 360– 377). இச்சாசனம் பற்றி தமிழ்நாட்டுச் சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் 01.07.1990 தேதியிட்ட தினமணி பத்திரிகையில் வெளியிட்ட கருத்து வருமாறு:

"தமிழ் மொழியிலும் தமிழ்ப் பிராமி எழுத்துகளிலும் ஆன இச்சாசனம் கி.மு. 3 அல்லது 2 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததென்று எழுத்தமைதியில் இருந்து கூற முடியும். வேளான் என்ற பெயர் சங்ககால வேள், வேளிர் ஆகிய குறுநில மன்னர்களையும், பிற்காலச் சோழர் காலத்தைய (மூவேந்தர்) வேளன் என்ற பெயர்களையும் ஒத்திருப்பதால், இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் சங்ககாலத்திலேயே தமிழ் வேளிர் அல்லது வேளார் குடியிருந்தனர் எனக் கொள்ளலாம்" (மகாதேவன், ஐ. 1990).

இப்பகுதியில் ஏற்கனவே எடுத்துக்கூறியது போல, தமிழ்நாட்டில் தமிழ்ப்பிராமி எழுத்துகளின் வடிவமைப்பையும், எழுத்தமைதியையும் கொண்டு ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கி.மு. 300 ஆம் நூற்றாண்டிற்கு உரியவையாக முதலில் கணிக்கப்பட்டன. ஆனால் அறிவியல் ரீதியான கதிரியக்கக் காலக் கணிப்புகள் இச்சாசனங்களின் காலத்தை கி.மு. 600 - 500 ஆம் ஆண்டுக் காலத்திற்கு எடுத்துச் செல்கின்றன. பூநகரிச் சாசனங்களும் இவ்வகையான கதிரியக்கக் காலக் கணிப்புகளுக்கு உட்படுத்தப்படும் போது, கி.மு. 300 ஆம் ஆண்டிற்கும் முற்பட்ட காலங்களைத் தரலாம். இச்சந்தர்ப்பத்தில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிச் சாசனம் கி.மு. 700 - 500 ஆண்டைக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டுத் தொடர்புகள்

இந்துமா கடலில் மேற்குலகங்களுக்கும், கிழக்குலகங்களுக்கும் இடையே அமைந்த இலங்கையின் நிலையமும், இங்கிருந்த வணிகப் பொருட்களின் சிறப்புமே இந்தியாவிலிருந்தும், தொலைவிலிருந்த பிற நாடுகளிலிருந்தும் வணிகர்களை நெடுங்காலமாக இலங்கைக்கு வரவைத்தன. இத்தொடர்புகளினால் இலங்கையின் பொருளியல் நிலை சிறப்படைந்ததுமல்லாமல் பிற நாடுகளின் பண்பாட்டு அம்சங்களும் இலங்கையில் பரவ வழியமைந்தன. இந்த வர்த்தக வலைப்பின்னலில் வட இலங்கையின் முக்கிய துறைமுகங்களான யம்புகோவளம், பண்ணைத்துறை (யாழ்ப்பாணப் பட்டினம்), மாந்தை ஆகிய பெருந்துறைகளும், பூநகரி, நாவாந்துறை ஆகிய மற்றைய துறைகளும் பெரும் பங்கெடுத்துக்கொண்டதை இன்றைய தொல்பொருளாய்வுகளும் அவற்றிலிருந்து பெறும் தொல்பொருட் சான்றுகளும் எடுத்துரைக்கின்றன.

இலங்கையின் பெருநிலப்பகுதியில் அமைந்த மாந்தைத் துறைமுகம் ஊடாக வர்த்தகமும், மக்கள் புலப்பெயர்ச்சியும், பண்பாடும், அரசியற் படையெடுப்புகளும் நடந்ததற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இதனால் இதற்கு வடக்கே அமைந்த பூநகரியும் இச்செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கும் எனக் கருத இடமிருக்கிறது. இதனை இங்கு கிடைத்த இந்திய, கிரேக்க, உரோம, அரேபிய, சீன நாடுகளுக்குரிய தொல்பொருட் சான்றுகள் உறுதி செய்கின்றன. இச்சான்றுகள் இங்கு நிலவிய நாகரிகத்தின் கால அளவை வரையறை செய்ய உதவுவதுடன் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டின் பின்னணியில் தோற்றம் பெற்ற நகரமயமாக்கத்தில் இவ்வெளிநாட்டு வர்த்தகம் ஏற்படுத்திய இயக்க விளைவையும், செல்வாக்கையும் அறிய உதவுகின்றன (புஷ்பரட்ணம், 1993: 47).

## இந்திய வர்த்தகம்

பூநகரியின் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு ஆரம்பமாவதற்கு முன்னரே அதனுடைய வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருக்க வேண்டும். இப்பண்பாட்டு அம்சங்கள் கி.மு. 1300 ஆம் ஆண்டுக்காலத்தில் கந்தரோடையில் ஆரம்பமான பெருங்கற் பண்பாட்டின் உள்நாட்டுப் பரவலுடனோ அல்லது தென்னிந்தியாவினுடனான வர்த்தகத் தொடர்புகளினூடாகவோ அல்லது இருவழியாகவோ பூநகரியை அடைந்திருக்கலாம்.

இற்றைக்கு கி.மு. 1000 இற்கும், கி.மு. 500 இற்கும் இடைப்பட்ட காலத்தில் வடஇந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் புழக்கத்திலிருந்த 'புராணாஸ்' எனப் பிராகிருதத்தில் அழைக்கப்பட்ட வடஇந்திய முத்திரை நாணயங்கள் (Punchmarked Coins) பூநகரி அகழ்வுகளில் கலாநிதி புஷ்பரட்ணம் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவை வெள்ளியிலும், செம்பிலும், வெள்ளி முலாம் பூசப்பட்ட செம்பிலும் கிடைத்திருக்கின்றன. இம்மாதிரியான அச்சுக்குத்திய நாகர்களின் முத்திரை நாணயங்கள் கி.மு. 300 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் கந்தரோடையில் தயாரிக்கப்பட்டிருந்தமை முன்னர் கூறப்பட்டிருந்தது.

## லக்ஷ்மி நாணயங்கள்

ஏற்கனவே கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்டு தொல்லியலாய்வாளர் போல் பீரிஸ் அவர்களால் 'லக்ஷ்மி' நாணயங்கள் எனப் பெயர் கொடுக்கப்பட்ட வகை நாணயங்கள் மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாணயங்கள் கி.மு. 300 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து கி.பி. 300 ஆம் ஆண்டு காலம்வரை புழக்கத்திலிருந்தபடியினால் அக்காலகட்டத்தில் இப்பகுதிகளிலும் இந்த நாணயங்கள் பயன்பாட்டில் இருந்திருக்கலாம்.

## கிரேக்க - உரோம வர்த்தகம்

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் ஆரம்பமான இலங்கையுடனான கிரேக்க வர்த்தகத்தின் தொடர்ச்சியாக உரோம வர்த்தகம் நடைபெற்றது. ஆரம்பகால இலங்கை வர்த்தகம் நேரடியாக உரோமருடன் ஏற்படாது தென்னிந்திய வணிகர்களூடாக நடைபெற்றது என்ற கருத்து ஏற்புடையதாக இல்லை. 1996 ஆம் ஆண்டில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த அம்போரா சாடிகளையும், ஆதிகால ரௌலெற்றெட் மண்பாண்டங்களையும் காலக்கணிப்பிற்கு உட்படுத்திய ஆய்வாளர்கள் அவை கி.மு. 500 ஆம் ஆண்டளவில் கிரேக்க மாலுமிகளால் கொண்டுவரப்பட்டவை எனக் கூறியுள்ளார்கள். அது மட்டுமல்ல, அநுராதபுரத்தில் கி.மு. 500 ஆம் ஆண்டளவில் அதுபோன்ற மாதிரி (Duplicate) ரௌலெற்றெட் மட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்கள் (Krishnan & Coningham 1997: 925). தமிழக ஆய்வுகளில் கி.மு. 300க்கும் முற்பட்ட கிரேக்க - உரோம வர்த்தகத்திற்கான சான்றுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, இலங்கையுடனான கிரேக்க வர்த்தகம் தமிழக வணிகர்களூடாக அல்லாது, நேரடியாகவே நடைபெற்றிருக்கலாம். மேலும், கந்தரோடையில் இருமாத காலத்தில் மேற்கொண்ட மேலாய்வில் மட்டும் 150 உரேம நாணயங்களை போல் பீரிஸ் பெற்றிருக்கிறார் (Pieris, P.E. 1919: 46). உரோமாபுரியுடனான நேரடி வர்த்தகம் இல்லாமல் இவ்வளவு பெருந்தொகையான நாணயங்கள் நிலத்தின் மேலாய்வுகளில் கிடைக்க நியாயம் இல்லை.

பூநகரியில் உரோம வர்த்தகத் தொடர்புகள் இருந்ததை உறுதிப்படுத்தும் ரௌலெற்றெட் மட்பாண்டங்கள் (Rouletted Ware), அரிற்றைன் மட்கலன்கள் (Arretine Ware), அம்போரா சாடி (Amphora Jar) ஆகிய மட்பாண்டங்களும், உரோம நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. இவற்றில் சில மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் கலந்து காணப்பட்டன (புஷ்பரட்ணம், ப. 1993: 49-50).

இவற்றில் ரௌலெற்றெட் மட்பாண்டங்கள் மிகவும் மிருதுவான, தூய்மையான களி மண்ணினால்

வனையப்பட்டு, உட்புறத்தில் சுற்றிவர நேர்த்தியாகப் பதியப்பட்ட 'ரௌலெற்' கோலங்களைக் கொண்டவை. இத்தகைய கலன்களின் உட்பக்கம் பளபளப்பான கறுப்பு நிறமாகவும், வெளிப்பக்கம் மினுமினுக்கும் குங்குமப்பூ நிறமாகவும் காணப்படும். இவ்வகைக் கலன்கள் கிண்ணங்களாகவும் தட்டுகளாகவும் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் இவ்வகையான கலன்கள் உரோமானிய வணிகர்களால் கொண்டுவரப்பட்டிருந்தாலும், காலப்போக்கில் இதுமாதிரியான கலன்கள் தமிழகத்தில் அரிக்கமேட்டிலும், இலங்கையில் அநுராதபுரத்திலும் உற்பத்தி செய்யப்பட்டதாக விமலா பெக்லி, றொபின் கொனிங்ஹாம் ஆகிய தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

உரோமாபுரியில் அறிற்ரியம் (*Arretium*) என்ற இடத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்ட பளபளப்பான சிவப்பு நிற மட்பாண்டங்கள் இவை. இம்மட்பாண்டத் துண்டுகள் பூநகரியில் மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 1993: 50).

கிரேக்க - உரோம வர்த்தகத்தில் மதுபானம் மற்றும் எண்ணெய் ஆகிய திரவப் பொருட்களைப் பாதுகாப்பதற்கும், வர்த்தகம் அல்லது போக்குவரத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் ஒருவகைச் சாடிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றை 'அம்போரா' சாடிகள் என அழைப்பார்கள். இவை மிருதுவான களி மண்ணினால் வனையப்பட்டு, பழுப்பு நிறத்தைக் கொண்டவையாக உள்ளன. இவற்றில் இரு வகையான சாடிகள் தயாரிக்கப்பட்டன. ஒரு வகையான சாடிகள் அகலமான கழுத்தும், வளைவான அடிப்பகுதியும், அடியில் நிலத்தில் வைப்பதற்கேற்ப ஒரு வளையமும் கொண்டவை. மற்றொரு வகையான சாடி ஒடுங்கிய கழுத்தும், கைப்பிடியும், கப்பலில் மரச் சட்டங்களுக்கிடையே பொருத்தி வைப்பதற்கேற்ப கூர்மையான அடிப்பகுதியையும் கொண்டிருக்கும். பூநகரியில் பள்ளிக்குடாவில் ஒன்றரை அடி உயரமான முழுமையான, அடிப்பக்கம் வளைந்த வகையான சாடி கிடைத்திருக்கிறது.

## உரோம நாணயங்கள்

மேற்கூறப்பட்ட மட்கலன்கள் காணப்பட்ட இடங்களிலும், பூநகரிப் பிராந்தியத்தின் வேறு சில இடங்களிலும் உரோமப் பேரரசு கால நாணயங்கள் சில கண்டெடுக்கப்பட்டன. கந்தரோடையில் கி.மு. முதலாம் நூற்றாண்டிற்கும் - கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது. பூநகரிப் பகுதியில் செம்பினால் செய்யப்பட்ட வட்ட நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் சிலவற்றின் முன்பக்கத்தில் உரோமப் பேரரசின் கிரீடம் தரித்த அரசரின் தலையும், பின் பக்கத்தில் இரு போர் வீரர்களினதும், ஒரு சிலுவையின் உருவமும் உள்ளன. ஒரு நாணயத்தில் காணப்படும் அரசனின் கிரீடம் தரித்த தலையையும், அருகே காணப்படும் பெயரையும் கொண்டு அது ஒகஸ்தஸ் சீசர் என அடையாளம் காண முடிகிறது (புஷ்பரட்ணம், ப. 1993: 51).

## அரேபிய - சீன வர்த்தகம்

வட இலங்கையில் உரோமப் பேரரசுடனான வர்த்தகத்தைத் தொடர்ந்து அரேபிய, பாரசீக, சீன வர்த்தக நடவடிக்கைகள் யாழ்ப்பாணக் கோட்டை, கந்தரோடை ஆகிய இடங்களில் தொடர்ந்ததை அவ்விடங்களில் கிடைத்த அந்நாடுகளின் மட்பாண்டங்கள், நாணயங்கள் என்பனவற்றின் மூலமாக அறிய முடிகிறது என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

அவ்வாறே மாந்தையும், அதற்கு வடக்கிலமைந்த பூநகரியும் உரோம வர்த்தகத்தைத் தொடர்ந்து அரேபிய, சீன நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதற்கான சான்றுகளை இவ்விடங்களில் காணப்படும் மட்பாண்டங்களைக் கொண்டு அறிய முடிகிறது. அரேபிய மற்றும் சீன மட்பாண்டங்கள் கல்முனை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 1993: 52).

## தமிழகத் தொடர்புகள்

தமிழகத்தில் பல்லவ, பாண்டிய அரசுகள் எழுச்சி பெற்ற ஆரம்ப கி.பி. நூற்றாண்டுகளில் அவர்களின் செல்வாக்கு பூநகரி வரை நீடித்தமைக்கு சில சான்றுகள் காணப்படுகின்றன. பூநகரியிலுள்ள காஞ்சிப் புலவு, காஞ்சி மீனாட்சி, பல்லவக் குளம் போன்ற இடப்பெயர்களை நோக்குமிடத்து அவை பல்லவத் தொடர்பினால் ஏற்பட்டவை எனக் கருத இடமுண்டு. கல்முனை, வெட்டுக்காடு, ஈழவூர் ஆகிய இடங்களில் கிடைத்த பாண்டிய நாணயங்களின் பயன்பாடு 10 ஆம் நூற்றாண்டுடன் மறைந்து போகிறது.

இலங்கையில் சோழராட்சி ஆரம்பிக்க முன்னரே

சோழப் பேரரசுடனான பூநகரி வர்த்தகம் நடைபெற்றிருக்கும். இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் அவர்களின் தலைநகராகப் பொலநறுவை இருந்த போதிலும் அவர்களது நடவடிக்கைகள் வடஇலங்கை முழுவதிலும் பரவியிருந்தது. மண்ணித்தலை, வெட்டுக்காடு, ஈழவூர் ஆகிய இடங்களில் இராஜராஜன், இராஜேந்திர சோழன் கால நாணயங்கள் கிடைத்துள்ளன (புஷ்பரட்ணம், ப. 1993: 64).

(இந்த இயலில் இடம்பெறும் அவர்களது மூல உரைகளையும், படங்களையும் உபயோகிப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் எனக்கு வரையறைக்கு உட்படுத்தப்படாத அநுமதி (Unrestricted Permission) வழங்கிய பேராசிரியர்கள் ஜோன் காஸ்வெல், பொன்னம்பலம் இரகுபதி, பரமு புஷ்பரட்ணம் ஆகிய கற்கைநெறி பேணிய தொல்லியல் ஆய்வாளர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகள் உரியது.)

## உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


CARSWELL, JOHN (1978): China and Islam: A Survey of the Coast of India and Ceylon, Transactions of the Oriental Ceramic Society, Vol. 42, 1977- 1978.

8. CODRINGTON, H.W. (1924): Ceylon Coins and Currency, Colombo.

DERANIYAGALA, P.E.P. (1953): "FerroLithic, an Early Historic Terracotta Stotnary and a Cist from Ceylon" in Spolia Zeylanica, Vol. 27, Part I, pp 133- 138, Colombo.

DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Dept. of Archaeology, Colombo. pp 686- 688.

9. DERANIYAGALA, S.U. (1996): Pre and Protohistoric Settlement in Sri Lanka; Proceedings of the XIII Congress, International Union of Prehistoric and Protohistoric Sciences, Forli, Italy, 814 September 1996.

10. INDRAPALA, K. (1969): "Nayintvu inscription of Parkramabhu" in Tamil Inscriptions of the Jaffna District.

11. KRISHNAN, K. & CONONGHAM, R.A.E. (1997): "Microstructural Analysis of Samples of Rouletted Ware and Associated Pottery from Anuradhapura, Sri Lanka" in E.R. Allchin & B. Allchin (eds.) South Asian Archaeol ogy, vol. 2., Oxford and IBH, New Delhi.

12. MAHADEVAN, IRAVATHAM (2003): Early Tamil Epigraphy, From the Earliest times to the sixth century A.D., Harvard University, Cambridge, MA., USA.

13. MAHAVAMSA (1993 reprint): Ed. & Translated by Wilhelm Geiger, Asian Educational Services, New Delhi & Madras.

14. NILAKANTA SASTRI (1958): History of South India, Oxford University Press.

15. PIERIS, P.E. (1919): 'Nagadipa and Buddhist Remains in Jaffna', Part II, Journal of the Royal Asiatic Society (C.B.), Vol. XVIII, No. 72., Colombo.

16. 12. PIERIS, P.E. (1920): The Kingdom of Jaffnapatam 1645, Ceylon Daily News Printers, Colombo.

17. RAGUPATHY, P. (1987): Early Settlements in Jaffna: An Archaeological Survey, Madras.

18. SITRAMPALAM, S.K. ((1990): The Megalithic Culture of Sri Lanka, Unpublished Ph.D. Thesis, University of Poona, Poona.

19. THIAGARAJAH, SIVA (2011): Peoples and Cultures of Early Sri Lanka, Kingston, UK.

20. THIAGARAJAH, SIVA (2016): Kantarodai Civilization of Ancient Jaffna, Kumaran Book House, Colombo.

21. இரா. சிவானந்தம் (பதிப்பாசிரியர்) (2019): கீழடி: வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம், தமிழ்நாடு அரசு, சென்னை.

22. 1ஞானப்பிரகாசர், சுவாமி (1928): யாழ்ப்பாண வைபவ விமர்சனம், அச்சுவேலி.

23. புஷ்பரட்ணம், பரமு (1993): பூநகரி - தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

24. மகாதேவன், ஐராவதம் (1990): தமிழ் பிராமி சாசனங்கள், தினமணி, 01.07.1990, சென்னை.

25. மணிமேகலை (பதிப்பு): சாமிநாதையர். உ.வே. (1968): ஆறாம் பதிப்பு, அறம் பதிப்பகம், சென்னை.

ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு ‘திக்குகள் எட்டும்’ என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.




**சிவராஜா ரூபன்**

ரூபன் சிவராஜா அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. எதிர்ப்பரசியல்’, ‘அதிகார நலனும் அரசியல் நகர்வும்’ (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), ‘எழுதிக் கடக்கின்ற தூரம்’, ‘சொற்களைச் செமிக்கும் கடல் (கவிதைத் தொகுப்பு), ‘கலைப்பேச்சு தொகுதி 1, தொகுதி 2’ (திரை நூல் அரங்கு), ‘’ என்பன இவரது படைப்புகளாகும்


# மாலதி எழுதிய ‘எனது தேசத்தில் கடந்துபோன ஒரு தருணம்’ தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் அரசின் இறுதி ஆண்டுகள்

**பகுதி** 2

இந்நூலின் முதல் எட்டு அத்தியாயங்களையும் திக்குகள் எட்டு தொடரின் கடந்த பாகத்திற் பார்த்திருந்தோம். இப்பாகம் அந்நூலின் மீதமுள்ள அத்தியாயங்கள் மீது கவனம் செலுத்துகின்றது. புலிகளின் நிழல் அரசின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் நிலவிய சமூக, அரசியல், வாழ்வியல் மற்றும் வரலாற்றுச் சூழல்களையும் போரின் விளைவாக அங்கு ஏற்பட்ட மாற்றங்களையும் இந்த அத்தியாயங்கள் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் விவரிக்கின்றன. போர் நிறுத்தம் முறிந்து மீண்டும் போருக்கு இட்டுச்சென்ற காரணிகள் முதல் முள்ளிவாய்க்கால் வரையான நகர்வு, தடுப்பு முகாம் அவலங்கள் உட்பட்ட போராட்டத்தின் முடிவையும் புலிகளின் நிழல் அரசின் சிதைவையும் இந்நூல் பேசுகின்றது. ‘சிறார் போராளிகள்’, ‘சமூக விவாதங்கள்’, ‘பெண்கள் விடுதலையின் வன்னிப் பாணி’, ‘வன்னிச் சமூக வெளி’, ‘போர் நிறுத்த கால ஒருங்கிணைப்புகள்’, ‘முள்ளிவாய்க்காலை நோக்கிய மெதுநடை’, ‘தடுப்பு முகாம்கள்’, ‘எந்த நாடும் தனித் தீவல்ல’ ஆகியன அத்தியாயங்களின் தலைப்புகளாகும்.

### சிறார் போராளிகள்: வரலாற்றுப் பார்வை

சிறார் போராளிகள் என்ற அத்தியாயம் வரலாற்றுத் தகவல் ரீதியாக புலிகள் இயக்கத்தின் ஆட்சேர்ப்பு அணுகுமுறைகளை, குறிப்பாகச் சிறார் போராளிகள் சார் சூழமைவுகளை முன்வைக்கின்றது. அந்த விவகாரம் சார்ந்த உள்ளக, அதாவது புலிகள் மற்றும் தமிழ்ச் சமூகத்தின் பார்வை, சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஒரு பாரிய விவகாரமாகப் பார்க்கப்பட்ட புறநிலை குறித்தும் பேசுகின்றது.

புலிகள் இயக்கம் அதன் ஆரம்பக் கட்டங்களில் (1980களில்) வயது குறைந்தவர்களை இயக்கத்திற் சேர்க்கத் தொடங்கியது. முதலில், பெற்றோர்கள் இல்லாத, பராமரிக்க ஆளில்லாத குழந்தைகளுக்குக் கல்வி அளித்து, உரிய வயது வந்த போது போராளிகளாக இணைத்தது. காலப்போக்கில் 14 - 17 வயதுடையவர்களைச் சேர்க்கத் தொடங்கியது.

ஒரு கட்டத்திற் கட்டாய ஆட்சேர்ப்புகளையும் புலிகள் இயக்கம் மேற்கொண்டது. பாடசாலைகளில் நேரடியாகச் சென்று பரப்புரைகளை மேற்கொண்டும் இயக்கத்தில் இணைக்கும் செயற்பாடுகளைச் செய்துள்ளது. ‘குடும்பத்திற்கு ஒரு போராளி (வீட்டுக்கொரு வீரர் நாட்டுக்காக)’ என்ற திட்டத்தினாற் பல குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளைக் கட்டாயத்தின் பேரில் புலிகள் இயக்கத்திற்கு வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

1980களில், 18 வயதிற்கு உட்பட்டவர்களை இராணுவம் மற்றும் ஆயுதப் போராட்ட இயக்கங்களிற் சேர்ப்பதைத் தடைசெய்யும் எந்த சர்வதேசச் சட்டமும் அமுலில் இருக்கவில்லை. 1989 இற்தான் ஐ.நா சிறுவர் உரிமைகள் உடன்படிக்கையானது, வயதெல்லையைப் பதினைந்தாக (15) நிர்ணயித்தது. 1990களில், ஐ.நா மற்றும் சர்வதேச தன்னார்வ அமைப்புகளின் கூடுதல் கவனம் இது விடயத்திற் புலிகளுக்கு எதிரான சர்வதேச அழுத்தம் அதிகரிக்கக் காரணமாயிற்று.

17 வயதிற்கு உட்பட்டவர்களை இயக்கத்தில் இணைப்பதை நிறுத்துவதாகப் புலிகள் இயக்கம் 1998 இல் ஐ.நாவிற்கு வாக்குறுதி அளித்தது. அதன் தொடர்ச்சியாக இவ்விவகாரம் சர்வதேச விவாதமாகவும் மாறியது.

சிறார் போராளிகள் விவகாரத்தில் தமிழ்ச் சூழலின் உள்ளார்ந்த சமூக, பண்பாட்டு மற்றும் போரின் நேரடி விளைவுகளின் பாற்பட்ட புலிகளின் அணுகுமுறைக்கும், சர்வதேச சிறார் படைச்சேர்ப்பிற்கு எதிரான சர்வதேசப் பரப்புரைக்குமிடையில் பாரிய முரண்பாடு நிலவியது. புலிகள் அமைப்பின் விதுசா, துர்க்கா உட்பட்ட பெண்கள் இராணுவப்பிரிவின் பொறுப்பாளர்கள், சர்வதேசத்தின் விமர்சனங்கள் நியாயமற்றவை எனக் கருதினர். இருந்தபோதும் 17 வயதிற்கு உட்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தனர். 17 வயதிற்கு உட்பட்டவர்களைச் சேர்ப்பதில்லை என்ற புலிகளின் வாக்குறுதிக்குப் பின்னரும் ஐ.நா சிறுவர் நிதியம் (UNICEF) உட்பட்ட சர்வதேச அமைப்புகள், புலிகளுக்கு எதிராக அறிக்கையிட்டன.

‘UNICEF’ நிறுவனத்துடனான ஒத்துழைப்பிற்காக தனியான சிறார் பாதுகாப்பு அதிகாரசபையினை (Child Protection Authority) புலிகள் அமைப்பு உருவாக்கியது. ஆனால் அதன் நடவடிக்கைகள் அதிகம் அரசியல் மயப்பட்டவையாக அமைந்தமையினால், உரிய மாற்றங்களும் விளைவுகளும் நிகழவில்லை. புலிகள் இயக்க உறுப்பினர்கள் வயது குறைந்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்தால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புலிகள் அமைப்புச் சார்பில் இந்த விவகாரத்தினை அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அதிகம் கவனித்தார் என்று விவரிக்கின்றார் மாலதி. 2006 - 2007 காலப்பகுதியில் 17 வயதிற்கு உட்பட்டவர்களை ஆட்சேர்ப்புச் செய்வது நிறுத்தப்பட்டிருந்ததோடு, ஏற்கனவே சேர்க்கப்பட்ட வயது குறைந்தவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளும்

முன்னெடுக்கப்பட்டன. 2008 இல் ஆட்சேர்ப்புக்கான குறைந்தபட்ச வயது 18 என நிர்ணயிக்கப்பட்டது.

## சவால்களும் விமர்சனங்களும்

'UNICEF' மற்றும் சர்வதேச ஊடகங்கள், புலிகள் மீது சிறார் படைச்சேர்ப்புத் தொடர்பான விமர்சனங்களைத் தொடர்ச்சியாக முன்வைத்தன. பல சமயங்களிற் தவறான தகவல்களுடனும் தவறான முறையிலும் அறிக்கையிட்டன. உதராணமாக, சில குழந்தைகள் சுனாமிக்குப் பின்னர் புலிகள் நிர்வகிக்கும் சிறார் இல்லங்களில் பராமரிக்கப்பட்டமை கூட தவறாகச் சிறார் போராளிகளாகப் பதிவு செய்யப்பட்டது. சிறார் போராளிகள் விவகாரத்திற் புலிகள் மீதான விமர்சனங்கள் ஒற்றைப் பரிமாணப் பிரசாரங்களால் வழிநடத்தப்பட்டதாக விமர்சிக்கும் மாலதி, இது விடயத்தில் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் மாற்றங்களும் உள்ளக மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச அழுத்தங்கள் என்ற இருமுனை விளைவுகள் என்றும் கருதுகின்றார். இந்த அத்தியாயம் சிறார் போராளிகள் விவகாரம் குறித்த பல்பரிமாணச் சூழமைவுகளையும் சிக்கல்கள், சவால்களையும் முன்வைக்கின்றது. சிக்கலான தன்மைகளையும் முரண்களையும் ஈழத்தின் உள்ளகச் சூழலுக்கும் சர்வதேசப் புரிதல்களுக்குமிடையில் வைத்து ஆராய்கிறது; அனுபவரீதியான தகவல்களுடன் முன்வைக்கின்றது.

### 'சமூக விவாதங்கள்': புலிகளின் அறிவுத்தள ஈடுபாடு

சமூக விவாதங்கள் எனும் தலைப்பிலான அத்தியாயம் விடுதலைப்புலிகளின் உள்ளக மற்றும் வெளியக விவாதங்கள் குறித்த பார்வையை முன்வைக்கின்றது. அதாவது புலிகள் தமது அமைப்பிற்குள்ளும் பரந்த தமிழ்ச் சமூகத்திலும், எவ்வாறான சமூக, அரசியல் விவாதங்களில் ஈடுபட்டிருந்தார்கள், எவ்வாறான கருத்துகள், விவாதங்களை அனுமதித்தார்கள் என்பதை ஆராய்கிறது.

சமூகநீதி உட்பட்ட கொள்கை தொடர்பான விவாதங்களுக்கான இடம் புலிகளிடத்தில் நிலவியது. அவை, கோட்பாடாக நிலைநிறுத்துதல் என்பதற்கு அப்பால், செயல்பூர்வ நோக்கங்களைக் கொண்டிருந்தன. தனியான பிரிவுகளை நிறுவி இத்தகு செயற்பாடுகளைப் புலிகள் முன்னெடுத்தனர். நீதித்துறை அதற்கான உதாரணமாக முன்வைக்கப்படுகின்றது. வன்னியில் சட்ட நிபுணர்களிற் பெரும்பான்மையினர் தொழில்முறை சாராதோராக இருந்தபோதும், ஆளுமையுடையவர்களாக விளங்கினர். இது சட்டரீதியான விவாதங்கள், நடவடிக்கைகளை அர்த்தபூர்வமாக்கின.

சிறார் போராளிகள், ஊடக சுதந்திரம், பெண்கள் உரிமை, குடும்பங்களில் வேலைப் பங்கீடு, சட்டத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு, கட்டாய ஆட்சேர்ப்பு, பாரம்பரிய உடை மற்றும் தமிழ்ப் பெயர்கள் உட்பட்ட பேசுபொருட்கள் சமூக, அரசியல், ஊடகத் தளங்களில் விவாதப் பொருட்களாக இருந்தன. வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் மையத்தில் இணைந்து பணியாற்றியபோது தனக்குக் கிட்டிய அனுபவங்கள், பொதுமக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அவற்றின் தன்மைகளையும் உள்வாங்க வாய்ப்பாகவும் அமைந்தது என்று பதிவு செய்கிறார் மாலதி. மனித உரிமைகள் மையத்திற் பணியாற்றிய ஊழியர்கள், போரினாற் பாதிக்கப்பட்ட இளையவர்கள், பொதுமக்களே. இருப்பினும் அவர்கள் திறனும் ஊக்கமும் கொண்டவர்களாக இருந்தனர்.

2006 இற்குப் பின்னர், அதாவது A9 பாதை மூடப்பட்ட பின், உரையாடல்கள் புலிகளின் சமாதானச் செயலகத்தை நோக்கி அதிகம் திரும்பியது. அங்கு விவாதங்கள் உயிர்ப்புடன் இடம்பெற்றன. விவாதங்களிற் பங்கேற்றவர்கள் கல்விசார் தகைமையுடையவர்களாகவும் இருந்தனர். கடந்தகாலப் போர்களையும் தோழர்களையும் நினைவுகூர்வதில் புலிகளின் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இவ்வகை உரையாடல்களும் பகிர்வுகளும் அவர்களின் மன அழுத்தங்களுக்குரிய உணர்வுபூர்வமான சிகிச்சையாகவும் கொள்ளத்தக்கது.

2007 கிரிக்கெட் உலகக் கோப்பை, புலிகளின் உறுப்பினர்களிடையே எதிர்பாராத விவாதத்தை ஏற்படுத்தியது. இலங்கை அணிக்காகக் காட்டிய உற்சாகம் சில தமிழர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பெண் போராளிகள் பலரும், பெரும்பாலான ஆண் போராளிகளும் இலங்கையின் தேசிய அணியை ஆதரிக்க மறுத்தனர். ஆனால், முக்கிய ஆண் போராளிகளிற் சிலர், இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஆதரவு தெரிவித்தனர். கிரிக்கெட் மற்றும் தமிழ்த் தேசியவாதம் குறித்த இந்த முரண்பாடு, அவதானிகள் மத்தியில் கேள்விகளை எழுப்பியது.

## ஆளுமைகள்

இந்த அத்தியாயம் மேலும், புலிகள் அமைப்பில் 2006 - 2009 காலப்பகுதியில் ஏற்பட்ட அறிவுசார், சமூக மற்றும் தார்மீகப் பரிமாணங்களையும், முக்கியமான ஆளுமைகள் மற்றும் தமிழீழ வாழ்வின் உள்ளக முரண்பாடுகளையும் மையமாகக் கொண்டு நகர்கிறது. விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், தளபதிகளான இளந்திரையன், புலித்தேவன், தமிழேந்தி போன்றோர் பற்றிய தனது பார்வையைப் பகிர்ந்துள்ளார் மாலதி.

சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் சிந்தனைமிக்கவர். கனிவான, தலைமைத்துவப் பண்புகொண்டவராக வர்ணிக்கப்படுகிறார். பெண்களின் சமத்துவ உரிமையில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். பெண்களின் வீட்டுப்பணிச் சுமைகளைக் குறைக்கும் வழிகள், பொதுப் பணிகளில் அவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் முயற்சிகள் குறித்து அவர் அடிக்கடி விவாதித்ததாக மாலதி குறிப்பிடுகின்றார்.

இளந்திரையன் (மார்ஷல்), மொழிபெயர்ப்புத் திறன்மிக்கவர் என்பதோடு, பரந்த அறிவாற்றலும் படைப்பாற்றலும் கொண்டவராக வர்ணிக்கப்படுகின்றார். ஆனால் அவரது திறன்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும் மாலதி கருதுகின்றார். புலித்தேவன் மற்றும் இளந்திரையன் ஆகியோர் பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆதரவளித்தாலும், அவர்கள் வகித்த பொறுப்புகளின் மேலாதிக்கச் சூழ்நிலைகளுக்குள் முழுமையான சமத்துவத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. 2009 - மே சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இளந்திரையன் காணாமல் ஆக்கப்பட்டார் என்பது, புலிகள் அமைப்பைச் சேர்ந்த அறிவார்ந்த ஆளுமைகளின் துயரமான முடிவின் சாட்சியமாக உள்ளது.

புலிகளின் இன்னுமொரு மூத்த உறுப்பினர் தமிழேந்தி, தமிழ் வளர்ச்சி சார்ந்து அதிகம் அறியப்பட்டவர். பிறமொழிச் சொற் பயன்பாடுகளைத் தமிழிலிருந்து ஒழிப்பது, தூய தமிழ்ப் பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டும் பரப்புரைச் செயற்பாடுகளை மேற்கொள்வது ஆகியவற்றைத் தீவிரமாக முன்னெடுத்தவர். அவருடைய தீவிர மொழித் தேசியவாதம் பாராட்டுதலைப் பெற்ற அதேவேளை, கிண்டலுக்கும் உட்பட்டது. இருப்பினும் அவரது முனைப்பு வன்னி மக்களிற் குறிப்பிட்ட தொகுதியினர் மத்தியில் 'தூய' தமிழ் பேசும் பண்பை உருவாக்கியது. இறுதிப் போரில் அவரும் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோரின் மகள்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுத்த அனுபவத்தை நூலாசிரியர் விவரிக்கிறார். அந்தச் சிறுமிகள் எத்தகு தனிமைச் சூழலில் வாழ்ந்தனர் என்பதை அக்கற்பித்தல் காலத்தில் உணர்ந்ததாகவும் கூறுகின்றார். புத்திசாலிக் குழந்தைகளாக அவர்கள் இருந்தபோதும், பாதுகாப்புக் காரணங்களால் விளையாட்டு உட்பட்ட குழந்தைப் பருவ அனுபவங்கள் அவர்களுக்கு வாய்க்கவில்லை. இருவரும் 2009 - மே மாதத்திற்குப் பிறகு காணாமல் போனோராகினர்.

## கட்டாய ஆட்சேர்ப்பின் விளைவுகள்

2006 நடுப்பகுதியிலிருந்து புலிகளின் அரசியற்கூட்டங்கள் ஆட்சேர்ப்பில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கின. தன்னார்வ ரீதியான இணைவு குறைந்ததால், 'வீட்டுக்கு ஒருவர்' கட்டாய ஆட்சேர்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கினர். இது புலி உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்குமிடையில் ஆழமான தார்மீக, உணர்வுசார் முரண்பாடுகளை ஏற்படுத்தியது.

பல குடும்பங்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஒளித்துவைக்கத் தொடங்கினர். அதேவேளை சிலர் கட்டாய ஆட்சேர்ப்பினைத் தேசக் கடமையென்று நியாயப்படுத்தினர். ஐ.நா உட்பட்ட சர்வதேச தன்னார்வ நிறுவனங்களின் உள்ளூர் (தமிழ்) ஊழியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட விதிவிலக்குகள் தீவிரமாக விவாதிக்கப்பட்டன. இது கொள்கை மற்றும் நடைமுறைக்கிடையிலான பதற்றத்தை வெளிப்படுத்தியது. இந்தக் கொள்கை சமூக அமைப்பைப் பாதித்தது. கட்டாய மற்றும் வீட்டுக்கொரு வீரர் திட்டம் அவசர, இளவயதுத் திருமணங்களுக்கும் இட்டுச்சென்றது. புலிகள் அமைப்பில் தீவிர விசுவாசத்தோடு இயங்கிய உறுப்பினர்கள் மத்தியிற்கூட இது தார்மீகப் பதற்றங்களையும் அதிருப்திகளையும் உருவாக்கியது.

புலி உறுப்பினர்களிற் பலர், தமது கட்டாய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஐரோப்பிய நாடுகளின் போர்க்கால நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுத் தம்மை நியாயப்படுத்தினர். இருப்பினும், விடுதலை இலட்சியத்திற்கும் கட்டாய நடவடிக்கைக்கும் இடையேயான நெறிமுறை முரண்பாடு அவர்களிற் பலரை உள்ளார உறுத்தியது.

## பெண் விடுதலையின் வன்னிப் பாணி

இந்த அத்தியாயம் புலிகள் அமைப்பிற்குள் நிலவிய பாலினம், விடுதலை, இராணுவ, அரசியல் வகிபாகங்கள் குறித்த பார்வையை முன்வைக்கின்றது. பண்பாட்டுக் கூறுகள் மற்றும் அதன் அக - புறச் சூழல்களை முன்னிறுத்தி, புலிகள் இயக்கத்தில் பெண் போராளிகளின் வகிபாகத்தையும், சமூகம் அவர்களை நோக்கும் பார்வையையும் இந்நூல் ஆராய்கிறது. மேற்கத்திய பெண் விடுதலைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறான, அதேவேளை பெண்களுக்கான தனித்துவமான உரிமை, அதிகாரமளிப்பினை பெண்களின் ஆயுதப்போராட்டப் பங்கேற்பு உருவாக்கியதாக மாலதி பதிவு செய்கின்றார்.

### தமிழ்ப் பெண்கள்: ஆயுதமேந்தலின் வகிபாகம்

புலிகள் அமைப்பிற் பெண் போராளிகள் ஒரு புதிய சமூக மாதிரியாக (Social Model) உருவாகினர். தன்னம்பிக்கை, ஒழுக்கம் என்பவற்றோடு பொதுவெளியிற் சுதந்திரமாகவும் அதிகாரம் மிக்கவர்களாகவும் செயற்படுகின்ற நிலை உருவாக்கப்பட்டது.

இராணுவப் பயிற்சி, போர்க்களப் பங்கேற்பு ஆகியன பாரம்பரிய ஆணாதிக்க சமூக அமைப்பில் பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்த சுயாதீனத்தையும் மதிப்பினையும் வழங்கின. பெண் போராளிகள் அடைந்த இந்தச் சுதந்திர இயங்குநிலை, பொதுச் சமூகத்திற்குள்ளும் பரவியது.

வன்னிப் பகுதியில் பெண்கள் வீட்டிற்கு வெளியே சென்று வேலை செய்தனர். மோட்டார் சைக்கிள் உட்பட்ட வாகனங்களை ஓட்டத்தொடங்கினர், பொதுத்துறைப் பணிகளிலும், பொறுப்புகளிலும் ஈடுபட்டனர். பெண்களின் உரிமை சார்ந்த சமூக மாற்றத்தின் அடையாளங்களை இலங்கையின் வேறெந்தப் பகுதிகளிலும் காணவியலாத அளவிற்கு வன்னியில் காணமுடிந்தது.

### பெண் விடுதலை: வன்னி – மேற்கு

வன்னியின் ‘பெண் விடுதலை’ மேற்கத்திய பெண் விடுதலைக் கோட்பாடுகளுடன் பொருந்தாதவை என்பதை நூலாசிரியர் விவரிக்கின்றார். அதனை, மேற்கிற்கு மாற்றான ஒரு கூட்டு நடைமுறை சார்ந்த பெண் விடுதலையாக மாலதி காண்கிறார். உயிர் வாழ்தலுக்கான போராட்டம், ஒருமைப்பாடு மற்றும் சமூகக் கூட்டுப்பொறுப்பு ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட பெண் விடுதலையாகவும் அதனை அவர் சித்திரிக்கின்றார்.

புலிகளின் நிர்வாகத்திற்குள் இயங்கிய பெண்கள் மேம்பாட்டு மற்றும் மறுவாழ்வு மையம் (CWDR), பெண்கள் ஆராய்ச்சி மையம் (CWR) போன்ற நிறுவனங்கள் பெண்களின் நலன், சட்ட ஆதரவு மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு மறுவாழ்வு போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுத்தன. புலிகளின் சிவில் நிர்வாகம் மற்றும் நிறுவனப் பணியாளர்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையினராகப் பெண்கள் இருந்தனர். சட்ட அமுலாக்கம் மற்றும் நீதித்துறை அமைப்புகளும் பாலின சமத்துவத்தைப் பிரதிபலிப்பனவாக இருந்தன. இது தெற்காசியச் சூழலில் குறிப்பிடத்தக்க சாதனை என்றும் மாலதி குறிப்பிடுகின்றார்.

### புலிகள் அமைப்பில் இணைவதற்கான தூண்டுதல்

பெண்கள் புலிகள் இயக்கத்தில் இணைவதற்கான பின்னணிகளையும் உந்துதல்களையும் எட்டு முக்கிய காரணிகளாக மாலதி வகைப்படுத்துகிறார். ஆயுதப் போராட்டத்தின் இராணுவப் பிரிவின் அங்கமாக ஆவதென்பது, இன ஒடுக்குமுறைப் பாதிப்பிற்கான எதிர்வினையாகவும், அதிகாரத்துடனான பலம்பெறுதலுக்கான (Empowerment) வடிகாலாகவும் இருந்தது.

1. இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட உறவினர்களுக்கு நீதிகோரல், கொன்ற தரப்பினைப் பழிவாங்கும் உணர்வு.
2. பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாப்பு மற்றும் இராணுவத் துன்புறுத்தலிலிருந்து பாதுகாப்பு.
3. போர்ச் சூழலினால் அடிக்கடி இடம்பெயர்தல், இயல்பு வாழ்வு பாதிக்கப்படும் வாழ்நிலைக்கு மாற்றாக புலிகள் அமைப்பில் இணைவது வாழ்க்கைக்கு அர்த்தம் அளிக்கும் யதார்த்தம்.
4. புலிகள் அமைப்பில் இயங்கிய வலுவான பெண் போராளிகளை முன்மாதிரிகளாகக் கொண்டு உந்துதல் பெற்றமை.
5. வீட்டுப் பணிச்சுமை, வறுமை, பசியிலிருந்து விடுபடும் முயற்சி.
6. புலிகளின் அரசியற் பரப்புரை, கொள்கை, ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்டமை.
7. பண்பாட்டுக் கிளர்ச்சி: நிச்சயிக்கப்பட்ட திருமணம் மற்றும் சீதனம் உட்பட்ட ஒடுக்குமுறையை நிராகரித்தல்.
8. வீட்டில் பாலியல் அல்லது உடல் வன்முறையிலிருந்து தப்பித்தல்.

மேற்குறிப்பிட்ட காரணிகள், கட்டமைப்பு ரீதியான இன மற்றும் சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான செயல் - தனிப்பட்ட உரிமை சார் முனைப்பு ஆகியவற்றின் கூட்டு விளைவாகப் பெண்கள் போர்க்காலத்தில் ஆயுதப் போராட்டத்தில் இணைவதற்கான புறநிலைகளாகப் பட்டியலிடப்படுகின்றன.

### புலிகள் அமைப்பில் பாலினம் பற்றிய புரிதலும் அணுகுமுறையும்

பெண்கள் ஆரம்பத்தில் பராமரிப்பாளர்களாகச் (Caregivers) சேர்ந்தனர், ஆனால் படிப்படியாக போராளிகளாகவும் நிர்வாகிகளாகவும் மாறினர். அமைப்பில் பாலின வேறுபாடு நிலவியது. ஒருபுறம்




பெண்களின் முன்னேற்றத்திற்குரிய தளமாகவும் (*Empowering*), மறுபுறம் ஆண்கள் ஆதிக்கம் கொண்ட துறைகளில் பெண்கள் முழுமையாக ஈடுபட முடியாத மட்டுப்படுத்தற் சூழல்களும் (*Limiting*) இருந்தன.

பெண்கள் தலைமைப் பதவிகளில் இருந்தாலும், அவர்களின் அதிகாரம் பெரும்பாலும் ஆண் மேலாளர்களால் வழிநடத்தப்பட்டது. இறுதியில் ஒட்டுமொத்த அதிகாரமும் கொண்டவராகப் பிரபாகரன் இருந்தார். பெண்களிற் சிலர் பாலினப் பிரச்சினைகள் குறித்து நேரடியாகப் பிரபாகரனைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புப் பெற்றிருந்தபோதும் தமது நிலைப்பாடுகளை வலியுறுத்தத் தயங்கினர். சமத்துவம் பேசும் இயக்கத்திலும் ஆணாதிக்க அம்சங்கள் உள்ளுறைந்திருந்தமையை இது காட்டுகிறது.

### அறிவுசார் பெண் விடுதலையின் பற்றாக்குறை

உதாரணமாக, அடேல் பாலசிங்கம் தலைமையில் நடத்தப்பட்ட சீதன, பெண் ஒடுக்குமுறை எதிர்ப்பு உட்பட்ட செயற்பாடுகள் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட வன்னிப் பகுதிக்கு நகர்ந்த பின்னர் மந்தமடைந்தன. கல்வி பெற்ற தலைமைத்துவ ஆளுமையுடையவர்கள் போர்களில் உயிரிழந்ததும், திறமை வாய்ந்தவர்களையும் போர் முன்னரங்குகளுக்கு அனுப்புகின்ற புலிகளின் சமத்துவ நடைமுறையும், பெண்கள் தொடர்பான அறிவுசார் தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தும் காரணிகளாகின.

பாரதி, வானதி போன்ற பெண் தலைமைத்துவ மற்றும் இலக்கிய ஆளுமைகள் போர்முனையில் உயிரிழந்தமை, இராணுவச் சமத்துவத்திற்குக் கொடுக்க நேர்ந்த விலையை உணர்த்துகிறது.

வன்னியின் பெண் விடுதலை என்பது அடிப்படையில் இராணுவமயமாக்கலின் மையத்திலிருந்து வடிவமைக்கப்பட்டிருந்தது. பெண்களின் உரிமைகள் புலிகளின் நிர்வாக அலகுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டன. ஆணாதிக்க மனப்பான்மை எதிர்க்கப்பட்டது. ஆனபோதும் இது போர் மூலம் பிறந்த சுதந்திரம்; அமைதியால் மேம்படுத்தப்பட்டதல்ல; அதற்குரிய சூழலும் நிலவவில்லை. இது தனித்துவமான, உள்ளூர்ப் பெண் விடுதலை. நிகழ்த்தப்பட்ட, சாத்தியப்பட்ட பெண்களுக்கான இந்த அதிகாரமளிப்பு என்பது தற்காலிகமானதும் நசுங்கவும் நசுக்கப்படவும் கூடியது என்று கூறும் மாலதி, புலிகளின் நிழல் அரசின் வீழ்ச்சியுடன் அது மங்கிவிட்டது என்றும் பதிவு செய்கின்றார்.

### பெண் விடுதலைச் சவால்கள்

பிரதான சவால் அல்லது முரண்பாடு, பெண்களுக்கான அதிகாரமளிப்பிற்கும் புலிகள் இயக்கத்திற்குள் நிலவிய கட்டமைப்பு ரீதியான ஆணாதிக்கத்திற்குமிடையிலானது.

இராணுவச் சீருடை, ஜீன்ஸ், சேட் மற்றும் இடுப்புப் பட்டியுடனான பெண் போராளிகளின் தோற்றமானது, தன்னம்பிக்கை, வலிமை, மிடுக்கு போன்றவற்றின் குறியீடுகளாக இருந்தன. அத்தோடு பாரம்பரியத் தமிழ் விழுமியங்களிலிருந்து ஓர் உடைப்பை நிகழ்த்துவதாகவும் அமைந்தது. தமிழ்ச் சூழலிற்

செயல்வலு, தன்னம்பிக்கை, ஒழுக்கம் ஆகியவற்றுடனான பெண்மை குறித்த புதியதொரு உருவகத்தையும் இது பிரதிபலித்தது. அதேவேளை புலிகளின் சிவில் மற்றும் அமைப்பு சார் நிர்வாகத் துறைகளிற் பணியாற்றிய பொதுச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் பாரம்பரிய 'சேலை' அணிய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது தமிழ்ச் சமூகத்தின் பெண்மைக்கான பாரம்பரியத்தையும் கட்டுப்பாட்டினையும் பேணும் முனைப்பிலானது. புலிகளின் அதிகாரமிக்க ஆண் பொறுப்பாளர்களால் விதிக்கப்பட்ட இந்த உடை நடைமுறையானது, பாலினச் சமத்துவத்தை ஆதரிப்பதாகச் சொல்லும் இயக்கத்துக்குள்ளும் பாரம்பரிய ஆண்மைய நிலைப்பாடுகள் எவ்வளவு ஆழமாக நிலைத்திருந்தன என்பதை வெளிப்படுத்துகிறது என்று வாதிடுகிறார் மாலதி. இந்தச் 'சேலை விதி' என்பது விடுதலை என்ற சொல்லாட்சிக்கும் நடைமுறைக் கட்டுப்பாட்டுக்கும் இடையிலான பரந்த முரண்பாட்டின் சிறிய உதாரணமாக நூலாசிரியரால் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

### பாலினச் சமத்துவம் குறித்த பிரபாகரனின் அக்கறை

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பாலினச் சமத்துவம் குறித்த அக்கறை இருந்ததாகக் குறிப்பிடுகின்றார் நூலாசிரியர். பெண்கள் போரில் கலந்துகொள்வதை எதிர்த்த ஆண் தளபதிகளைப் பிரபாகரன் மீறியதை நினைவுபடுத்துகின்றார். பெண் போராளிகளுக்காக பாரம்பரியமற்ற உடைகளை அணிய அனுமதித்தார் பிரபாகரன். ஆனால், அவருடைய ஆண் தளபதிகள் பெண்களின் உரிமைகளைப் புரிந்துகொள்ளும் விஷயத்தில் முற்றிலும் முற்போக்கான பார்வையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் கட்டமைப்புச் சார்ந்த ஆண்மையப் பழக்கங்கள் கொள்கைசார் மாற்றங்களை மீறி நீடித்திருந்தன.

பா. நடேசனுக்குப் பின் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பினைக் கையேற்ற இளங்கோ பற்றி மாலதி குறிப்பிடுகிறார். இவர் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான பயிற்சித் திட்டங்களைத் துவங்கினார். 'பெண் காவல்துறையினர்' மத்தியில் பாலின அடிப்படையிலான வன்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றார். பெண்கள் உரிமைகள், அவர்களுக்கான அதிகாரமளிப்புச் சார்ந்த இளங்கோவின் செயற்பாடுகளை அர்ப்பணிப்பு மிக்கனவாகவும், புதுமையான மனதைக் கவரும் வகையினவாகவும் வர்ணிக்கின்றார் மாலதி. ஆனால், போர் முடிவுக்கு வந்ததையடுத்து இளங்கோ என்ன ஆனார் என்பது குறித்த தகவல்கள் இல்லை. போர்களின் மோசமான முடிவு சீர்திருத்தவாதிகளை இல்லாதொழித்துவிடும் என்பதற்கான சாட்சியமாக இளங்கோ போன்றவர்களின் இழப்புக் குறிப்பிடப்படுகிறது.

இதுபோல், பெண்களுக்கு கராத்தே பயிற்சியும் வழங்கப்பட்டதை நினைவுகூருகின்றார். பெண்களை உடல் ரீதியாக தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும், சமூக ரீதியாக தைரியமானவர்களாகவும் இத்திட்டங்கள் மாற்றின. பாரம்பரியமாக்கப்பட்டு பெண்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட கலாசாரப் பண்பு, கீழ்ப்படிதல் நடைமுறைகளையும் இத்தகு திட்டங்கள் குறைத்தன.

திருமண உறவில் இணைந்த புலிகள் அமைப்பைச் சேர்ந்த தம்பதிகள் பொது மக்கள் மத்தியிலிருந்த தம்பதிகளை விடவும் சமத்துவத்தினைக் கொண்டிருந்ததாகத் தனது அவதானிப்பினை நூலாசிரியர் முன்வைக்கின்றார். புலிகள் அமைப்பின் ஆண்கள் பெண்களை மதித்தமை, பெண்கள் படைத்துறையில் செய்த பங்களிப்பை ஏற்கும் மனப்பான்மையுடன் தொடர்புடையது. பெண்களின் மறுமணம் என்பது பாரம்பரியத் தமிழ்ச் சமூகத்தில் அதிகம் நிகழாத ஒன்று. ஆனால் புலிகளின் உறுப்பினர்கள் மத்தியில் அது அதிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனப்பாங்கு நிலவியது. இது அழுத்தம்மிகு சூழலின் சமூக நவீனமயமாக்கலைக் குறிக்கிறது.

### வன்னியின் சமூக வெளி

வன்னியின் சமூக வெளி எனும் தலைப்பிலான அத்தியாயத்தில் வன்னியின் வாழ்வியற் சூழலை விரிவாக விளக்குகிறார். வன்னியானது நீண்ட காலமாக (பூர்விகமாக) அங்கு வசித்தவர்கள், யாழ்ப்பாணத்திலிருந்து (1995 யாழ். இடப்பெயர்வு) இடம்பெயர்ந்தோர், இராணுவ அடக்குமுறை மற்றும் வறுமை காரணமாகப் பிற பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்தோர் போன்றவர்கள் வாழும் நிலம். புலிகளின் நிர்வாக ஆட்சியின் கீழ் உருவான தனித்துவமான சமூகத்தின் முதன்மை அங்கமாகவும் இருந்தது.

வன்னிச் சமூகம் போரின் விளைவான பாரிய பாதிப்பின் குறியீடுகளைச் சுமந்திருந்தது. ஒவ்வொருவரும் இழப்புகளின் கதைகளைத் தம்மகத்தே கொண்டிருந்தாலும், அந்தப் பொது அனுபவங்கள் வலுவான சமூக ஒற்றுமையை உருவாக்கின. உணவுப் பகிர்வு, உணர்வுப் பகிர்வு, மற்றும் கூட்டுப் பராமரிப்பு போன்ற பண்பாட்டு இயல்புகள், மக்களின் நம்பிக்கைக்கு உந்துதலாய் அமைந்தன. இத்தகு பரஸ்பர

பரிவுணர்வும், பகிரப்பட்ட அடையாளமும், அவர்களுக்கு மன உறுதியை வழங்கின்.

இந்த அத்தியாயத்தில் வன்னி மக்களின் சமயப் பின்னணி, பின்பற்றல் நடைமுறைகள் சார்ந்த குறிப்புகள் உள்ளன. புலிகள் அமைப்பு மதச்சார்பற்ற அமைப்பாக இருந்தது. அதன் உறுப்பினர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டன. தனிப்பட்ட வாழ்க்கை (திருமணம் உட்பட) கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. பல ஆண்டுகள் சேவை செய்த பின்னர் மட்டுமே திருமணம் அனுமதிக்கப்பட்டது. திருமணத்திற்கு பிறகு, குடும்பத்துடன் வாழ அனுமதிக்கப்பட்டனர், ஆனால் மதச்சார்பு நடைமுறைகள் தனிப்பட்ட வகையிலேயே பின்பற்றப்பட்டன.

## இராணுவ - அரசியல் - சிவில் நிர்வாகக் கட்டமைப்பு

புலிகளின் கட்டமைப்பு ரீதியான பிரிவுகள், நிறுவன, நிர்வாக விவரங்களும் குறிப்பிடப்படுகின்றன. இராணுவம், அரசியல், நிதித்துறை, புலனாய்வுத்துறை, காவல்துறை, சர்வதேச விவகாரம் ஆகிய துறைகளைப் புலிகள் அமைப்புக் கொண்டிருந்தது. இத்துறைகள் ஒவ்வொன்றுக்கும் பல துணை அமைப்புகள் இருந்தன. பொது மக்களுக்கு நன்கு அறிமுகமானதும் வெளிப்படையாகத் தென்பட்டதுமான அமைப்பு, அரசியல் பிரிவாகும். இராணுவ மற்றும் புலனாய்வுத்துறை ஆகியன பொது மக்களிலிருந்து விலகியே இயங்கின. புலிகளின் சிவில் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டிருந்த உறுப்பினர்கள் அனைவரும்கூட இராணுவப் பயிற்சி பெற்றிருந்தனர்.

குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கான நலத்துறை அமைப்புகள், மையங்கள் இயங்கின. ஊடகம், சுகாதாரம், பொருளாதாரம், விளையாட்டு, கல்வி மற்றும் கலாசாரப் பிரிவுகளும் செயற்பட்டன. நீதிமன்றங்கள் மற்றும் நிர்வாக அமைப்புகளும் செயற்பட்டன. நிதிப்பிரிவு, மளிகைக் கடைகள், பண்ணைகள், போக்குவரத்துத்துறை மற்றும் சிறுதொழில்கள் ஆகியவற்றையும் புலிகளின் சிவில் நிர்வாகத்துறை இயக்கியது. பொது மக்களிற் பலர் இவற்றின் நிர்வாகப் பணிகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

சர்வதேசப் பிரிவு, புலிகளின் புலம்பெயர் நாடுகளின் கட்டமைப்புகளுடன் தொடர்பாடல்களையும் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தது. ஆனால், புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், புலம்பெயர் தமிழர்கள் ஈழப்போராட்டத்தின் மீதான உண்மையான அக்கறையுடனான செயற்பாடுகளைத் தொடரவில்லை.

## விடுதலைப் புலிகள் - பொது மக்கள் தொடர்பு

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் இடையிலான சமூகப் பிணைப்பு உணர்ச்சிபூர்வமாக இருந்ததாகப் பதிவிடுகிறார் மாலதி. பல குடும்பங்களில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருந்தனர். இந்த யதார்த்தமானது, புலிகள் இயக்கத்திற்கும் சமூகத்திற்குமிடையில் ஆழமான உறவை உருவாக்கியது.

புலிகளின் நிர்வாகங்களில் பொதுமக்களிற் பலர் முக்கியமான வேலைவாய்ப்பாளர்களாக இருந்தமையும் அந்த அமைப்புடன் மக்களை மேலும் இணைத்தது. ஆனால், கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் நிர்வாகக் குறைபாடுகள் பொது மக்களில் ஒரு பகுதியினர் விடுதலைப் புலிகளிலிருந்து தங்களை விலக்கிக்கொள்ள வழிவகுத்தன.

## போர் நிறுத்த கால நன்மைகள்

2002 ஆம் ஆண்டில் உருவான போர்நிறுத்த, சமாதான முன்னெடுப்பு, 2004 ஏற்பட்ட சுனாமிப் பேரழிவு ஆகியவை வன்னியில் பல்வேறு சர்வதேச நிறுவனங்களை (ஐ.நா., தன்னார்வ அமைப்புகள், SLMM) வருவித்தன. இதன் விளைவாகப் புதிய நிதி வருகை மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாகின. அதேவேளை இலங்கை அரசின் நிறுவனங்கள் வன்னியிற் செயற்பட்டுக் கொண்டிருந்தன, ஆனால் அவற்றின் அதிகாரம் பெயரளவிலேயே இருந்தன. அரச அலகுகளிற் தமிழர்கள் பணிகளில் அமர்த்தப்பட்டிருந்தாலும் கொழும்பிலிருந்து தான் உத்தரவுகள் வந்தன. இது ஓர் இரட்டை நிர்வாகச் சூழலை உருவாக்கியது. விடுதலைப் புலிகளின் நிறுவனங்கள் அரசுத் துறைகளைப் பதிலீடு செய்தன. குறிப்பாக சுகாதாரத்துறையிற் பணியாளர் பற்றாக்குறை காரணமாக, புலிகள் - இலங்கை அரச சுகாதாரத்துறை இடையே நெருக்கமான ஒத்துழைப்புச் சாத்தியப்பட்டது. கல்வித்துறை அரசு கட்டுப்பாட்டில் இருந்தாலும், விடுதலைப் புலிகள் தமது நிழல் நிர்வாகங்கள் மூலம் தமிழ் வரலாற்றை ஊக்குவித்து, பண்பாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தனர்.

புலிகளால் நிர்வகிக்கப்பட்ட பெண்கள் மேம்பாடு மற்றும் மறுவாழ்வு மையம் (CWDR - Centre for Women's Development and Rehabilitation) மற்றும் சுகாதாரப் பராமரிப்பு மையம் (CHC - Centre for Health Care) போன்ற அமைப்புகள் முக்கியமான சேவைகளை வழங்கின. விடுதலைப் புலிகள் மேற்பார்வையில் இந்நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மையும் செயற்திறனும் நிலைநிறுத்தப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (Tamil Rehabilitation Organization - TRO) வன்னியில் மிகப்பெரிய உள்ளூர் தன்னார்வ அமைப்பாக இருந்தது. இது குழந்தைகள், சிறார் நலன், சிறு கடன், சுயதொழிற் திட்டங்கள், கிராம வளர்ச்சி, நோர்வேஜிய தன்னார்வ நிறுவனத்துடன் இணைந்து மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் போன்ற திட்டங்களை முன்னெடுத்தது. புனர்வாழ்வுக் கழகம் பிரதானமாகப் புலம்பெயர் தமிழரின் நிதிப்பங்களிப்புடன், பல சர்வதேச தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்தும் செயற்பட்டது. 2007 இல், பயங்கரவாதத்திற்கான நிதிச் சேகரிப்புக் குற்றச்சாட்டுகளால் அந்நிறுவனம் சர்வதேச அளவிற் பல நாடுகளிற் தடைசெய்யப்பட்டது. ஆனாலும் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் இயங்கிய CWDR, CHC போன்ற அமைப்புகள் மீதான ஊழல் அல்லது தவறான நிதிக்கையாளுகை தொடர்பான குற்றங்களுக்கு எந்த ஆதாரமும் இருக்கவில்லை என்று நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

2002 - 2006 போர்நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிழல் அரசின் செயற்பாடுகள் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிவகுத்தன. கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்துறை, குழந்தைகள் பராமரிப்பு, மனித உரிமைகள், சூழலியல் உட்பட்ட பல துறைகளில் முன்னேற்றகரமான வளர்ச்சிகள் இடம்பெற்றன.

இந்த அத்தியாயம் வன்னியோடு இணைந்திருந்த சமூக - அரசியல் சூழலைச் சித்திரிக்கின்றது. விடுதலைப் புலிகள் ஓர் ஆயுத இயக்கமாக மட்டுமல்லாமல், ஓர் அரச கட்டமைப்பைக் கொண்டிருந்த அமைப்பாகவும் செயற்பட்டமையை விவரிக்கின்றது. அத்தோடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு மற்றும் இராணுவமயமாக்கல், தனிப்பட்ட சுதந்திரங்களை கட்டுப்படுத்தியதன் விளைவாக மக்கள் மத்தியில் ஒருவித மௌன எதிர்ப்பு நிலவியதையும் பதிவு செய்கிறது.

## முள்ளிவாய்க்கால் நோக்கிய மெதுநடை

முள்ளிவாய்க்காலை நோக்கிய மெதுவான நடை என்ற தலைப்பிலான அத்தியாயம் 2005 முதல் 2007 வரை தமிழ் நிலம் எவ்வாறு மெதுவாகக் குலைந்தது என்பதை விவரிக்கின்றது. சுனாமிக்குப் பின்னான சமாதான முயற்சிகள் சற்று நம்பிக்கையளித்த போதும், தொடர்ச்சியான கடத்தல்கள், படுகொலைகள், விமானக் குண்டுவீச்சுகள் மீண்டும் மக்களை அழிக்கத் தொடங்கின. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை அடுத்து, பொருளாதாரத் தடைகள், ஊடக மௌனம் என்பன நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தின. 2006 ஆம் ஆண்டு செஞ்சோலைக் குண்டுவீச்சும், 2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் கொலை செய்யப்பட்டதும் போர் முனைப்பினைத் தீவிரப்படுத்தின. இந்த ஆண்டுகள் முழுவதும், முழுமையான அழிவையும் இழப்புகளையும் நோக்கி வன்னி நிலம் மெதுமெதுவாகவும் துயரங்களுடனும் நகர்ந்ததாக மாலதி விவரிக்கிறார்.

முன்னைய சமாதான காலத்தின் நிலைத்தன்மை, இறுதிக் காலங்களில் ஏற்பட்ட பேரழிவுகளுடன் ஒப்பிடப்படுகிறது. தமிழர் தாயகத்தின் பௌதிக அழிவு, அதன் நிர்வாக அமைப்பின் முற்றுமுழுதான சிதைவு, மக்களின் பெருமெடுப்பிலான இடப்பெயர்வுகள், படுகொலைகள் விவரிக்கப்படுகின்றன. சமாதானம் குலைந்து, போருக்கு இட்டுச் செல்லப்பட்ட அரசியற் புறநிலைகளும் பேசப்படுகின்றன.

## தடுப்பு முகாம்கள்

2009 - மே உள்நாட்டுப் போரின் முடிவில், பல நூறாயிரக்கணக்கான தமிழ் மக்கள், அரசாங்கத்தின் இடைத்தங்கல் முகாம்களில் அடைக்கப்பட்டமையும் அங்கு அவர்கள் நடத்தப்பட்ட விதங்கள் தொடர்பாகவும் ‘தடுப்பு முகாம்கள்’ எனும் தலைப்பிலான அத்தியாயத்திற் பேசப்படுகின்றது. அம்முகாம்களில் மிகப்பெரியது வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த ‘மெனிக் ஃபார்ம்’. முகாமுக்குக் மக்கள் கொண்டு செல்லப்பட்ட பயணம் மிகவும் கொடூரமானது. ஓய்வு, உறக்கம், உணவு, தண்ணீர் இன்றிப் பொதுமக்கள் பல நாட்கள் தொடர்ச்சியாகப் பேருந்துகளில் அடைத்து வைக்கப்பட்டனர். இராணுவத்தால் திரும்பத்திரும்பப் பலமுறை விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர், அங்கு சனங்களால் நிறைந்து வழியும் கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டனர். கட்டிமுடிக்கப்படாத கழிப்பறைகள், போதிய குடிநீரின்மை, உணவுப்பற்றாக்குறை என அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட சூழலில் வைக்கப்பட்டனர். முகாம் முழுவதுமாக சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இராணுவத்தினர் இடம்பெயர்ந்த மக்களை முற்றிலும் கைதிகளாகவே நடத்தினர். வன்முறை, அச்சுறுத்தல், அவமதிப்புகள் வழமையாகியிருந்தன. ஆண்கள், பெண்கள், முதியவர்களைக்கூட அடிப்பது உட்பட்ட



Image Source - www.adressa.no

உடல்ரீதியான வன்முறைகளைப் பிரயோகிப்பதை இராணுவம் வழக்கமாகக் கொண்டிருந்தது.

நாளாந்த வாழ்நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்தன, குறிப்பாக குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்குப் போதுமான உணவு வழங்கப்படவில்லை. வயிற்றுப்போக்கு, 'ஹெபாடைடிடிஸ்' போன்ற நோய்கள் துரிதமாகப் பரவின. மருத்துவச் சேவை கரிசனையுடன் மேற்கொள்ளப்படவில்லை. பெரும்பாலான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குன்றி பலவீனமடைந்திருந்தன. குடும்பங்கள் பிரிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டன. காயமடைந்த உறவினரை இராணுவம் அழைத்துச் சென்றபோது குடும்பத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விசாரணைகளின் பேரில் பலர் பிரித்துச் செல்லப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டனர். பலர் காணாமல் போன உறவினர்களைத் தேடி மாதக்கணக்கில் அலைந்தனர். சட்டபூர்வ உதவி இல்லாமல் மக்கள் அலைக்கழிந்தனர். கொலைகள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள் பற்றிய கதைகள் பரவலாக நிலவின. இவை முகாமில் இருந்தவர்கள் மத்தியிற் பயத்தையும் நம்பிக்கையின்மையையும் அதிகரித்தன.

முகாம்கள் தற்காலிக தங்குமிடங்களாக அல்லாமல், சிறைக்கூடங்களாகவே இயங்கின. வெளியுலகத்துடனான தொடர்புகள் கட்டுப்படுத்தப்பட்டன. சந்திப்புகள் கடுமையான கண்காணிப்பிற்கு உட்பட்டன. புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள், விளக்கமின்றி அழைத்துச் செல்லப்பட்டனர். உணர்ச்சி ரீதியாக மக்கள் மிகப்பெரிய பாதிப்புக்கு உட்பட்டனர். உடற் துன்பங்கள் மட்டுமல்லாமல், கடுந்துயரம், பயம், அவமதிப்பு ஆகியவற்றையும் மக்கள் அனுபவித்தனர். தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, வீடு திரும்பிய பின்னரும் பலர் தொந்தரவுகளையும் பாதுகாப்பின்மையையும் எதிர்கொண்டனர். இப்படியாக மெனிக் ஃபார்ம் அனுபவங்கள், போர் முடிவில் சிறிலங்கா அரச இராணுவ இயந்திரத்தின் புறக்கணிப்புகள், அவமதிப்புகள், சுதந்திர இழப்புகள், துன்பங்கள் என்பவற்றை தமிழ் மக்கள் இடையறாது எதிர்கொள்ள நேர்ந்த கதைகளுடன் இந்த அத்தியாயத்தை மாலதி நிறைவு செய்கிறார்.

### நிழல் அரசின் சிதைப்பும் மேற்கின் அதிகார மேலாண்மையின் தொடர்ச்சியும்

நியூசிலாந்துக்குத் திரும்பிய நூலாசிரியர் காணாமலாக்கப்பட்ட, கொல்லப்பட்ட வன்னி மக்களின் கையறுநிலை குறித்த துயர்மிகு நினைவுகளைச் சுமந்தபடியிருப்பதை இறுதி அத்தியாயத்தில் பதிவு செய்கிறார். இந்நிலை ஈழத் தமிழர் சமூகத்தின் பரவலான மன உழல்வைப் பிரதிபலிக்கிறது. புலிகளின் தோல்வி, தமிழர்களின் அரசியல் இலக்குகளின் தவறுகளையும், சர்வதேச அதிகாரப் பரிமாணங்களின் கசப்பும் கடுமையுமான உண்மைகளையும் எதிர்கொள்ள நிர்ப்பந்தித்துள்ளது.

இந்தியா, சீனா, ரஷ்யா, மேற்குலக நாடுகள் பெரும்பாலும் தமிழர்களின் அபிலாசைகளைக் கட்டுப்படுத்தும் அல்லது எதிர்க்கும் நிலைப்பாடுகளை எடுத்தன.

புலிகள் அமைப்பு கடுமையான வழிமுறைகளைக் கொண்டிருந்தபோதும், சமூக ஒருமைப்பாடு, முன்னேற்றகரமான கொள்கைகள், கூட்டுச் செயற்பாட்டியக்கம் ஆகியவற்றுக்கான தனித்துவமான நிலமாக புலிகளின் வன்னி இருந்தது; சாதிய, சமூகப் பிளவுகள், பிரிவுகளை மீறி உறுதியை வளர்த்தது. போரின் முடிவில் இத்தகு நம்பிக்கைகளின் பெரும்பகுதி சிதைக்கப்பட்டுவிட்டது. தமிழர்கள் பேரிழப்புகளுடன், பெரும் மன உழல்வுகளுடனும் உலக அரசியல் சக்திகளின் தொடர்கின்ற அதிகார மேலாண்மையின் தாக்கங்களுக்கு மத்தியிற் தமது போராட்டத்தை வழிநடத்த வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என முடிக்கின்றார் மாலதி.




மீநிலங்கோ
தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.


இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் 'சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்' எனும் இத்தொடர் பேசமுனைகிறது.

# ஆன்மிகமும் குணப்படுத்தலும்: இயலாமையின் இருப்பியல்

பகுதி 1

## தொடக்கக் குறிப்புகள்

மே 2009 இல் முள்ளிவாய்க்காலில் இறுதிக் குண்டுகள் விழுந்தபோது, புகை காற்றோடு கலந்து வெளிக்கவில்லை, எஞ்சியதோ அவநம்பிக்கையின் மந்தமான மூடுபனி. "போர் முடிந்துவிட்டது" என்று மக்கள் கிசுகிசுத்தனர். ஆனால் அதன் அர்த்தம் என்னவென்று யாராலும் சொல்ல முடியவில்லை. போரின் களங்களில் நீண்ட அமைதிக்குப் பிறகு கோயில்கள் மீண்டும் மணிகளை அடிக்கத் தொடங்கின. வடபுலத்தின் போர் தின்ற நிலங்களில் மீளக்குடியேறிய குடும்பங்கள் எஞ்சியிருந்த, உடைந்த/ எரிந்த செங்கற்களால் சிறிய கோவில்களைக் கட்டி, தற்காலிக விளக்குகளுக்கு முன் இறந்தவர்களினதும் காணாமல் போனவர்களினதும் புகைப்படங்களை வைத்தனர். அந்நிலப்பரப்பு ஆன்மாக்களாலும் கடவுள்களாலும் உயிர்ப்பிக்கப்பட்டது.

போரின் முடிவு அமைதியைக் கொண்டுவரவில்லை, அது வெற்றிடத்தைக் கொண்டு வந்தது. அம்மனிதர்கள் நிச்சயமற்றவர்களாக உணர்ந்தனர். உலகம் தார்மீகமாக இல்லாமை அவர்களது நிச்சயமின்மைகளை அதிகரித்தது. எதைப் பற்றிக்கொள்வது என்பது அவர்களின் கேள்வியாக இருந்தது. அந்த வெறுமையில், ஆறுதலாகவும் நடந்தவற்றுக்கான விளக்கமாகவும் மதம் மீண்டும் வெளிப்பட்டது. சைவசமயக் கருத்தியல்கள் ஏற்கனவே வலிக்கான சொற்களஞ்சியத்தைக் கொண்டிருந்தது: துயர், பாவம், கர்மா, பரிகாரம், விதி. ஆனால் இப்போது அந்த வார்த்தைகள் புதிய அர்த்தத்தைப் பெற்றன. "இது நமது கர்மா" என்று சொல்வது, ஒரு தார்மீகப் பிரபஞ்சத்திற்குள் பேரழிவைக் கண்டறிவது, இழப்பைப் புரிந்துகொள்ளச் செய்வது என்று விளங்கினர். எனவே அவர்களின் அன்றாட வாழ்வியலில், குணப்படுத்தலின் பகுதியாக மதமும் நம்பிக்கைகளும் பிரதான இடத்திற்கு வந்தன.

வடக்கு, கிழக்கு முழுவதும் உள்ள தமிழ்க் கிராமங்களில், சடங்கு நீண்ட காலமாகத் துக்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஒரு வழியாக இருந்து வருகிறது. போருக்குப் பிறகு, மீட்சியின் அந்தச் செயன்முறை தீவிரமடைந்தது. ஆண்டுதோறும் நடைபெறும் ஆடி அம்மன் திருவிழாக்கள், கொண்டாட்டமாக மாறுவேடமிட்டு கூட்டுத் துக்கத்தைச் செயற்படுத்தும் களங்களாக மாறின. பெண்கள் கிராமத்தின் வீதிகளில் தீச்சட்டிகளை ஏந்தி, 'அம்மானுக்காக' வெறுங்காலுடன் நீண்ட தூரங்கள் நடந்தனர். அவர்களது ஒவ்வொரு அடியும் தவத்தினதும் வேண்டுதலினதும் இணைந்த வெளிப்பாடாகும்.

மன்னாருக்கு அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம் கோவிலில், நூற்றுக்கணக்கானோர் புனித குளத்தில் குளிக்க வந்தனர், காணாமல் போன மகன்களின் பெயர்களை முணுமுணுத்தனர். ஒரு தந்தை கூறினார்: "கடல் உப்பைத் திருப்பித் தர முடிந்தால், ஒருவேளை அது என் மகனைத் திருப்பித் தரும்." மட்டக்களப்பில், பிதுர்காரர் பூசைகள் - அமைதியற்ற ஆன்மாக்களுக்கான சடங்குகள் - பெருகின. மக்கள் சிறிய பிதுர் உருண்டைகளை உருவாக்கி, இறந்தவர்களின் பெயரிட்டு, பின்னர் அவற்றைக் கடலில் கரைத்தனர். இந்தச் செயல் தனிப்பட்ட துக்கத்தை பொதுச் சடங்காக மாற்றியது. அரசியல் தடைசெய்த துக்கத்தை நியாயப்படுத்தியது. இன்னொரு வகையில் நினைவுகூர்தலுக்கான உரிமையைப் நிறுவுவதற்கான ஒரு வழியாகவும் இருந்தது.

சடங்குகள் பேச்சுச் சுதந்திரத்துக்கான பாதுகாப்பை வழங்கின. பொது எதிர்ப்பு இல்லாத இடங்களில் பூஜையின் போது அழுவது அனுமதிக்கப்பட்டது. ஆவி பீடித்தல், உண்மையைச் சொல்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தை வழங்கியது: ஒரு பெண் நடுங்கி அம்மான் என்று பேசும்போது, அவளுடைய வார்த்தைகள் - "என் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்" - அரசியல் குற்றச்சாட்டுகளாக அல்லாமல், தெய்வீக அதிகாரத்தைக் கொண்டிருந்தன. கிளிநொச்சியில் ஒரு பெரியவர் விளக்கியது போல், "தெய்வம் பேசும்போது, இராணுவம் கூட அமைதியாகக் கேட்கிறது."

இந்த நடைமுறைகள் உயிர் வாழ்வதற்கான சடங்கு உட்கட்டமைப்பு (*Ritual Infrastructure of Survival*) என்று அழைக்கப்படலாம். கோயில்கள் ஆன்மாவின் மருத்துவமனைகளாக மாறின. பூசாரிகள் ஆலோசகர்களாகச் செயற்பட்டனர். இருப்பினும், இந்த சமய மறுமலர்ச்சி வெறும் தன்னிச்சையான பக்தி மட்டுமல்ல. அது தீர்க்கப்படாத அதிர்ச்சிக்குக் கிடைக்கக்கூடிய ஒரே தீர்வாகவிருந்தது. "எங்களுக்கு ஆலோசகர்கள் இல்லை, கோவில்கள் மட்டுமே" என்று வன்னியில் உள்ள ஒரு பள்ளி ஆசிரியர் கூறினார். "எனவே நாங்கள் எங்கள் கதைகளைக் கடவுள்களிடம் சொன்னோம்."

இந்த இடத்திற்குள் 'தெய்வீக மனிதர்கள்' என்று தம்மை அழைத்துக்கொண்டோர் நுழைந்தனர். இவர்கள் வெறும் ஆன்மிக ஆறுதலை மட்டுமல்லாமல், உறுதியான நிவாரணத்தையும் உறுதியளித்த கவர்ச்சிமிக்க சாமியார்களும், சுவாமிகளும் ஆவர். அவர்கள் அதிர்ச்சியிலிருந்து குணமடைதல், விதவைகளுக்கு ஆறுதல், வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு, சொல்ல முடியாதவர்களுக்கு

மன்னிப்பு ஆகியவற்றை வழங்கினர். "சுவாமி எல்லாவற்றையும் பார்க்கிறார்" என்று வவுனியாவில் உள்ள ஒரு பெண் என்னிடம் கூறினார். அவர் தொடர்ந்தார்: "என் கணவரின் ஆன்மா அமைதியற்று இருந்தது, ஆனால் இப்போது அம்மானுடன் அமைதியில் இருப்பதாக அவர் கூறினார். சுவாமியால் மட்டுமே அதை அறிய முடியும்."

பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோள் உடனடியாகத் தீர்ந்தது. அரசு கண்காணிப்பை வழங்கிய இடத்திலும், அரசுசாரா நிறுவனங்கள் வாழ்வாதார உதவிகளை வழங்கிய இடத்திலும், இந்தத் 'தெய்வீக மனிதர்கள்' வாழ்வின் அர்த்தத்தை வழங்கினர். அவர்கள் ஆன்மிகத் தொழில்முனைவோராக உருவெடுத்து, வலியைச் சடங்காகவும், சடங்கை வருவாயாகவும் மொழிபெயர்த்தனர். போரின் பின்னரான இலங்கையின் முக்கியமாக அதிகம் பேசப்படாத அம்சமிது.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இலங்கையின் வடக்குக் கிழக்கில் முதன்முதலில் ஆய்வுக்கான களப்பணியை மேற்கொள்ளத் தொடங்கியபோது, மறுகட்டமைப்பு, வாழ்வாதாரங்கள், நிறுவனச் சீர்திருத்தங்களைப் பற்றியதாகவே அது இருந்தது. இது தொடர்பான உரையாடல்களில் ஆன்மிகம் முக்கிய இடத்தைப் பற்றியிருந்ததை உணர முடிந்தது. கடந்த பதினைந்து ஆண்டுகாலக் களப் பணிகளின் போது - கிராமங்களில் வாழ்வது, விடியற்காலையில் கோயில் விழாக்களில் கலந்துகொள்வது, சமூகக் கூட்டங்களின் பின்னால் அமர்ந்திருப்பது - நான் அதே கேள்விக்குத் திரும்பினேன்: பொறுப்புக்கூறல் மற்றும் போதுமான பொதுப் பழுதுபார்ப்பு இல்லாத நிலையில், மத அரங்காடிகளும் கவர்ச்சிகரமான தெய்வீக மனிதர்களும் இப்போது அன்றாட வாழ்க்கையில் இவ்வளவு மைய இடத்தைப் பிடித்திருப்பது ஏன்? இந்தக் கட்டுரை அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் முயற்சி.

எனது ஆர்வம் பகுப்பாய்வு ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் உள்ளது. பகுப்பாய்வு ரீதியாக, இந்த நிகழ்வு நம்பிக்கை, ஆட்சியியல், நினைவகம், அமைதி, குணப்படுத்துதல், அரசியல் நீக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவு பற்றிய அவசரச் சிக்கல்களை எழுப்புகிறது. சடங்குகள் இல்லாமல் வாழ முடியாது என்பது இப்பகுதிகளில் முடிந்த முடிவாக இருந்தது. பாடசாலைகளுக்கு முன் கோயில்கள் புனரமைக்கப்படுவதை நான் பார்த்தேன்; வேறு எங்கும் திரும்ப முடியாத விதவைகளுக்கு 'அற்புதங்களை' வழங்கும் தெய்வீக மனிதர்களைப் பதிவு செய்தேன். போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில் மதம் என்பது வெறும் பாரம்பரியத்தின் எச்சம் மட்டுமல்ல, மாறாக ஒரு செயற்படும், தகவமைக்கும் சமூக சக்தியாகும். இது நிறுவனங்களுக்கு மாற்றாகச் செயற்படுகிறது, மறுசீரமைக்கிறது, பாதிப்பை ஏற்படுத்துகிறது, மேலும் சில சமயங்களில் துன்பத்தைக்கூடப் பணமாக்குகிறது.

தனிப்பட்ட முறையில், புள்ளிவிவரங்களுக்குப் பின்னால் இருந்த முகங்கள் காரணமாக இந்தத் தலைப்பு என்னை மிகவும் ஈர்த்தது. வருகை தரும் அரசாங்க அதிகாரியை விட சாமியார்கள் மிகவும் மரியாதையுடன் வரவேற்கப்படுவதை நான் நினைவில் கொள்கிறேன்.

இந்தத் தருணங்கள், கண்ணியமும் நம்பிக்கையும் எவ்வளவு பலவீனமானவை, மத இடைத்தரகர்கள் பெரும்பாலும் இரண்டிற்கும் தரகர்களாக மாறுகிறார்கள் என்பதை வெளிப்படுத்தின. கவர்ச்சி எவ்வாறு வர்த்தகமாக மாறும், ஆறுதல் எவ்வாறு கண்காணிப்பாக மாறும் என்பதை இது உணர்த்தியது. பங்கேற்பாளர்களின் அவதானிப்பு, ஆழமான நேர்காணல்கள், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு முழுவதும் சடங்குகளில் கலந்துகொள்வது, புலம்பெயர் நன்கொடையாளர்கள், உள்ளூர் அமைப்பாளர்களுடனான உரையாடல்கள் ஆகியவற்றிலிருந்து எனது சான்றுகள் வருகின்றன. 'அதிசயப் பொருளாதாரங்கள்' என்று நான் அழைக்கும் அதிசயம் நிகழ்த்துவோர் செலவழிக்கும் பணத்தின் பொருளாதாரப் பரிமாணங்களை ஆராயக் கிடத்தது. ஆலயங்களைத் தக்கவைக்கும் பாலின உழைப்பு, 'ஒன்லைன் நெட்வொர்க்'குகள், இப்போது நாடுகடந்த ஆன்மிக அதிகாரத்தைப் பெருக்கும் வழிகள் எனப் பல ஒன்றோடொன்று தொடர்புபட்ட பலவற்றை இணைக்க முடிந்தது. எனவே, தொடர்ந்து வரும் வாதம் உயிருள்ள சந்திப்புகள் மற்றும் பகுப்பாய்வுத் தொகுப்பு இரண்டையும் ஈர்க்கிறது: இது போருக்குப் பிந்தைய மதத்தின் இனவியல் ஆகும், இது நம்பிக்கை உயிர்வாழ்வதற்கான ஒரு முக்கிய முறையாக மாறும்போது உருவாகும் அரசியல் பொருளாதாரம் மற்றும் தார்மீகப் பதற்றங்களை முன்னறிவிக்கிறது.

இங்கு பொதுவாக தெய்வீக மனிதர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றேன். இதற்குள் இந்து, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அனைவரும் அடங்குவர். இதில் முதன்மையான பங்கு சாமியார்களுடையது. இந்தச் சாமியார்களின் உருவாக்கத்திலும் பெருக்கத்திலும் இருக்கின்ற பூகோள அரசியல், பிராந்திய வல்லரசான இந்தியாவின் வகிபாகம் என்பன தனியே ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியவை. அவை குறித்த தரவுகளும் பகுப்பாய்வும் கட்டுரையின் நீளம் கருதித் தவிர்க்கப்பட்டுள்ளன.

### சாமியார்களின் எழுச்சி: கவர்ச்சி, நெருக்கடி, ஒழுங்கிற்கான தேடல்

2009 இல் போர் முடிவடைந்தபோது, வடக்குக் கிழக்கில் ஒரு பரந்த தார்மீக நிறுவன வெற்றிடம் உருவாகியிருந்தது. குடும்பப் படிநிலைகள், போர்க்குணமிக்க ஒழுக்கம், சமூக சேவைக் கட்டமைப்புகள், மதகுருமார் அதிகாரம் போன்ற பழைய உறுதியான தார்மீக அறங்களும் நிறுவனங்களும் உடைக்கப்பட்டன. அவற்றின் இடத்தில் குழப்பம், தெளிவற்ற அமைதி, ஒத்திசைவுக்கான ஆழ்ந்த ஏக்கம் ஆகியன வெளிப்பட்டன. இந்த நிலப்பரப்பிலிருந்து சாமியார்கள், கடவுளின் தூதர்கள் என்று சொல்லப்படுபவர்கள் முன்னிலைக்கு வந்தனர். வெளியிலிருந்து பயணப்பட்ட சாமியார்கள், சுயமாக அறிவிக்கப்பட்ட குணப்படுத்துபவர்கள், அற்புதங்களை நிகழ்த்துவோர் எனப் பலரும் போரால் நொந்துபோயிருந்த மக்களுக்கு ஆரோக்கியத்தையும் செழிப்பையும் மட்டுமல்ல, மிக முக்கியமாக, நரகமற்ற உலகில் வாழக்கூடிய ஒழுங்கு உணர்வையும் உறுதியளித்தனர்.

அவர்கள் முதலில் இடைக்காலத் தங்குமிட முகாம்களில் தோன்றினர். மெனிக் பார்ம் மற்றும் வவுனியாவின் தற்காலிகத் தங்குமிடங்களில், அகதிகளாக்கப்பட்ட தமிழர்கள் காவி நிறத்தில் இருந்த ஆண்களைச் சுற்றிக் கூடினர். அவர்கள் தண்ணீரைத் தெளித்து தேவாரம் அல்லது பகவத் கீதையின் வசனங்களை உச்சரித்தனர். சிலர் தென்னிந்தியாவிலிருந்து வந்த பயணத் துறவிகள்; தம் பக்தர்களைத் தேடிக் கடல் கடந்து வந்தவர்கள். மற்றவர்கள் இரவோடு இரவாக துறவி ஆடைகளை அணிந்த உள்ளூர் ஆண்கள். முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு சமூக சேவகர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "அந்த நாட்களில் எல்லோரும் அறிகுறிகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட வழியில் ஓர் இலை உதிர்வது, எங்கள் காணாமல் போன மகன் உயிருடன் இருப்பதைக் குறிக்கும் ஒரு கனவு என ஒருவர் நம்பினார். இந்த நம்பிக்கைக்கும் கேள்விக்கும் இந்தச் சாமியார்கள் பதில்களுடன் வந்தார்கள்."

மாக்ஸ் வெபரின் உன்னதமான அர்த்தத்தில், சமூக இடப்பெயர்ச்சிக் காலங்களில் கவர்ச்சி எழுகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில் துல்லியமாக அதுதான் நிகழ்ந்தது. போர் உயிர்களை மட்டுமல்ல, ஒவ்வொரு நிறுவனத்தின் மீதான நம்பிக்கையையும் அழித்துவிட்டது. இராணுவம் அஞ்சப்பட்டது. அரசுசாரா நிறுவனங்கள் அவநம்பிக்கை கொண்டன, புலம்பெயர்ந்தோர் பிளவுபட்டனர். அரசியல்வாதிகள் ஊழல்வாதிகளாகக் காணப்பட்டனர், பாதிரியார்கள் சமரசம் செய்து கொண்டனர். இந்த வெற்றிடத்தில் ஆண்கள் (மற்றும் எப்போதாவது பெண்கள்) நுழைந்தனர், அவர்கள் எந்த அதிகாரபூர்வ அதிகாரத்தையும் கோரவில்லை, ஆனால் தார்மீக உறுதியை வெளிப்படுத்தினர். அவர்கள் எளிமையின் உறுதிப்பாட்டை வழங்கினர்: "இந்த தெய்வத்தை ஜெபியுங்கள், இந்த நூலை அணியுங்கள், இந்த வசனத்தை நாற்பத்தொரு நாட்கள் ஓதுங்கள்." கொள்கை மற்றும் மறுகட்டமைப்பின் குழப்பத்திற்கு மத்தியில், இந்தச் சூத்திரங்கள் உறுதியானதாகவும், செயற்படக்கூடியதாகவும், உடனடியானதாகவும் உணரப்பட்டன.

இந்தத் தெய்வீக மனிதர்களின் கவர்ச்சி இயல்பானது அல்ல. அது பேச்சு, சைகை, உடை ஆகியவற்றின் மூலம் நிகழ்த்தப்பட்டது. அவர்கள் பக்திப் பாடகரின் தாளக் குரல்களுடன், கண்டனத்திற்கும் ஆறுதலுக்கும் இடையில் மாறி மாறிப் பேசினார்கள்: "நீ தர்மத்தை மறந்துவிட்டாய்", கிளிநொச்சியில் ஒரு சாமியார் இடித்துரைப்பார், "தெய்வம் விலகிவிட்டாள். ஆனால் பயப்படாதே! நான் அவளைத் திரும்ப அழைப்பேன்." நிச்சயமற்ற தன்மைக்கு நீண்டகாலமாகப் பழக்கப்பட்ட மக்கள், சாமியாரின் உறுதியில் ஆறுதல் கண்டனர். "அவர் பேசும்போது, காற்றுக்கூடக் கேட்கும்" என்று ஒரு பக்தர் கூறினார்.

அந்தக் காட்சி முக்கியமானது. இத்தெய்வீக மனிதர்களின் பொதுச் சடங்குகள் - வெகுஜனக் குணப்படுத்துதல் - அரசியல் பேரணிகளுக்குப் போட்டியாகக் கூட்டத்தை ஈர்த்தன. இருப்பினும், அவர்களின் கவர்ச்சி, சக்தியின் செயற்றிறன் மட்டுமல்ல, பச்சாத்தாபத்தின் செயற்றிறன். அவர்கள் துக்கமடைந்தவர்களுடன் அழுதனர், நோயாளிகளைத் தொட்டனர், பெயர்களை நினைவில் வைத்திருந்தனர். "அவர் என் குழந்தையை 'அம்மா' என்று அழைத்தார்" என்று ஒரு விதவை கூறினார், அவரது குரல் பிரமிப்பால் நடுங்கியது. "என் கணவர் இறந்ததிலிருந்து யாரும் என்னை அப்படி அழைக்கவில்லை." அங்கீகாரத்தின் உணர்ச்சிபூர்வமான உழைப்புத் தானே மீட்பளிக்கும்.

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, இந்தக் காட்சிகள் வெறும் மூட நம்பிக்கையாகத் தோன்றலாம். ஆனால் ஈழத்தமிழர் இயக்கவியலில், புனிதத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான கோடு நுண்ணியதாகத் தெரிகிறது. கோயில்கள், வழிபாட்டுத்தலங்கள் மட்டுமல்ல, நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், ஆலோசனை மையங்களும் கூட சமூகப் பரிமாணத்தை இழந்திருந்தன. செயற்படும் அரசு நிறுவனங்கள் இல்லாத நிலையில், தெய்வீக மனிதர்கள் இந்தப் பாரம்பரிய இடத்தை மீண்டும் ஆக்கிரமித்தனர்; புதிய அரசியல் அர்த்தங்களுடன்.

யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதிகளில், சாமியார்கள் மரங்களுக்கு அடியில் தற்காலிக ஆலயங்களை அமைத்து, அம்மன் தரிசனங்களைக் கூறினர். அவர்களின் சீடர்கள் - பெரும்பாலும் பெண்கள் - ஓலை வேயப்பட்ட வேலிகளைக் கட்டினர், காணிக்கைகளை எடுத்துச் சென்றனர். மேலும் உறவினர் வலையமைப்புகள் மூலம் அற்புதங்களைப் பற்றிய செய்திகளைப் பரப்பினர். சில மாதங்களுக்குள், ஒரு தற்காலிகப் பலிப்பீடம், ஒலிபெருக்கிகள் மற்றும் நன்கொடைப் பெட்டிகளுடன் கூடிய ஒரு 'கொங்கிரீட்' கோயிலாக அந்த மரத்தடித் தெய்வம் மாறும்.

இந்தத் தார்மீக அரங்கில், கடவுள்கள் நிலைத்தன்மையைக் காட்டுபவர்களாக மாறினர். அவர்கள் போருக்கு முந்தைய மதத்துடனான தொடர்ச்சியைத் தூண்டினர். ஆனால் நெருக்கடி மேலாண்மை என்ற சொற்களால் அதை நிரப்பினர். "தெய்வம் உங்கள் துன்பத்தை அறியும்" என்று புதுக்குடியிருப்பில் ஒரு சாமியார் காணாமல் போனவர்களின் தாய்மார்கள் குழுவில் உரையாற்றினார். "நீதிமன்றங்களுக்குச் செல்லாதே. வீரர்களுக்கு முன்பாக அழாதே. இங்கே வா. அவள் உன் மகன்களுக்கு அமைதியை வழங்குவாள்." இந்த அறிக்கை ஒரே நேரத்தில் ஆறுதலளிப்பதாகவும், அரசியல் நீக்கம் செய்வதாகவும் இருந்தது. நீதி, மனிதனிடமிருந்து தெய்வீக உலகத்திற்கு மாற்றப்பட்டது.

தெய்வீக மனிதர்களைப் பின்பற்றுபவர்களில் பெரும்பாலோர் பெண்கள் (விதவைகள், தாய்மார்கள், காணாமல் போனவர்களின் சகோதரிகள்). அவர்களைப் பொறுத்தவரை, ஆண் உறவினர்களை இழந்த பிறகு மதம் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுப் பங்கை வழங்கியது. சடங்குகளில் பங்கேற்பது - காவடி எடுத்துச் செல்வது, காணிக்கை தயாரித்தல் அல்லது மயக்கத்திற்கு உட்படுவது - துக்கத்தை வெளிப்படுத்துவதற்கான வழிகளாக மாறியது, இல்லையெனில் அது களங்கப்படுத்தப்படும்.

"இனி நான் வீட்டில் அழ முடியாது" என்று விசுவமடுவைச் சேர்ந்த விதவை கூறினார். "என் குழந்தைகள் என்னை வலிமையாக இருக்கச் சொல்கிறார்கள். ஆனால் கோவிலில், அம்மான் என்னை ஆட்கொள்ளும்போது, நான் கத்த முடியும். நான் தரையில் விழ முடியும். நான் உயிருடன் இருப்பதாக உணரும் ஒரே நேரம் அதுதான்."

தெய்வீக மனிதர்களின் கோயில்கள் இவ்வாறு உணர்ச்சிகளின் பாலின அரங்குகளாகச் செயற்பட்டன. அங்கு பெண் துன்பம் அங்கீகரிக்கப்பட்டு கலாசார ரீதியாக அனுமதிக்கப்பட்ட வடிவங்களுக்குள் அடக்கப்பட்டது. இருப்பினும் இந்த அங்கீகாரமும் ஒழுக்கமானது. சாமியார்கள் கற்பு, பணிவு மற்றும் சுயகட்டுப்பாடு ஆகியவற்றைப் போதித்தார்கள். மறுமணம் செய்வதற்கு எதிராக அவர்கள் பெண்களை எச்சரித்தனர். "தெய்வம் தனது விதவைகளைத் தூய்மைக்காகத் தேர்ந்தெடுக்கிறது" என்று அறிவித்தனர்.

இத்தகைய சொற்பொழிவுகள் ஆன்மிகப் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆணாதிக்கக் கட்டுப்பாட்டை மீண்டும் ஏற்படுத்தின. மட்டக்களப்பைச் சேர்ந்த் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர், "இந்தச் சாமியார்களில் பலர் பெண்களை துன்பத்தை விதியாக ஏற்றுக்கொள்ளச் சொல்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் தங்கள் உரிமைகளைப் பற்றிப் பேசுவதில்லை, அவர்களின் கர்மாவைப் பற்றி மட்டுமே பேசுகிறார்கள்" என்று குறிப்பிட்டார். நம்பிக்கை என்பது அடக்கத்தின் மென்மையான தொழில்நுட்பமாக மாறியது - நல்லொழுக்கத்தின் மொழி மூலம் நடத்தையின் உள்மயமாக்கப்பட்ட நிர்வாகம் அரங்கேறியது.

இந்தச் சாமியார்களுக்கு ஆதரவாளர்கள் அதிகரித்ததால், பல தெய்வீக மனிதர்கள் தங்கள் கவர்ச்சியை நிறுவனமயமாக்கினர். தற்காலிக ஆலயங்கள் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்களாக மாறின. சாமியர்கள் சொகுசுக் கார்களையும் கடன் அட்டைகளையும் வாங்கினர். யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் அலுவலகங்களுடன் 'ஆன்மிக அறக்கட்டளைகள்' முளைத்தன. அவை இலண்டன், டொராண்டோ போன்ற நகரங்களில் உள்ள புலம்பெயர் நன்கொடையாளர்களுடன் இணைந்தன. 'நம்பிக்கையின் பண்டமாக்கல்' நடைமுறையாகவும் அடையாளமாகவும் இருந்தது. "மக்கள் செழிப்பைக் காண விரும்புகிறார்கள்" என்று கிளிநொச்சியில் ஓர் இளம் சாமியார் விளக்கினார். "நான் வறுமையில் வாழ்ந்தால், என் ஆசீர்வாதங்களுக்கு சக்தி இல்லை என்று அவர்கள் நினைப்பார்கள்." எனவே நான் ஜீப்பில் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது என்று தனது செல்வச் செழிப்புக்கு வியாக்கியானம் கொடுத்தார்.

யாத்திரை வழிகள் விரிவடைந்தன. மன்னாரிலிருந்து பக்தர்கள் அற்புத விழாக்களில் (திருவிழாக்கள்) கலந்துகொள்ள முல்லைத்தீவுக்குச் சென்றனர். பெரும்பாலும் நுழைவுக் கட்டணங்களைச் செலுத்தினர். சடங்குச் சாதனங்கள் - தாயத்துகள், குணப்படுத்தும் எண்ணெய்கள், புனிதச் சாம்பல் - அதிக விலைக்கு விற்கப்பட்டன. சுவாமிகளின் படங்கள் சுவரொட்டிகளையும் நாட்காட்டிகளையும் அலங்கரித்தன. அவர்களின் சொற்பொழிவுகள் யுடியூப், பேஸ்புக் ஆகியவற்றின் வழியாகப் பரப்பப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கோயில் மேலாளர் இந்த மாற்றத்தை வெளிப்படையாக விவரித்தார்: "முன்பு,

மக்கள் நம்பிக்கையுடன் வந்தார்கள். இப்போது அவர்கள் எதிர்பார்ப்புகளுடன் வருகிறார்கள். அவர்கள் வேலை, விசா, பரீட்சை போன்ற முடிவுகளை விரும்புகிறார்கள். எனவே சுவாமியும் நவீனமயமாக்கப்பட வேண்டும்."

இந்த நவீனமயமாக்கலில் நம்பிக்கையின் ஒரு புதிய அரசியல் பொருளாதாரம் அமைந்திருந்தது. தெய்வீக மனிதர்களின் அற்புதங்கள் அரசாங்கத்தின் வளர்ச்சி வாக்குறுதிகளுக்கு ஆன்மிக இணையாகச் செயற்பட்டன. இரண்டும் நம்பிக்கை மூலம் விடுதலையை வழங்கின; ஒன்று தெய்வீக அருளில், மற்றொன்று பொருளாதார வளர்ச்சியில். இரண்டும் காட்சி மற்றும் தாமதமான திருப்தியில் செழித்தன.

போருக்குப் பிந்தைய தார்மீகப் பொருளாதாரத்தில், தெய்வீக மனிதர் ஒரு கலப்பின நபராக ஆனார்: பகுதி பாதிரியார், பகுதி உளவியலாளர், பகுதி தொழிலதிபர். கோயில்களுக்கு நிலத்தைப் பெறுவதற்காக அவர் அரசு அதிகாரத்துவங்களை வழிநடத்தினார். நிகழ்வு அனுமதிகளுக்காக இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நன்கொடையாளர்கள் இருக்கும்போது 'சமரசம்' என்ற மொழியைப் பேசினார். ஒரு சாமியாரின் வலைத்தளம் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் அறிவித்தது: "அனைத்துச் சமூகங்களுடனும் இணக்கமாக இதயங்களையும் வீடுகளையும் மீண்டும் கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கம்." ஆயினும், தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட அவரது பிரசங்கங்கள், 'நிலத்தை மாசுபடுத்துபவர்களுடன்' கலப்பதற்கு எதிராகப் பக்தர்களை எச்சரித்தன.

கவர்ச்சிக்கு ஆதாரம் தேவை. தமிழரின் மதங்களில், ஆதாரம் அருளின் மூலம் வருகிறது - தெய்வீக அருள் புலப்படும் அடையாளமாக வெளிப்படுகிறது. தெய்வீக மனிதர்களின் அதிகாரம் அத்தகைய அடையாளங்களை உருவாக்குவதைச் சார்ந்தது.

வன்னியில் நடந்த ஒரு பிரபலமான கதையை இங்கு நினைவூட்டல் பொருத்தம். ஒரு சாமியார் முழு நிலவு இரவுகளில் அம்மன் சிலையிலிருந்து இரத்தம் எடுப்பதாகக் கூறினார். கிராமவாசிகள் அதைக் கண்டதாகச் சத்தியம் செய்தனர். புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டன. பத்திரிகையாளர்கள் வந்தனர். விஞ்ஞானிகள் பகுத்தறிவு விளக்கங்களை வழங்கினர். ஆனால் பக்தர்கள் அவற்றை நிராகரித்தனர். "அறிவியலுக்கு வரம்புகள் உள்ளன" என்று ஒருவர் கூறினார். "உங்கள் கண்கள் தோல்வியடையும் இடத்தில் நம்பிக்கை தொடங்குகிறது" என்றார் இன்னொருவர். அற்புதங்கள் பல நோக்கங்களுக்கு உதவின. அவை நம்பிக்கையை உறுதிப்படுத்தின, தானத்தை நியாயப்படுத்தின, மேலும், முக்கியமாக, கதையாடல்களுக்கான மூடுதலை வழங்கின. தீர்க்கப்படாத இழப்பால் வேட்டையாடப்பட்ட ஒரு சமூகத்தில், அதிசயம் தீர்வை வழங்கியது. தனது காணாமல் போன மகன் ஒரு சாமியாரின் கோவிலில் தோன்றியதைக் கனவு கண்ட ஒரு தாய் அதை அவரது மறுபிறப்புக்கான சான்றாக விளக்கினார். "இப்போது நான் தேடுவதை நிறுத்த முடியும்" என்று அவர் நிம்மதியாகக் கூறினார். முறையான ஆலோசனை அரிதாகவும், துக்கம் பெரும்பாலும் குற்றமாகவும் இருந்த ஒரு கலாசாரத்தில் இந்த அதிசயம் மனநலச் சிகிச்சையாகச் செயற்பட்டது.

இந்தச் சாமியார்கள் திறமையான கதை சொல்பவர்களாக இருந்தனர். அவர்கள் புராண முன்னுதாரணத்துடன் தனிப்பட்ட கவர்ச்சியை நெய்தனர். "ஷீரடி சாய் பாபவைப் போலவே, நானும் ஒன்றுமில்லாமல் அலைந்தேன். ஆனால் தெய்வம் தனது குழந்தைகளைக் குணப்படுத்த என்னைத் தேர்ந்தெடுத்தது" என்று ஒருவர் அறிவித்தார். இந்தக் கதையாடல் உள்ளூர் தெய்வத்தை இந்தியத் துறவிகளின் நாடுகடந்த பரம்பரைக்குள் வைத்து, அரசியலுக்கு அப்பாற்பட்ட சட்டபூர்வமான தன்மையை அவருக்கு வழங்கியது.

தெய்வ மனிதர்களின் பெருக்கம் தவிர்க்க முடியாமல் அதிகாரத்துடன் குறுக்கிடுகிறது. வடக்கில் அதிகமாக நிறுத்தப்பட்டிருந்த இலங்கை இராணுவம், ஆரம்பத்தில் பெரிய மதக் கூட்டங்களை சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்த்தது. ஆனால் இந்த நிகழ்வுகள் சமூகங்களை அணிதிரட்டுவதற்குப் பதிலாக அவர்களை அமைதிப்படுத்துகின்றன என்பது தெளிவாகத் தெரிந்ததும், அரசு அவர்களை அமைதியாக ஆதரிக்கத் தொடங்கியது.

கிளிநொச்சியில் உள்ள ஓர் அரசு சாரா ஊழியர், "எம் போன்ற செயற்பாட்டாளர்களை விட சுவாமிகளைக் கையாள்வது இராணுவத்திற்கு எளிதானது. சுவாமிகள் பேசுவது போர்க்குற்றங்களைப் பற்றி அல்ல, கர்மாவைப் பற்றிப் பேசுகிறார்கள்" என்று குறிப்பிட்டார். சில சாமியார்கள், பண்டிகைகளை நடத்துவதற்கு அரச அனுமதிகளையும் அதற்கு தேவையான அனைத்துப் பொருள் உதவிகளையும் பெற்றனர். இது, பக்தி அமைதிக்குச் சமம் என்ற கருத்தை வலுப்படுத்தியது.

அதே நேரத்தில், தமிழ் அரசியல் உயரடுக்கு இந்தச் சாமியார்களை தங்கள் சொந்த வழியில் பயனுள்ளதாகக் கண்டறிந்தனர். அரசியல்வாதிகள் கோவில் திறப்பு விழாக்களில் தோன்றி, மேடையில் ஆசீர்வாதம் தேடினர். அதற்குப் பதிலாக, சுவாமிகள்

வேட்பாளர்களை ஆமோதித்தனர் அல்லது தேர்தலுக்கு முன் பிரார்த்தனைப் பேரணிகளை ஏற்பாடு செய்தனர். ஒரு காலத்தில் தார்மீகச் சிதைவிலிருந்து வெளிப்பட்ட கவர்ச்சி, ஆதரவின் சுற்றுகளில் சிக்கிக்கொண்டது.

இருப்பினும், அனைத்துச் சாமியார்களும் அதிகாரத்துடன் இணைந்திருக்கவில்லை. ஒரு சிலர், பெரும்பாலும் கிழக்கு மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள், நுட்பமான எதிர்ப்பை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் பெருமையையும் காயமடைந்த இறையாண்மையையும் வெளிப்படுத்த இராவணனதும் பண்டைய தமிழ் மன்னர்களினதும் கதைகளைப் பயன்படுத்தினர். அவர்களின் பிரசங்கங்களில், 'வெளியாட்களால் கைப்பற்றப்பட்ட நிலங்கள்', 'பூமிக்குள் புதைக்கப்பட்ட உண்மை' போன்றவற்றைப் பற்றிப் பேசினர். வெளிப்படையாக அரசியல் ரீதியாக இல்லாவிட்டாலும், இந்த உருவகங்கள் ஆக்கிரமிப்பு மற்றும் இழப்புப் பற்றிய அடக்கப்பட்ட வரலாறுகளுடன் எதிரொலித்தன.

ஆழமான மட்டத்தில், தெய்வீக மனிதர்களின் ஈர்ப்பு, அதிர்ச்சியைக் கதையாக மொழிபெயர்க்கும் திறனில் இருந்தது. உளவியல் சிகிச்சை இல்லாத இடங்களில், அவர்கள் குணப்படுத்தும் ஓர் உள்ளூர் உளவியலை வழங்கினர். கனவுகள், உடல் அறிகுறிகள், துரதிர்ஷ்டங்கள் அனைத்தும் தெய்வீகத்திலிருந்து வந்த செய்திகளாக விளக்கப்பட்டன.

ஷெல் தாக்குதல் பற்றிய கனவுகளால் அவதிப்பட்ட முல்லைத்தீவு இளைஞன் ஒருவர் ஒரு சாமியாரைச் சந்தித்தார். அச்சாமியார், அவரின் மூதாதையர் ஆவி கோபமாக இருப்பதாகக் கூறினார். அதற்குப் பரிகாரமாக அடுத்த திருவிழாவில் தீ மிதிப்பதாக வேண்டுதல் செய்யும்படி சொன்னார். அந்த இளைஞன் அவ்வாறு செய்தார். பின்னர் தனது கனவுகள் குறைந்ததாக அவர் சொன்னார். அது நம்பிக்கையா அல்லது மனரீதியான நிவாரணமா என்ற கேள்வி முக்கியமானது. ஆனால் சமூகத்தைப் பொறுத்தவரை, வேறுபாடு பொருத்தமற்றது. துன்பம் புரிந்துகொள்ளக் கூடியதாக மாறியது, எனவே அதைத் தாங்கக்கூடியதாக மாறியதுதான் முக்கியம் என்ற விளக்கதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைச் சமூகவியலாளர்கள் 'வன்முறையை அன்றாட வாழ்க்கையில் மெதுவாக மீண்டும் புகுத்துதல்' என்று அழைக்கிறார்கள். சாமியார்கள் வலியை மீண்டும் சடங்காக்குவதன் மூலம் இந்தச் செயன்முறையை எளிதாக்கினர். அவர்கள் குழப்பத்தைப் பிரபஞ்சமாகவும், திகிலைப் புனிதமாகவும் மாற்றினர்.

காலப்போக்கில், குணப்படுத்துதலை வழங்கிய அதே கட்டமைப்புகள் சார்புநிலையை வளர்த்தன. திருமணங்கள், முதலீடுகள், மருத்துவத் தேர்வுகள் என ஒவ்வொரு முடிவுக்கும் பக்தர்கள் இந்தச் சாமியார்களையே நம்பியிருந்தனர். "சாமிக்கு எது சிறந்தது என்று தெரியும்" என்று பலர் சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் "அவர் நமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறார்" என்று நம்புகிறார்கள்.

இந்தச் சுயாதீனச் சரணடைதல் நம்பிக்கை, சோர்வு ஆகிய இரண்டையும் பிரதிபலித்தது. பல வருடப் போருக்குப் பிறகு, மக்கள் மிகவும் சோர்வடைந்தனர். தெய்வீக மனிதனின் வார்த்தை அவர்களைத் தெரிவு செய்யும் சுமையிலிருந்து விடுவித்தது. முடிவுகளை தாம் எடுக்கத் தேவையில்லை என்பது பெரிய ஆறுதலாக இருந்தது. இருப்பினும் அது அவர்களை கையாளுதலுக்கு ஆளாக்கியது. இந்தச் சாமியார்கள் மீது பாலியல் சுரண்டல், நிதி மோசடிகள் பற்றிய பல குற்றச்சாட்டுகள் இருந்தன. இவை அனைத்தும் புனிதத்தின் ஒளியின் பின்னால் மறைக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் ஒரு முக்கிய சாமியார் நன்கொடைகளைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது ஓர் ஊழல் வெடித்தது. செய்தி விரைவாகப் பரவியது, ஆனால் அவரது பக்தர்கள் அவரை ஆதரித்தனர். "கடவுள்கள் கூட சோதிக்கப்படுகிறார்கள்" என்று அவர்கள் வாதிட்டனர். நம்பிக்கையின் தர்க்கம் விசுவாசியின் உணர்ச்சி முதலீட்டைப் பாதுகாத்தது. ஏமாற்றம் மிகவும் வேதனையானது. அது நம்பிக்கை மூடிய வெற்றிடத்தை மீண்டும் திறக்க அச்சுறுத்தியது. 2010களின் பிற்பகுதியில், இந்த உருவம் தமிழ் பொது வாழ்வில் எங்கும் பரவியது. அபிவிருத்தித் திட்டங்களுக்கான தொடக்க விழாக்கள், அரசுசாரா நிறுவனப் பட்டறைகள், பாடசாலை விழாக்களில் கூட சாமியார்களின் காவி அங்கி தோன்றியது. நெருக்கடிக்கான பதிலாகத் தொடங்கி அது சாதாரண அதிகார முறையாக மாறியது.

போர் நிறைவடைந்து ஒரு தசாப்தகாலத்திற்குப் பின்னும், நெருக்கடி முடிவடையவில்லை. அது வெறுமனே வடிவத்தை மாற்றியது. பொருளாதார நெருக்கடி, இடப்பெயர்வு மற்றும் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்படுதல் ஆகியவை கவர்ச்சியை வளர்க்கும் நிச்சயமற்ற நிலைமைகளை நிலைநிறுத்தின. பொருட்களின் விலையேற்றம் முதல் எரிபொருள் பற்றாக்குறை வரை ஒவ்வொரு புதிய துயர அலையும் புதிய அற்புதங்கள், புதிய சபதங்கள், புதிய சாமியார்களை உருவாக்கியது.

இந்தச் சுழற்சி முறையில், நம்பிக்கை தீர்மானமாகக் குறைவாகவும், மீண்டும் மீண்டும் நிகழ்வதாகவும்

செயற்பட்டது. ஒரு வயதான பக்தர் கூறியது போல், "எப்போதும் மற்றொரு சாமியார், மற்றொரு திருவிழா, மற்றொரு வாக்குறுதி இருக்கும். ஒருவேளை அப்படித்தான் நாம் தொடர்ந்து வாழ்கிறோம்."

போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்குக் கிழக்கில் இந்தத் தெய்வீக மனிதர்களின் எழுச்சி என்பது பகுத்தறிவிலிருந்து விலகுவதாக மட்டும் அல்ல, மாறாக நவீனத்துவம், தேசியவாதம் மற்றும் உலகமயமாக்கலின் முறிவுகளைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவும் உள்ளது. அவர்களின் கவர்ச்சி சைவ சமயத்தின் நீண்ட வரலாற்றை - பக்திக்கும் அரசியலுக்கும் இடையிலான அதன் நிலையற்ற எல்லைகளை - நெருக்கடி மேலாண்மையின் சமகால மொழிச் சொல்லாக சுருக்குகிறது.

ஒரு வகையில், அவர்கள் நிச்சயமற்ற தன்மையின் பூசாரிகள். பெயரிட முடியாத, வீட்டுப் பயத்தை வளர்ப்பதில் அவர்களின் சக்தி உள்ளது. மேலும் துன்பத்திற்கான சொற்களஞ்சியத்தை வழங்குவதிலும் உள்ளது. சுரண்டுபவர்களாக இருந்தாலும் சரி, குணப்படுத்துபவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் குணப்படுத்துவதாகக் கூறும் அதே சமூகக் காயத்தின் தயாரிப்புகள். யாழ்ப்பாணத்தில் ஒரு பக்தர், தெய்வத்தின் சிலைக்கு முன் நின்று கும்பிட்டு முடித்துவிட்டு இப்படிச் சொன்னார்: "ஒருவேளை சாமியாரால் உலகை மாற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் அது நிகழும் வரை அவர் நமக்கு உயிர்வாழ உதவுகிறார்".

## பக்தியின் பாலினப் பரிணாமமும் உணர்ச்சியைச் சுரண்டலும்

இலங்கையின் உள்நாட்டுப் போருக்குப் பிறகு, தமிழ்ச் சமூகங்களின் சமூகக் கட்டுமானம் சிதைக்கப்பட்டது. இந்த இழப்பால் பாலினரீதியான சில தன்மைகள் முன்னிலைக்கு வந்தன. இங்கு அன்றாட வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப எஞ்சியவர்களில் பெரும்பாலோர் பெண்கள்: விதவைகள், தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் காணாமல் போனவர்களின் மகள்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில், 2011 ஆம் ஆண்டளவில் வயதுவந்த மக்கள்தொகையில் பெண்கள் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்காக இருந்தனர். அவர்கள் இனி குடும்பம் மற்றும் சமூக வாழ்க்கையின் அமைதியான ஆதரவாளர்களாக இருக்கவில்லை, மாறாக அதன் புலப்படும் தூண்களாக இருந்தனர் - உணவு வழங்குபவர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் துக்கப்படுபவர்கள். இருப்பினும் அவர்களின் புதிய மையத்தன்மை அதிகாரமளிப்பதாக மொழிபெயர்க்கப்படவில்லை. மாறாக, ஓர் ஆர்வலர் 'தனிப்பட்ட வலியின் பொது வாழ்க்கை' என்று அழைத்ததைப் போல அவர்கள் வசித்து வந்தனர்.

இந்த இல்லாத உலகில், இன்னும் சரியாகச் சொல்வதானால், இவர்களின் மறுக்கப்பட்ட மறைக்கப்பட்ட வாழ்வில், சமய பக்தி அடைக்கலமாகவும் வளமாகவும் மாறியது. துக்கத்துக்குக் குரல் கொடுக்கவும், உருமாற்றவும், சமூக ரீதியாகப் படிக்கக்கூடியதாகவும் மாற்றக்கூடிய ஒரு தளமாக அது இருந்தது. எனவே போருக்குப் பிந்தைய வடக்கு கிழக்கில் தெய்வ வழிபாட்டு முறைகளின் பெருக்கம் வெறும் ஆன்மீக நிகழ்வு மட்டுமல்ல, பாதிப்பு மற்றும் அதிகாரத்தின் பாலின மறுசீரமைப்பாகும்.

புதுக்குடியிருப்புக்கு வெளியே உள்ள ஒரு சாதாரண அம்மன் கோவிலில், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மாலையிலும் காற்று, கற்பூரத்தாலும் மஞ்சள் வாசனையாலும் நிரப்பப்படுகிறது. வெள்ளைப் புடவைகள் அணிந்த பெண்கள் வரிசையாக அமர்ந்து 'ஓம் சக்தி ஓம்' என்று துதிக்கிறார்கள். சிலர் மெதுவாக ஆடி, கண்களை மூடிக்கொண்டனர்; மற்றவர்கள் தங்கள் மார்பில் மெதுவாக அடித்துக்கொண்டு, இறந்தவர்களின் பெயர்களை முணுமுணுக்கிறார்கள். மையத்தில் ஓர் இளம் தெய்வம் நிற்கிறது, நெற்றியில் விபூதி பூசப்பட்டது. அவர் சத்தமிடத் தொடங்கும்போது, பல பெண்கள் மயக்கத்தில் விழுகிறார்கள், அவர்களின் உடல்கள் நடுங்கின.

அங்கொரு விதவைப் பெண் அழுகையை எழுப்புகிறார்; பாதி அலறல், பாதி பாடல். அவருக்குச் சொந்தமில்லாத குரலில் பேசத் தொடங்குகிறார்: "ஏன் என் மகனை அழைத்துச் சென்றாய்? அவன் ஒரு குழந்தை! நீங்கள் பாதுகாப்பை உறுதியளித்தீர்கள்!" கூட்டம் முணுமுணுக்கிறது: "அம்மன் பேசுகிறார்." மயக்கம் முடிந்ததும், அந்த விதவைப்பெண் சரிந்து அழுகிறாள். இரண்டு பெண்கள் ஒரு துணியால் அவளுக்கு விசிறி விடுகிறார்கள். கோவிலுக்கு வெளியே, அவள் அமைதியாக விளக்குகிறாள், "வீட்டில் இப்படி அழ முடியாது. இங்கே, அம்மான் வரும்போது, அவள் எனக்காக அழுகிறாள்." போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தில் இதுபோன்ற காட்சிகள் பொதுவானதாகிவிட்டன. பெண் பக்தரின் உடல் தெய்வீகச் சந்திப்பின் முக்கிய அரங்கமாக மாறியுள்ளது. இதன் மூலம் தனிப்பட்ட அதிர்ச்சி பிரபஞ்ச மொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், பெண்கள் தங்கள் துன்பத்தை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அதைச் சடங்கு வடிவத்திற்குள் ஒழுங்குபடுத்தும் ஒரு தார்மீகச் சமூகத்தில் தங்களை மீண்டும் இணைத்துக் கொள்கிறார்கள்.

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பெண்களின் வகிபாகம் சிக்கலானது. அது அவர்களைத் 'தேசத்தின் தாய்மார்கள்' என வரையறுத்தது. அது அவர்களின் கற்பு, சகிப்புத்தன்மை, கூட்டு நல்லொழுக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது. போருக்குப் பிறகு, இந்தக் குறியீடு தீவிரமடைந்தது. பெண்கள் உயிர் பிழைத்தவர்களாகவும், தார்மீக முன்மாதிரிகளாகவும் கொண்டாடப்பட்டனர். இருப்பினும் அடக்கமாகவும், உண்மையாகவும், அரசியல் ரீதியாகவும் அமைதியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மதம், குறிப்பாக தெய்வ வழிபாடு, சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பார்வையை வழங்கியது.

"கோயிலில் மட்டுமே நாம் சத்தமாகப் பேச முடியும்" என்று கிளிநொச்சியைச் சேர்ந்த பெண்ணொருவர் கூறினார். "வீட்டில், மக்கள் எங்களை அமைதியாக இருக்கச் சொல்கிறார்கள், மறக்கச் சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் அம்மானுக்காகப் பாடும்போது, யாரும் எங்களைத் தடுக்க முடியாது." கடுமையான ஆனால் தாய்மை நிறைந்த தெய்வம் (அம்மன்) ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அவளுடைய உருவம் கவனிப்பையும் நீதியான கோபத்தையும் வளர்க்கிறது. போருக்குப் பிறகு, அவளுடைய வழிபாட்டு முறைகள் பெருகின. கிராமம் கிராமமாக, அம்மன் வடிவங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறிய கோயில்கள் - காளி, மாரியம்மன், பத்திரகாளி, பேச்சி, கண்ணகி - இடம்பெயர்ந்த குடும்பங்கள் முதலில் மீள்குடியேறிய மரங்களின் கீழ் எழுந்தன.

பல பக்தர்களுக்கு, அம்மான் பாதுகாவலராகவும் கண்ணாடியாகவும் இருந்தார். "அவளும் தன் குழந்தைகளை இழந்தாள்" என்று முல்லைத்தீவில் ஒரு பெண், மாரியம்மனது துன்பத்தின் கட்டுக்கதையைக் குறிப்பிடுகிறார். "எங்கள் வலியை அவள் அறிவாள்." இவ்வாறு தெய்வம் கூட்டு அதிர்ச்சியின் களஞ்சியமாக மாறியது, துக்கத்தை சமூக அவமானமாக அல்ல, தெய்வங்களாக மறுபரிசீலனை செய்ய அனுமதித்தது. ஆனால் நம்பிக்கையின் இந்தப் பெண்ணியமயமாக்கல் தெய்வங்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. கோவிலின் சமூக இடம் பெண்ணியமயமாக்கப்பட்டது - பெண்களால் நிர்வகிக்கப்பட்டது, பராமரிக்கப்பட்டது மற்றும் உணர்ச்சி ரீதியாக உயிரூட்டப்பட்டது. ஆண்கள் இல்லாத நிலையில் (பலர் கொல்லப்பட்டனர், காணாமல் போனார்கள் அல்லது வேலைக்காக இடம்பெயர்ந்தனர்), பெண்கள் கோயில் குழுக்களுக்குப் பொறுப்பேற்றனர், காணிக்கைகளைச் சேகரித்தனர், திருவிழாக்களை ஒருங்கிணைத்தனர். அவர்கள் மாலைகளைத் தைத்து, பக்தர்களுக்குச் சமைத்து, தேவியின் உருவத்தை அலங்கரித்தனர்.

இந்த அன்றாடப் பக்தி உழைப்பு, ஒரே நேரத்தில் பொருளாதார ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் அமைந்திருந்தது. கோயில் திருவிழாக்களில் பூக்கள் மற்றும் உணவுகளை விற்பது வருமானத்தை அளித்தது. சடங்குகளில் பங்கேற்பது கண்ணியத்தையும் சொந்தத்தையும் அளித்தது. "அம்மன் எங்களுக்கு வேலையையும் மரியாதையையும் தருகிறார்" என்று கோயிலுக்கு வெளியே பொருட்கள் விற்கும் ஒரு பெண் விளக்கினார். "நாங்கள் இனி பிச்சைக்காரர்கள் அல்ல - நாங்கள் தெய்வத்தின் ஊழியர்கள்" என்ற அவரது கூற்று போருக்குப் பிந்தைய ஈழத்துச் சமூகவெளியின் முக்கியமான பிரதிபலிப்பாகும்.

ஆனால் இந்த நிறுவனத்திற்குள் கூட ஒரு நுட்பமான பாலினப் படிநிலை உள்ளது. காணக்கூடிய பாதுகாவலர்கள் பெண்கள், ஆனால் இறுதி விளக்க அதிகாரம் - தெய்வத்திற்கும் பக்தருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்பவர் - கிட்டத்தட்ட எப்போதும் ஓர் ஆண். அது பெரும்பாலும் தெய்வீக மனிதன் அல்லது சாமியார். அவர் மட்டுமே தெய்வத்தின் விருப்பத்தை விளங்கி மொழிபெயர்க்க முடியும். அவளுடைய செய்திகளை அறிவிக்க முடியும், தீர்வுகளைப் பரிந்துரைக்க முடியும். பெண்களின் உழைப்பு கோவிலை நிலைநிறுத்தியது, ஆனால் அவர்களின் பக்தி தொடர்ந்து ஆண் கவர்ச்சியால் திருப்பிவிடப்பட்டது. ஓர் இளம் பெண் கூர்மையாகக் கூறியது போல், "அம்மன் ஒரு பெண்ணாக இருக்கலாம், ஆனால் அவளுடைய வார்த்தைகள் ஆண்கள் மூலமாகவே வருகின்றன."

போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தின் பக்தி இடங்களில், உணர்ச்சி நாணயமாகப் பரவுகிறது. பெண்களின் கண்ணீர், பிரார்த்தனைகள், காணிக்கைகள் மதப் பொருளாதாரத்தின் மூலப்பொருளாக அமைகின்றன. பண்டிகைகள் உணர்ச்சியின் சந்தைகளாகின்றன, அங்கு துக்கம் ஆறுதலுக்காகப் பரிமாறப்படுகிறது. நன்கொடைகள் நம்பிக்கையின் பொருளாதாரச் சான்றாகின்றன. முல்லைத்தீவில் கோயில் திருவிழாவில், நூற்றுக்கணக்கான பெண்கள் தங்கள் தலையில் கற்பூரச் சட்டிகளைச் சுமந்து, தெய்வம் ஆசிர்வதித்தபடி சூடான மணலில் வெறுங்கால்களுடன் நடந்தனர். பலர், தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பிற்காகவோ அல்லது காணாமல் போனவர்களின் ஆன்மாக்களுக்காகவோ சபதம் செய்த விதவைகளாக இருந்தனர். "ஷெல் தாக்குதலின் போது நாங்கள் இந்த வேண்டுதலை வைத்தோம்" என்று ஒரு பெண் கூறினார். "நாங்கள் உயிருடன் இருந்தால், அம்மானுக்காக நடப்போம் என்பதே எமது மன்றாட்டம்."

வேண்டுதலை நிறைவேற்றுவது ஒரே நேரத்தில் ஒரு சடங்காகவும் உணர்ச்சி விடுதலையாகவும் இரட்டைப் பரிமாணத்தைப் பெறுகிறது. சடங்கில் தாங்கும் வலி போரில் தாங்கும் வலிக்கு ஈடாகிறது. எரியும் கால்கள், வியர்வை, சோர்வு அனைத்தும் துன்பத்தைப் பக்தியாக மாற்றுகின்றன. சடங்குகள், பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்த தங்கள் உடல்கள் மீது பெண்கள் மீண்டும் சுதந்திரத்தைப் பெற அனுமதிக்கின்றன. இருப்பினும், அதே சடங்குகள் பெண்களின் துயரத்தை உண்பதற்கு ஒரு நுட்பமான பொருளாதாரத்தையும் நிலைநிறுத்துகின்றன. தெய்வீக மனிதர்கள் நன்கொடைகளைக் கோருகிறார்கள், ஆசீர்வதிக்கப்பட்ட பொருட்களை விற்கிறார்கள், நிவாரணத்திற்காக விலையுயர்ந்த சடங்குகளைப் பரிந்துரைக்கிறார்கள். ஒருவர் எவ்வளவு அதிகமாகத் துன்பப்படுகிறாரோ, அவ்வளவு அதிகமாக ஒருவர் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கோயில் ஊழியர் குறிப்பிட்டார், “பெண்கள் அழும்போது, சாமியாரின் பெட்டி வேகமாக நிரம்பும்.”

துன்பத்தின் வர்த்தகம் முற்றிலும் இழிவானது அல்ல. அது கட்டமைப்பு ரீதியானது. அதிர்ச்சிக்கு அரசியல் அங்கீகாரம் மற்றும் உளவியல் ஆதரவு இல்லாத சூழலில், மதப் பொருளாதாரங்கள் மட்டுமே சாத்தியமான உணர்ச்சி உட்கட்டமைப்பாக மாறும். பக்தி என்பது பாதிப்பைக் காட்டவும், அதை தார்மீக மூலதனமாக மாற்றவும் சமூக ரீதியாக நியாயமான வழியை வழங்குகிறது. தெய்வத்தின் முன் அழும் ஒரு பெண் பலவீனமானவளாகக் கருதப்படுவதில்லை, மாறாக நீதியுள்ளவளாகவும், பணிவானவளாகவும், உண்மையுள்ளவளாகவும் பார்க்கப்படுகிறாள். “உங்களுக்கு நம்பிக்கை இருக்கும்போது மக்கள் உங்களை மதிக்கிறார்கள். நான் வீட்டில் அழுதால், அவர்கள் என் மீது பரிதாபப்படுகிறார்கள். நான் கோவிலில் அழுதால், நான் ஆசிர்வதிக்கப்பட்டவள் என்று கூறுகிறார்கள்” என்று ஒரு வயதான பக்தர் கூறினார்.

போருக்குப் பிந்தைய மத வாழ்க்கையின் மறுமலர்ச்சி, தார்மீகப் பழமைவாதத்தின் மறுமலர்ச்சியுடன் ஒத்துப்போனது. பல சமூகங்களில், பெண்களின் உடல்கள் தூய்மை, மாசு என்பன குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான போர்க்களமாக மாறின. பெரும்பாலும் தங்களைத் தார்மீகச் சீர்திருத்தவாதிகளாகக் காட்டிக்கொண்ட தெய்வீக மனிதர்கள், மது, திருமணத்திற்குப் புறம்பான விவகாரங்கள், ‘மேற்கத்தியச் செல்வாக்கு’ ஆகியவற்றிற்கு எதிராகப் போதித்தார்கள்.

விதவைகளைப் பொறுத்தவரை, தடைகள் கடுமையானவை. “சாமி, நாம் தெய்வத்தைப் போல வாழ வேண்டும் என்று கூறுகிறார், ஆசை இல்லாமல்” என்று ஒரு விதவை கூறினார். “நாம் நம் மனதைத் தூய்மையாக வைத்திருந்தால், நம் குழந்தைகள் செழிப்பார்கள்.” நடைமுறையில், இது மறுமணத்தைக் கைவிடுவது, அடக்கமாக உடை அணிவது மற்றும் ஒருவரின் வாழ்க்கையைக் கோயில் சேவைக்கு அர்ப்பணிப்பது என்று பொருள். தூய்மை பற்றிய சொற்பொழிவு பல செயற்பாடுகளைச் செய்தது. குழப்பமான உலகில் அது தார்மீகத் தெளிவை வழங்கியது. சமூக ஒற்றுமையை வலுப்படுத்தியது. ஆனால் அது ஆன்மிக ஒழுக்கம் என்ற போர்வையில் ஆணாதிக்கக் கட்டுப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்த விதிமுறைகளிலிருந்து விலகிய விதவைகள் களங்கத்தை எதிர்கொண்டனர். ஒரு பெண் தனியாக ஓர் ஆணைச் சந்திப்பதாகவோ அல்லது பிரகாசமான ஆடைகளை அணிந்திருப்பதாகவோ பரப்பப்படும் வதந்திகள் சமூகப் புறக்கணிப்புக்கு வழிவகுக்கும்.

இவ்வாறு மத அதிகாரம் நல்லொழுக்கத்தின் அழகியல் மூலம் செயற்பட்டது - சைகைகள், பேச்சு மற்றும் முகபாவனைகளைக் கூட ஒழுங்குபடுத்துதல். பக்தர்கள் மெதுவாகப் பேசவும், அரிதாகவே சிரிக்கவும், கோவிலில் சிரிப்பைத் தவிர்க்கவும் கற்றுக்கொடுக்கப்பட்டனர். “அம்மனுக்குச் சத்தம் பிடிக்காது” என்று ஒரு திருவிழாவின் போது பெண்களுக்கு நினைவூட்டப்பட்டது. சிலர் இந்த விதிமுறைகளை பாதுகாப்பாக உள்வாங்கிக் கொண்டனர். “முன்பு, இராணுவத்தினர் எங்களை விலங்குகளைப் போலப் பார்த்தார்கள்” என்று வன்னியைச் சேர்ந்த ஒரு பெண் கூறினார். “இப்போது நாங்கள் கோவிலுக்குச் செல்லும்போது, கன்னியாஸ்திரிகள் போல இருக்கிறோம். யாரும் எங்களைத் தொட முடியாது.” பக்தியின் தார்மீக ஒழுங்கு கண்ணுக்குத் தெரியாததன் மூலம் பாதுகாப்பை வழங்கியது.

ஆனால் மற்றவர்கள் அதை மூச்சுத் திணறலாக உணர்ந்தனர். இளம் பெண்கள், குறிப்பாக பல்கலைக்கழகங்களில் படித்தவர்கள், பணியில் இருப்பவர்கள் விரக்தியை வெளிப்படுத்தினர். “அவர்கள் எங்களை தெய்வங்களைப் போல இருக்கச் சொல்கிறார்கள், ஆனால் எங்களை வேலைக்காரர்களைப் போல நடத்துகிறார்கள். ஆனால் நாங்கள் பிரார்த்தனை செய்யவும் அதேவேளை விரும்பியபடி வாழவும் விரும்புகிறோம்” என்று ஒரு பல்கலைக்கழகக் கல்வியை முடித்த இளம்பெண் கூறினார். இந்தத் தலைமுறைப் பதற்றம் போருக்குப் பிந்தைய தமிழ் அடையாளத்தில் பரந்த மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது: பாரம்பரியம், நவீனத்துவம்,

நம்பிக்கை, சுதந்திரம் ஆகியவற்றுக்கு இடையே ஏராளமான பதற்றங்கள் உருவாகியுள்ளன. வயதான பெண்கள் பக்தியை மீட்டெடுப்பாகக் கண்டாலும், இளையவர்கள் அதைக் கட்டுப்பாடாகக் கண்டார்கள்.

தெய்வீக மனிதர்களுக்கும் அவர்களைப் பின்பற்றும் பெண்களுக்கும் இடையிலான உறவுகள் பெரும்பாலும் ஆன்மிக வழிகாட்டுதலுக்கும் உணர்ச்சியைச் சார்ந்திருப்பதற்கும் இடையிலான கோடுகளை மங்கலாக்குகின்றன. பல பெண்கள் சுவாமியை 'அப்பன்' (தந்தை) அல்லது 'குரு' என்று விவரிக்கிறார்கள், அதாவது தார்மீக அதிகாரம் மற்றும் பாசத்தின் உருவங்கள். அவர்கள் தங்கள் துக்கங்கள், அச்சங்கள் மற்றும் தனிப்பட்ட போராட்டங்களை அவரிடம் பகிர்ந்து கொள்கிறார்கள். விதவைகள் மற்றும் பெண்களுக்கு, இந்த தந்தைவழி நெருக்கம் வேறுவிதமாக துண்டு துண்டான வாழ்க்கையில் ஆறுதலையும் கட்டமைப்பையும் அளிக்கும்.

இருப்பினும், அதே நெருக்கம் ஆபத்தை ஏற்படுத்துகிறது. செயற்பாட்டாளர்களால் ஆவணப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களில், தெய்வீக மனிதர்கள் இந்த நம்பிக்கையை நிதி ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ பயன்படுத்திக் கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் சமூகக் களங்கம் மற்றும் தெய்வீகப் பழிவாங்கலுக்கு அஞ்சுவதால், குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது கடினம். "நாம் சாமிக்கு எதிராகப் பேசினால், தெய்வம் நம்மை சபிக்கும்" என்று ஒரு பெண் கிசுகிசுத்தாள். வெளிப்படையான துஷ்பிரயோகம் இல்லாவிட்டாலும், உணர்ச்சியைச் சார்ந்திருப்பதே ஓர் ஆழமான பாலினச் சமச்சீரற்ற தன்மையைப் பிரதிபலிக்கிறது. சாமி, பெண்களின் உணர்ச்சிகளின் விளக்கவுரையாளராக, அவர்களின் தார்மீக மதிப்பின் நடுவராக மாறுகிறார். ஒப்புதல் வாக்குமூலம் போன்ற உரையாடல்கள் மூலம், அவர் உளவியல் சக்தியைப் பயன்படுத்துகிறார். "என் கனவுகளுக்கான அர்த்தத்தை அவர் எனக்குச் சொல்கிறார்" என்று ஒரு பக்தர் கூறினார். இவ்வாறு தெய்வீக மனிதனின் குரல் பெண்களின் சொந்த உள் உலகங்களுடனான உறவை மத்தியஸ்தம் செய்கிறது. தொழில்முறை ஆலோசனை இல்லாத சூழலில், அவர் ஒரு சிகிச்சையாளராக - ஆனால் நெறிமுறைகளை விட இறையியலால் வழிநடத்தப்படும் ஒருவராக - செயற்படுகிறார்.

இளைய தலைமுறையினர், குறிப்பாக போருக்குப் பிறகு வளர்ந்த பெண்கள், நம்பிக்கையுடன் வித்தியாசமாகத் தொடர்பு கொள்கிறார்கள். பலருக்கு, கோயில் சடங்குகள் குழந்தைப் பருவ நினைவுகள், சத்தம், இசை மற்றும் காட்சி இடங்களாக உள்ளன. ஆனால் அவை, அவற்றை தாய்மார்களின் முடிவில்லாத் துக்கத்துடன் தொடர்புபடுத்துகின்றன. "அம்மா பிரார்த்தனை செய்யும் ஒவ்வொரு முறையும் அழுகிறார், நான் அப்படி இருக்க விரும்பவில்லை" என்று பதின்ம வயதுப் பெண் சொல்கிறாள். இந்தத் தலைமுறைகளுக்கு இடையேயான வேறுபாடு உணர்ச்சிப் பொருளாதாரத்தில் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது. வயதான பெண்கள் சடங்கு, சகிப்புத்தன்மையில் அர்த்தத்தைக் காணும் இடத்தில், இளைய பெண்கள் இயங்குதல், கல்வி மற்றும் சுய வெளிப்பாட்டை நாடுகிறார்கள். இருப்பினும் பக்தியின் உணர்ச்சி மரபுகள் அப்படியே இருக்கின்றன. மகள்கள் அதிர்ச்சியை மட்டுமல்ல, மத வாழ்க்கையில் பொதிந்துள்ள தியாகத்தின் தார்மீக நெறிமுறைகளையும் பெறுகிறார்கள்.

போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தின் மதம் உருவாக்கியிக்கும் பாலினம் சார் சிக்கல்களும் உணர்ச்சிப் பொருளாதாரங்களும் ஒரு முரண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. மதம் பெண்களுக்கு தார்மீக அங்கீகாரத்தையும் சமூக ஒற்றுமையையும் வழங்குவதன் மூலம் அதிகாரம் அளிக்கிறது, ஆனால் அது அவர்களின் சுயாட்சியையும் கட்டுப்படுத்துகிறது. கோயில் சரணாலயமாகவும் கண்காணிப்பாகவும் மாறுகிறது. தெய்வம் ஆறுதலளிப்பதாகவும், ஒழுக்கமானதாகவும், வழிகாட்டுவதாகவும் இருக்கிறது. தெய்வீக மனிதர்கள் பெண்களின் துன்பங்களை தூய்மை மற்றும் சகிப்புத்தன்மையின் கதைகளாக மாற்றுகிறார்கள், அரசியல் இழப்பை தார்மீக நல்லொழுக்கமாக மாற்றுகிறார்கள். ஆனால் இந்தக் கட்டுப்பாடுகளுக்குள், பெண்கள் சடங்கு உழைப்பு, பரஸ்பர பராமரிப்பு மற்றும் உருவகப்படுத்தப்பட்ட வெளிப்பாடு மூலம் தம் நிர்வாகத்துக்குட்பட்ட இடங்களைச் செதுக்குகிறார்கள்.

இவ்வாறு நம்பிக்கை இரட்டை முனைகள் கொண்டதாகச் செயற்படுகிறது: அது விடுதலை செய்யாமல் ஆறுதல் அளிக்கிறது, கட்டுப்படுத்துகிறது, ஆனால் நிலைநிறுத்துகிறது. மதச்சார்பற்ற கட்டமைப்புகள் நீதியையோ அல்லது குணப்படுத்துதலையோ வழங்கத் தவறிவிட்ட ஒரு சமூகத்தில், பக்தி என்பது வலியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த மிகவும் அணுகக்கூடிய ஊடகமாக உள்ளது. கொடுப்பதற்கும் பெறுவதற்கும், துன்பத்திற்கும் வலிமைக்கும் இடையிலான அந்தப் பரஸ்பரத்தில், போருக்குப் பிந்தைய தமிழ்ப் பெண்மையின் சிக்கலான உண்மை உள்ளது: பக்தி என்பது நம்பிக்கை மட்டுமல்ல, உயிர் வாழ்வதற்கான ஒரு நடைமுறை, இழப்பால் நுகரப்படாமல் அதை வாழ ஒரு வழி.

## புலம்பெயர்ந்தோர் ஆதரவு: அற்புதங்களின் அரசியல் பொருளாதாரம்

**பகுதி 2**

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், புலம்பெயர்ந்த தமிழர்கள் பின்தங்கிய சமூகங்களுக்கு நன்மை பயக்கும் தார்மீகத் திசைகாட்டியாக உருவெடுத்தனர். டொராண்டோவிலிருந்து இலண்டன் வரை, சூரிச் முதல் ஒஸ்லோ வரை, குடும்பங்கள், பாடசாலைகளுக்கு மட்டுமல்ல, கோயில்களுக்கும் ஆன்மிக இயக்கங்களுக்கும் பணம் பாயத் தொடங்கியது. ஒரு காலத்தில் உள்ளூர், கிராம அடிப்படையிலான மதமாக இருந்தவை பல்கிப்பெருகி நாடு கடந்ததாக மாறின. இது புலம்பெயர்ந்த தமிழ் அடையாளத்தை நினைவுகூர, மீண்டும் இணைக்க, மறுகற்பனை செய்ய புலம்பெயர்ந்தோரின் விருப்பத்தால் நிரப்பப்பட்டது.

இந்த மறுகட்டமைப்பில், கவர்ச்சிகரமான, பயணிக்கக்கூடிய, ஊடகத்தின் வழி பேசக்கூடிய தெய்வீக உருவம் போரினால் பாதிக்கப்பட்ட உள்ளூரில் இருப்பவர்களுக்கும் புலம்பெயர்ந்து வளமான தேசங்களில் வாழ்வோருக்கும் - இரண்டு உலகங்களுக்கு - இடையேயான இணைப்பாக மாறியது. அற்புதங்கள், ஆசீர்வாதங்கள், தெய்வீக வெளிப்பாடுகள் தார்மீக நாணயமாக மாறியது, இதன் மூலம் புலம்பெயர்ந்தோர் தாயக மறுகட்டமைப்பில் உணர்ச்சி ரீதியாக முதலீடு செய்யலாம், அதே நேரத்தில் அவை அதன் அரசியல் முறிவுகளிலிருந்து ஆன்மிக தூரத்தைப் பேணுகின்றன.

போர் முடிந்து அரைத்தசாப்தகாலத்திற்குப் பிறகு முன்னாள் போர் வலயங்களில் கோயில்கள் முளைத்தன. உதாரணமாக முல்லைத்தீவில் தூசி நிறைந்த சாலையில் அம்மனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய கோயில் திறக்கப்பட்டது. கோயிலின் அடித்தளம் உள்ளூர் சாமியாரால் நாட்டப்பட்டது, ஆனால் அதன் மின்னும் கோபுரம் மற்றும் கிரானைட் தரைகளுக்கு கனடாவில் உள்ள தமிழ்க் குடும்பங்களால் நிதியளிக்கப்பட்டன. வெளியே ஒரு பெரிய அறிவிப்புப் பலகை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அறிவித்தது: “வெளிநாட்டில் உள்ள எங்கள் குழந்தைகளின் அன்பாலும் பக்தியாலும் இக்கோவில் கட்டப்பட்டது.”

ஒவ்வொரு பண்டிகைக் காலத்திலும், புலம்பெயர்ந்தோர் நிதியளித்த பதாகைகளைத் தாங்கிய லொறிகள் கொழும்பிலிருந்து வருகின்றன, அவை அரிசி, எண்ணெய் மற்றும் மாலைகளுடன் ஏற்றப்படுகின்றன. கோயிலில் இப்போது ஓர் ஒலி அமைப்பு, ‘சிசிடிவி’ கேமராக்களோடு சடங்குகளை நேரடியாக ஒளிபரப்பும் ஓர் இளம் தன்னார்வலரால் தினமும் புதுப்பிக்கப்படும் பேஸ்புக் பக்கமும் உள்ளது. “முன்பு, எங்கள் கோயில்கள் எளிமையாக இருந்தன, பக்தி இருந்தது, இறைவன் உறைந்திருந்தார்” என்று ஒரு வயதான பக்தர் கூறினார். இன்னொருவர் இக்கூற்றை மறுத்தார், அவர் சொன்னார்: “இப்போது அவை இந்தியாவில் உள்ள கோயில்களைப் போலவே பிரகாசிக்கின்றன. ஏனென்றால், வெளிநாடுகளில் உள்ள எங்கள் மகன்களும் மகள்களும் எங்களுக்கு மீண்டும் கண்ணியம் கிடைக்க விரும்புகிறார்கள்.”

இந்த அழகியல் மாற்றம் - பளிங்குத் தளங்கள், வெள்ளி இரதங்கள், இறக்குமதி செய்யப்பட்ட சிலைகள் - வெறும் அலங்காரமல்ல. இது சமூகத்தின் தார்மீக மறுகட்டமைப்பைக் குறிக்கிறது. புலம்பெயர்ந்தோர் நிதியுதவி உள்ளூர் மத வாழ்க்கையை கலாசார பெருமையின் தளமாக மறுவடிவமைக்கிறது, துன்பத்தின் பிம்பத்தை தெய்வீகச் செழிப்புடன் மாற்றுகிறது. ஆனாலும், இந்தச் செழிப்பு சமமற்ற முறையில் பரவியுள்ளது. புலம்பெயர்ந்தோரின் கவனத்தை ஈர்க்கும் கோயில்கள் செழித்து வளர்கின்றன, மற்றவை நலிவடைகின்றன. முல்லைத்தீவில் உள்ள ஒருவர், “இப்போது கடவுள்களுக்கும் ஆதரவாளர்கள் தேவை” என்று கேலியாகக் குறிப்பிட்டார். வளர்ச்சியின் தர்க்கம் ஆன்மிகத் துறையில் நுழைந்து, தெய்வீகத் தயவு என்பது கோயிலின் சதுர அடி, ‘ஒன்லைன்’ பார்வைகளில் அளவிடப்படும் அற்புதங்களின் போட்டிப் பொருளாதாரத்தை உருவாக்குகிறது.

புலம்பெயர்ந்தோர் அனுப்பும் பணம் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களை நீண்ட காலமாகப் பாதுகாத்து வருகிறது, ஆனால் போருக்குப் பிந்தைய அவர்களின் ஆன்மிகப் பரிமாணங்கள் தீவிரமடைந்துள்ளன. வெளிநாடுகளில் உள்ள பல குடும்பங்கள் அபிஷேகம், அர்ச்சனை, சிறப்புப் பூஜைகளுக்கு பணம் அனுப்புகின்றன. ஆடி அமாவாசையின் போது, வடக்கு முழுவதும் உள்ள கோயில்கள் கனடா, பிரான்ஸ், சிட்னி ஆகியவற்றிலிருந்து முகவரியிடப்பட்ட உறைகளைப் பெறுகின்றன, ஒவ்வொன்றும் பிரார்த்தனைகளுக்கான கோரிக்கைகளுடன் சிறிய நன்கொடைகளைக் கொண்டுள்ளன.

கிளிநொச்சியில் உள்ள ஒரு சாமியார் துல்லியமான பதிவுகளை வைத்திருக்கிறார்: நன்கொடையாளர்களின் பெயர்கள், சடங்கு வகைகள், தொகைகள். “அவர்கள் எங்களை ‘வட்ஸ்அப்’பில் அழைக்கிறார்கள்” என்று அவர் கூறினார். “அவர்கள் கேட்கிறார்கள், நீங்கள் விளக்கை ஏற்றினீர்களா? அம்மன் அடையாளத்தைக் கொடுத்தாரா? நாங்கள் புகைப்படங்களை, சில நேரங்களில் வீடியோக்களை அனுப்புகிறோம்.

அவர்கள் இங்கே இருப்பதாக உணர்கிறார்கள்.” இந்த ஆன்மிக ‘அவுட்சோர்சிங்’ உள்ளூர் கோவிலை டிஜிட்டல் நெருக்கத்தால் பராமரிக்கப்படும் ஒரு பன்னாட்டு நிறுவனமாக மாற்றுகிறது. ஒரு காலத்தில் முன்னிலையில் இருந்த சடங்குச் செயல்கள் இப்போது நம்பிக்கையின் தொழில்நுட்பங்களால் (வீடியோ அழைப்புகள், ‘பேபால்’ பரிமாற்றங்கள், ‘வட்ஸ்அப்’ பிரார்த்தனைகள்) மத்தியஸ்தம் செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விதவை விளக்கினார், “ஜெர்மனியில் உள்ள என் மகள் வர முடியாது. அவள் தன் வீட்டை ஆசீர்வதிக்க சுவாமிக்குப் பணம் அனுப்புகிறாள். சுவாமி தன் பெயரை உச்சரிக்கும்போது, அவள் தன் தொலைபேசியிலிருந்து பார்க்கிறாள். அவள் ஒருபோதும் நாட்டைவிட்டு வெளியேறாதது போல் இருக்கிறது.” இவ்வாறு புலம்பெயர் மதத்தின் உணர்ச்சிப் பொருளாதாரம் தூரம், வலி மற்றும் அரசியலைத் தாண்டிய நம்பிக்கை என்ற மெய்நிகர் சகவாழ்வை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும்கூட, இது புதிய படிநிலைகளையும் மீண்டும் உருவாக்குகிறது - வெளிநாட்டில் உறவினர்களைக் கொண்டவர்கள் சிறந்த சடங்குகள், வேகமான அற்புதங்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகிறார்கள். இந்தச் சூழலில், அற்புதங்கள் சமூகச் சான்றாகச் செயற்படுகின்றன - டிஜிட்டல் மூலமும் வாய்வழி கடத்தும் வலையமைப்புகள் மூலமும் பரவும் தெய்வீக ஒப்புதலின் அடையாளங்கள். குணப்படுத்துதல், நிதி வெற்றி, இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிகுறிகள் பற்றிய கதைகள், புலம்பெயர்ந்த பக்தர்களை தாயகத் தெய்வங்களுடன் இணைக்கும் முக்கிய சாட்சியங்களாக மாறுகின்றன.

டொராண்டோவின் தமிழ்ச் சமூகத்தில், புற்றுநோயைக் குணப்படுத்திய வன்னி சுவாமியின் கதைகளையோ அல்லது வெளிநாட்டில் ஒரு பெண்ணின் திருமணத்தை முன்னறிவித்த யாழ்ப்பாண குருஜியின் கதைகளையோ ஒருவர் கேட்கலாம். இந்தக் கதைகள் பெரும்பாலும் கோயில் கூட்டங்களில், கிசுகிசுக்களில் தொடங்கி, ‘வட்ஸ்அப்’ குழுக்கள் வழியாகப் பயணித்து, பொது நிதி திரட்டும் பிரசாரங்களாக முடிவடைகின்றன.

இலண்டனில் உள்ள ஒரு பக்தர் இவ்வாறு விவரித்தார்: “என் சகோதரர் விபத்தில் சிக்கியபோது, முல்லைத்தீவில் உள்ள சுவாமியை அழைத்தோம். அவர் பிரார்த்தனை செய்து, அவர் மூன்று மாதங்களில் மீண்டும் நடப்பார் என்று கூறினார். சரியாக அது நடந்தது. அதன் பிறகு, நாங்கள் அவரது பெயரில் ஒரு சன்னதியைக் கட்டினோம்.” இத்தகைய கதைகள் தெய்வீகக் கவர்ச்சியின் பண்டமாக்கலை விளக்குகின்றன. தெய்வீக மனிதனின் அற்புதம் ஒரு ‘பிராண்ட்’ாக மாறுகிறது - சாட்சியத்தால் அங்கீகரிக்கப்பட்டு, புலம்பெயர்ந்தோர் புழக்கத்தால் பெருக்கப்பட்டு, நன்கொடைகள் மூலம் பணமாக்கப்படுகிறது. அவரது நற்பெயர் எவ்வளவு அற்புதமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு எல்லைகளைத் தாண்டி அவர் சென்றடைகிறார்.

பல தெய்வீக மனிதர்கள் இப்போது வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். ஹோமங்களைச் செய்யவும், புலம்பெயர்ந்தோர் கோயில்களில் குணப்படுத்தும் அமர்வுகளைச் செய்யவும் அழைக்கப்படுகிறார்கள். அவர்களின் சுற்றுப்பயணங்கள் சாலை நிகழ்ச்சிகளை (Road Shows) ஒத்திருக்கின்றன: ஒரு மாதம் சிங்கப்பூர், அடுத்த மாதம் சூரிச், அதன் பிறகு கனடா. அவர்கள் குழந்தைகளை ஆசீர்வதிக்கிறார்கள், பரீட்சை முடிவுகளைக் கணிக்கிறார்கள், நோய்களைக் குணப்படுத்துகிறார்கள். பதிலுக்கு, அவர்களுக்கு உறைகள், தங்கச் சங்கிலிகள் அல்லது விமான டிக்கெட்டுகள் கிடைக்கின்றன.

கனடாவில் உள்ள ஓர் அமைப்பாளர் ஒப்புக்கொண்டபடி, “நமது சுவாமி இங்கே நமக்குத் தேவை. அவர் நமது சமூகத்தை ஒற்றுமையாக வைத்திருக்கிறார். ஆனால் அவரது ஆசீர்வாதங்களுக்கும் நாங்கள் பணம் செலுத்துகிறோம்.” இவ்வாறு உணர்ச்சி, நம்பிக்கை மற்றும் நிதிப் பரிமாற்றத்தால் நிலைநிறுத்தப்படும் அற்புதங்களின் அரசியல் பொருளாதாரம் வெளிப்படுகிறது. அதிசயம் என்பது வெறுமனே ஒரு மதச் செயல் அல்ல, மாறாக நாடுகடந்த உறவையும் தார்மீக நியாயத்தன்மையையும் மீண்டும் உறுதிப்படுத்தும் ஒரு பரிவர்த்தனை. புலம்பெயர்ந்த பக்தர்கள் ஆன்மிக முதலீடு மூலம் தாங்கள் தாய்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறார்கள், அதே நேரத்தில் தெய்வ மனிதர்கள் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த இந்த ஏக்கத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழருக்கு, போர் நினைவுகள் தாங்க முடியாதவை, இன்றியமையாதவை. 1980கள் மற்றும் 1990களில் பலர் இலங்கையை விட்டு வெளியேறி, உயிர் பிழைத்ததற்கான குற்ற உணர்ச்சியையும், நாடு கடத்தப்பட்டதன் வலியையும் சுமந்து சென்றனர். தங்கள் புரவலர் நாடுகளில், கோயில்கள் ஏக்கத்தைக் குவித்து வைக்கும் களஞ்சியங்களாக மாறின; சடங்குகள் மூலம் ‘வீட்டை’ மீண்டும் உருவாக்க அவை ஒரு வழியாக அமைந்தன. 2009க்குப் பிறகு, போர் கொடூரமாக முடிவடைந்ததால், இதே கோயில்கள் போருக்குப் பிந்தைய துக்கம் மற்றும்

மறுகட்டமைப்புக்கான இடங்களாக மாறின. புலம்பெயர் பக்தர்கள் மறுவாழ்வுத் திட்டங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் இறந்தவர்களுக்கான நினைவு பூஜைகளுக்கு நிதியளித்தனர். ஆனால் காலப்போக்கில், மனிதாபிமான ஆர்வம் ஆன்மிகமயமாக்கலுக்கு வழிவகுத்தது. இந்தப் பேச்சு நீதியிலிருந்து கர்மாவிற்கும், அரசியலிலிருந்து பக்திக்கும் மாறியது. புலம்பெயர் கூட்டத்தில் பங்கேற்ற ஒரு சாமியார் குறிப்பிட்டார், “இறந்தவர்கள் அமைதியைக் கண்டார்கள் என்று மக்கள் நம்ப விரும்புகிறார்கள். அவர்கள் இனி பழிவாங்கல் அல்லது உரிமைகளைப் பற்றி பேசுவதில்லை. அவர்கள், கடவுள் அறிவார் என்று கூறுகிறார்கள்.” துக்கத்தை அரசியல் ரீதியாக நீக்குதலும் அரசியல் அதிர்ச்சியை மத விதியாக மாற்றுதலும் புலம்பெயர்ந்தோரின் இழப்புடன் சமரசம் செய்வதற்கு மையமாக உள்ளது. கர்மா மற்றும் தெய்வீக ஒழுங்கின் மாயச் சொல்லாட்சியுடன், தெய்வீக மனிதர்கள் துல்லியமாக இந்த மூடுதலை வழங்குகிறார்கள். நீதி இல்லாத இடத்தில் அவை அர்த்தத்தை அளிக்கின்றன.

இந்தத் தெய்வீக மனிதர்களின் இயங்கியல்கள் வேறுபட்டவை. ஒரு சிலர் நடந்த அநீதிக்கான ஒரு மூடுதலை வழங்குவதன் ஊடு மக்களைக் கவர்கிறார்கள். வேறு சிலர் எஞ்சியிருக்கும் உணர்வுகளை வடிகாலாக்கி அதை தமக்கான ஆதாரமாக்குகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த ஒரு சுவாமி, இலண்டனில் பக்தர்களிடம், “எங்கள் மகன்களின் இரத்தம் வீணாகாது. தெய்வம் ஒரு புதிய விடியலைத் தயாரிக்கிறது. துன்பப்பட்டவர்கள் மீண்டும் தலைவர்களாகப் பிறப்பார்கள்” என்று கூறினார். கூட்டம் அழுதது. அந்த நேரத்தில், அரசியல் தோல்வி ஆன்மிக வெற்றியாக மறுவடிவமைக்கப்பட்டது.

இத்தகைய கதைகள் மூலம், மதம் போரின் தார்மீக எச்சங்களை உறிஞ்சுகிறது. அதிசயம் என்பது ஒரு நோயைக் குணப்படுத்துவது மட்டுமல்ல, அது வரலாற்றை மறுபரிசீலனை செய்வதுமாகும். புலம்பெயர் நன்கொடையாளர்கள், கோயில்களுக்கு நிதியளிப்பதன் மூலமோ அல்லது சடங்குகளை ஆதரிப்பதன் மூலமோ, இந்த மீட்புத் திட்டத்தில் பங்கேற்பாளர்களாக மாறுகிறார்கள். அவர்களின் தாராள மனப்பான்மை கூட்டுக் குற்ற உணர்வை நீக்குகிறது; அவர்கள் ஒரு புனிதமான தாயகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

டிஜிட்டல் திருப்பம் ஈழத்து மதங்களின் இயங்கியலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தெய்வ மனிதர்களின் ‘பேஸ்புக்’ பக்கங்கள் இப்போது ஆயிரக்கணக்கான பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ளன. ‘யூடியூப்’ சேனல்கள் அபிஷேகங்களை நேரலை செய்கின்றன. ‘வட்ஸ்அப்’ குழுக்கள் அதிசயக் கதைகள், சுவர்களில் தோன்றும் புனிதச் சாம்பலின் புகைப்படங்கள் அல்லது குணப்படுத்தப்பட்ட நோய்களின் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

2021 ஆம் ஆண்டில், முல்லைத்தீவுக் கோயிலில் இருந்து ஒரு ‘வைரல்’ வீடியோ, தெய்வச் சிலைக்கு அருகில் ஒரு தங்க நாகபாம்பு சுருண்டு கிடப்பதைக் காட்டியது. புலம்பெயர்ந்த தமிழர்களிடையே பரவலாகப் பகிரப்பட்ட இந்தப்படம், “அம்மன் தனது மக்களைப் பாதுகாக்கிறது என்பதற்கான அறிகுறி” என்று பாராட்டப்பட்டது. வாரங்களுக்குள், கோவிலைப் புதுப்பிக்க வெளிநாட்டிலிருந்து நன்கொடைகள் குவிந்தன. இது போன்ற சம்பவங்கள், புனிதமானது ‘டிஜிட்டல்’ ஊடகங்கள் மூலம் எவ்வாறு ஒரு காட்சியாகப் பரவுகிறது என்பதைக் காட்டுகின்றன. அற்புதங்கள் கைப்பற்றப்பட்டு, திருத்தப்பட்டு, விநியோகிக்கப்படுகின்றன. இது ‘பொப்’ கலாசாரத்தை வடிவமைக்கும் அதே இயக்கவியலுக்கு (டிஜிட்டல் மொழியில் வைரலாக்குதல்) உட்பட்டது. இந்த வழிமுறை சந்தையில் தெய்வீகத்தை ஒரு செயற்றிறன் மிக்க இருப்பாக மாறுகிறது.

இந்த டிஜிட்டல்மயமாக்கல் அதிகாரத்தையும் மாற்றியுள்ளது. கவர்ச்சிகரமான தெய்வீக மனிதர்கள் ‘ஒன்லைன்’ பின்தொடர்பவர்களை வளர்க்கிறார்கள், மதச் செய்திகளை ஊக்கமளிக்கும் உரைகளுடன் கலக்கிறார்கள், எப்போதாவது காந்தி அல்லது நவீன உளவியலை மேற்கோள் காட்டுகிறார்கள். தனது நேர்த்தியான ‘பேஸ்புக்’ இடுகைகளுக்கு பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு சுவாமி தனது பின்தொடர்பவர்களை தனது ‘உலகளாவிய குடும்பம்’ என்று குறிப்பிடுகிறார். அவரது பக்கத்தில் நோர்வேயில் ஆசீர்வாதங்கள், பாரிஸில் குழந்தைகளின் பிறந்தநாள் விழாக்கள் மற்றும் வவுனியாவில் நடந்த தொண்டு நிகழ்வுகளின் புகைப்படங்கள் உள்ளன - இவை அனைத்தும் ‘எல்லைகள் கடந்த நம்பிக்கை’ என்ற தலைப்பின் கீழ் உள்ளன.

புலம்பெயர்ந்தோருக்கு, இதுபோன்ற ‘ஒன்லைன்’ அணுகல் தூரத்தைக் குறைக்கிறது. “நான் தினமும் காலையில் வேலைக்கு முன் சுவாமியின் பிரார்த்தனைகளைப் பார்க்கிறேன். இது நான் யார் என்பதை எனக்கு நினைவூட்டுகிறது” என்று ஜெர்மனியில் உள்ள ஒரு தமிழ் செவிலியர் கூறினார். ஆனால் இந்த நெருக்கம் ஒரு விலையில் வருகிறது. டிஜிட்டல் பக்தி தொடர்ச்சியான தெரிவுநிலை மூலம் நிலைநிறுத்தப்படுகிறது - விருப்பங்கள், கருத்துகள், பங்களிப்புகள் மூலம். நம்பிக்கையை உயிர்ப்புடன்

வைத்திருக்க அற்புதங்கள் பெருக வேண்டும். தெய்வ மனிதன் ஓர் உள்ளடக்கத் தயாரிப்பாளராக மாறுகிறான், நம்பிக்கை ஒரு நுகர்வு அனுபவமாக மாறுகிறது.

புலம்பெயர் மக்களின் ஆதரவு பெரும்பாலும் தொண்டு மொழியில் வருகிறது, ஆனால் அதன் விளைவுகள் அரசியல் ரீதியானவை. கோயில் நன்கொடைகள் நன்கொடையாளர்கள், பூசாரிகள், உள்ளூர் உயரடுக்குகளை இணைக்கும் கடமைகளின் வலைப்பின்னல்களை உருவாக்குகின்றன. ஒரு பெரிய கோயில் திருவிழா கிராமத் தலைவர்களுக்கு புலம்பெயர் மக்களின் தொடர்புகளை வெளிப்படுத்தவும், கௌரவத்திற்காகப் போட்டியிடவும், யாத்திரீகர்களை ஈர்க்கவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

யாழ்ப்பாணத்தில் புலம்பெயர் நிதியுடன் ஒரு புதிய கோயில் மீண்டும் கட்டப்பட்டது. திறப்பு விழாவின் போது, ஒரு நன்கொடையாளரின் பெயர் நுழைவாயிலில் பளிங்குக் கற்களால் பொறிக்கப்பட்டது. நிகழ்வைத் தலைமை தாங்கிய தெய்வீக மனிதன், "அம்மன் தனது வீட்டை மீட்டெடுக்க வெளிநாட்டில் உள்ள இந்தக் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார்" என்று அறிவித்தார். இத்தகைய சொல்லாட்சி புலம்பெயர் மக்களின் செல்வத்தைப் புனிதப்படுத்துகிறது, பொருளாதாரச் சலுகையை தெய்வீக ஆதரவாக மாற்றுகிறது. நன்கொடையாளர்கள் பகிரங்கமாகக் கௌரவிக்கப்படுகிறார்கள், புகைப்படம் எடுக்கப்படுகிறார்கள், மாலை அணிவிக்கப்படுகிறார்கள். அவர்களின் தாராள மனப்பான்மை தார்மீகப் படிநிலையை வலுப்படுத்துகிறது: அதிகமாகக் கொடுப்பவர்கள் தெய்வத்திற்கு நெருக்கமானவர்கள்.

ஆனால், அனைவருக்கும் பயனில்லை. வெளிநாட்டு ஆதரவாளர்கள் இல்லாத சிறிய கோயில்கள் உயிர்வாழப் போராடுகின்றன. "கனடாவில் உங்களுக்கு யாராவது இல்லையென்றால், உங்கள் கடவுள் ஒரு குடிசையில் இருப்பார்" என்று ஒரு கிராமவாசி கேலி செய்தார். புலம்பெயர் மக்களின் கவனத்திற்கான போட்டி வெறுப்பைத் தூண்டுகிறது. அற்புதங்களின் அரசியல் பொருளாதாரம் உலக முதலாளித்துவத்தின் பரந்த ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கிறது: நம்பிக்கை பணம் அனுப்பும் வழிகளில் பாய்கிறது, புறக் கடவுள்களை அந்தரிக்க விட்டுவிடுகிறது.

புலம்பெயர்ந்தோர் நன்கொடைகள் கோயில்களை நிலைநிறுத்தினாலும், அவை நுட்பமான தார்மீகக் கண்காணிப்பையும் அறிமுகப்படுத்துகின்றன. நன்கொடையாளர்கள் தங்கள் பணம் வெளிப்படையான பலன்களைத் தரும் என்று எதிர்பார்க்கிறார்கள் - சடங்குகள் சரியான நேரத்தில் செய்யப்படுகின்றன, திருவிழாக்கள் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன, ஆசீர்வாதங்கள் வழங்கப்படுகின்றன. சிலர் கோயில் நிதியை தொலைதூரத்தில் கண்காணிக்கிறார்கள், வெளிப்படைத்தன்மையைக் கோருகிறார்கள். "வெளிநாட்டில் உள்ளவர்கள் தாங்கள் கொடுப்பதால், கோவிலை அவர்கள் சொந்தமாக்குகிறார்கள் என்று நினைக்கிறார்கள், நாங்கள் இங்கே வாழ்கிறோம், நாங்கள் அன்றாட வேலைகளை நிர்வகிக்கிறோம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்" என்று யாழ்ப்பாணத்தில் ஒரு கோயில் மேலாளர் குறை சொன்னார்.

தெய்வீக மனிதர்கள் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்படும்போது சில நேரங்களில் பதற்றங்கள் வெடிக்கின்றன. ஒரு சுவாமி தனிப்பட்ட பயணங்களுக்கு நன்கொடைகளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும்போது ஒரு சர்ச்சை எழுந்தது. புலம்பெயர் பக்தர்கள் நிதி வழங்குவதை நிறுத்தினர். சிலகாலம் 'போலிச் சுவாமிகள்' பற்றிய 'ஒன்லைன்' விவாதங்கள் நடந்தன. இத்தகைய நிகழ்வுகள் அதிசயப் பொருளாதாரத்தின் அடிப்படையிலான பலவீனமான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. தெய்வீக மனிதனின் நியாயத்தன்மை அவரது உணரப்பட்ட தார்மீகத் தூய்மையைப் பொறுத்தது. ஓர் ஊழல் அவரை அழிப்பது மட்டுமல்லாமல், வெளிநாட்டில் உள்ள அவரது ஆதரவாளர்களை ஏமாற்றுகிறது. ஆயினும்கூட, "சுவாமி தோல்வியடைந்தாலும், அம்மான் தோல்வியடைய மாட்டார்" என்ற நம்பிக்கையால் உந்தப்பட்டு, பல பக்தர்கள் தொடர்ந்து கொடுக்கிறார்கள். மனித மத்தியஸ்தர்கள் தடுமாறினாலும், இறுதி உத்தரவாதமாக, தெய்வம் பரிமாற்றச் சுற்றுகளைப் புனிதப்படுத்துகிறது.

ஆழமான மட்டத்தில், புலம்பெயர் ஆதரவு தொடர்ச்சிக்கான ஏக்கத்தை வெளிப்படுத்துகிறது - போராலும் குடியேற்றத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழ்க் கலாசாரம் இன்னும் சடங்குகள் வழியாகவே சுவாசிக்கிறது என்ற உணர்வுக்காக. கோயில்கள் உலகளாவிய தமிழ்ப் புனிதப் புவியியலில் முனைகளாக மாறி, யாழ்ப்பாணத்தை டொராண்டோவுடன் இணைக்கின்றன, முல்லைத்தீவை மெல்போர்னுடன் இணைக்கின்றன. இந்த நாடுகடந்த சுற்றுகளில், அற்புதங்கள் சொந்தமானது என்ற பகிரப்பட்ட சொற்களாக செயற்படுகின்றன. அவை

சிதறடிக்கப்பட்ட சமூகங்கள் துன்பம் மற்றும் மீட்பின் பொதுவான தார்மீக மொழியைப் பேச அனுமதிக்கின்றன. நோர்வேயில் ஒரு பெண் முல்லைத்தீவில் ஒரு சடங்குச் சிகிச்சைக்காக நன்கொடை அளிக்கும்போது, அவள் ஓர் அந்நியருக்கு உதவுவது மட்டுமல்லாமல், புலம்பெயர்ந்தோரை அதன் தோற்றத்துடன் இணைக்கும் ஒரு கூட்டுக் கதையையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறாள். சுவிஸ் கோவிலில் ஒரு தன்னார்வலர் அதை அழகாகச் சுருக்கமாகக் கூறினார்: "ஓர் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப நாம் பணம் அனுப்பும்போது, நம்மை நாமே மீண்டும் கட்டியெழுப்புகிறோம்."

புலம்பெயர் மதம் இவ்வாறு மறுசீரமைப்பு, மறு கண்டுபிடிப்பு ஆகிய இரண்டையும் செய்கிறது. தாயகம் பக்திமிக்க ஏக்கத்திற்கான ஒரு மேடையாக மாறுகிறது, அதே நேரத்தில் புலம்பெயர் மக்கள் அதன் ஆதரவாளராகவும் பார்வையாளர்களாகவும் மாறுகிறார்கள். ஒன்றாக அவர்கள் ஒரு புதிய வடிவமான நாடுகடந்த இந்து நவீனத்தை உருவாக்குகிறார்கள் - தமிழ் மொழிச்சொற்களில் வேரூன்றி, உலகளாவிய மூலதனத்தால் வடிவமைக்கப்பட்டு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் மத்தியஸ்தம் செய்யப்படுகிறது.

புலம்பெயர் ஆதரவும் உள்ளூர் மதமும் பின்னிப் பிணைந்திருப்பது போருக்குப் பிந்தைய ஆன்மீகத்தின் இரட்டைத் தன்மையை வெளிப்படுத்துகிறது: இது ஒரே நேரத்தில் நம்பிக்கையின் செயலாகவும் வணிகமாகவும் பரிணமிக்கிறது. அற்புதங்கள் தார்மீக முதலீடுகளாகவும், தெய்வீக மனிதர்கள் நம்பிக்கையின் தரகர்களாகவும் செயற்படுகிறார்கள். அவற்றின் மூலம், அரசியலாலும் புவியியலாலும் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு தாயகத்தின் குறியீட்டு உரிமையை புலம்பெயர்ந்தோர் மீட்டெடுக்கிறார்கள். ஆயினும், இந்த ஆன்மிகப் பொருளாதாரம் புனிதமானதைப் பண்டமாக்குகிறது, துக்கத்தைக் காட்சியாகவும், தாராள மனப்பான்மையைப் பரிவர்த்தனையாகவும் மாற்றுகிறது. கோயில், பிரார்த்தனை இல்லத்தைப் போலவே நிதி மையமாகவும் மாறுகிறது. தெய்வீகம், எல்லை மீறியதாக அழைக்கப்பட்டாலும், பணம் அனுப்பும் வலையமைப்புகள், டிஜிட்டல் ஓட்டங்கள் மற்றும் பல் படிநிலைகளில் ஆழமாகச் சிக்கியுள்ளன. இருப்பினும், இந்த இயக்கவியலை வெறும் சுரண்டல் என்று நிராகரிப்பது அவர்களின் உணர்ச்சிச் சக்தியைப் புறக்கணிப்பதாகும். பலருக்கு, இந்த தொடர்புகள் வாழ்க்கையையே நிலைநிறுத்துகின்றன - கடல்களைக் கடந்து நம்பிக்கை, குடும்பம் மற்றும் நினைவை உயிர்ப்புடன் வைத்திருக்க ஒரு வழி.

யாழ்ப்பாணத்தில் ஒரு வயதான பெண்மணி இதை வேதனையுடன் கூறினார்: "எங்கள் குழந்தைகள் கோவிலுக்குப் பணம் அனுப்புகிறார்கள், ஏனென்றால் அவர்கள் எங்களைத் தொட தங்கள் கைகளை அனுப்ப முடியாது." அந்த ஒற்றை வாக்கியத்தில்தான் புலம்பெயர் மக்களின் அதிசயப் பொருளாதாரத்தின் தார்மீக இதயம் உள்ளது: ஓர் ஏக்கம் காணிக்கையாக மாற்றப்படுகிறது, தூரம் பக்தியாகப் புனிதப்படுத்தப்படுகிறது. அற்புதங்களின் அரசியல் சமத்துவமின்மையாலும் மாயையாலும் நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் அதற்குள் அன்பு, நம்பிக்கையைப் போலவே, எல்லைகளைக் கடக்க முடியும் என்று நம்புவதற்கான நீடித்த மனித விருப்பத்தைத் தூண்டுகிறது.

## ஆன்மீகம், மௌனம், வலியின் அரசியல்மயமாக்கல்

இலங்கையின் உள்நாட்டுப் போரின் நீண்ட நிழலில், மௌனம் ஒரு துன்பமாகவும் ஓர் உத்தியாகவும் மாறியது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு போன்ற வடுக்கள் நிறைந்த நிலப்பரப்புகளில், துக்கம் ஈரப்பதம் போல நீடித்தது - எங்கும் நிறைந்தது, எல்லாவற்றிலும் ஒட்டிக்கொண்டது, ஆனால் அரிதாகவே சத்தமாகப் பேசப்பட்டது. இந்தப் பிராந்தியங்களில், மதம் அமைதியை உடைக்காமல் வாழக்கூடிய இடத்தை வழங்கியது, துக்க வார்த்தைகளை மந்திரங்களாக மாற்ற முடியும், மேலும் அரசியல் அதிர்ச்சியை ஆன்மிகச் சகிப்புத்தன்மையாக மறுசீரமைக்க முடியும்.

போர் பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்றது, காணாமலாக்கியது. குடும்பங்கள் இன்னும் எலும்புகள், புகைப்படங்கள் அல்லது வதந்திகளைத் தேடின. ஆனால் அரசின் அடக்குமுறையும் கண்காணிப்பும் ஏற்படுத்திய பயம் வெளிப்படையான துக்கத்தை ஆபத்தானதாக மாற்றியது. இறந்தவர்களின் பொது நினைவுகூருதல் பிரிவினைவாதக் குற்றச்சாட்டுகளுக்கு ஆபத்தை விளைவித்தது. முல்லைத்தீவில் ஒரு பெண் அமைதியாகச் சொன்னது போல், "நாங்கள் மறக்கச் சொல்லப்படுகிறோம், ஆனால் மறப்பது நினைவில் கொள்வதை விடக் கடுமையானதும் கொடுமையானதும்." இந்த வெற்றிடத்தில், ஆன்மிகம் அரசியல் உரையாற்ற மறுத்த தார்மீக, உணர்ச்சி வெற்றிடத்தை நிரப்பியது. கோயில்கள், தெய்வீக மனிதர்கள், புதிய ஆன்மிக இயக்கங்கள் ஆகியன வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் அமைதியின் உட்கட்டமைப்புகளாகவும் பெருகின. மோதல்கள் இல்லாமல் துன்பங்களை வெளிப்படுத்தக்கூடிய வழிமுறைகளாக மாறின.

போருக்குப் பிறகு, நீதி, பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் பற்றிய விவாதங்கள் கர்மா, விதி மற்றும் தெய்வீக ஒழுங்கு போன்ற சொற்றொடர்களால் பெருகிய முறையில் மாற்றப்பட்டன. இந்த மாற்றம் வெறுமனே மேலிருந்து திணிக்கப்படவில்லை. மோதலால் சோர்வடைந்த சமூகங்களுக்குள் இயல்பாகவே வெளிப்பட்டது. ஒரு உரையாடலின் போது ஒரு முன்னாள் பாடசாலை ஆசிரியர் இவ்வாறு சொன்னார்: "முதலில், எங்களுக்குப் பதில்கள் தேவைப்பட்டன. நாங்கள் அலுவலகங்களுக்குச் சென்றோம், மனுக்கள் எழுதினோம். ஆனால் ஆண்டுகள் கடந்துவிட்டன, எதுவும் மாறவில்லை. பின்னர் சுவாமி வந்து, 'ஒவ்வொரு வலிக்கும் ஒரு காரணம் இருக்கிறது. கடந்த காலத்தைத் துரத்தாதீர்கள், சிறந்த பிறப்புக்காக ஜெபிக்கவும்.' என்று கூறினார். மெதுவாக, நாங்கள் கேள்விகள் கேட்பதை நிறுத்திவிட்டோம்."

அரசியலில் இருந்து ஆன்மிக மொழிக்கு மாற்றப்பட்ட இந்த மாற்றம், மானிடவியலாளர்கள் 'வலியை அரசியலற்றதாக்குதல்' (Depoliticisation of Pain) என்று அழைப்பதைக் குறிக்கிறது. அநீதி மற்றும் பொறுப்புக்கூறலுடன் இணைக்கப்பட்ட துன்பம், விதியாக உள்மயமாக்கப்படுகிறது. கர்மா குற்றத்தை மாற்றுகிறது. உண்மையைத் தேடுவது உள் அமைதிக்கான தேடலாக மாறுகிறது. இந்த மறுவடிவமைப்பில் தெய்வீக மனிதர்கள் மையமாக உள்ளனர். அவர்களின் பிரசங்கங்கள் சமய தத்துவம், தமிழ் நெறிமுறைகள் மற்றும் பிரபலமான உளவியலின் துண்டுகளை ஒன்றாக இணைக்கின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பிரபலமான சுவாமி அடிக்கடி பக்தர்களிடம், "நடந்தது தண்டனை அல்ல. அது சுத்திகரிப்பு. தெய்வம் துன்பத்தின் மூலம் நம்மைச் சுத்தப்படுத்துகிறது" என்று கூறுவார்.

இத்தகைய சொற்பொழிவு ஆறுதலை அளிக்கிறது, ஆனால் அது கோபத்தையும் திருப்பி விடுகிறது. அரசிடமிருந்து நீதி கோருவதற்குப் பதிலாக, பக்தர்கள் பொறுமையையும் மன்னிப்பையும் வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒரு சமூகத்தின் கூட்டு அதிர்ச்சி சகிப்புத்தன்மையின் தனிப்பட்ட பாடங்களாக ஒழுக்கப்படுத்தப்படுகிறது. "மன்னிப்பவர்கள் மீண்டும் வெளிச்சத்தில் பிறப்பார்கள் என்று சுவாமி கூறுகிறார், எனவே நான் வெறுக்காமல் இருக்க முயற்சிக்கிறேன். நான் வெறுத்தால், என் மகனின் ஆன்மா ஓய்வெடுக்காது" என்று ஒரு விதவை கூறினார்.

இந்த இறையியலில் மன்னிப்பு என்பது ஓர் அரசியல் செயலாக மாறாது, மாறாக ஒரு மனோதத்துவத் தேவையாக மாறுகிறது. இழப்புடன் சமரசம் செய்யும் உணர்ச்சிபூர்வமான உழைப்பு தனியார்மயமாக்கப்படுகிறது, கட்டமைப்பு வன்முறையைத் தொடாமல் விடுகிறது. போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தில் உள்ள கோயில்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்ட நினைவுக் களங்களாகச் செயற்படுகின்றன. இறந்தவர்களுக்கான வருடாந்தப் பூஜைகள் விவேகத்துடன் செய்யப்படுகின்றன, அவர்களின் மொழி நடுநிலையானது. குறிப்பிட்ட பெயர்கள் அல்லது நிகழ்வுகளை அழைப்பதற்குப் பதிலாக, "கடினமான காலங்களில் இறந்தவர்களுக்காக" என பூசை செய்வோர் வேண்டுகிறார்கள். இதை மிகச் சரியாக வன்னியில் உள்ள ஒரு கோயில் பராமரிப்பாளர், "நாங்கள் 'போர்' என்று சொல்ல முடியாது. நாங்கள் 'இருண்ட நாட்கள்' என்று சொல்கிறோம்" என்று ஒப்புக்கொண்டார்.

இந்தப் பழமொழியே சடங்குகளாகிவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில், 'வீடுகள் இல்லாத ஆன்மாக்களுக்காக' கடலில் பூக்களை வழங்க ஆயிரக்கணக்கானோர் கூடுகிறார்கள். காட்சி வேதனையானது: பெண்கள் அமைதியாக அழுகிறார்கள், ஆண்கள் தனித்து நிற்கிறார்கள், குழந்தைகள் அலைகளை வெறித்துப் பார்க்கிறார்கள். பதாகைகள் இல்லை, உரைகள் இல்லை, புகைப்படங்கள் இல்லை. மானிடவியலாளர்களைப் பொறுத்தவரை, இத்தகைய செயல்கள் சடங்காக்கப்பட்ட அமைதியை (Ritualised Silence) எடுத்துக்காட்டுகின்றன. இது அரசியல் பேச்சு இல்லாமல் உணர்ச்சிபூர்வமான விடுதலையை அனுமதிக்கும் துக்க முறை. இது நாசகாரமானது ஆனால் பாதுகாப்பானது. அரசு பிரார்த்தனையைத் தடை செய்ய முடியாது, ஆனால் பிரார்த்தனை மூலம், நினைவகம் நிலைத்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டு தனது கணவரை இழந்த ஒரு பெண், "நாங்கள் நினைவுச்சின்னத்திற்குச் செல்ல முடியாது. எனவே நாங்கள் கடலுக்கு வருகிறோம். கடல் எங்கள் குரலைக் கேட்கிறது" என்றார். கடல், தெய்வத்தைப் போலவே, பேச முடியாததை உள்வாங்குகிறது. இந்தச் சடங்குகள் மூலம், அதிர்ச்சி வளர்க்கப்படுகிறது - வரலாற்றில் அல்ல, அண்டவியலில் ஒருங்கிணைக்கப்படுகிறது. இறந்தவர்கள் குடிமக்களாக மாறுவதற்குப் பதிலாக ஆவிகளாக மாறுகிறார்கள். அவர்களின் நினைவுகள் நீதியின் எல்லையிலிருந்து பக்தியின் எல்லைக்கு மாறுகின்றன.

பல தமிழ்க் கிராமங்களில், மௌனம் என்பது வெறும் அடக்குமுறை அல்ல, மாறாக உயிர் வாழ்வதற்கான ஒரு கற்றறிந்த வடிவம். போரின் போது, மௌனம் என்பது பாதுகாப்பைக் குறிக்கிறது. மக்கள் தெருக்களில் அல்ல, சமையலறைகளில் கிசுகிசுத்தனர். 2009க்குப் பிறகு, இராணுவத்தின் பிரசன்னம் கனமாக இருந்தபோது, மௌனம் ஒரு பழக்கமாகவும் கேடயமாகவும் தொடர்ந்தது.

"அதிகமாகப் பேசுவது சிக்கலை ஏற்படுத்தும், சுவர்களுக்கும் காதுகள் உள்ளன" என்று ஒரு முதியவர் கூறினார். ஆனால் மௌனத்திற்கும் ஓர் அமைப்பு உள்ளது. இது வெறும் பேச்சு இல்லாமை மட்டுமல்ல, சைகைகள், பார்வைகள் மற்றும் மறைமுகமாகப் பேசும் சடங்குச் செயல்களால் நிரப்பப்பட்ட ஒரு தொடர்பு ஊடகம். விளக்கு ஏற்றுதல், நூல் கட்டுதல், சில நாட்களில் உண்ணாவிரதம் - ஒவ்வொரு செயலும் உச்சரிப்பு இல்லாமல் துக்கத்தைக் குறிக்கிறது.

வன்னியில் உள்ள ஒரு பாதிரியார் விளக்கினார், "எங்கள் மக்கள் மரணத்தைப் பற்றிப் பேசுவதில்லை, ஆனால் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அவர்கள் அம்மனுக்காக விரதம் இருக்கிறார்கள். அதுதான் அவர்களின் மொழி." இத்தகைய உருவகப்படுத்தப்பட்ட நடைமுறைகள் மூலம், சமூகங்கள் தணிக்கையைத் தவிர்க்கும் வழிகளில் துன்பத்தைக் குறியாக்குகின்றன. கோயில் ஒரு குறியீட்டியல் அடைக்கலமாக மாறுகிறது: அதன் மந்திரங்கள், ஊர்வலங்கள், காணிக்கைகள் சகிப்புத்தன்மையின் இலக்கணத்தை உருவாக்குகின்றன. இருப்பினும், இந்தப் புனித மௌனம் இருமைத்தன்மையைக் கொண்டுள்ளது. இது கண்ணியத்தைப் பாதுகாக்கிறது, ஆனால் அரசியல் முடக்குதலை நிலைநிறுத்துகிறது. பேச மறுப்பது செயற்பட இயலாமையிலிருந்து பிரித்தறிய முடியாததாகிவிடும்.

போருக்குப் பிறகு புகழ் பெற்ற தெய்வீக மனிதர் பெரும்பாலும் மௌனத்தை நல்லொழுக்கமாகக் கருதினர். அவர்களின் கதையாடலில், பேச்சு ஆபத்தானது, சுயநலமானது, பிரிவினையை ஏற்படுத்தும்; மௌனமே தெய்வீகமானது. வன்னியில் ஒரு சுவாமி தனது சீடர்களிடம் திரும்பத் திரும்பச் சொல்கிறார், "நீங்கள் துக்கத்தைப் பற்றிப் பேசும்போது, அதற்குச் சக்தியைக் கொடுக்கிறீர்கள். நீங்கள் அமைதியாக இருக்கும்போது, அது கரைந்துவிடும்."

இத்தகைய போதனைகள், பேச்சை வெளிப்பாட்டுடன் தொடர்புபடுத்தும் பக்தர்களிடம் ஆழமாக எதிரொலிக்கின்றன. பலர் விசாரணை, இடப்பெயர்ச்சி அல்லது கண்காணிப்பை அனுபவித்திருக்கிறார்கள். இந்த சூழலில் அமைதியாக இருப்பது என்பது ஒருவரின் கதையின் மீது மீண்டும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதாகும். உலகம் ஏற்கனவே திருடியதைத் தடுப்பதாகும். ஆயினும்கூட, மௌனத்தின் இந்த மதிப்புமிக்க தன்மை உணர்ச்சியை ஒழுங்குபடுத்தவும் உதவுகிறது. பெண்கள் தங்கள் அமைதியான துன்பத்திற்காகவும், ஆண்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்காகவும் பாராட்டப்படுகிறார்கள். கோபத்தையோ துக்கத்தையோ அடக்கும் திறன் ஆன்மிக முதிர்ச்சியாக மறுவடிவமைக்கப்படுகிறது. இந்த உள் அடக்கும் நெறிமுறை, அதிர்ச்சியைப் பக்தியாக மாற்றுகிறது. அரசியல் உடல், சகிப்புத்தன்மை மூலம் சுத்திகரிக்கப்படும் ஆன்மிக உடலாக மாறுகிறது. ஆனால் அது சாத்தியமான கருத்து வேறுபாட்டை நடுநிலையாக்குகிறது. பேச்சை மாசுபடுத்துவதன் மூலம், தெய்வங்கள் கோபத்தை தியானமாக மாற்றுகின்றன.

மட்டக்களப்பில் நடந்த ஒரு கூட்டத்தில், ஓர் இளைஞன் ஒருமுறை ஒரு சுவாமியிடம் "அரசாங்கம் மக்கள் காணாமல் போயிருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுமா?" என்று கேட்டார். சுவாமி பதிலளித்தார்: "நீங்கள் ஏன் மனிதர்களிடமிருந்து அங்கீகாரத்தைத் தேடுகிறீர்கள்? உள்ளிருந்து விடுதலையைத் தேடுங்கள். உங்கள் மனம் மட்டுமே உங்களை விடுவிக்க முடியும்." கூட்டம் கைதட்டியது. அந்த இளைஞன் அமைதியாகிவிட்டான். இங்கே, ஆன்மிகம் தார்மீக மயக்க மருந்தாகச் செயற்படுகிறது - அது அரசியலிலிருந்து பிரித்து, வரலாற்று வன்முறையை தனிப்பட்ட அறிவொளியாக மாற்றுவதன் மூலம் வலியைத் தணிக்கிறது.

போருக்குப் பிறகு, பல அரசுசாரா நிறுவனங்களும் மதக் குழுக்களும் 'குணப்படுத்துதல்', 'உள் அமைதி' மற்றும் 'அதிர்ச்சி மீட்பு' ஆகியவற்றில் கவனம் செலுத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்தின. தியான முகாம்கள், யோகா பட்டறைகள், 'ஆன்மீக ஆலோசனை' ஆகியவை பெருகின. அவை பெரும்பாலும் உளவியல் வாசகங்களை இந்து பக்தியுடன் இணைத்த கலப்பின நபர்களால் நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபலமான நிகழ்ச்சியான, சுய பாணியிலான குருவால் வழிநடத்தப்படும் அமைதிப் பாதை, 'வலியைக் குறைத்து நன்றியுணர்வை வளர்க்க' சுவாசப் பயிற்சிகளையும் காட்சிப்படுத்தல்களையும் வழங்குகிறது. பங்கேற்பாளர்கள் தங்கள் இழந்தவர்களுக்குக் கடிதங்களை எழுதி, பின்னர்

அவற்றை தெய்வத்தின் முன் எரிக்கிறார்கள். ஒரு பங்கேற்பாளர் கூறினார்: "கடிதத்தை எரித்த பிறகு நான் இலகுவாக உணர்ந்தேன். எனக்குக் கனவுகள் வருவது நின்றுவிட்டது." இத்தகைய நுட்பங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிவாரணம் அளிக்கின்றன. அவை தனிநபர்கள் தாங்க முடியாத இழப்பைச் சமாளிக்க உதவுகின்றன. இருப்பினும், கூட்டு மட்டத்தில், இது அவர்களின் ஆழ்ந்த அரசியல் தேவைகளை உளவியல் ரீதியாகப் பாதிக்கும் அபாயம் உள்ளது. கட்டமைப்பு அநீதியிலிருந்து தனிப்பட்ட குணப்படுத்துதலுக்கு கவனம் மாறுகிறது.

வவுனியாவைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரின் வார்த்தைகளில்: "மக்கள் உண்மையைக் கோருவதற்குப் பதிலாக தங்கள் அதிர்ச்சியை வெளியேற்றும் சிகிச்சைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்." இந்த சிகிச்சை முறை, ஆன்மிகம் சுய உதவியுடன் ஒன்றிணைந்து, அறிஞர்கள் கூறும் புதிய தாராளவாதப் பண்டத்தின் மீள்தன்மையை (The Neoliberal Subject of Resilience) உருவாக்குகிறது - துன்பத்தின் காரணங்களை சவால் செய்வதற்குப் பதிலாக அதற்கு ஏற்ப பயிற்சி பெற்ற ஒரு நபராக மக்கள் மாற்றப்படுகிறார்கள்.

போருக்குப் பிந்தைய இலங்கையில், மீள்தன்மை நல்லொழுக்கமாகவும் பொறியாகவும் மாறுகிறது. இது விரோதமான சூழ்நிலைகளில் உயிர் வாழ்வதற்கு அனுமதிக்கிறது, ஆனால் அமைதியை முதிர்ச்சியாக நியாயப்படுத்துகிறது. தியானம் செய்யும் ஒரு விதவை பாராட்டப்படுகிறார். எதிர்ப்புத் தெரிவிப்பவர் அமைதியைக் குலைப்பதற்காகத் திட்டப்படுகிறார்.

அரசு அதிகாரிகள் பெரும்பாலும் கோயில் விழாக்களில் கலந்து கொண்டு, அவற்றை 'நல்லிணக்கம்', 'இயல்பு நிலைக்குத் திரும்புதல்' என்பதற்கான அடையாளங்கள் என்று பாராட்டுகிறார்கள். இவ்வாறு பக்தியின் காட்சி வடக்குக் கிழக்கு குணமடைந்துவிட்டதற்கான சான்றாக அரசுக்கு உதவுகிறது. 2019 ஆம் ஆண்டு, கிளிநொச்சியில் நடந்த ஒரு பெரிய கோயில் திருவிழாவின் போது, உயர்மட்ட அரச அதிகாரி உரையாற்றும் போது இப்படிச் சொன்னார்: "நமது மக்கள் நம்பிக்கை மூலம் ஒற்றுமையைக் கண்டறிந்துள்ளனர். தெய்வம் மன்னிப்பைக் கற்பிக்கிறது. ஒன்றாக முன்னேறுவோம்."

ஆன்மிகத்தின் அழகியல் - வண்ணமயமான ஊர்வலங்கள், மந்திரங்கள், பூக்கள் - இடப்பெயர்ச்சி மற்றும் இராணுவமயமாக்கலின் தொடர்ச்சியான காயங்களை மறைத்தன. கூட்டத்தின் பக்தி சகிப்புத்தன்மை அல்ல, நன்றியுணர்வு என்று விளங்கப்பட்டது. ஓர் இளம் பத்திரிகையாளர், "அவர்கள் நமது கோயில்களை விரும்புகிறார்கள், நமது உண்மைகளை அல்ல" என்று குறிப்பிட்டார். இத்தகைய நிகழ்ச்சிகள் மூலம், ஆன்மிகம் அரசு அனுமதித்த துக்கத்தின் ஒரு வடிவமாக மாறுகிறது - வெளிப்படையானது ஆனால் அரசியல் சார்பற்றது. கோயில் திருவிழாக் கோரிக்கைகள் அல்லது தரவுகளைக் காட்டிலும், துக்கத்தை இசை மற்றும் நடனமாக மொழிபெயர்ப்பது (அல்லது மாற்றுவது) அதிகம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அரசுசாரா நிறுவனங்கள் கூட இதே போன்ற சொல்லாட்சியை ஏற்றுக்கொள்கின்றன. பெண்களின் மதப் பங்கேற்பை 'நேர்மறையான சமாளிப்பு' (Positive Coping) என்று அறிக்கைகள் விவரிக்கின்றன, இவை 'கலாசாரத்தின் மூலம் குணப்படுத்தும் திறனை'ப் பாராட்டுகின்றன.

மௌனம் ஒருபோதும் முழுமையானதாக இருக்காது. அதன் வெளிப்படையான இணக்கத்திற்குள், சிறிய அளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகள் நீடிக்கின்றன. இறந்த போராளிகளுக்காகச் சில கோயில்கள் இரகசியமாகச் சடங்குகளை நடத்தியபோது, அவற்றைப் பொதுவான பிரார்த்தனைகளாகக் காட்டிக்கொண்டன. சில பெண்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒரே நாளில் வீட்டில் விளக்குகளை ஏற்றி, காணாமல் போன தங்கள் மகன்களின் பெயர்களைக் கிசுகிசுக்கிறார்கள்.

இந்தக் கிசுகிசுக்கப்பட்ட எதிர்ப்புகள் ஆன்மிகம் எவ்வாறு எதிர்ப்பையும் மறைக்க முடியும் என்பதை விளக்குகின்றன. புனிதத்தின் மொழி தடைசெய்யப்பட்ட நினைவகத்திற்கு மறைப்பை வழங்குகிறது. கோவிலின் மங்கலான வெளிச்சத்தில், பிரார்த்தனைக்கும் எதிர்ப்புக்கும் இடையிலான எல்லை மங்கலாகிறது.

போருக்குப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, மௌனம் என்பது கற்றுக்கொள்ளக் கடினமானதாக இருப்பினும் பழக்கமாகிவிட்டது. இளைய தலைமுறையினர் கதைகளை அல்ல, அதன் துண்டுகளைக் கேட்டு வளர்கிறார்கள். தங்கள் கிராமங்கள் குண்டுவீசப்பட்டன, உறவினர்கள் காணாமல் போனார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் கதைகள் பழமொழிகள், பிரார்த்தனைகள் மூலம் வடிகட்டப்படுகின்றன. ஒரு பல்கலைக்கழக மாணவர் கூறினார்: "என் அம்மா தன்னை தெய்வம் காப்பாற்றியதாகச் சொல்கிறார், ஆனால் அவள் எதிலிருந்து என்று என்னிடம்

சொல்லவே இல்லை."

தலைமுறைகளுக்கு இடையேயான இந்த ஊமைத்தன்மை ஒரு விசித்திரமான பதற்றத்தை உருவாக்குகிறது: கடந்த காலம் எங்கும் நிறைந்ததாகவும் அணுக முடியாததாகவும் இருக்கிறது. கோயில்கள், தெய்வீக மனிதர்கள், ஆன்மிகச் சொற்பொழிவுகள் காயங்களை மறைத்துக் குணப்படுத்தும் ஒளியைப் பராமரிக்கின்றன.

போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தில் ஆன்மிகம் ஒரு நுட்பமான சமநிலைப்படுத்தும் செயலைச் செய்கிறது: இது நீதிக்கான கோரிக்கையை அமைதிப்படுத்துகையில் இடிபாடுகளில் வாழ்க்கையை நிலைநிறுத்துகிறது. இது வலியைப் பிரார்த்தனையாகவும், இழப்பைப் பக்தியாகவும், நினைவை உருவகமாகவும் மாற்றுகிறது. பக்தர்களுக்கு, இந்த மாற்றம் கண்ணியத்தை அளிக்கிறது. இது நிலையான மோதல்கள் இல்லாமல் வாழவும், தாங்க முடியாத வரலாறுகளை தார்மீக வலிமையாக மாற்றவும் அனுமதிக்கிறது. ஆனால் அரசியலில், இது ஒரு நுட்பமான வன்முறையைச் செயற்படுத்துகிறது - ஆன்மிகத்திற்கு ஆதரவாக அரசியலை அழிப்பது.

முள்ளிவாய்க்கால் கோயில் முற்றத்தில், ஒரு பெண் ஒருமுறை, "அம்மன் எனக்கு அமைதியைக் கொடுத்தார். ஆனால் அமைதி என்பது மறப்பதைக் குறிக்காது" என்று கூறினார்.

போருக்குப் பிந்தைய நம்பிக்கையின் முரண்பாட்டை அவரது வார்த்தைகள் படம்பிடிக்கின்றன. ஆன்மிகம் ஆறுதலை அளிக்கிறது, ஆனால் மயக்கத்தையும் அளிக்கிறது. அது நினைவைப் பாதுகாக்கிறது, ஆனால் அரசியலை அகற்றுகிறது. மௌனம் காயமாகவும் கட்டுகளாகவும் மாறுகிறது. எனவே, வலியை அரசியலிலிருந்து நீக்குவது என்பது வெறும் பேச்சை அடக்குவது மட்டுமல்ல, அதிர்ச்சியை இறையியலாக மாற்றுவதாகும். தெய்வங்கள், சடங்குகள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் மூலம், துன்பம் விதியாகவும், சகிப்புத்தன்மை நல்லொழுக்கமாகவும் மறுகற்பனை செய்யப்படுகிறது. போர் முடிவடையவில்லை - அது வெறுமனே மொழியை மாற்றிவிட்டது. வடக்கின் சமவெளிகளில் அந்தி மயங்கி விழும்போது, கோவில் மணிகள் காற்றில் எதிரொலிக்கின்றன. மக்கள் வணங்குகிறார்கள், கண்களை மூடிக்கொண்டு, யாரும் முழுமையாகக் கேட்காத பிரார்த்தனைகளைக் கிசுகிசுக்கிறார்கள். அந்தப் பிரார்த்தனைகளில், ஒருவர் சமரசத்தையும் எதிர்ப்பையும் உணர்கிறார் - அமைதி கூட வலிமிகுந்த அறிவைப் பேசுகிறது. ஆனால் உலகம் புரிந்துகொள்ளத் தேர்வு செய்த ஒரு குரலில் அல்ல என்பதுதான் சோகமானது.

### சடங்கின் காலமும் வரலாற்றின் இடைநிறுத்தமும்

போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில், காலமே உடைந்ததாக உணர்கிறது. மக்கள் வீடுகள், பள்ளிகள் மற்றும் நினைவுகளின் இடிபாடுகளுக்கு மத்தியில் வாழ்கின்றனர். இருப்பினும் கோயில் மணிகள், திருவிழாக்கள் மற்றும் பூஜைகளின் தாளங்கள் வியக்கத்தக்க வகையில் தொடர்ந்து வருகின்றன. போர் 2009 இல் முடிந்தது. ஆனால் பல கிராமங்களில், நாட்காட்டி தேசிய விடுமுறைகள் அல்லது அரசியல் ஆண்டு விழாக்களால் அல்ல, மாறாக அம்மன் தெய்வத்தின் சடங்குச் சுழற்சிகள், நவராத்திரிக் கொண்டாட்டங்கள், உள்ளூர் ஆலயங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாக்கள் ஆகியவற்றால் குறிக்கப்படுகிறது.

இந்தச் சுற்று மீண்டும் மீண்டும் வரும் புனிதமான வட்டமாகும். இது சடங்குக் காலம் என்று அழைக்கப்படுவதை உருவாக்குகிறது: வரலாற்றுக் காலத்திலிருந்து வேறுபட்ட ஒரு தற்காலிகத்தன்மை, அங்கு கடந்தகாலத்தின் காயங்களைப் புதுப்பித்தல், தெய்வீக ஒழுங்கின் சுழற்சிகளாக மடிக்கப்படுகின்றன. போர் மற்றும் அரசியலின் நேரியல், மீளமுடியாத நேரத்திற்கு மாறாக, சடங்குக் காலம் சமூகங்கள் இடைநிறுத்தப்படவும், பின்னோக்கிச் செல்லவும், குறியீட்டு ரீதியாக மீண்டும் தொடங்கவும் அனுமதிக்கிறது.

சடங்குகள் மூலம், மனிதர்கள் அவமதிக்கப்பட்ட வரலாற்றிலிருந்து வெளியேறி, கடந்த காலம் முடிவில்லாமல் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் ஆனால் ஒருபோதும் முடிவுக்கு வராத ஓர் உலகத்திற்குள் நுழைகிறார்கள். போருக்குப் பிந்தைய தமிழ்ச் சூழலில், இந்தச் சுழற்சி அடைக்கலமாகவும், பொறியாகவும் செயற்படுகிறது - இழந்தவற்றின் முழுப் பயங்கரத்தையும் எதிர்கொள்ளாமல் இழப்பைத் தாங்கும் ஒரு வழி.

ஒவ்வொரு ஜூலை மாதமும், திருவிழா தொடங்கும் போது, காற்று மேளங்கள் மற்றும் தூபங்களால் நிரம்பி வழிகிறது. பெண்கள் தங்கள் மணிக்கட்டில் மஞ்சள் நூல்களைக் கட்டுகிறார்கள்; ஆண்கள் கோயில் வளாகத்தைச் சுத்தம் செய்ய முன்வருகிறார்கள். முதல் பூஜை தொடங்கும் போது, மக்கள், "அம்மன் திரும்பி வந்துட்டா - அம்மன் திரும்பி வந்துட்டா" என்று கூறுகிறார்கள். இந்தச் சொற்றொடர் தெய்வீக இருப்பை விட அதிகமாக காலத்தின் புதுப்பிப்பைக் குறிக்கிறது.

சடங்குக் காலம், இயல்பான காலவரையறைகளை இல்லாமல் செய்கிறது. மக்களுக்கு இன்று திங்களா, செவ்வாயா என்பது முக்கியமில்லை, என்ன மாதம்

என்பது முக்கியமில்லை. அவர்கள் தெய்வத்தின் நாட்காட்டியின் படி - அமாவசை, பௌர்ணமி - இயங்குகிறார்கள், தெய்வத்தின் நாட்காட்டி போரின் தொடர்ச்சிகளை அழிக்கிறது. இறந்தவர்கள் பிரார்த்தனையில் சேர்க்கப்படுகிறார்கள், இடம்பெயர்ந்தவர்கள் காணிக்கை மூலம் இருப்பதாகக் கற்பனை செய்யப்படுகிறார்கள். இந்தச் சுழற்சி உலகில், வரலாறு மறுக்கப்படவில்லை, ஆனால் கால ரீதியாக பக்தியாக மாற்றப்படுகிறது.

அன்றாடப் பேச்சில், மக்கள் இன்னும் முன், பின் என - போருக்கு முன், போருக்குப் பிறகு - வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். இருப்பினும், கோயில் சடங்குகளைப் பற்றிப் பேசும்போது, அத்தகைய வேறுபாடுகள் மங்கலாகின்றன. முல்லைத்தீவில் உள்ள ஒரு வயதான பக்தர், “அம்மனின் திருவிழாவிற்கு முன்னும் பின்னும் இல்லை. அது எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும், அவளுடைய சக்தியைப் போலவே” என்றார். காலமற்ற தன்மையின் இந்த உணர்வு எளிய ஏக்கம் அல்ல, ஆனால் உயிர் வாழ்வதற்கான ஒரு கலாசார தொழில்நுட்பம். போர் சாதாரண வாழ்க்கையில் குழப்பத்தை அறிமுகப்படுத்தியது: இடப்பெயர்ச்சி, நிச்சயமற்ற தன்மை, புதிய ஒழுங்கு, அர்த்த இழப்பு. அதன் பின்னர், சடங்குக் காலம் உலகத்தை மறுசீரமைக்க ஓர் இலக்கணத்தை வழங்கியது. ஆண்டுதோறும் ஒரே சடங்குகளை மீண்டும் செய்வதன் மூலம், மக்கள் காலத்தின் மீது கட்டுப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறார்கள்.

இங்கே, சடங்கின் காலம் என்பது வரலாற்றின் இடைநிறுத்தமாக மாறுகிறது - நினைவாற்றலுக்கும் மறதிக்கும் இடையிலான ஒரு தற்காலிக இடையகமாக. இது மக்கள் அதிர்ச்சியுடன் வாழவும், அதற்குப் பெயரிடாமலேயே பரிகாரம் கோராமல் புதுப்பித்தலை ஒத்திகை பார்க்கவும் அனுமதிக்கிறது.

வருடாந்தத் திருவிழா, சடங்கு எவ்வாறு நேரத்தைச் சுருக்குகிறது, இடைநிறுத்துகிறது, இறுதியில் எவ்வாறு மறுகட்டமைக்கிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தை வழங்குகிறது. பத்து நாட்களுக்குள், கிராமம் மாற்றமடைகிறது. மக்கள் புலம்பெயர்ந்த இடங்களில் இருந்து திரும்புகிறார்கள்; குடும்பங்கள் மீண்டும் ஒன்றிணைகின்றன. சந்தை களை கட்டுகிறது. ஆனால் கொண்டாட்டத்தின் அடியில் மீண்டும் மீண்டும் ஒரு சிக்கலான அமைப்பு உள்ளது. பாற் குடம் எடுத்துச் செல்வது, தேர் இழுப்பது, தேங்காய் உடைப்பது போன்ற ஒவ்வொரு செயலும் போருக்கு முன்பு, இடப்பெயர்வுக்கு முன்பு செய்யப்பட்டதைப் போலவே செய்யப்படுகிறது. ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு முதியவர் பெருமையுடன் கூறினார், “மேளத்தின் சத்தம் கூட என் தாத்தாவின் காலத்தைப் போலவே இருக்கின்றது.”

இந்தத் தொடர்ச்சி தார்மீக ஸ்திரத்தன்மையைத் தருகிறது, ஆனால் அது ஒரு தேக்க உணர்வையும் உருவாக்குகிறது. வன்முறைக்கு முந்தைய ஒரு காலத்தை, முழுமையாக இல்லாத ஓர் இலட்சியப்படுத்தப்பட்ட கடந்தகாலத்தை இந்தத் திருவிழா மீண்டும் மீண்டும் காட்டுகிறது. ஒற்றுமையை மீண்டும் போலியாக உருவாக்கும் ஒரு செயல் மாற்றத்தை இடமாற்றம் செய்கிறது. சமூகத்தைச் சடங்குச் சுழல்களில் உறைய வைக்கிறது. ஓர் இளைய பக்தர் வித்தியாசமான பார்வையை வழங்கினார்: “திருவிழா அழகாக இருக்கிறது, ஆனால் சில நேரங்களில் அது நம்மைச் சிக்க வைக்கிறது என்று நான் உணர்கிறேன். மற்ற அனைத்தும் மாறிவிட்ட நிலையில் நாங்கள் அதே விஷயங்களைச் செய்கிறோம்.”

சடங்குகளை மீண்டும் மீண்டும் செய்வது பழமைவாதமா அல்லது மாற்றத்தை ஏற்படுத்துமா என்பது குறித்து மானிடவியலாளர்கள் நீண்டகாலமாக விவாதித்து வருகின்றனர். போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்குக் கிழக்கில், இது இரண்டும் ஒன்றுதான். திருவிழா சமூக ஒழுங்கை மீட்டெடுக்கிறது, ஆனால் அது புராணங்களுக்குள் நினைவாற்றலையும் சிக்க வைக்கிறது. கடவுள் வெவ்வேறு வாகனத்தில் ஒவ்வொரு மாலையும் கோயிலைச் சுற்றி வருகிறார். இது உண்மையில் வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் மக்கள் இயக்கத்திற்கான சரியான உருவகம். ஒவ்வொரு திருப்பமும் புதுப்பித்தலை உறுதியளிக்கிறது, ஆனால் அது தொடங்கிய இடத்திலேயே முடிகிறது.

அதிகாரபூர்வ விவரிப்புகளில், போரின் முடிவு ஒரு வரலாற்றுத் திருப்புமுனையைக் குறிக்கிறது - மோதலில் இருந்து அமைதிக்கு, அழிவில் இருந்து அபிவிருத்திக்கான ஒரு செயன்முறை. இருப்பினும், பல தமிழர்களுக்கு, வரலாறு முழுமையடையாததாக உள்ளது, அதன் நேர்கோடு உடைந்துவிட்டது. அரசு வாக்குறுதியளித்த எதிர்காலம் ஒருபோதும் வரவில்லை; கடந்தகாலம் தீர்க்கப்படாமல் உள்ளது. இந்த அர்த்தத்தில், சடங்கு, வரலாற்றுப் பதற்றத்தை நடுநிலையாக்கும் ஒரு மாற்றுக்காலத்தை வழங்குகிறது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும்போது, அவர்கள் வேறு ஒரு காலத்திற்குள் நுழைகிறார்கள் - அரசியல் காலவரிசைக்குப் பதிலாக புனிதத்தின் காலத்தால் நிர்வகிக்கப்படும் ஒன்று.

வன்னியில் உள்ள ஒரு கோவிலில் மாலை பூசையின் போது, மக்கள் “அம்மனுக்கு அரோஹரா” என்று

ஒருசேரக் குரல் எழுப்புகிறார்கள். அந்தத் தருணத்தில், கடந்தகாலமும் நிகழ்காலமும் ஒன்றிணைகின்றன. சங்குச் சத்தம் அரசியலின் இரைச்சலை மூழ்கடிக்கிறது. கோயில் துக்கம், முன்னேற்றம் ஆகியவற்றைக் கொண்ட நேர்கோட்டு உலகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட காலமின்மையின் அரங்காக மாறுகிறது. ஒரு நடுத்தர வயதுப் பெண் இதை இப்படி விளக்கினார்: "நாம் அம்மனின் சந்நிதானத்திற்குள் நுழையும்போது, உலகின் நேரத்தை விட்டுவிடுகிறோம். உள்ளே, எந்த அரசாங்கமும் இல்லை, இராணுவமும் இல்லை, காலக்கெடுவும் இல்லை. அவளுடைய ஒளி மட்டுமே." இங்கே, புனிதமானது தற்காலிக இறையாண்மையை வழங்குகிறது. நாட்டின் கடிகாரத்திற்கு வெளியே நேரத்தை உருவாக்கும் திறன். இருப்பினும், இந்த இறையாண்மை வரலாற்றை அரசியலற்றதாக்க முடியும். போர் மனித அட்டூழியமாக அல்ல, பிரபஞ்ச வரிசையில் ஓர் அத்தியாயமாக மாறுகிறது. வரலாற்றை கட்டுக்கதையாகக் கரைப்பதன் மூலம், சடங்குகளின் காலம் பொறுப்புணர்வை அழிக்கிறது.

சடங்குக் காலத்தை அனைவரும் ஆறுதலாக அனுபவிப்பதில்லை. சில இளையோர் கோயிற் சடங்குகள் தொடர்பில் சோர்வை வெளிப்படுத்துகிறார்கள். அது முடிவில்லாத, திரும்பத் திரும்பச் சொல்லுதலால் ஏற்படும் விரக்தி, எந்த முடிவும் மாற்றமும் இல்லை என்ற கோபம். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழக மாணவர் தனது விரக்தியை இவ்வாறு வெளிப்படுத்தினார்: "நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் கோவிலுக்குச் செல்கிறோம், அதே பிரார்த்தனைகளைச் செய்கிறோம், ஆனால் புதிதாக எதுவும் நடக்கவில்லை. அதே உரைகள், அதே பாடல்கள். தெரிந்ததைத் திரும்பத் திரும்பக் கேட்பதற்குப் பதிலாக, என் மாமாவுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை நான் அறிய விரும்புகிறேன்."

அவரது சொற்கள் ஒரு தலைமுறை மாற்றத்தைக் குறிக்கின்றன, புனிதமான திரும்பத் திரும்பச் சொல்வதிலிருந்து வரலாற்று விசாரணையை நோக்கி அவை நகர்கின்றன. பல இளைஞர்களுக்கு, இச்சடங்குகள் வரலாற்றை இடைநிறுத்துவது, அடைக்கலமாக இருப்பதற்குப் பதிலாக மறுப்பது போல் உள்ளது. அவர்கள் ஆவணங்கள், சாட்சியங்கள் மற்றும் காப்பகங்களைத் தேடுகிறார்கள். சடங்குகளில் வட்டமிடுவதற்குப் பதிலாக முன்னேறும் கால வடிவங்களை நோக்கி அவர்களது தேடல் இருக்கிறது. சடங்குக் காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடையிலான இந்தப் பதற்றம் நினைவாற்றல் மீதான ஒரு பெரிய கலாசாரப் போராட்டத்தை வெளிப்படுத்துகிறது: எதிர்காலம் என்பது திரும்பத் திரும்பச் சொல்வதா அல்லது கணக்கிடுவதா, இல்லையேல் புராணத் தொடர்ச்சியிலோ அல்லது வரலாற்று உண்மையிலோ அது உள்ளதா? இக்கேள்வி இன்றளவும் கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வியை மங்கலாக்கும் பணியில் தெய்வீக மனிதர்கள் என்று தம்மை அழைப்போர் வெற்றிபெற்றுவிட்டார்கள்.

## நிறைவுக் குறிப்புகள்

தெய்வீகச் சக்தி, சிகிச்சையளிக்கும் திறன், தார்மீக அதிகாரம் ஆகியவற்றைக் கூறும் கவர்ச்சிகரமான ஆன்மிக இடைத்தரகரான தெய்வீக மனிதர் இலங்கையின் வடக்குக் கிழக்கின் போருக்குப் பிந்தைய பிரதான மத அடையாளமாக மாறியுள்ளனர். மோதலின் இடிபாடுகளிலிருந்து வெளிவந்த இந்த ஆண்கள் (மற்றும் ஒரு சில பெண்கள்) நீதி, நலன், நிர்வாகத்தின் முறையான நிறுவனங்கள் பெரும்பாலும் தோல்வியடைந்த ஒரு நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளனர். அவர்கள் அரசு, மனிதாபிமான நிறுவனங்கள் விட்டுச்சென்ற இடைவெளிகளை நிரப்புகிறார்கள், உயிர் வாழ்வதற்கான ஆன்மிக உட்கட்டமைப்பு என்று அழைக்கப்படுவதை வழங்குகிறார்கள். இருப்பினும், இந்த ஆய்வு காட்டியுள்ளபடி, அவர்களின் எழுச்சி வெறுமனே நம்பிக்கை அல்லது ஆறுதல் பற்றிய விஷயம் அல்ல. இது அதிகாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல்மயமாக்கல் ஆகியவற்றின் சிக்கலான இயக்கவியலில் சிக்கியுள்ளது.

போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தில், தெய்வீக மனிதர்கள் தார்மீக ஒழுங்கின் முகவர்களாகவும், நம்பிக்கையின் தொழில்முனைவோராகவும் மாறிவிட்டனர் - கூட்டு அதிர்ச்சியை சடங்கு மூலதனமாகவும், ஆன்மிகத் தேவையை பொருளாதார வாய்ப்பாகவும் மாற்றும் நபர்கள் இவர்கள். அவர்களின் பிரசங்கங்கள் மத பக்தியை குணப்படுத்துதல், சுய உதவி மற்றும் விதியின் மொழியுடன் கலக்கின்றன; மதம், சிகிச்சை, புதிய தாராளமய நெறிமுறைகள் ஒன்றிணைந்த ஒரு பரந்த உலகளாவிய போக்கைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் இலங்கைச் சூழலில், அவர்களின் அதிகாரம் ஆழமான அரசியல் சார்ந்ததாக உள்ளது. அவை இராணுவமயமாக்கல், கண்காணிப்பு, உரிமைப் பறிப்பு ஆகியவற்றின் நிலப்பரப்பில் செயற்படுகின்றன, அங்கு வெளிப்படையான எதிர்ப்பு ஆபத்தானதாகவே உள்ளது. அரசின் இருப்பு அன்றாட வாழ்க்கையில் ஊடுருவுகிறது.

இந்த முடிவு, சமூகத்துக்கும் அரசுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாக விளங்கும் தெய்வீக மனிதர்கள் ஆன்மீகத்தை ஒரு பண்டமாக மாற்றிய பொருளாதார உத்திகள், அவர்களின் அதிகாரம் ஏற்படுத்திய அறிவாற்றல் விளைவுகள், மேலும் போருக்குப் பிந்தைய தார்மீக உலகில் துன்பம், நீதி, முகமை ஆகியவற்றை அவர்கள் மறுகட்டமைத்த விதங்கள் எனும் மூன்று ஒன்றோடொன்று பின்னிய கருப்பொருள்களை ஆராய்ந்து, முந்தைய விவாதங்களை ஒருங்கிணைக்கிறது.

மாக்ஸ் வெபரின் கவர்ச்சிகரமான அதிகாரம் பற்றிய பாரம்பரியக் கருத்து, வடக்குக் கிழக்கில் உள்ள தெய்வீக மனிதர்களின் தார்மீகப் பொருளாதாரத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட உதவுகிறது. நெருக்கடியான தருணங்களில் - அதிகாரத்துவ மற்றும் சட்ட நிறுவனங்கள் சரிந்தால் - கவர்ச்சி விதிவிலக்கான சட்டபூர்வமான தன்மையின் ஒரு வடிவமாக வெளிப்படுகிறது. 2009 இல் போரின் முடிவு துல்லியமாக அத்தகைய வெற்றிடத்தை உருவாக்கியது: தமிழ் அரசியல் அழிக்கப்பட்டது, சிவில் நிறுவனங்கள் பலவீனமடைந்தன, பாரம்பரிய மத உயரடுக்குகள், மோதலின் போது தாங்கள் உடந்தையாக இருந்ததாலோ அல்லது மௌனம் காத்ததாலோ இழிவுபடுத்தப்பட்டன. இந்த வெற்றிடத்தில் ஒரு புதிய தலைமுறை ஆன்மிக தொழில்முனைவோர் நுழைந்தனர். அவர்களில் பலர் சுயமாகக் கற்றுக்கொண்ட துறவிகள், முன்னாள் வீரர்கள் அல்லது இடம்பெயர்ந்தோரிலிருந்து திரும்பியோர்.

அவர்களின் அதிகாரம் அதிசயக் கதைகள், உருவகப்படுத்தப்பட்ட கவர்ச்சி, சிகிச்சை வாக்குறுதியின் சக்திவாய்ந்த கலவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. அரசாலும் சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் ஆற்ற முடியாத காயங்களை குணப்படுத்துவதாக அவர்கள் கூறுகின்றனர். உடல், ஆன்மா, ஆவியின் காயங்களைத் தாங்கள் தீர்ப்பதாகக் காட்டிக்கொள்கின்றனர். தாய்மார்கள் இன்னும் காணாமல் போன மகன்களைத் தேடும், வேலையின்மை அதிகமாக இருக்கும் கிராமங்களில், தெய்வீக மனிதனின் இருப்பு விளக்கத்தையும் நம்பிக்கையையும் அளிக்கிறது. தெய்வீக அணுகலுக்கான அவரது கூற்று இருத்தலியல் நிச்சயமற்ற தன்மையை தார்மீகத் தெளிவாக மொழிபெயர்க்கிறது: துன்பம் கர்மாவாக மாறுகிறது, அநீதி ஒரு சோதனையாக மாறுகிறது, சகிப்புத்தன்மை நல்லொழுக்கமாக மாறுகிறது. இருப்பினும் கவர்ச்சி ஒருபோதும் முற்றிலும் ஆன்மீகமானது அல்ல - அது ஆழமான சமூகம் மற்றும் அரசியல் சார்ந்தது. கடவுள் மனிதர்கள் தங்கள் புனிதத்தன்மையிலிருந்து மட்டுமல்ல, பாதிப்பை ஒழுங்கமைக்கும் திறனிலிருந்தும் அதிகாரத்தைப் பெறுகிறார்கள்: பயம், குற்ற உணர்வு மற்றும் ஏக்கத்தைப் பக்தியாக மாற்றுவதற்கு. அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் இடப்பெயர்வாலும் இழப்பாலும் துண்டு துண்டான சமூகங்களை நிலைப்படுத்துகிறார்கள். அவர்களின் பிரசங்கங்கள் பெரும்பாலும் கீழ்ப்படிதல், தார்மீகத் தூய்மை, நல்லிணக்கம் ஆகியவற்றின் கருப்பொருள்களை மீண்டும் வலியுறுத்துகின்றன, போருக்குப் பிந்தைய 'அமைதியும் அபிவிருத்தியும்' என்ற அரசின் கதையாடலுடன் வசதியாக ஒத்துப்போகின்றன. எனவே, அவர்கள் அரசியலில் இருந்து விலகி இருப்பது போல் தோன்றினாலும், இந்தத் தெய்வீக மனிதர்கள் வடக்குக் கிழக்கின் தார்மீக அமைதிக்குப் பங்களிக்கிறார்கள், சாத்தியமான எதிர்ப்பை ஆன்மிகச் சுய ஒழுக்கமாக மாற்றுகிறார்கள்.

போருக்குப் பிந்தைய தமிழ்ச் சமூகத்தில் ஆன்மிகம் அரசியல் களத்திலிருந்து துன்பத்தை அண்டவியல் துறைக்கு எவ்வாறு மறுவடிவமைக்கிறது என்பதை அமைதி, சடங்கு மற்றும் குணப்படுத்துதல் பற்றிய முந்தைய பகுப்பாய்வுகள் வெளிப்படுத்துகின்றன. கர்மாவும் மனதைத் சுத்திகரிப்பதும் மொழி உரிமைகள், நீதி ஆகியவற்றின் களத்தை இடமாற்றம் செய்கிறது. இந்தத் தார்மீக மொழிபெயர்ப்பில் தெய்வீக மனிதர்கள் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள். அவர்களின் போதனைகள் கோபத்தை விட ஏற்றுக்கொள்ளுதலையும், எதிர்ப்பை விட சகிப்புத்தன்மையையும் வலியுறுத்துகின்றன.

இது வெறுமனே கருத்தியல் கையாளுதல் அல்ல, ஆனால் உயிர் வாழ்வதற்காக கலாசார ரீதியாக எதிரொலிக்கும் ஒரு பழமொழி. அரசியல் வெளிப்பாட்டிற்காக மீண்டும் மீண்டும் தண்டிக்கப்படும் ஒரு சமூகத்திற்கு, ஆன்மிக விளக்கத்தில் பின்வாங்குவது பாதுகாப்பையும் ஆறுதலையும் வழங்குகிறது. இருப்பினும், இந்த மாற்றத்தின் விலை ஆழமானது. தெய்வீக இறையியல் வலியை தனியார்மயமாக்குகிறது. துன்பம் கூட்டுத் தவறு அல்ல, மாறாக தனிப்பட்ட விதியாக மொழிபெயர்க்கப்படுகிறது. புனிதத்தின் தார்மீகச் சொற்களஞ்சியம் பொறுப்புக்கூறலின் அரசியல் சொற்களஞ்சியத்தை மாற்றுகிறது. இந்தச் செயல்முறை - வலியின் அரசியல்மயமாக்கல் என்று அழைக்கப்படலாம் - போருக்குப் பிந்தைய மதவாதத்தின் மிகவும் நயவஞ்சகமான விளைவுகளில் ஒன்றாகும். இராணுவமயமாக்கல், நில அபகரிப்பு,

ஒடுக்குமுறை ஆகியவற்றின் கட்டமைப்பு நிலைமைகள் நீடிக்கும் அதே வேளையில், சமரசம் அடையப்பட்டுள்ளது. வடக்கு 'குணமடைந்துள்ளது' என்று அரசு கூற இது அனுமதிக்கிறது.

இந்த அர்த்தத்தில், தெய்வீக அமைதியின் தார்மீக இடைத்தரகர்களாக தெய்வீக மனிதர்கள் செயற்படுகிறார்கள்: அவர்கள் சமூக அதிர்ச்சியை நிர்வகிக்கக்கூடிய உணர்ச்சியாக மாற்றுகிறார்கள், வரலாற்று வன்முறையை நம்பிக்கை மற்றும் ஒழுக்கம் மூலம் கடக்க வேண்டிய ஒரு தனிப்பட்ட சவாலாக மறுவடிவமைக்கிறார்கள். அவர்களின் புகழ் மதவாதத்தின் மீள்தன்மை, அரசியல் நம்பிக்கையின் சோர்வு ஆகிய இரண்டையும் குறிக்கிறது.

தார்மீக அதிகாரத்திற்கு அப்பால், தெய்வீக மனிதனின் எழுச்சி நம்பிக்கையின் பண்டமாக்கலில் இருந்து பிரிக்க முடியாதது. போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில் கோயில்கள், குணப்படுத்தும் மையங்கள் மற்றும் புனித யாத்திரைப் பயணங்கள் இலாபகரமான நிறுவனங்களாக மாறிவிட்டன. புலம்பெயர்ந்தோரிடமிருந்து நன்கொடைகள் சீராகப் பெருகி வருகின்றன. அவர்கள் கோயில் புனரமைப்புகளுக்கு நிதியளிப்பதுடன், திருவிழா நிதியுதவிகள், மதச் சுற்றுலாக்கள், உள்ளூர்ப் பக்தர்களின் காணிக்கைகள், ஆலோசனைகளுக்கான கட்டணங்கள், ஆசீர்வதிக்கப்பட்ட பொருட்களை வாங்குதல் போன்றவற்றின் மூலம் (பொருளாதார ரீதியாக) பங்களிப்புச் செய்கிறார்கள்.

இந்த ஆன்மிகப் பொருளாதாரம் மத தொழில்முனைவோரின் உலகளாவிய வடிவங்களைப் பிரதிபலிக்கிறது. இருப்பினும் இது இலங்கையின் போருக்குப் பிந்தைய சூழலால் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தெய்வீக மனிதனின் அதிகாரம் கவர்ச்சியை மட்டுமல்ல, நிதி உட்கட்டமைப்பையும் சார்ந்துள்ளது; குறிப்பாக நன்கொடையாளர்கள், புரவலர்கள், ஊடக வலையமைப்பு. பலர் வலைத்தளங்கள் மற்றும் 'பேஸ்புக்' பக்கங்களைப் பராமரிக்கின்றனர், குணப்படுத்தும் அமர்வுகள் மற்றும் சாட்சியங்களின் புகைப்படங்களை இடுகையிடுகிறார்கள். பக்தியின் டிஜிட்டல் மயமாக்கல், நெருக்கத்தை விளம்பரமாக மாற்றுகிறது, துன்பத்தைக் காட்சியாக மாற்றுகிறது. அற்புதங்கள் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களாகின்றன. நம்பிக்கை செயற்றிறனாக மாறுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒருவர் குறிப்பிட்டது போல் "ஒவ்வொரு அற்புதத்திற்கும் இப்போது ஒரு விலை உண்டு. மருந்து வாங்குவது போன்று, ஆசீர்வாதங்களுக்கு நீங்கள் பணம் செலுத்துகிறீர்கள்." இந்த வணிகமயமாக்கல், நம்பிக்கையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதில்லை. மாறாக, புனிதமானதை உறுதியானதாகவும் பரிவர்த்தனை ரீதியாகவும் மாற்றுவதன் மூலம் அதை நிலைநிறுத்துகிறது. அரசு மக்களுக்கு அவநம்பிக்கை வழங்குமிடத்து, சந்தை நிலையற்றதாக இருக்கும் ஒரு தார்மீகப் பொருளாதாரத்தில், தெய்வீக மனிதனின் வருமானம் உத்தரவாதமானது.

இவர்கள் தனித்த நபர்கள் போலத் தெரிந்தாலும், உண்மை அதுவல்ல. பலர் அரசியல்வாதிகள், பாதுகாப்பு அதிகாரிகள், வணிக உயரடுக்கினரிடமிருந்து முறைசாரா ஆதரவைப் பெறுகிறார்கள். அவர்கள் தங்கள் செல்வாக்கை உள்ளூர் மக்களைச் சமாதானப்படுத்தும் ஒரு வழியாகக் கருதுகின்றனர். அத்தகைய நபர்களுடன் இணைந்த கோயில்கள் பெரும்பாலும் கட்டுமானம் அல்லது திருவிழா அனுமதிகளுக்கு நிதி பெறுகின்றன. அதே நேரத்தில் அரசியல் ரீதியாகச் சந்தேகிக்கப்படுபவர்களாகக் கருதப்படுபவர்கள் அதிகாரத்துவத் தடைகளை எதிர்கொள்கின்றனர்.

இந்த இயக்கவியல் ஓர் ஆன்மிக ஆதரவு அமைப்பு என்று அழைக்கப்படுவதை உருவாக்குகிறது: கடவுள் மனிதர்கள் அரசின் நிலைத்தன்மைக்கான விருப்பத்திற்கும் சமூகத்தின் அர்த்தத்திற்கான தேவைக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்கிறார்கள். பொதுவில், அவர்கள் அமைதி மற்றும் ஒற்றுமையின் மொழியைப் பேசுகிறார்கள்; தனிப்பட்ட முறையில், அனுமதிகள், நிலக் குத்தகைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் கோயில்கள் மென்மையான சக்தியின் முனைகளாகின்றன - வற்புறுத்தலுக்குப் பதிலாக சடங்குகள் மூலம் அரசின் இருப்புப் புனிதப்படுத்தப்படும் தலங்கள்.

இராணுவ உதவியுடன் கட்டப்பட்ட ஒரு கோயிலின் அபிஷேக விழாக்களில் பங்கேற்கும் இராணுவ அதிகாரிகளின் புகைப்படங்கள் ஊடகங்களில் முக்கிய இடம்பெறுகின்றன. இங்கு நிகழ்வது அரசியல் பேச்சுவார்த்தை அல்ல, பகிரப்பட்ட பக்தி மூலம் சமரசம் அடையப்படுகிறது. இதுபோன்ற சூழல்களில், தெய்வீக மனிதன் தார்மீக நியாயத்தன்மையின் தரகராகச் செயற்பட்டு, நிர்வாகத்தின் மொழியை நம்பிக்கையின் மரபுத்தொடராக மொழிபெயர்க்கிறார். அதே நேரத்தில், இந்தத் தெய்வீக மனிதர்கள் அவ்வப்போது அரசின் அத்துமீறல்களை முறைசாரா முறையில்

விமர்சிப்பவர்களாகச் செயற்படுகிறார்கள், இருப்பினும் எப்போதும் குறியீட்டுச் சொற்களில். ஒரு சுவாமி 'ஆட்சியாளர்களிடையே ஆணவம்' அல்லது 'அதிகாரத்தில் இருப்பவர்களின் பேராசை' குறித்து எச்சரிக்கலாம், இது நம்பத்தகுந்த மறுப்பை அனுமதிக்கும் புராண ஒப்புமைகளைத் தூண்டுகிறது. இத்தகைய சொல்லாட்சி கட்டமைப்பு உறவுகளை அப்படியே விட்டுவிட்டு ஆன்மிகச் சுயாட்சியின் மாயையை நிலைநிறுத்துகிறது.

முடிவில், அந்தத் தெய்வீக மனிதனின் பணி, அரசியல் சமநிலையைப் பேணுவது அல்லது வெளிப்படையான பாகுபாட்டைக் கையாளுவது அல்ல. அதிருப்தியை உள்வாங்கிக் கொள்வது, அதைத் தனக்குள்ளேயே திருப்பிவிடுவது, அரசியல் தோல்விகளுக்கு மத்தியில் ஒரு தார்மீக ஒழுங்கின் புனைகதையை நிலைநிறுத்துவது ஆகியவையே அவரது பங்கு. அவ்வாறு செய்வதன் மூலம், அவர் பக்தர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இன்றியமையாதவராக மாறுகிறார் - உடையக்கூடிய அமைதியை அதன் சொந்த முரண்பாடுகளிலிருந்து பாதுகாக்கும் ஆன்மிக இடையகமாக இருக்கிறார்.

தெய்வீக மனிதர்களை வெறும் சுரண்டுபவர்களாக மட்டுமே பார்ப்பது குறைபாடாகும். பலர் உண்மையான ஆறுதலை வழங்குகிறார்கள், உணவை விநியோகிக்கிறார்கள், சமூக நலனை ஆதரிக்கிறார்கள். அவர்களின் சடங்குகள் வேறு எங்கும் செல்ல முடியாத துக்கத்திற்கு உளவியல் ரீதியான கட்டுப்பாட்டை வழங்குகின்றன. இருப்பினும் அவர்களின் இரக்கம், கட்டுப்பாட்டிலிருந்து பிரிக்க முடியாதது. தார்மீக அதிகாரத்தை ஏகபோகமாக்குவதன் மூலம், சரியான துக்கம், நியாயமான துன்பம் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நம்பிக்கை என எதைக் கணக்கிடுகிறார்கள் என்பதை அவர்கள் வரையறுக்கிறார்கள்.

அவர்களின் பிரசங்கங்கள் பெரும்பாலும் கோபம், செயற்பாடு அல்லது 'அரசியல் மாசுபாடு' குறித்து எச்சரிக்கின்றன. பெண்கள் தூய்மை மற்றும் பொறுமையைப் பராமரிக்கவும்; இளைஞர்கள் பெரியவர்களுக்குக் கீழ்ப்படியவும்; அனைவரும் தெய்வீக நீதியை நம்பவும் வலியுறுத்தப்படுகிறார்கள். இந்த அர்த்தத்தில், தெய்வீக மனிதர்கள் ஆணாதிக்க, சர்வாதிகார விதிமுறைகளுடன் ஒத்துப்போகும் ஒரு தார்மீகப் பழமைவாதத்தை நிலைநிறுத்துகிறார்கள். ஒழுங்கு குறித்த அவர்களின் பார்வை, அரசின் - அதாவது படிநிலைப்படுத்தப்பட்ட, ஒழுக்கமான, அரசியல்மயமாக்கப்பட்ட - தன்மையைப் பிரதிபலிக்கிறது. அவர்களின் பங்கின் தெளிவின்மை துல்லியமாக இங்கே உள்ளது: அவர்கள் தார்மீக விமர்சனத்தை முன்கூட்டியே மூடிவிட்டு தார்மீகப் பழுதுபார்ப்பை வழங்குகிறார்கள். அவர்கள் காயத்தைக் குணப்படுத்துகிறார்கள், ஆனால் அதை விசாரணையிலிருந்து மூடுகிறார்கள். அவர்களின் கவர்ச்சி சமூகத்தைப் பிணைக்கிறது, மனசாட்சியையும் பிணைக்கிறது. அனைத்தையும் அரசியல் நீக்கம் செய்கிறது.

தெய்வீக மனிதனின் சாம்ராஜ்யம் நம்பிக்கையால் மட்டுமல்ல, அதை உருவாக்கிய வன்முறையின் கட்டமைப்புகளாலும் நிலைநிறுத்தப்படுகிறது. நீதி இல்லாதது, பயத்தின் இருப்பு, அரசியல் தலைமையின் வெற்றிடம் - அனைத்தும் ஆன்மிகத்தை உயிர் வாழ்வதற்கான பாதுகாப்பான மொழியாக மாற்றச் சதி செய்கின்றன. அந்த மொழிக்குள், தெய்வ மனிதர்கள் செழித்து வளர்கிறார்கள்.

அவர்களின் தொழில் வெறும் இலாபம் ஈட்டுவது மட்டுமல்ல, அர்த்தத்தை நிர்வகிப்பதுமாகும். அவர்கள் பொருட்களை விற்கவில்லை; மாறாக, துன்பத்தைத் தாங்கக்கூடிய, சமத்துவமின்மையைத் தெய்வீகமாக்கம் செய்யும் அண்டவியல்களின் கதைகளை விற்கிறார்கள். அவர்களின் ஆசிரமங்களில், முதலாளித்துவம் இரக்கத்தின் முகமூடியை அணிந்து கொள்கிறது, பக்தி ஒரு பரிவர்த்தனையாகிறது.

அவர்களின் சக்தியைப் புரிந்துகொள்வது என்பது போருக்குப் பிறகு தார்மீகத்தோடு அரசியலும் பொருளாதாரமும் பக்தியும் எவ்வளவு ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்வதாகும். தெய்வீக மனிதனின் வெற்றி என்பது அரசு மற்றும் சிவில் சமூகத்தின் தோல்விகளுக்கான ஒரு கண்ணாடியாகும். அரசியல் மறுத்ததை மக்களுக்கு வழங்குவதால் அவர் செழித்து வளர்கிறார்: ஒழுங்கு, நம்பிக்கை மற்றும் வாக்குறுதியால் - எவ்வளவு மாயையாக இருந்தாலும் - வலியைச் சுத்திகரிக்க முடியும் என்பதை இந்தத் தெய்வீக மனிதர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இந்த அர்த்தத்தில், போருக்குப் பிந்தைய இலங்கையின் தெய்வீக மனிதர்கள் முரண்பாடுகள் அல்ல, ஆனால் ஒரு புதிய தார்மீக ஒழுங்கின் முன்மாதிரிகள்: நம்பிக்கை பணமாக்கப்படும், மௌனம் புனிதப்படுத்தப்படும், வரலாறு இடைநிறுத்தப்படும் ஒரு ஒழுங்கு. அவர்கள் அதிர்ச்சியினதும் முதலாளித்துவத்தினதும் இடைவெட்டு வழியில் நிற்கிறார்கள், போரின் இடிபாடுகளை பக்தியின் மூலப்பொருளாக மாற்றுகிறார்கள். இழப்பைக் காணிக்கையாகவும், விரக்தியைக் கீழ்ப்படிதலாகவும், நம்பிக்கையை இலாபமாகவும் மாற்றும் அதிகாரத்தின் புனித இரசவாதம் அவர்களுடையது.

# ஈழத்துத் தமிழ்க் கூத்துகளின் வடிவங்களும் அவற்றின் உருவாக்கங்களும்

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக 'ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.



**சின்னையா மௌனகுரு**

சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர். ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். 'இராவணேசன்', 'சங்காரம்' முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின. இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

## முன்னுரை

ஈழத்துத் தமிழ்க் கூத்து என்று கூறியதும், ஈழத்தை அல்லது இலங்கையை அறியாத தமிழ்நாட்டுத் தமிழர் அல்லது பிற நாட்டவர் அதனை ஒரு கூத்து வகை எனவே அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதனை நான் எனது அனுபவம் மூலம் கண்டிருக்கிறேன். அவர்களுக்கு ஈழத்திலே ஒரு கூத்து அல்ல, பல கூத்துகள் உள்ளன என்பதை விளக்கியும் இருக்கிறேன். இந்த அனுபவம் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பிக்கும் பொழுது, அத்தகையோரோடு உரையாடிய அந்த அனுபவங்கள் ஞாபகம் வருகின்றன.

ஈழத்திலே தமிழர் ஓர் இடத்திலே வாழவில்லை; அவர்கள் பரந்து வாழ்கிறார்கள். வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்று கூறப்படுகின்றது. மலையகத்திலும் தமிழர் வாழ்கிறார்கள். இந்தப் பரந்து வாழும் வாழ்க்கை முறைக்கும், பண்பாட்டுக்கும், சூழலுக்கும், அவ்வவ் பிரதேசங்களின் இயற்கைச் சூழலுக்கும் ஏற்ப அவர்கள் மத்தியிலே ஆற்றுகைகள், கூத்துகள் இடம் பெறுவதுடன் வடிவமும் பெறுகின்றன.

இந்த ஆற்றுகைகளிடையே அல்லது கூத்துகளிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதேவேளை, அடிப்படையில் சில ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. இந்த ஒற்றுமை இலங்கையில் மட்டுமல்ல; தென்னிந்திய, ஈழத்து ஆடல் வடிவங்களிடையிலும் காணப்படுகின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஈழத்தில் தமிழர் மத்தியிலே ஆடப்படுகின்ற சில கூத்துகளுக்கும், தென்னிந்திய தெருக்கூத்து, கர்நாடக யக்ஷகானா, தெலுங்கு நாட்டுப் பகவதமேளம், கேரள கதகளி, தமிழ்நாட்டுப் பரதநாட்டியம் ஆகியவற்றிற்கிடையே இசையிலும் ஆடலிலும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை யாவும் ஒரு கலாசார வலயத்துள் வருகின்றன என்பர் பண்பாட்டு மானிடவியலாளர்கள். அது பண்பாட்டின் ஒரு குணாதிசயமும் கூட.

## ஈழத்தமிழ்க் கூத்துகள் ஒன்றல்ல

வடமோடி, தென்மோடி கூத்துகளையே நாம் பொதுவாக ‘கூத்துகள்’ என எடுத்துக் கொண்டாலும், அவை ஏனையவற்றைவிட சில தனித்துவங்களைக் கொண்டுள்ளதாலும், அவற்றிற்குச் சிறப்பிடம் தரும் மரபு நமக்குள்ளது. ஆனால் ‘கூத்து’ எனும் பெயரில் பலவகையான கூத்துகள் ஈழத் தமிழரிடம் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தம் அளவில் தனித்துவமான சில அடிப்படைப் பண்புகளைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டவையாகும். எனினும், காலம்தோறும் நிகழ்த்துமுறையில் மாறியும் வந்துள்ளன என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

ஈழத்துத் தமிழ் கூத்துகள் ஒன்றல்ல, பல என நாம் எடுத்துக்கொண்டால், அவை ஒவ்வொன்றும் தத்தம் வடிவங்களைப் பெற்றுள்ளன என்ற முடிவுக்கும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உருவாகியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கும் நாம் வரவேண்டும்.

இதில் ‘கூத்து உருவாக்கம்’ மிக முக்கியமானது. இந்த உருவாக்கம் பற்றிய நுணுக்கமான ஆய்வுகள் எங்களிடம் அதிகமாக இடம்பெறவில்லை. ஒன்றின் உருவாக்கத்திற்கு ஒரு வரலாறு இருந்திருக்க வேண்டும்; ஒரு பின்னணி இருந்திருக்க வேண்டும். அந்த உருவாக்கத்திற்கு ஒரு உருவாக்கும் முறையும் (*Process*) இருந்திருக்க வேண்டும். அந்த உருவாக்கம் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தை நான் இங்கு வழங்க விரும்புகிறேன். இது மேலும் விரிவாக எழுதத்தக்கதுடன், உரையாடலுக்கும் உரியதாகும்.

## கூத்து உருவாக்கத்தைப் புரிந்துகொள்ளல்

### 1. பரிணாமக் கோட்பாடு

ஒரு பொருளின் உருவாக்கத்தில் அதன் பரிணாமம் அடங்கியுள்ளது. பரிணாமம் என்பது உள்ளது சிறத்தல் ஆகும். இதனை மனிதனை எடுத்துக்கொண்டு புரிந்து கொள்ளலாம். கரு > சிசு > குழந்தை > சிறுவன் > வாலிபன் > வயதுவந்தோன் > கிழவன் என்ற மனித வளர்ச்சி, இயற்கை விதிகளின்படி தன்னகத்தே மேலும் மேலும் வளர்வதோ, மாறுவதோ பரிணாம வளர்ச்சி ஆகும்.

இந்த வளர்ச்சிக்கும் அல்லது மாறுதலுக்கும் அகக் காரணங்களும் புறக் காரணங்களும் உண்டு. இந்த விதியின் அடிப்படையில், கூத்தை அல்லது கூத்துகளைப் புரிந்து கொள்ளுதல் ஓர் அணுகுமுறையாகும். இவ்வகையில், இங்கு நாம் சில கருத்துகளை அதன் பரிணாம அடிப்படையில் புரிந்துகொள்ள முயல்வோம்.

இந்தப் பரிணாமக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுபவர்களும் உளர்; மறுப்போரும் உளர். அது அவரவர் கருத்தியலையும் உலகப் பார்வையையும் பொறுத்தது. நேர்கோட்டில் வரலாறு நகர்வதில்லை; அது சிக்கலானது, பலவகையானது என்று கூறும் ஒரு சிந்தனைப் போக்கும் உண்டு.

### 2. பண்பாட்டு மானிடவியல் கோட்பாடுகள்

பண்பாட்டு மானிடவியல் அணுகுமுறையிலும் இந்த மாற்றத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஈழத்தின் கூத்துகளை அனைத்தையும் ஒருங்குசேரப் பார்க்கும்போது, பழைய கூத்துகள் பல மறைந்ததையும், புதிய கூத்துகள் சில தோன்றியதையும், பழைய கூத்துகள் பல உருமாற்றம் பெற்றதையும் காண முடிகிறது. இதற்கான காரணங்களை அறிதல் அவசியம். இதனை அறிய வேண்டுமாயின், பண்பாட்டு மானிடவியல் அறிவின் துணையுடன் அணுகலாம். பண்பாட்டு மானிடவியல் இரண்டு முக்கிய கோட்பாடுகளை முன்வைக்கிறது:

1. பண்பாட்டுப் பரவல்
2. பண்பாட்டு மாற்றம்

பண்பாட்டுப் பரவல் என்பது, ஓர் இனத்துக்குரிய பண்பாடு, மேலாதிக்கம் பெற்ற அரசியல், பொருளாதார அல்லது அறிவாற்றல் ஆதிக்கத்தின் காரணமாக ஏனைய பண்பாடுகளுக்குள் பரவிச் செல்வதைக் குறிக்கிறது.

பண்பாட்டு மாற்றம் என்பது, இரண்டு பண்பாடுகள் கலக்கும் போது ஒன்றிலிருந்து மற்றொன்று பெற்றுக்கொண்டு, இரண்டுமே தம்மளவில் மாறுவதாகும்.

பெரும் அரசுகள் படையெடுத்து ஒரு நாட்டை தமக்குக் கீழ் கொண்டு வருவதன் மூலம் தங்களுடைய பெரும் பண்பாட்டைக் கைப்பற்றிய நாட்டின் மக்கள் மீது திணிப்பது என்பது ஒரு பொது விதி. இதன்படி பண்பாடு பரவுகிறது எனலாம்.

வணிகம் செய்வோரும் தம்மோடு கொண்டு செல்லும் பண்பாட்டை தாம் வணிகம் செய்யும் நாடுகளில் பரப்புவார்கள். அதேபோல, அறிவுடையோர் தம் கல்வி வழியாக தம் பண்பாட்டைப் பரப்புவார்கள். இவை அனைத்தும் பண்பாட்டுப் பரவல் கொள்கைக்குள் வருகின்றன. சமயத்தின் மூலமும் பண்பாடு பரவப்படுவது உண்டு.

இதனை ஆராய்ந்த அறிஞர்கள் தமிழ்நாட்டிலே நடைபெற்ற இந்தப் பண்பாட்டுப் பரவலை, பண்பாட்டு மேலாதிக்கம் என்றும், இன்னும் சிலர் அது பண்பாட்டுக் கலப்பு என்றும் வாதிப்பார்கள்.

பழைய கூத்துகள் மறைவதற்கும், புதிய கூத்துகள் தோன்றுவதற்கும், பழைய கூத்துகள் உருமாற்றம் பெறுவதற்கும் பண்பாட்டு ஆதிக்கங்களும் பண்பாட்டுக் கலப்புகளும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. இதைப் பற்றிப் புரிந்துகொள்ள மூன்று முக்கிய கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன:

அ. சமஸ்கிருதமயமாக்கம்

ஆ. மேநிலையாக்கம்

இ. இயல்பான பண்பாட்டுக் கலப்பு

அ. சமஸ்கிருத மயமாக்கம்: சமஸ்கிருத மொழியும் வடமொழி இலக்கியங்களும் தமிழ்நாட்டில் அரசு ஆதரவு பெற்ற காலத்தில் தமிழ்ப் பண்பாட்டின் மீது தாக்கம் செலுத்தி, அதன் சொந்த வடிவங்களை மாற்றியதோடு சிலவற்றை அழித்துவிட்டன என்ற கருத்தியல் நிலை உண்டு. இதனை சமஸ்கிருத மயமாக்கத்தால் ஏற்பட்ட கேடு எனக் கூறுபவர்கள் உளர்.

ஆ. மேநிலையாக்கம்: சிலர் இதனை சமஸ்கிருத மயமாக்கம் அல்ல என வாதிடுகின்றனர். அவர்கள் இதனை மேநிலையாக்கம் என விளக்குகின்றனர். அதாவது மேல்நிலையில் உள்ள தெய்வங்கள் போலவோ அல்லது மேம்பட்ட வாழ்க்கைமுறை போலவோ தம் பண்பாட்டை உயர்த்திக் கொள்ளும் பண்பு எல்லா இனங்களிடமும் காணப்படுகிறது. அந்தவகையில் இது ஒரு மேல்நிலை ஆக்கம் எனப்படும். சமய அடிப்படையிலான ஆய்வுகளில் காணப்படும் இந்தக் கோட்பாடு, கூத்துகளுக்கும் பொருந்துகிறது. மேல்நிலைக் கூத்துகளைப் போல, மற்றக் கூத்துகளும் தம்மை உயர்த்திக் கொள்ளும் முயற்சியாக இதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இ. இயல்பான பண்பாட்டுக் கலப்பு: இதற்கும் அப்பால், இது ஓர் இயல்பான பண்பாட்டுக் கலப்பின் விளைவாகும் எனக் கூறும் கருத்தும் உள்ளது. இரண்டு பண்பாடுகள் சந்திக்கும் இடங்களில், ஒன்றிலிருந்து மற்றொன்று பெற்றுக் கொள்ளுதல் என்பது இயல்பான நிகழ்வாகும்.

### 3. அனைத்தையும் ஒன்றோடு ஒன்று இணைத்தல் எனும் கோட்பாடு

பண்பாட்டுக் கலப்புக் காரணமாக, ஒன்று மற்றொன்றைப் பெற்றுக் கொள்ளிறது; பின்னர் அதைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும். இந்த இணைப்பு நமது வாழ்க்கையிலும் காணப்படுகிறது. இந்த இணைப்பு நிலையானது அல்ல; அது மாறும் தன்மை கொண்டது. இதனை அசெம்பிளேஜ் (Assem blage) என அறிஞர்கள் கூறுகின்றனர்.

அசெம்பிளேஜ் கொள்கைப்படி, வெளிப்புற உறவுகள், அதாவது கூறுகள் ஒருவருடன் தொடர்பு

கொள்ளும்போது, அவற்றின் சொந்தப் பண்புகளைப் பராமரிக்கின்றன. அவற்றை அகற்றி, புதிய உள்ளமைவுகளில் மீண்டும் இணைக்க அனுமதிக்கின்றன. இதனை டெலியூஸ் மற்றும் காட்டாரி (Deleuze & Guattari) கூறியுள்ளனர்.

பல பாகங்கள் ஒன்று சேரும் பொழுது ஓர் இயந்திரம் உருவாகுகிறது; உதாரணமாக, மோட்டார் கார்; பல பாகங்கள் பொருத்தப்பட்டு, ஒரு மோட்டார் கார் உருவாகிறது. இதேபோல், ஒன்று சேர்த்தலை ஓவியம், இலக்கியம், இசை போன்ற கலை வடிவங்களிலும் காணலாம். பல பாகங்கள் ஒன்றாகச் சேர்வது என்பது ஓர் ஆக்கத்திற்கான பொது விதியாகும். இப்பொது விதிக்கு அமைய, கலை, இலக்கியம், சிந்தனை, பண்பாடு போன்றவற்றில் சில இணைகின்றன, சில மாறுகின்றன, சில அழிகின்றன. இந்தத் தோற்றம், ஒடுக்கம் என்ற மகாபிரவாகத்துள் நமது கூத்தும் அடங்கும்.

ஒன்று சேர்தல் ஓர் ஒழுங்கு விதிக்கு அமைய நடைபெறுகிறது என்று சிலர் கூறுகின்றனர்; சிலர் எதுவும் இல்லாமல், இயல்பான போக்கில் குறுக்குமறுக்காக ஒன்று சேர்க்கின்றன எனக் குறிப்பிடுவர். இந்த விதி நமது கூத்துக்கும் பொருந்துகிறது. கூத்து ஓர் ஒழுங்கு விதிப்படி உருவாகியுள்ளது என்ற தோற்றத்தையும், இயல்பான போக்கில் உருவானது என்ற தோற்றத்தையும், அதனுடைய ஆற்றுகையும் அதன் வடிவமும் வெளிப்படுத்துகின்றன.

பரிமாணக் கோட்பாடு, பண்பாட்டுப்பரவல் கோட்பாடு, அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் கோட்பாடு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் நமது மகிடிக்கூத்தை அணுகிப்பார்போம்.

### பரிமாணக் கோட்பாட்டில் மகிடிக் கூத்தும் அதன் பரிமாணங்களும்

மட்டக்களப்பில் ஆடப்படும் நான்கு வகை மகிடிக் கூத்தை வைத்து இதனை விளக்கலாம். முதலாவது மகிடிக் கூத்து சீலாமுனையில் நடத்தப்பட்ட மலையாளத்தார் - மட்டக்களப்பார் போட்டியை மையமாகக் கொண்டிருந்தது. இரண்டாவது மகிடிக் கூத்து ஆரையம்பதியில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியினைக் காணவரும் பல்வேறு ஆட்களின் வருகையை மையமாகக் கொண்டிருந்தது. மூன்றாவது மகிடிக் கூத்து புன்னைக்குளத்தில் நடத்தப்பட்ட காமாட்சி - மீனாட்சி கதையும், வேடன் - வேடுவிச்சி கதையும் ஒரே இடத்தில் நடைபெறுதலை மையமாகக் கொண்டிருந்தது. நான்காவது மகிடிக் கூத்து சந்திவெளியில் நடத்தப்பட்டு, முன் சொன்னவற்றோடு சமகாலப் பிரச்சினைகளையும் அதிகார வர்க்கத்தையும் கேலி செய்தலை மையமாகக் கொண்டிருந்தது. இந்த நான்கினையும் அருகருகே வைத்துப் பார்க்கையில், ஒரு பரிமாணம் தெரிவதுடன் ஒன்று போல் ஒன்று இல்லை என்பதும் தெரியவரும். இவை தனித்தனியானவையாயினும், ஒன்றின் பரிணாம வளர்ச்சி மற்றொன்றாகத் தோற்றமளிக்கிறது, அல்லவா?

### பண்பாட்டுப் பரவல் பின்னணியில் மகிடிக் கூத்து

உதாரணமாக, மட்டக்களப்பில் ஆடப்படும் மகிடிக் கூத்தை எடுத்துக்கொள்வோம். இரண்டு சாராருக்கிடையில் நடைபெறும் போட்டிதான் அதன் மையக்கரு. இது ஏனைய பண்பாட்டுக் கலப்புகளின் காரணமாக, பிராமணர் - மலையாளத்தார் போட்டி எனவும், முஸ்லிம்கள் - உள்ளூரார் போட்டி எனவும், கத்தோலிக்கர் - இந்துக்கள் போட்டி எனவும் உருப்பெற்றுள்ளது. இது ஒரு பண்பாட்டுக் கலப்பின் விளைவாக, மகிடிக் கூத்தின் நிகழ்த்து பொருள் மாறிய விதத்தை வெளிப்படுத்துகிறது.

### அனைத்தையும் ஒன்றோடு ஒன்று இணைத்தல் எனும் கோட்பாட்டில் மகிடிக் கூத்து

அனைத்தையும் இணைத்தல் எனும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலும், குறிப்பாக மகிடிக் கூத்தை நன்கு புரிந்துகொள்ளலாம். அதன் மேடை அமைப்பிலும் அதன் உள்ளடக்கங்களிலும் இப்பண்பு வெளிப்படையாகக் காணப்படுகிறது. கோவிலில் உச்சரிக்கப்படும் மந்திரப்பாடல்கள், நாட்டார் பாடல்கள், எழுதப்பட்ட இலக்கிய நயம் பொருந்திய பாடல்கள் ஆகிய அனைத்தையும் இணைக்கும் ஒரு பண்பை இதில் காணலாம். பிராமணர் - உள்ளூரார் போட்டி, காமாட்சி - மீனாட்சி போட்டி எனப் பல்வேறு மோதல்களையும் ஒன்றிணைக்கும் தன்மையைக் கொண்டது இது.

நிகழ்த்தும் மேடையிலும் பல்வேறு அடுக்குகள், நிலைகள் காணப்படுகின்றன. நுணுக்கமாக நோக்கினால், அனைத்தையும் இணைக்கும் ஒரு பண்பை இதில் தெளிவாக உணர முடிகிறது. இந்த மூன்று கோட்பாட்டுக் கருத்தியல்களும், ஈழத்தில் வளர்ச்சி பெற்றதாகக் கூறப்படும் கூத்துகள் எவ்வாறு தமது வடிவமைப்புகளையும் உள்ளடக்கங்களையும் மாற்றிக்கொண்டன என்பதைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. இது மேலும் விரிவாக ஆராயப்பட வேண்டியதாக இருந்தாலும், இங்கு சுருக்கமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்போது, ஈழத்துத் தமிழ்ப் பிரதேசங்களின் கூத்துகளின் அடிப்படையில் இவற்றை ஆராயலாம்.

யாழ்ப்பாணத்துக் கூத்துகளை முதலாவதாக எடுத்துக்கொள்வோம்.

## யாழ்ப்பாணக் கூத்துகள்

யாழ்ப்பாணத்தின் வரலாற்றைப் பார்த்தால், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை அதன் பண்பாட்டு வரலாறு சுயமாக வளர்ந்ததோடு, வளர்ச்சிப் போக்கில் வந்துசேர்ந்த பிற பண்பாடுகளுடனும் இணைந்து இன்று காணப்படும் பண்பாட்டை உருவாக்கியுள்ளது. இப்பண்பு யாழ்ப்பாணத்துக்கே உரியது அல்ல; தமிழர் வாழும் ஏனைய பிரதேசங்களுக்கும் பொருந்தக்கூடியது.

தமிழ் நாடக வரலாற்றை ஆராய்ந்த பலரும் சமயச் சடங்குகளையே அதன் மூலங்களாகக் குறிப்பிடுகின்றனர். சமயச் சடங்கு எனும் அந்தக் கருப்பையில் இருந்தே ஆடலும் பாடலும் உள்ளிட்ட ஏனைய கலைகளும் தோன்றியதாகவும், பின்னாளில் அந்த ஆடல்களும் பாடல்களும் பரிணாம வளர்ச்சி அடைந்து கூத்துகளாக மாறியதாகவும் ஒரு கொள்கை நிலவுகிறது.

சமயச் சடங்குகளை நாடகமாகக் கொள்ளலாமா? என்று சிலர் வெகுண்டெழலாம். அவர்களுடைய கூற்றில் நியாயப்பாடு உண்டு, ஏனெனில் சடங்கு ஒருபோதும் நாடகமாகாது. காரணம், அது முழுக்க முழுக்க நம்பிக்கையோடு செய்யப்படுவதும், மீண்டும் மீண்டும் நடத்தப்படுவதுமாகும். இந்தச் சமயச் சடங்குகளையே ஆய்வாளர்கள் கலைகளின் கருப்பை எனக் குறிப்பிடுகின்றனர். கருவில் இருக்கும் போது அது குழந்தையல்ல; ஆனால் வெளிவந்த பின்தான் ‘குழந்தை’ எனப்படும். இதேபோல், ‘சடங்கு > கலை’ எனும் தொடர்பை ‘சடங்கு > கலை’ என்ற ஒப்புமையால் விளங்கிக்கொண்டால் அது மேலும் தெளிவாகும்.

சடங்கு நம்பிக்கையோடு நடைபெறும் ஒன்று; அதே நேரத்தில் ஆற்றுகை அல்லது கூத்து மகிழ்ச்சி, பொழுதுபோக்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. சடங்கின் நம்பிக்கை குறையும்போது அது கலையாக மாறுகிறது என்பர். ஆனால் எல்லாச் சடங்குகளும் கலையாகவோ அல்லது கூத்தாகவோ மாற முடியாது. ஒரு சிறு குடும்பத்தையோ அல்லது குறுகிய குழுமத்தையோ தாண்டி, பலரையும் இணைக்கும் பண்பைப் பெறும் போது மட்டுமே ஒரு சடங்கு கலையாகிறது என அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே, கூத்தின் ஊற்றுக்கண் சடங்குதான் என்பது புலனாகிறது.

சடங்கில், ‘ஓம்’, ‘க்ரீம்’ போன்ற ஒலிகளை நம்பிக்கையோடு உச்சரித்து பூசாரி வழிபடுவார் — அது நம்பிக்கையின் வெளிப்பாடு. அதேபோல், கூத்திலும் ‘தா’, ‘தெய்ய’, ‘தா’ என்ற ஒலிகளை எழுப்பி, கூத்தரை ஆட வைப்பர் அண்ணாவியரும் பிறரும் — இது மகிழ்ச்சியின், பொழுதுபோக்கின் வெளிப்பாடு. ‘தா தெய்ய தா’ எனும் கூத்தின் தாள ஒலி, சடங்கில் ஒலிக்கும் மந்திர ஒலி ‘ஓம் க்ரீம்’ இன் பரிமாணம் அல்லது அதன் சீர்திருத்தமான வெளிப்பாடு எனலாம்.

## காத்தவராயன் கூத்து

சடங்கு பரிணாம வளர்ச்சியில் நாடகம் அல்லது கூத்து ஆகிறது என்பதனை யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட காத்தான் கூத்தான காத்தவராயன் நாடகத்தை உதாரணமாகக் கொண்டு விளக்கலாம். பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் பதிப்பித்த காத்தவராயன் நாடகத்திற்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் வித்தியானந்தன், காத்தவராயன் கூத்து வளர்ச்சி நிலையினை பல கட்டங்களாகப் பிரித்து கூறுகிறார். அங்கு அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

காத்தான் கூத்து, ஈழத்தில் நிகழ்த்தப்படும் முறைகளில், மூன்று விதமான படிமுறை வளர்ச்சிகளை அவதானிக்கலாம்.

1. சில இடங்களில், காத்தவராய சுவாமியாக உருக்கொண்டு ஆடும் ஒரு வழிபாட்டுமுறை காணப்படுகிறது. மேலும் உருவேற்ற அல்லது உற்சாகப்படுத்தும் பொருட்டு, உடுக்கடித்து பூசாரிமார்களால் காத்தவராயன் பாடல்கள் பாடப்படுகின்றன. இங்கு, காத்தவராயன் பாடல்கள் முழுக்க முழுக்க ஒரு சமயச் சடங்குப் பாடல்களாகவே நிகழ்த்தப்படுகின்றன.

2. இன்னும் சில இடங்களில், கோயிற் சடங்கு வைபவங்களில் பலர் சூழ்ந்து இருந்து கேட்க, ஒருவரே உடுக்கடித்து தனியே அபிநயித்து காத்தவராயன் பாடல்களைப் பாடி கதையை விளக்கமளிப்பதைக் காணலாம். இங்கு, சமயச் சடங்கினின்று வளர்ச்சிபெற்ற கதாகாலச்சேபமாக, ஒருவரே பல பாத்திரங்களை தாங்கி அபிநயிக்கும் தன்மையுடைய காத்தவராயன் கதை நிகழ்த்தப்படுகிறது.

3. இன்னும் சில இடங்களில், கோயில் வெளியில் மேடையமைத்து பலர் வேடமிட்டுப் பாத்திரங்களைத் தாங்கி நடித்து கதை நிகழ்த்துவதைக் காணலாம். இங்கு, சமயச் சடங்கினின்று வேறுபட்டு, காத்தவராயன் கதை ஒரு நாடகமாக மாறிவிடுகிறது. எனினும், இன்னும் சமயத்தினின்று காத்தவராயன் கதை விடுபடவில்லை. கோயில் சடங்கு, நேர்த்திக்கடன் போன்றவற்றிற்காக நடத்தப்படும் நாடகமாகவே இது இருந்து வருகிறது.

முதலில் ஒருவரே எல்லாப் பாகங்களையும் நடித்து

பின்னர், ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொருவர் நடிக்கத் தொடங்கிய தன்மையினை நாடக வளர்ச்சியில் காணலாம். இவ்வகையில், ஒரு நாடகத்தில் படிமுறை வளர்ச்சிப் போக்கைக் காட்டும் தனித்துவம் கொண்டதாக காத்தான் கூத்து அமைந்துள்ளது. பரிமாண முறையில் அதனைப் பேராசிரியர் விளக்கியுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

முதல்கட்டம் - அது சமயச் சடங்காக நிகழ்த்தப்பட்ட கட்டம்.

இரண்டாம் கட்டம் - அது உடுக்கடித்து, உடுக்கை சொல்லப்பட்ட கட்டம்.

மூன்றாம் கட்டம் - அந்த உடுக்கடிக்கு ஏற்ப, பாத்திரங்கள் வேடமிட்டு, வெளியில் நடத்திக் காட்டிய கட்டம்.

நான்காம் கட்டம் - மேடை அமைத்து அதனை நாடகமாக்கி காத்தான் கூத்தாகக் காட்டிய கட்டம்.

ஐந்தாம் கட்டம் - பின்னணித் திரையில் காட்சிகள் வரைந்து, அதனை ஒரு பார்சிவழி நாடகமாக்கிய கட்டம்.

இவ்வாறு அவர் கூற்றினை நாம் விரித்துப் பொருள் கொள்ளலாம். எதிர்காலத்தில் அது இன்னும் விரியும், அதையும் நாம் நேரில் காண்கிறோம்.

ஒரு கூத்து வடிவம் எப்படி மெல்ல மெல்ல வளர்ந்து இன்றைய நிலைக்கு வந்தது என்பதை அவர் பரிணாம முறையில் சுட்டிக்காட்டுகிறார். இந்தச் சுட்டிக் காட்டுதல் ஈழத்துக் கூத்துகள் அனைத்திற்கும் பொருந்தும் போல் தெரிகிறது. யாழ்ப்பாணத்தின் வடமோடி மற்றும் தென்மோடிக் கூத்துகளை எடுத்துக் கொண்டாலும் இது பொருந்தும். பரிமாணக் கோட்பாடு, பண்பாட்டுப் பரவல் கோட்பாடு, பண்பாட்டு இணைப்புக் கோட்பாடு ஆகியவற்றின் பின்னணியில் அவற்றைப் பார்ப்போம்.

**யாழ்ப்பாணத்தின் வடமோடி - தென்மோடிக் கூத்துகள்**

யாழ்ப்பாணத்தில் ஆடப்படுகின்ற வடமோடி மற்றும் தென்மோடிக் கூத்துகள் தோன்றிய காலம் அல்லது காணப்பட்ட காலத்தை திட்டவட்டமாக இதுவரை யாரும் வரையறுத்துக் கூறவில்லை.

பதினேழாம் - பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் அங்கு கூத்துகள் ஆடப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. வட்டுக்கோட்டை, வாதரவத்தை, புறாப்பொறுக்கி போன்ற இடங்களில் வடமோடி ஆட்டக் கூத்துகள் இருந்திருக்கின்றன. 1976 ஆம் ஆண்டில் நான் அவற்றை நேரில் பார்த்து, அவற்றுக்கும் மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடிக் கூத்துகளுக்கும் இடையிலான பல ஒற்றுமைகளை அவதானித்தேன்.

அவை அழகான ஆடல்களைக் கொண்டிருந்தன. இதுபற்றி காரை சுந்தரம்பிள்ளை தனது வட இலங்கை நாட்டார் அரங்கு எனும் நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். வட இலங்கையில் ஆடப்படும் கூத்துகளை, சமய அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம் என அவர் கூறுவார்: ஒன்று, இந்து சமய மரபுடன் தொடர்புடைய கூத்துகள்; இரண்டு, கத்தோலிக்க மரபுடன் தொடர்புடைய கூத்துகள்.

இந்து சமய மரபுடன் தொடர்புடைய பெரும்பாலான கூத்துகள் தென்னகத்திலிருந்து வந்தனவாக அல்லது தென்னகத் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. கத்தோலிக்க மரபுடன் தொடர்புடைய கூத்துகள் போர்த்துக்கலில் ஊற்றெடுத்து, கோவாவுக்கு ஊடாக தென்னகத்துக்கு வந்து, அங்கிருந்து இலங்கைக்கு வந்தவையாகும். சில கூத்துகள் போர்த்துக்கலில் இருந்து நேரடியாகவும் இலங்கைக்கு வந்தன என்றும் தெரிகிறது. இவ்வாறு வந்த கூத்து மரபுகளைப் பற்றி அவர் மேலும் விரிவாக ஆராய்ந்து இருக்கிறார்.

வட இலங்கைக் கூத்துகளை, அவற்றின் ஆட்டத் தன்மைக்கு ஏற்ப, அவர் பின்வருமாறு பிரிப்பார்:

வடமோடிக் கூத்துகள்,

தென்மோடிக் கூத்துகள்,

மாதோட்டப் பாங்கு அல்லது மன்னார்ப் பாங்குக் கூத்துகள்,

இவற்றைத் தென்பாங்கு என்றும் தென்மெட்டு என்றும் கூறுவர். யாழ்ப்பாணப் பாங்கு அல்லது வட பாங்குக் கூத்துகளை வடமெட்டு எனவும் அழைப்பர்.

வாசகப்பா கதை வழி கூத்துகள் - உதாரணம் காட்டுப் பிராயம்,

மற்றும் நாடகங்கள்,

பள்ளு நாடகங்கள்,

விலாசங்கள்.

இவற்றில் சில அருகிவிட்டன என்றும் கூறுவர்.

### விலாசக் கூத்து

விலாசம் பற்றிக் கூற வந்த காரை சுந்தரம்பிள்ளை, "கூத்துகள் சுருங்கி விலாசங்களாயின" எனும் ஒரு கருத்து உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார். விலாசம் எங்களுக்கு இடையில் அறிமுகமான ஒரு வடிவமாகும். இங்கிருந்த கூத்துப் பாடல்களையும் ஆடல்களையும் உள்வாங்கி, எவ்வாறு விலாசம் உருவாகியது என்பதை நான் என் விலாசம் பற்றிய கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

விலாசம் தமிழ் நாடக உலகில் புகுந்த ஒன்றாகும். தமிழ்ப் புலவர்களும் நாடக ஆசிரியர்களும் விலாச நாடகங்களை எழுதும் போது, பண்டைய கூத்தமைப்பின் செல்வாக்கால் பெரிதும் கவரப்பட்டிருந்தனர்; அதனால் கூத்து நூல்களை முதலில் விலாசங்களாக்கினர். ஆரம்பத்தில் கூத்தமைப்பை ஒட்டியே விலாசமும் வந்தது.

இந்த விலாசம் மட்டக்களப்பிலும் ஆடப்பட்டதாக தகவல்கள் உள்ளன. அதை அவர்கள் விலாசக் கூத்து என்றே அழைத்தனர். விலாசத்தை உள்வாங்கிய போது, வட்டக்களரியிலே அதனை ஆடியிருப்பதாக அறிகிறோம்.

விலாச ஆட்டங்கள் கதகளி அல்லது கதக் ஆட்டங்களை ஒத்தவை. உயர்ந்த வட்டக்களரியிலேயே விலாசங்கள் ஆடப்பட்டன. இது, அண்ணாவியாரும் ஏனையோரும் நடுவில் நிற்க, கூத்தர்கள் களரியைச் சுற்றி ஆடுவதாகும் என்று குணத்திலக தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கூத்துகளாக ஆடப்பட்ட ஆட்டம் சிறிது குறைந்து, இசைப்பகுதி மேலிட அவை விலாசம் எனப்பட்டிருக்கலாம் என காரை சுந்தரம்பிள்ளை அபிப்பிராயப்படுகிறார். எவ்வாறாயினும், நிச்சயமாக ஒரு கட்டத்தில் இசை, நாடகங்கள் எல்லாவற்றையும் விலாசம் என்று கூறும் ஒரு மரபு இருந்திருத்தல் வேண்டும் என்று அவர் கூறுகிறார். அரிச்சந்திரன் நாடகம் கூட அரிச்சந்திர விலாசம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. விலாச நாடகங்களைப் பார்க்கும்போது சாஸ்திரிய நாடக இசை முக்கியத்துவம் பெறுதலைக் காணலாம் எனப் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இலங்கையில் ஆடப்பட்டதும் நூல் வடிவில் வெளிவந்ததுமான பதிவிரதை விலாசம் இதனை உறுதி செய்கிறது. அதேபோல், ஏனைய இடங்களிலும், சிறப்பாக கரையோரப் பகுதிகளில் தென்மோடிக் கூத்துகள் இருந்திருக்கின்றன. இவை யாவும் ஆரம்பகாலத்தில் வட்டக்களரியில் ஆடப்பட்டன என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் இவை இப்போது அப்படிக் காணப்படுவதில்லை. இதற்கான காரணத்தை வரலாற்றில் தான் காணலாம்.

ஸ்பெயின் நாட்டு நாடகத் தாக்கம் கத்தோலிக்கர் வரவுடன் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட போது, ஆட்டக்கூத்து மரபு மாறி, அது பாடலுக்குக் கூத்தாகப் பரிமாணம் பெற்றது. 'பரிமாணம் பெற்றது' என்ற சொல் பிடிக்காதோர், 'மாறியது' என்ற சொல்லை இங்கு போட்டுக்கொள்ளலாம். பின்னர் கிடைத்த நவீன மேடை அமைப்பு, ஒளியமைப்பு, உடை அமைப்பு, ஒப்பனை போன்றவற்றை உள்வாங்கி, அது இன்றைய வடிவம் பெற்றது என்பது பலரது அபிப்பிராயம்.

### மன்னார் கூத்துகள்

மன்னாருக்கும் இது பொருந்தும். மன்னார் கூத்துகளை பதிப்பித்த பேராசிரியர் வித்தியானந்தன், அந்தக் கூத்துகள் மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு என இரண்டு வகையில் இருந்ததாகக் கூறுகிறார். அவர் யாழ்ப்பாணப் பாங்கு என்று கூறியதைக் கொண்டு, மன்னார், யாழ்ப்பாணத்துக் கூத்துகளைப் போல சில கூத்துகளை உருவாக்கியது என்ற முடிவுக்கு நாம் வர முடிகிறது.

இங்கே தான், நான் முன்சொன்ன மேல் நிலை ஆக்கம் அல்லது பண்பாட்டுக் கலப்பு என்ற கோட்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். மன்னார் யாழ்ப்பாணம் போல கூத்துப்போட முயன்றிருக்கலாம் அல்லது யாழ்ப்பாணத்து அண்ணாவியாரை அழைத்துப் பழகியும் இருக்கலாம். இவை இன்னும் தெளிவாக ஆராயப்படவில்லை.

ஆரம்பத்தில், மன்னாரில் அறிமுகமான யாழ்ப்பாணப் பாங்கு வட்டக்களரியில் ஆடப்பட்டதாகவும், ஆடல் மிகுந்ததாகவும் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. இந்நாளில், கத்தோலிக்க மதம் சார்ந்த கூத்துகள் எழுந்த போது, ஆடல் குறைந்தது; அந்தக் கூத்துகள் ஒரு பக்கம் அடைக்கப்பட்ட அல்லது படச்சட்ட மேடைக்கு நகர்த்தப்பட்டிருக்கலாம்.

அதேபோல், கர்நாடக சாயல் மிகுந்த பாடல்களையும் இந்தக் கூத்துகள் உள்வாங்கியிருக்கலாம். மன்னார் கூத்து மெட்டிலே உள்ள கர்நாடக இசையில் அமைந்த பாடல்கள், இசை வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை ஒருங்கிணைத்து ஓர் இசைக்குள் கொண்டுவந்தவராக ரோபோட் தவமைந்தன் அவர்கள் காணப்படுகிறார்.



**1960களில் நடுப்பகுதியில் ஆடப்பட்ட கூத்து : இராம நாடகம்**

### முல்லைத்தீவுக் கூத்துகள்

முல்லை தீவில் குடமூதல், பன்றிப் பள்ளு ஆகிய ஆற்றுகை வடிவங்கள் இருந்தபோதும் அங்கு ஆடப்படும் கோவலன் கூத்தே முல்லைக் கூத்துப் பாணியாகக் கொள்ளப்படுகிறது. அழகான ஆட்டக்கோலங்களும் பாடல்களும் அமைந்த கூத்து அது.

வளர்ச்சி பெற்ற இந்தக்கோவலன் கூத்தையும் இந்தப் பின்னணியில் நாங்கள் பார்க்கலாம். கோயிலிலே உடுக்கடித்துப் பாடப்பட்ட சிலம்பு கூறல் எனும் அந்தக் கதை, நிகழ்த்து கலையாக மாறிய போது கூத்து வடிவம் பெறுகிறது. இன்று வரை அந்தக் கூத்தினை அவர்கள் ஒரு மாறாத சடங்காகவே வருடந்தோறும் கோயில் விழாவில் நடத்தி வருகிறார்கள். ஆனால் அது சடங்கல்ல, மக்கள் கண்டு களிக்கும் ஒரு நாடகமாக, கலையாக மாறியுள்ளது. அந்தப் பாடலும் கண்ணகி கதையும் நாடகமாக மாறியபோது பாத்திரங்கள், உரையாடல், முரண், வளர்ச்சி, உச்சம் என நாடகத் தன்மைகளையும் அது பெற்றுக்கொண்டது.

இதனை முல்லை மோடி எனச்சிலர் அழைத்தாலும், நுணுக்கமாக நோக்குகையில் அதில் தென்மோடி இசை ஆடல் முறை, வடமோடி இசை ஆடல் முறை ஆகியன இணைந்திருப்பதைக் காணலாம். கோவலன் கூத்து உருவாக்கலில் சிலம்புகூறல் காவியக் கதை, வடமோடி - தென்மோடி இசை ஆட்டம் என்பன இணைந்துள்ளன; அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் கோட்பாடு இதற்கு நன்கு பொருந்தும் போலத் தெரிகிறது.

பாடசாலைகளில் அதன் சில பகுதிகளை மேடை ஏற்றும் போது, அது தவிர்க்க முடியாதபடி வட்டக்களரியை விட்டு படச்சட்ட மேடைக்கும் வந்துவிடுகிறது. அதன் உடையமைப்பு ஒப்பனைகளிலும் பல மாற்றங்கள் வந்துவிடுகின்றன.

### மலையகக் கூத்துகள்

மலையகக் கூத்துகளின் உருவாக்கத்திற்கும் இந்தக் கோட்பாடுகளை பொருத்திப் பார்க்கலாம். மலையகத்திலே காமன் கூத்து சமயச் சடங்கு அதிகம் கலந்ததாக உள்ளது. கம்பு நாட்டல் தொடக்கம் அடுத்த நாள் செத்தவீடு கொண்டாடுவது வரை முழு ஊரும் பங்கேற்கும் வகையில் இன்றும் அது நடத்தப்பட்டாலும், காலமாற்றம் அதன் உடை,

ஒப்பனை, நிகழ்த்துகை முதலியவற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நவீன தொழில்நுட்ப அறிவும் பயன்படுத்தப்படுகிறது; இதன் சாதக - பாதக அம்சங்கள் பற்றிய விவாதங்கள் உண்டாயினும், யதார்த்தம் வேறாக இருக்கிறது. இன்றைய சூழலில் இருந்து அது விடுபட முடியவில்லை.

ஏனைய மலையகக் கூத்துகளில் சமயச் சடங்கின் சாயல் காணப்படினும், நாடகத்தன்மை அதிகம் பொருந்தியவையாகவும் அவை இருப்பதனை ஆராய்ந்தவர்கள் கூறியுள்ளனர். பொன்னர் - சங்கர் அல்லது அர்ஜுனன் தபசு, கூத்து வடிவம் பெறும் பொழுது, அது பல ஆற்றுகை வடிவங்களில் இருந்து ஆட்டங்களையும் பாடல்களையும் மேடையினையும் பெற்று மேலும் வளர்ந்து வந்திருப்பதைக் காணுகின்றோம்.

### மட்டக்களப்புக் கூத்துகள்

மட்டக்களப்பில் ஆடப்படும் கூத்து வடிவங்களை,

அ. பறை மேளம்

ஆ. மகிடிக் கூத்து

இ. வசந்தன் கூத்து

ஈ. வடமோடி - தென்மோடிக் கூத்துகள்

என நான்காக வகுக்கலாம். அண்மைக்காலத்தில் இன்னும் சில வடிவங்கள் பற்றியும் பேசப்படுகின்றன.

#### அ. பறை மேளம்

இந்தப் பறைமேளத்தை பறைமேளக் கூத்து என அழைக்கும் வழக்கம் பின்னால் ஏற்பட்டது. கோவில் வெளியில் இது நடத்தப்படும் போது, அரச வரவு, இராணி வரவு எனப் பல வரவுகளுக்கான தாளக்கட்டுகளை பறை அறிவோர் பறையில் எழுப்புவர். சிறு பறை, பெரும் பறை, தம்மட்டம் எனும் தோல் வாத்தியங்களும், சொர்ணாளி எனும் குழல் வாத்தியமும் இதில் பாவிக்கப்படுகின்றன. சமூகப் புறக்கணிப்புக் காரணமாக குறிப்பிட்ட சமூகத்தினர் இந்த ஆற்றுகையைக் கைவிட்டு விட்டனர். இவை, உயர்கல்வி நிறுவனங்களில் மாணவரால் படச்சட்ட மேடைகளிலும் வெளியிலும் நடத்தப்படுகின்றன.

வடக்கு - கிழக்கில் வேறு சில தோல் வாத்தியங்கள் ‘பறை’ என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. மலையகத்தில் தப்பு எனும் வாத்தியம் தான் பறை என அழைக்கப்படுகிறது; அது மலையகத் தமிழரின் தேசிய வாத்தியமாகவும் ஒலியாகவும் இன்று கருதப்படுகிறது.

#### ஆ. மகிடிக் கூத்து

மகிடிக் கூத்தும் பலவகையின. மட்டக்களப்பில், பல்வேறு இடங்களில், பல்வேறு விதங்களில், பல்வேறு மேடைகளில் இவை நிகழ்த்தப்படுகின்றன. பொதுவாகப் பகலிலே வெட்டவெளியில் இவை நடத்தப்படுகின்றதாயினும், நிகழ்வுகளின் தேவைக்கேற்ப அந்த வெட்டவெளியில் பந்தல்களும், கொடி மரங்களும், உயர்த்தப்பட்ட மேடைகளும் அமைக்கப்படுகின்றன. ஆகையால், பல்வேறு விதமான ஆடல் வடிவங்களையும், மேடை வடிவங்களையும், நிகழ்வுகளையும் ஏனைய ஆற்றுகைகளிலிருந்து இது உள்வாங்கி இருக்கின்றது என்று நாங்கள் கூறலாம். இதனை நாம் ஒருவகையான பலவற்றின் இணைப்பு அல்லது அசெம்பிலேஜ் (Assemblage) எனவும் அழைக்கலாம்.

#### இ. வசந்தன் கூத்து

நான் முன்னரே கூறியபடி, வசந்தன் எனும் ஆடல் வடிவம் வசந்தன் கூத்து எனப் பெயர் பெற்று, கோயில் முன்றல்களிலும் நடைபவனிகளிலும், உயர்த்தப்பட்ட மேடைகளிலும் ஆடப்படுகின்றது. அண்மைக்காலமாக அதனை வட்டக்களரியில் ஆடுகின்ற தன்மையையும் நாம் காண்கிறோம்.

#### ஈ. வடமோடி - தென்மோடிக் கூத்துகள்

மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடி - தென்மோடிக் கூத்துகள் தனித்துவமானவை. காரணம், கூத்தின் தாளக்கட்டுகளை அவை இன்றளவும் பேணுவதும், ஆடல் வகையில் செழுமையாக இருப்பதுமாகும் என்று பலரால் கூறப்பட்டாலும், அதுவும் இந்தப் பொது விதிக்கு ஏற்ப, ஏனையவற்றிலிருந்து பலவற்றையும் பெற்று வளர்ந்த ஒரு வடிவமே என்பது தெரிகிறது.

சடங்கைச் சூழ இருந்து பார்க்கும் பார்வையாளர், மகிடிக் கூத்தின் வெட்டவெளி, வசந்தன் கூத்தின் உயர்த்தப்பட்ட மேடை போன்றவற்றோடு, மேலே குவித்துக் கட்டப்பட்ட குடை போன்ற அமைப்பு, உயர்த்தப்பட்ட மேடையைச் சுற்றி நாட்டப்பட்ட கம்புகள், அலங்காரங்கள் என்பனவற்றை இணைத்த ஒரு மேடையாக அது உருவானது. நிகழ்த்தும் முறைகளிலும் இதனால் மாற்றம் ஏற்படுகிறது.

மட்டக்களப்புத் தென்மோடிக் கூத்துகளின் பண்புகளும், ஆற்றுகைகளும், உடை ஒப்பனைகளும்,

தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்த பாக்கள், பாவினங்கள், நாட்டார் பாடல்கள் மற்றும் இலக்கியங்களில் பாவிக்கப்பட்ட பா வடிவங்கள் ஆகியவற்றையும், தமக்குச் சமாந்திரமாக வளர்ந்து வந்த பரதக் கலைகள், உள்ளூர் ஆடல் முறைகள் மற்றும் பிற்காலத்தில் வந்த அரங்கப் பொருட்கள் ஆகியவற்றையும் இணைத்து உருவானவையாகும்.

மார்க்கண்டேயன் நாடகத்தில் சிவலிங்கம் பிளக்க, சிவன் அதனுள் இருந்து எழுந்து இயமனுடன் மோதல், ஓர் இராஜகுமாரன் மயிலில் ஆகாய மார்க்கமாக வந்து இறங்கல் போன்ற காட்சிகள், நான் என் சிறுவயதில் வட்டக்களரியில் கண்ட பெரும் காட்சிகளாகும். மார்க்கண்டேயன் நாடகத்தை அண்ணாவியாரான என் மாமா முறையான அர்ஜுனன் கந்தையா பழக்கி, மேடைக் கூத்தாக அமைத்திருந்தார். இதனை நான் என் 10 - 15 ஆவது வயதில் பார்த்துள்ளேன், அதாவது 1953-1958 ஆம் ஆண்டுகளில். நான் பிறக்கும் முன்னரேயே நடந்த வனவாசம் எனும் கூத்தில் (1930), பெரிய பாம்பு ஒன்றின் உள்ளிருந்து ஆட்கள் வருவது போல காட்சி அமைந்திருந்தது என என் தாத்தா கூறிக் கேட்டுள்ளதாகவும் நினைவில் உள்ளது.

இவையாவும் பார்சி வழி நாடகத் தாக்கமாகும்.

1960களின் நடுப்பகுதியில் எங்கள் ஊரில் மேடையிட்ட இராம நாடகக் கூத்து ஆடைகள் யாவும் சினிமா - புராணக் கதை ஆடைகளாக இருந்தன. கன்னன் குடாவிலே மூன்று வருடங்களுக்கு முன்னர் நான் பார்த்த மஹாபாரத இறுதிப்போர் கூத்து ஆடைகள் யாவும் தொலைக்காட்சியில் வந்த மஹாபாரதத் தொடரில், அந்தப் பாத்திரங்கள் அணிந்து வந்த உடைகள் போலவே இருந்தன. மக்கள் அதனை இரசித்தனர்; மாற்றத்தை அவர்கள் விரும்பினர் போலத் தெரிகிறது. பழைய கரப்பு உடுப்பு அணிந்து, கிரீடம் வைத்து, பூமுடி அணிந்து வந்த பழைய கூத்தரை அங்கு காணமுடியவில்லை. அதன் சரி, பிழைக்கு அப்பால், அவை கிராமத்தில் மரபுவழி அண்ணாவிமார் பழக்கிய மரபுவழிக் கூத்தில் நிகழ்ந்த மாற்றங்களாகும். இதனை நாங்கள் பரிமாண வளர்ச்சிப் போக்கிலும், பண்பாட்டுப் பரவல் போக்கிலும், அனைத்தையும் இணைத்தல் போக்கிலும் பார்த்தால், மேலும் புரிந்துகொள்ளலாம் போல் தெரிகிறது.

இந்த இடத்தில் ஓர் இந்திய ஆய்வாளர் கூறிய கூற்றுப் பொருத்தமுடையது போலத் தோன்றுகிறது. அக்கூற்று இது:

“இந்திய நாகரிகத்தில் ஒவ்வொரு சிந்தனையும் மற்றதோடு உறவு கொண்டு, மோதல் கொண்டு எவ்வாறு தன்னையும் மற்றமையையும் உருமாற்றியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளல் அவசியம்.”

இக்கூற்றை நாம் ஈழத்துத் தமிழ்க் கூத்துக்கும் பொருத்திப் பார்க்கலாம். ஈழத்தமிழரின் ஒவ்வொரு கூத்தும் மற்றதோடு உறவுகொண்டு, மோதல் கொண்டு, எவ்வாறு தன்னையும் மற்றக் கூத்துகளையும் உருமாற்றி வந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளல் அவசியம்.

## இதில் இருந்து நாம் பெறுவது என்ன?

இலங்கையிலுள்ள கூத்துகளில் காணப்படும் பல்வேறு மேடை அமைப்புகளும் பரிணாம முறையில் வளர்ந்துள்ளன; ஒரு பண்பாட்டுக் கலப்பில் அனைத்தையும் இணைத்து, ஒரு கூத்து மற்றைய கூத்துகளோடு உறவுகொண்டு தன்னை மாற்றிக்கொண்டதுடன், மற்றவைகளையும் மாற்றிய வண்ணம் வளர்ந்துள்ளதென நாம் முடிவுக்கு வரலாம்.

இந்தப் பரிணாம வளர்ச்சியை அல்லது மாற்றத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள், “அந்தந்த வடிவங்கள் அந்தந்த முறையிலே இருந்தன, அவை மாறவில்லை, அதனை மாற்றவும் கூடாது.” என வாதிக்கலாம். அது அவர்களின் விருப்பம், ஆசை. ஆனால் நம்முன் மாற்றம் நிகழ்கிறதே; என்ன செய்வது? மாறக்கூடாது என அடம் பிடிப்போரே, நடைமுறை வாழ்வில் மாற்றங்களுக்கு உட்பட்டுவிடுவதனையும் நாம் காண்கிறோம். அது அவர்களின் பிழை அல்ல; நடைமுறையின் இயல்பே அதுதான்.

கூத்து என்பதில் நாம் பல ஆய்வுகள் செய்யலாம். கூத்தும் ஆய்வுக்குரிய ஒரு விடயம்தான். ஆனால் கூத்து என்பது ஓர் ஆய்வுப் பொருள் மாத்திரமல்ல; அது ஒரு நிகழ்த்துகலையும் ஆகும். நிகழ்த்து கலை என்பது ஒரு வாழும் கலை. வாழும் கலை என்பது தேங்கிய கலை அல்ல; அது இயங்கும் கலை. இயங்கும் எதுவும் மாறும் தன்மையுடையது. எனவே, அது மாறும் கலையும் ஆகும்; மாற்றத்திற்கும் தேவைக்கும் ஏற்ப எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்றன.

இந்தக் கூத்துகள் தம் தேவைக்கேற்ப மாறி வந்திருக்கின்றன என்பது புரிகிறது. இன்னும் அது மாறிச்செல்லும் போலவும் தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.



சின்னையா மௌனகுரு

# ஈழத்துத் தமிழ்க் கூத்துகளின் பிரதேசத் தன்மை: ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்

அறிமுகம்

கூத்திலே அதன் பிரதேசத் தன்மைகள் முக்கியமானவை. இவை அதிகம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை, ஆனால் முக்கியமானவை. கூத்தின் பிரதேசத் தன்மைகளை அறிய முன்னர் பிரதேசங்களின் தன்மைகளை முதலில் அறிந்துகொள்வோம்.

பொதுவாக இந்திய நாட்டில் தமிழர் கூத்துகளை அவதானிப்போர், ஆராய்வோர், அக்கூத்துகள் தமிழ் நாட்டின் வடபகுதிகளிலும் மேற்குப் பகுதிகளிலுமே நிலவுவதை இனங்கண்டு கொள்வர். தமிழ் நாட்டின் தென்பகுதிகளில், முக்கியமாக மதுரைப் பகுதிகளில் இவை இல்லை. அங்கு வேறு ஆற்றுகை வடிவங்கள் உள்ளன. இவற்றைக் கூத்து எனவும் தெருக்கூத்து எனவும் அழைத்தனர். பின்னாளில் இது கட்டை கட்டி ஆடுவதனால் கட்டைக்கூத்து எனவும் அழைக்கப்பட்டது. இந்தக் கூத்துகளுக்கும் ஈழத்தமிழ்க் கூத்துகளுக்கும் இடையே ஒற்றுமைகளும் உண்டு, வேற்றுமைகளும் உண்டு. அவை தனியாக ஆராயப்பட வேண்டியவை. தமிழ்நாட்டில் நிலவும் இக்கூத்துகளை ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது அதன் பிரதேசத் தன்மைகளை எளிதாக இனங்கண்டு கொள்வர். இப்பிரதேசத் தன்மைகளைச் சிலர் கூத்தின் வலிமைகளில் ஒன்றெனப் பெயர்ப்பர். வட தமிழகத்திலே மிகப் பிரதான பிரிவுகளாக மூன்று கூத்து மரபைக் குறிப்பிடுவர்: ஒன்று — வடக்கத்திக் கூத்து மரபு, இன்னொன்று — தெற்கத்திக் கூத்து மரபு, மற்றொன்று — மேற்கத்திக் கூத்து மரபு.

இவை ஒவ்வொன்றும் அவ்வப் பிரதேசத்திற்கு ஏற்ப வேறுபாடுடையவை. இவற்றை நிகழ்த்தும் முறையிலும் வேறுபாடுடையவை. கூத்துப் பிரதிகள், கூத்தின் உட்பொருள், பாடும் முறை, நிகழ்த்தும் முறை என்பனவற்றில் இவ்வேறுபாடுகளைக் காணலாம். இவற்றை நிகழ்த்தும் சாதிகளும் வெவ்வேறானவை. சில இடங்களில் ஒரு சாதியும், சில இடங்களில் பல சாதிகளும் இணைந்து இக்கூத்துகளை நிகழ்த்துகின்றன.

தமிழ்மொழி, இந்துமதம் (கிறித்துவ மதமும் அடங்கும்) ஆகியன இவற்றினிடையே காணப்படும் பொதுத் தன்மையாகும். ஆனால் நிகழ்த்தும் முறை அந்தந்தப் பிரதேசத்தின் பண்பாடுகளுக்கேற்ப வேறுபாடுடையவை. அந்தப் பிரதேசப் பண்பாட்டை உருவாக்குவது அப்பிரதேசத்தின் பொருளாதாரமும், பண்பாடும், சுற்றுச் சூழலும் ஆகும்.

இம்மூன்று கூத்து மரபுகளையும் நுணுகி நோக்கின், ஒவ்வொன்றிற்குள்ளும் வட்டார வேறுபாடுகளும் உண்டு என்பதும் யதார்த்தமாகும். பிரதேச வேறுபாடுகள் மாத்திரமல்ல, வட்டார வேறுபாடுகளும் உண்டு என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். ஒன்றுபோலத் தோற்றம் காட்டும் கூத்துகள், பல என்பதுவே யதார்த்தம்.

தமிழகத்தில் நடக்கும் கூத்துகளில் காணப்படும் இப்பண்புகள் ஈழத்தமிழ்க் கூத்துகளிலும் உண்டு. இதில் ஓர் ஒப்பீட்டு ஆய்வு இதுவரை நிகழ்த்தப்படவில்லை. அத்தகையதொரு ஆய்வு தமிழ்க் கூத்துகளை மேலும் புரிந்துகொள்ள உதவும். இங்கே ஈழத்தமிழ்க் கூத்துகள் இவ்வகையில் நோக்கப்படுகின்றன. ஈழத்தமிழர், இலங்கைத் தமிழர் என்ற இரு சொற்பிரயோகங்கள் முக்கியமானவை. ஈழத்தமிழ்க் கூத்துப் பற்றி உரையாடும் நாம் முதலில் இந்தச் சொற்பிரயோகத்தையும் அதன் பொருளையும் வரையறுத்துக் கொள்வோம்.

## இலங்கைத் தமிழர், ஈழத்தமிழர் சொற்பிரயோகங்கள்

இலங்கைத் தமிழர், ஈழத்தமிழர் என இரண்டு சொற்றொடர்கள் அரசியல் உலகில் பாவிக்கப்படுகின்றன. இலங்கைத் தமிழர் என்கையில், அச்சொற்றொடர் இலங்கை முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழரைக் குறிப்பதாகவும், ஈழத்தமிழர் என்கையில், அச்சொற்றொடர் குறிப்பிட்ட பிரதேசங்களில் செறிந்து வாழும் தமிழ் மக்களைக் குறிப்பதாகவும் அர்த்தம் கொள்ளப்படுகிறது. ஈழத்தமிழ் எனும் சொற்பிரயோகத்திற்கும் ஒரு நீண்ட வரலாறு உண்டு. 'ஈழத்துணவு' எனச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. ஈழம் என்பது இலங்கைக்கு இன்னொரு பெயர். 'ஈழமண்டல நாடெங்கள் நாடே' எனப் பள்ளு இலக்கியம் இலங்கையை 'ஈழம்' எனக் கூறியிருக்கிறது. நமது தேசிய கீதத்திலும் கூட, 'ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி நமோ நமோ தாயே' என 'ஈழம்' வருகிறது.

1960களில் 'ஈழத்து இலக்கியம்', 'ஈழத்து நாடகம்' என இலங்கைத் தமிழருக்கான நாடகம் மற்றும் இலக்கியம் என்ற கலை - இலக்கிய இயக்கம் தன் முயற்சியை 'ஈழம்' என்ற பெயரிலேயே முன்னெடுத்தது. பின்னர் 'ஈழம்' எனும் சொல், தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் நிலப்பகுதிகளைக் குறிக்கும் சொல்லாக அர்த்தப்படுத்தப்பட்டது. அதாவது, தனிப் பிரதேசத்தைக் குறிக்கும் சொல்லாக அது பொருள் பெற்றது. சொற்களின் அர்த்தங்கள் காலந்தோறும் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப மாறிவருவது இயல்பு.

## இலங்கையும் மாகாணங்களும்

இலங்கை பல மாகாணங்களாகப் பிரித்து ஆளப்பட்டது பிற்காலத்திலாகும். மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், சப்ரகமுவ

மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் என ஒன்பது மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவீர்கள். மாகாணங்கள் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ‘பிரதேசம்’ என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியைக் குறிக்கிறது. இது பொதுவாக நிர்வாக, கலாசார அல்லது இயற்கைப் பண்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது. இது ஒரு பெரிய பகுதி.

பண்டைய அரசர்களும் பின்னர் வந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களும் தத்தம் ஆளுகை வசதிக்காகப் பிரதேசம் பிரதேசமாக நாட்டைப் பிரித்து ஆண்டனர். பிரதேசமாகப் பிரித்து ஆளுவதன் காரணத்தை நுணுகி நோக்கின், அங்கிருந்த மக்களின் வளங்களைச் சூறையாடுவதற்கும், அம்மக்களிடமிருந்து வரி வசூலிப்பதற்குமான முயற்சியாகவே அது அமைந்தது என்பதை அறியலாம்.

பல பிரதேசங்களை இணைத்து ஒரு மாகாணமாக்கும் செயலும் நடந்துள்ளது. இலங்கையில் அப்படியான மாகாணப் பிரிப்பைக் காண்கிறோம். அப்பிரதேசங்களில் வழக்கிலிருந்த பொருளாதாரமும் பண்பாடும் இப்பிரிப்பில் முக்கியத்துவம் பெற்றன.

#### வடக்கு, கிழக்கு, மத்திய, வடமேல் மாகாணங்கள்

வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களில் வாழ்ந்தோரில் பெரும்பாலானோர் தமிழரும் தமிழ் பேசும் மக்களுமாவர். வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள ஐந்து மாவட்டங்கள் — யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகியவையாகும். கிழக்கு மாகாணத்தின் கீழ் உள்ள பிரதேசங்கள் — திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகியனவாகும். மத்திய மாகாணத்தின் கீழ் உள்ள பிரதேசங்கள் — மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகியன. வடமேல் மாகாணத்தின் கீழ் உள்ள பிரதேசங்கள் — சிலாபம், புத்தளம் மற்றும் கம்பஹா ஆகியன.

இந்தப் பிரதேசங்களில் பேசப்படும் தமிழ் மொழியும், அனுஷ்டிக்கப்படும் இந்துமதமும், பின்னர் வந்த கிறித்துவ மதமும், இஸ்லாம் மதமும் ஒன்றாகக் காணப்படுவது ஓர் ஒற்றுமையாயினும், பேச்சுமொழி, பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கம் என வருகையில் சில வித்தியாசங்களும் பிரதேசங்களுக்கிடையே காணப்படுகின்றன. இவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையுமான தன்மைகளைக் கொண்டதாக இப்பிரதேசங்கள் அமைந்துள்ளன.



Image Source - raseriart.wordpress.com

### ஒற்றுமையும் வேற்றுமையும்

பண்பாட்டின் அடியாக எழுந்த கலைகளிலும், சிறப்பாக இப்பகுதிகளில் வழங்கும் கூத்துகளிலும் இப்பண்பை நாம் காணலாம். ஒற்றுமையும் வேற்றுமையும் எனும் இந்தக் கருத்து, ஈழத்துக் கூத்துகளைப் புரிந்து கொள்வதற்கான ஒரு திறவுச் சொல்லாகும். முதலில், இந்தப் பிரதேசத் தன்மைகளை விரிவாக நோக்குவோம்.

#### பிரதேசத் தன்மைகள்

இலங்கைத் தமிழர் எனக் கூறப்படும் அரசியல் உரிமைத்தன்மை உடைய தமிழ் சமூகத்திடையே, பிரதேச நிலைப்பட்ட ஒரு பன்முகப்பாடும் நிலவி வந்துள்ளது. பிரதேச நிலைப்பட்ட பன்முகப்பாடு என்ற சொற்றொடர் இங்கு முக்கியமானதாகும். இலங்கைத் தமிழ் என்னும் ஓர் அலகை ஒரு பண்பாட்டுக் கூறாக எடுத்துக்கொண்டால், அதனை நாம் பின்வரும் பிரதேசங்களாக வரையறுக்கலாம்:

1. மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டம் (மூதூர்)
2. வன்னிப் பகுதி
3. யாழ்ப்பாணம்
4. மன்னார்
5. வடமேல் மாகாணம், குறிப்பாக சிலாபம் பகுதிகள்
6. கொழும்பு
7. தென் மாகாணம்
8. மலையகம்

இவற்றுள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, திருகோணமலை, மலையகம் ஆகிய பகுதிகளிலேயே தமிழர்கள் செறிந்து வாழ்கிறார்கள். இந்த ஒவ்வொரு பிரதேசமும் தனித்துவமான கலாசாரப் பண்புகளைக் கொண்டுள்ளன.

பண்பாடு என்பதற்கு அடித்தளமாக இருப்பது மிக முக்கியமாக அந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற பொருளாதார அமைப்பும், அதன் அடித்தளமாக அமைந்துள்ள சமூக அமைப்பும் ஆகும். மொழியால் அவர்கள் ஒன்றுபட்டு இருப்பினும், பண்பாட்டால் வேறுபட்டு இருக்கிறார்கள். இந்தப் பிரதேசங்களுக்கிடையே பண்பாட்டு உறவுகளும் அரசியல் உறவுகளும் காலந்தோறும் நிலவி வந்தமையால், பிரதேசப் பண்பாடுகளுக்கிடையே கொடுத்தலும் எடுத்தலும் எனும் பண்பு நிகழ்ந்து வந்துள்ளது. இதனால், பண்பாட்டு மோதல்கள், பண்பாட்டுக் கலப்புகள், குறிப்பிட்ட சூழலில் பிரதேசப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவியிருக்கின்றன. இந்த வகையில் முதலில் ஒவ்வொரு பிரதேசப் பண்பையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

## யாழ்ப்பாணப் பிரதேசம்

யாழ்ப்பாணப் பிரதேசம் இன்றைய நிலையில் தீபகற்பத்தையும் அங்குள்ள தீவுகளையும் குறிக்கும். யாழ்ப்பாணச் சாதி அமைப்பும் அதன் அதிகார அடுக்குமுறையும் முக்கியமானதாகும்; அதற்கான பொருளியல், பண்பாட்டுக் காரணிகள் உண்டு.

யாழ்ப்பாணப் பிரதேசம் காலனித்துவத்தை எதிர்கொண்டபோது, ஆரம்பத்தில் சமூக மேலாண்மை கொண்ட பிரிவினர் தங்கள் பாரம்பரியத் தொடர்ச்சி மற்றும் பேணுகைக்குத் தேவையான அதிகாரத்தைச் சைவக் கருத்தியலின் வழியாக ஏற்படுத்திக் கொண்டனர். இந்தச் சைவ மேலாதிக்கக் கருத்துநிலை மேலாண்மை முக்கியமானது. யாழ்ப்பாணச் சமூகத்தில், இந்து மதத்தினைப் பேணும் நிலை ஒருபுறமாகவும், ஆங்கிலக் கல்வி வழியாக வந்த ஒரு தராண்மை வாதப் போக்கினைப் பேணும் நிலை இன்னொரு புறமாகவும் காணப்பட்டது.

அரசியல், பொருளாதாரப் பலம் இருந்ததன் காரணமாக யாழ்ப்பாணமே இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு சமூகமாக மாறியது. அரசியலில் இது துல்லியமாகத் தெரிந்தது. இதற்கான எதிர்ப்பு ஏனைய பிரதேசங்களில் காணப்பட்டது என்பதும் இங்கு நாங்கள் நினைவுகூரத்தக்கது. சைவக் கருத்துநிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் சமூக அடுக்கமைவு உணர்வு வலிமையுடன் இருந்தது; அங்கு சாதி இறுக்கம் பேணப்பட்டது. கத்தோலிக்கரும், புரட்டஸ்தாந்து மதம் சார்ந்தவர்களும், முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்துள்ளனர்.

யாழ்ப்பாண சமூக அமைப்பில் பொருளாதார, பண்பாட்டு தலைமை ஸ்தானம் பெற்ற வேளாளர்கள் சமூக அதிகார அடைவில் மேல்நிலை மிக்கவர்கள். இவர்களோடு கட்டுப்பட்ட சாதிகளும் இருந்தன; கட்டுப்படாத சாதிகளும் இருந்தன. அங்குள்ள சாதி அமைப்பை இவ்வாறு பார்த்தவர் கென்னத் டேவிட். கட்டுப்பட்ட சாதிகளை குடிமைகள், அடிமைகள் என இரு வகையாகப் பிரித்தனர். குடிமைகள் வேளாளர்களின் வீட்டு ஊழியம் செய்தனர்; இவர்கள் கட்டுப்பட்டவர்களாகவும், சிலர் கட்டுப்படாதவர்களாகவும் இருந்தனர். அடிமைகள் வேளாளர்களின் வயல்களிலே ஊழியம் செய்தனர். அடிமைகள் எனப்பட்ட பஞ்சமரான பள்ளர், நளவர், அம்பட்டர், பறையர், வண்ணார் எனும் சாதியினர் தீண்டத்தகாதவராகவும் வைக்கப்பட்டனர். கட்டுப்படாத சாதியினர் பொற்கொல்லர் போன்றோரும் கரையார் மற்றும் இன்னும் சில குழுக்களுமாம். இவ்வொவ்வொரு சாதிக்கும் தனித்தனிக் கோயில்களும் வழிபாட்டு முறைகளும் இருந்தன. பொதுவாக அதிகார அடைவில் மேல்நிலைச் சாதியினர் ஆகம வழிபாட்டு முறையையும், கீழ்நிலையில் இருந்த சாதியினர் ஆகம முறையில் அல்லாத வழிபாட்டு முறையையும் கைக்கொண்டனர்.

கரையோரப் பகுதியில் கத்தோலிக்கத் தாக்கத்தினால் கிறிஸ்தவம் மேலோங்கி இருந்தது. கிறிஸ்தவர்கள் மத்தியில் சாதிப் பிரிவினைகள் இருந்த போதிலும் வழிபாட்டு முறைகள் ஒன்றாக இருந்தன. நாடகமும் இச்சமூக அமைப்புக்கு விதிவிலக்காக இருக்கவில்லை. ஆங்கிலேயர் வருகையும் கல்வி வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கும் சூழல் ஏற்பட்டதுமே முக்கிய அம்சங்களாகும். எல்லோரும் கல்வி கற்று அரசு உத்தியோகம் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டதனால் சமூக அசைவியக்கத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன; அது கூத்துகளையும் தாக்கியது.

யாழ்ப்பாண சமூக அமைப்புப் பற்றி வெளிநாட்டார் நல்ல ஆய்வுகளைச் செய்துள்ளனர். முக்கியமாக மைக்கல் பாங்ஸ் சிறுப்பிட்டியை மையமாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார்; சிறுப்பிட்டி ஒரு விவசாயப் பிரதேசம். கென்னத் டேவிட் மயிலிட்டியை மையமாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார்; அது ஒரு மீன்பிடிப் பிரதேசம். பிறையன் பவ்வன் போர்ஜர் சாவகச்சேரியை மையமாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார். உள்ளூர் வாசிகளின் ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. சி. அரசரத்தினத்தின் ஆய்வுகள் யாழ்ப்பாணத்தின் விவசாயம், கைவினை, கரையோரத்

தொழில்களின் உற்பத்தி முறைகளைப் பற்றிப் பேசுகின்றன. சித்தார்த்தன் பேரின்பநாயகம் யாழ்ப்பாணத்தில் பிறந்து அமெரிக்காவில் வாழ்ந்தவர்; இவருடைய ஆய்வுகள் மேற்சொன்னோரின் ஆய்வுகளை இட்டு நிரப்புகின்றன.

இவையாவும் போருக்கு முன்னரான யாழ்ப்பாணத்தைப் பற்றிய ஆய்வுகளாகும். போருக்குப் பின்னர் இந்தச் சமூக அமைப்பில் சிறிது அசைவியக்கம் ஏற்பட்டுள்ளது. பத்மநேசன், சஹ்றாஹஸ்மி, பிரசாந் ரகுநாதன், சாரிகா திரணகம, பகீரதி ஜீவேஸ்வரா, பரம்சோதி தங்கேஸ் ஆகியோரின் ஆய்வுகள் போருக்குப் பின்னரான யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் மாற்றங்களைக் கூறும் ஆய்வுகளாகும். அண்மைக்காலமாக உள்ளூர் ஆய்வாளர்கள் யாழ்ப்பாணச் சமூக அமைப்பையும் சாதி அமைப்பையும் பற்றி ஆராயத் தொடங்கி உள்ளனர். இவை யாழ்ப்பாண சமூகத்தைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும்; அந்தப் புரிந்துகொள்ளல் யாழ்ப்பாணக் கூத்துகளையும் புரிந்துகொள்ள உதவும்.

## மன்னார்ப் பிரதேசம்

மன்னார்ப் பிரதேசத்தை வன்னிப் பகுதியின் ஓர் அங்கமாகவே கொள்ளும் போக்கு இருந்தாலும், அந்தப் பிரதேசம் தனித்துவமான பிரதேசமாகும். மன்னார் மாவட்டம் மன்னார்த்தீவு, மாதோட்டம் என்ற பெரும் பிரிவுகளைக் கொண்டது. பொருளாதாரம் என்று பார்க்கும் போது, குளங்களை மையமாகக் கொண்ட விவசாயம் — நெற்செய்கையும் கடலை அடிப்படையாகக் கொண்ட மீன்பிடிப்பும் முக்கியமானவை ஆகும். இவற்றைவிட சிறுதானியப் பயிர்ச்செய்கை, நன்னீர் மீன்பிடி, வியாபாரம், சிறு கைத்தொழில் போன்றவற்றையும் குறிப்பிடலாம். பொருளாதாரப் பலம் — வேளாண்மையைப் பொறுத்தவரை வெள்ளாளர், கரையார், கடையர் மற்றும் ஏனைய சமூகங்களிடமும் இருந்தது; மீன்பிடியைப் பொறுத்தவரை பிரதானமாக பரதவர், திமிலர், முக்குவர், கரையார் ஆகிய சமூகங்களைச் சார்ந்தவர்களிடம் இருந்தது.

சாதி அடிப்படையில்தான் கிராமங்கள் தொடக்கத்திலிருந்தே அமைக்கப்பட்டிருந்தன. அதேவேளை, இரு சமூகத்தினர் அல்லது அதற்கு மேற்பட்ட சமூகத்தினர் கூடிவாழும் நிலையையும் காணலாம். அந்தவகையில், ஓரூரில் ஒரு சமூகத்தினர் மட்டும் வாழும் நிலையையும், ஓரூரில் இரு சமூகங்கள் வாழும் நிலையையும், ஓரூரில் பல சமூகங்கள் வாழும் பாங்கினையும் காணலாம்.

அவ்வகையில் கத்தோலிக்க மக்களைப் பொறுத்தவரையில், ஓரூரில் ஒரு சமூகத்தினர் அரங்கேற்றும் நாடகங்கள் உள்ளன. உதாரணமாக, மழுவராயன் கட்டையடம்பனில் ‘சந்தொம்மையார் வாசகப்பா’வினை ஒரு குறிப்பிட்ட சாதியினரும், முருங்கன் பள்ளக்கமத்தில் ‘புனித சந்தியோகுமையோர்’ நாடகத்தைக் குறிப்பிட்ட இன்னொரு சாதியினரும், கற்கடந்தகுளத்தில் ‘சற்பிரசாத வாசாப்பை’ இன்னொரு சாதியினரும் அரங்கேற்றுவர்.

ஓரூரில் இரு சாதியினரும் இணைந்து, சேர்ந்து அரங்கேற்றுகின்றனர். உதாரணமாக, கட்டைக்காட்டில் வேளாளரும் கரையாரும் சேர்ந்து அரங்கேற்றும் புனித செபஸ்தியார் நாடகத்தினைக் கூறலாம். ஒரே சமூகத்தைச் சார்ந்த பல ஊர்களைச் சார்ந்தவர்கள் ‘சாதி நாடகமாக’ நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். உதாரணமாக, கட்டைக்காட்டில் ‘என்றிக்கு எம்பரதோர்’ நாடகத்தை வேளாளர் சமூகத்தினரும், முருங்கன் கமத்தில் ‘புனித சந்தியோகுமையோர்’ நாடகத்தை வண்ணார் சமூகத்தினரும், சுண்டிக்குளியில் ‘சந்திரகாசன்’ நாடகத்தை கரையார் சமூகத்தினரும், அடம்பொன்தாழ்வில் ‘இம்மானுவேல்’ நாடகத்தை கடையர் சமூகத்தினரும் மேடையேற்றுகின்றனர்.

சாதி அமைப்பு தனித்துவத்துடனும், அதேவேளை மிகவும் நெகிழ்ச்சித் தன்மையுடனும் இருப்பதை மன்னார் மாதோட்டத்தில் அவதானிக்கலாம். முன்பு, இச்சமூகங்களின் — அதாவது கத்தோலிக்கரிடையே — ஞானப்பெற்றோரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் தங்கள் சமூகங்களைச் சார்ந்தவர்களை விடுத்து, ஏனைய சமூகத்தவர்களை மதித்து அவர்களை ஞானப்பெற்றோராகத் தெரிவு செய்வதை சாதாரணமாகப் பார்க்கலாம். இது சமூகங்களிடையே பெரும் புரிந்துணர்வையும், ஊடாட்டத்தையும், உறவையும் நிறையவே வளர்த்திருக்கிறது. இப்போது இதில் எந்தளவிற்கு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றால், சமூகங்களிடையே காதல் திருமணங்களை அங்கீகரித்து, சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் நிலைமையும் உருவாகி இருப்பது, இச்சமூகங்களிடையே உள்ள நெகிழ்ச்சித் தன்மையினைச் சுட்டிக்காட்டுகிறது.

இங்கு வாழும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களும், இந்துக்களும், முஸ்லிம்களும் ஏறத்தாழ சம முக்கியத்துவம் உடையவர்களாக இருந்து வந்துள்ளனர். கத்தோலிக்கத் தமிழர் பண்பாடு அங்கு மேலோங்கியுள்ளது. இந்தப் பண்பாடு சைவப் பண்பாட்டிற்கும் இடம் கொடுத்தது.

மன்னாரில் முஸ்லிம்கள் எருக்கலம்பிட்டி, தராபுரம், புதுக்குடியிருப்பு, மன்னார் நகரம், முசலி, சிலாபத்துறை, பெரியமடு, விடத்தல்தீவு போன்ற பகுதிகளில் நீண்டகாலமாக முதன்மையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

மன்னார் பகுதியின் சமூக அமைப்பு யாழ்ப்பாணப் பகுதியின் சமூக அமைப்பிலிருந்து வித்தியாசமானது. ஆரம்பத்தில் இங்கு இந்திய, முக்கியமாக தமிழ்நாட்டின் நிலமானிய அமைப்பின் பிரதான பண்பான சாதி நிலமானிய அமைப்பு இருந்தது. திருக்கேதீஸ்வரம் கோயில் இதற்கு மத்திய ஸ்தானமாக இருந்தது. எனினும், மீன்பிடித் தொழிலைக் கொண்ட மக்கள் இங்கு அதிகம் வாழ்வதனாலும், இஸ்லாமியர் அங்கு இருப்பதனாலும், கிறிஸ்தவ மதத்தின் தாக்கத்தினாலும், கிறிஸ்தவர்கள் அதிகமாக இங்கு வாழ்வதாலும், அச்சமூக அமைப்பின் பண்பாடு தனித்துவமாய் உள்ளது. கிறிஸ்தவம் அடிநிலை மக்களையும் ஈர்த்து, அவர்களுக்கு இடம் கொடுத்தது. இதனால், அடிநிலை மக்கள் பெருவாரியாக கிறிஸ்தவக் குருமாராக வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கிறிஸ்தவக் கருத்துகளைக் கொண்ட கூத்துகள் மன்னார் பகுதியில் பிரசித்தமானவை.

மன்னார் சமூக அமைப்புப் பற்றிய ஆய்வுகள் அதிகம் வெளிவரவில்லை; எனினும், டொமினிக் எஸ்லருடைய கலாநிதிப்பட்ட ஆய்வு முக்கியமானது. 'கிராமம், சாதி, கத்தோலிக்க மதம்' என்ற தலைப்பில் வெளிவந்த அவரது கலாநிதிப்பட்ட ஆய்வு, வட்டகண்டல் கிராமத்தில் வாழும் கடையர் எனும் சாதியினரை மையமாக வைத்து எழுதப்பட்டதாகும். இத்தகைய சமூக ஆய்வுகள், மன்னார் கூத்துகளைப் புரிந்துகொள்ள உதவும்.

### மட்டக்களப்புப் பிரதேசம்

மட்டக்களப்புச் சமூக அமைப்பு, முக்கியமாக அதன் சமூக ஒழுங்கமைப்பும், சாதி அமைப்பும், பழக்கவழக்கங்களும் சில வகையில் யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதி அமைப்பிலிருந்தும், பழக்கவழக்கங்களிலிருந்தும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றன என்று அந்தச் சமூகத்தை ஆராய்ந்த மானிடவியலாளர்கள் கூறியுள்ளனர்.

வரலாற்று ரீதியாக, இது நீண்டகாலம் கண்டியர் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்தது; எனினும், சுய ஆதிக்கம் உடைய ஆட்சியும் அங்கு நிலவியிருந்தது. மட்டக்களப்பின் இந்து சமய முறை, யாழ்ப்பாணத்தைப் போல வரன்முறைப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. மட்டக்களப்பில் முக்குவர் நில ஆதிக்கம் உடையோராக விளங்குகின்றனர். நிலம் எல்லோருக்கும் இருந்தது; இதனால், யாழ்ப்பாணம் போல அடிமை - குடிமை முறை அங்கு அழுத்தம் பெறவில்லை. சூழல் இதற்குக் காரணமாக இருந்தது.

சமஸ்கிருதமயப்பாடு மட்டக்களப்பில் குறைவு; இதனால் ஆகம முறை அங்கு முக்கியமாக இல்லை. வருடாவருடம் ஆர்ப்பாட்டமாக நடைபெறும் கோவில் சடங்குகள், தெய்வ உருக்கொண்டாடுதல், அதற்கு ஓதப்படும் மந்திரங்கள், பத்ததி முறையிலான வழிபாடு என்பன, ஏனைய பிரதேசங்களை விட வித்தியாசமானவை. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில் வீரசைவ மரபின்படி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் வருடந்தோறும் இந்து மதம் சார்ந்த கோவில்களில் நடைபெறும் சடங்குமுறைகள், வெளியிலிருந்து பார்ப்போருக்கு வியப்பை ஏற்படுத்தக் கூடியவை. மட்டக்களப்பு சோழர் ஆட்சியின் கீழ் இருந்தமையினால், அதன் எச்சச்சொச்சங்களாக இங்கு சில ஆகமக் கோயில்களும், சோழர் நிலமானியத்தை ஒட்டிய சாதி - சமூக அமைப்பும் உண்டாகின. முக்குவச் சட்டம் சொத்துரிமை சம்பந்தமாக முக்கியத்துவம் உடையது; எனினும், இப்போது அது வழக்கில் இல்லை.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் சமூக அமைப்பு முறை ஒரு வகையில் வன்னியைப் போன்றதாயினும், மட்டக்களப்பில் மேலாண்மை வகுப்பினர் வேளாளரும், முக்குவரும், சீர்பாதக்காரரும், கரையாரும் ஆவர். மட்டக்களப்புக்கு 'முக்குவதேசம்' என்ற பெயரும் உண்டு. இங்கே முக்குவர், வேளாளர், சீர்பாதக்காரர் ஆகிய மூன்று வகுப்பினரும் பெரும்பாலும் நில உடைமையாளர்களாக உள்ளனர்.

நிலமானிய முறையில் அமைந்த விவசாயம் இங்கு பிரதான தொழில்; அதனுடன் மீன்பிடித்தலும், கால்நடை வளர்ப்பும் அடுத்து முக்கியமான தொழில்களாகும். உயர் நிலையில் உள்ள வேளாளர், முக்குவர், சீர்பாதக்காரர் ஆகியோர் தம் வயல்களில் தாமே வேலை செய்தலும், ஆட்களை வைத்து வேலை செய்தலும் உண்டு.

போடியார், முல்லைக்காரன், வேலையாள் எனும் பதங்கள் முக்கியமானவை. போடியார் பெருநில உடைமையாளர்; முல்லைக்காரன், போடியார் நியமிக்கும் வயல் மேற்பார்வையாளர்; வேலையாள், அந்த வயலில் வேலை செய்பவர். கிடைக்கும் வருமானம், அதாவது அறுவடை, பங்கிடப்படும் முறை முக்கியமானது. நில உடைமையாளரான போடியாருக்குப் பெரும் பங்கும், அதனிலும் சிறிய பங்கு முல்லைக்காரனுக்கும், அதனிலும் மிகச் சிறிய பங்கு வேலையாட்களுக்கும் பங்கிடப்படும்.

இப்பங்கீட்டுத் தன்மை சுரண்டல் மிகுந்தது.

ஒரு சாதிக்குள்ளேயே போடியார், முல்லைக்காரன், வேலையாள் இருப்பர். யாழ்ப்பாணத்தைப் போன்று அடிமை - குடிமை முறை இங்கு இல்லை; எனினும், பறையர், அம்பட்டர், வண்ணார் என்ற குடிமக்கள், கிராமங்களில் மேல்நிலைச் சாதியினருக்கு ஊழியம் செய்யும் குடிகளாக இருந்துள்ளனர். இப்போது அது வெகுவாகக் குறைந்து விட்டது — ஏன், இல்லை என்றே கூறலாம். எனினும், இவர்களுள் அடிநிலை மக்களும் வயல்நிலங்களை உடையவர்களாகவும், வயல் செய்பவர்களாகவும் இருத்தல் குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் இப்பிரதேசம் அதிக தூரத்தில் இருந்தமையினாலும், பிரதேசப் பண்பாடு வேரூன்றி இருந்ததனாலும், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பிராமணியத் தாக்கம் மட்டக்களப்பில் அதிகம் ஏற்பட வாய்ப்பு இருக்கவில்லை.

மட்டக்களப்பு பிரதேசத்தின் மிகப் பிரதானமான அம்சம் அங்கு பாரம்பரிய முஸ்லிம்கள் நிலைகொண்டுள்ளதுதான். அவர்களும் தமக்குரிய பாரம்பரியப் பண்பாடுகளை உடையவர்கள். இது கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கேயுரிய ஒரு தனித்துவமாகும். இங்கு முஸ்லிம்களும் நில உடைமையாளர்களாக உள்ளனர். இது மட்டக்களப்பின் கலாசாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம் மக்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் மிறாவோடை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய இடங்களிலும், கல்முனைப் பிரதேசத்தில் மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய இடங்களிலும், அம்பாறை மாவட்டத்திலும் செறிவாக வாழ்கின்றனர். ஒரு காலத்தில் இவர்களிடையேயும் இஸ்லாமியக் கருப்பொருள்களை மையமாகக் கொண்ட கூத்து மரபுகள் இருந்துள்ளன என அறிகிறோம். இங்குள்ள முஸ்லிம்கள் விவசாயத்தைத் தளமாகக் கொண்டவர்கள்; ஆதலால் தமிழர்களோடு பிணைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பின் சமூக வரலாறு முழுமையாக இன்னும் எழுதப்படவில்லை. மட்டக்களப்பின் சமூக அமைப்பைப் பற்றிய வெளிநாட்டவர்களின் ஆய்வுகள் முக்கியமானவை. முக்கியமாக டெனிஸ் மெக்கில்ரே, விற்றக்கர், பற்றிசியா லோரன்ஸ் போன்றோரின் ஆய்வுகள் மட்டக்களப்புச் சமூகத்தையும் சடங்குகளையும் புரிந்துகொள்ள உதவும். உள்ளூர்க்காரர்களும் சமூகவியல் துறையில் சில ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

## திருகோணமலை மாவட்டம்

திருகோணமலை முக்கியமான ஓர் இடம் எனினும், அதனுடைய வரலாறும் இன்னும் முழுமையாக எழுதப்படவில்லை. திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், தம்பலகாமம் ஆகிய பகுதிகள் சோழர் ஆட்சியில் முக்கியத்துவம் பெற்ற இடங்களாகும். மட்டக்களப்பின் தென்பகுதியும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களும், திருகோணமலை மாவட்டமும் 1970 முதல் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டன. திருகோணமலைப் பகுதி இரண்டு பெரும் பிரதேசங்களின் தாக்கத்திற்குட்பட்டது எனலாம். திருகோணமலையின் வடபகுதியில் யாழ்ப்பாணப் பண்பாட்டுத் தாக்கத்தையும், திருகோணமலையின் தென்பகுதியில் மட்டக்களப்புப் பண்பாட்டுத் தாக்கத்தையும் காணலாம். திருகோணமலையின் தென்பகுதியில், அதாவது மூதூர், சம்பூர், சேனையூர், ஆலங்கேணி, கிளிவெட்டி, தம்பலகாமம் ஆகிய பகுதிகளில், மட்டக்களப்பில் நடைபெறுவது போல ஆகமம் சாரா வழிபாட்டு அம்சங்கள் காணப்படுகின்றன. கூத்துகளும் இப்பகுதிகளில் தான் ஆடப்பட்டுள்ளன.

## வன்னிப் பிரதேசம்

வன்னிப் பிரதேசம், நில அமைப்புக் காரணமாகவும் தொடர்புக் குறைவுகளின் காரணமாகவும், தனித்தனிக் கிராமங்களாகவும் குடியிருப்புத் தொகுதிகளாகவும் இயங்கும் நிலையில் இருந்தது. யாழ்ப்பாணத்தைப் போன்ற ஒரு சாதி அமைப்பு இங்கு நிலவுகிறதாயினும், அது நெகிழ்வுத் தன்மையுடையது. ஆகம முறைக் கோவில்களின் செல்வாக்கு இங்கு குறைவு. கிராமியத் தெய்வ வழிபாடு இதன் பிரதான அம்சமாகும். வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் இங்கு முக்கியமானது. அதனை மையமாகக் கொண்டு கோவலன் கூத்து இங்கு நிகழ்த்தப்படுகிறது.

### வடமேல் மாகாணம்

வடமேல் மாகாணப் பிரதேசத்தில் — புத்தளம், சிலாபம் தொடக்கம் நீர் கொழும்பு வரை — தமிழர்கள் முக்கிய இனக்குழுமமாக வாழ்ந்திருக்கிறார்கள். பின்னர், இந்தக் குடியிருப்புகள் சிங்களம் பேசும் பகுதிகளாக மாறின என கூறுவர். சிலாபத்தில் அமைந்துள்ள முன்னேஸ்வரம், இலங்கையில் உள்ள பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று என்பர். இக்கோவிலை மையமாகக் கொண்டு ஆகம முறையிலான வழிபாடுகள் கொண்ட பண்பாடு அங்கு உருவாகியது. இக்கோவில் முன்றலில் பண்டைக் கூத்துகள் ஆடப்பட்டதாக அறிகிறோம். புத்தளம் - சிலாபம் பகுதியில் இந்துப் பண்பாட்டின் திரௌபதி வணக்கம் மிக முக்கியமானதாகும். அதன் வழிபாட்டு முறை

தனித்துவமானது. மட்டக்களப்பிலும் திரௌபதி வழிபாடு உண்டு. இந்த இரண்டு திரௌபதி வழிபாடுகள் பற்றி இன்னும் ஆராயப்படவில்லை.

## மலையகம்

தமிழர்கள் பரந்து விரிந்து வாழும் இன்னொரு முக்கியமான பகுதி மலையகமாகும். தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்காக இவர்கள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டவர்கள்; ஆயினும், அதற்கு முன்னரேயே வந்து சேர்ந்த இந்திய வம்சாவளியினரும் உண்டு என்பர். பெரும்பாலும் இராமநாதபுர மாவட்டத்திலிருந்து ஆசைகாட்டி அழைத்துவரப்பட்ட இவர்கள், சாதி ரீதியான பிரிவுகளை உடையவர்கள். பெரும்பாலும் இச்சாதிப் பிரிவினைகளை குடியிருப்புகள் தோறும், மலைகள் தோறும் காணலாம். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையைப் பின்னணியாகக் கொண்ட பொருளியல் அமைப்பும் பிரிவுகளும் இவர்களுடைய பண்பாட்டை நிர்ணயிக்கும் காரணிகளாக உள்ளன.

மலையகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் இலங்கைத் தமிழர் என்ற வகைப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதில்லை. ‘இலங்கைத் தமிழர்’ என்ற பதம் இலங்கையின் பாரம்பரிய தமிழ்க் குடிகளுக்குரியதொன்று. இவர்களை ‘பெருந்தோட்டத் தமிழர்கள்’ என்று குறிப்பிடும் வழக்கம் இருந்தது. 1950களின் பின் இவர்கள் தங்களை ‘மலையகத் தமிழர்கள்’ என்று குறிப்பிடத் தொடங்கினர். இலங்கையின் மத்திய பிரதேசங்களான கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் இவர்கள் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். 1960களில் ஏற்பட்ட கலவரங்கள், பஞ்சம், ஆகியன காரணமாக கணிசமான மலையகத் தமிழர்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் குடியேறினர். குறிப்பாக வன்னிப் பகுதிக்கு அவர்கள் சென்றனர். அவ்வவ் பிரதேசத் தமிழர் வாழ்க்கையுடன் அவர்கள் வாழ்வும் பண்பாடும் இணைக்கப்பட்டன என்பார் சிவத்தம்பி. காமன் கூத்து, பொன்னர் - சங்கர் போன்ற மலையக நாடகங்களை அவர்கள் அந்தப் பகுதிகளில் அரங்கேற்றியதாக தகவல்கள் கிடைக்கவில்லை.

மலையகத் தமிழரைப் பற்றி நிறைய ஆய்வுகள் வெளிவந்துள்ளன. வெளிநாட்டவரும் உள்நாட்டவரும் இத்தமிழ்ச் சமூக அமைப்பைப் பற்றி நிறையவே ஆராய்ந்துள்ளனர். அண்மைக்காலத்தில் மலையகத்திலிருந்து உருவான இளம் ஆய்வறிவாளர்கள் மிகச் சிறப்பான ஆய்வுகளைச் செய்துள்ளனர். இந்த ஆய்வுகளையும், பிரதேசங்களின் அகப் பின்னணிகளையும் புரிந்துகொண்டால்தான் அங்கு எழுந்த கூத்துகளையும் புரிந்துகொள்ளலாம். முதலில் கூத்துகளையும் அவை ஆடப்படும் பிரதேசங்களையும் அறிந்துகொள்வோம்.

## பிரதேசங்களும் கூத்து வகைகளும்

**யாழ்ப்பாணப் பிரதேசம்**

1. தென்மோடிக் கூத்துகள்
2. வடமோடிக் கூத்துகள்
3. காத்தான் கூத்து
4. வசந்தன் கூத்து
5. கிறிஸ்தவ தென்மோடிக் கூத்து
6. நாட்டுக் கூத்து

**மட்டக்களப்புத் தமிழர் பிரதேசம்**

1. பறைமேளக் கூத்து
2. வசந்தன் கூத்து
3. மகிடிக் கூத்து
4. தென்மோடிக் கூத்து
5. வடமோடிக் கூத்து

**வன்னித் தமிழர் பிரதேசம்**

1. காத்தான் கூத்து
2. கோவலன் கூத்து
3. மகுடிக் கூத்து
4. குடமுதல் கூத்து
5. தென்மோடிக் கூத்து
6. கிறிஸ்தவப் பாரம்பரியத் தென்மோடிக் கூத்து

**மன்னார் - சிலாபத் தமிழர் பிரதேசங்கள்**

1. கிறிஸ்தவப் பாரம்பரியத் தென்மோடிக் கூத்து
2. வடமோடிக் கூத்து
3. வாசாப்பு

**மலையகத் தமிழர் பிரதேசம்**

1. காமன் கூத்து
2. அர்ஜுனன் தபசு
3. பொன்னர் - சங்கர்

இந்தக் கூத்துகளில் முழுமையான பிரதியும், ஆடல் - பாடல் வடிவமும், மேடையமைப்பும் கொண்டவை வடமோடி, தென்மோடி, வாசாப்பு என வகைப்படுத்தப்பட்ட கூத்துகளே. இவற்றைப் பற்றிய ஒரு விரிவான பார்வை அவசியம். அப்போதுதான் இவற்றின் தனித்துவங்களையும், அவற்றிற்கிடையே காணப்படும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் புரிந்துகொள்ள முடியும். அதனை அடுத்த கட்டுரையில் நோக்குவோம்.




**எம். எம். ஜெயசீலன்**

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.


# மலையகத்தின் போராட்ட எழுச்சியும் தியாகிகளின் வரலாற்று எழுதுகையும்: மாத்தளை ரோகிணியின் உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள் நூலை முன்வைத்து

ஒரு சமூகத்தின் வரலாறு பற்றிய நோக்கு, அச்சமூகத்தினரிடையே தன்னம்பிக்கையையும் உறுதியையும் விதைக்க வேண்டும். அதிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவரும் சமூகமொன்றின் வரலாறானது, அச்சமூகத்தின் எழுச்சிக்கும் விடுதலைக்கும் வலுவூட்டும் வகையில் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமாகும். ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த போராட்டங்கள், போராட்டக் களங்களைக் கண்டவர்களின் துணிவு, போராட்டங்களில் மடிந்தவர்களின் வீர வாழ்வு, போராட்டங்களால் அடைந்த வெற்றி முதலானவை பற்றிய செய்திகள் ஆதிக்கத் தகர்ப்புக்கான தூண்டலையும் வலுவையும் வழங்குகின்றன. அதனாலேயே ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த போராட்டங்களையும் போராட்டங்களில் உயிர் நீத்தவர்களையும் நினைவுகூரும் நிகழ்வுகள் உலகெங்கும் இடம்பெற்று வருகின்றன. அவை மடிந்த செயற்பாட்டாளர்களைப் புனிதப்படுத்துவதை - மேல்நிலைப்படுத்துவதை - மட்டுமன்றி அத்தகைய தியாகிகளை - அத்தகைய போராட்டங்களை மறுவுற்பத்தி செய்வதையும் போராட்டக் கனலைத் தொடர்ந்தும் தக்கவைப்பதையும் நிறைவேற்றுகின்றன. சான்றாக, முதலாம் உகல மகாயுத்த காலத்தில் பாரதி மொழிபெயர்த்த ‘செர்வியாவின் வீரக் கதைப்பாடல்கள்’ என்ற பகுதியில் இடம்பெறும்,

“நெஞ்சுருக்கும் இக்கதைகளை வாசிக்கும் ஸ்லாவ் குழந்தை தன் மூதாதையரின் பராக்கிரமங்களை அறிகிறது. செர்வியாவை விடுவித்தவரின் பெயர் அக்குழந்தையின் அடிநாள் ஞாபகங்களிலும் பதிந்துவிடுகிறது. இவ்வாறு உரமூட்டப்பட்ட ஒரு ஜனக்கூட்டம் எக்காலத்தும் அடிமைத்தனத்தில் உழலவியலாது.” (வேங்கடாசலபதி, 2020: 87)

என்ற விவரிப்பை எடுத்துக்காட்டலாம். ஒரு சமூகத்தின் விடுதலையில் அக்குழுமத்தின் கடந்தகாலப் போராட்ட வாழ்வு பற்றிய வரலாறு பெறும் முக்கியத்துவம் இங்கு உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, இந்திய விடுதலைப் போராட்டக் களத்தில் பெரும் ஆகர்ஷிப்பைப் பெற்றிருந்த இத்தாலிய விடுதலை வீரனான மாஜினி, தன் சங்கத்தில் இணைபவர்களுக்காக உருவாக்கிய சத்தியப்பிரமாணத்தில் இத்தாலிய விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கும் முதன்மை அளித்துள்ளான். அப்பகுதியைப் பாரதி,

“... தாய்த்திரு நாட்டின்

பணிக்கெனப் பல்விதத் துழன்ற

வீரர், நந் நாடு வாழ்கென வீழ்ந்த

விழுமியோர் திருப்பெய ராணை”

எனப் பாடலாக்கம் செய்துள்ளார். மாஜினியின் சபதத்தை ஆங்கிலவழி நேரடி மொழிபெயர்ப்பை மேற்கொண்டுள்ள தொ.மு.சி. ரகுநாதன், “கடவுளின் பெயராலும் இத்தாலியின் பெயராலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கொடுங்கோலாட்சியின் கீழ் புனிதமான இத்தாலிய லட்சியத்துக்காக உயிர்த்தியாகம் செய்த தியாகிகள் அனைவரின் பெயராலும்...” (2015: 360) என அப்பகுதியைத் தமிழாக்கம் செய்துள்ளார். இவை ஒடுக்குமுறைக்கு உள்ளான சமூகமொன்றின் விடுதலைக்கான எழுச்சியில், அச்சமூகத்தின் போராட்ட வரலாறும் போராட்டத்தில் மடிந்தவர்களின் வரலாறும் வலுவான தாக்கம் செலுத்துவதை வெளிப்படுத்தி நிற்கின்றன. அதனாலேயே குறிப்பிட்ட இனத்தில், சமூகக் குழுமத்தில், வர்க்கத்தில் ஆதிக்கத் தகர்ப்புக்கான போராட்டங்கள் இடம்பெறுகின்ற காலத்தில், அக்குறிப்பிட்ட குழுவின் கடந்தகால வீர வாழ்வு, வீரர்களின் துணிவு, அவர்களின் வெற்றி, தியாகம் முதலானவை நினைவுகொள்ளப்படுதலும் மக்கள்மயப்படுத்தலும் அதிகமாக இடம்பெறுகின்றன. அதேவேளை, ஆதிக்கச் சக்திகளும் தம் தரப்பை நியாயப்படுத்தும், தம் ஆதிக்கத்தை இயல்பாக்கம் செய்யும் வரலாறுகளை உண்மைகளிலிருந்தும் புனைவுகளிலிருந்தும் கட்டியெழுப்பும் செயற்பாடுகளைத் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுத்து வந்துள்ளன - வருகின்றன. அதனால் அவற்றைக் கட்டுடைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தலும் ஆதிக்கத் தகர்ப்புக்கு அவசியமானதாகும்.

இரு நூற்றாண்டுகள் நிறைவடைந்து மூன்றாம் நூற்றாண்டின் விடியலில் கால் பதித்துள்ள மலையகத் தமிழர், காலனியம் உருவாக்கிய பெருந்தோட்டக் கட்டமைப்பின் சுரண்டலிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் இன்னும் முழுமையாக விடுதலை பெறவில்லை. அத்துடன் நாடு சுதந்திரமடைய முன்னரிலிருந்தே வளர்ச்சியடையத் தொடங்கிய இன மற்றும் வர்க்க மேலாதிக்கச் செயற்பாடுகளால் அம்மக்கள் தொடர்ந்தும் தீவிர பாதிப்புக்கு உள்ளாகி வந்துள்ளனர். அவர்களின் போராட்ட வாழ்வு மிக நெடியதாகும். அவர்கள் அனுபவிக்கும் அடிப்படை மனித உரிமைகளுள் அநேகமானவை போராட்டங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும். வளையலணிவதற்குக்கூட அம்மக்கள் போராட வேண்டியிருந்துள்ளது (யட்டியந்தோட்டை -

ஹல்கொல்ல குரூப் போராட்டம் - 1952). இருப்பினும், காலனிய வரலாறுகளும் தேசிய வரலாறுகளும் அம்மக்களை இரண்டாம் நிலைப்படுத்தும் வரலாற்று எழுதுகையினையே முதன்மைப்படுத்தியுள்ளன. மலையகத்திலிருந்து வெளிவந்துள்ள வரலாறுகளுள் பெரும்பாலானவையும் அம்மக்களின் இருப்பினை நியாயப்படுத்தும், அதற்கான போராட்டங்களை வலுப்படுத்தும் நோக்கிற்குப் போதிய அழுத்தம் கொடுக்கவில்லை.

மலையகத் தமிழரை வெறும் கூலிகளாக, பஞ்சப் பராரிகளாக வகைப்படுத்தி, அவர்களின் வரலாற்றை விளிம்புநிலை மக்கள் வரலாறாகவும் மாற்றமுறாத தேக்கநிலைச் சமூக வரலாறாகவும் எழுதும் தன்மை மிகுந்துள்ளது. அவ்வரலாறுகள் அம்மக்களின் உழைப்பையும் உருவாக்கங்களையும் கவனத்தில்கொள்ளாது நலிவடைந்த ஒரு சமூகப்பிரிவினரின் வரலாறு என்ற பக்கத்தையே அழுத்தமாகத் தூக்கிப்பிடித்துள்ளன. அவை அச்சமூகத்தின் எழுச்சியையும் தன்னம்பிக்கையையும் பலவீனப்படுத்தி, தம்மைத்தாமே இரண்டாம்நிலைப் பிரஜையாக உணரத் தள்ளுவதோடு தமது சமூக அடையாளங்களை மறுதலித்து ஏனைய இனங்களுடன் ஒன்றுகலக்க முனையவும் தூண்டுகோலாக அமைகின்றன. அதனால், இச்சிதைவிலிருந்து மீளும் வரலாறுகள் அவசியப்படுகின்றன. அத்தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்வதாக மாத்தளை ரோகிணியின் ‘உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்’ என்ற நூல் அமைந்துள்ளது.

மாத்தளை ரோகிணி என அறியப்படும் திரு. ஐயாத்துரை அவர்களுக்கு மலையகத் தமிழர் வரலாற்றிலும் இலங்கை வரலாற்றிலும் தனித்துவமானதோர் இடமுண்டு. ஒரு தொழிலாளியாக இருந்து, அத்தொழிலாளர் குழுவிற்குத் தலைமை தாங்கும் தொழிற்சங்கத்துக்குத் தலைவராக உயர்ந்த சிறப்புக்குரியவர், அவர். தொழிற்சங்கவாதியாக இயங்கிய காலத்திலும் அரசியல்வாதியாகப் பரிணமித்த காலத்திலும் கொள்கைப் பற்றுடன் அவர் செயலாற்றி இருப்பதை அவதானிக்க முடிகிறது. இத்தனைக்கும் மேலாக அவர் ஒரு மக்கள் படைப்பாளியாகவும் ஆய்வாளராகவும் பயணித்துள்ளார். அவரின் பங்களிப்புகளுள் முக்கியமானதொன்றாக, ‘உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்’ என்ற நூல் விளங்குகிறது. அந்நூலே மலையகத்தில் இடம்பெற்ற உரிமைப் போராட்டங்களில் உயிர் நீத்தவர்களின் அடிப்படையான செய்திகளை முதன்முதல் விரிவாகத் திரட்டித் தந்துள்ளது. அதனைத் தவிர்த்துவிட்டு, அல்லது அந்நூலின் துணை இல்லாமல் மலையகப் போராட்டங்களில் உயிர் நீத்த தியாகிகள் பற்றிப் பேச முடியாதுள்ளது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாவலி இதழில் எழுதப்பட்ட சில தொடர்களே பின்னர் விரிவாக்கப்பட்டு, ‘உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்’ என சென்னை இளவழகன் பதிப்பகத்தால் 1993 ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நூல் வெளிவந்து மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் இப்போது (2025) மறுபதிப்புப் பெற்றுள்ளது. இதனை இரா. இராஜாராம் புதிய செய்திகளையும் இணைத்து வெளிக்கொணர்ந்துள்ளார். அல்டோரி தோட்டத்தில் தோட்டத்துரைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தில் பங்குபற்றியுள்ள அவர், மலையக மக்கள் முன்னணியில் இயங்கிய காலத்தில் அரசியல் கைதியாகச் சிறையிலடைக்கப்பட்டு, பின்னர் விடுதலை பெற்றவராவார். அவரின் இம்மறுபதிப்பு முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

‘மலையகப் போராட்டத் தியாகிகளின் வரலாறு’ தொடக்கம் ‘1977ம் ஆண்டில் காணி சுவீகரிப்பின் விளைவாக எழுந்த போராட்டம்’ வரை பதினேழு உபதலைப்புகளில் பதினாறு போராட்டங்கள் பற்றியும் அப்போராட்டங்களில் உயிரிழப்புகள் இடம்பெற்றவாற்றையும் மாத்தளை ரோகிணி அவர்கள் ஆவணப்படுத்தியுள்ளார். தொழிற்சங்க நிர்வாகி என்றவகையில் சில போராட்டங்களில் அவர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார். அவர் பதிவு செய்துள்ள போராட்டங்களையும் உயிர் இழப்புகளையும் அவதானிக்கின்றபோது, துரைத்தன அடக்குமுறைகளை எதிர்த்தல், சம்பள உயர்வு கோருதல், காணிச் சுவீகரிப்பினை எதிர்த்தல், தொழிற்சங்கத்தை ஸ்தாபித்தல், மாற்றுத் தொழிற்சங்கங்களை உருவாக்குதல், மொழி உரிமை, பிரசவத்திற்கு வாகனம் மறுக்கப்பட்டமையை எதிர்த்தல் முதலானவற்றுக்காகப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன் அத்தகைய போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் போராட்டக் களத்தில் இருந்தவர்களும் சிறுவர்களும் ஆதிக்கத் தரப்பினால் கொல்லப்பட்டுள்ளதையும் கண்டுகொள்ள முடிகிறது.

ரோகிணி அவர்கள் நூலின் தொடக்கத்திலேயே, “1940ம் ஆண்டு முதல் எழுதப்பட்ட இந்த வீரப்போராட்ட வரலாற்றில் ஒருசிலரின் விபரங்களைப் பெறமுடியாமற் போய்விட்டது” எனக் குறிப்பிட்டுள்ளதுடன் அவ்வாறு விவரங்களைப் பெறமுடியாமற்போன போராட்ட நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார் (எட்டு நிகழ்வுகள்). அவற்றுள் ஒரு சம்பவம் குறித்த தகவலையும் (1942 ஆம் ஆண்டு புப்புரஸ்ஸ கந்தா தோட்டப் போராட்டத்தில் உயிர்நீத்த வீராசாமி,

வேலாயுதம்) அவற்றுள் உள்ளடங்காத மூன்று புதிய நிகழ்வுகளின் தகவல்களையும் இணைத்து இராஜாராம் இந்நூலை விரிவாக்கியுள்ளார்.

ரோகிணி அவர்களின் நோக்கிலிருந்தும் எடுத்துரைப்பிலிருந்தும் இராஜாராமின் நோக்கும் எடுத்துரைப்பும் வேறுபட்டுள்ளன. ரோகிணி தனிமனிதனை முன்நிறுத்தியதாக போராட்டங்களை அணுகவில்லை. அவர் இட்டுள்ள எந்தத் தலைப்பிலும் போராட்டத்தில் உயிர்நீத்த தனிநபர்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. இராஜாராம் சேர்த்துள்ள பகுதிகள் தனிமனிதனை முன்னிலைப்படுத்தியதாக அமைந்துள்ளதுடன் தலைப்புகளும் தனிநபர்களைச் சுட்டிநிற்கின்றன. சான்றாக, புசல்லாவ டெவன்பேர்க் தோட்டத்துரை போப்பின் கொலையும் வீராசாமி, வேலாயுதம் என்ற தொழிலாளர்களின் வீர மரணமும், அல்டோரி தோட்டப் போராட்டமும் ராஜி ஜெயமணி எனும் இளைஞனின் உயிர்த்தியாகமும், திருமதி ஜேக்கப் மேரியம்மாவும் சிறை வாழ்வும் என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் ரோகிணி போராட்டத்திலும் போராட்டத்தையொட்டியும் கொல்லப்பட்டவர்களையே தியாகிகளென அடையாளப்படுத்தியுள்ளார். ஆனால், இராஜாராம் உயிரிழப்பற்ற போராட்டத்தையும் (1986 தலவாக்கலை எழுச்சி), பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் எனச் சிறையிலடைக்கப்பட்டவரையும் (திருமதி ஜேக்கப் மேரியம்மா) நூலுள் உள்ளடக்கியுள்ளார். இவை மூலநூல் விவரிக்கும் உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள் என்ற எல்லைக்கு வெளியே நிற்கின்றன. அதனால் புதிய இணைப்புகள் மீது விமர்சனங்கள் எழுவது தவிர்க்க முடியாதுள்ளது.

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் அசைவின் முக்கியமானதொரு காலகட்டத்தில் இந்நூல் மறுபதிப்புப் பெற்றுள்ளமைக் குறிப்பிட்டுக் கூறவேண்டியதாகும். குறிப்பாக, மலையகத்தில் தொழிற்சங்கப் போராட்டங்கள் ஸ்தம்பிதம் அடைந்து, தொழிலாளர் நலனுக்கான கூட்டுக்குரல் பலமிழத்தல், தொழிற்சங்கங்களினதும் தொழிற்சங்கத் தலைமைகளினதும் சுயநலமும் பிற்போக்குத் தனங்களும் போலிமையும் பரவலாக அம்பலப்படுதல், மலையகத்தின் மக்கள்நல வரலாற்றை - மக்கள்நல அரசியலை முன்னெடுத்தவர்களின் பங்களிப்புகளைத் திட்டமிட்ட அடிப்படையில் சிதைக்கும் முயற்சிகள் இடம்பெறுதல், மலையகத் தியாகிகளின் நினைவேந்தல் நிகழ்வுகள் - அது தொடர்பிலான உரையாடல்கள் என்றுமில்லாத அளவுக்குப் பெருகுதல் முதலானவை நிகழ்கின்ற காலத்திலேயே இந்நூல் மறுபதிப்புப் பெற்றுள்ளது. இது கடந்தகால வரலாற்று வெளிச்சத்தில் மேற்படி சமகால அசைவுகளை அணுகுவதற்கான வாயிலைத் திறந்துள்ளது.

தோட்டத் தொழிலாளரது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு - அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு - உரிமை மீறல்களை எதிர்த்துப் போராடுவதற்கு இன்று வலிமையான எந்த அமைப்பும் இல்லை. அண்மைக்காலங்களில் மலையகம் முழுதும் அராஜகங்கள் - அத்துமீறல்கள் பல இடம்பெற்றுள்ளன. பெருகிவரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு ஏற்ப தோட்டத் தொழிலாளருக்குச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. ஆளும் அதிகாரத் தரப்புகள் வழமைபோல் போலி வாக்குறுதிகளை வழங்கி வருகின்றன. ஆனால், இவற்றுக்கு எதிராக வலுவான போராட்டங்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. மலையக இளைஞர் யுவதிகள் காலி முகத்திடலில் தொழிலாளர் சம்பள உயர்வுக்காக நடத்திய போராட்டம், அரகலவில் மலையக மக்களின் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டமை முதலானவை தனித்த கவனத்தைப் பெற்றபோதும் தோட்டத் தொழிலாளர்களை நேரடியாக இணைத்துக்கொள்வதிலும் அவர்களுக்கான ஸ்தாபனத் தலைமையை வழங்குவதிலும் அப்போராட்டங்கள் அக்கறை செலுத்தவில்லை. அத்துடன் அப்போராட்டங்களின் விளைவுகள் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை முன்னேற்றத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. அதனால் தொழிலாளர் சக்தியை மீள எழுச்சியடையச் செய்யும் முயற்சிகள், அதற்கான ஸ்தாபன முன்னெடுப்புகள், நிலவுகின்ற அமைப்புகளின் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முதலானவை அவசியமானவையாக விளங்குகின்றன. அதற்கான வாயிலைத் திறக்கும் வலு, இந்நூலுக்குள் புதைந்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தைப் புதிய தளத்தை நோக்கி நகர்த்தியதில் தொழிற்சங்க உருவாக்கம் முதன்மையான இடத்தை வகித்துள்ளது. தொழிற்சங்கச் செயற்பாடுகள் மூலமே தொழிலாளர்கள் எழுச்சியும் விழிப்புணர்வும் பெற்றதோடு தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் அநீதிகளை எதிர்த்துப் போராடவும் முடிந்தது.

மலையகத் தொழிற்சங்க அரசியலின் ஊற்றுமூலமாக கோ. நடேசய்யரை அடையாளப்படுத்தலாம். அவர் 1931 ஆம் ஆண்டு 'அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்' என்ற பெயரில் தொழிற்சங்கமொன்றை உருவாக்கி, ஸ்தாபனநிலைப்பட்ட வகையில் அம்மக்களை வலுப்படுத்தியுள்ளார். அதுவே தோட்டத் தொழிலாளர்க்கென உருவாக்கப்பட்ட முதலாவது

தொழிற்சங்கமாகும். அதன்பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கம் பெருந்தோட்டங்களில் ஆழமாக வேரூன்றி, தொழிலாளர் வாழ்வில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியது. அத்தொழிற்சங்கமே பெருந்தோட்டத் தொழிலாளரின் ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களைத் தொடக்கிவைத்தது. அதன்பின்னர் இலங்கை - இந்தியக் காங்கிரஸ் (இன்றைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்) உதயமானது. காங்கிரஸின் செயற்பாடுகளில் அதிருப்திகள் ஏற்பட பிளவுகள் அதிகரித்தன. ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் சங்கம், மலையக மக்கள் முன்னணி முதலான சங்கங்கள் அவ்வாறு உதயமாகின. இடதுசாரித் தளத்தில் இயங்கிய செங்கொடிச் சங்கம் தொடக்க காலத்தில் தோட்டங்களில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆனால், அதன் நோக்கும் போக்கும் பின்னர் சிதைந்து தேய்ந்தன.

தொழிற்சங்க அரசியலில் சுயநலப் போக்கும் சுரண்டலும் அதிகரித்தபோது தொழிலாளர் நலன் அந்நியப்படத் தொடங்கியது; அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கருவியாகத் தொழிற்சங்க அரசியல் குறுகியது. எண்ணிக்கை ரீதியில் பெருகத்தொடங்கிய தொழிற்சங்கங்கள் தொழிலாளரின் விடுதலை, உரிமைகள், போராட்டங்கள் என்ற தடத்திலிருந்து விடுபட்டு தமது செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தொழிற்சங்கங்களிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் பெருக்கிக்கொண்டதோடு தொழிலாளர்களிடையேயும் பாரிய பிளவுகளை ஏற்படுத்தின. அதனால் தொழிலாளர் ஐக்கியம் சிதைந்ததோடு வர்க்க ரீதியாக அணிதிரண்டு பொது எதிரியை எதிர்த்தல் என்ற தடத்திலிருந்து விலகி தமக்குள்ளே மோதிக்கொள்ளும் நிலை தோன்றியது. தொழிலாளர்களின் போராட்டங்களும் தியாகங்களும் சொற்ப விலைக்குத் தொழிற்சங்கங்களாலே விற்கப்பட்டன. இந்நிலைமை மலையகத்தில் வர்க்க ரீதியான அணிதிரளலையும் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களையும் சிதைத்தன. இக்காரணிகளால் தொழிற்சங்கம் மீதான மக்களின் நம்பிக்கையும் பற்றும் குறையத் தொடங்கின. அத்துடன் கட்சி அரசியலின் வளர்ச்சியினால் தொழிற்சங்கங்கள் தம் முதன்மையை இழந்து வருகின்றன. அதனால் மலையகத் தொழிற்சங்க அரசியலில் மாற்று முன்னெடுப்பு முயற்சிகள் இன்றைய தேவையாக விளங்குகின்றன.

தொழிற்சங்கங்களின் தோற்றப் பின்புலத்தையும் அவை கடந்துவந்த பாதைகளையும் புறநிலையில் அணுகி, அத்தொழிற்சங்கங்கள் இன்று வந்தடைந்திருக்கின்ற இடத்தை மதிப்பிடல் எதிர்கால நகர்வினை வலுப்படுத்தத் துணைபுரியும். மிகமுக்கியமாக தொழிற்சங்கங்கள் அனுபவிக்கும் எல்லாவித உரிமைகளும் தொழிலாளர்களின் போராட்டங்களினால் பெறப்பட்டவையாகும். அவ்வாறு தொழிலாளரின் தியாகங்களால் வேர்விட்ட தொழிற்சங்கங்கள், அத்தொழிலாளர்களுக்கு என்ன செய்தன, தொழிற்சங்கப் பிளவுகளுக்கான காரணங்கள் எவை, அப்பிளவுகள் தொழிலாளர்களை எவ்வாறு பாதித்தன, முற்போக்குத் தளத்தில் இயங்கிய தொழிற்சங்கங்கள்கூட பிற்போக்குத் தலைமைகளின் ஆதிக்கத்தால் எவ்வாறு சூறையாடப்பட்டன, தொழிற்சங்கங்களே எவ்வாறு விற்பனைப் பண்டமாகின முதலானவை குறித்த புறநிலையான தெளிவு, மலையகச் சமூக எழுச்சிக்கான - மாற்று அரசியலுக்கான பாதைகளைத் திறந்துவிடும். அதற்கான உரையாடல் வெளியை இம்மறுபதிப்பிலிருந்து கட்டியெழுப்பலாம்.

மலையகத் தமிழரின் வரலாறு குறித்த நோக்குமுறையில் பலவீனங்கள் பல நிலவுவதுடன் வரலாற்று இருட்டடிப்புகளும் சிதைப்புகளும் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாற்று அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தவர்களின் பங்களிப்புகளை மறைக்கும் வரலாறுகள் கட்டியெழுப்பப்படுவதுடன் அதீத தனிமனிதவாதமும் பிற்போக்குச் செயற்பாடுகளும் கொண்டவர்களைப் பெரும் போராளிகளாகச் சித்திரிக்கும் அபத்தமும் நிகழ்ந்துவருகிறது. அவற்றுக்குப் பின்னால் மறைகரங்கள் இயங்குவதையும் இயக்குவிப்பதையும் அவதானிக்க முடிகிறது. போலிகளையும் மக்கள் சாரியிலிருந்து அந்நியப்பட்ட தனிமனித வாதிகளையும் புரட்சிகரப் போராளிகளாக முன்நிறுத்துவதன் அரசியல், அதனால் ஏற்படும் எதிர்விளைவுகள் முதலானவை குறித்த சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் சமூக விடுதலைக்கான வரலாற்றைக் கட்டியெழுப்புவதும் மலையக எழுச்சிக்கு அவசியமானவைகளாகும்.

மலையகத்தில் இடம்பெற்ற தொழிற்சங்கப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள் அண்மைக்காலத்தில் பரவலாக இடம்பெற்று வருகின்றன. அதன் ஒரு வெளிப்பாடாகவே, மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக ஜனவரி 10 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற பிரேரணையை திரு. வேலுகுமார் அவர்கள் பாராளுமன்றத்தில் முன்வைத்தார். மலையக உரிமைக் குரல், பிடிதளராதே ஆகிய அமைப்புகள் இத்தியாகிகள் நினைவேந்தல் நிகழ்வுகளை மலையகத்தில் ஒழுங்கமைத்து வருவதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கிழக்குப்

பல்கலைக்கழகத்திலும் அந்நினைவேந்தலை நிகழ்த்தியுள்ளன. வடக்கு - கிழக்கில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குப் பேரினவாத எதிர்ப்பு மிகுந்துவரும் காலத்தில், அந்நினைவேந்தல்களைப் போலவே மலையகத் தியாகிகளும் நினைவுகொள்ளப்படுவதால், அதற்குப் பின்னால் புலம்பெயர் சக்திகளின் இடையீடு உண்டா என்ற ஐயம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

இத்தகைய சூழலில்தான், மலையகத் தமிழரின் எழுச்சிமிக்க வரலாற்றை - தியாகத்தைப் பேசும் இந்நூலின் மறுபதிப்புப் பெற்றுள்ளது. இது மலையகத் தமிழர் கடந்துவந்த காலத்தையும் நிகழ்கால நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் அவர்கள் எந்த இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள் - எந்த இடத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் கண்டுகொள்ளவும் வழிசமைத்துள்ளது.

திரு. ஐயாத்துரை அவர்களின் நூல் வெளிவர முன்னரும், வெளிவந்த பின்னரும் மலையகத் தியாகிகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க எழுத்து முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, பி.ஆர். பெரியசாமியின் 'தோட்டத் தொழிலாளர் வீரப் போராட்டம்' (1957), நடேசனின் '*A History of the Upcountry Tamil People in Sri Lanka*' (1993), மோகன்ராஜின் (பி.ஏ. காதர்) 'இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்' (1994), வி.ரி. தர்மலிங்கத்தின் 'மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்' (1994 - சரிநிகரில் தொடராக வெளிவந்தது. பின்னர் 'மலையகம் எழுகிறது' என எழுநா வெளியீடாக 2013 ஆம் ஆண்டு வெளிவந்தது), இ. தம்பையாவின் 'மலையக மக்கள் என்போர் யார்?' (1995), எஸ். இராமநாதனின் 'மலையக மக்கள் இருளும் ஒளியும்' (2009), எ.பி. கணபதிப்பிள்ளையின் '*The Epic of Tea*' (2011), '*Glimpse of a Tea Bud*' (2023), குமாரி ஜயவர்தன மற்றும் ரஷல் சூரியன் இணைந்து எழுதிய '*Class Patriarchy and Ethnicity on Sri Lankan Plantations*' (2015), மு.சி. கந்தையாவின் 'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்' (2015), எம்.எஸ். செல்வராஜின் 'மறைக்கப்பட்ட மலையகத் தமிழர்களின் வீர வரலாறு' (2020), வரதன் கிருஸ்ணாவின் 'வெந்து தணியாத பூமி' (2021) முதலான நூல்களில் உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இவை தவிர தனியான கட்டுரைகள் பலவும் வெளிவந்துள்ளன. அவற்றுள் டிக்கோயா ஸ்ரீகாந்தின் 'உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்' (1987), லெனின் மதிவானத்தின் 'தோழர் ஏப்ரகாம் சிங்கோ' (2013), 'சிவனு லெட்சுமணனை நினைவுகூரல்' (2013), என். சரவணனின் 'முல்லோயா கோவிந்தன்: தொழிலாளர் வர்க்கத்தின் முதல் தியாகி' (2015), பெ. முத்துலிங்கத்தின் 'மலையகத்தின் முதல் தியாகிகள்' (2018), 'தோட்டத் தொழிலாளர்களின் எதிர்ப்பும் சட்டங்களும்' (2018), 'ஸ்டலன்பேர்க் வீராசாமி தூக்குக் கயிற்றை முத்தமிட்ட பெப்ரவரி 27 ஆம் திகதியே மலையகத் தொழிலாளர்களின் விடுதலை நாள்' (2020) முதலானவை குறிப்பிடத்தக்கன.

படைப்பிலக்கியங்களிலும் மலையகத் தியாகிகள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, சு. முரளிதரனின் 'திரும்பிப் பார்க்க வேண்டிய தியாகங்கள்', 'தீவகத்து ஊமைகள்', சுபத்திரனின் 'மலையினும் பெரியது சிவனுவின் மரணம்', சிவ. இராஜேந்திரனின் 'சிவனு இலட்சுமணனுக்கு', 'ஒரு மரணம் பல ஜனனம்' முதலான கவிதைகளையும் சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' குறுநாவலையும் சிவ. இராஜேந்திரனின் 'இரத்த வரலாறு' பாடலையும் சுட்டிக்காட்டலாம்.

மேற்படி பதிவுகளை மொத்தமாக நோக்குகின்றபோது, மலையகத் தியாகிகள் என யாரை வரையறுப்பது, மலையகத் தியாகிகள் தினமென எதனை நினைவுகொள்வது என்பன தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் நிலவுவதைக் கண்டுகொள்ள முடிகிறது. அத்துடன் போராட்ட நிகழ்வுகளையும் உயிரிழப்புகளையும் விவரிப்பதிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மலையகத் தியாகிகள் அல்லது மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் என யாரை வரையறுப்பது என்பது தொடர்பில் இன்னும் தெளிவான வரையறைகள் எட்டப்படவில்லை. அதனாலேயே மலையகத்தின் முதல் தியாகியாக முல்லோயா கோவிந்தனைப் பலரும் நினைவுகொள்ளும்போது அதனைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். எடுத்துக்காட்டாக, பெ. முத்துலிங்கம் கோவிந்தனை முதல் தியாகியாக ஏற்றுக்கொள்ள முடியாமையைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதைச் சுட்டிக்காட்டலாம். அதற்கான நியாயப்பாட்டினை அவர் பின்வருமாறு முன்வைத்துள்ளார்:

"... பொலிஸ் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாகக் கூட்டத்தைப் பார்க்க வந்த தொழிலாளி கோவிந்தன் குண்டடிபட்டு தளத்திலேயே மரணமடைந்தான்" (2023: 337,338).

"ஒடுக்குமுறைக்கு எதிராக யார் எதிர்த்தெழுந்து போரிட்டு மடிகின்றாரோ அல்லது கொல்லப்படுகின்றாரோ அல்லது போராடி இயற்கை மரணத்தை அடைகின்றாரோ அவரது அறைகூவலே

அடுத்த தலைமுறையின் போராட்டத்திற்கு உந்து சக்தியாக அமைகிறது... போராட்டத்தில் கலந்துகொள்ளாது பார்வையாளர்களாக வந்து இறப்பவர்களை நினைவுகூர்வதன் மூலம் மக்களைத் தூண்டுவிக்க முடியாது” (2023: 379-386).

கோவிந்தனைத் தியாகியாக ஏற்க மறுக்கும் அவர், வீராசாமி, வேலாயுதம் ஆகியோரை மலையகத்தின் முதல் தியாகிகளாக முன்நிறுத்தியுள்ளார். அவ்வாறே பி.ஏ. காதர், “கோவிந்தன் போராட்டத்தில் பலியான தியாகி அல்ல என்பதால்தான் ஜுன் 5, 1947 போராட்டத்தில் ஈடுபட்டு போலீஸ் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான வேலுப்பிள்ளை கந்தசாமி முதலாவது தொழிலாளர் தியாகியாக நினைவுகூரப்படுகிறார்” (2023: 65) என்கிறார். இவை மலையகத் தியாகிகளை வரையறுப்பதில் பொதுவான உடன்பாடுகள் இல்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்நிலையாலே இராஜாராம் இம்மறுபதிப்பில் தன்னுடைய நோக்குநிலைக்கு ஏற்ப புதிய தியாகிகளை இணைத்துக்கொண்டுள்ளார்.

மலையகத் தியாகிகள் தினம் தொடர்பில் வெவ்வேறு குழுவினர் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர். திரு.வேலுகுமார் முல்லோயா கோவிந்தன் கொல்லப்பட்ட ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார். பிடிதளராதே, மலையக உரிமைக் குரல் ஆகிய அமைப்பினரும் ஜனவரி 10 ஆம் திகதியையே மலையகத் தியாகிகள் தினமாக நினைவுகொள்கின்றனர். என். சரவணனும் முல்லோயா கோவிந்தன் கொல்லப்பட்ட ஜனவரி 10 ஆம் திகதியையே மலையகத் தியாகிகள் தினமாக முன்வைத்துள்ளார். பெ. முத்துலிங்கம், வீராசாமி தூக்கிலிடப்பட்ட பெப்ரவரி 27 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்கிறார். பி.ஏ. காதர், வேலுப்பிள்ளை கந்தசாமி கொல்லப்பட்ட ஜுன் 05 ஆம் திகதியைக் குறிப்பிடுகின்றார். ஈரோஸ் ஜனநாயக முன்னணி, தேசிய கலை இலக்கியப் பேரவை முதலானவை சிவனு லட்சுமணன் கொல்லப்பட்ட மே 11 ஆம் திகதியைத் தியாகிகள் தினமாக நினைவுகொள்கின்றன. இவை மலையகத்தில் இயங்கும் அமைப்புகள் மலையகத் தியாகிகள் யார் என வரையறுப்பதிலும் தியாகிகள் தினத்தைத் தீர்மானிப்பதிலும் பொது உடன்பாடொன்றை எட்டுவது அவசியம் என்பதை வலியுறுத்தி நிற்கின்றன.

போராட்டங்கள், போராட்டங்களில் இடம்பெற்ற உயிரிழப்புகள் தொடர்பிலான விவரிப்புகளில் காணப்படும் முரண்பாடுகளுக்கு முல்லோயா கோவிந்தன் பற்றிய பதிவுகளையே சான்றாகக் குறிப்பிடலாம். முல்லோயா கோவிந்தன் ஜனவரி 15 ஆம் திகதி கொல்லப்பட்டதாக மாத்தளை ரோகிணியும், ஜனவரி 19 ஆம் திகதி கொல்லப்பட்டதாக பி.ஏ. காதர், எம்.எஸ். செல்வராஜ் ஆகியோரும், ஜனவரி 10 ஆம் திகதி கொல்லப்பட்டதாக எஸ். நடேசன், எ.பி. கணபதிப்பிள்ளை, என். சரவணன் முதலானோரும் குறிப்பிட்டுள்ளனர். பொலிஸ் அறிக்கை உள்ளிட்ட ஆவணங்கள் ஜனவரி 10 ஆம் திகதியே அவர் கொல்லப்பட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆனால், கோவிந்தன் நினைவு நீண்டகாலமாக, ஜனவரி 15 ஆம் திகதி இடம்பெற்றுவந்துள்ளது. அது குறித்த என். சரவணனின் கருத்துப் பின்வருமாறு அமைந்துள்ளது:

“முல்லோயா கோவிந்தனின் நினைவாக 28.01.1999 அன்று முதற்தடவையாக ஒரு நினைவுக் கல் நாட்டப்பட்டது. மலையக மக்கள் முன்னணி அதை முன்னெடுத்துச் செய்திருந்தது. ஆனால், அந்த நினைவுக் கல்லில் கோவிந்தன் கொல்லப்பட்ட நாள் 15.01.1940 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றிலிருந்து கடந்த 20 ஆண்டுகளாக கோவிந்தனை நினைவுகொள்ளும் வழக்கம் 15 ஆக மாறியது. இக்கட்டுரை வெளிவந்ததன் பின்னர் தான் 2020 இலிருந்து கோவிந்தனின் நினைவு நாளான ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தியாகிகள் தினமாக மலையக சமூகச் செயற்பாட்டாளர்கள் பிரகடனப்படுத்தினார்கள்” (2019: 93,94)

கோவிந்தன் நினைவாக நாட்டப்பட்ட கல்லில் திகதி தவறாகக் குறிப்பிடப்பட்டமைக்கு, மாத்தளை ரோகிணியின் நூலே காரணமெனலாம். மலையகத் தியாகிகள் குறித்த முன்னோடி நூலாக அந்நூல் விளங்குவதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியைக் கல் நாட்டியவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும். எஸ். நடேசனின் நூல் ஆங்கிலத்தில் வெளிவந்ததாலும், பின்னர் கோவிந்தனின் கொலை தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ள எ.பி. கணபதிப்பிள்ளையின் நூல்களும் ஆங்கிலத்திலேயே உள்ளதாலும் அவர்கள் சரியாகச் சுட்டிக்காட்டிய திகதி, மலையகத்தில் பரவலாகச் சென்றடையவில்லை எனலாம். அந்த இடைவெளியை என். சரவணனின் கட்டுரை நிறைவுசெய்துள்ளது.

கோவிந்தனின் கொலை நடந்த திகதி இன்று பரவலாக அறியப்பட்ட போதிலும் இம்மறுபதிப்பில் முன்னர் தவறாகக் குறிப்பிடப்பட்ட 15 ஆம் திகதியே இடம்பெற்றுள்ளது. அது தொடர்பில் எவ்வித குறிப்புகளும் வழங்கப்படவில்லை. அதனால் திகதி தொடர்பான தவறுகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு

இம்மறுபதிப்பும் காரணமாக அமையலாம்.

கோவிந்தனின் கொலை எப்போது நடந்தது (எத்தனை மணியளவில்) என்பதிலும் மாறுபட்ட கருத்துகள் இடம்பெற்றுள்ளன. மாத்தளை ரோகிணி தொழிலாளர்கள் பகலுணவுக்கு வந்த 12 மணியளவில் சம்பவம் நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். என். சரவணன், வரதன் கிருஸ்ணா முதலானவர்களும் தொழிலாளர்கள் மதிய உணவுக்குச் சென்றுகொண்டிருந்த 12 மணியளவிலே கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், எ.பி. கணபதிப்பிள்ளை திரட்டித் தரும் கோவிந்தன் கொலை தொடர்பான ஆவணங்களில் காலை வேளையிலேயே கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பொலிஸ் அறிக்கையின்படி, பொலிசார் தமக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய காலை வேளையிலேயே தோட்டத்துக்குச் சென்றுள்ளனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களின் சாட்சியின்படி, "கோவிந்தன் தொழிற்சாலையிலிருந்து காலை உணவுக்காக வீட்டுக்குவந்த எட்டு மணியளவில் கொல்லப்பட்டார்" (Kanapathypillai, 2023: 304) என்ற குறிப்பே காணப்படுகிறது. வீரகேசரி பத்திரிகைச் செய்தியிலும் (11.01.1940) காலையிலேயே சம்பவம் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவிந்தன் பற்றிய சித்திரிப்பிலும் ஆய்வாளர்களிடையே மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. சான்றாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

மாத்தளை ரோகிணி: முழுக்க முழுக்க உடல் உழைப்பால் தினவெடுத்த தோள்களைக் கொண்ட கட்டிளங்காளையான கோவிந்தன், போலிசார் தொழிலாளர்களைத் துன்புறுத்தும் செயல் கண்டு பொங்கி எழுந்தான். தேயிலைத் தொழிற்சாலையில் தேயிலைக் கொழுந்தைச் சேகரிக்கும் மட்டையைக் கையில் எடுத்தவன் லயத்தை நோக்கி ஓடினான். இதைக் கண்ட போலிஸ் தன்னைத் தாக்கவருகிறான் என்று சுட்டான் (2025: 26).

பெ. முத்துலிங்கம்: வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளாது தோட்டத் தொழிற்சாலையில் வேலைசெய்துவிட்டு சிகப்பு தலைப்பாகையுடன் மட்டம் தட்டும் தடியுடன் வந்த கோவிந்தன் என்ற தொழிலாளியைத் தொழிலாளர் தலைவன் எனக் கருதி பொலிஸ் சார்ஜன் சுரவீர துப்பாக்கியால் சுடலானான் (2023: 381).

என். சரவணன்: பொலிசார் தோட்டத்தொழிலாளரைத் தாக்கியபோது பெரியசாமி என்ற தொழிலாளி பொலிஸ் வாகனம் மோதிப் படுகாயமுற்றார். ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் ஜீப்களுக்குக் கல்லெறிந்தனர். இதனைக் கண்டு ஆத்திரமுற்ற தொழிலாளி கோவிந்தன் தொழிற்சாலையில் தேயிலைக் கொழுந்தைச் சேகரிக்கும் மட்டையை எடுத்துக்கொண்டு லயத்தை நோக்கி ஓடி வந்தார். பொலிசாரும் தொழிலாளர்களும் நேருக்குநேர் நின்று வாக்குவாதப் பட்டுக்கொண்டிருந்தனர். அங்கு குழுமியிருந்தவர்களை விலத்திக்கொண்டு கோவிந்தன் முன்னே வந்தார். அப்போது சுடப்பட்டார் (2019: 87,88).

பி.ஏ. காதர்: கோவிந்தன் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் நிர்வாகத்தோடு ஒத்துழைத்தபோதும், மலையகத்தில் மாத்திரமல்ல இலங்கை தொழிலாளர் வர்க்கப் போராட்ட வரலாற்றில் முதலில் பலியானவர் இவரே. எனினும் இவர் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலியான தியாகி அல்ல (2023: 65).

மு.சி. கந்தையா: முல்லோயா தோட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தில் கோவிந்தன் என்ற தோட்டத் தொழிலாளி காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டில் வீர மரணமடைந்தார். மலையகத் தொழிலாளர் போராட்டத்தில் முதல் தியாகி இவர் (2015: 93).

எம்.எஸ். செல்வராஜ்: கோவிந்தன் என்ற மலையகத் தோட்டத் தொழிலாளி தனது உயிரை துச்சமென மதித்து துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி, தியாகி ஆனார் (2020: 35).

வரதன் கிருஸ்ணா: போராட்டம் நிறைவுக்கு வந்த பின்னரும் அபேகுணசேகர என்ற இனவாதி தொழிலாளரைப் பழிவாங்க முடிவு செய்தார். தொழிலாளர்கள் வழமைபோல வேலைக்குச் சென்றுவிட்டு மதிய உணவுக்காக தமது இருப்பிடம் நோக்கி வந்தபோது அந்த விபரீதம் நடந்தது. திடீரென தோட்டத்துக்குள் புகுந்த பொலிசார், 'இங்கு யார் யார் மக்களைக் குழப்புவது' என்று கத்தியவாறே துப்பாக்கிகளுடன் மக்களைத் தாக்கத் தொடங்கினர். ஆத்திரமுற்ற தொழிலாளர் பொலிஸ் வாகனம் மீது கற்களை எறிந்து தாக்குதல் நடத்தினர். பொலிசாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட கோவிந்தனை அந்த இடத்திலேயே சுட்டுக்கொன்றனர் (2021: 12).

பொலிஸ் அறிக்கை (கணபதிப்பிள்ளையின் நூலில் இடம்பெற்றுள்ளது): வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தொழிலாளர்களை லொறியில் ஏற்றிக்கொண்டு தொழிற்சாலைக்குச் செல்லும்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் லொறியையும் லொறியைத் தொடர்ந்து சென்ற கார்களையும் தாக்கத்தொடங்கினர். பொலிசார் கூடியிருந்த 200க்கு மேற்பட்ட தொழிலாளர்களை எச்சரித்து கலைந்து செல்லுமாறு தெரிவித்தனர். அதன்போது

அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய கோவிந்தன் சுடப்பட்டார்... அவர் 09 ஆம் திகதி வேலைக்கு வந்துள்ளார். ஆனால், வேலை செய்யவில்லை. 10 ஆம் திகதி வேலைக்கு வரவில்லை (2023: 302-304).

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களின் கருத்து (கணபதிப்பிள்ளையின் நூலில் இடம்பெற்றுள்ளது): 09 ஆம் திகதியும் 10 ஆம் திகதியும் கோவிந்தன் வேலைக்குச் சென்றார். வழமைபோல் அவர் எட்டு மணிக்குக் காலை உணவுக்காக லயத்துக்கு வந்துகொண்டிருந்தார். அவர் பாதையில் கார்களைக் கடந்து செல்லும்போது மக்கள் கூச்சலிட்டபடி கார்களின் பின்னால் ஓடினர். கோவிந்தன் வேட்டியும் சிவப்பு நிறச் சட்டையும் (Shirt) அணிந்திருந்தார். அவர் பாதையோரத்தில் நின்றபடி கார்களைப் பார்க்கத் திரும்பினார். அதன்போது சுடப்பட்டார் (2023: 303).

மேற்படி மாறுபட்ட விவரிப்புகள், கோவிந்தன் தொடர்பில் புறநிலையில் விரிவாக ஆராய வேண்டிய தேவையை நியாயப்படுத்துகின்றன. கோவிந்தன் குறித்து மட்டுமல்லாது இனங்காணப்பட்டுள்ள மலையகத் தியாகிகள் தொடர்பிலும் நம்பகமான ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அத்துடன் பெயரளவில் மட்டும் அறியப்பட்டுள்ள, இன்னும் அறியப்படாத போராட்டத் தியாகிகளைக் கண்டறிதலையும் அவர்களின் வரலாற்றை எழுதுதலையும் முன்னெடுக்க வேண்டும். அவை யாவற்றையும் கொண்டே மலையகத்தின் போராட்ட வரலாற்றை முழுமைப்படுத்தலாம். அதனை மேற்கொள்வதற்கான ஓர் அடிப்படை ஆவணமாக மாத்தளை ரோகிணியின் 'உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்' விளங்குகிறது. இந்நூலாக்கத்துக்கான நோக்கமும் அதையொட்டியதாகவே அமைந்துள்ளது என்பதை, "இதை வாசிக்கும்போது உங்களுக்குச் சிந்தனை துளிர்விடலாம். அதன்மூலம் இந்த வரலாற்றை மேலும் ஆழமாக ஆராய முற்பட்டு புதிய காவியம் படைக்கலாம். அதற்கு இந்தப் போராட்ட வரலாறு ஓர் உந்துசக்தியாக அமைந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சியையும் ஆத்ம திருப்தியையும் அளிக்கும் என நம்புகிறேன்" என்ற மாத்தளை ரோகிணியின் குறிப்பிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது. அந்நோக்கத்தை நிறைவேற்றும் அடியெடுப்புகள் பல கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளன. அதனொரு தொடர்ச்சியாக இம்மறுபதிப்பையும் கொள்ளலாம். இம்மீள் வருகையானது, கடந்தகால எழுச்சியையும் நிகழ்காலப் பின்னடைவையும் அறிந்துகொள்ள வழிசமைத்துள்ளதுடன் அவ்வரலாற்று எழுதுகையில் காணப்படுகின்ற இடைவெளிகளையும் முரண்பாடுகளையும் களைவதற்கும் வாய்ப்பினை வழங்கியுள்ளது. அவை குறித்த ஆக்கபூர்வமான உரையாடல்கள் மூலம் மலையகப் போராட்ட எழுச்சியையும் தியாகிகளின் வரலாற்றையும் மீள்வரைவு செய்தல் காலத்தின் தேவையாகும்.

### உசாத்துணை நூல்கள்


1. Kanapathypillai, A.P., (2011) The Epic of Tea, Colombo: Social Scientists' Association.
2. ................................. (2023) Glimpses of a Tea Bud, Author Publication.
3. Nadesan, S., (1993) A History of the Upcountry Tamil People in Sri Lanka, Nandalala Publications.
4. கந்தையா, மு.சி., (2015) சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.
5. காதர், பி.ஏ., (2023) இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் (02 ஆம் பதிப்பு), லண்டன்: சமூகம் இயல் பதிப்பகம்.
6. கிருஸ்ணா, வரதன், (2021) வெந்து தணியாத பூமி, கனடா: சமாதானத்திற்கான கனேடியர்கள் ஸ்ரீலங்கா சார்பு.
7. சரவணன், என், (2019) கள்ளத்தோணி, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
8. 8. செல்வராஜ், எம்.எஸ்., (2020) மறைக்கப்பட்ட மலையகத் தமிழர்களின் வீர வரலாறு, சென்னை: பாரதி புத்தகாலயம்.
9. மதிவானம், லெனின், (2014) சமூக இலக்கியத் தளங்களில் படைப்புகளும் செயற்பாட்டாளர்களும், கிளிநொச்சி: மகிழ்.
10. முத்துலிங்கம், பெ., (2023) மலையகம் நிலைமாற்றத்தினை நோக்கி, கண்டி: சமூக அபிவிருத்தி நிறுவகம்.
11. ரகுநாதன், தொ.மு.சி., (2015) பாரதி: காலமும் கருத்தும், சென்னை: நாம் தமிழர் பதிப்பகம்.
12. வேங்கடாசலபதி, ஆ.இரா., (2020) பாரதி கருவூலம் (05 ஆம் பதிப்பு), நாகர்கோவில்: காலச்சுவடு.


(09.08.2025 அன்று கொட்டகலையில் இடம்பெற்ற உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள் (மறுபதிப்பு) நூல் வெளியீட்டில் ஆற்றிய ஆய்வுரையின் செம்மைப்படுத்தப்பட்ட வடிவம்.)




இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.
தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.
தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.



இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.


# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வடமராட்சி – பருத்தித்துறை

லெயுசிக்காமின் வலிகாமப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் அச்சுவேலிக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். அத்துடன், வலிகாமத்திலுள்ள 14 கோவிற்பற்றுகளைப் பற்றிய விவரங்களும் சென்ற கட்டுரையுடன் நிறைவடைந்தன. இந்தக் கட்டுரையில், வடமராட்சிப் பிரிவிலுள்ள கோவிற்பற்றுகளைப் பற்றிய விவரங்கள் தொடங்குகின்றன. வடமராட்சிப் பிரிவில் பருத்தித்துறை, கட்டுவேலி (கட்டைவேலி), உடுப்பிட்டி ஆகிய மூன்று கோவிற்பற்றுகள் உள்ளன. முதலில் பருத்தித்துறைக் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்திலுள்ள விவரங்களை ஆராயலாம்.

பருத்தித்துறைக் கோவிற்பற்றில் புலோலி, தும்பளை, வராத்துப்பளை ஆகிய மூன்று துணைப்பிரிவுகள் இருப்பதை நிலப்படத்திலுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து அறியமுடிகிறது. நிலப்படமும் அவ்வாறே காட்டுகிறது (படம்1). வடமராட்சியின் தலைமை நகரமான பருத்தித்துறையின் பெயரில் துணைப்பிரிவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. நிலப்படத்தின்படி பருத்தித்துறை நகரப் பகுதி புலோலித் துணைப் பிரிவுக்குள் அடங்கியிருப்பதைக் காணமுடிகிறது. அதேவேளை, ஒல்லாந்தர் காலத்தில் பருத்தித்துறைக் கோவிற்பற்றின் மூன்று துணைப் பிரிவுகளில் ஒன்றாகப் பெயரிடப்படும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்த வராத்துப்பளையின் பெயரில் தற்காலத்தில் ஒரு கிராம சேவையாளர் பிரிவுகூட இல்லை என்பதும் கவனிக்கத் தக்கது.




லெயுசிக்காமின் வடமராட்சியைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பருத்தித்துறைக் கோவிற்பற்றுப் பகுதி

## எல்லைகள்

பருத்தித்துறைக் கோவிற்பற்றின் வடக்கு எல்லையில் பாக்கு நீரிணையும், கிழக்கில் வங்காளக் குடாக் கடலும் உள்ளன. தெற்கிலும் மேற்கிலும் இது கட்டைவேலிக் கோவிற்பற்றால் சூழப்பட்டுள்ளது. ஏறத்தாழச் சதுர வடிவில் அமைந்த இக்கோவிற்பற்றின் மேற்குப் பக்கத்தில் அதன் மேற்கெல்லை நீளத்துக்குப் புலோலி துணைப் பிரிவு அமைந்துள்ளது. வடகிழக்கு மூலையில் தும்பளையும், தென்கிழக்கில் வராத்துப்பளைத் துணைப் பிரிவும் காணப்படுகின்றன (படம்2).




லெயுசிக்காமின் வடமராட்சியைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட பருத்தித்துறைக் கோவிற்பற்றின் படம்

ஒல்லாந்தர் காலத்துப் பருத்தித்துறைக் கோவிற்பற்றுக்குள் அடங்கிய பகுதிகள் தற்காலத்துப் பருத்தித்துறை பிரதேசச் செயலர் பிரிவின் ஒரு பகுதியாக உள்ளது. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை பழைய கோவிற்பற்றின் ஒரு பகுதி பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள்ளும் இன்னொரு பகுதி பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குள்ளும் அடங்குகின்றன.

## வீதிகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி யாழ்ப்பாணத்திலிருந்து வல்லையூடாகப் பருத்தித்துறைக்குச் செல்லும் வீதி இந்தக் கோவிற்பற்றுக்குள் உள்ளது. இது பெருமளவுக்கு இன்றைய யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதித் தடத்திலேயே அமைந்துள்ளது. கரவெட்டியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியொன்று இக்கோவிற்பற்றுக்குள் முன்னர் குறிப்பிட்ட

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியுடன் இணைகிறது. இது, நெல்லியடியிலிருந்து கலிகைச் சந்தியூடாக மந்திகை வரை செல்லும் இன்றைய வீதிப் பகுதியின் தடத்தில் செல்வதாகத் தெரிகிறது. வரணியிலிருந்து வடக்கு நோக்கி வரும் ஒரு வீதியும் கரவெட்டியிலிருந்து செல்லும் வீதியுடன் இணைகிறது. இது தற்காலத்துக் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியின் ஒரு பகுதி. இன்னொரு வீதி தும்பளை, வராத்துப்பளைத் துணைப் பிரிவுகளுக்கு இடையிலான எல்லைக்கு அருகில் கிழக்குக் கடற்கரையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியைப் பருத்தித்துறைக்கு அண்மையில் சந்திக்கிறது. இது இப்போதைய தும்பளை வீதியாக இருக்கக்கூடும்.

## கட்டடங்கள்

ஏனைய கோவிற்பற்றுகளுக்குள் இருப்பது போல ஒல்லாந்தரின் கிறித்தவத் தேவாலயத்தையும் அதோடிணைந்த தேவாலய இல்லத்தையும் நிலப்படம் காட்டுகிறது. வடக்குக் கடற்கரையோரத்தில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் கொடியை ஒரு குறியீடாகக் காட்டியுள்ளனர். இது ஒரு கோட்டையைக் குறிப்பதாக இருக்கலாம். இவை தவிர, இக்கோவிற்பற்றுக்குள் வேறு கட்டடங்களை நிலப்படம் காட்டவில்லை.

## தேவாலயமும் தேவாலய இல்லமும்

பருத்தித்துறைத் தேவாலயமே வடமராட்சியில் மிகவும் பெரியதும் கம்பீரமானதும் என போல்தேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] இத்தகைய தேவாலயக் கட்டடத்தைப் பற்றி விளக்கமான விவரங்கள் எதையும் அவர் தரவில்லை. நூலிலுள்ள படம் பருத்தித்துறைத் தேவாலயத்தை ஓரளவு பெரிய கட்டடமாகவே காட்டுகின்றது (படம்3). ஆனாலும், படம் அதை முழுவதும் நிரந்தரமான கட்டடப் பொருட்களால் ஆன கட்டடமாகக் காட்டவில்லை. தேவாலயத்தின் சில பகுதிகளும், அதனோடிணைந்த தேவாலய இல்லமும் மண் சுவர்களையும், ஓலைக் கூரைகளையும் கொண்டனவாகவே தோற்றமளிக்கின்றன.[2] இந்தத் தேவாலயமும் போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இது ஓரளவு சிதைவடைந்த நிலையில் இருந்ததாகவும் தனது காலத்தில் (1658–1665) அது திருத்தப்பட்டதாகவும் போல்தேயஸ் பாதிரியார் தகவல் தந்துள்ளார்.[3]

இந்தத் தேவாலயத்துக்கு வெளியே பெரியதொரு புளியமரம் இருந்ததாகவும் அதன் கீழே அமர்ந்து மக்களுக்குத் தான் மதபோதனை செய்ததாகவும் போல்தேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.[4] இதைக்




இடது பக்கம்: லெயுசிக்காமின் நிலப்படத்தில் ஒல்லாந்தர் காலப் பருத்தித்துறை நகரப் பகுதி. 1. தேவாலயம், 2. தேவாலய இல்லம், 3. போல்டேயசின் புளியமரம், 4. ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியின் கொடி (கோட்டை), 5. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, 6. மரவரிசை

வலது மேல் மூலை: போல்டேயசின் நூலில் உள்ள பருத்தித்துறைத் தேவாலயத்தின் படம்.

வலது கீழ் மூலை: போல்டேயசின் நூலில் உள்ளபடி தேவாலயத்துக்கு முன்னிருந்த புளிய மரத்தின் கீழ் போல்டேயஸ் போதனை செய்யும் காட்சி.

காட்டும் படம் ஒன்றும் நூலின் உள்ளது [5] (படம்3). நிலப்படத்திலும் தேவாலயத்துக்கு எதிர்ப் பக்கத்தில் பெரிய மரமொன்றைக் காட்டியுள்ளனர். இது மேற்குறிப்பிட்ட புளிய மரத்தைக் குறிப்பதாகக் கருத இடமுண்டு. இப்புளிய மரம் அண்மைக் காலம்வரை இருந்து 1958 இல் வீசிய பெரும் புயலொன்றின்போது வேரோடு பெயர்ந்து விழுந்துவிட்டதாகத் தெரிகிறது.[6]

## பருத்தித்துறைக் கோட்டை

ஒல்லாந்தர் கால நிலப்படங்களில் கோட்டையைக் குறிப்பதற்குக் கோட்டையின் சிறிய தள வடிவத்தைக் காட்டும் ஒரு குறியீட்டை, ஒரு ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனிக் கொடியை, அல்லது இரண்டையும் காட்டுவது வழக்கம். இந்த நிலப்படத்தில் பருத்தித்துறையில் கொடி மட்டுமே உள்ளது, கோட்டையின் குறியீடு இல்லை. ஆனாலும், இங்கே ஒரு கோட்டை இருந்தது பற்றி வேறு நிலப்படங்களிலும் எழுத்துமூல ஆவணங்களிலும் சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, 1690 - 1743 காலப்பகுதியில் வரையப்பட்ட 'யாழ்ப்பாணப் பட்டினமும் அதைச் சேர்ந்த நிலப்பகுதிகளும் தீவுகளும்' எனத் தலைப்பிட்ட நிலப்படம் பருத்தித்துறையில் முக்கோண வடிவக் கோட்டையைக் காட்டுகிறது. 1751 ஆம் ஆண்டில் வரையப்பட்டதும், இலங்கையிலிருந்த எல்லாக் கோட்டைகளின் தளவடிவங்களையும் உட்செருகலாகக் காட்டுவதுமான இன்னொரு நிலப்படத்திலும் பருத்தித்துறைக் கோட்டையின் தளவடிவமும் அடங்கியுள்ளது (படம்4). யாழ்ப்பாணக் கோட்டை உள்ளடங்கலாக வடபகுதியிலுள்ள நான்கு கோட்டைகளைக் காட்டும் நிலப்படம் ஒன்றிலும் பருத்தித்துறைக் கோட்டையின் தளப்படம் உள்ளது. எனவே, லெயுசிக்காமின் வடமராட்சியைக் காட்டும் நிலப்படத்தில் கொடி, அவ்விடத்திலிருந்த




**வேறு ஒல்லாந்தர்கால நிலப்படங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பருத்தித்துறைக் கோட்டையைக் காட்டும் பகுதிகள்**

கோட்டையையே குறித்துக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

ஐரோப்பாவில் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் போர் நடைபெற்ற காலத்தில் பருத்தித்துறையில் ஒரு சிறிய பாதுகாப்பு அமைப்பு நிறுவப்பட்டது. இதுவே பருத்தித்துறைக் கோட்டை. இக்கோட்டையின் அமைப்பைப் பற்றி இலங்கையின் ஒல்லாந்தக் கோட்டைகளைப் பற்றி நூலெழுதிய டபிள்யூ. ஏ. நெல்சன் ஓரளவு விரிவாக விளக்கியுள்ளார்.[7] இவருடைய தகவல்களின்படி, கடலுக்குள் நீண்டிருந்த பாறையொன்றின்மீது இக்கோட்டை அமைக்கப்பட்டிருந்தது. பாறையின் வடிவத்துக்கு ஏற்ற வகையில் கோட்டை அமைந்ததால் அது தட்டையான முக்கோண வடிவம் கொண்டதாகக் காணப்பட்டது.

இவ்வடிவம் காரணமாக, வெளிப்புறம் தடிப்பான மதில்களைக் கொண்ட இக்கோட்டையின் உட்புறத்தில் போதிய இடவசதி இருக்கவில்லை. ஒரு கோணம் விரி கோணமாக அமைந்த இருசமபக்க முக்கோணம் இது. விரிகோணத்துக்கு எதிராக அமைந்த நீளமான மதில் 240 அடி நீளம் கொண்டது. சற்று உட்புறமாகக் குழிந்திருந்த இம்மதில் கடலை நோக்கியபடி இருந்தது. இம்மதிலில் பீரங்கிகளுக்கான சுடுதுளைகள் இருக்கவில்லை. உண்மையில் நிலப்பக்கம் இருந்த, கொத்தளத்தின் நீளம் குறைந்த பக்கச் சுவர்களில் காணப்பட்ட இரண்டு துளைகளைத் தவிரக் கடலை நோக்கித் தாக்குதல் நடத்துவதற்கான சுடுதுளைகளைக் கோட்டை கொண்டிருக்கவில்லை. மேற்கு, கிழக்குத் திசைகளை நோக்கியிருந்த இரண்டு மூலைகளிலும் கொத்தளங்களோ வேறு நீட்சிகளோ இல்லாமல் வெறுமனே கூரிய மூலைகளாகக் காணப்பட்டன. இதனால், இப்பகுதிகளிலிருந்தும் தாக்குதல் நடத்தப் போதிய வசதிகள் இருக்கவில்லை.

மேற்குப் பக்கத்தில் நிலத்தை நோக்கியிருந்த 140 அடி நீளமான மதிலில் நிலத்தை நோக்கித் தாக்குதல் நடத்தக்கூடிய வகையில் ஒரேயொரு சுடுதுளை மட்டும் இருந்தது. இதைப் போலவே அதேயளவு நீளம் கொண்டிருந்த கிழக்குப் பக்க மதிலிலும் ஒரு சுடுதுளை மட்டுமே இருந்தது என நெல்சன் குறிப்பிட்டிருந்தாலும், வேறு நிலப்படங்கள் இப்பக்கத்தில் இரண்டு சுடுதுளைகள் இருப்பதைக் காட்டுகின்றன. விரிகோண மூலை நிலப் பகுதியை நோக்கியிருந்தது. விரிகோணத்தோடு இணைந்ததாகக் கோட்டையின் ஒரே கொத்தளத்தை அமைத்திருந்தனர். இக்கொத்தளத்தில் 50 அடி நீளம்கொண்ட முகப்புச் சுவர்களிலும், 20 அடி நீளமான பக்கச் சுவர்களிலும் பக்கத்துக்கு ஒன்றாக மொத்தம் நான்கு சுடுதுளைகள் இருந்தன. கோட்டையின் கிழக்குப் பக்கத்தில் வள்ளங்கள் கரை வரை வருவதற்கான வசதி இருந்ததாகத் தெரிகிறது. நிலப்படங்கள் கோட்டையின் நுழைவாயிலைக் குறித்துக் காட்டாவிட்டாலும், இவ்வாயில் கிழக்குப் பக்க மதிலிலேயே இருந்திருக்கும் என நெல்சன் கருதுகிறார். இந்த வாயிலைப் பாதுகாப்பதற்காகவே கிழக்குப் பக்க மதிலில் காணப்பட்ட இரண்டாவது சுடுதுளையை அமைத்திருக்கக்கூடும்.

தனக்குக் கிடைத்த ஒல்லாந்தர்கால நிலப்படத்தின்படி பருத்தித்துறைக் கோட்டையின் உள்ளே கட்டடங்கள் எதுவும் இல்லை என நெல்சன் குறிப்பிட்டுள்ளார். ஆனால், 1751 ஆம் ஆண்டில் வரையப்பட்ட நிலப்படத்தில் உட்செருகலாகக் காணப்படும் தளப் படம் உள்ளே இருந்த கட்டடங்களைக் காட்டுகின்றது. ஆனால், இறங்குதுறை வசதிகளை நிலப்படம் குறித்துக் காட்டவில்லை. இவ்வாறான வசதிகள் உண்மையில் இல்லாமல் இருந்திருக்கக்கூடும் என்பது நெல்சனின் கருத்து.

மேலே தரப்பட்ட விவரங்களிலிருந்து, இக்கோட்டை நாட்டின் பாதுகாப்புத் தேவைக்கான ஓர் அமைப்பாகத் தெரியவில்லை. அருகிலிருந்த துறைமுக நடவடிக்கைகளின் பாதுகாப்புக்காகவோ, சட்டத்துக்குப் புறம்பான வணிகத்தையும் கடல்வழியான மக்கள் போக்குவரத்தையும் கட்டுப்படுத்துவதற்காகவோ இக்கோட்டையை ஒல்லாந்தர் கட்டியிருக்கக்கூடும். இதன் குறைபாடுகள் காரணமாக ஒல்லாந்தர் காலத்திலேயே இக்கோட்டை கைவிடப்பட்டிருக்கலாம்.

## துறைமுகம்

லெயுசிக்காமின் நிலப்படத்தில், வடக்குக் கரையோரத்தில் பருத்தித்துறை (*Parititoere*) அல்லது

‘பொன்டோ பெட்ரோ’ (*Punto Pedro*) எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது ஊர்ப் பெயரையன்றித் துறைமுகத்தையே குறிக்கிறது எனலாம். பருத்தித்துறைத் துறைமுகம் நீண்ட காலமாகவே கடல்வழி வணிகத்துக்கும் போக்குவரத்துக்கும் பயன்பட்டு வந்துள்ளது. குடியேற்றவாதக் காலத்துக்கு முன்னர் தமிழ் மன்னர் ஆண்ட காலத்திலே பருத்தித்துறைத் துறைமுகம் பயன்பாட்டில் இருந்ததைக் குறித்த குறிப்புகள் உள்ளன. 1619 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயப் படைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர், சங்கிலியன் பருத்தித்துறை ஊடாகவே இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்தான்.8 பிற்காலத்தில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றவந்த பிரித்தானியப் படைகளின் ஒரு பிரிவு, திருகோணமலையில் இருந்தும் இன்னொரு பிரிவு தமிழ் நாட்டிலுள்ள நாகபட்டினத்திலிருந்தும் கடல்வழியாகப் பருத்தித்துறையில் இறங்கி அங்கிருந்தே தரை வழியாக யாழ்ப்பாணம் நோக்கி வந்தனர். 1800 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ரொபெர்ட் பேர்சிவல் என்பார், பருத்தித்துறையில் ஒரு கோட்டையும் துறைமுகமும் இருந்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பருத்தித்துறையிலிருந்து வள்ளம் மூலம் சில மணித்தியாலங்களில் நாகபட்டினத்துக்குச் சென்றுவிடலாம் என்ற குறிப்பும் அவரது நூலில் உள்ளது.[9]

இத்துறைமுகம், பருத்தி, பருத்தி நூல், பருத்திப் புடவை என்பவற்றை யாழ்ப்பாணத்திலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கோ, அவற்றைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கோ பயன்பட்டதால் இது பருத்தித்துறை எனப்பட்டு அதுவே ஊருக்கும் பெயராகியது என்ற கருத்தும் உண்டு.[10]

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பருத்தி பயிரிடுவதற்கும், நெசவுத் தொழில், துணிகளுக்குச் சாயமூட்டும் தொழில் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் அக்கறை கொண்டிருந்தனர். இதற்காக, பலவகைப்பட்ட நெசவாளர்களையும் சாயக்காரர்களையும் இந்தியாவிலிருந்து அழைத்துவந்து யாழ்ப்பாணத்தில் குடியேற்றினர். இக்காலத்தில் நெசவுத் தொழில் சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கும் பருத்தி உள்ளிட்ட சில மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் இத்துறைமுகம் பயன்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. இது சரியானால், பருத்தித்துறை என்ற பெயர் ஒல்லாந்தர் காலத்திலேயே புழக்கத்துக்கு வந்திருக்க வேண்டும். இது உண்மையா என அறிவதற்கு மேலும் ஆய்வுகள் தேவை.

## குளங்கள்

பருத்தித்துறைக் கோவிற்பற்றுக்குள் பத்துக் குளங்களைப் பெயர் குறித்துக் காட்டியுள்ளனர். புலோலி துணைப் பிரிவுக்குள் பிரப்பங் குளம், நெடுங் குளம், துரவு, மண்டிக் குளம், பிராய்க் குளம், கொம்பான் குளம், மாவில் குளம் ஆகிய ஏழு குளங்களும்; தும்பளைத் துணைப்பிரிவில் மாதனைக் குளம், வெறுமனே குளம் எனப் பெயர் குறித்த ஒரு குளம் என இரண்டு குளங்கள் காணப்படுகின்றன. வராத்துப்பளைத் துணைப்பிரிவில் பண்டாவத்தைக் குளம் என்னும் ஒரு குளம் மட்டும் பெயர் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. இத்துணைப் பிரிவுக்குள் வழமையாகக் குளத்தைக் குறிக்கும் இன்னொரு குறியீடு இருந்தாலும் பெயர் இல்லை. இது குளமா என்பதும் தெரியவில்லை.

## குறிப்புகள்


1. *Phillipus Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon”, trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos.* 14 (*July* 1958*April* 1959), 332.
2. *Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon”,* 361.
3. *Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon”,* 334.
4. *Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon”,* 334.
5. *Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon”,* 333.
6. பா. இரகுவரன், பருத்தித்துறையூராம் (பருத்தித்துறை: தேடல் வெளியீடு, 2012), 207– 208.
7. *W. A. Nelson, The Dutch Forts of Sri Lanka, The Military Monuments of Ceylon (with updates by R. K. de Silva) (Colombo: Sri LankaNetherlands Association,* 2004), 103-104.
8. *Fernao De Queyroz, The Temporal and Spiritual Conquest of Ceylon vol II, trans. S. G. Perera (New Delhi: Asian Educational Services,* 1992), 632.
9. *Robert Percival, An Account of the Island of Ceylon, (Dehiwala: Tisara Prakasakayo Ltd.,*1975), 46.
10. இ. பாலசுந்தரம், இலங்கை இடப்பெயராய்வு2 [வடமாராட்சிதென்மராட்சி] (யாழ்ப்பாணம்: வல்லிபுரம் இந்துக் கல்வி கலாச்சார மன்றம், 1989), 46.



சி. அ. யோதிலிங்கம்

சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார். ‘இலங்கையின் அரசியல் யாப்புகள்’, ‘இலங்கையின் இனகுழும அரசியல்’, ‘சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்’, ‘இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்’, ‘இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு’, ‘அரசறிவியல் ஓர் அறிமுகம்’, ‘ஒப்பியல் அரசாங்கம்’ போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் ‘இலங்கையர்’ என்றும், பண்பாட்டுரீதியில் ‘தமிழர்’ என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. ‘ஈழத்தமிழர் அரசியல் வரலாறு’ எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

# 1968 – 1983: ஆயுதப் போராட்டத்தை நோக்கி

## பகுதி -1

இக்கட்டத்தில் தமிழ் மக்களினுடைய விடுதலைப் போராட்டம் இலங்கை என்ற மட்டத்தில் நின்றது. பிராந்திய மட்டத்திற்குச் செல்லவில்லை. இதனால் இலங்கை அரசு மட்டுமே எதிரியாக இருந்தது. ஆயுதச் செயற்பாடுகள் இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.

#### தமிழரசுக்கட்சியின் போராட்ட அலை வீழ்ச்சியடைதல்

சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ்த்தேசிய அரசியலில் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய இரு சக்திகள் தொழிற்பட்ட போதும் தமிழரசுக்கட்சி மட்டுமே ஒரு போராட்ட சக்தியாக தமிழ்த்தேசிய அரசியலை வீரியத்துடன் முன்னெடுத்தது. 1956 முதல் 1961 வரை அதன் போராட்ட வீச்சு அதி உச்ச நிலையில் இருந்தது. 1965 இல் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்தில் அங்கம் பெற்றதைத் தொடர்ந்து வீழ்ச்சிப்போக்கை நோக்கிச் சென்றது. இவ்வீழ்ச்சிப் போக்கினால் கட்சியில் இருந்த தேசியவாத சக்திகள், குறிப்பாக இளைஞர்கள், அதிருப்தியடைந்து புதிய அரசியல் இயக்கத்தை நோக்கி நகர முற்பட்டனர்.

#### ஈழத்தமிழர் இளைஞர் இயக்கம்

1968 இல் இலங்கைத் தேசிய மன்னன், மாவை சேனாதிராஜா, மைக்கல் தம்பிநாயகம், பரமசாமி, வில்வராஜா, டொக்டர் சண்முகநாதன் முத்துக்குமாரசுவாமி, சிவகுமாரன், மகா உத்தமன் போன்றவர்கள் 'ஈழத்தமிழர் இளைஞர் இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கினர். இவ்வமைப்பின் தலைவராக, இலங்கைத் தேசிய மன்னனும், செயலாளராக மாவை சேனாதிராஜாவும், பொருளாளராக மைக்கல் தம்பிநாயகமும் தெரிவு செய்யப்பட்டனர். இந்த அமைப்பின் தோற்றத்துடன் தமிழ் அரசியலில் தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ், இளைஞர் இயக்கங்கள் என மூன்று வித சக்திகள் தொழிற்படத் தொடங்கின. இளைஞர் இயக்கங்கள் கட்சி அரசியல், தேர்தல் அரசியல் என்பவற்றிற்கு வெளியே செயற்பட முயற்சித்தன.

#### 'சியவச சுவீப்' ரிக்கற்றுக்கு எதிரான போராட்டம்

ஈழத்தமிழர் இளைஞர் இயக்கம் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் போராட்டத்தை நடாத்துவதற்கென உருவாக்கப்பட்ட முதலாவது அரசியல் இளைஞர் இயக்கமாக தமிழர் அரசியலில் தோற்றம் பெற்றது. இதுவே பின்னர் தொடர்ச்சியான தீவிர இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்தது. 'சியவச' சுவீப் ரிக்கற் விற்பனைக்கெதிரான போராட்டம், தமிழ்ப் பல்கலைக்கழகத்தை திருகோணமலையில் உருவாக்க வேண்டும் எனக் கோரும் போராட்டம் என்று இரண்டு விதமான போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்காக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடாத்தப்பட்டன. 'சியவச' சுவீப் ரிக்கற்றுகள் கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களிடையே விற்கப்பட்டது. "தமிழ்ப் பகுதிகளில் சேர்க்கப்பட்ட நிதி தென்னிலங்கைக்குச் செல்கின்றது" எனக் கூறியே போராட்டம் நடாத்தப்பட்டது.

#### 1. தமிழ்ப் பல்கலைக்கழகத்தை திருகோணமலையில் அமைக்கக் கோரி நடாத்திய போராட்டம்

தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றினை எங்கே நிறுவுவது என்பது தொடர்பாக அக்காலத்தில் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. வடக்கு - கிழக்கை இணைக்கும் மையமாக திருகோணமலை இருப்பதால், திருகோணமலையில் அப்பல்கலைக்கழகம் நிறுவப்படல் வேண்டும் என தமிழரசுக்கட்சி பிரசாரம் செய்தது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி அப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படல் வேண்டும் எனப் பிரசாரம் செய்தது. ஈழத் தமிழர் இளைஞர் இயக்கம் திருகோணமலையில் அமைக்கப்படல் வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு அதனை ஆதரித்து ஆர்ப்பாட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்தியது.

#### 2. தமிழ்ப் பகுதிகளில் உருவாக்கப்படும் சிங்களப் பாடசாலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல்

புத்தூர், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் உருவான சிங்கள - பௌத்த பாடசாலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

#### 3. லக்சல, சலுசல போன்ற சிங்களப் பெயர்களை தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து அகற்றுமாறு கோருதல்

மயிலிட்டி புஸ்பராசா, அருளானந்தன், ஏழுமலை போன்றவர்களும் இச்செயற்பாடுகளில் பங்கெடுத்தனர். 1970 தேர்தலுடன் இவ்வமைப்புச் சிதைந்து போனமையினால் இவர்களில் பலர் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாகவும், சிலர் தமிழ்க் காங்கிரசிற்குச் சார்பாகவும் பிரசாரங்களில் ஈடுபட்டனர். தேர்தலின் பின்னர் தமிழ் மாணவர் பேரவை உருவான போதும் இவர்களே அதில் முன்னணியில் நின்றனர்.

#### கித்துள் ஊற்றுக் குடியேற்றம் - திருகோணமலை

1968 இல் திருகோணமலை மாவட்டத்தில் கித்துள்

ஊற்று என்ற இடத்தில் ஒரு சிறு குளம் கட்டப்பட்டு அதில் சிங்களக் குடியேற்றத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. தமிழரசுக் கட்சி பல்லாயிரம் ரூபா செலவில் தமிழரசு வாலிப முன்னணியைச் சேர்ந்தவர்களை அத்துமீறிக் குடியேற வைத்தது. அப்பகுதியின் சிங்கள உதவி அரசாங்க அதிபர் அவ்விளைஞர்களின் வீடுகளுக்குத் தீ வைத்ததோடு அவர்களைக் கைதும் செய்தார். காணி அமைச்சருடன் செய்த உடன்பாட்டின் படி, அத்துமீறிக் குடியேறிய இளைஞர்கள் உட்பட பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்களைக் குடியேற்றினர்.

### தமிழரசுக் கட்சியின் 11 ஆவது மாநில மாநாடு: 1969 ஏப்பிரல் 7,8,9 - உடுவில்

11 ஆவது மாநில மாநாட்டில் மூ. இராசமாணிக்கம் 3 ஆவது முறையாகவும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தமிழரசுக் கட்சியின் 11 ஆவது மாநில மாநாட்டின் தீர்மானங்களாக,

• ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய அரசைத் தொடர்ந்தும் ஆதரிப்பதால் தமிழ் பேசும் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. எனவே தமிழரசுக் கட்சிப் பாராளுமன்றக் குழு இனிமேல் சுதந்திரமாக இயங்கும் எதிர்க்கட்சியாகச் செயற்பட வேண்டும் எனத் தீர்மானித்தல். இதற்குக் காரணங்களாக,

1. மாவட்ட சபைகள் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியும் திருகோணமலையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படாமை.

2. கைத்தொழிற்சாலைகளை நிறுவுதல், மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல், தமிழ்ப் பிரதேசங்களில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில், போதிய போக்குவரத்து வசதிகள் செய்தல் என்பவற்றில் மோசமான பாரபட்சக் கொள்கைகளை அரசு பின்பற்றியமை.

3. தமிழ் பேசும் மக்களின் கல்வி, கலாசாரத் தேவைகளை பூரணமாகப் புறக்கணித்தல். தமிழக மக்களுக்கு இடையிலுள்ள கலாசாரத் தொடர்புகளைத் துண்டிக்க அரசு திட்டமிட்டுச் செயற்பட்டமை.

4. தமிழ்மொழிச் சட்டவிதிகள் அமுலாக்கப்படுவதை அரசாங்கம் காரணமின்றித் தாமதப்படுத்தியமை.

5. திறைசேரிச் சுற்றறிக்கைள் 700, 701 ஆகியவற்றை எமக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு முரணாக பாரபட்சமான முறையில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்குக் கஷ்டத்தையும் ஏமாற்றத்தையும் தரக்கூடிய வகையில் அமுல்படுத்தியமை.

• தமிழரசு உரிமைகளை மீட்கவென கட்சி எடுக்கவுள்ள நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவைத் தருமாறு தமிழ் பேசும் மக்களைக் கோருதல்.

• சமஷ்டி ஆட்சி என்றதன் அடிப்படைக் கொள்கையில் கட்சி மேலும் உறுதி கொள்வதோடு அதன் மூலமாகவன்றி தமிழ் பேசும் மக்களது சுதந்திரம், தன்மானம், சமத்துவம் கிட்டாதென இம்மாநாட்டின் மூலம் பிரகடனப்படுத்துதல்.

### 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்

இத்தேர்தலில் தமிழரசுக் கட்சி 2,45,747 வாக்குகளைப் பெற்று 13 ஆசனங்களை மட்டும் கைப்பற்றியது. இத்தேர்தலில் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அ. அமிர்தலிங்கம் தனது வட்டுக்கோட்டைத் தொகுதியிலேயே தோல்வியடைந்தார். ஈ.எம்.வி. நாகநாதனும் நல்லூர்த் தொகுதியில் தேல்வியடைந்தார்.

கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர்த் தொகுதிகளில் மட்டும் வெற்றியடைந்து பட்டிருப்பு, கல்குடா போன்ற தமிழ்த் தொகுதிகளில் தோல்வியடைந்தனர். போராட்டத்தைக் கைவிட்டு அரசுடன் சேர்ந்தமையே இதற்குக் காரணமாக இருந்தது. சிறீலங்கா சுதந்திர கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிசக் கட்சி தலைமையிலான கூட்டு முன்னணி 116 ஆசனங்களை, அதாவது 2/3 பங்கு ஆசனங்களைக் கைப்பற்றியது (சிறீ.ல.சு.க - 91, இ.க.க - 06).

### புதிய அரசியல் யாப்பு உருவாக்க முயற்சியும் அரசியல் நிர்ணய சபையும்

தேர்தலில் 2/3 பெரும்பான்மையைப் பெற்ற கூட்டு முன்னணி அரசாங்கம் புதிய அரசியல் திட்டமொன்றை உருவாக்க முயற்சி செய்தது. அதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அரசியல் நிர்ணய சபையாகக் கூடுவதற்கு வருமாறு அழைப்பு விடுத்தது. 11.7.1970 இல் வவுனியாவில் கூடிய கட்சியின் செயற்குழு, அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொள்வது தொடர்பாக கட்சிக்கு வெளியில் பல தமிழ்ப் பெரியார்களுடன் கலந்தாலோசித்த பின் முடிவுக்கு வருவது எனத் தீர்மானித்தது. இதன்படி கொழும்பு

சைவ மங்கையர் கழகத்தில் ஆலோசனை நடாத்திய பின் முடிவுக்கு வருவது எனத் தீர்மானித்து, அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொள்வதோடு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் அமைப்பையும், தமிழர்களது சமூக - பொருளாதாரக் கொள்கைகளையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் யாப்பைச் சமர்ப்பிப்பது எனவும் தீர்மானித்தது.

அரசியல் யாப்பை உருவாக்கும் பொறுப்பு வி. தர்மலிங்கம் தலைமையிலான குழுவிடம் விடப்பட்டது. பூரண சோஷலிசப் பொருளாதாரத்தையும் சாதி - சமய பேதமற்ற சமூக அமைப்பையும் சுயாட்சி பெற்ற ஐந்து மாநிலங்களையும் கொண்ட சமதர்ம சமஷ்டிக் குடியரசு அரசியல் யாப்புத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ்மொழி விசேட சட்டம் யாப்பில் உட்புகுத்தப்பட்டு, தமிழ்மொழி தமிழ் மாணவர்களின் கல்வி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் அரசியல் நிர்ணய சபை இவற்றை ஆலோசனைக்கு எடுக்கவும் தயாரில்லாதிருந்தது.

தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த மாதிரி அரசியல் யாப்பில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்கள்:

1. இலங்கை சமஷ்டிக் குடியரசானது,

- குடியரசின் தெற்கு, மேற்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
- குடியரசின் வடமத்திய, வடமேல் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
- குடியரசின் மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
- குடியரசின் வட, வடகிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
- குடியரசின் தென்கிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.
- குடியரசின் தலைநகரமென்ற முறையில் மத்திய அரசினால் நிருவகிக்கப்படுவனவாகிய கொழும்பு மாநகரமும் அதன் சுற்றுப்புறங்களும்

என்பவற்றைக் கொண்டிருக்கும்.

2. ஓர் எல்லை வகுக்கும் ஆணைக்குழுவானது இம்மாநிலங்களினதும் அதன் சுற்றுப்புறத்தினதும் எல்லைகளை வகுத்தல் வேண்டும்.

3. எல்லைகளை வகுப்பதில் ஆணைக்குழுவானது பழைய வரலாற்றுப் பாரம்பரியங்கள், பூகோள, பண்பாட்டு, மொழிவாரிச் சமூகச்சூழல்கள், குடிசனத் தேக்கம் என்பவற்றுடன் அத்தகைய வேறு காரணக்கூறுகளையும் கருத்திலெடுத்துக்கொள்ள வேண்டும்.

4. மாநில அரசுகளானவை, அவற்றிடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமது பிரதேசங்களை நிருவகிப்பதில் பூரண அதிகாரமுடையதாதல் வேண்டும்.

5. மாநில அரசுகளின் சட்டமியற்றும் அதிகாரம், மாநில ஆட்சிமன்றங்களுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும். இம்மன்றங்கள், இந்த அரசியலமைப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஒவ்வொரு மாநிலத்தினதும் பிரதேச எல்லைகளுக்குள் செயற்படத்தக்க சட்டங்களை ஆக்க அதிகாரமுடையதாதல் வேண்டும்.

6. மாநிலங்களின் அரசியலமைப்புகளாவன வேறு விடயங்களுடன், குடிசனத் தொகையும் நிலப்பரப்பும் இணைத்துக் கணிக்கப்பெற்ற அடிப்படையில், மக்களால் தெரிவு செய்யப்படுவோர் ஆட்சிமன்றத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

7. ஒவ்வொரு பொதுத் தேர்தலையும் அடுத்துவரும் தமது முதலாவது கட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சிமன்ற உறுப்பினர்களும் தம்மைக் குழுக்களாகப் பகுத்துக்கொள்வதுடன், ஒவ்வொரு குழுவும் ஒரு தலைவரைத் தெரிவு செய்தலும் வேண்டும்.

8. மாநில அரசுகளின் நிறைவேற்றுப் பணிகள் தலைவருக்கும் மேற்கூறப்பட்ட குழுக்களுக்கும் உரியன.

9. பரஸ்பர நலன் பயக்கும் கருமங்கள் தொடர்பில், மாநில அரசுகளானவை தமக்குள் உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம். ஆயினும் அத்தகைய உடன்படிக்கைகளை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதுடன், அவ் உடன்படிக்கைகள் குடியரசினது உரிமைகளுக்கும் நலன்களுக்கும் அல்லது மற்றைய மாநிலங்களின் உரிமைகளுக்கும் முரண்பாடாக எதனையும் உள்ளடக்கியிருப்பின், மத்திய அரசாங்கம் அவற்றை நிறைவேற்றலைத் தடுப்பதற்கு உரித்துடையது.

10. மத்திய அரசாங்கத்தின் முகவராண்மைக்கூடாகவன்றி மாநில அரசுக்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்துக்குமிடையில் அல்லது அதன் பிரதிநிதிகளுக்குமிடையில் எதுவித தொடர்பும் இருத்தல் ஆகாது.

*11.* மாநிலங்களுக்கிடையிலான எல்லாப் பிணக்குகளின் நடுத்தீர்ப்பிற்கும் தீர்வைக்கும் மத்திய அரசாங்கத்தின் விதிப்பு முற்றானதாக வேண்டும். எந்தவொரு மாநில அரசும் வேறெந்த மாநில அரசுக்கெதிராகவும் ஒருதலைச்சார்பான நடவடிக்கை எதனையும் எடுத்தல் ஆகாது.

*12.* மாநில அரசுகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையிலான எல்லாப் பிணக்குகளும் நீதித் தீர்வைக்கென அரசியலமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

*13.* மாநிலங்களானவை அதிகாரத்தை முழுமையாகப் பிரயோகிப்பதற்கு குடியரசவைக்கு எல்லா உதவிகளையும் அளித்தல் வேண்டும்.

*14.* சட்டப்படி தமக்கான கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் தவறுகின்ற மாநில அரசுகளுக்கெதிராக மத்திய அரசாங்கமானது ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

*15.* இலங்கைக் குடியரசின் நிலப்பரப்பு பிரிக்க முடியாததும் மாநிலங்களின் நிலப்பரப்பை உள்ளடக்கியதுமாகும்.

*16.* பதினாறாம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர்ந்த ஏனைய எல்லா விடயங்களிலும், ஒவ்வொரு மாநில அரசும் முழு அதிகாரத்தைப் பிரயோகிக்க உரிமையுடையது.

பல்கலைக்கழக அனுமதியில் மொழிவாரித் தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்படல் பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடங்களில் தமிழ் மொழிமூல மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் மொழிவாரித் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன்படி தமிழ் மாணவர்கள் கூடுதலான புள்ளிகளும் சிங்கள மாணவர்கள் குறைந்த புள்ளிகளும் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

**1971 ஆம் ஆண்டின் புள்ளிகளின் படி விவரம்**

| பீடம் | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் |
|---|---|---|
| மருத்துவம் | 229 | 250 |
| பௌதீக விஞ்ஞானம் | 183 | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் | 175 | 184 |
| பொறியியல் | 227 | 250 |
| மிருக வைத்தியம் | 181 | 206 |
| கட்டடக்கலை | 180 | 194 |

### தமிழ் மாணவர் பேரவையின் தோற்றம்

தரப்படுத்தலை எதிர்ப்பதற்காக 1970 கார்த்திகையில் தமிழ் மாணவர் பேரவை உருவாக்கப்பட்டது. இதற்கு ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தை உருவாக்கிய சிவகுமாரன், த. முத்துக்குமாரசுவாமி ஆகியோர் முன்னணியில் நின்றனர். இவர்களுடன் அரியரட்ணம், சத்தியசீலன் என்போரும் மத்திய குழுவில் இடம்பெற்றனர். 1970 நவம்பர் 24 இல் பாடசாலைப் பகிஷ்கரிப்புடன் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினர். இதில் சுமார் 10,000 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

அப்போதைய கல்வி அமைச்சரான பதியுதீன் முகமதின் கொடும்பாவியும் ஊர்வலத்தில் கொண்டுசெல்லப்பட்டது. "தமிழ் மாணவர்களின் கல்வியைப் பறிக்காதே! இன விகிதாசாரக் கொள்கையை ஒழிப்போம்! திறமைக்கு முதலிடம் கொடுப்போம்! சோஷலிசமா? சிங்கள இஸமா?" போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தமிழரசுக்கட்சிக்கு எதிரான சில சுலோகங்களும் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன. ஊர்வலத்தின் முடிவில் யாழ். முற்றவெளியில் பொதுக்கூட்டம் நடைபெற்றதோடு கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. தொடர்ந்து 1970 டிசம்பர் 8 இல் மட்டக்களப்பிலும் மாணவர் பேரவையினால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டு கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

### தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை மாநாடு: 1971 பெப்ரவரி 7 - வல்வெட்டித்துறை

தமிழ்க்கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி ஏகோபித்த கோரிக்கைகளை அரசியல் நிர்ணய சபையில் முன்வைப்பதற்கு அபிமானிகள் சிலர் முயற்சி செய்தனர். வல்வெட்டித்துறை நகரபிதா ஞானமூர்த்தி சபாரத்தினம் வேலுப்பிள்ளை இது விடயத்தில் இடையறாது முயற்சி செய்தார். இம்முயற்சியினால் 1971 பெப்ரவரி 07 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழர் சுயாட்சிக் கழகம், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் சி. நாகராசா தலைமையில் வல்வெட்டித்துறையில் ஒற்றுமை மாநாட்டைக் கூட்டினர்.

தமிழ் மக்களின் ஏகோபித்த குறைந்தபட்சக் கோரிக்கைகளாக ஒன்பது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 17.02.1971 இல் கூடிய தமிழரசுக்கட்சியின் செயற்குழு, ஒற்றுமை மாநாட்டின் முடிவுகளை அங்கீகரித்தது.

### பிரதமருடன் பேச்சுவார்த்தையும் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்தலும்

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் சிலவற்றையாவது அரசியலமைப்பில் இடம்பெறச் செய்தல் வேண்டும் என்ற நோக்கில் தமிழரசுக் கட்சியின் சார்பில் செல்வநாயகம் தலைமையில் தூதுக் கோஷ்டியானது 1971 மார்ச் 6 இல் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவையும், அரசியல் விவகார அமைச்சர் கொல்வின் ஆர்.டி. சில்வாவையும் சந்தித்துப் பேசியது. தமிழ் மொழி உரிமை பற்றிய சில பகுதிகளை இடம்பெறச் செய்யும்படி தமிழரசுக்கட்சி பிரதமரிடம் வற்புறுத்தியது.

பிரதமரின் ஆலோசனைப்படி ஏனைய அமைச்சர்களையும் கட்சி சந்தித்துப் பேசியது. ஆனால் பயன் கிடைக்கவில்லை. மொழி உரிமை பற்றிக் கொடுத்த திருத்தங்கள் கூட நிராகரிக்கப்பட்டன. இதனால் தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறியது. அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரிக்க மறுத்த யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சி.எக்ஸ். மாட்டின் 15.7.1971 இல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

### தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு:<br>30 ஜீன் 1972 - யாழ்ப்பாணம்

தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு மு. இராசமாணிக்கம் தலைமையில் கூடியது. அரசியல் அமைப்பு தமிழ் இனத்தின் அடிமைச் சாசனம் ஆதலால் அது நிராகரிக்கப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எவரும் இதற்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடாது அவ்வாறு வாக்களிப்பின் அவ்வவ் தொகுதி வாக்காளர்கள் தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் எனக் கோரப்பட்டது.

தென்னிலங்கையில் ஆட்சியாளரின் செயலினால் தம் தொழில், கல்வி வசதிகளை இழந்தவர்கள் தமது உடைமைகளை வடக்கு - கிழக்கிற்கு மாற்றுமாறும் கோரப்பட்டனர்.

தீர்மானங்கள்:

1. சிங்கள மொழிக்கு அழிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்படல் வேண்டும்.
2. நாட்டின் அரசாங்கத்தை மதச் சார்பற்றதாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.
3. இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோரினதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும்.
4. தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

ஆட்சியாளருக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் முன்னாள் செனட்டர் நடராசா, ஆட்சியாளர் தனக்கு அளித்த சமாதான நீதவான் பட்டத்தையும் உத்தியோகப்பற்றற்ற நீதவான் பட்டத்தையும் மாநாட்டில் வைத்தே துறப்பதாக அறிவித்தார்.

### தமிழ் நாட்டிடம் தார்மீக ஆதரவு கோருதல்

தமிழ் இனத்தின் சுயாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழ் மக்களது நிலையை சர்வதேச ரீதியில் விளக்க வேண்டியது அவசியம் என உணர்ந்தனர். இதன் முதல் கட்டமாக தமிழ் நாட்டு மக்களின் ஆதரவினைப் பெற திரு.ஆ. இராசரத்தினம் தமிழ்நாடு சென்று அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனவர்த்தனன் தமிழ் நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சந்திக்க உதவினார். செல்வநாயகம், அமிர்தலிங்கம், மங்கையற்கரசி அமிர்தலிங்கம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோரைக் கொண்ட குழு 1972 பெப்ரவரியில் தமிழ் நாட்டுக்குச் சென்றது. தமிழ் நாடு ஆளுநர் கே.கோ, மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், தமிழக அமைச்சர்கள், தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ. சிவஞான கிராமணியார், பெரியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன், முன்னாள் முதலமைச்சர் திரு. பகவத்சலம், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத், ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் காமராஜர், செல்வாக்குப் பெற்றிருந்த சினிமா நடிகர்களான எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், அசோகன், மற்றும் முக்கியமான தொழில் அதிபர்கள், சட்ட வல்லுநர்கள், கல்விமான்கள், மாணவர் இயக்கங்கள், பத்திரிகையாளர்கள் என்போரைச் சந்தித்து இலங்கைத் தமிழரின் நிலை பற்றி விளக்கம் அளித்தனர்.

சந்தித்தவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கும் பிரதமர் இந்திரா காந்திக்கும் வெளியுலகிலும் எமது பிரச்சினையை விளக்க உதவுமாறு கூறினர். சென்னை மாநகரசபை மேயர் திருமதி. காமாட்சி ஜெயராமன் தலைமையில் செல்வநாயகத்துக்கு பொது வரவேற்பு அளித்துக் கௌரவிக்கப்பட்டது. உலகத்தமிழ்

இளைஞர் பேரவை கோகலே மண்டபத்தில் அதன் தலைவர் இரா. ஜனார்த்தனன் தலைமையில் செல்வநாயகத்திற்கு வரவேற்பளித்தனர். இவ்வரவேற்புக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும் உரையாற்றினர். எந்தத் தனிக்கட்சியோடும் பிரத்தியேகத் தொடர்பு கொள்ளாமல் எல்லாக் கட்சிகளோடும் உறவுகளைப் பேண முயன்றனர்.

### தமிழர் கூட்டணியின் தோற்றம்

தமிழ் அமைப்புகள் எல்லாம் தம் முரண்பாடுகளை மறந்து ஒற்றுமைப்பட வேண்டும் என்ற அடிப்படையில் திருகோணமலையில் கூட்டம் கூட்டினர். இது தொடர்பாக செல்வநாயகம் தமிழ் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், கட்சிசார்பற்ற பெரியோர்கள் என்போருக்கு அழைப்பு விடுத்திருந்தார். 04.05.1972 இல் திருகோணமலை நகர மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

07.02.1971 இல் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ஒற்றுமை மாநாட்டுக்கு அமைப்பு வடிவம் கொடுப்பதாகவே இக்கூட்டம் அமைந்தது. 'தமிழர் கூட்டணி' என்ற பெயரில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் சேர்ந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. செல்வநாயகம் தலைவராகவும் எஸ். ஞானமூர்த்தி, காசி ஆனந்தன் என்போர் இணைச்செயலாளர்களாகவும் சி. கதிருவேலுப்பிள்ளை, திரு.தா. திருநாவுக்கரசு, திரு.அ. குமரகுரு ஆகியோர் பொருளாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். அனைத்துக் கட்சிகளையும் கட்சிசாரா ஸ்தாபனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிரந்தரமான நடவடிக்கைக்குழு உருவாக்கப்பட்டது.

### மே 22 குடியரசு தினமும் பகிஷ்கரிப்பும்

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்த குடியரசு தினமான மே 22 ஆம் திகதியைப் பகிஷ்கரிப்பதென தமிழர் கூட்டணியும் அனைத்துத் தமிழ் மக்களும் முடிவுக்கு வந்தனர். அத்தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வரசியல் அமைப்பை நிறைவேற்றும் அரசியல் நிர்ணய சபையின் இறுதிக் கூட்டத்தை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். இதன்படி வடக்கு - கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 பேரில் 15 பேர் பகிஷ்கரித்தனர். தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தியாகராசா, நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் சி. அருளம்பலம் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினர் மாட்டின், மட்டக்களப்புத் தொகுதி சுயேட்சை உறுப்பினர் இராஜன் செல்வநாயகம் ஆகியோர் அரசியல் அமைப்பை ஆதரித்தனர். அரசியலமைப்பை ஆதரித்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் இரு தமிழ் உறுப்பினர்களும் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

கல்குடா தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவநாயகமும் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தம்பிராசாவும் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்தனர். மே 22 இல், தமிழ்ப் பிரதேசம் முழுவதும் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு பாடசாலைப் பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, சிங்கக் கொடியெரிப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. ஆங்காங்கே கண்டனக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

வண்ணார்பண்ணை ஆச்சிரம மண்டபத்தில் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் தமிழ்த் தலைவர்களால் குடியரசு அரசியல் திட்டத்தின் பிரதி தீக்கிரையாக்கப்பட்டது. 70க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, இ.போ.ச. சுப்பிரமணியம், வண்ணை ஆனந்தன் என்போரும் கைது செய்யப்பட்டனர்.

### தமிழ் மாணவர் பேரவை அரசியல் போராட்டங்களைக் கைவிடலும் ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்

தரப்படுத்தல் பிரச்சினையுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு தனியொரு நாடுதான் என்ற முடிவுக்கு வந்தது. இதற்கு ஆயுதப் போராட்டமே ஒரே ஒரு வழி எனத் தீர்மானித்தது. இதனாலும் பொலிஸ் கெடுபிடிகளினாலும் அரசியல் போராட்டங்களைக் கைவிட்டுவிட்டு ஆயதப் போராட்டத்தை முன்னெடுக்க 1971 இலேயே ஆயத்தமாகினர். இதற்கு பங்களாதேசின் முக்தி பாஹினி இயக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டனர்.

ஆயுதங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டதோடு ஆங்காங்கே ஆயுத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். 1972 மே 22 குடியரசு தினத்திலும் வன்முறை நடவடிக்கைகளில் இவர்கள் பங்கெடுத்தனர். பஸ் எரிப்பு, தேசியக் கொடி எரிப்பு என்பவற்றில் ஈடுபட்டனர். இவர்களின்

முதல் தீவிரத் தாக்குதல் நடவடிக்கையாக பிரதியமைச்சர் மீதான உரும்பிராய்த் தாக்குதல் நடைபெற்றது.

1972 ஆம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு வருகை தந்த பிரதியமைச்சர் சோமவீர சந்திரசிறியின் காருக்கு சிவகுமாரனால் குண்டு வீசப்பட்டது. மயிரிழையில் பிரதியமைச்சர் தப்பினார். கொழும்பில் திசவீரசிங்கமும், ஜீவராசாவும் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் தியாகராசாவைச் சுட்டதில் தியாகராசா உயிர் தப்பினார். கல்வியங்காடு, கொண்டலடி வைரவ கோவில் மூலஸ்தானத்தில் இவர்கள் மறைவாக வைத்திருந்த கைக்குண்டுகள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது. இதன் பின்னரான படையினரின் தேடுதலில் மாணவர் பேரவையின் மத்திய குழு உறுப்பினர்களின் பெரும்பாலானவர்களும் முன்னணி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். 1972 இன் இறுதியில் மாணவர் பேரவை சிதைவடைந்தது.

### தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கைகளும் மூன்று மாத அவகாசமும்

புதிய அரசியல் திட்ட அமுலாக்கத்தைத் தொடர்ந்து தனி நாட்டுக்கான போராட்டத்தை நடாத்த வேண்டும் என்ற குரல் தமிழ் மக்கள் மத்தியில் வலுப்பெற்றது. இது தொடர்பாக தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு 1972 யூன் 25 இல் கோப்பாயில் கூடி ஆராய்ந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியைத் துறப்பதால் பலன் இல்லை என்றும், அரசுக்கு ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அனுப்புவது என்றும், மூன்று மாத கால அவகாசத்தினுள் கோரிக்கைக்கு (அரசியலமைப்புக்குள் திருத்தங்களைக் கொண்டுவராத பட்சத்தில்) இணங்காவிட்டால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களின் விடுதலையைக் காண சாத்வீக வழியில் போராடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கைகள்

1. அரசியல் அமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழ் மொழிக்கும் அளிக்கப்படல் வேண்டும்.
2. இலங்கை மதச்சார்பற்ற அரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டு எல்லா மதங்களையும் சமமாகப் பேணி வளர்த்தல் வேண்டும்.
3. இந்நாட்டைத் தம் தாயகமாகக் கருதும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமை வழங்கும் குடியுரிமைச் சட்டங்கள் அரசியல் அமைப்பில் இடம்பெறல் வேண்டும்.
4. நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டப்படக் கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும்.
5. சாதியையும் - பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பதையும் அரசியல் சட்ட மூலம் ஒழித்தல் வேண்டும்.
6. அதிகாரம் பரவலாக்கப்பட்டு மக்கள் பங்கு கொள்ளும் ஜனநாயக ஆட்சி அமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இக்கோரிக்கைகள் அடங்கிய மகஜர் தமிழர் கூட்டணித் தலைவர் செல்வநாயகத்தினால் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அரசாங்கம் இக்கோரிக்கைகளை ஏறெடுத்தும் பார்க்காது விட்டது.

### 1972 ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் திட்டமும் அதன் பேரினவாதத் தன்மைகளும்

அரசியல் திட்டத்தின் பின்வரும் அம்சங்கள் பேரினவாதத் தன்மைகளைக் கொண்டு விளங்கின.

1. தேசிய அரசுப் பேரவை

தேசிய அரசுப் பேரவை மீயுயர் கருவியாக்கப்பட்டு அனைத்து அதிகாரங்களும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. தேசிய அரசுப் பேரவையின் 157 பேரில் 19 பேர் மட்டுமே தமிழர்கள்.

இது தமிழர்களுக்கு எதிரான எச்சட்டத்தையும் உருவாக்கும், நிறைவேற்றும் நிலையில் இருந்தது. இது விடயத்தில் சோல்பரி அரசியல் திட்டத்தில் பெயரளவில் இருந்த 29 ஆவது பிரிவு, கோமறைக்கழகம், நீதிமன்றங்களின் நீதிப்புனராய்வு அதிகாரம் என்பனவும் நீக்கப்பட்டன. அரச சேவை உத்தியோகத்தர்கள் சம்பந்தமான பொறுப்புகள் அரசசேவை ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்டு அமைச்சரவையின் மீது ஒப்படைக்கப்பட்டமையானது, இன ரீதியான பாரபட்சத்திற்கு வழிவகுத்தது. முன்னைய நீதிச்சேவை

ஆணைக்குழுவின் பொறுப்புகளை அமைச்சரவையின் மீது பொறுப்பித்தமையானதும் இன ரீதியான பாராபட்சத்திற்கு வழிவகுத்தது.

**2. மொழி**

அ. அரசகரும மொழி

சிங்கள மொழி அரச கரும மொழியாக இருந்தது. அது 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டப்படி அரசகரும மொழிச் சட்டமாக இருந்ததே தவிர அரசியலமைப்புச் சட்ட அந்தஸ்தைப் பெறவில்லை. புதிய அரசியலமைப்பு மூலம் இது அரசியலமைப்புச் சட்ட அந்தஸ்தைப் பெற்றது. அதேவேளை தமிழ் மொழியின் உபயோகம் 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கிணங்க இருந்தது. எனினும் இவை துணைநிலைச் சட்டங்களாக இருக்குமே தவிர அரசியலமைப்பின் ஏற்பாடாக பொருள்கொள்ளக் கூடாது என இருந்தது. தமிழ்மொழியின் உபயோகத்திற்குக் கூட அரசியலமைப்பு அந்தஸ்துக் கொடுக்க விரும்பவில்லை என்பதை இது காட்டியது.

ஆ. சட்டவாக்கமொழி

சட்டங்கள் யாவும் சிங்கள மொழியில் சட்டமாக்கப்படல் வேண்டும். அவ்வாறு இயற்றப்படும் சட்டத்திற்கு தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்று இருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது. இதன் மூலமாக சட்டவாக்க மொழி அந்தஸ்து தமிழ் மொழிக்கு கொடுக்கப்படாமல் இருந்தது.

நடைமுறையில் உள்ள துணைநிலைச் சட்டங்கள் அனைத்தும் சிங்களத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் உடனடியாக வெளியிடப்பட்டன. அதனை தேசிய அரசுப்பேரவை ஏற்றுக்கொண்ட பின்னர் சிங்கள மொழியில் உருவாக்கப்பட்டவற்றை மட்டும் சட்டமாகக் கொண்டு, ஏனையவற்றை மொழிபெயர்ப்பாகக் கொண்டனர். மூலச்சட்டங்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும் சிங்களத்திலுள்ள சட்டங்களே மேலானதாகக் கருதப்பட்டது.

இ. நீதிமன்றங்களின் மொழி

நீதியை நிர்வகிப்பதற்கு சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், நியாய சபைகள் என்பவற்றினதும், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், ஏனைய நீதி நிறுவனங்கள், 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்க சபைகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இணக்க சபைகள் ஆகிய அனைத்தினதும் கரும மொழியாக இலங்கை முழுவதுமாக சிங்கள மொழி இருந்தது.

இதன்படி வழக்குரைகள், நடவடிக்கைகள், தீர்ப்புகள், கட்டளைகள், நீதிமுறைச் செயல்கள், சட்ட நிர்வாகச் செயல்கள் என்பவற்றின் பதிவேடுகள் அனைத்தும் சிங்கள மொழியில் இருந்தன. வருங்காலத்தில் உருவாக்கப்படும் எந்நீதி நிறுவனங்களுக்கும் மேற்கூறிய ஏற்பாடுகள் பொருத்தமுடையவையாக இருந்தன.

மேற்கூறிய நிறுவனங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும், முஸ்லிம்கள் தொடர்பான காதி நீதிமன்றத்திலும் வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பவற்றைத் தமிழில் சமர்ப்பிக்கலாம். நடவடிக்கைகளிலும் தமிழில் பங்குகொள்ளலாம் எனவும் இருந்தது. இத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பதிவேடுகளின் பொருட்டு சிங்கள மொழிபெயர்ப்புகள் தயாரிக்கப்பட்டன.

**3. பௌத்த மதம்**

குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மைத் தானம் வழங்குதல் வேண்டும் எனவும், பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டது.

**4. அரச சேவை, நீதிச்சேவை**

அரசசேவை சம்பந்தமான பொறுப்புகள் அனைத்தும் அரசசேவை ஆணைக்குழுவிடமிருந்து நீக்கப்பட்டு அமைச்சரவையின் மீது பொறுப்பாக்கப்பட்டது. கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிகள், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் என்பவர்களது பொறுப்புகளும் நீதிச்சேவை ஆணைக்குழுவிடமிருந்து நீக்கப்பட்டு அமைச்சரவையின் மீது பொறுப்பாக்கப்பட்டன. இதன் மூலம் இனரீதியான பாரபட்சத்திற்கு வழி ஏற்பட்டது. மொத்தத்தில் 1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் பேரினவாத ஆதிக்கத்தன்மைக்கு அரசியலமைப்பு வடிவம் கொடுத்ததாகவே காணப்பட்டது.



● மு. திருநாவுக்கரசு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், ஈழத்தின் புகழ்மிக்க அரசியல் ஆய்வாளராக அறியப்பட்டவர். தேசியம், ஜனநாயகம், ஏகாதிபத்தியம் குறித்த விவாதங்களை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக எழுப்பிவருபவர். இலங்கை இனப்பிரச்சினையின் தோற்றுவாய் குறித்தும், சிங்கள ராஜதந்திரம் குறித்தும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அரசியல், ராஜதந்திர நகர்வுகள் பற்றியும் ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளவர். ஈழத்து அரசியலை நுணுகிய, விரிந்த தளத்தில் தமிழில் ஆய்வுகளை நடத்தும் போக்கினை நிர்ணயிப்பதில் மு. திருநாவுக்கரசுவின் பங்கு தலையாயது. இலங்கை அரசியல் யாப்பு 1931–2016, இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், பூகோளவாதம் புதிய தேசியவாதம் என்பன இவரது படைப்புகளாகும்.

இனப்படுகொலை என்பது ஏதோ ஒரு நாளில் நிகழ்ந்துவிடும் தன்னியல்பான நடவடிக்கை அல்ல. அது ஓர் ஒடுக்கும் சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது நீண்டகால அளவில் படிப்படியாகச் செயற்படுத்தும் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளின் இறுதி விளைவு. எனவேதான் அதனைக் 'கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை' என அழைக்கிறோம். இனப்படுகொலை நடைபெறும் பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அரசற்ற தேசிய இனங்கள் எல்லாம் விடுதலை அடையலாம் என்றில்லை. ஆனால் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு, வெற்றி பெறுவதற்கான கடினமான பாதையாவது உண்டு. ஈழத்தமிழர் சார்ந்து காணப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடிவம் மிகவும் வலுவானது. ஈழத்தமிழர் சார்ந்த அகத்தேசிய நிலை, உள்நாட்டு நிலை, அண்டை நாட்டு நிலை, அயல் நாடுகள் மற்றும் உலக நாடுகள் சார்ந்த நிலை, புவியியல் – வரலாற்று நிலை என்பனவற்றால் அது வலுவாக இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அதனை விருப்பு – வெறுப்பிற்கு அப்பால், துல்லியமாக அளவீடு செய்யும் எத்தனமாக 'இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் தோற்றமும் இன்றைய நிலையும்: கோட்பாடு – நடைமுறை – வரலாற்றுப் போக்கு' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைகிறது.

# இலங்கை மக்களின் வாழ்வில், தீவின் புவியியல், அரசியல், புவிசார் அரசியல், புவிசார் வரலாற்றுக் கட்டமைப்புகளின் பங்கு

இதுவரை இங்கு நாம் பேசிவந்த நடைமுறை சார்ந்த பின்னணியில் இலங்கைத் தீவில் நிகழும் ஈழத் தமிழருக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை அதற்கே உரிய வகையில் முழுமைப்படுத்தப்பட்ட வரலாற்றுப் பார்வைக்கூடாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஈழத் தமிழருக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான முக்கிய அடிப்படை இந்து மாகடலின் மையத்தில் இலங்கை - இந்திய அரசுகள் சார்ந்து அமைந்திருக்கக்கூடிய புவிசார் - அரசியல் அமைவிடக் கட்டமைப்பாகும். இந்தவகையில், இலங்கை - இந்திய அரசியலினதும், கூடவே இந்து மாகடலில் தத்தமக்கான நலன்களைக் கொண்ட வெளி அரசுகளினது நிலைப்பாடுகளினாலும், அவ்வவ் காலகட்ட வரலாற்றுப் பரிமாணங்களுக்கேற்ப ஈழத் தமிழருக்கு எதிரான இனப்படுகொலையும் பல்பரிமாணம் கொண்ட தொடர் வளர்ச்சிப்போக்கான கட்டமைப்பைப் பெறுகிறது. இத்தகைய புவிசார் - அரசியல் சூழலின் கைதிகளாய் விளங்கும் ஈழத் தமிழரே இதில் முதற்தரப் பலிக்கடாக்களாய் மாள்கின்றனர்.

புவியியல் கட்டமைப்பு (Natural Geography), அரசியல் - புவியியல் கட்டமைப்பு (Political Geography), புவிசார் - அரசியல் கட்டமைப்பு (Geopolitical structure), புவிசார் - வரலாற்றுக் கட்டமைப்பு (Geohistorical Structure) என்பனவற்றுடன் கூடவே பொருளாதாரம், மானிடவியல், சமூகவியல், பண்பாட்டு அம்சங்களும் பின்னிப்பிணைந்து அதன் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கின்றன.

எந்த ஒரு கட்டமைப்பிலும் (Structure) அதற்குரிய முறைமை (System) இருக்கும். அந்தக் கட்டமைப்பின் அடிப்படையிலான முறைமை அது சார்ந்தவற்றின் வாழ்நிலையை நிர்ணயிக்கின்றது. இந்த வகையில் கட்டமைப்பும் முறைமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகின்றன. புவியியல் கட்டமைப்பை இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று இயற்கையான புவியியற் கட்டமைப்பு (Natural Geography); மற்றையது அரசியல் அதிகாரம் சார்ந்த புவியியல் கட்டமைப்பு (Political Geography).

இந்தப் புவியில் மனிதனால் வகுக்கப்படும் ஒரு நாடு என்பதே அரசியற் புவியியல் அமைப்புதான்; அத்துடன் கூடவே ஒரு நாட்டுக்குள் மனிதனால் அரசியல் ரீதியாக வகுக்கப்படும் அரசியல் அதிகாரம் கொண்ட மாநில முறைமை அல்லது மாகாண முறைமை என்பனவும் அரசியற் புவியியல்தான்; நிலப்பரப்பின் மீது ஒரு மக்கள் கூட்டத்திற்கு இருக்கக்கூடிய இனத்தனித்துவத்தையும் அரசியற் பலத்தையும் உடைக்கக்கூடிய வகையில் பிற இனங்கள் திட்டமிட்டுக் குடியேறுவது அல்லது அந்த நிலப்பரப்பைத் துண்டாடுவது போன்ற இனவழிப்புச் செயல்கள்கூட அரசியற் புவியியல் (Political Geography) என்ற வடிவத்துள் அடங்குகின்றன.

கட்டமைப்பு (Structure) இயல்பாகவே தனக்கான முறைமையைக் (System) கொண்டிருக்கும் போதிலும், அந்தக் கட்டமைப்பின் அடிப்படையோடு இணைந்து மனிதன் தனக்குச் சாதகமான முறைமை மாற்றங்களை (System change) மேற்கொள்ள முடியும். உதாரணமாக அரிசியில் இருந்து நேரடியாக சோறு அல்லது கஞ்சி சமைக்கலாம். ஆனால் அந்த அரிசியை மாவாக மாற்றிவிட்டால் அதிலிருந்து அப்பம் அல்லது கூழ் சமைக்கலாம். இங்கு அரிசியின் அடிப்படைத் தன்மை இருக்கும். அதனை அதன் அடிப்படைத் தன்மையில் வைத்து, ஆனால் முறைமை மாற்றத்திற்கு உட்படுத்தி, விரும்பிய வேறு ஒன்றைப் பெற முடிகிறது.

ஒரு புவியியல் அமைவிடத்தை வேறொரு இடத்திற்கு நகர்த்த முடியாது; ஏனெனில் அது இயற்கையால் உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த புவியியல் கட்டமைப்பின் மீது அதற்குட்பட்டு நல்லதாகவோ, அன்றிக் கெட்டதாகவோ, முறைமை மாற்றங்களைச் செய்யலாம். இந்த வகையில் இயல்பான புவியியற் கட்டமைப்பின் மீது பலாத்காரமான அல்லது உணர்வுபூர்வமான அரசியற் பலத்தைப் பிரயோகிக்கும் போது புவியியல் கட்டமைப்பாக (Natural Geography) இருப்பது அரசியல் - புவியியல் (Political Geography) கட்டமைப்பாகப் பரிணமிக்கின்றது.

எனவே, இக்கட்டமைப்புகளை ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற பூட்டப்பட்ட தனிப் பெட்டகங்களாக நோக்காமல், அரசியல் - புவியியல் (Political Geography), புவி - அரசியல் (Geopolitics), மெய்யியல் (Philosophy) என்ற மூன்றையும் பின்னிப்பிணைத்துப் பார்க்க வேண்டும்.

புவிப்பரப்பில் 71% கடல், 29% நிலம். அதிலும் 15% நிலத்தில்தான் மனிதன் வாழ முடியும். நீரின்றி ஆகாது நிலம்; நிலம் இன்றி ஆகாது மக்களும் அரசும். நிலத்தில் அரசு இருந்தாலும், கடலை ஆள்பவனே உலகை ஆள்வான் என்கிறது அரசியல் கோட்பாடு. ஆதலால், நிலத்தையும் நிலத்தைச் சூழ்ந்த கடலையும் சார்ந்த அரசியலை புறவய (Objective), பருப்பொருள் (Concrete) நோக்கு நிலையிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். புவிசார் - அரசியல் கட்டமைப்பானது பெரிதும் இத்தகைய புறவய - பருப்பொருள் பரிமாணத்தைக்

கொண்டது. புவியியல் அடிப்படையில் அரசியல் உறவை கௌடில்யர் பின்வருமாறு கூறுகிறார்: “உனது அண்டை நாடு உனது இயல்பான எதிரி; மறுபுறம் உனது அண்டை நாட்டின் அண்டை நாடு உனது இயல்பான கூட்டாளி (*Your neighbor is your natural enemy and your neighbor's neighbor on the other side your natural ally. - Kautilya*)”

மேற்படி புவியியல் அமைவிடம் சார்ந்த நண்பன் - எதிரி என்ற மதிப்பீட்டுக்கு அப்பால், பொதுவான நண்பன் - எதிரி சார்ந்து கௌடில்யர் பின்வருமாறு கூறுவதைக் கவனிக்கலாம்: “*He who has a thousand friends has not a friend to spare, And he who has one enemy will meet him everywhere. The enemy of my enemy is my friend.*”

“ஆயிரம் நண்பர்கள் உள்ளவனுக்குத் தக்க தருணத்தில் ஒரு நண்பனும் இல்லாமல் இருப்பான். ஆனால், ஓர் எதிரியை மட்டும் கொண்டுள்ளவனுக்கு அந்த ஓர் எதிரி எல்லாத் தருணங்களிலும் எதிரியாக இருப்பான்” என்று கூறும் கௌடில்யர், “என் எதிரியின் எதிரி என் நண்பன்” என, சாதாரண நண்பனை விடவும் எதிரியின் எதிரியை மேலும் பலமான நண்பன் என்று குறிப்பிடுகிறார்.

இங்கு, சாதாரணமான எதிரிகளுக்கு இடையே நிரந்தரப் பகைமை இல்லாது போவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால், புவியியல் அமைவிடம் நிரந்தரமானது என்பதால், புவியியல் அடிப்படையிலான எதிரி நிரந்தரமான எதிரியாவான். ஆதலால், புவியியல் அமைவிட ரீதியான நண்பன் - எதிரி உறவு, சாதாரண நண்பன் - எதிரி உறவை விடவும் அதிக வலிமையானது.

தீவு அரசு, தீவு நாடு, தீவுத் தேசம் (Island Nation) என்பன தரைவழி எல்லையைக் கொண்ட நாடுகளை விடத் தற்காப்பில் ஒப்பீட்டு ரீதியாகப் பலமானவை. இலங்கை ஒரு தீவாக இருப்பதுதான் அதனை ஓர் அரசாகவும், நாடாகவும் இருப்பதைச் சாத்தியமாக்கியுள்ளது. ஆனால், ஒரு பெரும் கடலால் பிரிக்கப்பட்டதல்லாது, இந்தியாவுக்கு அருகே 27 கிலோமீட்டர் (14.4 Nautical Miles) அகலமுள்ள சிறிய பாக்கு நீரிணையால் மட்டும் பிரிக்கப்பட்டிருப்பது இலங்கைக்குப் பெரும் சவாலாக உள்ளது.

அதாவது, தீவு என்பது வரமாகவும், ஆனால் இந்தியாவுக்கு மிக அருகே தமிழகத்தோடு ஒட்டியவாறு இருக்கும் சிறிய பாக்கு நீரிணை அதற்குச் சாபமாகவும் உள்ளது. இலங்கைக்குப் பாக்கு நீரிணை ஒருபுறம் வரமாகவும், மறுபுறம் சாபமாகவும் இரட்டைப் பரிமாணங்களைக் கொண்டுள்ளது. இதுவே இந்திய அரசியலையும், ஈழத் தமிழர் தலைவிதியையும் நிர்ணயிக்கும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான அடிப்படையாக அமைந்துள்ளது.

**இந்தியாவுடன் இலங்கை கொள்ளும் அரசியல், பொருளாதார உறவுகளில் உள்ளார்ந்து இருப்பது, இந்திய எதிர்ப்புணர்வே**

புவியியல் அச்சரத்தின்படி, ‘அண்டை நாடு உனது எதிரி’ என்ற வகையில் இலங்கையின் அண்டை நாடான இந்தியா, இலங்கைக்கு நிரந்தர எதிரி. அதேபோல், ‘அண்டை நாட்டின் அண்டை நாடு உனது நண்பன்’ என்ற வகையில் இந்தியாவின் அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மியன்மார் (பர்மா) ஆகியவை இலங்கையின் நிரந்தர நண்பர்களாகக் கருதப்படுகின்றன.



Image Source - www.wikiwand.com

பௌத்தம் பிறந்தது இந்தியாவில்; அந்த இந்தியாவிலிருந்துதான் இலங்கைக்குப் பௌத்தம் பரவியது. ஆனால், அந்தப் பரவலும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியப் பேரரசின் அரசியல் ஆதிக்கத்தின் வெளிப்பாடாகவே அண்டை நாடான இலங்கையில் நிலைபெற்றது. பௌத்தம் பிறந்த இந்தியா, அடிப்படையில் இந்துமதத்தின் நிலம். அங்கு வடக்கிலும் தெற்கிலும் சைவம் - வைணவம் போன்ற இந்துமதப் பிரிவுகள் பௌத்தத்தை முற்றாக அழித்துவிட்டன. மேலும், ஈழத் தமிழர்கள் பரந்த இந்தியாவின் இந்துமதத்தையும், தமிழகத்தில் நிலவும் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் கொண்டவர்களாக இருக்கும் நிலையில், சிறிய பாக்கு நீரிணையைத் தாண்டி இந்தியாவின் ஆதிக்கமும்




**பாக்கு நீரிணை**

Image Source - www.wikiwand.com

செல்வாக்கும் இலங்கைக்கு இலகுவாகப் பரவிச் சிங்களப் பௌத்தத்தைக் காவுகொள்ளும் என்கிற அச்சம் சிங்களப் பௌத்தர்களிடத்தில் இயல்பாகவே நிலவுகிறது.

2500 ஆண்டுகளுக்கு குறையாத மத, பண்பாட்டு, அரசியல், இராணுவ, வரலாற்று அனுபவங்களும் இதற்கு உடந்தையாக உள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. புவியியல் - அரசியல் - வரலாற்று அர்த்தத்தில் இலங்கைத் தீவு, இந்தியாவின் இயல்பான நீட்சியே ஆகும்.

*"Sri Lanka is divided into two geographic zones. The southwest of the island is Sri Lanka's core ... The northern part of the island is divided into the inland Vanni region and the Jaffna Peninsula on Palk Bay. The north is connected to India by a chain of islands and sandbars known as Adam's Bridge, which has historically eased the movement of goods and people to and from the mainland."*

*"Sri Lanka's main geographic challenge is to protect its core around Colombo, while promoting integration with the north.*

*The most recent challenge to Colombo's dominance was from the Tamil Tigers insurgent group, who used the Vanni region and Jaffna Peninsula regions as bases ...*

*Uniting the north with the core will allow Colombo to take advantage of lowend manufacturing leaving China, using its underdeveloped north as cheap labor."*

மேற்கண்ட கருத்தைக் கவனத்தில் கொண்டு, இலங்கைத்தீவு - ஈழத் தமிழர் - இந்தியா - சீனா ஆகியவற்றைச் சார்ந்த புவியியல் கட்டமைப்புக்குள் வைத்து, இதற்குள் அடங்கக்கூடிய புவியியல் அமைவிடம் சார்ந்த மூலோபாயத்தை முதற்கண் மிகுந்த கூர்மையுடன் அணுகுவது அவசியம்.

அரசியல் - புவியியல் ரீதியாக இலங்கை இரண்டு பிரதேசங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று, கொழும்பை அச்சாகக் கொண்ட தென்மேற்கு மையப்பகுதி. அடுத்து, பாக்கு நீரிணையுடன் ஒட்டியவாறு அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் வன்னியை உள்ளடக்கிய வடபகுதி. இந்த வடபகுதி தீவுத் தொடர்களாலும், அடம்ஸ் பிரிட்ஜ் (Adam's Bridge) எனப்படும் தொடர் மண்மேடுகளாலும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவுக்கும் வட இலங்கைக்கும் இடையே வரலாற்று ரீதியாக மக்கள் நடமாட்டத்தையும் பொருள் நகர்வுகளையும் இலகுபடுத்தியுள்ளது.

இந்தப் பின்னணியில், அரசியல் - புவியியல் ரீதியில் இலங்கையின் முக்கிய சவாலாக இருப்பது:

1. கொழும்பைச் சூழ்ந்த தென்மேற்கு மையப் பகுதியை, குறிப்பாக இந்தியாவிடமிருந்து பாதுகாப்பது,
2. வடக்கை இந்தியாவிலிருந்து விலக்கி, கொழும்பு மையத்துடன் இரண்டறக் கலப்பதாகச் செய்வது.

இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, ஆசியாவில் முதன்மையான அரசியல் - இராணுவ - பொருளாதார வல்லரசாக உருவெடுத்திருக்கும் இந்தியாவின் அண்டை நாடான சீனாவின் மலிவான பொருளாதார சக்தியை, கொழும்பு வழியாக யாழ்ப்பாணத்திற்குப் பரப்பி, வடக்கை பொருளாதார ரீதியாக

கொழும்புடன் இணைக்க, அதனால் வடக்கை கொழும்பு மையத்துடன் கரைத்து விடுவதற்கான மூலோபாயத்தை இன்றைய இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்றது.

இது, வல்லரசுகளுடன் இணைந்து கட்டமைக்கப்படும் 'பொருளாதார இனப்படுகொலைக் கட்டமைப்பு' ஆகும்.

**நலன்கள் (Welfare) - தேவைகள் (Needs) - தர்மம் (Dharma)**

இலங்கைத் தீவானது இந்தியாவுக்கு மிக அருகே, இந்துப் பெருங்கடலின் மையத்தில் வர்த்தக, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் கொண்டுள்ளது. இதனால், சமுத்திரங்களையும் கண்டங்களையும் தாண்டி உலகப் பெருவல்லரசுகளும் இலங்கையில் தத்தம் நலன்களுக்காகக் காலூன்றுகின்றன. குறிப்பாக, மேற்குலக வல்லரசுகளின் போட்டி இதில் முக்கியமானது. இதில் பங்கு வகிக்கும் அண்டை நாடான இந்தியாவும், அண்டை நாட்டின் அண்டை நாடான சீனாவும், அமெரிக்கா உள்ளிட்ட உலகப் பெருவல்லரசுகளும், இலங்கைத் தீவையும் இலங்கையின் இனப் பிரச்சினையையும் தத்தம் நலன் சார்ந்த நோக்கில் அணுகுகின்றன.

நலன்களே தேவைகள்; தேவையே தர்மம். உயிரை உயிர் உண்டு வாழ்வதே உயிர் வாழ்வு என்ற ரீதியில், அனைத்துத் தர்மங்களும் ஆக்கிரமிப்புகளைப் பொன்முடிகளாய் சூடிக் கொண்டவைகளே. ஆதலால், தேவை எதுவோ அதுவே தர்மத்தை வடிவமைக்கிறது. எனவே, தர்மம் என்பது தேவை. இந்த வகையில், தேவை, தர்மம் என்ற மணிமுடியைச் சூடிக் கொள்கிறது. ஆதலால், உள்ளடக்கத்தில் தேவைதான் தர்மம்; தர்மம்தான் தேவை.

மொத்தத்தில்:

தர்மம் - தேவை

தேவை - தர்மம்

இந்தச் சூத்திரத்தின் ஊடாக, புவிசார் - அரசியல் (Geopolitics), அரசியல் - புவியியல் (Political Geography - Politically Formed Geographic Region), உலகளாவிய அரசியல் (Global Politics) ஆகியவற்றை எல்லாம் காலகட்ட வளர்ச்சிக்கு ஏற்ப ஒருங்குசேரக் கணக்கிலெடுத்து, ஈழத் தமிழருக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைப் பெரிதும் விஞ்ஞானபூர்வமாகவும், நடைமுறை சார்ந்தும் எடைபோட முடியும்.

இறுதி அர்த்தத்தில்:

தேவையிலிருந்து தர்மம் பிறக்கிறது

தேவையிலிருந்து உறவு பிறக்கிறது

தேவையிலிருந்து சண்டை பிறக்கிறது

தேவையிலிருந்து சமாதானம் பிறக்கிறது

தேவை என்ற ஒரு புள்ளியிற்தான் பரஸ்பரத் தேவைகள், விட்டுக்கொடுப்பு, கொடை, அபகரிப்பு, ஆக்கிரமிப்பு ஆகிய அனைத்தும் சந்திக்கின்றன. ஆதலால், அனைத்தையும் அவரவர் தேவைகளின் அடிப்படையில் எடைபோட்டு, அதற்கிணங்க வகுக்கப்படும் சாத்தியமான சமன்பாடுகளின்படி அசைவை, நகர்வை, வாழ்வை, அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

புனிதமாகச் சொல்லப்படும் தெய்வீகக் காதலேயானாலும், “நான் உன்னைக் காதலிக்கிறேன்” என்பது “உன்னில் என்னைக் காதலிக்கிறேன்” என்ற தத்துவார்த்த உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்ற உண்மைக்குப் புறம்பாக அமைய முடியாது.

இவற்றைக் கணக்கில் கொள்ளாமல் பேசப்படும் எல்லாவிதமான தூய இலட்சியவாதங்களும், உயிரை உயிர் உண்டு வாழும் உயிரியல் தர்மத்திற்குள் ஈழத் தமிழினத்தை உண்ணப்படும் பலியாடுகள் ஆக்குவதில் முடிவடையும்.

முதலாவது அர்த்தத்தில், ஈழத் தமிழர்கள் புவிசார் அரசியல் சூழலின் கைதிகள். இலங்கை - இந்தியா அரசுகளின் நலன்சார் பாக்குவெட்டிப் பிடிக்குள்ளும், கூடவே இந்தியாவின் அண்டை நாடான சீனாவினதும், உலகப் பெருவல்லரசுகளினதும் கூட்டுப் பிடிக்குள்ளும் அகப்பட்டிருக்கும் அப்பாவி மக்கள்.

இவ்வகையில், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது சூழலால், அன்னியர்களால், எதிரிகளால் மட்டுமன்றி, சொந்தத் தலைவர்களின் தவறான நடவடிக்கைகளினாலும் கட்டமைக்கப்படுகின்றது என்ற துயரகரமான பக்கத்தையும் கணக்கில் எடுத்துக் கணிப்பீடு செய்ய வேண்டும். இத்தகைய புவிசார் கட்டமைப்புக்குள் வைத்து இதன் வரலாற்று வளர்ச்சிப் போக்கை மிகச் சுருக்கமாகப் பார்க்க வேண்டியது அவசியம்.

# நாவலப்பிட்டி மண்ணில் உருவான ஆளுமை: எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, 'மலையக வீதிப்பாடல்கள்' உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக 'மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்' எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.



**அருணாசலம் லெட்சுமணன்**

'ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்' அதிபரான அருணாசலம் லெட்சுமணன், 'நிகர்' சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

அறுபதுகளுக்குப் பிந்தைய நாவலப்பிட்டி மண்ணில் உருவான கவிதைகளுக்குச் சொந்தக்காரராகத் திகழ்ந்த எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளையின் பங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சமூகப் பொறுப்புணர்வை மையமாகக் கொண்ட மலையக வீதிப்பாடல்களை ஆராயும் போது, பெரியாம்பிள்ளை என்ற பெயர் தவிர்க்க முடியாததாகின்றது. எனினும், அவரது எழுச்சிப் பாடல்களில் பல எங்களிடம் இல்லாத நிலை, அவரைப் பற்றிய முழுமையான ஆய்வை மேற்கொள்ள முடியாமைக்குக் காரணமாக இருந்து வருகிறது. அவரை நேரடியாகக் கண்டவர்கள், அவரது உடலியங்குச் சிறப்புகளைப் பற்றி சில குறிப்புகளை வழங்கினாலும், அவரது புகைப்படம் இல்லாமை அவரது உருவத்தைத் தெளிவாக அடையாளப்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்துகிறது. “நாவலப்பிட்டி மொண்டிகிறிஸ்டோ அவரது பிறப்பிடமாகும். இ.தொ.கா. மாநாடுகள் நடைபெற்ற இடங்களில் அவர் தனது பாட்டுப் புத்தகங்களை விற்பனை செய்து வந்தார். பெரும்பாலும் தொழிலாளர் பிரச்சினைகளை முன்வைக்கும் வகையிலேயே அவரது பாடல்கள் அமைந்திருந்தன. அதேவேளை, காந்தியின் சத்தியாக்கிரகம், இந்திய சுதந்திரப் போராட்டம் போன்ற கருப்பொருட்களையும் அவர் பாடல்களாக இயற்றி, பாடி, விற்பனை செய்தார்” என பெ. முத்துலிங்கம் வழங்கியுள்ள குறிப்பும் கவனிக்கத்தக்கது.

முருக பக்தராக விளங்கிய பெரியாம்பிள்ளை, முருகன் மீதான ஆழ்ந்த பக்தியுணர்வில் பல பாடல்களை இயற்றிப் பாடியுள்ளார். முருகனை மையமாகக் கொண்ட அவரது பக்திப் பாடல்கள் இன்று வரை பெருமளவில் கிடைக்கின்றன. அதேசமயம், முருகன் பக்தியுடன் இணைத்து சமூக அவலங்களையும் உட்சுமந்து அவர் பாடல்களை இயற்றியிருந்தார். 1926.07.07 அன்று பிறந்து, இம்புல்பிட்டியில் வசித்து வந்த அ. கந்தையா அவர்கள், பெரியாம்பிள்ளையை நன்கு அறிந்தவராவார். பெரியாம்பிள்ளை இயற்றிப் பாடிய பாடல்களில் ஒன்றை அ. கந்தையா அவர்கள் பாடிக் காட்டியதன் மூலம், அவரது படைப்புகளை நெருங்கிச் சுட்டிக்காட்டும் வாய்ப்புக் கிடைத்தது.

“சுருதி மலை தன்னில் வாழும்
சுப்ரமணியா உன்னை ஸ்தோத்தரித்தேன்
இந்த வேளை நீ வாராய்
தோகை மயில் மீது நீ வாராய்
ஐயா முருகையா
சிக்கந்தன் மலை தன்னில் இருப்போனே முருகா
அக்கந்த தலை தனில் விழிப்போனே
அக மன்னவர் சுகம் எய்திய
பெரியாம்பிள்ளை கவி பாட
ஆனந்தம் மீது ஆனந்தம் ஆனந்தம்”

அந்தப் பாடலை மிகுந்த உணர்வோடு பாடிய பின்னர், கந்தையா அவர்கள் அதனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கிறார். அந்தப் பாடல் காம்போதி இராகத்தில் பாடப்பட்டதாகவும், இந்த இராகம் குறிப்பிடப்பட்ட நிலையிலேயே, அவரது பாடல் நூல் தன்னிடம் இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். மலையக மக்களின் தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றில் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற டயகமப் போராட்டம் சிறப்பானது. அந்தப் போராட்டத்தைச் சித்திரிக்கும் பெரியாம்பிள்ளையின் பாடல் வரிகள், அவரது படைப்புகளின் சமூக உணர்வை வெளிப்படுத்துபவையாக விளங்குகின்றன.

“ஆனை முகனுக்கு இளையோனே
ஞான வடிவேலனே - ஆறுமுக
பன்னிரெண்டு கையனே - மத
யானை மேல் பவனிவரும் மெய்யனே
வையகம் புகழும் மத்திய மாகாணத்தின்
ஒரு பகுதி டையகாமம் தோட்டத்திலே
ஆண்டவா நாங்க பட்டபாட்ட
கேட்டுப்பாரு தாண்டவா
தொண்டமான் பாட்டி என்றும் - தோழர்
அஸீஸ் பாட்டி என்று தோட்டத்திலே
இரண்டு கட்சி ஆகியது தொழிலாளர்
மனம் துண்டுபட்டு போச்சுது”

எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை நாவலப்பிட்டி சொய்சாகலையில் பிறந்து, பின்னர் தொலஸ்பாகை மேரிவலைத் தோட்டத்தில் வாழ்ந்ததாக மாத்தளை வடிவேலன் குறிப்பிடுகிறார். சமயப்பணி, சமூகப்பணி ஆகியவற்றுடன் அவர் ஆற்றிய கல்விசார் பணியும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஆலயங்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களைத் துதிப்பாடல்களால் போற்றுவதை

அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். முருகன் மீது அதீத பக்தி கொண்டிருந்த அவர், கதிர்காமத்தின் மீதும் அளவற்ற நேசம் கொண்டிருந்தார். தனது கவியாற்றலையும் பக்தி ஞானத்தையும் ஒருங்கே இணைத்து, முருகன் மீதான ஈடுபாட்டில் பல பாடல்களை உருவாக்கியுள்ளார். மலையக வீதிப்பாடல்கள் தொகுப்பிற்கேயுரிய பண்புகளுடன் அவரது சிறுசிறு பிரசுரங்கள் வெளியாகியுள்ளன. அப்பாடல்கள் பின்னர் தொகுப்புகளாகியுள்ளன. அவற்றில் அரோகரா துதி, கதிர்காம மாலை, தோத்திர மாலை, ஸ்ரீ கதிரை மகத்துவ மாலை, ஸ்ரீ கதிர்காம துதி, கதிரேசபத்து, கந்தன் சரணப்பத்து, காவடி மகத்துவம், வள்ளி - தெய்வானை ஏசல், வளையற்சிந்து, கழுகுமலைப்பத்து, கும்பிடுபத்து, தோத்திரப்பத்து, தரிசனைப்பத்து ஆகிய புத்தகங்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு வெளியானமை குறிப்பிடத்தக்கது.

'தமிழ் இலக்கியத்தில் கதிர்காம முருகன்: மலையக கவிஞர் அருட்கவி எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை பாடிய சிற்றிலக்கிய தொகுப்பு' என்ற தலைப்பில் வெளிவந்த நூல், கவிஞர் பெரியாம்பிள்ளையின் கவித்துவப் புலமையை வெளிப்படுத்தும் முக்கிய பணியினை ஆற்றுகிறது. இந்தத் தொகுப்பை வெளியிட்டதில் மாத்தளை வடிவேலனின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் இதனைப் பதிப்பித்து வழங்கியுள்ளது.

பெரியாம்பிள்ளையின் சிறுபிரசுரங்களின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்நூலுக்கான வெளியீட்டுரையில், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அனிருத்தனன் குறிப்பிடத்தக்க கருத்துகளைப் பகிர்ந்துள்ளார். அவர் கூறுவதாவது: "முருகனையும் அன்னை முத்துமாரியையும் பாடி மக்களுக்கு வழிகாட்டிய பெருந்தகையாக, நாவல் நகரில் உதித்த மலையக மக்கள் அருட்கவி அமரர் எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை விளங்குகிறார். பெரியாம்பிள்ளை அவர்களை முத்தெனப் போற்றிப் பணியலாம். உழைக்க வந்த மக்களின் வாழ்வு சிறப்பாகவும், அவர்களின் துன்பதுயரங்கள் குறையவும் வழிகாட்டுவதாக இவரது பாசுரங்கள் அமைந்துள்ளன. அந்தக்காலத்தில் கல்வி என்பது பெரிதும் அரிதாக இருந்த சூழலில், மக்கள் கதிர்காமக் கந்தனின் புகழைப் பாடுவதற்கு ஏற்ற எளிய சொற்றொடர்கள் மற்றும் உவமானங்களைப் பயன்படுத்திப் பாடல்களைப் பாடியுள்ளார்." "எஸ். ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை இலங்கை மட்டுமின்றி, பக்தியுலகமே போற்றித் துதிக்கும் கதிர்காமக் கந்தனின் திருக்கோயிலைச் சென்றடையும் வழிமார்க்கம் முதல் கதிர்காம முருகனின் தோத்திரமாலை, அரோகரா துதி போன்ற சிற்றிலக்கியங்கள் பலவற்றுடன், மாரியம்மன் தாலாட்டு, கோலாட்டுப் பாடல்கள் போன்றவற்றையும் நமக்கென்று வழங்கியுள்ளார். பழந்தமிழ் பள்ளு இலக்கியங்களைச் சேர்ந்த ஏசல், ஊடல், சிலேடை, கழுகு மலைப்பத்து, கும்பிடுபத்து, சரணப்பத்து, தோத்திரப்பத்து, தோத்திரமாலை, புராணம் போன்ற பா வகைகளை பெரியாம்பிள்ளை கையாண்டபோது, பாமர மக்களும் அவற்றை அறிந்து, தெளியும் வண்ணம் எளிய நடையில் பாடியிருப்பது 'அவர் ஒரு மக்கள் கவிமணி' என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. இவரது பாடல்கள் பக்தியுணர்வையும் வரலாற்றுத் தகவல்களையும் ஒருங்கே கொண்டுள்ளது" என பதிப்பாளரான மாத்தளை வடிவேலன் குறிப்பிட்டுள்ளதும் கவனத்திற்குரியது.

பெரியாம்பிள்ளை இயற்றிய அரோகரா துதிக்கு லாகோலா என்னும் மெட்டில் பல்லவி அமைக்கப்பட்டுள்ளது. அனுபல்லவி, முடுகு சந்தம் என்பன கையாளப்படும் விதங்கள் தொடர்பிலான விளக்கத்தையும் தெளிவுறுத்தியே அவரது பாடல்கள் அமையப்பெற்றுள்ளன.

"சங்கரன் மகனெனும் தங்க மருந்து
சதுர் மறைப்புகழ் சிவசண்முக மருந்து
ஐங்கரன் சோதரனான மருந்து
அவனியோர் புகழ்ந்திடும் ஆனந்த மருந்து
தென் கதிர்காமத்தில் வசிக்கும் மருந்து
சேயன் பெரியாம்பிள்ளை துதிக்கும் மருந்து"

இப்பாடல் முருகனின் திருவருளைச் சிறப்பிக்கிறது. இவர் ஒவ்வொரு பாடல்களின் இறுதியிலும் தனது பெயரையும் இணைத்துக்கொள்ளும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்.

முருகனின் தோற்றம், வரலாறு, முருக அடியார்களின் வரலாறு போன்றவற்றை நன்கு அறிந்தவராகப் பெரியாம்பிள்ளை விளங்குகிறார். பாடல்களை எழுதுவது மட்டுமன்றி, அவற்றை மக்கள் கூடும் இடங்களில் நேரடியாகப் பாடிக் காட்டும் வழக்கமும் அவருக்கு இருந்தது. இசையிலும் ஆழ்ந்த ஈடுபாடும், ஞானமும் கொண்டவர் என பெரியாம்பிள்ளையை இனங்காணலாம். கதிர்காமத்தைச் சிறப்பிக்கும் பல பாடல்கள் இவரது படைப்புகளில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"ஆதி

தானிலங்கும் காவனம் சூழ்தென் கதிர்காமம் அருள்

தானிலங்கும் நீதமறைத்தலங் கதிர்காமம் நலந்தருங் கதிர்காமம்

மானிலம் புகழும் கந்தன்வளர் கதிர்காமம் கங்கை

வேணியரன்பாலனருள் விழைகதிர்காமம் தவ

ஞானமுத்துலிங்க சுவாமிநகர் கதிர்காமம் வேதம் புகழ் கதிர்காமம்"

என அமைந்திருக்கிறது. அவ்வாறே

செந்தமிழ்பிரபந்தமெனும் சந்தர் புகழும் காவடி

சிந்துப்பாடல் பெற்ற கதிர்காமமே அப்பர்

சுந்தரர் புகழ்ந்த கதிர்காமமே தேவ

இந்திரன் வணங்கும் கதிர்காமமே

செந்தமிழ்ப் பெரியாம்பிள்ளை கந்தநாதன் மீது சதா

சந்தப்பண்கள் பாடும் கதிர்காமமே அருள்

தந்துலவும் கந்தன் கதிர்காமமே வாசன்

சிந்தை மகிழ்ந்தாடும் கதிர்காமமே"

எனும் பாடல் அமைகின்றது. பெரியாம்பிள்ளையின் பாடல் வரிகளின் ஊடாக அவருடைய ஆன்மிகத் தெளிவு நன்கு வெளிப்படுகிறது. அதேபோல், பாடல்களைப் படிப்பவர்களும், செவிமடுப்பவர்களும் ஆன்மிகத் தெளிவை உணர வேண்டும் என்ற முனைப்பும் அவரின் பாடல்களில் காணப்படுகின்றது. புராணம் மற்றும் இதிகாசங்கள் மீதான ஈடுபாட்டையும், சமய வரலாற்று அறிவையும், போதிக்கும் நோக்கத்தையும் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

'நித்தமுனை துதித்து நீணிலத்தோர் கொண்டாட - பத்துலக்சங்கோடி தமிழ் சுப்பையா பாடவரமே' எனத் தொடங்கும் கதிர்காம மாலை எனும் பாடல், இவ்விரண்டு அடிகளாக மொத்தம் எண்பத்தி இரண்டு அடிகளைக் கொண்டுள்ளது. "பன்னிரண்டு கண்ணிருந்தும் பாராததென்ன வென்னை - உன்னிரெண்டு பாதம் நம்பி யுற்றேன் தயாநிதியே" என இப்பாடல் வேண்டுவதும் கவனத்திற்குரியது.

'சரணப்பத்து' என்பது 'சரணம் அடைதல்' என்ற பொருளைத் தரும். பதிகம் ஒன்றின் பெயரையும் இவ்வாறு குறிக்கும் மரபும் காணப்படுகிறது. மேலும், தஞ்சம் புகுதல், சரணாகதி அடைதல் என்றவாறும் அது பொருள் கொள்ளப்படுகிறது. திருவருட்பா, திருவாசகம் போன்றவற்றிலும் பத்து எனும் அடையாளத்துடன் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான தலைப்புகளில் பலர் பாடல் எழுதியும் பாடியும் உள்ளனர். இதன் தொடர்ச்சியில், குறிஞ்சி நிலத்தின் சிறப்பையும் முருகனின் மகிமையையும் எடுத்துரைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு எழுந்த பாடல்களின் தழுவல்கள், பெரியாம்பிள்ளை அவர்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. 'கதிரேசப் பத்து', 'கந்தன் சரணப்பத்து', 'கழுகுமலைப்பத்து', 'கும்பிடு பத்து' போன்ற தலைப்புகளில் உள்ள இவரது பாடல்கள் முருகனின் மகிமையையும், மனிதர்களில் நம்பிக்கையையும் எடுத்துரைக்கின்றன. மேலும், 'தோத்திரப்பத்து' என்பது சித்தாண்டி கந்தசாமி கோயிலில் எழுந்தருளிய இறைவனைச் சிறப்பிக்கும் பாடல்களாக அமைந்துள்ளது. பழனிமலை முருகனின் பெருமைகளை எடுத்துரைப்பதாக 'தரிசனைப்பத்து' அமைகின்றது.

முருக வழிபாட்டில் காவடி மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. சுமையான காவடியை தோளில் வைத்து ஆடுவார்கள். துன்பங்களைப் போக்கி நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முருகனிடம் வேண்டும் தனித்துவ முறையாகவும் இது அமைகிறது. இது தியாகம், இசை, வேதனை ஆகியவற்றை உள்ளடக்கிய சடங்கு முறையிலான கலை வடிவமாகும். காவடி, நாட்டுப்புறக் கலை வடிவங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. பெரியாம்பிள்ளை அவர்களும் 'காவடி மகத்துவம்' என்ற தலைப்பில் காவடி ஆட்டத்திற்குரிய பாடலைத் தந்துள்ளார்; பதினாறு அடிகளைக் கொண்டு ஒன்பது செய்யுட்களில் அமைந்த வரிகளில், முருக வழிபாட்டின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றார். முருகனின் வாழ்க்கை வரலாற்றின் தடங்களும், களச் சூழலின் சிறப்புகளும் இப்பாடல் சித்திரிப்பில் முக்கியமானதாக விளங்குகின்றன. அவ்வாறு அமைந்த வரிகளில் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

"மந்தகாசத் தோகை மயில் காவடி அத்தர்

மணக்கும் மாம்பழக் காவடி

மச்சக்காவடி எலுமிச்சைக் காவடி நறு

மணங் கவிழ்ந்திடும் காவடி

தந்தான தானதன சந்தான சுரக்யான

தாள முடன் வரும் காவடி"

இலங்கையில், சிங்களவர்களின் வழிபாட்டு மரபுடன் முருக வழிபாடும் இரண்டறக் கலந்து

காணப்படுகிறது. அம்முறைமை சிங்களவர்கள் மத்தியில் மிகுந்த மதிப்பிற்குரியதாகவும் விளங்குகிறது. கலாசார ஒருங்கிணைப்பில் முக்கிய தடமாகவும் இவ்வழிபாட்டு முறை அடையாளம் பெறுகின்றது. இதனை,

“சந்தமிகுந் திடும்கௌவ மைந்தன் பெரியாம்பிள்ளை
சந்தம் முழங்கும் காவடி
சாந்தமாய் சிங்களவர் சேந்தனை வணங்குவர்
சகம்புகழும் கதிரை நகரில்”

எனும் பாடல் அடிகளில் காணலாம்.

தமிழ் இலக்கியத்தில் ‘வளையல் சிந்து’ என்பது ஒரு வகையான சிந்துப் பாடலாகும். வளையல் என்பது கைக்கு அணியும் காப்பைக் குறிக்கும். சிந்து என்பது இசைப் பாடலின் ஒரு வடிவமாகும். பெரியாம்பிள்ளையின் ‘வளையற் சிந்து’ ஊடாக, முருகன் வள்ளியின் காதலும், அந்தக் காதலின் சிறப்பும் வெளிப்படுகின்றது. அதேபோல், கதிர்காம மாலை, தோத்திர மாலை, ஶ்ரீ கதிரை மகத்துவ மாலை போன்ற பாடல்களில், முருகனின் சிறப்பை மையமாகக் கொண்ட சம்பவங்கள் மற்றும் முருகனின் பல்வேறு வகிபாகங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. தோத்திர மாலையானது,

“பக்தர்கள் உனைத் துதித்து கந்தையா
பாருலகோர் கொண்டாட
உத்தமனே உன் மாலை கந்தையா
உகந்து பாடுதற்கு”

எனத் தொடங்கின்றது. இங்கு வேறுபட்ட களங்களில் முருகனின் நாமங்கள் தொடர்புபடும் விதங்கள், ஏனைய கடவுள்களுடன் ஏற்பட்ட உறவுமுறை பற்றிய சித்திரிப்புகளும் இடம்பெறுகின்றன. இப்பாடலின் இறுதிப்பகுதி,

“பண்ணு தமிழ் வாழ்க கந்தையா
பத்த முத்தரும் வாழ்க
இந்நூல் வாழ்க கந்தையா
இதைப் படித்தோரும் வாழ்க.”

என நிறைவடைவதையும் அவதானிக்கலாம்.

பொதுவாக முருகன், தெய்வானை, வள்ளி ஆகியோரின் இல்லற வாழ்க்கை குறித்துப் பல சர்ச்சைகளும், நியாயப்படுத்தல்களும் உள்ளன. இதுபோன்ற கருத்துகள் ஆன்மிகத் தளத்திலும், இலக்கியக் களத்திலும் வேறுபாடாகக் காணப்படுகின்றன. முருகனின் குடும்பத்தில் அந்தச் சர்ச்சை நிலை எவ்வாறு அமைந்திருந்தது என்பதற்கான கற்பனைச் சித்திரத்தை பெரியாம்பிள்ளை விவரித்துள்ளார். குறிப்பாக, வள்ளி மற்றும் தெய்வானையிடையிலான தர்க்க நிலை, தெய்வானை முருகனை எதிர்த்து முன்வைக்கும் குற்றச்சாட்டுகள், வள்ளியின் எதிர்வினை, சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமத்துவ அரசியல் தொடர்பான தெளிவுரை போன்றவை அவரது பாடல்களில் கவனிக்கக்கூடியதாக அமைந்துள்ளன.

தெய்வானை - வள்ளியிடையே நடக்கும் சக்களத்திச் சண்டை சமூக ஏற்றத்தாழ்வினை முனைப்பாக்கிக் காட்டுகிறது. “சிறுக்கியான வள்ளியே, எந்தன் நாயகன் பின்னால் வந்து அவனோடு வாழ்ந்தாலும், சாதியால் எனக்கு நீ நிகராக முடியாது. உயர்ந்த சாதிக்குள் பிறந்த என்னோடு சமமாக வாழ முடியுமோ? என் வீட்டிற்குள் நுழையாதே!” என தெய்வானை கூறும் போது, வள்ளி தெய்வானையை நோக்கி, “சாதியை முன்நிறுத்திப் பேசுவது நல்லது அல்ல. இவ்வாறு நீ இழிவாகப் பேசும் போது உன் மீது எனக்கு எப்படி மரியாதை வரும்? உண்மையை உணர்ந்து, மணம் புரிந்த கந்தனை நீ ஒதுக்கி விடு. எனது தங்கத்தை நான் என் தாய் வீட்டிற்கு அழைத்து செல்கிறேன்” என்கிறாள். இவ்வாறு இருவருக்குமிடையேயான வாதம் தொடர்கிறது.

தெய்வானை மற்றும் வள்ளியின் தர்க்கம் தொடரும் நிலையில், முருகன் இப்பிரச்சினைக்கு தீர்வு காண பல முயற்சிகளில் ஈடுபடுகிறான். தெய்வானையைப் பார்த்து, “என் பேதலித்த புத்தியால் வள்ளியையும் மணந்தாலும், பெருமனதுடன் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். உன் உடைகளைத் துவைக்கவும், மாலைகள் கட்டவும் ஒருத்தியை அழைத்து வந்தேன் என எண்ணிக்கொள்வாயாக,” எனக் கெஞ்சுகிறான். “என்னை ஏளனமாகப் பார்க்காதே” என்பதும் அவன் கோரிக்கை. “பட்டணத்தி லெச்சி நக்கும், ஜாதியே நாமுந் தொட்டுக்கொள்ள என்னவுண்டு நீதியே.” என தெய்வானை பதிலளிக்கிறாள். “கோடித்தடவை கும்பிட்டுக் கேட்கிறேன், என்னை தவிக்க விட்டிடாதே.” என முருகன் மன்றாடுகிறான். இந்தக் கோரிக்கை தெய்வானையின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. முருகன் வள்ளியை மிகுந்த பிரயத்தனத்துடன் ஆசுவாசப்படுத்தி, தெய்வானையின் காலில் விழுந்துவிடச்

சொல்லுகிறான். முருகனின் வார்த்தைகளைக் கேட்ட வள்ளியும் தெய்வானையின் காலில் விழுந்து மன்றாடுகிறாள். மூவரும் புரிந்துணர்வில் உடன்படுவதை கவிஞர் பெரியாம்பிள்ளை தனது கற்பனை வரிகளால் பாடலாகப் புனைந்து காட்டுகிறார்.

எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை ஆளுமைமிக்க கவிஞராகவும், பல கவிஞர்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார். நாவலப்பிட்டி மண்ணில் இயங்கிய மலைநாட்டு செந்தமிழ் கவிஞர் சங்கத்தின் தலைவராகவும் அவர் செயற்பட்டார். கா.சி. ரெங்கநாதன் என்பவரும் மலையக வீதிப்பாடல் யுகத்தில் முன்னணிக் கவிஞராகத் திகழ்ந்தார். அவரது நூலான 'தமிழ் மணிக்கீதம்' (1963) நூலிற்கு ஆசி வழங்கிய பெரியாம்பிள்ளை அவர்களது வரிகள்,

"அறைந்திடும் ஐந்திலக்கணங்கள் வழுவா நின்று
சித்திரக்கவிதா எழுதித் தொழிலாளர் செய்
சீரில்லா வழக்கமதைத் திருத்தும் வீர
சிங்கமெனும் கா.சி.ரெங்கநாதன் கீதம்
சிறந்த தமிட் கமுதென செப்புவோமே.
செய்யப்புகழேந்தி கூத்தனார் கம்பன் சிவந்தகிரி
துய்யபடிகாசு இரட்டையரோவெனத் தோன்றியுளான்
மெய்த்தமிழ் ஸ்ரீ ரெங்கநாதன் விரித்த தமிழ்
வையகமீது தமிழ்த்தாய்க்குச் சூட்டும் மணிமகுடம்"

என்றவாறு அமைகின்றன. இவ்வரிகள் தமிழ் மீதும் தமிழ்க் கவிதைகள் மீதும் கொண்ட பற்றுறுதியை எடுத்துச் சொல்வதாக விளங்குகின்றன. 'மலைநாட்டு செந்தமிழ் கவிஞர் சங்கம்' அமைப்பின் செயற்பாடு அக்கால மலையகக் கவிஞர்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டிற்கு முக்கியத்துவமளித்துள்ளது. முறையான நிர்வாகத்துடன் கூடிய இலக்கிய, சமூகச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. படைப்பாளிகள், செயற்பாட்டாளர்கள் அமைப்பு ரீதியில் சமூகப் பிரக்ஞையோடு செயற்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. மலையகம் ஆன்மிகத் தெளிவுடனும், சமூக சிந்தனையோடும் முன்நகர வேண்டிய வழிகாட்டலை இக்கவிஞர்கள் வழங்கியுள்ளார்கள். புலமைசார் படைப்புகளின் பால் கொண்ட ஈடுபாட்டையும் இவர்களில் அவதானிக்கலாம். இவ்வாறான ஒருங்கிணைப்புத்தான் அக்காலத்தில் அநீதிக்கு எதிரான கருத்துகளோடு பல படைப்புகளில் வெளிவந்தன.

பெரியாம்பிள்ளை, சேது இராமநாதபுரத்தை பூர்வீகமாகக் கொண்டவர். சி.ரா.சி. பெரியாம்பிள்ளை கோனார் எனவே தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். 'ஸ்ரீ கதிரைநாதன் பேரில் ஆனந்தக் களிப்பு' எனும் தலைப்பில் 1931 ஆம் வருடத்திலேயே ஒரு பாடல் நூலை வெளியிட்டுள்ளார். இப்பாடல் தொகுப்பு வெளிவருவதற்கு கம்பளை எம். ராமையா பிள்ளை அவர்கள் உந்துசக்தியாகச் செயற்பட்டார். கொழும்பு ஜிந்துப்பிட்டி தெரு, சரஸ்வதி புத்தகசாலையில் இப்பாடல் நூல் வெளியிடப்பட்டுள்ளது. கொழும்பு, பாபர் ஸ்டீட்டில் அமைந்துள்ள ஸ்டான்லி பிரசில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது; ஐந்து சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இருபத்தைந்து பக்கங்களில் இரண்டு தலைப்புகளில் பாடல்கள் புனையப்பட்டுள்ளன.

'ஸ்ரீ கதிரைநாதன் பேரில் ஆனந்தக் களிப்பு' எனும் தலைப்பில் ஒரு நீண்ட பாமாலை தொடர்கிறது. முருகன் - வள்ளி ஆகியோரிடையேயான உரையாடலாக இப்பாடல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இப்பாடல் ஊடாக வாழ்வியல் நெறிமுறைகள் எடுத்துச் சொல்லப்படுவதை அறியலாம்.

"அடக்கமாயிருப்பதுவே நீதி பெண்ணே
அவ்வித மிருப்பதுவே இல்லறத்தின் கியாதி
ஆகையால் போய் வாரேனென்று எங்கள்
ஆறுமுகன் சொல்லவே வள்ளி எதிர்நின்று
என் கணவா வேலவரே நில்லும் மாது
எனக்குவகை சொல்லிநீர் அப்பாலே செல்லும்
சொந்தமனை யாளிருக்க நீரும்
எந்தனை யழைத்து வந்து ஊரார் சிரிக்க
நீரே இவ்விதம் சொல்லலாமோ இந்த
நீணிலத்தோர் புகழும் தென் கதிர்காமா"

இவ்வாறு முருகன் - வள்ளி ஆகியோருடனான கருத்துகள் பாடல்கள் ஊடாகப் பரிமாறிக் கொள்ளப்படுகின்றமை அவதானத்திற்குரியதாகும்.

இத்தொகுப்பில் 'கதிரை மகத்துவ ஏசல்' எனும் தலைப்பிலும் ஒரு பாடல் உள்ளடங்கியுள்ளது. இது வள்ளி - தெய்வானை ஏசல் போன்றே, முரண்பாட்டுச் சூழலில் அவரவர் நியாயக் கருத்துகளை எடுத்துரைப்பதாக அமைகிறது. இரண்டாவது திருமணத்தின் பின்னர் முருகன் மனதளவில் படும்

அவஸ்தை நிலையும், பாடு பொருளாகியுள்ளதை இப்பாடல் புலப்படுத்தும் கருத்துகள் ஊடாக அறியலாம். இவ்வாறு வாதங்கள் தொடரும் நிலையிலும், முருகனின் சிறப்பையும் கதிர்காமத் தலத்தின் மகிமையையும் எடுத்துக்கூறும் முனைப்பை இப்பாடல்களில் காணமுடிகிறது.

“ஓங்கும் புகழ் நிறைந்த நான்கு வருணத்தோரும்
ஒப்பும் திருப்புகழைப் பாடியே கூடிச்
செப்பும் விசித்திரம் பார் சேடியே
செப்பும் என் அமணவாளா அப்பன் சண்முகநாதன்
திருவிழாக் காட்சி என்ன சீரையா கந்தன்
வரும் பவனி என்ன வாரையா”

பெரியாம்பிள்ளை அவர்கள் பக்தியோடு வாழ்நாளைக் கழித்ததோடு, தாம் முன்வைத்த தலைப்புகள் தொடர்பிலும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செயற்பட்ட ஆளுமையாகத் திகழ்ந்தார். தாம் பெற்ற ஆன்மிகத் தெளிவை பிறருக்கும் எடுத்துரைக்கும் பணியை அவர் மிகச் சிறப்பாக நிறைவேற்றினார். அவ்வுயரிய எண்ணங்களின் சாட்சிகளாகவே அவரது பாடல்களின் உள்ளடக்கங்கள் திகழ்கின்றன எனலாம். இப்பாடல்கள் மனித விழுமியப் போதனைகளாகவும் மதிக்கப்படுகின்றன. முருகன் அறிவின் கடவுளாகவும், ஞானத்தின் அடையாளமாகவும் அணுகப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. பெரியாம்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள ஏனைய நூல்கள் இன்று கிடைக்கும் பட்சத்தில், அவரது ஆளுமைக் கூறுகளை மேலும் ஆழமாக அறிவதற்கான வாய்ப்புகள் விரிவடையும் என்பது திண்ணம்.

எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை அவர்களின் பாடல்கள் ஆன்மிகத் தளத்தில் மட்டுமல்லாது, சமூக மற்றும் அரசியல் தளங்களிலும் கவனிக்கத்தக்கவைகளாகும். மலையக சமூக - அரசியல் நிலைகளில் இருந்தும் அவர் பல பாடல்களைப் படைத்துள்ளார். இருந்தபோதிலும், அவரால் எழுதப்பட்ட பாடல்கள் பெரும்பாலும் ஆவணப்படுத்தப்படாதமை கவலைக்குரியதாகும். அவர் எழுதிய பாடல் தொகுப்புகளில், ‘டட்லி சேனநாயக்கா அவர்கள் மீது அனுதாபக் கீதம்’ எனும் பாடல் தொகுப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்தத் தொகுப்பில் இடம்பெற்ற பாடல்கள் வெளிப்படுத்தும் கருத்தியல், விமர்சன ரீதியில் அணுகப்பட வேண்டியவையாகும். பொதுவாக, சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது ஐக்கிய தேசியக் கட்சிதான்.


ஸ்ரீ கதிரைநாதன் பேரில்
ஆனந்தக் களிப்பு.

இஃது
சேது ராமநாதபுரம்,
சி. ரா. சி. பெரியாம்பிள்ளைக் கோனார்
அவர்கள் இயற்றியது.

கம்பனி, புஸ்தக வியாபாரம்,
M. ராமையா பிள்ளை அவர்கள்
வேண்டுகோளுக்கிணங்கப் பிரசுரிக்கப் பெற்றது.

சரஸ்வதி புத்தகசாலை,
63, ஜிந்துப்பிட்டித் தெரு,
கொழும்பு.
1931.

காபிரைட்] [விலை அணா 5.

Image Source - noolaham.net

அந்தக் கட்சியின் தலைவராக விளங்கிய டட்லி சேனநாயக்காவின் மறைவின் பின்னர், தன் மனதில் தோன்றிய உணர்வுகளை அவர் பாடல்களாக எழுதி, பாடி, தன் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தியுள்ளார். இப்பாடல் தொகுப்பு நூல் நாவலப்பிட்டி, ராஜா அச்சகத்தில் அச்சிடப்பட்டு, டிக்கோயா வீ. இராமசாமியினால் 1973 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொதுவாக மலையக மக்களிடையே ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றிய விமர்சனப் போக்கு நிலவியது. சுதந்திரத்திற்குப் பின்னர், இலங்கையில் வாழ்ந்த மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு போன்ற சம்பவங்கள் இம்மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அந்தக் கடுமையான அனுபவங்களின் அடிப்படையில், மாற்றுச் சிந்தனாவாதிகள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதன் தலைவர்களை விமர்சித்தனர். ஆயினும், 1977 ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் இணக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவாக, மலையக மக்கள் படிப்படியாக இக்கட்சியின் அபிமானிகளாக மாற்றமடைந்தனர்.

டட்லி சேனநாயக்கா, இலங்கையின் விவசாயத் துறைக்கு பெரும் பங்களிப்புச் செய்த தலைவராக அடையாளப்படுத்தப்படுகிறார். கிராமங்களில்

வாழும் விவசாயிகளின் மத்தியில் அபிமானம் பெற்ற ஆளுமையாகவும் விளங்கினார். இவர்மீது மலையக மக்களும் அபிமானத்தை வைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் மறைவுக்குப் பின் ஏற்பட்ட கவலையூட்டும் மனநிலையிலேயே பெரியாம்பிள்ளையும் பாடல்கள் இயற்றினார். அவ்வாறு அவர் எழுதிய பாடல்களின் தொகுப்பாகவே இந்நூலும் அமைந்துள்ளது.

"நவகண்டம் புகழ்ந்திடும் இலங்கையில்
கமத்தொழில்
நன்மக்கள் வாழ்வு சிறக்க
நன்மனதுடன் விவசாயம் செய்திட நிலம்
நமக்கு கொடுத்தார் விதைக்க
இகபோக சுக வாழ்வும் நிலைநிர்க்காது என்றும்
இனபேதம் செய்தோர்க்கு தலை தூக்காது
அகமாய் வெறுத்தோர்க்கு புகழ் தப்பாது அறம்
அழியாது வளர்ந்தோங்கும் புகழ் குன்றாது டட்லி..."

டட்லியின் மரணம் தேசிய அளவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், மலையக மக்களிடத்தில் நிலவிய மனநிலையை, சமூகத்தின் முக்கிய அவதானமாகப் பதிவு செய்த பெரியாம்பிள்ளையின் குறிப்புகள் கவனிக்கத்தக்கதாகின்றன. அதனை எடுத்துக்கூறும் வகையில்,

"நாட்டிலும் வெள்ளைக்கொடி - வேடர்வாழும்
காட்டிலும் வெள்ளைக்கொடி
கேட்டிலும் வெள்ளைக்கொடி - தோட்ட மக்கள்
வீட்டிலும் வெள்ளைக்கொடி"
என்பதோடு,
"நாட்டுக்கு நன்மைசெய்த - டட்லியின்
நாமம் புகழாத
தோட்டத் தொழிலாளர் - இல்லையெனத்
தோணுது நாட்டினிலே"

எனும் வரிகளும் கவனத்தைப் பெறுகின்றன. இத்தொகுப்பில் இடம்பெற்ற 'சாந்தி நிலை அடைந்தார்', 'மாரியம்மா முகம் பாருமம்மா', 'அறிவுக்கு விருந்தாகும்', 'மணப்பாறை மாடு கட்டி', 'ஏர் முனைக்கு நேர்' என்ற மெட்டுகளில் எழுதப்பட்ட பாடல்கள், இலங்கை அரசியலில் டட்லி சேனநாயக்காவின் வகிபங்கை எடுத்துரைப்பனவாகும்.

மலையக அசைவியக்கத்தில் மலையக வீதிப்பாடல் யுகம் முக்கிய அவதானத்திற்குரியதாக விளங்குகிறது. மலையக மக்களின் வாழ்வியலையும், வாழ்வியல் வரலாற்றையும் முழுமையாக அறிந்துகொள்வதற்கு வீதிப்பாடல்கள் பெரிதும் துணை நிற்கின்றன. இக்கால நடைமுறைகளை விளங்கிக்கொள்வதற்கு ஏற்ற இலக்கியமாகவும் வீதிப்பாடல்கள் விளங்குகின்றன. மலையக எதிர்ப்பிலக்கியத்தின் அச்சாணியாக முக்கியத்துவம் பெறும் நிலையில், இத்துறையில் எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை தவிர்க்கமுடியாத ஆளுமையாக முக்கியத்துவம் பெறுகிறார். தமிழ்க் கவிதைத்துறைக்கும் வலிமை சேர்க்கும் அவரது தனித்துவச் சிந்தனை, செயற்பாடு, வெளிப்பாடு என்பன பிரமிப்பிற்குரியவைகளாகத் திகழ்கின்றன. தொழிலாளர்களின் உரிமை சார்ந்த விடயங்களில் அவரின் அக்கறையும், ஆன்மபலம் தொடர்பான வழிகாட்டல்களில் ஈடுபாடும், பெரியாம்பிள்ளையைத் தனித்து அடையாளப்படுத்தும் முக்கிய அம்சங்களாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. யோகராசா, செ. (2023). ஈழத்து முச்சந்தி இலக்கியம். மகுடம் பப்ளிகேசன்.
2. வடிவேலன், பெ. (2025). தமிழ் இலக்கியத்தில் கதிர்காம முருகன்: மலையகத்தில் கவிஞர் அருட்கவி எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை பாடிய சிற்றிலக்கிய தொகுப்பு. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.
3. நடேசய்யர், கோ. (1946). கதிர்காமம். பி.என்.கே பிரஸ்.
4. பெரியாம்பிள்ளை, எஸ். (1941). ஸ்ரீ கதிரைநாதன் பேரில் ஆனந்தக் களிப்பு. சரஸ்வதி புத்தகசாலை.
5. பெரியாம்பிள்ளை, எஸ். (1973). டட்லி சேனநாயக்க அவர்கள் மீது அனுதாபக் கீதம். ராஜா அச்சகம்.
6. ரெங்கநாதன், கா. (1963). தமிழ் மணிக் கீதம். மலையக செந்தமிழ் கவிஞர் சங்கம்.




● பொன் பிரபாகரன்

பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். ‘காமன் கூத்து’(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), ‘உப்பு ரொட்டி’ (கவிதைத் தொகுப்பு), ‘மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்’ என்பன இவரது நூல்களாகும்.


# மலையகத் தமிழர் சமூக உருவாக்கத்தில் அரங்கின் பாத்திரம்

இலங்கையின் மலையகத் தமிழரின் வரலாறும் பண்பாடும் பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளதை நாம் அறிவோம். பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியின் சாபக்கேடுகளில் ஒன்றாக நிகழ்ந்த மாபெரும் புலப்பெயர்வுகளில் மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் உள்ளடங்கியுள்ளது. அது மனிதகுல வரலாற்றில் ஒரு நெடும் பயணம் (Long Walk) என அவுஸ்திரேலிய நாட்டவரான வெண்டன் ட்ரைசன் என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் தனது தி லோங் வோக்' (The Long Walk) என்ற நூலில் அந்தப் பயண அனுபவங்களைப் பதிவு செய்கிறார்.

அப்புலப்பெயர்வின் வடுக்கள் இன்றும் அழியவில்லை; அது என்றென்றும் அழியப்போவதும் இல்லை. வரலாறு வஞ்சித்தது; வாழ்நிலையும் சூழ்நிலையும் மானுடத்தைச் சிறைப்படுத்தியது. பிரித்தானியக் காலனித்துவக் கொடுங்கோலர்கள் இரத்தம் பொங்கும் வெறியோடு மக்களை நசுக்கி, தங்களது காலனித்துவத்தின் கருவூலத்தை நிரப்பிக்கொண்டிருந்தபோது, மக்களின் வாழ்க்கை மோசமானதாக மாறியது. காலநிலையாலும், கொள்ளைநோய்களாலும் (குறிப்பாக, ஓயாத தொல்லை கொடுத்த கொலராவினால்) மாண்டு மடிந்தவர்களின் எண்ணிக்கை பல நூறு ஆயிரங்கள் என வரலாறு பதிவு செய்கிறது. மனித உருவில் நடமாடிய நரமாமிசப் பட்சிகள் பல வழிகளில் இம்மக்களைச் சூறையாடிய, சூறையாடுகின்ற கதை வரலாற்றில் முடிவற்றுத் தொடர்கிறது.

*“நாடு சுதந்திரம் பெற்றதடா*

*நாங்கள் சுதந்திரம் பெற்றோமா”*

எனக் கேட்கின்றான் மலையக மக்கள் கவிஞரான குறிஞ்சித் தென்னவன். மலேசியா, சிங்கப்பூர், பிஜித் தீவு, மடகஸ்கார், தென் ஆபிரிக்கா, பிரிட்டிஷ் கயானா என விரிந்து பரந்த நிலப்பரப்புகளில், கிட்டத்தட்ட 40க்கும் மேற்பட்ட நாடுகளில், பதினெட்டாம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்து குடியேறியவர்கள் அந்தந்த நாடுகளின் குடிமக்களானார்கள்; ஆட்சியாளர்களானார்கள்; சுதந்திர மனிதர்களும் ஆனார்கள். ஆனால், வரலாற்றின் துயரம் என்னவென்றால், இலங்கை நாட்டிலே ‘இது என் நாடு’ என்று நினைக்கும் உரிமை கூட இல்லாத அளவுக்கு, வரலாறு எம்மை முழுவதும் இழிவுபடுத்தி இருக்கிறது. எமது வரலாறு முழுவதும் வஞ்சிக்கப்பட்ட வரலாறு. மனித நாகரிகத்துக்கு எதிரான சட்டங்கள், உடன்படிக்கைகள், அடிமைச் சாசனங்கள், திட்டமிட்ட இன வன்முறைத் தாக்குதல்கள், குடியேற்றங்கள், ஓயாத புலப்பெயர்ச்சிகள், நாடு விட்டு நாடு விரட்டப்பட்ட நிலை என வாழ்வுக்கும் இருப்புக்கும் உத்தரவாதம் இல்லாத நிலையிலும் இந்த இனம் நீடித்து நிலைத்திருக்கிறதே!

இலங்கை மத்திய மலைநாட்டின் வளமான விளைநிலங்கள் இவர்களால் தான் மேலும் மேலும் வளமூட்டப்படுகின்றன. ஆனால், அந்த நிலம் இவர்களுக்கு உரியதாக இல்லை. மேலும், இம்மக்கள் செறிவாக ஒரு நிலப்பகுதியில் வாழ்கிறார்கள்; சிறந்த மொழிவழித் தொடர்புடையவர்கள்; இறுக்கமான கலாசார அடையாளத்தைக் கொண்டவர்கள்; இலங்கை பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளோடு நெருக்கமான தொடர்புடையவர்கள். இழப்பதற்கு ஏதுமற்ற, எதற்கும் உரித்தற்ற மக்கள் என்ற நிலையிலும் இவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அது எப்படிச் சாத்தியமாயிற்று?

இதற்கு விடை தர முற்படும் ஆய்வாளர்களும், பண்பாட்டு மானிடவியலாளர்களும் மக்களின் மொழி, கலாசாரம், பண்பாட்டுப் பரிமாணங்களில் அதற்கான விடையைத் தேடப் போராடுகிறார்கள். தமிழில் உள்ள அனைத்து வளமான, வலுவான மரபுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்ட இலங்கை மலையகத் தமிழர்களின் வாழ்வை வளப்படுத்துவதிலும் சமூக இருப்பை உறுதி செய்வதிலும் மலையக மக்களின் மரபுக் கலைகளும் பண்பாட்டுக் கூறுகளும் மிக முக்கியமான பங்களிப்பை நல்கி வருகின்றன.

தமிழ் பண்பாட்டின் கலை மற்றும் இலக்கியப் பரப்பில் ஆழப் பதிந்துள்ள இராமாயணம், மகாபாரதம், ஐம்பெரும் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், குறவஞ்சி, பள்ளு இலக்கியங்கள், அத்துடன் காத்தவராயன் கதை, லவகுசா கதை, பவளக்கொடி, அல்லி அருக்காணி கதை, நல்லதங்காள் கதை, அரிச்சந்திர புராணம், கண்டி ராசன் கதை, காசிராசன் கதை, ஒட்டக்கூத்தர் கதை, நொண்டிவீரன் கதை, காத்தவராயன் கதைப்பாடல், அபிஞான சௌந்தரி கதை போன்ற நாட்டார் மற்றும் புராணக் கதைப் பாடல்கள், மற்றும் சேர - சோழ - பாண்டியர் காலப் பண்பாட்டுக் கலைக்கூறுகள் என அனைத்தையும் உள்வாங்கிக் கொண்ட மலையகத் தமிழர்கள், புதியதோர் நிலப்பரப்பில் புதிய உற்பத்தி முறைக்குள் உள்வாங்கப்பட்டனர்.

அவர்கள் தமது வாழ்நிலையைப் பாதுகாக்க முனைந்தபோது, அவர்களுடைய கோபம், வெறுப்பு, துக்கம், வேதனை, அவமதிப்பு, எதிர்ப்புணர்வு,

ஆற்றாமை போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் அரங்கக் கலைகள், மலையகத் தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் காத்திரமான பங்கை வகித்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கோப்பிக்கால சமுதாய அரங்கு

1824 ஆம் ஆண்டு முதல் 1867 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையின் மத்திய மலைநாட்டிலும் தென் மாகாணத்தின் உடுகம மலைக் குன்றுகளிலும் கோப்பி மிகச் சிறந்த விளைபயிராக விளைவிக்கப்பட்டது. பிரித்தானியரும், சுவிஸ் நாட்டவர்களும் கோப்பிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு, இலட்சக்கணக்கான ஏக்கர் கோப்பிப் பெருந்தோட்டங்களை உருவாக்கினார்கள். இந்தக் காலகட்டத்தில், மலைக் காடுகளை அழித்து நிலத்தைப் பண்படுத்துதல், பயிர்ச்செய்கை மேற்கொள்ளுதல், வடிகால் அமைப்புகளை உருவாக்குதல், வீதிகள் மற்றும் இரயில் பாதைகளை அமைத்தல் போன்ற அனைத்துக் கட்டுமானப் பணிகளிலும் ஒரு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்தியத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

கோப்பித் தோட்டங்களில் நாற்று நடுவது, அறுவடை செய்வது, அவற்றைக் கொழும்புத் துறைமுகத்துக்கோ அல்லது இரயில் நிலையத்துக்கோ கொண்டு செல்வது, குதிரை வண்டிகளையும் மாட்டு வண்டிகளையும் ஓட்டுவது போன்ற அனைத்துப் பணிகளிலும் இந்தியத் தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டனர். தோட்டப் பகுதிகளில் கட்டுமானத் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளுக்கும் இவர்களே முதுகெலும்பாக இருந்தனர்.

இலங்கைக்கு வந்த இந்தியத் தொழிலாளர்கள், தமது கலை மற்றும் பண்பாட்டுக் கோலங்களைப் பேணிக்காத்தனர். அவர்கள் தத்தமது தமிழகக் கிராமங்களில் வழிபட்ட தெய்வங்களைத் தங்களது குலதெய்வமாக, நில தெய்வமாக வழிபடத் தொடங்கினார்கள். அத்துடன், தாம் வாழ்ந்த இடங்களின் பெயர்களையே புதிய தோட்டங்களுக்கும் சூட்டத் தொடங்கினார்கள். பெரிய கங்காணிமார்களின் திண்ணைகளிலே கூடி, கூட்டு வாழ்வைப் பாதுகாக்க முயன்றனர். இதன் ஒரு பகுதியாக, அவர்கள் காத்தவராயன் கதை, நல்லதங்காள் கதை, அர்ச்சுனன் தபசு, அண்ணன்மார் கதைப்பாடல், அரிச்சந்திர புராணம், அம்மானை பாடல்கள், பவளக்கொடி, பொன்னர் - சங்கர்,



Image Source - www.namathumalaiyagam.com

லவகுசா, காமன் கூத்து, மகாபாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், குறவஞ்சிப் பாடல்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் போன்றவற்றை படித்தும், நடித்தும், ஆடியும், பாடியும் வந்தனர்.

இந்தக் கலை வடிவங்கள் வெறுமனே பொழுதுபோக்கு அம்சங்களாக மட்டுமல்லாமல், அவர்களின் கூட்டு மன வெளிப்பாட்டுக் கருவியாகவும் பயன்பட்டன. ஆற்றாமை, பிரிவுத்துயர், தனிமை, களைப்பு, சோர்வு போன்ற உணர்வுகளுக்கான பரிகாரமாகவும், கோபம், வெறுப்பு, ஆத்திரம், அடக்க முடியாத ஆற்றாமை போன்ற உணர்வுகளின் வெளிப்பாட்டுச் சாதனமாகவும் இந்தக் கூட்டுக் கலை வடிவங்களைப் பயன்படுத்தினர்.

இலங்கை மலையகத் தமிழர்களின் பண்பாடு, மானிட சமுதாயத்தின் பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளில் உருவான ஆடல்கள், பாடல்கள், வேள்விகள், விழாக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், தொன்மங்கள், மதிப்பீடுகள் போன்றவற்றின் தொடர்ச்சியாகவும், அவற்றின் பகுதியாகவும் அமைந்துள்ளது. இந்தப் பண்பாட்டின் படிமலர்ச்சிக் கட்டங்களை உள்ளடக்கி, அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு சமூகமாகவே இலங்கை மலையகத் தமிழர்கள் திகழ்கின்றனர். மேலும், இவர்கள் பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளுடன் தொடர்புபட்ட ஆற்றுகைக் கூறுகளையும் அரங்க மரபுகளையும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

அத்தோடு, உற்பத்தி உறவுகளோடு தொடர்புபட்ட புதிய கூறுகளை உட்புகுத்தியும், பழைய கூறுகள் பலவற்றை நீக்கியும் இன்றைய சமூக இருப்பை உறுதி செய்வதில் மலையக அரங்கியலாளர்களும் அரங்கமும் ஒரு மதிப்பார்ந்த பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

## தேயிலைக் காலத்தில் அரங்கச் செயற்பாடுகள்

1867 ஆம் ஆண்டுக்குப் பின் மலர்ந்த தேயிலை யுகமானது, ஒன்றரை நூற்றாண்டுகளைக் கடந்து நிற்கும் சிரஞ்சீவி மூலிகையாக இலங்கைக்கு வாய்த்துள்ளதுடன், நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு வற்றாத ஜீவநதி போன்று தொடர்ந்து பங்களித்து வருகின்றது. தேயிலை பயிரிடுவதற்கும் பராமரிப்புக்கும் இலட்சக்கணக்கான நிரந்தரத் தொழிலாளர்கள் தேவைப்பட்டதால், மலையகப் பிரதேசங்களில் நிலைபேறான ஒரு மக்கள் கூட்டம் வாழத் தலைப்பட்டது. கோசாம்பி, எஸ். நடேசன் போன்ற பல்வேறு வரலாற்று ஆய்வாளர்களின் பதிவுகளின்படி, இன்றைய தலைமுறை மலையகத் தமிழர்களில் 90% இற்கும் மேலானோர், அந்தத் தொடக்க கால மக்களின் வாரிசுகளே ஆவர். தேயிலை யுகத்தின் இக்காலப்பகுதியில் தான் பாரம்பரியமிக்க புராண இதிகாசக் கதைகள் பெருமளவு நாடகங்களாக அரங்கேற்றப்பட்டன; கிட்டத்தட்ட ஐந்து டசனுக்கும் மேற்பட்ட கூத்துகளும் கதைப்பாடல்களும் நிகழ்த்தப்பட்டு வந்ததாக மூத்த தொழிலாளர்கள், கலைஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். தற்போது, பொன்னர் - சங்கர், அர்ச்சுனன் தபசு, லவகுசா, காமன் கூத்து, ஸ்ரீ ராமர் பஜனை போன்ற கூத்துகளும், ஸ்ரீ ராம கீர்த்தனை, நொண்டிமேளக் கூத்து போன்றவையும் மலையகத்தின் பல பகுதிகளில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவற்றுள், காதல், வீரம், அன்பு, இரக்கம், பாசம், விவேகம், வெற்றி, அறம் போன்ற பன்முக உளவியலைக் கட்டமைக்க வல்ல மதன ரதி படலத்தை மையமாகக் கொண்ட காமன் கூத்து இன்று 150 ஆண்டுகளுக்கும் மேலாக வருடாந்தம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. ஒரு பாரம்பரியமிக்க வெகுஜன நாடகமாக, காமன் கூத்து இன்று 600க்கும் மேற்பட்ட தேயிலை, இரப்பர் பெருந்தோட்டங்களில் நிகழ்த்தப்படும் ஒரு மலையக தேசியக் கூத்தாகத் திகழ்கின்றது. இக்கூத்தானது சடங்கு, தெருக்கூத்து மற்றும் மேடை நாடகப் பண்புகளை ஒருங்கே கொண்டுள்ளதால், இது மலையக நாடகப் பண்பாட்டின் மணிமகுடமாகப் பரிணமித்துள்ளது என்றால் அது மிகை இல்லை.

மலையக நாடக மரபுகளில், குறிப்பெடுத்தல், கம்பம் நடுதல், ஆட்டம் தொடங்குதல், திருமணம், காமம், காதல், சிருங்காரம், கோபம், போர் வீரம், உயிர்த்தெழுதல், அன்பு, இரக்கம் தொடர்பான பல்வேறுபட்ட வாழ்வியல் கூறுகளை ஆழப் பதிவு செய்வதிலும் மீட்டுருவாக்குவதிலும் காமன் கூத்து முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்கூத்தில் வேடம் தரிக்கும் இளைஞர்களுக்கு விரைவில் திருமணம் ஆகும் என்ற நம்பிக்கையுடன் இதற்காக வேண்டுதல் செய்து வேடம் தரிக்கும் வழக்கம் உள்ளது. காமன் கூத்துக்கு அடுத்ததாக, மகாபாரதக் கதையின் கிளைக் கதைகளை உள்ளடக்கிய அர்ச்சுனன் தபசு என்ற புராண அரங்கு மலையக சமூக உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்ததுடன், இன்றும் சமூக உருவாக்கத்தில் தனது முக்கியத்துவத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

## பாரம்பரிய அரங்குகள்

மலையகத் தமிழர் சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்வின் ஆணிவேராக அமைந்துள்ள பாரம்பரிய அரங்கியலானது, ஆழமான மொழியியல், பண்பாட்டியல், மானிடவியல், அரசியல், பொருண்மிய (பொருளாதார) கற்றல், கற்பித்தல் பொறிமுறை, ஆய்வுச் செயற்பாடு சார்ந்த விடயங்களை நாகரிக உலகிற்கு அளிக்க வல்லதாக உள்ளது. மேலும், திருமணச் சடங்குகள், பிரசவச் சடங்குகள், மரணச் சடங்குகள், ஆலயச் சடங்குகள், தபசு மரம் ஏறுதல், உயிர்ப்பித்தல், உயிர்த்தெழுதல் மற்றும் சிறுதெய்வ வழிபாடு ஆகியவையும் மலையக மக்களின் பாரம்பரிய அரங்கியலின் மூல விசைகளாக விளங்குகின்றன. இத்தகைய பாரம்பரிய அரங்கு, சமூகப் பெறுமானங்களை (மதிப்புகளை) கற்றுக் கொள்வதற்கும் கற்பிப்பதற்குமான ஒரு சமுதாயக் கல்விக்கூடமாகவே விளங்குகிறது.

மலையகப் பாரம்பரிய அரங்கானது, மூத்தோரை மதித்தல், தாய் - தந்தைக்குக் கீழ்ப்படிதல், குருவை மதித்தல், குழுவாகச் செயற்படல், கற்கக் கற்றல், வாழக் கற்றல், விழுமியக் கற்றல், விளையாட்டுக்களின் ஊடாகக் கற்றல், சமூக ஒழுங்கமைப்பு அணிதிரட்டல் போன்றவற்றை நிகழ்த்துவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இது அமைப்புகள், சாதனங்களைப் பயன்படுத்தி உறவு முறைகளைக் கட்டமைத்தலுக்கும் உதவுகிறது. மேலும், பாசப்பிணைப்புகள், தேவதைக் கதைகள், பழமொழிகள், வீரம், விவேகம் போதித்தல், சாகசக் கதைகளைக் கூறுதல், புராணங்களைச் சமூகமயமாக்கல், பழமொழிகளைச் சமூகமயமாக்கல்,

மரபுத் தொடர்கள், அடுக்குத் தொடர்கள், எதுகை, மோனை, இராகம், தாளம், நடனம், ஆடல் வகைகள், பாடல் வகைகள், கோல உடைகள், அலங்காரம், ஒப்பனைக் கலைகள், கைவினைத் தொழில்நுட்பம், கருவியைக் கையாளுதல் என அனைத்துத் துறைகளிலும் இந்தப் பாரம்பரிய அரங்கின் ஆழமான செல்வாக்கைக் காண முடிகிறது.

மலையகப் பாரம்பரிய நாடகங்கள் சமூக நம்பிக்கைகளைப் பாதுகாக்கும் ஊடகமாகவும், மலையகத் தமிழரின் மரபுரிமை அறிவியலை வளர்த்தெடுக்கும் சமூகச் சாதனமாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக, காமன் கூத்துப் பாடல்களில் ரதி - மதன் ஆடை ஆபரணங்களின் வகைகள், அவற்றைத் தயார் செய்வதற்கான பொருட்கள், அவற்றை பதப்படுத்தும் நுட்பங்கள் என்பன அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோல, பொன்னர் - சங்கர் பாடல் ஒன்று ஈமச்சடங்குகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை விரிவாக எடுத்துக் காட்டுகிறது. மேலும், இந்தப் பாரம்பரிய அரங்கு சமூகச் செயற்பாடு, சமுதாயப் பங்குபற்றல், கூட்டு உழைப்பு மற்றும் கூட்டு முயற்சி ஆகியவற்றை வலியுறுத்துவதுடன், சமூக சமரசத்தை ஏற்படுத்துவதிலும் மிக முக்கிய பாத்திரம் வகிக்கிறது. மொத்தத்தில், இது மலையக சமூக உருவாக்கத்தில் தீர்க்கமான பங்கு வகித்திருக்கிறது எனலாம்.

### இந்திய சுதந்திரப் போர்

காந்திய இயக்கமும், 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலும் இந்தியாவில் இயங்கிய சுதந்திரப் போராட்டமும், இலங்கையில் ஏற்பட்ட சுதந்திரத்திற்கான கோரிக்கைகளும் மலையக நாடகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த இயக்கத்தின் செல்வாக்கு மலையகத் தமிழர் சமூகத்தில் ஆழமாகப் பதிந்ததுடன், அதன் தாக்கங்கள் அரங்கச் செயற்பாடுகள் ஊடாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. அக்காலகட்டத்தில், சுதந்திர இந்திய விடுதலைப் போராட்டம், இந்திய தேசிய இராணுவத்தின் வீரதீரச் செயற்பாடுகள், மற்றும் இலங்கையின் விடுதலைக்கான குரல்கள் ஆகியவை மலையகச் சமூகத்தில் பலமாகப் பிரதிபலித்தன. இந்த அரங்கச் செயற்பாடுகள், சமுதாயத்தில் அகிம்சைக் கருத்துகளைப் பரப்புவதற்கும், மலையகச் சமூகத்தின் அடிமைத் தளையை அறுப்பதற்கான ஒரு கருவியாகவும் பயன்படுத்தப்பட்டன.

### சமூக நீதிக்காக நாடகங்கள்

20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் மலையகத்தில் திராவிட இயக்கம் செல்வாக்கு செலுத்திய காலப்பகுதியில், பெரியார் ஈ.வே. ராமசாமியின் தமிழக திராவிட இயக்கத்தின் செல்வாக்கு இலங்கையிலும், குறிப்பாக மலையகச் சமூகத்திலும், மிக ஆழமாகக் காணப்பட்டது. இதையொட்டி, பெரியார் ஈ.வே. ராமசாமி, சி.என். அண்ணாதுரை, கலைஞர் மு. கருணாநிதி ஆகியோரின் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளால் உந்தப்பட்ட மலையக அரங்கச் செயற்பாடுகளால் உருவாக்கப்பட்ட நாடகங்கள் மலையகம் எங்கும் அரங்கேற்றப்பட்டன. மலையகத்தில் உள்ள 10,000க்கும் மேற்பட்ட தோட்டப்புறங்களில் ஒரு வருடத்திற்கு ஒரு நாடகம் என்ற கணக்கில் நூறு வருடங்களில் அரங்கேற்றப்பட்ட நாடகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், இவை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட நாடகங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, மலையகத்தில் திராவிட இயக்கத்தின் செல்வாக்கால் உத்வேகம் பெற்று உருவான பல இலட்சக்கணக்கான நாடகங்களின் பிரதிகளோ அல்லது அவை தொடர்பான பதிவுகளோ எங்கும் கிடைக்காமல் போயின. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க படைப்புகளை முதன்மையாக ஆவணப்படுத்தவோ அல்லது அச்சில் ஏற்றவோ உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், இந்த நாடகங்கள் மலையகச் சமூகத்தில் இன்றுவரை ஆழமான தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன. தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, தருமம், நீதி, நியாயம் பற்றிய கருத்துகள், பகுத்தறிவுச் சிந்தனைகள், கோட்பாடுகள் ஆகியவை திராவிட இயக்கப் பாரம்பரியத்தோடு சேர்ந்து மலையகத் தமிழர் மத்தியில் வலுவாகச் செல்வாக்கு செலுத்தின. இந்த வரலாற்றுத் தாக்கத்திற்கான ஆதாரங்களை மூத்த தொழிலாளர்களின் நினைவோடைகளில் இருந்து மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

### கோ. நடேசய்யரும் விடுதலை இயக்க நாடகங்களும்

மலையகத்தின் முதுபெரும் தொழிற்சங்கவாதியும், பத்திரிகையாளரும், படைப்பாளியுமான நடேசய்யரால் 1937 ஆம் ஆண்டு ‘இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு’ என்ற நாடகம் எழுதப்பட்டுள்ளது (இதன் பிரதி இன்றும் முழுமையாகக் கிடைக்கிறது). இதைத் தொடர்ந்து, 1935களில் மலர்ந்த இடதுசாரி

இயக்கங்கள் — குறிப்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை லங்கா சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்க இயக்கங்கள் — மலையகத்தில் அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முக்கிய பாத்திரம் வகித்தன. இந்த இடதுசாரி இளைஞர்கள், தொழிலாளர்களை அணி திரட்டுவதற்கும், இடதுசாரி கருத்துகளை விதைப்பதற்கும், தொழிற்சங்கங்களில் சேர்ப்பதற்கும் நாடகங்களை ஒரு சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்தினர்.

மலையகத்தில் இடதுசாரி இயக்கங்கள் தொழிற்சங்கங்களை அணிதிரட்டவும் வர்க்க விடுதலைக் கருத்துகளை விதைக்கவும் நாடகங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தியபோதும், அது தொடர்பான பதிவுகளையும் ஆவணங்களையும் அவர்கள் ஆவணப்படுத்துவதில் அக்கறை காட்டாதது வருந்தத்தக்க விடயமாகும். அக்காலப் பகுதியில், வர்க்க நிலைப்பட்ட சமூக விடுதலை, மக்கள் விடுதலை, பாட்டாளி வர்க்க விடுதலை சார்ந்த கருத்துகளை உள்ளடக்கிய நாடகங்கள் தோட்டப் பகுதிகளில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. உதாரணமாக, ஏ.கே. அப்பாஸ் எழுதிய ‘கள்ளத்தோணிகள்’ என்ற நாடகம் 1960களில் மாத்தளை, பதுளை மாவட்டங்கள் உள்ளடங்கலாக மலையகம் முழுவதும் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடகம் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் விளைவுகளையும், அதனால் 5,25,000 மலையகத் தமிழர்கள் நாடுகடத்தப்பட்ட வரலாற்றுத் துயரையும் பதிவு செய்தது. மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை வடிவேலன், அந்தனி ஜீவா போன்ற கலைஞர்களால் அரங்கேற்றப்பட்ட இந்த வீரியமிக்க சமூக இயக்கப் பதிவுகளை இன்று எங்கும் காண முடியவில்லை. பதுளையைச் சேர்ந்த இராமசாமி எழுதிய ‘இரத்தக்கண்ணீர்’ எனும் நாடகத்தின் பிரதிகளும் கிடைக்கப்பெறவில்லை. ‘கள்ளத்தோணிகள்’ என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நாடகத்தின் மூலப்பிரதியைத் தேடி ஆய்வாளர் மு. நித்தியானந்தன் மேற்கொண்ட முயற்சி, மலையக நாடக ஆவணப்படுத்தலின் சிரமத்தைச் சுட்டிக்காட்டுகிறது. தமிழ்நாட்டில் ஏ.கே. அப்பாஸ் அவர்களைச் சந்தித்து, அவர் பிரதியைக் கையளித்ததாகக் கூறிய நபரைத் தேடி, இறுதியாகப் பிரித்தானிய நூலகம் வரை சென்றும் அந்த மூலப் பிரதியைப் பெற முடியவில்லை என்ற தகவலை, அவர் 31.05.2025 அன்று ஹட்டனில் நடந்த இலக்கியச் சந்திப்பில் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

1980களில் மலையகத்தில் தோன்றி, முளையிலேயே கருகிப்போன மலையகத் தேசிய விடுதலை இயக்கங்கள் — குறிப்பாக மலையக மக்கள் இயக்கம், நல்வாழ்வு வாலிப முன்னணி, தொழிலாளர் விவசாய விடுதலை முன்னணி, மலையக இளைஞர் பேரவை, மலையக இளைஞர் முன்னணி — போன்ற பல்வேறு சமூக இயக்கங்கள், மலையகத்தின் சமூக விடுதலையை முன்னிறுத்திப் பல நாடகங்களை நிகழ்த்தியிருக்கின்றன. இவற்றில், இந்த விடுதலை இயக்கங்கள் பாரம்பரிய காமன் கூத்துக்கு ஒரு புதிய வடிவத்தை வழங்கி, அதை ‘காலன்கூத்து’ என்ற பெயரில் மேடையேற்ற முயற்சித்துள்ளன.

## அடிமைச் சாசனங்களும் மலையக அரங்கும்

இந்திய - இலங்கை அடிமைச் சாசனங்கள் மற்றும் காணிக் குடியேற்றச் சட்டங்கள் ஆகியவை மலையக நாடக இயக்கத்தின் மீது மிக ஆழமான செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, 1952 ஆம் ஆண்டின் நேரு - கொத்தலாவல உடன்படிக்கை, 1964 ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், 1974 ஆம் ஆண்டின் ஸ்ரீமாவோ - இந்திரா காந்தி ஒப்பந்தம், 1972 ஆம் ஆண்டின் முடிக்குரிய காணிக் குடியேற்றச் சட்டங்கள், 1972 மற்றும் 1974 காலப்பகுதியில் ஏற்பட்ட பெரும் பஞ்சம், 1977 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஏற்பட்ட இன வன்முறைகள், மற்றும் மலையகத் தமிழருக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்கள் ஆகிய வரலாற்று நிகழ்வுகளால் மலையக நாடக இயக்கம் மிகப்பெரிய தாக்கத்திற்கு உள்ளானது. இதன் விளைவாக, 1956 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட உள்ளகப் புலப்பெயர்வுகள் காரணமாக, பல இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் வடக்கு - கிழக்கு, தென்னிலங்கை மற்றும் நகரப் பகுதிகளை நோக்கி அகதிகளாகக் குடியேறினர். இதனால் அவர்கள் எல்லாம் இழந்து வாழ்வியலுக்காகப் போராட வேண்டிய சூழலுக்கு நிர்பந்திக்கப்பட்டார்கள்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் போன்ற காரணங்களால் தமிழ்நாட்டுக்குப் புலம்பெயர்ந்து சென்ற இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள், குடியேற்றப்பட்ட (குறிப்பாக ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை, நீலகிரி) பகுதிகளில் பல்வேறு அவலங்களைச் சுமந்திருந்தபோதும், இன்றும் தமது பாரம்பரியங்களைப் பாதுகாத்து வருவதாக அறியப்படுகிறது. அதேபோல், இலங்கையிலே, சீனிக் கற்றாழைத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த பெருமாள் மாஸ்டர், எஸ். முத்துசாமி மாஸ்டர் போன்ற கலைஞர்களும் மற்றும் டயகம, கம்பளை புப்புரச தோட்டப்பகுதிக் கூத்துக் கலைஞர்களும் மலையகப் பாரம்பரிய நாடகங்களை இன்றும் பல்வேறு தோட்டப் பிரதேசங்களுக்குப்

பயிற்றுவித்தும் பரப்பியும் வருகின்றனர். உதாரணமாக, தொங்கபத்தினித் தோட்ட அர்ச்சுனன் தபசு மாஸ்டரான பாலசுப்பிரமணியம் அவர்கள் முத்துலட்சுமி மற்றும் கொட்டியாக்கலை தோட்டங்களில் வாத்தியாராகச் செயற்படுகிறார். மேலும், தெரேசியாத் தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மற்றும் அவருடைய மகனான கலியன் அய்யாதுரை போன்ற கலைஞர்களும் தோட்டம் தோட்டமாக அரிச்சந்திரன் நாடகத்தை அரங்கேற்றி, இந்தப் பாரம்பரியக் கலையைப் பேணிக் காத்து வருகின்றனர்.

டிக்கோயா வீரட் 30 ஏக்கர் தோட்டப் பிரிவைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் அவர்கள் பொன்னர் - சங்கர் கூத்தை மலையகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார். பாரம்பரிய அரங்குகளில் பயன்படுத்தப்படும் ஆபரணங்கள், வேட உடைகள், ஒப்பனைகள், கிரீடங்கள், புயக்கட்டுகள் போன்றவற்றைத் தயாரிப்பதில் புப்புரச கலைஞர்கள் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்துள்ளனர். தற்காலத்திலும், லங்கா தோட்ட காமன் கூத்துக் கலைஞர்கள், பெரிய எலிப்படைத் தோட்ட பம்பயன் தங்கவேல் மாஸ்டர், தொங்கப்பத்தினி தோட்ட பாலசுப்பிரமணியம் போன்றோரும், மறை தோட்டக் கலைஞர்களும், வனராஜா மேல் மற்றும் கீழ் பிரிவுத் தோட்டங்களைச் சேர்ந்தவர்களும் இத்தகைய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். மிகவும் அண்மைக்காலமாக, 40 ஆண்டுகளுக்கு மேல் கைவிடப்பட்டிருந்த பெத்தராசி தோட்டத்தில் இளைஞர்களால் காமன் கூத்து மீள உருவாக்கப்பட்டுள்ளது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு சுண்டுலாக்கந்தை மேல்பிரிவுத் தோட்டத்தில் காமன்கூத்தும், போட்றித் தோட்டத்திலே பொன்னர் - சங்கர் கூத்தும் மீள உருவாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, டிக்கோயா சின்ன வேர்க்கொலைத் தோட்டத்தில் மிக நீண்டகாலத்துக்குப் பிறகு இளைஞர்களால் காமன் கூத்து முழுமையாக மீள் உருவாக்கம் செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகிறது. மேலும், கந்தலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் யட்டியாந்தோட்ட கருணாகரன் அவர்கள் பாடசாலையில் காமன் கூத்தை நடுகை செய்து, மலையகப் பண்பாட்டு அடையாளத்தை நிலைப்படுத்தும் வரலாற்றுப் பாத்திரத்தை முன்னெடுத்துள்ளார்.

### பின்காலனித்துவ மயமாக்கல்

பின்காலனித்துவ மயமாக்கல் பண்பாட்டுக் கருவியாக, கிறிஸ்தவ மத குழுக்களின் மீள் வருகையும் மதமாற்றங்களும் மலையகப் பாரம்பரிய அரங்கின் மீது குறிப்பிடத்தக்க எதிர்மறையான செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கின்றன. மலையகம் முழுவதும் இயங்கும் மதச்சார்பற்ற , அரசு சார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் துணையோடு இயங்கும் டசன் கணக்கான கிறிஸ்தவ மதக் குழுக்களும், மலையக மக்களின் வரலாறு, பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மரபுக் கலைகள் போன்றவற்றை அழித்தொழிப்பதில் மிக முக்கிய பாத்திரம் வகிக்கின்றன.

பின்காலனித்துவக் காலப்பகுதியில் இயங்கும் மதச் சார்பற்ற மற்றும் கிறிஸ்தவ மதக் குழுக்களின் செயற்பாடுகளை, தமிழரின் வரலாறு மற்றும் பண்பாட்டுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அறிவிக்கப்படாத ஒரு நவகாலனித்துவப் போராகக் கருதினால் அது மிகை இல்லை. இதன் விளைவாக, மலையக மக்களின் வாழ்வியல் இயங்குவிசைகள் திட்டமிட்டுக் அழிக்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டுக் கருவிகள் கைவிடப்படுதல், அடையாளங்கள் அழிக்கப்படுதல், பாரம்பரிய மருத்துவம், தொழில்நுட்பம், கற்றல், அறிதல் மற்றும் தெளிதல் முறைகள் எல்லாம் கைவிடப்பட்டு, அவை மேலைத்தேய காலனித்துவ மயமாக்கப்பட்டு வருகின்றன. எனினும், இந்தப் பண்பாட்டு அழிப்பிற்கு எதிரான போராட்டங்களும் ஆங்காங்கே நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

பண்பாட்டு அழிப்பு மற்றும் நவகாலனித்துவ மயமாக்கலின் விளைவாகத்தான், இளைஞர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் புதிது புதிதாக ஒன்றிணைந்து, தமது கலைகளையும் பண்பாட்டையும் மீட்டுருவாக்கும் போராட்டத்தில் பங்களித்து வருகின்றனர். தற்போது, பல்கலைக்கழக மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், சமூக ஆய்வாளர்கள், சமூக விஞ்ஞானிகள் ஆகியோர் இந்தக் கலை வடிவங்களை ஆவணப்படுத்துவதிலும், அறிக்கையிடுவதிலும், ஆய்வு செய்வதிலும் தமது அக்கறையைச் செலுத்தி வருகின்றனர்.

### திறந்த பொருளாதாரமும் மலையக அரங்கும்

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் அதன் உடனடி விளைவுகள் காரணமாக, ஏற்கனவே வாழ்வில் சிரமப்பட்டுக்கொண்டிருந்த அரங்கியலாளர்கள் மேலும் துயரங்களைச் சுமந்து பொருளாதாரச் சுமைக்கு உள்ளானார்கள். இதைத் தொடர்ந்து, புலப்பெயர்வுகள், உள்நாட்டு யுத்தம், அடுக்கடுக்காகத் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள், திட்டமிட்ட ஆக்கிரமிப்பு,

அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற காரணங்களால், இவர்களது அரங்கச் செயற்பாடுகளுக்கான முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட்டன அல்லது சிதைவு அடைந்தன. இவ்வாறு, மலையக அரங்கியலானது சமூக உருவாக்கத்தில் பங்கெடுத்த அதேவேளை, பல்வேறு தடைகளாலும் அழுத்தங்களாலும் பின்னோக்கித் தள்ளப்பட்டும், முன்னோக்கி நகர்த்தப்பட்டும் காலத்திற்குக் காலம் வந்துள்ளமையைக் காண முடிகிறது.

சான்றாக, பொகவந்தலாவ பெரிய எலிப்படை தோட்டத்தின் கீழ்ப் பிரிவில் முன்பு அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர், லவகுசா, காத்தவராயன் கூத்து, குறவஞ்சி, நல்ல தங்காள் கதை, அல்லி, அருக்காணி கதை போன்றவை நிகழ்த்தப்பட்டு வந்த நிலையில், தற்போது லவகுசாவும், காமன் கூத்து ஆகியன மட்டுமே நிகழ்த்தப்படுவதைக் காண முடிகிறது. மேலும், மலையகச் சமுதாயத்தில் லவகுசா நாடகம் நிகழ்த்தப்படும் ஒரே இடமாகப் பொகவந்தலாவ பெரிய எலிப்படை பணியக்கணக்கு தோட்டம் மட்டுமே உள்ளது. அங்கு திரு. ஜி. கனகராஜ் மாஸ்டர் என்பவர் ஐந்து தலைமுறைகளுக்கு அந்தக் கூத்தைப் பயிற்றுவித்ததுடன், தனது அந்திமக் காலத்திலும் தொடர்ந்து இதனை நிகழ்த்தி வருகிறார். திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக, ஒரு பாரம்பரிய அல்லது நவீன நாடகத்தை நிகழ்த்துவதற்கு ஒரு தடவைக்கு இரண்டு முதல் மூன்று இலட்சம் ரூபாய் பணம் தேவைப்படுகிறது. அத்துடன், பல வேலை நாட்களை இழக்க வேண்டி இருப்பதால், இந்தத் தொகையைத் திரட்டுவதும், அரசின் ஆதரவையோ அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவையோ பெறுவதும் இப்போது மிகப்பெரிய சவாலாக இருக்கிறது என்பதையும் நாம் குறிப்பிட வேண்டும்.

இந்த மலையக அரங்கானது, நவீன சினிமா, தொலைக்காட்சி, இணையங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் எதிர்மறையான செல்வாக்கிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் போராட வேண்டிய தேவை இருக்கிறது. அதேசமயம், சில வேளைகளில், இந்த அரங்க முயற்சிகளும் கலைகளும் அவற்றுக்கூடாகவே (நவீன ஊடகங்கள் வழியாகவே) தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் முயற்சி செய்வதைக் காண முடிகிறது.

## நவீனத் தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு

நவீனத் தொடர்பு சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செல்வாக்கினால், இன்றைய மலையகத்தின் இளைய தலைமுறையினரிடையே அரங்கச் செயற்பாடுகள் மிக வேகமாக அருகி வருவதைக் காண முடிகிறது. பாரம்பரிய அரங்குகளில் ஆர்வம் குறைந்துள்ள நிலையில், நவீன அரங்கச் செயற்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இடம்பெறுகின்றன. இத்தகைய நிலைக்கு, பாடசாலைக் கல்விமுறையின் செயலூக்கமற்ற தன்மை, இலாப நோக்குடைய தனிப்பட்ட கல்வி நிலையங்களின் செயற்பாடுகள், பள்ளிகள் மற்றும் கல்வி நிலையங்கள் பரீட்சைக்கு மாணவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக இயங்குவது, அத்துடன் கல்வி முறை வரலாற்றுணர்வையும், பண்பாட்டுணர்வையும், விமரிசன விழிப்புணர்வையும் ஏற்படுத்தத் தவறியமை என்பவையே காரணமாகும். மேலும், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் மானிடத்தைச் சிதைக்கின்ற, சிறுமைப்படுத்துகின்ற மசாலா நாடகங்கள், தொடர் நாடகங்கள், உயர்மட்ட வர்க்கங்களின் சிதைவு, சீரழிவு, சதுராட்டங்கள், சறுக்கல்களை வெளிக்காட்டும் முடிவற்ற தொடர்கள் போன்ற நிகழ்ச்சிகள், இன்றைய தலைமுறையின் அரங்கச் செயற்பாடுகளுக்கும், சமூக மாற்றத்திற்கான அரங்கை உருவாக்குவதற்கும் பெரும் தடைகளாகக் காணப்படுகின்றன.

## நம்பிக்கைத் தரும் அரங்க முயற்சிகள்

இன்றைய தலைமுறையின் இளைய நாடகவியலாளர்கள், மலையகச் சமூக உருவாக்கத்தில் ஒரு புதிய பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளனர். சமகாலச் சமூக நாடகங்களிலே, மலையகச் சமூகத்தின் முக்கியமான பிரச்சினைகளான மது ஒழிப்பு, பெண் அடிமைத்தனத்தை ஒழித்தல், அரசியல் விடுதலை மற்றும் தொழிற்சங்க மோசடிகள் என்பனவற்றை இவர்கள் மையப்படுத்துகின்றனர். இதற்குச் சான்றாக, பெயாவெல் ஏ. செல்வராஜ் அவர்களின் ‘என்னைப் பிடித்த பிசாசுகள் போயின’, ‘புதிய சிறகுகள்’, ‘ஆரியவதி வீடு’ போன்ற நாடகங்களையும்; பொன். பிரபாகரனின் ‘சின்னப் பண்ணையார்’, ‘பிரளயம்’, ‘நெருப்பு’, ‘வெல்வதற்கே பெண்ணுலகம்’ போன்ற படைப்புகளையும்; டியனசின் வி. கதிர்காமன் அவர்களின் ‘புதுமைப்பெண்’, ‘புதுமை மாற்றம் காண்போம்’, ‘மீண்டும் ஒரு புதுமை செய்வோம்’, ‘விடியலைத் தேடும்’, ‘சிதைந்த வீடு’, ‘அர்த்தம் என்ன’ போன்ற நாடகங்களையும், மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான ஒரு வீதி நாடகத்தையும் குறிப்பிடலாம்.

மலையக நாடகத்துறையின் சமகால எழுச்சிக்கு, யட்டியாந்தோட்டை வே. கருணாகரன், பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மா. ரூபவரதன் (கருத்தடை இனக்கொலை பற்றிய ‘வாழப்பிறந்தாருக்கு’ நாடகம்), நோர்வுட் கிறிஸ்டி நேசகுமார் (‘விம்பம்’),

கொட்டகலை எஸ். சக்திவேல் ('வாழ்க்கையின் சுமைகள்'), கட்டப்புல வசந்தன் ('நல்ல காலம் பொறக்குது'), அப்புதளை சி. ஜீவராஜா ('உடுக்கொலி'), கே. கோவிந்தராஜன் ('தப்பு'), பொகவந்தலாவை எஸ். பிரேம்குமார் ஆகியோரின் நாடகங்கள் மிக முக்கிய பங்காற்றின. இவர்களுடன், லட்சுமி தோட்டம் தி. சிவனேசன் ('தாகம்', 'கண்களில் ஈரம்'), கல்கந்தை வி. சதாசிவம், பொகவந்தலாவை எஸ். அன்சலாமேரி, வென்ஜர் பத்மேஸ்வரி, கெம்பியன் ராமகிருஷ்ணன், தெரேசியா பெருமாள் சசிகலா, இராகலை பன்னீர்செல்வம், மாகுடுகலை எஸ். புகழேந்திரன், பொகவந்தலாவை அன்னமுத்து ஜெகன்தாசன், போட்ரித் தோட்டம் பிரான்சிஸ் ஹெலன், கொட்டகலை செந்தில் குமார், தென்மதுரை சதீஸ்குமார், லிந்துலை சுகுமார், வென்ஜர் தியாகராஜா, செல்வராஜ் லீலாவதி, மெறேயா திசேரா, டயகம மா. சசிதரன் போன்ற கலைஞர்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும், கேதீஸ் மெய்யநாதன், லோகநாதன், ராஜேந்திரன், அஜந்தன் சாந்தகுமார், புளியாவத்தை மு. நவநீதன் போன்றோரின் நாடகங்களும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன.

பளிங்குமலை செல்வராஜ் வாசுதேவன் அதிபர் அவர்கள், மலையகச் சமூக நாடக உருவாக்கத்தில் மிகச் சிறந்த பங்காற்றியுள்ளார். புதிய பண்பாட்டு அமைப்பு, மக்கள் களரி போன்ற நாடக அமைப்புகளுடன் நீண்டகாலம் பயணித்த அனுபவம், நடிப்புத் திறன், பயிற்சி நோக்குகள் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தவர் இவர். இந்தியா, கஜகஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளுக்குச் சென்று தனது நாடகங்களை அரங்கேற்றியுள்ள இவரது முக்கிய படைப்புகளாக 'கோன் உயர', 'கதாநாயகன்', 'சுத்தம் சுகம் தரும்', 'அன்னையை அரவணை' ஆகியவை உள்ளன. மேலும், இவரது சிறுவர் நாடகங்களான 'கைகோர்ப்பு', 'எறும்பு கொண்டாடல்', 'எலிப்பொறியில் பூனை', 'மாயக்கல்வி' போன்றவை தேசிய நாடக விழாவிலே பாடசாலை நாடகங்களாக அரங்கேற்றப்பட்டு, ஒன்பது முதல் பத்து தேசிய விருதுகளை வென்றவை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தேசிய நாடகப் போட்டிகளில், தர்மஸ்ரீ பண்டாரநாயக்க, பராக்கிரம நிதிஎல்ல போன்ற நாடக ஜாம்பவான்கள் அதிக விருதுகளை வென்றிருக்கும் நிலையில், அவர்களுக்குச் சமனான விருதுகளை இந்தத் தோட்டப்புறத்தைச் சேர்ந்த சாதாரண கலைஞர்கள் மற்றும் இளம்



Image Source - uthayannews.ca

நாடகவியலாளர்கள் வென்றெடுத்திருப்பது மலையக நாடகத் துறையின் புதிய எழுச்சிக்குக் கிடைத்த முக்கியமான அங்கீகாரமாகும். தி. சிவநேசனின் வீதி நாடகங்கள், மது ஒழிப்பு, பாலூட்டல், பாலியல் வன்முறை எதிர்ப்பு, பெண் விடுதலை, இயற்கை பாதுகாப்பு, நிலம், நீர் சார்ந்த கருப்பொருட்களை மையமாகக் கொண்டு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அதேபோல, ரூபாகொல்லை காளிதாசின் 'தோழன்', 'மகாகவி காளிதாசர்', 'கரடி' போன்ற படைப்புகள் மலையக இளம் நாடகக் கலைஞர்களுக்கு மிகச் சிறந்த முன்னுதாரணங்களாகத் திகழ்கின்றன. இதற்கு மேலதிகமாக, யட்டியாந்தோட்டை கருணாகரன், ராசய்யா லோகநாதன், சுதர்சன், செல்வராஜ் லீலாவதி, மெய்யநாதன் கேதீஸ் ஆகியோரின் சிறுவர் நாடகங்கள், தேசிய நாடக விழாக்களிலும், இலங்கை தமிழ் நாடக விழாக்களிலும் ஐந்து முதல் பத்து விருதுகள் வரை வென்று, மலையக நாடகத் துறைக்கான தேசிய அங்கீகாரத்தை வலுப்படுத்தியுள்ளன.

## புதிய பண்பாட்டமைப்பும் அரங்க முயற்சிகளும்

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொகவந்தலாவை பெரிய எலிப்படை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் பொன். பிரபாகரன் மற்றும் ஆண்டி அரிச்சந்திரன் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட புதிய பண்பாட்டு அமைப்பு, மலையகத்தின் நவீன நாடக இயக்கத்திற்கும் பாரம்பரிய நாடக இயக்கத்திற்கும் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியது. குறிப்பாக, அவர்களது முயற்சியின் காரணமாக 300க்கும் மேற்பட்ட நாடகக் கலைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். முற்றிலும் புதிய தலைமுறைக் கலைஞர்களைக் கொண்டு, 2001 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையால் அரங்கேற்றப்பட்ட உலக நாடக விழாவில், மலையகப் பாரம்பரிய மற்றும் நவீன நாடகங்களை அரங்கேற்றி,

ஓர் உயர் கல்வி நிறுவனத்தில் மலையக அரங்குகளுக்கான அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இந்த வரலாற்றுச் சாதனைக்கு, திரு. மணிசேகரன், தியாகசேகரன், திரு. பொன் பிரபாகரன் ஆகியோருடன், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் துறைத் தலைவரான பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களும், அப்போதைய சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ஜெயசங்கர் அவர்களும் சிறந்த பங்களிப்பையும் ஒருங்கிணைப்பையும் வழங்கியிருந்தனர்.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான நீண்ட நாடகப் பாரம்பரியம் உள்ளது. வருடத்திற்கு ஒரு நாடகம் என்ற அடிப்படையில், சுமார் 10 முதல் 12 ஆயிரம் தோட்டங்களில் தயாரிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்ட நாடகங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால், அது 100,000 முதல் 150,000 நாடகங்கள் வரை இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இத்தகைய பிரமாண்டமானதொரு கலைப் பொக்கிஷம் இருந்தபோதிலும், இவை முறைசார்ந்த ஆவணப்படுத்தலுக்கோ, அறிக்கையிடலுக்கோ, ஆய்வு முறைக்கோ உட்படுத்தப்படவில்லை என்ற வரலாற்றுத் துயரம் இன்னும் தொடர்கிறது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

### மலையகத்தமிழர் மரபுரிமை பாதுகாப்பு அமைப்பும் அரங்க முயற்சிகளும்

மலையகத் தமிழர் மரபுரிமைப் பாதுகாப்பு அமைப்பு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, மலையகத்தின் பல பகுதிகளில் இருந்த இத்தகைய கலைப் பண்பாட்டு முயற்சிகளின் தகவல்கள் திரட்டப்பட்டு, 2019 ஆம் ஆண்டு, 56 மலையக பாரம்பரிய அரங்கியலாளர்கள், 'மலையக மரபுரிமை அறிவியலாளர்கள்' எனப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில், எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகோலும் விதமாக 12 இளந்தலைமுறை அரங்கியல் ஆய்வாளர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

கொட்டியாகொல்லை தோட்டத்தைச் சேர்ந்த ராசையா லோகநாதன் மற்றும் லட்சுமி தோட்டம் மத்திய பிரிவைச் சேர்ந்த செல்வராஜ் லீலாவதி ஆகியோர் நாடகப் புலமைக்காகப் பாராட்டப்பட்டு, ஜப்பான் நாட்டின் அதியுயர் விருதான 'புங்கா' என்கிற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருப்பது, மலையகக் கலைஞர்கள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர் என்பதைக் குறிக்கிறது.

செல்வராஜ் லீலாவதி அவர்கள் 'வையம் தழைப்பதற்கு', 'நாடக முற்றம்', 'லச்சுமி' (நெடு நாடகம்), 'சாப்பாட்டு மேசை', 'வெளிச்சமே' (குறு நாடகம்), 'பேசும் கொழுந்துகள்', 'ராட்டினம்' (சிறுவர் நாடகம்) போன்ற பல நாடகங்களை இயக்கியதோடு, இவை தேசிய மற்றும் சர்வதேச விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றிருக்கின்றன. நவீன நாடகங்களில், 'இப்படி ஒரு நாள்', 'பிள்ளைகளே எழுவீர்', 'மனசாட்சி ஒடுது பிடி', 'பிகி', 'நிலக்குமிழிகள்', 'லயத்துக் கோழிகள்', 'பாய் பாய் பங்களா', 'வானம் இருக்கும்' (ஓரங்க நாடகம்) போன்றவை மிகச் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன. இவற்றில் பல, தோட்ட நிர்வாகம், இராணுவப் புலனாய்வுப் பிரிவு, மற்றும் அரசியல்வாதிகளின் எதிர்ப்பையும் மீறி கொட்டியாகொல்லை மேல்பிரிவு தோட்டத்திலும் வடக்கு - கிழக்கின் பல பகுதிகளிலும் அரங்கேற்றப்பட்டன. மேலும், இவர்களது 'தியேட்டர் மேட்ஸ்' (அரங்கத் தோழர்கள்) நாடகக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 'பாய் பாய் பங்களா' மற்றும் 'ரதிக்கூத்து' நாடகங்கள், 2024 ஆம் ஆண்டு இந்தியாவில் கல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச நாடக விழாவில் அரங்கேற்றப்பட்டு வரலாறு படைத்தன. இதற்காக இவர்கள் 25 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட நிதியைச் சுயமாகத் திரட்டிக்கொண்டு, 10 தோட்டப்புற ஏழைச் சிறுவர்களைக் கொண்டு இந்த நாடகத்தை அரங்கேற்றினர். இது பற்றிய பதிவை திரு. ராசையா லோகநாதன் அவர்கள் 'கடல் தாண்டி மலை தாண்டி' என்ற நூலாக எழுதியுள்ளார். இதனை ஆவணப்படமாக 'கொக்கரிப்பு' என்ற பெயரிலும் வெளியிட்டுள்ளனர். இவை மலையக நாடக வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

இளைய தலைமுறையின் நாடகப் பங்களிப்பில், அஜந்தன் சாந்தகுமாரின் 'ஒளிவிடும் பரல்', 'விண்ணாதி விண்ணர்கள்', 'மினுங்கல்' ஆகிய நாடகங்களும், புளியாவத்தை தோட்டத்தைச் சேர்ந்த சபாபதி கலையரசியின் 'ஒரு ஊரில் ஒரு பாறை' (சிறுவர் நாடகம்), 'இருத்தல்' (குறு நாடகம்) போன்ற படைப்புகளும் தற்போது கவனம் பெறுகின்றன. மேலும், மலையகச் சிறுவர்களே தயாரித்த நாடகங்களாக லட்சுமி தோட்ட மத்திய பிரிவைச் சேர்ந்த வசீகரன் எழுதிய 'பெருந்தகை', உயர்தர வகுப்பு மாணவன் ஜிம் கெனடியின் 'கோணம்' ஆகியவையும், புளியாவத்தை மு. நவனீதனின் 'ரிப்போர்ட்டர்' என்ற குறுநாடகமும்

குறிப்பிடத்தக்கவை. பத்மநாதன் பிரகாஷின் ‘இல்லாதவர்கள்’, பிறமொழிக் கலைஞர்களின் ‘தித்த காட்ட’ மற்றும் ரொனிகாவின் சிங்கள நாடகங்கள் போன்றவையும் மலையகச் சமூக வாழ்வியலைச் சித்தரிக்கின்ற நவீன நாடகங்களாகத் தற்காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

‘மலையக அரங்கத் தோழர்கள் பண்பாட்டுக் குழு’ (Theater Mates) என்ற நாடகக் குழுவானது, லட்சுமி தோட்டம், கல்பொடவுத் தோட்டம், பெரிய அரைத்தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 60 பாடசாலைச் சிறுவர்களைக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு பொகவந்தலாவையில் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தொடர்ச்சியான மாதாந்த நாடக நிகழ்வுகளை நடத்தி வருவதுடன், நான்கு வருடங்களுக்கு மேலாகச் சிறப்பான உயர் தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற நாடகக் குழுக்களைச் சிறுவர்களைக் கொண்டு உருவாக்கி வந்துள்ளது. இந்தச் சிறுவர் குழுக்களில் ஒன்று, அதாவது லட்சுமி தோட்ட நாடகக் குழு, ‘பாய் பாய் பங்களா’ என்ற நாடகத்தை மும்பை சர்வதேச நாடக விழாவில் அரங்கேற்றியது குறிப்பிடத்தக்கது. இந்தக் குழுவை பத்மநாதன் பிரகாஷ், அஜந்தன், செல்வராஜ் லீலாவதி, ராசையா லோகநாதன் ஆகியோர் நடாத்தி வருகின்றனர்.

மா. ரூபவரதன் என்ற பேராதனைப் பல்கலைக்கழக மாணவர், ‘வாழப்பிறந்தாருக்கு’ என்ற நாடகத்தை 2002 ஆம் ஆண்டு பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்களைக் கொண்டே அரங்கேற்றினார். இதில் தெரேசியத் தோட்டத்தைச் சேர்ந்த பெருமாள் சசிகலா பிரதான பாத்திரமேற்று நடித்திருந்தார். இந்த நாடகமானது, மலையகத்தில் நிகழும் தேசிய இன அழிப்புக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட கருத்தடையை எதிர்க்கின்ற கருப்பொருளைக் கொண்டிருந்தது. இந்நாடகம் பல்கலைக்கழகச் சமூகத்திலும், கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும், ஹட்டனிலும் அரங்கேற்றப்பட்டபோது, பரந்துபட்ட இலங்கைச் சமூகத்திற்கும் மிகப்பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாகவே, நாடாளுமன்ற விவாதங்களின் பின்னர், மலையகப் பெருந்தோட்டப் பகுதியிலே கருத்தடை தடை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கந்தப்பளையைச் சேர்ந்தவரும், யாழ் பல்கலைக்கழக நாடகவியல் விரிவுரையாளராகச் செயற்படுபவருமான கேதீஸ் மெய்யநாதன், ‘சகதிப் புழுக்கள்’ என்ற நாடகத்தை அரங்கேற்றியதோடு, அதன் நாடகப் பிரதியையும் வெளியிட்டுள்ளார். மேலும், ஐயாராம் குணசீலன் என்பவர் ‘நோக்காடு’ என்ற நாடகப் பிரதியை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளியிட்டுள்ளார். நாடகத் துறையிலே அண்மைக்காலமாகப் பல மாணவர்கள் பட்டதாரிகளாகவும் கலைமாமணிகளாகவும் வெளிவந்துள்ளனர். அவர்களில், கெம்பியன் தோட்டத்தைச் சேர்ந்த திவ்யசோபனா, சுண்டுலாக்கந்தைத் தோட்டத்தைச் சேர்ந்த ராதிகா, பிரசாந்தினி ஆகியோரும் நாடகத்துறையில் இளங்கலை (இளமானி) பட்டங்களைப் பெற்றுள்ளனர். குறிப்பாக, பிரசாந்தினி மற்றும் ராதிகா ஆகியோர் வட இலங்கை சங்கீத சபையில் கலைமாமணிப் பட்டம் பெற்ற மலையகத்தின் முதல் கலைமாமணிகளாகத் திகழ்கின்றனர். மேலும், கௌரவிலை தோட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்டினா (சுவாமி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவனம் - கிழக்குப் பல்கலைக்கழக மாணவி) நாடகத்துறையில் இளமானி பயின்று கொண்டிருக்கிறார். இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய நாடகங்களுக்காக (2023 - ‘மனிதி’, 2024 - ‘இளவந்திகை’, 2023 - அரச சிறுவர் நாடக விழா - ‘தோழமை’ ஆகியவற்றுக்காக) தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். பதுளை மாவட்ட மாணவரான அழகேஸ்வரன் கிருஸ்ணராஜ் என்பவர் 2024 - ‘இளவந்திகை’ நாடகத்துக்காக ஆறு தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

நவீன நாடகச் செயற்பாடுகளில், அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களான பிரீடோ நிறுவனம், சமூக அபிவிருத்தி நிறுவனம், பார்ம் பவுண்டேசன், மனித அபிவிருத்தி ஸ்தாபனம், உதயசூரியன் சமூக அபிவிருத்தி நிறுவனம், பீட்ரூ தோட்டம் என்பனவும், சிமிர்னா தேவாலயம் போன்ற மத அமைப்புகளும் இணைந்து சமூக விழிப்புணர்வு நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன.

### சென் ரெகுலாஸ் தோட்டமும் நேரு மன்றமும்

அக்கரைப்பத்தனை சென் ரெகுலாஸ் தோட்டத்தில் இயங்கிய ‘நேரு நாடக மன்றம்’ சுமார் 56 நாடகங்களைத் தயாரித்திருப்பதும், அந்த நாடகங்களில் பங்குபற்றிய பல கலைஞர்கள் இன்றும் உயிருடன் இருப்பதும் கண்டறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு, மலையக வரலாற்றில் ஒரு சிறப்பான நிகழ்வாக அமைந்துள்ளது. இந்தக் கட்டுரையாசிரியரால் நேர்காணல் செய்யப்பட்ட, இந்தத் தோட்டத்தைச் சேர்ந்த ஜே.எம். குணபால (பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தொழிலாளி) என்பவர், நேரு மன்றம் தயாரித்த 22 தமிழ்

நாடகங்களில் நடித்திருப்பதும், சுப்ரமணியம் ராசு என்பவர் இன்றும் இதற்கான நடமாடும் சாட்சியாக இருப்பதும் அறியப்பட்டுள்ளது. இவர்கள் 'அம்மா' (சந்திரபாபுவின் நாடகம்), 'சம்பூர்ண இராமாயணம்', 'சாரதாஜி', 'மயான காண்டம்', 'தங்கப் பதுமை', 'ஏழையின் கண்ணீர்', 'பக்த பிரகலாதன்', 'இரணியன் சம்சாரம்' ஆகிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. பொகவந்தலாவையில் உள்ள கல்கந்தைத் தோட்டம், பெரிய எலிப்படைத் தோட்டம், சுண்டுலாக்கந்தைத் தோட்டம், கொட்டியாக்கொல்லைத் தோட்டம் போன்ற பகுதிகளும் மலையக அரங்கியலில் முக்கியமான பிரதேசங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக, கொட்டியாக்கொல்லைத் தோட்டத்தில் திரு. தங்கராஜா மாஸ்டர் தலைமையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த நாடக இயக்கத்தில், அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர், காமன் கூத்து, காத்தவராயன் கூத்து, ஒட்டக்கூத்தர் கதை, காசிராஜன் கதை, தேசிங்கு ராஜன் கதை போன்ற மலையகப் பாரம்பரிய நாடகங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவரின் பங்களிப்பு தேசிய அளவில், 1972 ஆம் ஆண்டு இலங்கை வானொலியிலே காமன் கூத்தை நிகழ்த்தியதன் மூலமும், கொழும்பு ஜோன் டி சில்வா கலையரங்கிலே பயிற்சிப் பட்டறைகளையும் அரங்கேற்றங்களையும் நடத்தியதன் மூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிலும், யாழ்ப்பாணக் கல்லூரி, பரமேஸ்வரா கல்லூரி, வட்டுக்கோட்டை மகளிர் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களிலும், திருகோணமலை தக்ஷிண கைலாசப் புராணப்படலம் பாடும் நிகழ்விலும் மலையக காமன் கூத்து அரங்கேற்றப்பட்டதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இராசாத் தோட்டமும் பாரதி மன்றமும்

இராசாத் தோட்டத்து (நோர்வுட்) பணியக்கணக்கில் பாரதி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு, 13.10.1965 அன்று வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று, அதன் வரலாற்றுச் செயற்பாட்டைப் பதிவு செய்துள்ளது. அதில், 13.10.1965 ஆம் ஆண்டு சனிக்கிழமை இரவு 7 மணிக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளராக இருந்த எம்.எஸ். செல்லச்சாமி அவர்களின் தலைமையில், எஸ். கருப்பையா தயாரித்த 'அன்புக்கோர் ஆலயம்' மற்றும் அவரே எழுதித் தயாரித்த 'மலைநாட்டில் எமன்' ஆகிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. 'அன்புக்கோர் ஆலயம்' நாடகத்தில் சோமபால, எஸ். லட்சுமண், எம். ராஜா, கே. வேலு, கே. லட்சுமண், ஆர்.எஸ். ராமையா, மருதமுத்து, விஸ்வலிங்கம், செபஸ்தியன், பி. காமெதி, எஸ். சுப்பிரமணியம், எம். அம்மாமுத்து, ஏ.கே. கருப்பையா ஆகியோர் நடித்துள்ளனர். 'அழுவதா? சிரிப்பதா?' என்ற மற்றொரு நாடகத்தில் என். செல்லையா, ஆர். சுப்பையா, எஸ். கருப்பையா, எஸ். சூரியநாதன், பாக்கியம், ஏ.ஆர். கந்தையா ஆகியோர் நடித்துள்ளனர். 'மலைநாட்டில் எமன்' நாடகத்துக்கு ஜெகதீஸ்வரன் மேலாளராகவும், பெனடிக்ட் பின்னணிப் பாடகராகவும், பாக்கியம் உதவியாளராகவும், செல்லத்துரை மேடை முகாமையாளராகவும், எஸ். கருப்பையா மேடை அமைப்பாளராகவும் இருந்துள்ளனர். எஸ். மணி குழுவினர் இசையமைப்பைச் செய்ய, காட்சி அமைப்பை என். கருப்பையா மற்றும் என். சூரியநாதன் செய்துள்ளனர். மேலும், அரிச்சுனன், முத்துலிங்கம், டபிள்யூ.ஜி. சோமபால ஆகியோரும் இதில் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

இராசாத் தோட்டம் (நோர்வுட்) பாரதி மன்றம், 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று நடத்திய விழாவில், திரு. நா. முத்தையா தலைமையில் 'என் நீதி எங்கே' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டதற்கான வரலாற்றுத் தடயங்கள் கிடைத்துள்ளன. அதே பாரதி மன்றம், 14.01.1979 ஆம் ஆண்டு ஞாயிறு இரவு 9 மணிக்கு, 'மலைச்செல்வன்' எழுதிய 'இதயங்கள் புனிதமானவைகள்' என்ற நாடகத்தை அரங்கேற்றியது. இதில் எம். ராமு, வி. கருப்பழகு, டி.பி. ராஜி, எம். மருதை, எஸ். மாணிக்கம், வி. அரசப்பன், எம்.வி. சுப்பிரமணியம், எஸ்.பி. அரசன், எஸ். லட்சுமணன், எஸ். முத்துலிங்கம், ஜி. பஞ்சரத்தினம், எஸ். சிங்காராஜ், கே. ராஜேந்திரன், எம். ராமையா, அம்மாசி, எஸ். சூரியநாதன், எம். கணபதி, ஜே. முனியாண்டி, ஆர். சித்திரன், பி. அருமைக்கொடி, எம். துரைசாமி, எம். ராமு, பி. முத்து, எஸ். கனகரத்தினம் ஆகியோர் பங்கேற்று நடித்துள்ளனர். இந்தக் காலகட்டத்து நாடகச் செயற்பாடுகளுக்கான சான்றுகள் துண்டுப் பிரசுரங்கள் வடிவில் திரட்டப்பட்டுள்ளன.

### கொட்டகலைப் பளிங்குமலைத் தோட்டத்தின் நாடக முயற்சிகள்

குறிப்பிட்ட இந்தத் தோட்டத்தில், 1970கள் மற்றும் 1980களில் இயங்கிய பல நூற்றுக்கணக்கான பாரம்பரிய நாடகவியலாளர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இருப்பினும், எஞ்சியிருந்த பூபாலன், மகாலிங்கம், செல்வராஜ், ஜோன், அலோசியஸ், கிருஷ்ணகுமார் ஆகியோர் 1974 முதல் 1984 வரையான ஆண்டுக் காலப்பகுதியில் தீவிரமான பாரம்பரிய மற்றும் நவீன நாடக முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர். தற்போது, அவர்களில் ஒருவரான செல்வராஜ் வாசுதேவன் என்பவர் ஓர்

ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றுவதோடு, 'நிதரிசனம்' மற்றும் 'குணக்குன்று' ஆகிய நாடகங்களை எழுதித் தயாரித்துள்ளார்.

### கொட்டியாக்கொல்லைத் தோட்டத்தில் அரங்க முயற்சிகள்

பொகவந்தலாவை கொட்டியாக்கொல்லைத் தோட்டத்தில் 1970களில் வாழ்ந்த, இராமசாமி வேலு என்ற இயற்பெயருடைய தங்கவேல் மாஸ்டர் அவர்கள், தனது பதின்ம வயதுகளிலிருந்தே அர்ச்சுனன் தபசு, காசிராஜன் கதை, தேசிங்கு இராஜன் கதை, ஒட்டக்கூத்தன், காமன் கூத்து போன்ற பாரம்பரிய நாடகங்களையும், சமுதாய சீர்திருத்தப் பாடல்கள், நவீன வழிகாட்டி, ரங்கூன் ராதா போன்ற நவீன நாடகங்களையும் தொடர்ச்சியாக நெறியாளுகை செய்து நாடு முழுவதும் அரங்கேற்றியுள்ளார். இவர் 25 சதம் கட்டணமாக வசூலிக்கப்பட்ட சமூக நாடகங்களைக் கொண்டு திரட்டிய ரூபாய் 9,000 பணத்தில், பொகவந்தலாவை சென்மேரிஸ் கல்லூரியில் மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

### பொகவந்தலாவை பெரிய எலிப்படைத் தோட்டத்தில் அரங்க முயற்சிகள்

1940 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலிருந்து, இந்தத் தோட்டத்தில் காமன் கூத்து, பொன்னர் - சங்கர், அர்ச்சுனன் தபசு, காத்தவராயன் கதை, நல்ல தங்காள் கதை, அல்லி, அருக்காணி கதை, குறவஞ்சி, மருதவீரன் கதை, அபிஞான சுந்தரி, அரிச்சந்திர புராணம் போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய நாடகங்கள் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வந்துள்ளன.

### டி.எக்ஸ். கருப்பையாப் பிள்ளை நாடக சபை

இந்த நாடக சபையானது, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் முழுநேர நாடகக் குழுவாகச் செயற்பட்டு, மலையகம் முழுவதும் நவீன நாடகங்களை அரங்கேற்றம் செய்துள்ளது. இக்குழுவில் நாயகம், சின்னையாத் தேசிகர், குஞ்சரம், பரமானந்தம், அழகிரி, செல்லத்துரை, இராஜகோபால், கோதவர்மா பாகவதர், துரையப்பா, சுந்தரராஜ், ஆ. முத்தையா, வேல்நாயுடு ஆகியோர் முழுநேர நடிகர்களாகப் பங்கேற்றுள்ளனர்.

### பி. குமாரசாமிப்பிள்ளை நாடக சபை

இந்தச் சபையும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மலையகத் தோட்டங்களில் முழுநேர நாடகக் கலைஞர்களைக் கொண்டு நவீன நாடகங்களை நடாத்தி வந்துள்ளது. இக்குழுவில் கணேச பாகவதர், சங்கரபாண்டியன், பண்டாரம், கருப்பையா, பொன்னையாப்பிள்ளை, குப்புசாமிப்பிள்ளை, மணிராஜ பாகவதர், விஸ்வலிங்கம், பொன்னப்பா ரெட்டியார், சபாபதிப்பிள்ளை, ஜோசப் ஆகியோர் முழுநேர நடிகர்களாகப் பங்கேற்றுள்ளனர்.



Image Source - www.namathumalayagam.com

### 90 இற்குப் பின்னரான மலையக அரங்கச் செயற்பாடுகள்

1997 ஆம் ஆண்டு பொகவந்தலாவை பெரிய எலிப்படை கீழ்ப்பிரிவில் உருவாக்கப்பட்ட 'புதிய பண்பாட்டு அமைப்பு', மலையக வரலாற்றில் நீண்டகாலமாக அரங்க, அரசியல், சமூகச் செயற்பாடுகளை முன்னெடுத்த ஒரு சுயாதீனமான பண்பாட்டுக் குழுவாகக் காணப்படுகிறது. இந்த அமைப்பு 2003 ஆம் ஆண்டு மலையக சமூக நாடகப் போட்டிகளை நடாத்தியது. அவற்றில் 13 நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. யாழ்ப்பாணம் சினிசிட்டா அரங்கிலே அரங்கேற்றப்பட்ட முதலாவது மலையக சமூக நாடக விழா இதுவேயாகும். இந்த நாடக விழாவை முன்னிட்டு 'செங்கீற்று' எனும் இதழும் வெளியிடப்பட்டது. இவ்விழாவில், இலங்கையின் பிரபல நாடகவியலாளரும், சினிமா இயக்குநருமான தர்மஸ்ரீ பண்டாரநாயக்க அவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. ஜெயசங்கர் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### வி.டி. தர்மலிங்கம் நாடகப் போட்டி

மலையக மக்கள் முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அமரர் வி.டி. தர்மலிங்கம் ஞாபகார்த்த மன்றத்தில் நடத்தப்பட்ட அரங்கப் போட்டிகளில் 56 நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. ஒரு காலகட்டத்தில் நாவலப்பிட்டி ஜெய்சிங்க மண்டபத்தில் நடைபெற்ற நாடகப் போட்டியில் 190 மலையக சமூக நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாக அமரர் வேலு தங்கராஜா மாஸ்டர் அவர்கள் கட்டுரையாசிரியரின் நேர்காணலில் பதிவு செய்திருக்கிறார். மேலும், கயிவத்தைக் கோவிலில் 150க்கும் மேற்பட்ட சமூக நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாகவும் அவர் பதிவு செய்துள்ளார்.

### கொட்டகலை கிருஸ்லர்ஸ்பாம் தோட்டத்தில் பி.எஸ். செல்வராஜா நாடகக்குழு

இந்த நாடகக் குழுவுக்காக, ஆ. முத்தையா மாஸ்டர் என்பவர் 'இதயமில்லாத மனிதர்கள்', 'மறக்கமுடியாத சில மனிதர்கள்', 'வீர அபிமன்யு', 'காலம் வெல்லும்', 'நீதியின் தீர்ப்பு', 'அணையாத தீபங்கள்', 'புதிய சாம்ராஜ்யம்', 'நீங்காத நினைவுகள்', 'தூய உள்ளங்கள்', 'உறங்காத விழிகள்', 'பாண்டவர் சபதம்', 'இலங்கேஸ்வரன்', 'இதயத்தில் இரும்புத் திரை', 'விதியே உன் முடிவுதான் என்ன?', 'அலைகளின் நடுவே' ஆகிய நாடகங்களின் பிரதிகளை எழுதியும், அவற்றில் நடித்தும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார்.

### லிந்துலை சுகுமார் நாடகம்

லிந்துலையைச் சேர்ந்த அமரர் சுகுமார் என்பவர் 100க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி, தயாரித்து, தமது குழுவினரோடு சேர்ந்து நடித்தும் இருக்கிறார்.

### நாடகப் பயிற்சிப் பட்டறைகளும் பிறவும்

மலையகத்தில் 1990களுக்குப் பின்னர் தோற்றம் பெற்ற இத்தகைய பாரம்பரியத்தை ஊக்குவிக்கும் விதமாக, புதிய பண்பாட்டு அமைப்பு லட்சுமித்தோட்டம், பொகவந்தலாவை, நுவரெலியா, பலாங்கொடை ஆகிய பகுதிகளில் பல பயிற்சிப் பட்டறைகளை முன்னெடுத்தது. இவற்றில் பொன். பிரபாகரன், அ. கனகராஜ், எஸ். பிரபா, எஸ். பிரேம்குமார், எஸ். கிறிஸ்டி, பி. சக்திவேல் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். மேலும், பொகவந்தலாவை சென் மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளிலே நிஸாம், கே. கனகராஜ், ராஜநாயகம், பொன். பிரபாகரன், எஸ். பிரேம்குமார் ஆகியோர் வெவ்வேறு காலகட்டங்களில் பங்களித்திருந்தனர். ஹொலிரோசரி தமிழ் மகா வித்தியாலயத்தில், எம். நாகலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் சி. ஜெய்சங்கர் மற்றும் கோகிலா மகேந்திரன் ஆகியோர் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை முன்னெடுத்திருந்தனர். அதேபோல, அரச சார்பற்ற நிறுவனங்களான சுனேரா மன்றம் (மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறைகள்), பார்ம் பவுண்டேசன், பீட்ரு உதயசூரியன் சமூக அபிவிருத்தி நிறுவனம் என்பனவும், மக்கள் களரி நாடகக் குழுவும் மலையகத்தில் பல பயிற்சிப் பட்டறைகளையும் நாடக முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளன.

### கற்றைநெறியாக அரங்கு

1980களில் நோர்வுட் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய சுந்தரம் பிள்ளை என்பவர் 'அபுநானா' என்ற நாடகத்தைத் தயாரித்திருந்தார். 2001 ஆம் ஆண்டில், புதிய பண்பாட்டு அமைப்பின் வழிகாட்டலில், 30க்கும் மேற்பட்ட இளம் நாடகக் கலைஞர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உலக நாடக விழாவில் பங்கேற்றனர்; அங்கு மலையகப் பாரம்பரியக் கூத்துகளும் நவீன நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. 2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஈழத்துக் கூத்து விழாவிலும், அதே ஆண்டில் சிங்கள, தமிழ்க் கலைஞர்களால் கொழும்பு கலாபவனத்தில் அரங்கேற்றப்பட்ட சிங்கள, தமிழ் கலைவிழாவிலும் புதிய பண்பாட்டு அமைப்பின் நாடகக் குழு பங்கேற்றது. மேலும், மட்டக்களப்பு இராமநாதன் நுண்கலைக் கல்லூரியால் நடத்தப்பட்ட சர்வதேச சமுதாய அரங்கு மாநாட்டில் பொன். பிரபாகரன், எஸ். சதாசிவம், எஸ். கலாவண்ணன், எஸ். பிரேம்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

மலையகத்தில் நாடகமும் அரங்கியலும் ஒரு கற்கைநெறியாகப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, பொகவந்தலாவை சென் மேரிஸ் கல்லூரியில் திரு. இராஜநாயகம் அவர்களும், ஹொலிரோசரி தமிழ் மகா வித்தியாலயத்தில் எம். நாகலிங்கமும் அரங்கியலை அறிமுகப்படுத்தினர். அதேபோல, கெர்க்கஸ்வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயம் மற்றும் நோர்வுட் த.ம.வி. ஆகிய பாடசாலைகளில் பொன். பிரபாகரனும், லொயினோன் த.வி. மற்றும் டிக்கோயா த.ம.வி. ஆகியவற்றில் அன்சலாமேரியும், எலிப்படை த.வி. மற்றும் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் பத்மேஸ்வரியும், டியன்சின் த.ம.வி.யில் கதிர்காமனும், கவுரவில த.வி.யில் பிரேம்குமாரும், கெம்பியன் த.வி. யில் கிறிஸ்டியும் அரங்கியலை ஒரு கற்கைநெறியாகப் பாடசாலைகளில் முன்னெடுத்துள்ளனர்.

# நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் மேம்பாடும் முகாமைத்துவமும்: யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிராந்தியம்

பகுதி 1

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். ”வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.



**சுப்ரமணியம் சிவகுமார்**

கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல்  அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

### 4.1 நிலத்தடி நீர் மேம்பாட்டு மூலோபாயம்

நிலத்தடி நீர், பொதுவாக ஆழமற்ற நீர்நிலைகளாகக் (*Shallow Aquifers*) கிடைக்கிறது. இது உள்நாட்டுப் பயன்பாடு, சிறுதொழில் நோக்கிலான பாசனம், தொழிற்துறை மற்றும் பிற தேவைகளுக்காக, வடமாகாணத்திலும் நாடு முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. தண்ணீருக்கான ஒரு தயாரான மூலத்தை வழங்குவதற்கு மேலதிகமாக, இந்த ஆழமற்ற நீர்நிலைகள், வற்றாத நீரோட்டக் காலங்களில் ஆறுகள், குளங்கள் மற்றும் பிற நீர்நிலைகளுக்கு நீரை வெளியேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன; இது ஈரநிலங்கள் (*Wetlands*) மற்றும் இயற்கைத் தாவரங்களுக்கும் ஆதாரமாக அமைகின்றது.

மேற்பரப்பு நீர் வளங்களைப் போலவே, நிலத்தடி நீர் வளங்களின் பயன்பாட்டிற்கும் நுட்பமான மதிப்பீடு, இழுப்பு (*Abstraction*), பயன்பாட்டுக்கான கட்டுப்பாடுகள் என்பன தேவையாகின்றன. செறிவான நகர்ப்புற, தொழிற்துறை, சுற்றுலா மற்றும் பிற வளர்ச்சி நடவடிக்கைகள், இந்த வளத்தின் அதிகப்படியான இழுப்பு மற்றும் பயன்பாட்டிற்கு வழிவகுத்துள்ளன.

தற்போது, குழாய்க் கிணறுகள் (*Tube Wells*) தோண்டுவதைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது அவற்றின் தாக்கம் மற்றும் நிலத்தடிநீரின் தரம் குறைதல் ஆகியவற்றைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கான தேவையான சுற்றுநிருபங்கள் இருந்தும் அதை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆழமற்ற 'விவசாயக் கிணறுகள்' (*Agrowells*) கட்டுப்பாடற்ற முறையில் தோண்டப்பட்டதால், சில பகுதிகளில் ஆழமற்ற நிலத்தடி நீரில் அதிகப்படியான இழுப்பும் மிகுதியான பயன்பாடும் ஏற்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் இது நேரடியாக, பரவலான பகுதிகளில் நிலத்தடிநீரின் உப்புத்தன்மை (*Salinity*) அதிகரிக்கக் காரணமாகியுள்ளது. குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலைத்தன்மையான அளவு நீரை மட்டுமே இழுக்க (*Abstract*) அனுமதி வழங்குவதற்கும், பிராந்திய நீர்வள சபை (*Water Resources Board*) உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என்பது தெளிவாகிறது. இதற்குரிய சுற்றுநிருபம் கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

#### 4.1.1 நிலத்தடி நீரின் நிலையான முகாமைத்துவம்

நிலத்தடி நீரைப் பாதுகாப்பான அளவில் இழுத்தெடுத்தல் (*Abstraction*), நிலையான முறையில் முகாமை செய்தல் ஆகிய கோட்பாடுகள் கடந்த எழுபது ஆண்டுகளாக நன்கு நிலைபெற்றுள்ளன. பிராந்திய நீர்வளச் சபை (*Water Resources Board*) நிலத்தடி நீர் வளங்களின் நிலையான முகாமைக்கான ஒரு கட்டமைப்பை நிறுவி, மேலும் கடுமையான இணக்கத்தை நடைமுறைப்படுத்த மேலே குறிப்பிட்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது.

### 4.2 மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் முகாமைத்துவம், ஒருங்கிணைப்பு

மேற்பரப்பு நீர் மற்றும் ஆழமற்ற நிலத்தடி நீர் ஆகியவை நேரடியாக ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதால், இவை முழுமையாக ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிக்கப்படும். இதன் நோக்கம், இந்த வளங்களின் நிலையான முகாமைத்துவமேயாகும். மேற்பரப்பு நீரைப் போலவே, நிலத்தடி நீரை இழுத்தெடுப்பதற்கான (*Abstracting*) ஒவ்வொரு விண்ணப்பமும் அதன் சொந்தத் தகுதிகளின் அடிப்படையில், சமூகங்களின் முன்னுரிமைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மிக முக்கியமாக அந்த நிலத்தடி நீர்நிலை மற்றும் நீர்வளத்தின் நீண்டகால நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்பட வேண்டியது அவசியமானது.

மேலும் நீர்வள சபை, நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபை உள்ளடங்கலாக, நீர் வளங்கள் சம்பந்தமான ஒரு பிராந்திய நீர் வழங்கல் முகமை (*Regional Water Supply Agency - RWSA*) உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பிராந்திய நீர் வழங்கல் முகமை, நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்த் தரவுத்தளத்தை உருவாக்கிப் பராமரிக்க வேண்டும். இதற்கான தரவுகள் மாதாந்தம் திருத்தப்படல் வேண்டும். இந்தத் தரவுத்தளத்தில் அத்தகைய வளங்களின் அளவு மற்றும் தரம் குறித்த தகவல்கள் இருக்க வேண்டும். இது பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

#### 4.2.1 நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வளங்கள் குறித்த பொது விழிப்புணர்வு

பொதுமக்கள் மேற்பரப்பு மற்றும் ஆழமற்ற நிலத்தடி நீர் வளங்கள் குறித்து முழுமையான புரிதலைப் பெறுவதையும், அவற்றை நிலையான முறையில் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உறுதி செய்வதற்காக பிராந்திய நீர் வழங்கல் முகமை (*Regional Water Supply Agency - RWSA*) தீவிரமான பொது விழிப்புணர்வுப் பிரசாரங்களை நடத்த வேண்டும்.

### 4.3 மூலோபாய அணுகுமுறை

#### 4.3.1 யாழ்ப்பாணக் குடாநாடு

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் ஆழமற்ற நிலத்தடி நீரை நிரப்புவது (Recharge) முற்றிலும் சாத்தியமற்றது. ஏனெனில், முழுக் குடாநாடும் கரிமண் பாறை (Karstic) அமைப்பைக் கொண்டது. எந்தவொரு வகையிலும் இந்த ஆழமற்ற கரிமண் பாறை நீர்த்தேக்கங்களை நிரப்ப முயன்றாலும், ஈர்ப்பு விசையின் காரணமாக, அந்த நீர் அனைத்தும் சுற்றியுள்ள கடலுக்குள் கரைசல் கால்வாய்கள் (Solution Canals) மூலம் வடிகின்றது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு கீரிமலைக் கேணியாகும். அங்கு நிலத்தடிநீர் 'கேணி'க்குள் வெளியேற்றம் அடைந்து கடலுக்குச் செல்கிறது. கரையோரம் முழுவதும் இதுபோன்ற ஆயிரக்கணக்கான வெளியேற்றப் புள்ளிகள் உள்ளன. அவற்றில் சில வறள் நிலங்களில் தெரியக்கூடியன. பல கடலின் அடியில் வெளியேறுவதால் தெரிவதில்லை.

#### 4.3.2 வன்னிப் பெருநிலப்பரப்பு மற்றும் கிழக்குப் பிராந்தியம்

வன்னிப் பெருநிலப்பரப்பு மற்றும் கிழக்குப் பிராந்தியத்தில் ஆழமற்ற நிலத்தடி நீரை நிரப்புவது ஒரு சாத்தியமான வாய்ப்பாக இருக்கின்றது. ஏனெனில், அங்குள்ள புவியியல் மற்றும் புவித்தோற்ற அமைப்பு முற்றிலும் வேறுபட்டது; நிரப்பப்படும் நீரைச் சேமிப்பதற்கு ஏற்றதாக இருக்கின்றது.

### 4.4 நிலையான நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் வளங்களின் முகாமைத்துவத்திற்கான முன்மொழிவுகள்

1. சட்டத்திற்கிணங்க நடவடிக்கை: 1964 ஆம் ஆண்டின் நீர்வளக் குழுச் சட்டம் (எண். 29), பிரிவு 12 (1) இல் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் தொடர்பாக, பாசனம் மற்றும் நீர்வள மேலாண்மை அமைச்சரால், பிரிவு 16 (1) மற்றும் 16 (2) கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை, வர்த்தமானி அறிவிப்பு எண். 2010/23 - வியாழன், மார்ச் 16, 2017 மூலம் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் (இணைப்பு 1).

2. நிலத்தடி நீர்த்தேக்கத்தை நிரப்புதல்: நிலத்தடி நீர்த்தேக்கத்தை நிரப்புவதற்கு மேற்பரப்பு நீர்த்தேக்கம் தேவைப்படுகிறது. கால்நடை வளர்ப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட ஈர்ப்புப் பாசனம் என்பவற்றோடு, நிலத்தடி நீரை நிரப்புவதும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புராதன கிராமக் குளங்களை மீட்டெடுப்பதன் நோக்கமாக அமைகின்றது.

3. குழாய்க் கிணறுகள் மற்றும் முக்குளிப்புப் பம்புகளுக்கு பகுதியான தடை: குழாய்க் கிணறுகள் தோண்டுவதைக் கட்டுப்படுத்தவும், இருக்கும் குழாய்க் கிணறுகளில் முக்குளிப்புப் பம்புகளைப் (Submersible Pumps) பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தவும் வேண்டும். அதற்குப் பதிலாக, தரை மட்டத்தில் வைத்து ஓர் உறிஞ்சும் குழாய் மூலம் நீர் எடுக்கும் சிறிய பம்புகளை மட்டுமே அனுமதிக்கலாம். இவை தாமாகவே வரையறுக்கப்பட்ட திறன் கொண்டவை என்பதே இதற்குக் காரணம். இவற்றால் தரை மட்டத்திலிருந்து சுமார் 9.5 மீட்டர் (29 அடி) ஆழம் வரை மட்டுமே நீரை உறிஞ்ச முடியும். இதனால், உப்பு நீர் ஊடுருவலை குறைந்த அளவில் பேண முடியும்.

4. நிலத்தடி நீர் ஆய்வு: வன்னிப் பெருநிலப்பரப்பு மற்றும் கிழக்குப் பிராந்தியப் பகுதிகளில் ஒரு விரிவான நிலத்தடி நீர் மாதிரி ஆய்வை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீர் நிரப்புதலுக்கு உகந்த சிறுபாசனத் திட்டங்களை மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை அடையாளப்படுத்தி, மேற்பரப்பு நீரின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி, இவ்வாறு சேமிக்கப்படும் நீர் ஆழமற்ற நிலத்தடி நீரை நிரப்புவதற்கு வழி செய்யலாம்.

5. நீர்ப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல்: உள்நாட்டு மற்றும் தொழிற்துறை நீர்ப் பயன்பாட்டிற்கான நிலத்தடி நீர் இழுப்பைக் குறைக்க வேண்டும். இருக்கும் பாசனத் திட்டங்களின் உறுதியான நீர் தேக்கத்தில் குறைந்தபட்சம் 40% பங்கு தொழிற்துறை மற்றும் உள்நாட்டு நீர்ப் பயன்பாட்டிற்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். அதாவது எந்த ஒரு நீர்த்தேக்கத்தில் இருந்தும் விவசாயம் அல்லாத தேவைகளுக்கு 40% நீரை ஒதுக்கி வைத்தல் வேண்டும்.

6. பிராந்திய நீர் வழங்கல் முகமையின் கடுமையான நடவடிக்கை: அனைத்து வகையான குழாய்க் கிணறுகளிலும் மின்சாரம் அல்லது சுழல் இயக்க முக்குளிப்புப் பம்புகளின் பயன்பாட்டை பிராந்திய நீர் வழங்கல் முகமை கட்டுப்படுத்த வேண்டும். கைப்பம்புகள், வீட்டு உபயோகத்திற்கு அனுமதிக்கப்படும். ஏனெனில் அவை தாமாகவே பயன்பாட்டை வரையறுக்கும்.

7. நீர்ப் பயன்பாட்டுத் தோட்டங்கள் (Agroforest): மாகாணத்திலுள்ள ஒவ்வொரு குளங்களின் கீழ்ப்பகுதியிலும், பல்லாண்டுப் பயிர்களைக் (Perennial Crops) கொண்ட வேளாண் காடுகள் (Agroforest) மற்றும் தனியார் தோட்டங்கள் நிறுவப்பட வேண்டும். இவை, குளத்தின் கீழ்ப்பகுதியில் ஆழமற்ற நீர்நிலைக்குள் நுழையும் நீரைப் பயன்படுத்திக் கொள்ளும்.

8. கட்டுப்படுத்தப்பட்ட பாசனம்: வேளாண் கிணறுகளிலிருந்து (Agro wells) தூக்குப் பாசன வசதிகள் (Lift Irrigation) மிகவும் கவனத்துடன், திட்டமிடப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் நிலையான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதனால் நிலத்தடிநீர் வளங்கள் அதிகம் பயன்படுத்தப்படாமல் போகும். பயன்படுத்தப்படும் பம்புகளின் வகை மற்றும் திறன், இடம், நிலத்தின் நிலைமைகள், பயிர்முறை ஆகியவற்றுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். பொருளாதாரம், நீடித்துழைக்கும் தன்மை, நிலைத்தன்மை மற்றும் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றையும் போதுமான கவனிப்புக் கொடுத்துத் தேர்வு செய்ய வேண்டும்.

9. சிறு விவசாயிகளுக்கான அனுமதி: கைப்பம்புகள் (Hand Pumps), தரை மட்டத்தில் இயங்கும் சிறிய பெட்ரோல் அல்லது டீசல் பம்புகள், துலா (Well Sweeps) ஆகியவை மட்டுமே, ஒரு ஏக்கருக்கும் குறைந்த சிறு விவசாயிகள் மற்றும் தனிப்பட்ட வீடுகளால், ஆழமற்ற நிலத்தடி நீரை எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

10. மாற்று ஆற்றல் மூலங்கள்: முழு மாகாணத்திலும் உள்ள தேங்காய், முந்திரி மற்றும் சிறு தோட்டங்களுக்குத் தேவையான ஆழமற்ற நிலத்தடி நீரைப் பெற, மாற்று ஆற்றல் மூலங்களான சூரிய-காற்றுச் சக்திப் பம்புகளிற்கு (Solar and Wind Powered Pumps) பிராந்திய நீர் வழங்கல் முகமை மூலம் அனுமதி கிடைக்கப்பெற வேண்டும்.

### 4.5. யாழ்ப்பாணத்தின் நீர்த் தேவைகளை வட மாகாணத்தில் இருக்கும் நீர்வளங்கள் மூலம் பூர்த்தி செய்வதற்கான புதிய கோட்பாடுகள்/ கொள்கைகளின் அறிமுகம்

### 4.5.1. யாழ்ப்பாணக் குடாநாட்டின் அடிப்படை விவரங்கள் மற்றும் பாதுகாப்பான குடிநீர்த் திட்டங்கள்




யாழ்ப்பாணக் குடாநாட்டின் அடிப்படை விவரங்கள் மற்றும் பாதுகாப்பான குடிநீர் திட்டங்கள்

#### மக்கள் தொகை

தற்போதைய மக்கள் தொகை சுமார் 625,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சுமார் 86,000 குடும்பங்கள் விவசாயத் தொழிலிலும், 15,000 குடும்பங்கள் மீன்வளத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளன. சராசரி நில உடைமை அளவு அரை ஏக்கரில் இருந்து கால் ஏக்கர் வரை இருக்கும். மதிப்பீட்டின்படி, விவசாயத் தொழிலாளர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள், தாம் பணியாற்றும் நிலத்தின் உரிமையாளர்கள் அல்லர். கிராமப்புறங்களில் வேலையின்மை விகிதம் சுமார் 28% ஆகவும், நகர்ப்புறங்களில் சுமார் 26% ஆகவும் உள்ளது. யாழ்ப்பாண நகரம் மட்டுமே ஒரு பெரிய நகரமாக உள்ளது.

#### காலநிலை

இங்கு வெப்பமண்டலப் பருவமழைக் காலநிலை நிலவுகிறது. இப்பிரதேசத்தின் பகுதிகள் அரை வறண்டது முதல், முழு வறண்ட நிலை கொண்டவை. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் ஜனவரி வரையிலான வடகிழக்குப் பருவமழையே, சராசரியாக ஆண்டுக்கு 1280 மி.மீ என்று கணக்கிடப்படும் மழையின் 90 சதவீதத்தைப் பெறுகிறது. மீதமுள்ள மழை தென்மேற்குப் பருவமழையால் கிடைக்கிறது. நீர்ச் சமநிலைக் கணக்கீடுகள் மாறுபடுகின்றன. பொதுவாக, சுமார் 10 - 15% நீர் சுற்றியுள்ள கடல் மற்றும் சதுப்பு நிலங்களில் ஓடிக்கொண்டிருக்கும். 50% வரையான நீர் ஆவியாகி விடுகிறது. சுமார் 30% நீர் ஆழமற்ற நீர்நிலைகளில் (Shallow Aquifers) சேர்கிறது. திறந்த கிணறுகள் மூலம் இந்த நீரை எளிதாக அடைய முடியும். நிலத்தடி நீர் மட்டம் பொதுவாகத் தரை மட்டத்திலிருந்து சராசரியாக 2 - 6 மீட்டர் ஆழத்தில் காணப்படுகிறது.

#### நில அமைப்பும், நில வடிவங்களும்

யாழ்ப்பாணக் குடாநாடு மிகவும் சமதளமான, குறிப்பிடத்தக்க நில வடிவங்கள் இல்லாத பகுதியாகும். இதன் நடு மேற்குப் பகுதிகள் சற்று உயர்ந்துள்ளன. தெல்லிப்பழை அருகே உள்ள மிக உயர்ந்த இடம், கடல் மட்டத்திலிருந்து (MSL) சுமார் 10.5 மீட்டர் உயரத்தில் மட்டுமே உள்ளது. இப்பகுதி நன்கு வடிகால் வசதி கொண்ட மெல்லிய மண்ணின் (சுண்ணாம்பு கலந்த சிவப்பு லேட்டரைட் மண் - Calcic redlatosols) படையால் மூடப்பட்டிருக்கிறது. இந்த மண் காய்கறிச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. இது முக்கிய வருமான ஆதாரங்களில் ஒன்றாக மாறியுள்ளது; பல குடிமக்களின் வாழ்வாதாரத்தைத் தாங்குகிறது. இதன் மொத்த நிலப்பரப்பளவு 1,036 சதுரகிலோமீட்டர்கள் ஆகும்.

இந்த நிலப்பரப்பிற்குள் உள்ள நீர்நிலைகள் பெரும்பாலும் உவர்ப்பு (Brackish) முதல் உப்பு (Saline) நீரைக் கொண்டவை. இவற்றின் பரப்பளவு சுமார் 118 சதுரகிலோமீட்டர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### புவியியல் அமைப்பு

சில மீட்டர்கள் முதல் ஏழு அல்லது எட்டு மீட்டர்கள் வரை மாறுபட்ட ஆழங்களில் மண் அடுக்குகள் காணப்படுகின்றன. இந்த மண் அடுக்குகளுக்கு அடியில் சுண்ணாம்புக்கல் (Limestone) அமைப்புகள் உள்ளன. இவை பெரும்பாலும் புதை படிவங்களைக் கொண்டவை; மயோசின் (Miocene) காலத்தவை. இந்தச் சுண்ணாம்புக்கல் அமைப்புகள் முழுமையாக கரிமண் பாறைத் (Karstic) தன்மை கொண்டவை. இவற்றில் எண்ணற்ற கரைசல் கால்வாய்கள் (Solution Canals), வெடிப்புகள் மற்றும் பிளவுகள், நீர்க் கால்வாய்கள் (Conduits) ஊடுருவி உள்ளன. இவை பல இடங்களில் திறந்து, ஆழமற்ற நிலத்தடி நீரைச் சுற்றியுள்ள கடலில் கலக்கின்றன.

### பொருளாதாரத்தின் அடித்தளம்

பயிர்கள், மீன்வளம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை அடங்கிய விரிவான விவசாயத்துறை, வட மாகாணத்தின் மொத்த தேசிய உற்பத்தியில் (GDP) சுமார் 65% பங்களிக்கிறது. நெல் சாகுபடிக்கு ஏற்றதாக மதிப்பிடப்பட்ட மொத்தம் 12,000 ஹெக்டேர்களில், யாழ்ப்பாணத்தில் சுமார் 8,000 ஹெக்டேர்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 20,000 ஹெக்டேர்கள் உப்புத்தன்மை காரணமாக தரம் குறைந்த நிலங்களாக (Marginal) வகைப்படுத்தப்பட்டுள்ளன. 85% நெல் நிலங்கள் நெல் சாகுபடிக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய 15% நிலங்களில் காய்கறிகள் மற்றும் பிற வயல் பயிர்களும் வளர்க்கப்படுகின்றன. நெல் மகசூல் பெரும்பாலும் ஹெக்டேருக்கு சுமார் 1.5 டன்கள் என்ற குறைந்த அளவிலேயே உள்ளது. மூன்றில் ஒரு பங்கு விவசாயிகள் சிறந்த வகைகளையும், நடைமுறைகளையும் பயன்படுத்தி ஹெக்டேருக்கு சுமார் 2.5 டன் வரை பெறுகிறார்கள்.

முக்கிய வணிகப் பயிர்களான மிளகாய், வெங்காயம், புகையிலை (தற்போது இது தடை செய்யப்பட உள்ளது?), உருளைக்கிழங்கு மற்றும் வாழை போன்றவை பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை தீபகற்பத்தின் தேவைகளை மட்டுமல்லாது, தேசிய தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. முக்கிய பழவகைப் பயிர்களான மா, திராட்சை மற்றும் பலா ஆகியவை தீபகற்பத்தில் மட்டுமல்லாமல், நாடு முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன. பல்வேறு வகையான காய்கறிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நாடு முழுவதும் சந்தைப்படுத்தப்படுகின்றன.

### குடாநாட்டின் நீர்வளங்கள்

யாழ்ப்பாணக் குடா நாட்டின் நீர் வளங்களுக்கான ஒரே ஆதாரம் ஆழமற்ற நிலத்தடிநீர் ஆகும். இது வீடு, வணிக நிறுவனங்கள், பழங்களும் காய்கறிகளும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் உட்பட அனைத்தாலும் பயன்படுத்தப்படுகிறது. முழுக் குடாநாட்டிலும் ஆறுகள் போன்ற மேற்பரப்பு நீர்வளங்கள் எதுவும் இல்லை. மதிப்பீட்டின்படி, வடகிழக்குப் பருவமழையில் 10 முதல் 15 சதவீதம் நீர் நிலத்தடிக்குள் ஊடுருவுகிறது.

இந்த ஆழமற்ற நிலத்தடி நீர், நிலத்தடி நீர் மட்டத்தைத் தற்காலிகமாக உயர்த்துகிறது. இந்தப் பருவமழை முடிவடைவதும், நிலையான இழுப்பும் (Abstraction) நீர் மட்டத்தை அடுத்த பருவமழை வரை சில மீட்டர்கள் குறைக்கின்றன. நீரியல் - புவியியலாளர்கள் தனித்தனி ஆழமற்ற நீர்நிலைகளை (Shallow Groundwater Aquifers) அடையாளம் காண முயன்ற போதிலும், உண்மையில் நிலத்தடி நீர் முழுக் குடாநாட்டின் அடியிலும் உள்ள ஓர் ஒற்றை அமைப்பு (Single Body) ஆகும்.

### 4.5.2 மேற்பரப்பு நீர்நிலைகள் குறித்த சமீபத்திய வரலாற்றுப் பின்னணி

கடந்த அரை நூற்றாண்டு அல்லது அதற்கும் மேலாக, பல்வேறு நபர்கள் குடாநாட்டில் உள்ள சில மேற்பரப்பு நீர்நிலைகளை (கடல் நீர் ஏரிகளை) தொண்டமான் ஆறு, வழுக்கை ஆறு, உப்பாறு என்று அடையாளப்படுத்த முயற்சித்துள்ளனர். இந்த அனைத்துக் கடல்நீர் ஏரிகளும் உவர்நீர் (Brackish) அல்லது கடல் நீரை விட அதிக உப்புத்தன்மை கொண்ட நீரைக் கொண்டுள்ளன. பல நீர்நிலைகள் கடலுடன் இணைந்துள்ளன; கணிசமான அளவில் இறால் மற்றும் நண்டு வளர்ப்பு போன்ற நீர்வளத் தொழில்களின் தளங்களாகவும் செயற்படுகின்றன. மஞ்சள் கழனிகள் (Mangroves) போன்றே, இவை பல வகையான மீன் மற்றும் கடல் உயிரினங்களுக்கு இயற்கையான குஞ்சு பொரிக்கும் இடங்களாகவும் (Natural Nurseries) செயற்படுகின்றன. இந்த நடவடிக்கைகளிலிருந்து பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெறுகின்றன.

இந்த உவர்நீர் அல்லது உப்பு நீர்நிலைகளை நன்னீர் நிலைகளாக மாற்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் தோல்வியடைந்துள்ளன. இவற்றை நன்னீர் நிலைகளாக மாற்ற முடியாது. ஏனெனில், உப்பையும் உவர்ப்பையும் கடலுக்குள் வெளியேற்றுவதற்குப் போதுமான நன்னீர்

ஆதாரங்கள் மழையிலிருந்து கிடைக்கவில்லை. ஒரு சுவாரஸ்யமான, எதிர் - உள்ளுணர்வு (counterintuitive) உண்மை என்னவென்றால், இந்த 'ஆறு'களில் உள்ள நீர் பெரும்பாலும் கடல் நீரை விட அதிக உப்புத்தன்மை கொண்டதாக இருக்கும். இதற்கான காரணம், வறண்ட காலங்களில், இந்தச் சதுப்பு நிலங்களில் உள்ள உப்பு நீருக்கு மழை வடிதல் (Runoff) மூலம் நீர்த்தல் (Dilution) இடம்பெறுவதில்லை. ஆனால் ஆவியாதல் தொடர்கிறது. இது உவர்நீரின் செறிவை கடல் நீரின் அளவிற்கு அல்லது சில நேரங்களில் அதற்கும் மேலும் குவிக்கிறது. மழை வடிதல் நீரைச் சேகரித்து, கூட்டு மண் நிரப்பப்பட்ட (Compacted Earth Fill) கரைகள் கொண்ட செயற்கை நீர்த்தேக்கங்களில் சேமிக்க முடியும் என்றும் வேறொரு முன்மொழிவில் கூறப்பட்டது. இதுவும், சமீபகாலத்தில் முன்வைக்கப்பட்ட பிற முன்மொழிவுகளும் செயற்படுத்த முடியாதவை; யதார்த்தமற்றவை.

கடந்த ஆண்டுகளில், யாழ்ப்பாணம் தனது தூய்மையான, சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் திறனைப் பெறுவதற்கு பல்வேறு கருத்துகள் தீவிரமாக முன்மொழியப்பட்டு வந்துள்ளன. இவற்றில் அடங்குவன:

1. யாழ்ப்பாணத்திற்கான ஆறு (River for Jaffna)
2. மாற்றி அமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்திற்கான ஆறு (Modified River for Jaffna)
3. தொண்டைமான் நீர்த்தேக்கம் (களப்புத் திட்டம் - Kalappu Project)
4. யாழ்ப்பாணக் கால்வாய் (ஆஸ்திரேலியப் பொறியாளர்களிடமிருந்து விவாத நிலைக்கு வந்த கருத்து)

இந்த முன்மொழிவுகள் எதுவும் கருத்தில் கொள்ளத்தக்க அடிப்படை (Merit) கொண்டவை அல்ல. இந்தக் கருத்துகளின் மிக 'அடிநிலை ஆய்வுகள்' (Surface - level Examination) கூட, உணர்வுபூர்வமான காரணங்களைத் தவிர, கருத்தில் கொள்ளவோ அல்லது பகுப்பாய்வு செய்யவோ தகுதியற்றவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

இத்தகைய முன்மொழிவுகள் பல காரணங்களால் நடைமுறைச் சாத்தியமற்றவை. அவற்றில் சில:

1. நீரின் ஆவியாதல் விகிதம் ஆண்டுக்கு 1.3 - 1.8 மீட்டர் வரை உள்ளது.
2. மழைநீரைச் சேகரிக்க மற்றும் வடிநீரைக் (Runoff) கால்வாய்கள் மூலம் கடத்துவதற்கு போதுமான சரிவுகள் (Gradients) தேவை. இது தீபகற்பத்தின் இட அமைப்பில் (Topography) இல்லை.
3. இந்த 'நன்னீர்' நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதி, மண்ணுக்குள்ளும் அடியிலும் ஏகமாக வியாபித்துள்ள சுண்ணாம்புக் கல்லுக்குள் கசிவைத் தடுக்க, முழுமையாக அடைக்கப்பட வேண்டும்.

### 4.5.3 யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்பரப்பு நீர்நிலைகள்

*யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலத்தடி நீரின் தரம்*

மக்கள் தொகை அதிகரிப்பாலும், தொழில்நுட்பம், கட்டட அமைப்புகளின் அதிகரிப்பாலும், கிணற்றில் வாளிகளால் நீர் அள்ளிப் பாவித்தது போய் அதிகூடிய வலுவான மோட்டர்களைப் பாவித்து நிலத்தடி நீரைப் பாவிப்பதாலும், கடல்நீர்த் தடுப்பு முறைகள் ஒழுங்காகப் பராமரிக்கப்படாமையாலும், பாதுகாப்பற்ற மலசலகூட முறைகளால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேருவதாலும், தோட்டங்கள் செய்யப் பயன்படுத்தும் செயற்கை உரங்களாலும், எமது நிலத்தடி நீர் பல அமுக்கங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது.

நிலத்தடி நீரில் நைதரசனின் அளவும் கூடிக்கொண்டு வருவதாக நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். முன்பு போல அல்லாமல், நாம் நிலத்தடி நீரை அதிகப்படியான அளவிலும், வேகத்திலும் உறிஞ்சி எடுப்பதால், அதன் இழுப்புத்தரம் ஊறும் வேகத்தைவிட அதிகரித்துள்ளது. இதனால், நிலத்துக்கு மிகச் சமீபமாக இருக்கும் கடல்நீர் எமது நிலத்தடி நீருடன் கலக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலத்தடி நீர் இருப்புச் சம்பந்தமான படம் கீழே தரப்பட்டுள்ளது.




யாழ்ப்பாணக்குடா நாட்டின் நிலத்தடி நீர் இருப்பு

யாழ்ப்பாண நிலத்தின் கீழ் கல்சியப் பாறைகளே அதிகம் காணப்படுகின்றன. இந்தப் பாறைகளின் மேலேயே பல ஆண்டு காலமாகச் சேமிக்கப்பட்ட மழைநீர் தேங்கி நிற்கிறது. மழை பெய்யும்போது வளியில் உள்ள காபனீர் ஒட்சிசனுடன் சேர்ந்து மழைநீர் காபோனக்கமிலமாக மாறுகிறது. இந்தக் காபோனிக்கமிலம் நிலத்தடியில்

காணப்படும் கல்சியப் பாறைகளைக் கரைத்து விடுவதாலேயே எமது நீர் கல்சியமுடைய வன்நீராக இருக்கின்றது. இந்தக் காபோனிக்கமிலம் கல்சியப் பாறைகளை வலுவற்றதாக்குகின்றது; வெடிப்புகளையும், பள்ளங்களையும் கடலுடன் இணைப்பதற்குச் சில குழாய்கள் போன்ற அமைப்பை ஏற்படுத்தி விடுகிறது. இது சம்பந்தமான விவரங்களைக் கீழே உள்ள படம் விவரிக்கின்றது.




Geology and condition of ground water in the Jaffna peninsula

Image Source - Sirimanne 1952

யாழ்ப்பாண நிலத்தின் 'போரோசிட்டி' (Porosity) 4.5% முதல் 27% வரை மாறுபடுகிறது; சராசரி 15% ஆக இருக்கின்றது. இதனால் நிலத்தடி நீருக்கும், கடலுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. கடல்நீர் அடர்த்தி அதிகமாக இருப்பதால் மேற்பரப்பில் இருந்து உள்ளே செல்லும் மழைநீர் கடல்நீர் மேல் வில்லை போன்று தேங்கி நிற்கிறது. இச்செயற்பாட்டை கீழே உள்ள படம் விவரிக்கின்றது.




Image Source - Y.D.Joshuva

நாம் மோட்டர்களால் நீரை அதிவேகமாக உறிஞ்சி எடுக்கும் போது கடல் நீர் உள்ளே வந்து நிலத்தடி நீரை உப்பாக்குகிறது. பழைய காலங்களில் நாம் உறிஞ்சி எடுக்கும் நீரின் வேகம் குறைவாகவும், எடுக்கப்படும் நீரின் அளவு, இப்போதுள்ளதுடன் ஒப்பிடுகையில் குறைவாகவும் இருந்தது. உறிஞ்சி வெளியே எடுக்கப்படும் நீருக்குச் சமனான கடல்நீர் நிலத்தடி நீருக்குள் உட்புகுந்து நன்னீருடன் கலப்பதால் உப்புத்தன்மை அதிகரிக்கிறது. இச்செயற்பாட்டையும் மேலே உள்ள படம் விவரிக்கின்றது. வருடக் கடைசியில் பெறும் மழைநீரை நாம் நீண்டகாலம் சேமித்து வைத்திருக்க முடியாமலும் போகின்றது. வருடத்திற்கு 1200 - 1300 மி.மீ என்ற மழை வீழ்ச்சியை நாம் பெற்றாலும், எங்களால் மழைநீரை நிலத்தின் கீழ் சேமித்து வைக்க முடியதவாறு, எமது நில அமைப்பு அமைந்து இருப்பது எமது துர்ப்பாக்கியமே.

மழைக்காலங்களில் தேவைக்கதிகமான நீரை நாம் பெற்றுக்கொண்டாலும், சேமித்து வைக்கமுடியாத நில அமைப்பின் காரணமாக அதனை எம்மால் சேமிக்க முடியாமல் உள்ளது. நாம் வைத்திருப்பது 'ஓட்டைப்பானை' போன்ற நில அமைப்பு. எம் முன்னோர்கள் சேமித்த நீரிலும் பார்க்க, அவர்கள் பாவித்த நீரின் அளவு குறைவாக இருந்தது. நாம் இப்போது பாவித்துக் கொண்டிருப்பது அவர்கள் எமக்காக நிலத்தடியில் சேமித்து வைத்திருந்த நீரே ஆகும். எமது நிலத்தின் அமைப்பு அப்படிப்பட்டதாக இருப்பது எமது துரதிர்ஷ்டம். பெருநிலப்பரப்பில் இருக்கும் வன்னிப் பிரதேசங்கள் அப்படியானதல்ல.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், தனிப்பட்ட வீடுகள், பண்ணைகள் மற்றும் தொழிற்துறை நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டளவில் 28,000க்கும் மேற்பட்ட மேற்பரப்புக் கிணறுகள் மற்றும் அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான குழாய்க் கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் எடுக்கப்படுகிறது. எல்லாக் காலத்திலும், அனைத்து நோக்கங்களுக்குமான நீர் விநியோகத்தின் ஒரே ஆதாரம் இந்த மேல்நிலை நீர்நிலைகளே ஆகும்.

இந்தக் குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு நகர அல்லது கிராம நீர் விநியோகத் திட்டமும் இந்த மேல்நிலை நீரிலிருந்தே நீர் எடுத்து, பொதுநீர்ப் பங்கீட்டுக் குழாய்கள் (Standpipes) மூலம் அதனை விநியோகிக்கின்றது; தனி வீட்டு இணைப்புகளால் அல்ல. யாழ்ப்பாண நகரத்தின் நீர் விநியோகமும் இதே அடிப்படையிலேயே செயற்படுகின்றது. நாளில் இரண்டு முறை இந்தக் குழாய் முறைக்கு நீர் வழங்கப்படுகிறது. மக்கள் தங்கள் பங்கை வாளிகள் அல்லது பிற பாத்திரங்களில் எடுத்துச் சென்று வீட்டினுள் சேமிக்கின்றனர்.

குடாநாட்டின் இந்த மேல்நிலை நீர் மனித நுகர்வுக்கு ஏற்றதாக இல்லை. இந்தக் குழாய்களில் வரும் நீர் எந்தவொரு சுத்திகரிப்பும் இல்லாமல் அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது. இந்த நீர் வழங்கப்படுவதற்கு முன் சுத்திகரிப்பு நடைபெறுகிறதா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

அக்டோபர் 2002 இல் ஜெர்மன் அரசின் உதவி நிறுவனமான ஜி.டி.இசட் (GTZ) வெளியிட்ட ‘யாழ்ப்பாண மறுகட்டமைப்புத் திட்டம்’ (Jaffna Rehabilitation Project) என்ற தொழில்நுட்ப ஆய்வறிக்கை, இந்த மேல்நிலை நீர் மனித நுகர்வுக்கு ஏற்றதல்ல என வகைப்படுத்துவதற்கான முக்கிய காரணங்களைப் பின்வருமாறு விவரிக்கிறது:

1. நூறு சதவீதம் உயிருடன் காணப்படும் ஈ.கோலி (E. Coli) பக்டீரியா மற்றும் ஏற்க முடியாத அளவு நைட்ரைட்டுகள் (Nitrites).
2. மிகவும் ஏற்க முடியாத அளவு வேளாண் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் (Pesticides).
3. அதிக அளவு உப்புத்தன்மை (Salinity).

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலத்தடி நீரின் நிலை குறித்து ஜி.டி.இசட் அறிக்கை பின்வரும் வருத்தமூட்டும் குறிப்பைத் தருகிறது.

### ஈ.கோலி மற்றும் நைட்ரைட்டுகள்

எந்த நீரிலும் நைட்ரைட்டுகள் இருப்பது, கழிவுநீர் மூலம் மாசுபடுவதற்கான தெளிவான அறிகுறியாகும். உயிருடன் காணப்படும் ஈ.கோலி பக்டீரியா இருப்பது, நிலத்தடி நீர் நேரடியாகக் கழிவுநீரால் மாசுபடுகிறது என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது. இந்தக் குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு ‘செப்டிக் டேங்’ (Septic Tank) உடைய கழிப்பறை உள்ளது. இவை செப்டிக் டேங்குகள் என்று அழைக்கப்பட்டாலும், இவை வெறும் குழிக் கழிப்பறைகள்தான் (Pit Latrines). இவை பொதுவாக 1.5 முதல் 2 மீட்டர் சதுரப் பரப்பளவில், தரை மட்டத்திலிருந்து சுமார் 3 மீட்டர் ஆழம் வரை ஒரு குழியைத் தோண்டியே உருவாக்கப்படுகின்றன.

குழியின் பக்கச் சுவர்கள் இடிந்து விழாமல் இருக்க சிமெண்ட் - மணல் தொகுதிகளால் (Blocks) சுவர்களைக் கட்டி, சாந்து போட்டு ஒட்டுவது போன்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனால் இந்தக் குழிகளின் அடிப்பகுதி பொதுவாக அடைக்கப்படுவதில்லை (Sealed). பின்னர், யாராவது அல்லது ஏதாவது குழியில் விழாமல் இருக்க, ஒரு மெல்லிய இரும்புக் கம்பி வலுவூட்டப்பட்ட சிமெண்ட் தகடு (Slab) குழியின் மேல் வைக்கப்படுகிறது. இந்தக் குழிகள் பொதுவாகக் கழிப்பறைக்குப் பின்னால் அமைக்கப்பட்டு, கழிப்பறையின் கழிவுக்குழாய் இந்தக் குழியுடன் இணைக்கப்படுகிறது. கழிப்பறை கழுவப்படும் போது, மலக்கழிவுகள் இந்தக் குழியில் சென்று சேர்கின்றன. இந்தக் கழிப்பறைகளின் உண்மையான ஆபத்து என்னவென்றால், சரியாக நிறுவப்பட்ட செப்டிக் டேங்குகளைப் போல இவை பாதுகாப்பான முறையில் அடைக்கப்படவில்லை என்பதே. மலக்கழிவுகள் மற்றும் கசிவு நீர் (Effluent) ஆகியவை குழியின் அடி அல்லது பக்கங்கள் வழியாக மேல்நிலை நீரோட்டத்தில் கலந்துவிடுகின்றன. மேல்நிலை நீரின் மட்டம் தரை மட்டத்திலிருந்து இரண்டு முதல் நான்கு மீட்டர் ஆழத்தில் மட்டுமே இருப்பதால், குழியிலுள்ள பொருட்களுக்கும் சுற்றியுள்ள நிலத்தடி நீருக்கும் இடையே நேரடியான தொடர்பு ஏற்படுகிறது.

அதிகபட்சம் 3 மீட்டர் தடிமன் கொண்ட மண்ணின் மெல்லிய அடுக்குகள், பொதுவாக நுண்துளை ஊடுருவும் திறன் (Infiltration Capacity) அதிகமுள்ள மணல் மண்ணால் ஆனவை. இதன் பொருள், மண்ணின் மேற்பரப்பில் ஏற்படும் எந்தவொரு மாசுபாடும் நேரடியாகவும் உடனடியாகவும் நிலத்தடி நீரை அடைகிறது. இந்த மெல்லிய மண் அடுக்குகளுக்கு அடியில் உள்ள சுண்ணாம்புக் கல் (Karstic Limestone) பாறைகளில் ஊடுருவும் திறன் (Permeability) மிக அதிகமாக இருப்பது இந்த நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

இந்த உண்மைதான் இங்கு மிகவும் கவலைக்கிடமான விஷயத்தை உருவாக்குகிறது. நிலத்தடி நீர், அதன் மாசுபடுத்தும் சுமையை (Pollutant Loads) தொலைதூரத்திற்கும், பரவலாகவும் எடுத்துச் செல்கிறது. இதனால்தான் ஒவ்வொரு கழிப்பறைக் குழியிலிருந்தும் ஈ.கோலி பக்டீரியாவுடன் மற்ற அனைத்து மாசுபாடுகளும் பரவுகின்றன.

இவ்வாறுதான் நைட்ரைட்டுகளும் ஈ.கோலியும் நிலத்தடி நீரில் கலக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மேல்நிலைக் கிணறுகள் இந்த மாசுபட்ட நீரைத்தான் எடுக்கின்றன என்பது ஒரு வருத்தமான உண்மை. அவர்கள் எடுக்கும் நீர் ஏற்கனவே மலக்கழிவுகள் மற்றும் கழிவுப் பொருட்களால் மாசுபட்டுள்ளது.

இது ஒவ்வொரு வீட்டிலும் நடக்கிறது. குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனும் இதை அறியாமலேயே இந்த மாசுபாட்டிற்குப் பங்களிக்கின்றனர். கிணற்று நீரைக் குடிப்பவர்கள், நேரடியான அர்த்தத்தில், தங்கள் சொந்த மற்றும் அண்டை வீட்டாரின் கழிப்பறைக் கழிவுகளைத்தான் குடிக்கிறார்கள் என்று சொல்வது மிகையல்ல. 2001 ஆம் ஆண்டுக் காலத்திலேயே, ‘ஃப்ரீ அமோனியா’ (Free Ammonia) 0.34 mg/l வரையும் நைட்ரைட்டுகள் 0.263 mg/l வரையும் இருந்தன. இவை அனைத்துக் குழிக்கழிப்பறைகள் மற்றும் அமைக்கப்படும் செப்டிக் டேங்குகளில் இருந்து நேரடியாகக் கழிவுநீர் மூலம் நிலத்தடி நீர் அதிக அளவில் மாசுபடுவதற்கான தெளிவான அறிகுறிகளாகும்.

### பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களின் கட்டுப்பாடற்ற பயன்பாடு

பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களின் கட்டுப்பாடற்ற பயன்பாடு, நிலத்தடி நீரில் நைட்ரேட்டுகள் (Nitrates), பாஸ்பேட்டுகள் (Phosphates) மற்றும் சல்பேட்டுகள் (Sulphates) ஆகியவற்றின் அளவை அதிகரித்துள்ளது. குருநகரில், குழாய் நீரில் நைட்ரேட்டுகளின் செறிவு 76 mg/l முதல் 149 mg/l வரை காணப்பட்டது. இது அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவைவிட மூன்று மடங்கு அதிகமானது.

சல்பேட்டுகள் மற்றும் பாஸ்பேட்டுகளும் மிக அதிகமாக, ஏற்க முடியாத அளவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1976 ஆம் ஆண்டின் முந்தைய ஆய்வுகூட, கோண்டவில் மற்றும் திருநெல்வேலியில் நிலத்தடி நீரைப் பகுப்பாய்வு செய்து, முறையே 66.4 mg/l மற்றும் 106.3 mg/l NO3 (நைட்ரேட் சமான) அளவுகளைக் காட்டியது. இவை இரண்டும் 50 mg/l NO3 என்ற அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறியவை.

1980 ஆம் ஆண்டில், நீர்வளச் சபையானது (Water Resources Board) சோதனை செய்த வேளாண் நிலங்களில் உள்ள 50% கிணறுகளில் நைட்ரேட்டு அளவு 50 mg/l இற்கு மேல் இருப்பதைக் கண்டறிந்தது. அதே நேரத்தில் யாழ்ப்பாண மாநகராட்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட கிணறுகளின் நீரும் சோதிக்கப்பட்டன. கோண்டவில் கிணற்றில் 149 mg/l NO3 செறிவும், திருநெல்வேலிக் கிணற்றில் 141 mg/l NO3 செறிவும் காணப்பட்டன. இவை 50 mg/l என்ற அனுமதிக்கப்பட்ட வரம்பை வெகுவாக மீறியவை.

இக்குடாநாட்டின் ஒவ்வொரு வேளாண் பணியிலும் பூச்சிக்கொல்லிகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேல்நிலை நீர் மட்டம் தரை மட்டத்திலிருந்து சுமார் 1 முதல் 3 மீட்டர் ஆழத்தில் மட்டுமே இருப்பதால், பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகளில் பெரும்பகுதி மண்ணின் மெல்லிய அடுக்கு வழியாகச் சுண்ணாம்புக்கல் நீர்நிலைக்குள் (Aquifer) சென்று மற்றொரு கடுமையான மாசுபாட்டை ஏற்படுத்துகின்றது என்பது தெளிவாகிறது.

மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிக்கொல்லிகளின் செறிவு பொதுவாக பில்லியனுக்கு சில பகுதிகள் (Parts Per Billion) என அளவிடப்படுகிறது. இந்தச் செறிவு, சல்பேட்டுகள் அல்லது நைட்ரேட்டுகளின் தீங்கு விளைவிக்கும் செறிவை விட ஆயிரம் மடங்கு குறைவான அளவாகும்.

### உப்புத்தன்மையின் அளவுகள்

1968 முதல் நடாத்தப்பட்ட பல ஆய்வுகளில் நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குளோரைடு (Chloride) செறிவு 50 ppm (மில்லியனுக்குப் பகுதிகள்) முதல் 4,000 ppm வரை மாறுபடுகிறது. குளோரைட்டின் அனுமதிக்கப்பட்ட அளவு 250 mg/l ஆகும்; இது 250 ppm இற்குச் சமமானது. ஒப்பீட்டிற்கு, கடல் நீர் பொதுவாக சுமார் 30,000 ppm ஆகும். 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர், மின் கடத்துத்திறன் (Electrical Conductivity) (Siemens/cm) என வெளிப்படுத்தப்படும் உப்புத்தன்மை 0.6 முதல் 1.3 S/cm வரை காணப்பட்டது. இவை மிக அதிகமான மதிப்புகளாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நைட்ரேட் மாசு மற்றும் மின் கடத்துத்திறன் (Electrical Conductivity) சம்மந்தமான பரம்பல் கீழே உள்ள இரு படங்களிலும் தரப்பட்டுள்ளன.

### பொதுச் சுகாதாரம் குறித்து கவலைக்கிடமான நிலைமைகள்

இந்த மாசுபாடுகளை ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுகளுக்குக் கீழே கட்டுப்படுத்துவது அல்லது குறைப்பது என்பது கிட்டத்தட்ட சாத்தியமற்ற ஒரு பணி என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். 2002 ஆம் ஆண்டிலேயே, ஜி.டி.இசட் (GTZ) அறிக்கை (யாழ்ப்பாண மறுகட்டமைப்புத் திட்டம் - பக். 13) கூறுகிறது: “உள்ளூர் நிலத்தடி நீரில் இருந்து வரும் குடிநீர், மனித நுகர்வுக்கு ஏற்றது எனக் கருதுவதற்கு முன்பு, அதிநவீன இரசாயனச் சுத்திகரிப்புச் செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.”

600 ppm இற்கும் அதிகமான குளோரைடு உள்ள நிலத்தடி நீரை நுகர்வது, உணவுக்குழல் புற்றுநோயை (Esophageal Cancer) அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அதிக அளவு நைட்ரேட் (NO3) இருப்பதும் உணவுக்குழல் புற்றுநோயை அதிகரிக்கும் என்று அறியப்படுகிறது. உப்புத்தன்மையை விட நைட்ரேட் உள்ளடக்கமே இதற்கு அதிகம் பொறுப்பாகும் என்றும் அறிக்கை குறிப்பிடுகிறது.

அனைத்து மூலங்களிலிருந்தும் ஏற்படும் மாசுபாட்டின் அளவுகள் தற்போது வரை கணிசமாக அதிகரித்து வருகின்றன. இது யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரின் நிலைமையை மிகவும் கடுமையானதாக மாற்றியுள்ளது. எனவே, பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான மாற்றுத் தீர்வுகள் மேலும் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

(தொடரும்)

# உத்தியாக்கள்: சில நினைவலைகள்

**கருத்துரை:
சின்னையா மௌனகுரு**




உத்தி என்றால் கன்னட மொழியிலேயே 'மேலே' என்று அர்த்தம் என பேராசிரியர் ரகுபதி என்னிடம் ஒரு முறை கூறினார். 1980களில் இது நடந்தது. இன்றைக்கு 45 வருடங்களுக்கு முன்னர் என் ஆய்வைப் படித்தபின் அவர் இப்படிக் கூறியமை நினைவுக்கு வருகிறது. எனது கலாநிதிப்பட்ட ஆய்வில் இந்த உத்தியாக்களைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். மட்டக்களப்பின் கடற்கரையோரம் வாழ்கின்ற வேடர் சமூகம், இறந்தபின் உயிரோடு மேலே வாழ்வதாக எண்ணிக்கொண்டிருக்கும் தம் முன்னோர்களுக்குச் செய்யும் வழிபாடு தான் உத்தியாக்கள் வழிபாடு.

கள ஆய்விலே நான் கண்டுகொண்டது இதுதான்.

கிழக்கு இலங்கையிலே உள்ள கடற்கரையோரம் வாழ்கின்ற வேடர் மத்தியிலே நடைபெறுகின்ற சடங்கை நான் முதன்முதலில் அறிமுகம் செய்தேன் என்று நினைக்கிறேன். அவர்கள் அந்த வழிபாட்டுக்கு மட்டக்களப்பு மந்திரம் அல்லாத வேறு சில உச்சரிப்புகளைக் கூறினார்கள். அதனையும் நான் என் நூலில் பதிந்திருக்கிறேன். அந்த நூலின் பெயர் 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்'. நூலகம் இணையத்தில் அதனைப் பெறலாம். மட்டக்களப்பின் கரையோரம் வாழ் வேடர் குல மக்களின் குமாரத்தன் சடங்கையும், சடங்குச் செயற்பாட்டு முறைகளையும் அறிமுகம் செய்து, அவர்களின் வழிபாட்டையும் அதில் விளக்கியிருந்தேன்.

அண்மையில் அத்தகைய ஒரு வழிபாட்டைக் காண பத்திநாதன் என்னை அழைத்திருந்தார். களுவன் கேணியில் அது நடைபெற்றது. அதை அவதானித்த நான் அது பற்றி ஒரு கட்டுரையையும் எழுதி இருந்தேன். அது சிறிய நூல் வடிவிலும் வெளிவந்துள்ளது. 1980களில் போடப்பட்ட அச்சிறு புள்ளி பின்னர் மெல்ல வளர்க்கப்பட்டது என நினைக்கிறேன். 2000 ஆம் ஆண்டுகளில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் இறுதி வருட ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்த இன்றைய நாடக விரிவுரையாளர் ரவிச்சந்திரன் அவர்கள் முருத்தானை வேடர்கள் பற்றி ஆராய்ந்த போது இந்த உத்தியாக்கள் பற்றிக் கூறியிருந்தார். அன்று மாணவராக இருந்து பின்னால் பேராசிரியரான இன்பமோகன் அவர்களும் இதைப் பற்றி ஆராய்ந்துள்ளார்.

அந்தச் சமூகத்தில் இருந்து வந்த ஒருவர் இந்த வணக்க முறை பற்றி ஒரு நூலும் எழுதியுள்ளார். அருமையான நூல் அது. அவரே அங்கு சில இடங்களில் கப்புகனாராகச் செயற்படுகிறார். அவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் எம்.ஏ பயின்றவர். சித்திரலேகாவின் கீழ் தனது ஆய்வைச் செய்தார் என்பது நினைவில் உள்ளது. அது நூலாகவும் வெளிவந்துள்ளது. பின்னர் இது பற்றி ஆராய்ந்த விஜயரத்தினமும் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதுவும் நூலாக வெளிவந்துள்ளது. 2000 ஆம் ஆண்டுகளில் விளிம்புநிலை மக்கள் ஆய்வுகள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மையம் கொண்டது. அதன் விளைவுகள் இவை என நான் நினைக்கிறேன்.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே இப்போது (2020களில்) இளம் ஆய்வாளர் பத்திநாதன் வருகின்றார். பத்திநாதனின் துறை நாடகமும் அரங்கியலும். நாடகம் ஒரு வகையில் ஒரு நோய் தீர்க்கும் மருந்தாகும்; சடங்குகளுக்கும் இந்தப் பண்பு உண்டு. நாடகத்தின் மூலமாக நோயைத் தீர்க்கும் சடங்குகளை, அதன் தன்மைகளைக் கண்டறியப் புறப்பட்ட பத்திநாதன், தன் பிறந்து வளர்ந்த சமூகத்தில் நடந்த உத்தியாக்கள் சடங்கை நோய் தீர்க்கும் சடங்காகக் கண்டறிந்து, அதனையே தனது பட்டதாரிப் படிப்பின் ஆய்வுப் பொருள் ஆக்கினார். அவர் அந்தச் சமூகத்தில் இருந்து வந்தவர். அதனால் அந்தச் சடங்கு முறைகள் அவரது இரத்தத்திலேயே ஊறிக் கிடந்தன. அதனால் அவர் கூறுவதில் உண்மைத் தன்மை அதிகமாக வெளிப்படுகிறது. இதனால் உத்தியாக்கள் சடங்கும், அவர்கள் பற்றிய தகவல்களும் இன்னும் பிரகாசமாக வெளிப்படுகின்றன. ஓர் அர்ப்பணிப்புள்ள நாடகக்காரன் சிறந்த சமூகவியலாளனாக மாறுவான் என்பது அறிஞர் கருத்து. இங்கே ஒரு நாடகக்காரனான பத்திநாதன் ஒரு சமூகவியலாளனாகவும், மானிடவியலாளனாகவும் முகிழ்வதைக் காணலாம்.

அவரது இந்த நூலான உத்தியாக்கள், கிழக்கு மாகாணக் கரையோர வேடர் சடங்குகளையும், அவர்கள் வாழ்க்கை முறைகளையும் கூறும் நூலாகும். அதற்கு முன்னுரை எழுதும்படி அவர் என்னைக் கேட்டிருந்தார். அம்முன்னுரை உங்களுக்குப் பல தகவல்களைக் கூறும்.

பத்திநாதன் எழுத்தாளராக மட்டுமின்றி, செயல்வாதியாகவும் திகழ்கிறார். கிழக்கு மாகாண வேடர் வாழ் கிராமங்கள் தோறும் அலைந்து அலைந்து தகவல்களைத் தேடியதுடன், அவர் அவர்களை ஒன்றிணைக்கிறார்; ஒரு சமூகமாக மாற்றுகிறார்; அதன் அடையாளங்களை வெளிக் கொணர்கிறார். இவ்வகையில் ஆய்வாளர்களுக்கு முன்னுதாரணமாகவும் இருக்கிறார். இப்படி இன்னும் சிலரையும் நான் அவதானிக்கிறேன்.

அவர் மாணவராக இருந்த போது அவரது செயற்பாடுகளை நான் அவதானித்திருக்கிறேன். நல்ல நாடகங்கள் சிலவற்றை மேடையில் ஏற்றி இருக்கிறார். அவர் பரீட்சைக்காகத் தயாரித்த 'கண்ணுக்குப் புலனாகாத அரங்கு' ஒன்றுக்குப் பரீட்சகராகச் சென்று சுவையான அனுபவங்களையும் பெற்றிருக்கிறேன். பத்திநாதனுக்கு இந்தியப் புலமைப் பரிசில் கிடைத்திருக்கிறது. பஞ்சாபில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் அவர் உயர்கல்வி பெறச் செல்லுகின்றார் என அறிகிறேன். இதுபற்றி அவர் எனக்குக் கூறினார். அங்கே மானிடவியல் துறை உள்ளது; அங்கு கற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை கூறினேன்; மற்றவர்களும் கூறி இருப்பார்கள்.

பல்கலைக்கழகத்தில் பயின்ற, முக்கியமாக விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் பயின்ற திறமைமிக்க மாணவன் ஒருவன், நிரந்தர வேலை ஒன்று இல்லாத இடத்திலும், தன் ஆய்வைத் தளரவிடாது தொடர்ந்து செய்வது மிகப்பெரிய சாதனை. இவனைப் போன்ற இளம் தலைமுறை தான் நமது நம்பிக்கை. பத்திநாதனுக்கு என் வாழ்த்துகள். மேலும், மேலும் நீங்கள் வானத்தில் பறந்து செல்லுங்கள், புதிய திசைகளை நோக்கிப் பறவுங்கள்.

# கிழக்கிலங்கை வேடர்களின் பண்பாட்டு அசைவுகள் பற்றிய அகத்தார் ஆய்வு

**கருத்துரை:**
**துலாஞ்சனன் விவேகானந்தராஜா**

கடந்த 2025.07.20 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் எழுநாவால் பிரசுரிக்கப்பட்ட க. பத்திநாதனின் 'உத்தியாக்கள்: கிழக்கிலங்கை வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்' நூல் வெளியீடு இடம்பெற்றது.

இலங்கை வேடர் பற்றி எழுதிய செலிக்மன் தம்பதி, கணநாத் ஒபேயசேகர, ஈழத்துப் பூராடனார் முதலான புலமையாளர் வரிசையில் இணைந்து கொண்டிருக்கிறார் நூலாசிரியர் க. பத்திநாதன். இத்துறையில் வேறெந்த முன்னோடி போலவுமில்லாமல், 'அகத்தார்' தரப்பில் எழுந்த முதற்குரல் என்பது இந்நூலினதும் இந்நூலாசிரியரதும் சிறப்பு.

எளிமையாக நூலாசிரியரின் குடும்பத்தினர், அவருக்கு வழிகாட்டியாக இருந்த ஆசிரியர்கள், நண்பர்கள் கலந்துகொண்ட நெகிழ்வூட்டும் நிகழ்வாக நூல் வெளியீடு அமைந்திருந்தது. நூல் பற்றி உரையாற்ற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோது நான் தொட்டுச்சென்ற விடயங்கள் இவை:

1. தமிழ் பேசும் எல்லோருமே தம்மைத் தமிழராக அடையாளப்படுத்தாமல் இருக்க முடியும். இன்று பேசுமொழியிலும் பண்பாட்டிலும் தமிழரைப் போலவே முற்றாகத் தோற்றம் காட்டும் கரையோர வேடரை ஒரு சிங்களவரோ முஸ்லிமோ, ஏன் இன்னொரு தமிழரோ கூடத் தமிழராகவே கருதுவர். ஆனால் அவர்கள் அடியாழத்தில் தம்மைத் தனித் தேசியமாகக் கருதுகிறார்கள். தமிழ் பேசும் சக கிழக்கிலங்கைத் தமிழரை விட மகியங்கனை – தம்பானையில் சிங்களம் பேசும் உள்நாட்டு வேடரை, அவர்கள் தங்களுக்கு நெருங்கியவர்களாகக் கருதிக்கொள்கிறார்கள் என்பதும், தமிழரிடமிருந்து வேடர் சுவீகரித்துக்கொண்ட மாரி, காளி முதலிய தெய்வங்களை வேடர் இன்றும் 'தமிழ்க்கலை' என்றே வேறுபடுத்தி அழைப்பதும், இந்நூலை வாசிக்கும் ஒருவருக்குப் பிடிபடும்.

வேடரின் இந்த மனப்பாங்கைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவர், தமிழ் பேசும் இலங்கைச் சோனகர் தமிழராகத் தம்மை அடையாளப்படுத்தாமல் இருப்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

2. வேடர் வாழ்வியலிலும் வரலாற்றிலும் ஏராளமான இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டும். உதாரணமாக,

அ. தமிழக மானுடவியல் அறிஞர் பக்தவத்சலபாரதி அவர்கள் இந்நூலின் அணிந்துரையில் இலங்கை வேடருக்கும் எயினர், குறவர் முதலான சங்ககாலத் தமிழ்க் குடிகளுக்குமான உறவு மானுடவியல் ரீதியில் ஒப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்கின்றார். அதை நூலாசிரியர் எதிர்காலத்தில் செய்தாக வேண்டும்.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்வதென்றால், விந்தனைப் பகுதியிலிருந்த வேடப் பெண்கள் தங்கள் 'மாதமுறை' காலத்தில் மட்பாண்டங்களைத் தொடுவதில்லை என்பதை செலிக்மன் எழுதியுள்ளார். இது புறநானூற்றில் 'கலம் தொடா மகளிர்' எனப் பதிவாகியுள்ள ஒரு தொன்மையான மரபு.

ஆ. வேடரின் தெய்வங்கள் ஊருக்கு ஊர் மாறுபடுகின்றன. வேடர் தெய்வங்கள் தொகுதிகளாகவே வழிபடப்படுபவை. களுவன்கேணிச் சூழலில் 'குமார தெய்வம்' வழிபடப்படுவதையும், அவருக்குப் பல கலைகள் சொல்லப்படுவதையும் நூலாசிரியர் எழுதுகின்றார். வெருகல்லில் வணங்கப்படும் நீலியம்மன், மீன்நாச்சிமார் என்போர் பெண் தெய்வங்களின் தொகுதி. குஞ்சிமாப்பாவும் கப்பல் தெய்வமும் இத்தகைய தெய்வங்களே. ஒவ்வொரு இடத்திலும் பெரியசாமி என அந்தந்தத் தெய்வங்களையே சொல்கின்றனர். ஒரே கரையோர வேடர் சமூகத்தில் ஊருக்கு ஊர் 'பெரிய தெய்வத்தில்' வேறுபாடு ஏன் என்ற கேள்வி விரிவாக ஆராயப்பட வேண்டியது.

இ. சடங்கு மற்றும் தொன்மப் பாடல்களிலிருந்து வேடர் வரலாற்றை ஆவணப்படுத்த வேண்டும். குறிப்பாக நூலாசிரியர் கூறும் கதிர்காமம் ஊரேவ பகுதி கரையோர தமிழ் பேசும் வேடரின் மூலம் என்ற தொன்மம், களுவன்கேணியில் உள்ள 'யக்குரே' என்ற இடப்பெயர் என்பவற்றைச் சொல்லலாம். செலிக்மனின் குறிப்பில் பொலனறுவையில் இன்றும் உள்ள 'யக்குரே' வேடரின் முதன்மையான வதிவிடங்களில் ஒன்று. அதற்கும் களுவன்கேணி யக்குரேக்கும் உள்ள தொடர்பை விசாரிக்கலாம்.

3. ஓர் 'அகத்தார்' ஆய்வாக (உள்ளிருந்து ஆய்வு செய்யும் ஒருவர்), நூலாசிரியர் பத்திநாதனின் நூல் கிழக்கிலங்கை மானிடவியல் புலத்தில் தவிர்க்கவியலா இடம் பெற்றுக்கொள்கின்றது.

ஆனால் ஒடுக்கப்படும் சமூகத்தைச் சேர்ந்த ஓர் அகத்தார், தன் சமூகம் பற்றி ஆவணப்படுத்தும் போது, உள்ளக்கொதிப்பு ஏற்படுவது இயல்பு. அந்த ஆவேசத்தை அப்படியே வெளிவிடும் போது, புறத்தாரும் ஆய்வுலகும் அந்த அகத்தாரின் ஆய்வுப் பார்வை தொடர்பில் ஐயம் கொள்ளவேண்டி நேர்ந்துவிடும். இறுதியில் அந்த ஆய்வை பக்கச்சார்பானதாக முத்திரை குத்தவும் கூடும். ஒரு வாலிபராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் வளர்ந்துவரும் எழுத்தாளர் பத்திநாதன் இந்த இடத்தில் எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இதை ஓர் ஆய்வுலகச் சகபாடியாகவும் சகோதரனாகவும் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

4. நான் மேடையில் பேசாத விடயம் இது. இலங்கை வேடர் மீதான முதலாவது காலனித்துவப் போர் சோழரால் தொடக்கப்பட்டது என்ற கருத்தைக் கொண்டவர் நூலாசிரியர். அக்கருத்தில் நான் மாறுபட்டு அவருடன் தனிப்பட உரையாடியுமுள்ளேன்.

சோழர் இலங்கையில் வேடர் மீது நிகழ்த்தியிருக்கக்கூடியது இன்றைய கலைச்சொற்களின் அடிப்படையில் காலனியாக்கமல்ல; அது விளிம்புநிலையாக்கம் அல்லது தன்மயமாக்கம் என்பது என் தரப்பு (The impact of the historic Chola invasion on the Veddas was not lit eral colonization, it was a process of either marginalization or assimilation).

அதேவேளை, இன்று தமிழரும் முகம்கொடுக்கும் 'மேனிலையாக்கம்' அல்லது 'சங்கதமயமாக்கத்தால்' வேடரும் எண்ணிப் பார்க்கமுடியாதளவு பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதும் மறுக்கமுடியா உண்மை. மேலாதிக்கவாதிகளின் கருத்துகளைப் புறந்தள்ளி கரையோர வேடர் சமூகத்தில் ஒரு செயற்பாட்டாளராக பத்திநாதன் இவை பற்றித் தொடர்ந்தும் விழிப்பூட்ட வேண்டும். என் உரையை, நூல் பற்றி 'சத்திரசிகிச்சையாற்றி' மேற்கொள்ளப்பட்ட உரை என அங்கு கருத்துத் தெரிவித்திருந்தார்கள். உண்மையில் கிழக்கிலங்கையில், வளர்ந்துவரும் – நான் மதிக்கும் – என் தலைமுறையைச் சேர்ந்த – ஆய்வில் ஆர்வம் கொண்ட இளந்தலைமுறையினர் மிகச்சிலரே – பத்திநாதன் உட்பட (அந்த வகையறாவில் அடங்கும் இன்னுமிருவரும் அன்று நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்கள்: மொஹமட் சாக்கீர், நீலாவணை இந்திரா). அணிந்துரை எழுதிய துறைசார் அறிஞர்களான பக்தவத்சலபாரதி, சி. மௌனகுரு ஆகியோரும் எழுத்தாளர்கள் இத்ரீ ச் முதலியோரும் கூறியது போல, பத்திநாதனின் நூல், ஒரு முதல் முயற்சி, பாராட்டுக்குரிய ஒன்று என்பதைப் புரிந்துகொண்டு, அவரது அடுத்த நகர்வு எவ்வாறு இருக்கவேண்டும் என்ற அக்கறையிலேயே நான் உரையாற்றினேன். என் உரை விமர்சனமாகக் கருதப்பட்டுவிடலாம் என்பதை உணர்ந்து தான் எனக்கு மாற்றுக்கருத்துள்ள 'சோழக் காலனியாதிக்கம்' பற்றிக்கூட அதில் பேசவில்லை. என்னை மீறி என் உரை, விமர்சனம் போல் தென்பட்டிருந்தால் அதற்கு பத்திநாதனிடம் வருத்தங்களைத் தெரிவிக்கிறேன்.

கொவிட் – 19 பெருந்தொற்றுக் காலத்தில் வெருகல் பிரதேச செயலகத்தில் நான் கடமையாற்றிய போது, மரண வீடொன்றில் இடம்பெற்ற உத்தியா சடங்கொன்றைப் பார்த்து வியந்திருக்கிறேன். உத்தியாக்கள் நூல் வெளியீட்டு நிகழ்வின் ஆரம்பத்தில் பேசிக்கொண்டிருந்தபோது நாக்குழறி உணர்ச்சி வசப்பட்டு நின்றது பத்திநாதன் அல்ல; தன் இளந்தலைமுறை பேச ஆரம்பித்து விட்டதை எண்ணி நெகிழ்ந்து பத்திநாதனில் எழுந்த ஒரு உத்தியா வேடச்சீயா தான் புளகாங்கிதத்தில் கண்கள் கலங்கி நிற்கின்றார் என்று எனக்கு அப்போது தோன்றியது.இந்த 2025 ஆம் ஆண்டில், கிழக்கிலங்கையில் உருவான காத்திரமான படைப்புகளில் ஒன்று 'உத்தியாக்கள்' நூல் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. மேற்படிப்பின் பின்னர் இன்னும் சிறப்பான பல ஆய்வு நூல்களை நூலாசிரியர் படைக்க என் மனப்பூர்வமான வாழ்த்து!

# மாறுபாடில்லா உண்டி: சித்த மருத்துவ நோக்கில் யாழ்ப்பாணத்தின் உணவுப் பாரம்பரியம்

**கருத்துரை:**
**மருத்துவர், திருமதி. கயலினி சிறிகாந்தன்**




பசி என்பது ஓர் உயிரியல் தூண்டல்; எல்லா உயிரினங்களிடமும் நிலவும் பொதுவான பண்பியல்பும் கூட. பசி உணர்வின் எதிர்வினையாக அமைவது உணவு. எல்லா உயிரினங்களும் உணவினை உண்ணுதலை தங்களின் வாழ்வின் ஒரு பகுதியாக பழக்கப்படுத்தியுள்ளன. ஆனால் மனிதன் மட்டும் உணவினைப் பதப்படுத்தி சமைத்து உண்ணும் நடைமுறையினை ஏற்படுத்திக் கொண்டுள்ளான். இதுவே உணவின் உடலியல் தேவையினைக் கடந்து பண்பாட்டின் பரிமாணமாக வியாபித்துள்ளது. உலகில் உள்ள ஒவ்வொரு பகுதியினரும் உணவினைத் தங்களின் பண்பாட்டு நடைமுறையின் வழியாக இனங்காண்கின்றனர். இவை அனைத்திற்கும் பின்புலமானதாக குறிப்பிட்ட மக்களின் உணவு தொடர்பான உடல், உள, சமூக, ஆன்மிக ஆரோக்கியத்தின் மீதான ஈடுபாட்டினைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்நிலையில் சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மனின் மாறுபாடில்லா உண்டி எனும் நூல் தமிழர் பண்பாட்டின் உணவுப்பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தனித்துவத்தினையும் அதன் வழியாகக் கட்டமைக்கப்படும் ஆரோக்கியமான வாழ்வின் செல்நெறிகளையும் எமக்குத் தருகின்றது.

உணவுப் பாரம்பரியம் என்பது ஒரு பிராந்தியத்தின் தனித்துவத்தைக் குறிப்பதாகும். ஏனெனில், உலகிலுள்ள அனைத்துப் பிராந்தியங்களிலும் உணவுக்கான அடிப்படை ஆதாரங்களான தானியங்களும் பிற வளங்களும் ஒரே சீராகக் கிடைப்பதில்லை. அவை அந்தந்தப் பிராந்தியத்தின் காலநிலை மற்றும் தட்பவெப்ப நிலைமைகளுடன் பிணைந்தே காணப்படுகின்றன.

இலங்கையில் தமிழர் தொன்றுதொட்டு பாரம்பரியமாக வாழ்ந்துவரும் ஒரு பிரதேசமாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. தமிழர் பாரம்பரியத்தின், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரியத்தின் முதன்மையான ஒரு பண்பாட்டு அம்சமாகக் காணப்படுவது உணவு நடைமுறையாகும். நீண்ட நெடிய உணவுப் பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பேணி வருகின்ற யாழ்ப்பாணத்து மக்களிடையே நிலவி வருகின்ற உணவுப் பண்பாட்டின் தனித்துவமான விடயங்களை ஆசிரியர் தன்னுடைய 'மாறுபாடில்லா உண்டி' எனும் இந்நூலில் முன்வைத்துச் செல்கின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் முதல் இன்றைய நவீன இலக்கியங்கள் வரை உணவு பற்றிய பல்வேறு கருத்துகளை உள்ளடக்கியுள்ளன. இந்நிலையில் ஆசிரியர்,

"மாறுபாடில்லா உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லை உயிர்க்கு"

எனும் திருக்குறளின் மருந்து எனும் அதிகாரத்தில் வரும் குறட்பாவின் முதன்மை அடிகளை முன்வைத்து தனது நூலிற்கான தலைப்பினை இட்டுள்ளார். எவ்விதத் தீங்கும் இல்லாத அமிர்தம் போன்ற உணவாகிலும் அதனை அளவோடு உண்பவன் உடலுக்கு நோய்கள் எற்படாது என்பது மேற்குறிப்பிட்ட குறட்பாவின் பொருள். இன்று மக்கள் எதிர்நோக்கும் உடல்சார்ந்த நோய்களுக்கு முதன்மையான அடிப்படை மக்கள் தாம் உண்ணும் உணவு பற்றிச் சிந்திக்கத் தவறுவதே ஆகும். எமது முன்னோர்கள் தங்களது உணவின் தன்மைகளை, அவற்றினைத் தமது உணவாகப் பயன்படுத்திக் கொள்ளும் வழிவகைகளை அனுபவத்தின் வழிகொண்டு எமக்குரைத்துள்ளனர். ஆனால் இன்று உலகமயப்பட்டுச் செல்லும் நுகர்வுப் பண்பாட்டின் விளைவுகளால் எம்மிடையே நிலவும் உணவுப் பழக்கவழக்கங்கள் பெரிதும் மாற்றத்திற்கு உள்ளாகுவதுடன் அவற்றின் விளைவான நோய்களும் எமக்கு ஏற்படுகின்றன.

இந்நிலையில், 'மாறுபாடில்லா உண்டி' எனும் நூலின் வழியாக ஆசிரியர் சுதர்மன் பாரம்பரியமான உணவின் தனித்துவங்களையும், அவற்றில் மறைந்துள்ள போசணைகளையும், அவற்றினைத் தயாரிப்பதற்கான பாரம்பரிய வழிமுறைகளையும் மிக எளிமையாக எழுதியுள்ளாரார்.

'மாறுபாடில்லா உண்டி' எனும் இந்நூலானது யாழ்ப்பாணத்தின் முதன்மை வலைத்தள ஊடகம் 'எழுநா' எனும் நிறுவனத்தின் வெளியீடாக வந்துள்ளது. இந்நூலில் 14 அத்தியாயங்கள் உண்டு. இவற்றில் மாறுபாடில்லா உண்டி, யாழ்பாணப் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள், பசியும் பிணியும் போக்கும் அரிசி எனத்தொடங்கி யாழ்ப்பாணத்தின் தனித்துவமான உணவுப் பழக்கவழக்கங்களை முதன்மைப்படுத்தும் வகையிலான 14 கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளன.

முதலாவது அத்தியாயமான 'மாறுபாடில்லா உண்டி' உணவின் தனித்துவத்தின் சிறப்பியல்புகளை சித்த மருத்துவ நோக்கில் விளக்குவதுடன், அதனைத் தொடர்ந்து வரும் யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள் என்னும் அத்தியாயம் யாழ்ப்பாண மக்களின் உணவு நடைமுறையின் ஒழுங்கினை சித்த வைத்தியப் பாரம்பரிய நூல்களினை மேற்கோள்காட்டி விளக்கிச்செல்கின்றது.

அத்தியாயம் மூன்று முதல் அத்தியாயம் ஒன்பது வரையாக உள்ள அனைத்துக் கட்டுரைகளும் யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய அரிசி, தானியம் மற்றும் சிறுதானியம், எண்ணை வகை, கிழங்கு மற்றும் இலைவகைகள் சார்ந்த உணவுகளின் தனித்துவமான பண்பியல்களையும் அவற்றினைத் தயாரிக்கும் பாரம்பரிய முறைகளையும் விவரிப்பதுடன், அவை தொடர்பாக சித்த மருத்துவ நூல்கள் கூறுவனவற்றையும் எமக்குத் தருகின்றன.

மேலும் அத்தியாயம் 10 இல், பாலும் பால் சார்ந்த உணவுகள் பற்றியும் ஆசிரியர் விரிவாகவே விளக்கிக் கூறுகின்றார். குறிப்பாக நாம் அன்றாடம் பயன்படுத்தும் பசுப்பால் அது சார்ந்த ஏனைய தயாரிப்புகள், எருமைப்பால், வெள்ளாட்டுப்பால் போன்றவற்றிலுள்ள போசணைக் கூறுகளையும் அவற்றின் தனித்துவங்களையும் எளிமையான முறையில் விளங்கிக்கொள்ளும் வகையில் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் சைவ உணவுக்குள்ள முக்கியத்துவம் போன்றே அசைவ உணவுக்கும் உண்டு. இந்நிலையில் நூலாசிரியர் சுதர்மன் அசைவ உணவுகள், ஈழத்துக் கடலுணவுகள் தொடர்பாக அத்தியாயம் 11 மற்றும் 12 இல் விவரித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் வேறுபட்ட ஆட்டு வகையினங்களை இறைச்சியாகப் பயன்படுத்தி வருகின்றனர். அவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட கனிமத் தாதுக்களைக் கொண்டவை. இவையனைத்தினையும் ஆசிரியர் விரிவாகவே பதிவு செய்துள்ளார். இவ்வாறே வேறுபட்ட இறைச்சி வகைகளையும், கடல் உணவுகளையும், அவற்றில் நிலவும் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளையும் விவரித்துச் செல்கின்றார்.

உணவுத் தயாரிப்பில் சுவையூட்டிகள் முதன்மையானவை. இன்று நாம் பயன்படுத்தும் அதிகமான சுவையூட்டிகள் பல்வேறுபட்ட பக்க விளைவுகளைக் கொண்டவை. எனினும் பாரம்பரியமாகத் தமிழர்கள் பயன்படுத்தி வருகின்ற சுவையூட்டிகள் உணவின் சுவையினை மட்டுமன்றி, உடலின் ஆரோக்கியத்திற்கும் அடிப்படையானவை. தமிழரிடையே பயன்பாட்டில் இருக்கும் மிளகு முதல் வெந்தயம் வரையாக உள்ள அனைத்துச் சுவையூட்டிகளையும் ஆசிரியர் மிகச் சுருக்கமாக விவரிக்கின்றார்.

இறுதியாக ஆசிரியர் சுதர்மன் யாழ்ப்பாணத்துப் பழவகைகளையும் பனைசார் உணவு முறைகளையும் விவரிக்கின்றார்; யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் முதன்மையான பழவகையான வேறுபட்ட வாழைப்பழங்கள், மாதுளம்பழம், மாம்பழம் போன்ற இன்னோரன்ன பழவகைகளில் உள்ளார்ந்தமாகக் காணப்படும் ஊட்டச்சத்துகளை வெளிப்படுத்துவதுடன், யாழ்ப்பாண உணவுப் பண்பாட்டிற்கெனத் தனித்துவமாக உள்ள பனைசார் உணவுகளையும் அவற்றின் மருத்துவக் குணங்களையும் இங்கு விவரிக்கின்றார்.

மருத்துவர் சுதர்மன் இந்நூலிற்கு முன்னர் எழுதிய 'ஆகாரமே ஆதாரம்' எனும் நூலானது அனைத்துத் தரப்பினரிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அதன் வழியாக அவருக்குக் கிடைத்த அனுபவப் பகிர்வுகள் 'மாறுபாடில்லா உண்டி' எனும் இந்நூலை எமக்குத் தந்துள்ளது. இந்நூலானது தனியே உணவின் போசணையை மட்டுமன்றி அவற்றின் வழியாக வெளிப்படும் யாழ்ப்பாண உணவுப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தனித்துவங்களையும் எமக்குக் காட்டுகின்றது.

# வடக்கு கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும் காலத்தின் தேவை கருதிய நூல்

**கருத்துரை:**
**பேராசிரியர். அனந்தினி நந்தகுமாரன்**




முனைவர் சின்னத்துரை ஜேம்சன் அரசகேசரி அவர்கள் எழுதிய 'வடக்கு – கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' என்னும் நூல் வடக்கு – கிழக்கின் பிராந்திய அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாததாகின்றது. வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள் தனித்துவமான தரைத்தோற்றங்களைக் கொண்ட அழகிய, வளமிக்க நிலப்பரப்புகளாக இருப்பதோடு மட்டுமல்லாது பரந்துபட்ட உயிர்ப்பல்வகைமையையும் கொண்டுள்ளன. இருப்பினும் அதன் அபிவிருத்தி நோக்கில், உயிர்ப்பல்வகைமையின் இருப்புப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் அரிதாகவே உள்ளன. வடக்கு – கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி பற்றிப் பலரும் தமது திட்டங்களையும் யோசனைகளையும் முன்வைக்கும் இத்தருணத்தில், இந்தப் படைப்பானது ஒரு வரப்பிரசாதமாகவே உள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகியவற்றில் காணப்படும் உயிர்ப்பல்வகைமையின் பரந்துபட்ட நிலையை அறிமுகப்படுத்துவது, வாசகர்களுக்குச் சிந்தனையைத் தூண்டுவதாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. குறிப்பாக, இந்த உயிர்ப்பல்வகைமை எவ்வாறான மனிதச் செயற்பாடுகளுடன் பிணைந்துள்ளது என்பதை, கடற்றொழில், விவசாயம், காடுசார் தொழிற்றுறைகள், குளங்களையண்டிய குடியேற்றங்கள், மற்றும் ஆறுகளையொட்டிய அபிவிருத்தி போன்றவற்றை நூலாசிரியர் கோடிட்டுக் காட்டுவதன் மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வவுனியா தவிர்ந்த ஏனைய ஏழு மாவட்டங்களிலும் கடல்சார் பிரதேசம் உள்ளது. வவுனியா மட்டும் தனி நிலப்பரப்பை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இங்கு விவசாயமே கிராமிய மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக அமைகின்றது. மற்றைய ஏழு மாவட்டங்களிலும் மக்களின் வாழ்வாதாரமாக விவசாயத்துடன் கடற்றொழிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்நூலில் காடுசார் உயிர்ப்பல்வகைமை, கடல்சார் உயிர்ப்பல்வகைமை, நன்னீர் உயிர்ப்பல்வகைமை, சுற்றாடல்சார் உயிர்ப்பல்வகைமை என்பனதனிப்பட்டதலைப்புகளின்கீழ்வகைப்படுத்தப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாது படங்களுடனும் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் விவசாயம் மற்றும் கடற்றொழிலுக்கு அடுத்தபடியாக, காடுசார் உயிர்ப்பல்வகைமையும் கடல்சார் உயிர்ப்பல்வகைமையும் பெருமளவில் பரந்துபட்டிருப்பதால், இங்கு சூழலியல் சுற்றுலா (Ecotourism) ஒரு முக்கிய வாழ்வாதார நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டும். இயற்கை மற்றும் கலாசாரத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்துறை, உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டுவதோடு மட்டுமல்லாமல், பிராந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும். இத்தகைய சூழலில், இந்த நடவடிக்கைகளை உரிய துறையினர் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த நூல் மிகவும் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒரு சூழற்றொகுதியில் வாழும் தாவரமோ அல்லது விலங்கோ மனிதனுக்கு நேரடியாகப் பயன்படுகின்றதோ இல்லையோ, அது, தான் வாழும் சூழற்றொகுதிக்கு ஏதோ ஒரு வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களித்து, அந்தச் சூழற்றொகுதியின் சமநிலையைப் பேணுகின்றது. எனவே, இத்தகைய அனைத்து உயிர்களையும் மனிதராகிய நாம் அனைவரும் பாதுகாப்பதன் மூலமே உயிர்ப்பல்வகைமையைப் பேணமுடியும் என்ற இன்றியமையாத கருத்தினை இந்நூலாசிரியர் மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார்.முனைவர் ஜேம்சன் அரசகேசரி அவர்கள் விவசாய உயிரியல் பிரிவில், குறிப்பாக தாவர இனப்பெருக்கத்தில் முனைவர் பட்டம் பெற்றவர் ஆவார்.

இவர் விவசாய ஆராய்ச்சித் துறைக்குப் பெரும்பங்காற்றி, பல்வேறுபட்ட தாவர இனங்களையும்/ பேதங்களையும் உருவாக்கி, வடக்கு – கிழக்கு விவசாயிகளுக்கு மட்டுமல்லாது, முழு நாட்டின் விவசாய ஆராய்ச்சித்துறைக்கும் முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளார். அவர் தனது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தி உருவாக்கியுள்ள இந்நூலானது, வடக்கு – கிழக்குப் பிராந்திய அபிவிருத்திக்கான உயிர்ப்பல்வகைமையின் பங்களிப்பை அறிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கும் உதவுவதாக அமைகிறது. எமது அரசாங்கமும், மக்களும் வடக்கு – கிழக்கின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கும் இந்தக் காலகட்டத்தில், முனைவர் ஜேம்சன் அரசகேசரியின் இந்த நூலானது காலத்தின் தேவை கருதிய பங்களிப்பாக அமைகின்றது.

# நிகழ்வுகள்

## சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு நூல் வெளியீட்டு நிகழ்வு – கொழும்பு தமிழ்ச்சங்கம்



04.10.2025

சட்டத்தரணியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா. சடகோபன் அவர்கள் எழுதிய, எழுநாவின் வெளியீடான, மலையக வரலாற்றைக் கூறும் 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 04.10.2025 அன்று இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சின் பெருந்தோட்ட வீடமைப்பு பிரிவின் முன்னாள் செயலாளர் திரு.எம். வாமதேவன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலாசார அலுவல்கள் மற்றும் புத்த சாசன அமைச்சர் கலாநிதி ஹினிதும செனவி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி. ராஜலட்சுமி சேனாதிராஜா அவர்களும், செல்கொ கொன்டினெனாடல் தனியார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பி.எஸ். செல்வரட்ணம் அவர்களும், நாவல் நகர் கதிரேசன் கோவில் அறங்காவலர் முத்தையா பிள்ளை ஸ்ரீகாந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையை திரு. ஹேமச்சந்திர பத்திரன நிகழ்த்த, நூல் அறிமுக உரையை கல்வி அமைச்சின் முன்னாள் கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் நாயகம் திரு.சு. முரளிதரன் நிகழத்தியிருந்தார். நூல் வெளியீட்டுக்கு இலக்கியப் புரவலர் திரு. ஹாஸிம் உமர் முன்னிலை வகிக்க, நூலின் முதற்பிரதியை திரு. முத்தையா பிள்ளை ஸ்ரீகாந்தன் பெற்றுக்கொண்டார்.

நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து, நூலாய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பெ. சரவணகுமார் அவர்களும், கருத்துரைகளை மலையக ஆய்வாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமாகிய திரு.இ. தம்பையா அவர்களும், ஊடகவியலாளரும் கவிதாயினியுமாகிய செல்வி. நிவேதா ஜெகநாதன் அவர்களும் வழங்கி வைத்தனர். இறுதி நிகழ்வுகளாகிய ஏற்புரை மற்றும் நன்றியுரையினை நூலாசிரியர் இரா. சடகோபன் அவர்கள் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து சிறப்பித்து இருந்தனர்.

## 'வடக்கு – கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' நூல் அறிமுக நிகழ்வு

**இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்,<br>யாழ் பிராந்தியம்.**

எழுநாவினால் வெளியிடப்பட்ட, கலாநிதி ஜேம்சன் அரசகேசரி அவர்களின் 'வடக்கு – கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்' என்னும் நூலின் அறிமுக நிகழ்வானது, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் (யாழ். பிராந்தியம்) 14.10.2025 அன்று, காலை 11.00 மணியளவில் இடம்பெற்றது.

நூல் பற்றிய அறிமுக உரையினை கலாநிதி ஜேம்சன் அரசகேசரி அவர்கள் வழங்கியிருந்தார். கடல் வளங்கள் தொடர்பான கற்கைநெறியினைப் பயலுகின்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் இந்நூல் அறிமுக நிகழ்வு அமைந்திருந்தது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. யேசுதாஸ் அவர்கள் "உயர்கல்வியைத் தொடருகின்ற மாணவர்களுக்குத் தமிழ்மொழியில் உசாத்துணைக்காக இவ்வாறான ஆய்வு நூல்கள் வெளிவருவது அரிதானதொன்று, சமூகத்திற்கு, குறிப்பாக மாணவர்களுக்கு பயன்படும் வகையில் இவ் ஆய்வு நூல்களை எழுநா வெளியிடுவது பாராட்டப்பட வேண்டிய விடயம் எனக் குறிப்பிட்டிருந்தார். மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

14.10.2025





10.10.2025

# மாறுபாடில்லா உண்டி நூல் அறிமுக நிகழ்வு

### நல்லூர் சிவகுரு ஆதீனம்.





எழுநாவினால் வெளியிடப்பட்ட, சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மன் அவர்களின் 'மாறுபாடில்லா உண்டி' எனும் நூலின் அறிமுக நிகழ்வு சிறகுகள் அமையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு 10.10.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

வேளாண்மைச் செயற்பாட்டாளர் சிவகுமாரன் கஜந்தன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆசியுரையினை வழங்கியிருந்தார். அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை மாணவி முத்துக்குமார் நிமியா வழங்க, 'ஏன் இந்தப் புத்தகத்தினை வாசிக்க வேண்டும்?' என்ற தலைப்பில் கோபாலகிருஷ்ணன் பிரவீன்ராஜ் அவர்கள் உரையாற்றியிருந்தார். நூலாசிரியரும் சித்த மருத்துவருமாகிய தியாகராஜா சுதர்மன் அவர்களால், அருகிவரும் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களின் விளைவாக பெருகி வருகின்ற நோய்கள் தொடர்பில் சிறப்புரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறகுகள் அமைய உறுப்பினர்கள், மாணவர்கள், சித்த மருத்துவத் துறையினர், பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' நூல் அறிமுக நிகழ்வும் கலந்துரையாடலும்

### நல்லூர், சிவகுரு ஆதீனம்.



18.10.2025



எழுநாவினால் வெளியிடப்பட்ட, சட்டத்தரணியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா. சடகோபன் அவர்கள் எழுதிய 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' நூலின் அறிமுக நிகழ்வும் கலந்துரையாடலும் சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் நல்லூர், சிவகுரு ஆதீனத்தில் 18.10.2025 (சனிக்கிழமை) அன்று, காலை 10.30 முதல் பிற்பகல் 1.00 வரை இடம்பெற்றது. கோபாலகிருஷ்ணன் பிரவீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு, தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்கள் ஆசியுரையினை வழங்க, நூல் அறிமுக உரையினை சு. பிரவீன் அவர்கள் வழங்கியிருந்தார். மேலும், 'யாழிலிருந்து மலையகம் வரை' என்னும் தலைப்பில் குணகீதன் மதுராங்கி அவர்கள் தனது வாசிப்பு அனுபவத்தை வழங்கியிருந்தார். நிகழ்வின் தொடர்ச்சியாக 'தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் மலையக மக்கள்' என்னும் தலைப்பில் எழுத்தாளர் இரா. சடகோபன் அவர்கள் சிறப்புரையாற்றியிருந்தார். இந்நிகழ்வில் சிறகுகள் அமைய உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்  ஒரு வரலாற்றுத்தேடல்’ நூல் பற்றிய கலந்துரையாடல்

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்





எழுநாவினால் வெளியிடப்பட்ட நடராஜா செல்வராஜா அவர்களின் ‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் – ஒரு வரலாற்றுத்தேடல்’ என்னும் நூல் பற்றிய கலந்துரையாடல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் (விநோதன் மண்டபம்) அறிவோர் ஒன்றுகூடலில் 2025.10.29 (புதன்கிழமை) அன்று மாலை 5.00 மணிக்கு இடம்பெற்றது.

கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகர் ஜெயதேவன் சித்தார்த்தினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையினை எழுத்தாளர் எஸ்.ரகுநாத் அவர்கள் வழங்கியிருந்தார். நிகழ்வில் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்  ஒரு வரலாற்றுத்தேடல்’ நூல் பற்றிய கலந்துரையாடல்

## ஏழாலை மேற்கு சித்திவிநாயகர் சனசமூக நிலையம்.



எழுநாவினால் வெளியிடப்பட்ட, நடராஜா செல்வராஜா அவர்களின் ‘யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் – ஒரு வரலாற்றுத் தேடல்’ என்னும் நூல் பற்றிய கலந்துரையாடல் ஏழாலை மேற்கு சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தில் 31.10.2025 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

சித்திவிநாயகர் நூல் நிலைய இயக்குனர் சபைத் தலைவர் கு.ரஜீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையினை ஆசிரியர் சி.ரமேஸ் அவர்கள் வழங்கியிருந்தார். நிகழ்வில் சனசமூக நிலைய உறுப்பினர்கள், மாணவர்கள் , பொதுமக்கள் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.



எழுநா வெளியீடு






















முன்பதிவுகளுக்கு +94 777 97 5029


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா


எழுநா
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்


எழுநா
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்


எழுநா
இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்


எழுநா
யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா


எழுநா
தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்


எழுநா
யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


எழுநா
பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


எழுநா
இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்


எழுநா
இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ


எழுநா
பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


எழுநா
வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்

SpotOn Money



SEND MONEY to
SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount*
on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

Nimal Vinayagamoothy, CPA, CGA
Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்




தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


We work with 35 financial institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



**WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE**
**ALL OF THE GTA & ONTARIO**



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

Netwyn.Place

# Unleash Your Potential

www.netwyn.place

10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4

**+1 416-906-1414**



Coworking Space • Private Office
Event Space • Boardroom

**BOOK YOUR TOUR TODAY**



